# குமர உள்ளம்

(Psychology of Adolescence)


டாக்டர் மு. அறம், எம்.ஏ., பிஎச்டி.,
முன்னாள் தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயக் கல்லூரி,
பெரியநாயக்கன்பாளையம்,
கோவை.



தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—110

# குமர உள்ளம்

(Psychology of Adolescence)

டாக்டர் பூ. அறம், எம்.ஏ., பி.எச்டி.,
முன்னாள் தலைவர்,
அவினாசிலிங்கம் கிராமியக் கல்லூரி,
பெரியநாயக்கன்பாளையம்,
கோவை.

**தமிழ் வெளியீட்டுக் கழகம்**
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition — March, 1966

B.T.P. No. 110

© Bureau of Tamil Publications

**PSYCHOLOGY OF ADOLESCENCE**

DR.M. ARAM

**PRICE Rs. 6–25**

*Printed by*

KUMARAN PRESS,
298, Mint Street,
MADRAS - 1.

# அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'குமர உள்ளம்' என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 110ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 145 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குமரப் பருவம் ... ... ... | 1 |
| 2. | உடல் வளர்ச்சி ... ... ... | 8 |
| 3. | உணர்ச்சியின் எழுச்சி ... ... ... | 38 |
| 4. | அறிவின் வளர்ச்சி ... ... ... | 81 |
| 5. | குமரப் பருவ ஆர்வங்கள் ... ... ... | 115 |
| 6. | சமூக நடத்தை ... ... ... | 153 |
| 7. | ஒழுக்க வளர்ச்சி ... ... ... | 177 |
| 8. | குற்ற நடத்தை ... ... ... | 202 |
| 9. | மனநலம் ... ... ... | 239 |
| 10. | குமரப் பருவ ஆராய்ச்சி ... ... ... | 270 |
| 11. | குமரப் பருவத்துக்குப் பின் ... ... | 288 |
| | கலைச்சொல் அகராதி | |
| | தமிழ் - ஆங்கிலம் ... ... ... | 297 |
| | ஆங்கிலம் - தமிழ் ... ... ... | 321 |

# 1. குமரப் பருவம்

குமரப் பருவம் மனித வளர்ச்சியில் மிக முக்கியமான ஒரு பருவம். குழந்தைப் பருவத்தில் தொடங்கி முழு மனித வளர்ச்சி ஏற்படும்வரையுள்ள காலத்தை இப் பருவம் குறிக்கும். குழந்தை வேகமாக வளரும் பருவம் இது. வேறு எந்தப் பருவத்திலும் இத்துணை வளர்ச்சி நிகழ்வதில்லை. குழந்தை நிலையிலிருந்து முழு மனித முதிர்ச்சி நிலைக்கு மாறுகின்ற பருவம் குமரப் பருவம். ஆகையால், இது மிக முக்கியமான மாறுதல் காலமாகும்.

### குமரப் பருவத்தின் பொருள்

குமரப் பருவத்தை ஆங்கிலத்தில் 'Adolescence' என்று சொல்லுகிறார்கள். இந்த ஆங்கிலச் சொல் 'Adolescer' என்ற லத்தீன் வினைச்சொல்லிலிருந்து வருவதாகும். இந்த லத்தீன் சொல்லுக்கு 'வளர்தல்', 'பக்குவமாதல்' என்று பொருள். அதாவது, இந்தக் குமரப் பருவம் பக்குவமாகும் வளர்ச்சிப் பருவமாகும். இப் பருவத்தில் ஆண்பிள்ளை நன்கு வளர்ந்து முழு மனித நிலையை அடைகிறான். அதேபோல் பெண்பிள்ளையும் நன்கு வளர்ந்து முழு வளர்ச்சிநிலையை அடைகிறாள். முழு மனிதநிலை அல்லது முழு வளர்ச்சிநிலை என்பதற்குப் பொருள் திருமணம் செய்து குழந்தைப்பேறு ஏற்படக்கூடிய உடல்நிலை ஆகும். இப் பருவத்தில் பெண் 'பருவம் அடைகின்றாள்' என்றும், 'பூப்பு எய்துகின்றாள்' என்றும் சொல்லப்படுகின்றது. ஆண்பிள்ளை 'பெரியாள்' ஆகிவிட்டான் என்று சொல்லப்படுகிறது. பெண்பிள்ளை 'பெரிய மனுஷி' ஆகிவிட்டாள் என்றும் சொல்லுவதுண்டு.

### குமரப் பருவத்தின் முக்கியத்துவம்

இவ்வாறு பருவமெய்துதல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை முன்காலத்திலேயே உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் உணர்ந்திருக்கின்றார்கள். அதிக நாகரிகம் அடையாத பிற்போக்கான பகுதிகளில் வாழும் மக்கள் இப் பருவத்தையொட்டி பல

சடங்குகள் செய்கிறார்கள். சில பழமையான இனங்களில் குமரப் பருவம் எய்தியதும் ஆண்பிள்ளைகளுக்கு அந்த இனத்தைச் சேர்ந்த ரகசியங்கள், வழக்கு முறைகள் முதலியவற்றைச் சொல்லிக்கொடுப் பார்கள். இத்தகைய சடங்குகள் மிகவும் ஆரவாரமாக நடைபெறும். சில சமயங்களில் பல மாதங்கள் தொடர்ந்து நடைபெறும். இச் சடங்குகளின்மூலமாக இளம் பிள்ளைகளுக்கும் அந்த இனக் குழு விற்கும் நெருங்கிய ஒரு பற்று ஏற்படவேண்டும் என்பதே நோக்கம். சில நிகழ்ச்சிகள் மிகவும் துன்பமாக இருக்கும். ஆஸ்திரேலியாவில் சில இனங்களில் இளம் பிள்ளைகளினுடைய பற்களை உடைத்து விடுகிறார்கள். பற்களை உடைப்பதற்காகப் பல தடவைகள் அடிப் பார்கள். பல வாரங்கள் ஏதாவது ஒரு சிறிய இடத்தில் அடைத்துப் போட்டு மிகக் குறைவாக மோசமான உணவு கொடுத்து அவர்களைத் துன்பப்படுத்துவதுண்டு. வட அமெரிக்காவில் சில இந்திய இனங் களில் பெண்பிள்ளைகளுக்கும் கடுமையான சடங்குகள் நடத்துவது உண்டு. ஒரு மாதம் அந்தப் பெண்பிள்ளையை ஒரு சிறிய வீட்டில் வைத்திருப்பார்கள். பகல் வேளையில் இவ் வீட்டிலிருந்து வெளியே வரக்கூடாது. பொழுது சாய்ந்து இருட்டிய பிறகு, அதுவும் தாயின் துணையோடுதான் வெளியே வரலாம்.

பிரேசில் நாட்டிலுள்ள சில இனங்களில் இவ்வாறு பெண் குழந்தையை ஒரு மாதம் வீட்டில் அடைத்து வெறும் ரொட்டியும் தண்ணீரும்மட்டும் கொடுப்பார்கள். பின்னால் அவளை வெளிக் கொணர்ந்து நண்பர்களும் உறவினர்களும் நன்றாக உதைப்பார்கள்; அவள் உணர்விழந்து கீழே விழும்வரைக்கும் உதைப்பார்கள். ஆனால், எல்லா இனங்களிலும் இத்தகைய கடுமையான நடவடிக் கைகள் எடுப்பதில்லை. ஆஸ்திரேலியாவிலுள்ள சில பகுதிகளில் இளைஞனுக்கு ஒழுக்கத்தில் நல்ல பயிற்சியைக் கொடுப்பதையும் முக்கியமாக வைத்திருக்கின்றார்கள். இனத்திலுள்ள பெரியவர் ஒருவர், இந்தப் பையனை அழைத்து அவனுக்கு அறிவுரை கூறி அவன் எவ்வாறு வாழ்க்கை முழுவதும் ஒழுங்காக, சிறப்பாக வாழ வேண்டும் என்பதை எடுத்துச்சொல்லுவார். ரோம் தேசத்தில் 14 வயது ஒரு பையனுக்கு ஆனதும் அவன் பெரியவர் அணிகின்ற 'டோப்பா' என்கின்ற அணியை அணியலாம். ஐரோப்பாவில் மத்திய காலத்தில் பையன் 14 வயதுவரை பெண்களோடு பழகியிருக்கலாம். ஆனால், அதற்குப் பிறகு தனியாக வந்து ஆண்களோடு சேர்ந்து வாழவேண்டும். இவ்வாறு பல நாடுகளிலும் இனங்களிலும் இளை ஞர்கள் குமரப் பருவம் எய்தும்போது இத்தகைய சடங்குகளை யெல் லாம் நடத்துவதன் நோக்கம் அவர்கள் தங்கள் சமூகத்தின் நெறி முறைகளைத் தெரிந்துகொண்டு அவற்றிற்கேற்ப ஒழுகவேண்டும் என்பதே.

அமெரிக்க நாட்டில் வாழும் பழைய இனங்களில் ஹோப்பி இனம் புகழ்பெற்ற ஓர் இனமாகும். அவர்கள் குமரப் பருவத்தை யொட்டி பல்வேறு சடங்குகள் நடத்துகிறார்கள். பையன் குமரப் பருவம் எய்தியவுடன் 'கச்சினு' சடங்குகள் நடத்துகிறார்கள். இந்தக் கச்சினு சடங்குகளின்மூலம் பையனை அந்த இனத்தைச் சேர்ந்த பெரியவர்களோடும் சமூகத் தலைவர்களோடும் சேர்ந்து வாழ்வதற்கு வழி வகுக்கிறார்கள். இதன்மூலம் பையன் தன்னுடைய குழுவைவிட்டு இன்னொரு குழுவிற்குச் செல்வான். அந்தப் புதிய குழுவின் தலைவர் இந்தப் பையனின் வளர்ப்புத் தந்தையாவார். கச்சினு சடங்குக்குப் பிறகு பையன் புதிய குழுவோடு சேர்ந்து வாழவேண்டும். ஆண் பையனைப்போலவே பெண் குழந்தையும் புதிய குழுவிலுள்ள 'அத்தை'யின் வளர்ப்புப் பெண்ணாக வளரவேண்டும். இந்தச் சடங்குக்குப் பிறகு புதிய குழுவைச் சேர்ந்த ரகசியச் சங்கங்களில் அவர்கள் சேர்வார்கள்.

சில குழுக்களில் புதிய பிள்ளைகளை அடிப்பதுண்டு. பையன் அடங்காப் பிடாரியாகவோ அல்லது கெட்ட பிள்ளையாகவோ இருந்தால் அவன் அடிக்கின்ற மரபுடைய குழுவில் சேர்க்கப்படுவான். இவ்வாறு அடிப்பது, அந்தப் பையனுக்குப் பயிற்சி கொடுப்பதன் அடையாளமாகும். அடிக்கும்பொழுது பையன் ஆடைகளை யெல்லாம் களைந்துவிட்டு நிர்வாணமாக இருக்கவேண்டும். குழுவின் தாயார் ஒரு பெரிய முகமூடியோடும் ஆடையோடும் இருப்பாள். அவள் கையில் அடிப்பதற்காக விளார் இருக்கும். மற்றும் அடிக்கின்றவர்கள் ஆண் முகமூடி வேடம் போட்டிருப்பார்கள். அவர்கள் அந்தப் பையனை அடிப்பார்கள். அடிக்கும்பொழுது பையனின் வளர்ப்புத் தந்தை அந்தப் பையனைப் பிடித்துக்கொண்டு தாங்கிக் கொண்டிருப்பார். இதைப்போலவே பெண் குழந்தை அடிக்கப் படும்பொழுது அவளது வளர்ப்புத்தாய் அவளைப் பிடித்துக்கொண்டிருப்பாள். பெண் பிள்ளைகள் இந்தச் சடங்குகளில் ஈடுபடும்பொழுது ஆடை அணிந்துகொண்டிருக்கலாம். அங்கு மணற்பரப்பில் பெரிய படம் ஒன்று வரையப்பட்டிருக்கும். அதில் வாழ்க்கையின் நான்கு பாதைகளைக் காட்டியிருப்பார்கள். இளம் பிள்ளைகள் பயிற்சியும் கல்வியும் பெறுவது இச் சடங்குகளின் நோக்கம்.

ஹோப்பி இனத்தினர் பையன் நல்ல உடலோடுமட்டுமல்லாது நல்ல இதயத்தோடும் வளரவேண்டும் என்று கருதுகின்றார்கள். ஒரு ஹோப்பித் தந்தை தனது பையனுக்குச் சொல்லுவதாவது: 'என் குழந்தையே, நாளைக் காலை நீ குளிக்கப்போவாய். சூரியன் உதயமாகும்பொழுது உனது வாழ்க்கை நன்றாக இருக்கவேண்டும் என்று நீ பிரார்த்தனை செய்யவேண்டும். அப்பொழுது சூரியன் வெளிவந்து உனக்கு நல்வாழ்க்கை தருவான். நீ மகிழ்ச்சியாக

வாழ்வாய். இங்கு நீ எனக்கு மகிழ்ச்சியாக வேலை செய்யவேண்டும். நீ ஒருபோதும் கோபப்படக்கூடாது. யார் கோபப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள் நெடுங்காலம் வாழ்வார்கள். கோபப்படுவோரெல்லாம் உறுதியாக இறந்துபோவார்கள். நீ உனது தாய் தந்தையர்களுக்கு உழைக்கும்போதும் அவர்கள் இன்பமாக இருப்பார்கள். அவர்கள் உனது குழந்தைகளுக்கும் பெற்றோர்களாக இருப்பார்கள். இவ்வாறு எண்ணிக்கொண்டு வாழ்பவன் அமைதியான வாழ்க்கை வாழ்வான். அவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பான்.'

முற்காலச் சமூகங்களில்மட்டும் அல்லாது பிற்காலச் சமூகங்களிலும் குமரப் பருவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எல்லோரும் இதனை ஒரு முக்கியமான பருவமாகக் கருதுகிறார்கள். குழந்தைப் பருவத்துக்கும் குமரப் பருவத்துக்குமிடையே மிக முக்கியமான வேற்றுமை இருப்பதையும் கண்டு சொல்லியிருக்கிறார்கள். பழைய குழந்தைப் பருவத்தினின்றும் நீங்கி குமரப் பருவத்தில் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதாகக் கருதுகிறார்கள். பல எழுத்தாளர்கள் இக் கருத்தினை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையாகப் பார்த்தால் குழந்தைப் பருவத்துக்கும் குமரப் பருவத்துக்குமிடையே குழந்தைப் பருவம் முடிந்தவுடன், திடீரென்று ஒரு பெரிய வேற்றுமை தோன்றுவதாகச் சொல்லுவதற்கில்லை.

### குமரப் பருவத்தின் வயது எல்லைகள்

குழந்தைப் பருவம் எப்பொழுது முடிந்து குமரப் பருவம் எப்பொழுது தொடங்குகின்றது என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. குமரப் பருவம் எப்பொழுது முடிந்து 'வயது வந்துவிட்ட' முதிர்ச்சிப் பருவம் எப்பொழுது தொடங்குகின்றது என்பதையும் அறுதியிட்டுக் கூற முடியாது. பொதுவாக, 12 வயதில் குமரப் பருவம் தொடங்குவதாகவும், 18, 19 வயதில் அது முடிவதாகவும் கூறப்படுகிறது. குமரப் பருவத்தையே முன்குமரப் பருவம் என்றும், பின்குமரப் பருவம் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு. குழந்தைப் பருவத்தையும் இவ்வாறு இரு பிரிவுகளாகப் பிரிப்பதுண்டு.

குழந்தை வளர்ச்சிப் பருவங்களின் வயது எல்லைகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பதுண்டு :

| | பருவம் | வயது எல்லை |
|---|---|---|
| 1. | குழவிப் பருவம் | 1-லிருந்து 3 வரை |
| 2. | சிறு குழந்தைப் பருவம் | 3-லிருந்து 6 வரை |
| 3. | குழந்தைப் பருவம் (முன்பருவம்) | 6-லிருந்து 9 வரை |
| 4. | குழந்தைப் பருவம் (பின்பருவம்) | 9-லிருந்து 12 வரை |
| 5. | குமரப் பருவம் (முன்பருவம்) | 12-லிருந்து 15 வரை |
| 6. | குமரப் பருவம் (பின்பருவம்) | 15-லிருந்து 18 வரை |

மேற்படி வயது எல்லைகளின் தொடக்கமும் முடிவும் அவ்வப் பருவங்களைச் சுமாராகக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். பருவங்களின் வயது எல்லைகளை அறுதியிட்டுத் திட்டவட்டமாகக் கூறுவது இயலாத ஒன்று. இவ்வெல்லைகள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடும். இதற்குத் தட்பவெப்பமும், உணவுமுறைகளும், சமூகப் பழக்கவழக்கங்களும் சில காரணங்கள். மேலும், ஒரு சமூகத்திலேயே எல்லாப் பிள்ளைகளின் வளர்ச்சியும் ஒன்றுபோல் இருப்பதில்லை. சில பிள்ளைகளின் வளர்ச்சி வேகமாகவும் வேறு சில பிள்ளைகளின் வளர்ச்சி மெதுவாகவும் இருப்பதைக் காண்கிறோம். ஒரே வயதுள்ள பத்துப் பிள்ளைகளை ஒன்றாக நிறுத்திப் பார்த்தால் வளர்ச்சியின் வேகத்தில் தனிமனித வேற்றுமைகள் எவ்வளவோ இருப்பதை எளிதில் கண்டு கொள்ளலாம்.

'பூப்பு எய்துதல்' அல்லது 'பாலுணர்வு பக்குவமடைதல்'பற்றிப் பலர் ஆராய்ச்சி செய்துள்ளனர். எந்த வயதில் இது நிகழ்கின்றது என்பதுபற்றியும் ஓர் அளவிற்கு ஆராய்ச்சி செய்துள்ளனர். பால், அறிவு, இனம், நுண்ணறிவு வளர்ச்சி, தட்பவெப்பநிலைக்கேற்ப பூப்பெய்தும் வயது மாறுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆண்பிள்ளைகளைவிட பெண்பிள்ளைகள் சிறிது முன்னரே பூப்பு எய்திவிடுகின்றனர். உயர்ந்த நுண்ணறிவு உடையவர்கள் பொதுவாக முன்னரே பூப்பு எய்திவிடுகிறார்கள். குறைவான நுண்ணறிவு உடையவர்கள் அவ்வளவு விரைவில் பூப்பு எய்துவதில்லை. உடல் வளர்ச்சி விரைவில் ஏற்படக்கூடியவர்கள் முன்னரே பூப்பு எய்திவிடுகின்றனர்.

ஹாலிங்வொர்த் (Hollingworth) என்பவர் இதுபற்றி ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்: முதல்முறையாகத் தீட்டு வருவது, பெண்கள் பூப்பு எய்துவதின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. ஆங்கில மொழி பேசும் மக்களிடையே சராசரி பெண்பிள்ளைகளுக்கு 13 ஆண்டுகள் 6 மாதங்களில் பூப்பு நிகழ்கின்றது. ஆனால், இதுபற்றி நிரம்பத் தனிமனித வேற்றுமைகள் உள்ளன. பெண்களுக்குள்ளேயே கீழ் எல்லைக்கும் மேல் எல்லைக்குமிடையே 4 ஆண்டுகள்கூட இருப்பதுண்டு. அமெரிக்க வெள்ளைக்காரப் பெண்பிள்ளைகளில் சுமார் 50 சதவிகிதத்தினர் $12\frac{1}{2}$ வயதிற்கும் $14\frac{1}{2}$ வயதிற்கும் இடையே பூப்பு எய்துகின்றார்கள். சுமார் 25 சதவிகிதம் பேர்கள் $12\frac{1}{2}$ வயதிற்கும் முன்னரே பூப்பு எய்திவிடுகின்றார்கள். ஒருசிலர் 9 வயதில்கூட பூப்பு எய்திவிடுகின்றார்கள். ஆனால், இதற்கு மாறாக இன்னும் சிலரோ 20 வயது ஆகும்பொழுதுகூட பூப்பு எய்துவதில்லை.

ஹாலிங்வொர்த் 3,500 ஃபின்னிஷ் (Finnish) பெண்கள் முதலில் தீட்டு அடையும் வயதுபற்றியும் சொல்லியிருக்கின்றார். அவர்க

ளிடையே பூப்பெய்துதல் 8 வயதிலிருந்து 26 வயதுவரை நிகழ்கிறது. அதிகமான பேர்கள் முதல் முறையாகத் தீட்டு அடைந்தது 15 வயது. மற்ற நாட்டைச் சேர்ந்தவர்கள்பற்றி அவர் சொல்லுவதாவது; இத்தாலியிலோ அல்லது அதுபோன்று சிறிது வெப்பம் அதிகமான நாடுகளிலோ உள்ள பெண்பிள்ளைகளுக்கு இங்கிலாந்திலோ அல்லது ஃபின்லாந்திலோ உள்ள பெண்பிள்ளைகளைவிட முன்பே பூப்பு வந்துவிடுகின்றது. மஞ்சள் நிறமுள்ள மங்கோலிய இனங்களிலும் கறுப்பு நிறமுள்ள ஆப்பிரிக்க ஆசிய இனங்களிலும் பால் உணர்வும் பூப்பெய்துதலும் முன்னரே ஏற்பட்டுவிடுகின்றதாம்.

ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் பூப்பெய்துகின்ற வயதைத் திட்டவட்டமாகக் கூறுவது இன்றும் கடினமானது என்பது தெரிந்ததே. அதுபற்றி ஹாலிங்வொர்த் கூறுவதாவது : 'குரல் மாற்றம், மற்றும் இரண்டாம்நிலைப் பால் தன்மைகள் (secondary sexual characteristics) தோன்றுதல் முதலியனவற்றை வைத்துப் பார்த்தால் பெண்களைவிட ஆண்களுக்குச் சராசரி ஓரிரு ஆண்டுகள் கழித்தே பூப்பு உண்டாகின்றது. ஆங்கிலமொழி பேசும் மக்களிடையே ஆண்களுக்குப் பூப்பு வருவது சராசரி 13 ஆண்டுகள் 6 மாதங்களுக்கும், 15 ஆண்டுகள் 6 மாதங்களுக்குமிடையேயாகும்.' அவர் மேலும் கூறுவதாவது : 'பூப்பு எய்துவதற்கும் அறிவு, திறமை ஆகியவற்றிற்கும் நேரடியான தொடர்பு உண்டு. அமெரிக்கக் குழந்தைகளில் அறிவுக் கூர்மை அதிகம் உடையவர்கள் முன்கூட்டியே பூப்பு எய்துகிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.' நுண்ணறிவுச் சோதனை வல்லுநர் டெர்மன் கூறுவதாவது: 'கலிஃபோர்னியாவில் அறிவுத் தரம் மிகுந்த பிள்ளைகளில் 48 சதவிகிதத்துக்கு மேலானவர்கள் 13 வயதிற்கு முன்பே பூப்பு எய்திவிடுகின்றார்கள். இதற்கு மாறாகச் சோதனையில் தேர்ச்சி பெறாத 25 பேர்கள் பின்னரே பூப்பு எய்தினர்.'

### குமரப் பருவத்தின் சிறப்பியல்புகள்

குமரப் பருவம் ஒரு முக்கியமான வளர்ச்சிப் பருவம் என்று பார்த்தோம். அது ஒரு முக்கியமான மாறுதல் காலம் என்றும் பார்த்தோம். இப் பருவத்தின் சில சிறப்பியல்புகளாவன :

1. குமரப் பருவத்துப் பிள்ளையின் உடல் மிகவும் வேகமாக வளர்ச்சியுறுகின்றது.
2. குமரப் பருவத்துப் பிள்ளையிடம் புதிய உணர்ச்சிகள் உண்டாகின்றன.
3. குமரப் பருவத்துப் பிள்ளையின் அறிவு பலவகைகளிலும் வளர்ச்சியுறுகின்றது.

4. குமரப் பருவத்துப் பிள்ளையிடம் பல புதிய ஆர்வங்கள் தோன்றுகின்றன.
5. குமரப் பருவத்துப் பிள்ளையின் வாழ்க்கையில் பல முக்கிய மான சமூகத் தொடர்புகள் உண்டாகின்றன.
6. குமரப் பருவத்தில் பிள்ளையிடம் வாழ்க்கைபற்றிய சிந்தனை யும் லட்சிய உணர்வும் உண்டாகின்றன.

உடம்பின் வளர்ச்சி, உணர்ச்சியின் எழுச்சி, அறிவின் வளர்ச்சி, ஆர்வங்களின் வளர்ச்சி, சமூகத் தொடர்புகளின் வளர்ச்சி, இலட்சிய உணர்வுகளின் வளர்ச்சி ஆகியவை குமரப் பருவத்துப் பிள்ளையினது வளர்ச்சியின் சிறப்பான முக்கியக் கூறுகள். இவை ஒவ்வொன்றும் தனித்தும் சேர்ந்தும் முறையாக நடைபெறுமென்ருல் குழந்தையின் ஆளுமை நல்ல முறையில் வளர்ச்சியுறும். இவை ஒவ்வொன்றுபற்றி யும் பின்வரும் அதிகாரங்களில் நாம் விரிவாகக் காணலாம்.

# 2. உடல் வளர்ச்சி

குமரப் பருவம் மனித வளர்ச்சியில் மிக முக்கியமான ஒரு பருவம். குழந்தைப் பருவத்திற்கும் முதிர்ச்சிப் பருவத்திற்கும் இடையே அமைந்துள்ள பருவம் இது. இது ஒரு மாறுதல் காலம். இம் மாறுதல் காலத்தில் குழந்தையின் உடல் மிகவும் வேகமாக வளருகின்றது. உடல் வளர்ச்சியின் பல்வேறு அம்சங்கள்பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்வதும் பயன் தருவதாக இருக்கும்.

குமரப் பருவத்தில் பெண்பிள்ளைகளின் வளர்ச்சிக்கும், ஆண் பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் அதிக வேற்றுமை உண்டு. இவ் வேற்றுமையை நன்கு தெரிந்துகொள்ளுவதற்கும், உடல் வளர்ச்சிபற்றி ஆராயவேண்டியது அவசியம். ஆண்பால், பெண்பால் என்ற வகையில் உடல் வளர்ச்சியில் வேற்றுமை ஏற்படுவதுதவிர, இருபாலாரின் உள வளர்ச்சியிலும் வேற்றுமைகள் உண்டு. உடல் வளர்ச்சி காரணமாக ஏற்படும் இவ் வளர்ச்சி வேற்றுமைகள்பற்றியும் நன்கு ஆராய்வது அவசியம்.

மேல்நாட்டில் குழந்தை ஆராய்ச்சி நிலையங்களில் உடல் வளர்ச்சிபற்றி விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். நம் நாட்டில் இத் துறையில் ஆராய்ச்சி சிறிதுகூட நடைபெறவில்லை என்றே சொல்லிவிடலாம். நாட்டுக்கு நாடு வேற்றுமை இருக்கும் என்ற போதிலும், சில அடிப்படை உண்மைகள் உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பொதுவாக இருக்கும் என்று நம்பலாம். உடல் வளர்ச்சியின் ஒவ்வொரு கூறாக எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

### உயரமும் எடையும்

குமரப் பருவத்தில் ஆரம்ப ஆண்டுகளில் குழந்தையின் உயரமும் எடையும் மிக வேகமாக அதிகமாகின்றன. ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரை 12, 13 வயதிலிருந்து 14, 15 வயது வரைக்கும் வளர்ச்சி அதிக வேகமாக இருக்கும். 18, 19 வயது வரும்பொழுது அநேகமாக முழு உயரமும் வந்துவிடும். பையன்களின் வயதும்

எடையும் 13, 14 வயது வரைக்கும் மிக வேகமாகப் பெருகுகிறது. அதற்குப் பின்னும் வளர்ச்சி உண்டு; ஆனால், வளர்ச்சியின் வேகம் முன்னைவிடப் படிப்படியே குறையும். பெண் பிள்ளைகளைப் பொறுத்த வரையில் உயரம், எடை இரண்டின் வளர்ச்சியின் வேகம் பையன்களைவிட ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விடுகின்றது. 11 வயதிலிருந்து 14 வயதுவரையுள்ள காலத்தில் பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைவிடச் சிறிது உயரமாகவும் பருமனாகவும் இருப்பதைப் பார்க்கலாம். 14 வயதிற்குமேல் ஆண் பிள்ளைகள் வளர்ந்துகொண்டு போவார்கள். ஆனால், பெண்பிள்ளைகளின் வளர்ச்சி குறைந்துபோய் 16 வயதிற்குமேல் ஒரு வளர்ச்சியும் இருப்பதில்லை. அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள படம் 1, படம் 2-ஐப் பார்க்கவும்.

படம் 1-ல் ஆண், பெண் பிள்ளைகளின் உயரம் அதிகமாவது காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே படம் 2-ல் ஆண், பெண் பிள்ளைகளின் எடை அதிகமாவது காட்டப்பட்டிருக்கின்றது. பெண் பிள்ளைகள், ஆண்பிள்ளைகளைவிட உயரத்திலும் பருமனிலும் மிகுதியாக இருப்பார்கள்.

குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சியின் விகிதம் குழந்தைக்குக் குழந்தை மிகவும் வேறுபடுகின்றது. இரண்டு குழந்தைகளின் வளர்ச்சி வளைகோடுகள் (growth curve) ஒருபோதும் ஒன்றாக இருப்பது இல்லை. ஆகவே, சராசரி வளர்ச்சி வரைகோட்டைப் பார்த்துக்கொண்டு நாம் ஒரு குழந்தையின் வளர்ச்சிபற்றித் தரப் படுத்திச் சொல்லக்கூடாது. 10 வயதில் ஒரு குழந்தையின் உயரம், 17 வயதுள்ள ஒரு குழந்தையின் உயரத்திற்குச் சமமாக இருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் படம் 3-ஐப் பார்க்கவும் (பக்கம் 12).

இதிலிருந்து தனிக் குழந்தையின் உயரக்கோடு சராசரி வளர்ச்சிக் கோட்டினைவிட எவ்வளவு வேறுபடும் என்பது தெளிவாகத் தெரி கின்றது.

தனிக் குழந்தைகளின் வளர்ச்சிபற்றிப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. வெவ்வேறு குழந்தைகள் வெவ்வேறு வயதில் வளர்ச்சியில் அதிகபட்ச ஒற்றுமை அடைகின்றார்கள் என்பது இவ் வாராய்ச்சியிலிருந்து தெரியவருகின்றது. இது உண்மையாக ஆண் பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் ஒருங்கே பொருந்தும். மேற் சொன்ன ஆராய்ச்சியிலிருந்து இன்னோர் உண்மையும் தெரியவரு கின்றது. வளர்ச்சியின் தொடக்கநிலையும், வளர்ச்சியின் இறுதிநிலை




வயது ஆண்டுகளில்

ஆண்பிள்ளையின் விகித அமைப்பில் மாறுதல்கள், வயது 12-18.

படம் 1




பெண்பிள்ளையின் விகித அமைப்பில் மாறுதல்கள், வயது 12-17.

படம் 2

யும் தனிக் குழந்தைகளுக்கு ஏற்ப மாறுபட்டபோதிலும் வளர்ச்சி வரைகோடுகளையெல்லாம் சேர்த்துவைத்துப் பார்த்தால் அவற்றுள்




உயர அளவின் வளர்ச்சியினைக் குறிக்கும் தனி மனிதனது வளைவினையும், சராசரி மனிதனது வளைவினையும் ஒப்பிடுதல்.

படம் 3

ஓர் ஒருமைப்பாடு இருப்பதும் தெரியவருகிறது. எல்லா வரைகோடுகளும் ஒரேமாதிரியான கோலத்தைப் (pattern) பின்பற்றுவனவாக உள்ளன.

ஷட்டில்வொர்த் (Shuttleworth) என்னும் ஆராய்ச்சியாளர் 174 பெண்பிள்ளைகள் எந்தெந்த வயது நிலைகளில் உச்ச வளர்ச்சியை எய்துகின்றார்கள் என்பதுபற்றி ஆராய்ச்சி செய்தார். உச்ச வளர்ச்சி எய்தும் வயது நிலைகளினிடையேயுள்ள வேறுபாடுகளைப்பற்றி அவர் ஆராய்ந்துள்ளார். அவரது ஆராய்ச்சியின்படி, 6 பேர்கள் $10\frac{1}{4}$ வயதிலிருந்து $10\frac{3}{4}$ வயதிற்குள் உச்ச வளர்ச்சியை எய்தினர்கள். $10\frac{3}{4}$ விலிருந்து $11\frac{1}{4}$ வயதுக்குள் 13 பேர்கள் உச்ச வளர்ச்சியை

எய்தினார்கள். இப்படியே பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாகப் போய்ப் பின் குறைந்து, இறுதியில் $14\frac{1}{4}$ லிலிருந்து $14\frac{3}{4}$ வயது எல்லைக்குள் 5 பேர்கள் அதிகபட்ச வளர்ச்சியை அடைந்தார்கள். இதுபற்றிய முழு விவரத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

| வயது எல்லைகள் | அதிகபட்ச வளர்ச்சி எய்தும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| $10\frac{1}{4}$-லிலிருந்து $10\frac{3}{4}$ | 6 |
| $10\frac{3}{4}$-லிலிருந்து $11\frac{1}{4}$ | 13 |
| $11\frac{1}{4}$-லிலிருந்து $11\frac{3}{4}$ | 26 |
| $11\frac{3}{4}$-லிலிருந்து $12\frac{1}{4}$ | 34 |
| $12\frac{1}{4}$-லிலிருந்து $12\frac{3}{4}$ | 37 |
| $12\frac{3}{4}$-லிலிருந்து $13\frac{1}{4}$ | 28 |
| $13\frac{1}{4}$-லிலிருந்து $13\frac{3}{4}$ | 18 |
| $13\frac{3}{4}$-லிலிருந்து $14\frac{1}{4}$ | 7 |
| $14\frac{1}{4}$-லிலிருந்து $14\frac{3}{4}$ | 5 |

மேற்கண்ட அட்டவணையைப் பார்த்தால் மொத்தம் 174 பிள்ளைகளில் 99 பேர், அதாவது பாதிக்கு மேற்பட்டவர்கள் $11\frac{3}{4}$ வயதிலிருந்து $13\frac{3}{4}$ வயதுக்குள்ளாக அதிகபட்ச வளர்ச்சியை எய்துகிறார்கள் என்பது தெரியவருகின்றது. ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அதிகபட்ச வளர்ச்சியை எய்தும் வயது எல்லைகளில் வரைகோடுகள் பெரும்பாலும் பெண்பிள்ளைகளைப் போன்றே இருந்ததாக ஷட்டில் வொர்த் கண்டுபிடித்திருக்கின்றார். ஒரு முக்கிய வேற்றுமை என்னவெனில், ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளினின்றும் சராசரி இரண்டு ஆண்டுகள் கழித்து அதிகபட்ச வளர்ச்சியை எய்துகின்றார்கள்.

குமரப் பருவத்தில் ஆண்பிள்ளைகளின் தோள்கள் விரிவடைகின்றன. பெண்பிள்ளைகளுக்கு தோள்கள் அவ்வாறு விரிவடைவதில்லை. ஆனால், ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளுக்கு இடுப்பு அதிகமாக விரிவடைகின்றது. ஆண், பெண்பிள்ளைகளின் இடுப்பு, தோள் வளர்ச்சியை அடுத்துள்ள இரண்டு படங்களில் பார்க்கலாம்.

உயரம், எடை, தோள் அகலம், இடுப்பு அகலம் போன்றவை உடல் வளர்ச்சியில் சில முக்கிய அம்சங்கள். இவற்றில் பொதுவாகப் பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகளைவிட இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அதிகபட்ச வளர்ச்சியை அடைந்துவிடுகிறார்கள்.




இடை அகலத்தில் வளர்ச்சி

படம் 4




தோள் அகலத்தில் வளர்ச்சி

படம் 5

ஆராய்ச்சியாளர்கள் சிலர் இதுபற்றி கண்டுபிடித்துள்ள புள்ளி விவரங்களைக் கீழே காணலாம் :

| உடல் வளர்ச்சியின் அம்சங்கள் | அதிகபட்ச வளர்ச்சி எய்துகின்ற வயது | |
|---|---|---|
| | ஆண் பிள்ளைகள் | பெண் பிள்ளைகள் |
| எடை ... ... ... ... | 15 | 12 |
| உயரம் ... ... ... ... | 14 | 12 |
| உட்கார்ந்த நிலையில் உச்ச எல்லை உயரம் ... | 15 | 12 |
| தோள் அகலம் ... ... ... | 14 | 12 |
| 'பெல்விக்' (அடிவயிற்று எலும்பு) அகலம் ... | ... | 13 |
| இடுப்பு அகலம் ... ... ... | 14 | ... |
| சுற்றளவு ... ... ... | 14 | 11 |

தசை வலிமை

பிறக்கும்பொழுது ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் தசை வலிமையில் வேற்றுமை கிடையாது. 4 வயது ஆகும்பொழுது ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளைவிட ஓர் ஆண்டு அதிக வளர்ச்சி பெற்றுவிடுகிறார்கள். குமரப் பருவத்தின் தொடக்கத்தின்போது ஆண் பிள்ளைகள் இரண்டு ஆண்டு அதிக வளர்ச்சி பெறுகிறார்கள். 14, 15 வயது ஆகும்பொழுது பெண்பிள்ளைகளின் எலும்பும் தசையும் அநேகமாக முழுவளர்ச்சி அடைந்துவிடுகின்றன. ஆனால், ஆண் பிள்ளைகளின் தசை வலிமையோ இந்தச் சமயத்தில் வேகமாக வளர்கின்றது. ஆண், பெண் பிள்ளைகளின் தசை வலிமையைப்பற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். இதிலிருந்து தெரிவது என்னவெனில், பொதுவாக எல்லா வயது நிலைகளிலும் ஆண்பிள்ளைகளின் தசை வலிமை, பெண்பிள்ளைகளின் தசை வலிமையைவிட மிகுதிதான் என்பதாகும். குமரப் பருவத்து ஆண், பெண்பிள்ளைகளின் சராசரித் தசை வலிமைகளைக் கீழ்க்கண்ட படத்தில் காணலாம்.




வலது கையை இறுக்க பிடித்து அளப்பது மூலம் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளது வலுவின் வளர்ச்சியினை அளத்தல்

படம் 6

இயக்க வளர்ச்சி

இவ்வியக்கத்திற்குத் தசை பலமும், எலும்பின் உறுதியும் மட்டும் காரணங்கள் அல்ல. மூட்டு இடங்களில் நெகிழ்ச்சி இருப்பது இவ்வியக்கத்திற்கு உதவியாக இருக்கும். இந்த நெகிழ்ச்சி பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை விரைவிலே அதிகபட்ச நிலை அடைந்துவிடுகிறது. உடம்பிலுள்ள 12 மூட்டு இடங்களின் நெகிழ்ச்சியைப்பற்றி 300 பெண்பிள்ளைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்தார்கள். தனி வேற்றுமைகள் மிகவும் அதிகமாகக் காணப்பட்டன. தோல், முழங்கால், தொடை முதலிய பகுதிகளில் 6 வயதில் அதிகபட்ச நெகிழ்ச்சி காணப்பட்டது. தலையின் அசைவைப் பொறுத்தவரை 9 வயதிலேயே அதிகபட்ச நெகிழ்ச்சி காணப்பட்டது. மற்றும் இடுப்பு, முழங்கை, கணுக்கை, கணுக்கால் முதலிய இடங்களில் அதிகபட்ச நெகிழ்ச்சி 12 வயதில் காணப்பட்டது. இந்த ஆராய்ச்சியிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது என்னவெனில், பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் உடல் உறுப்புகளின் இயக்கம் குழந்தைப் பருவத்திலும், குமரப் பருவ ஆரம்பத்திலும் அதிகமாக முடியும்; அதற்குப்பின் அது வளர்வதில்லை. ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரையிலும் உறுப்புகளின் இயக்கமானது குமரப் பருவத்தில் மேலும் அதிகமாகின்றது. ஆகவே, இப் பருவத்தில் ஆண்பிள்ளைகள் விளையாட்டுகள், உடல் பயிற்சிகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். உதாரணமாக, கீழ்க்கண்ட படத்தைப் பார்க்கவும் :




50 கஜ ஓட்டப்பந்தயத்தின் மூலம் ஆண் பிள்ளையையும், பெண் பிள்ளையையும் ஒப்பிடுதல்.

படம் 7

ஆண்பிள்ளைகளின் ஓடுந்திறமை படிப்படியாக வளர்ந்து கொண்டுபோவதையும், ஆனால், பெண்பிள்ளைகளின் ஓடுந்திறமை குறைந்துகொண்டுபோவதையும் படத்திலிருந்து உணர்கிறோம்.

உடல் அமைப்பு

உடம்பிலுள்ள உறுப்புகளெல்லாம் ஒரே வேகத்தில் வளருவதில்லை. அவை ஒரே சமயத்தில் அதிகபட்ச வளர்ச்சியை அடைவதும் இல்லை. குழந்தை பிறப்பதற்கு முன்பே அதன் தலை பெரும்பாலும் வளர்ந்துவிடுகின்றது. பிறந்த பிறகு அது அதிகம் வளருவதில்லை.




விகித அமைப்பு மாறுதல்




விகித அமைப்பும் உருவமும் மாறுதல்

A பிறந்த குழந்தைகள் B-2 ஆண்டுகள்
C-6 ஆண்டுகள் D-12 ஆண்டுகள் E-25 ஆண்டுகள்

படம் 8

கை கால்கள் குமரப் பருவம் எய்துவதற்குச் சிறிது முன்பும் குமரப் பருவ காலத்திலும் திடீரென்று வேகமாக வளர்கின்றன. உடம்பின்

நடுப்பகுதி குமரப்பருவம் முடியும்பொழுதுதான் முழு வளர்ச்சி எய்து கின்றது. மூக்கு பெரிதாவதும், வாய், உதடுகள் விரிவடைவதும், நெற்றி அகலமாவதும் குமரப் பருவத்திலும் நிகழ்கின்றன. இவ்வாறு உறுப்புகள் வளருவதால் உடம்பின் மொத்த அமைப்பு அளவு மாறுகின்றது. குமரப் பருவத்தில் ஆண்பிள்ளைகளின் தோள்கள் விரிந்து வளருகின்றன. பாதமும், கைகளும் பெரிதாகின்றன. பெண்பிள்ளைகளுக்கோ இடுப்பு விரிவாகின்றது; மார்பகம் வளர்ச்சி அடைகின்றது. இவ்வாறு உடம்பின் அமைப்பில் அதாவது உறுப்புகள் ஒன்றுக்கொன்றுள்ள அளவு விகிதங்களில், பெரும் மாற்றம் ஏற்படுகின்றது.

உடல் உறுப்புகள் வயதுக்கேற்ப எவ்வாறு அளவு விகிதங்களில் மாறுகின்றன என்பதைப் படம் 8-ல் காணலாம்.

குமரப் பருவத்தில் சில ஆண்டுகள் உடல் அமைப்பில் நல்ல ஒருமைப்பாடு இல்லாமலிருந்தபோதிலும் இப் பருவத்தின் இறுதியில் எல்லா உறுப்புகளும் நன்கு வளர்ந்து உடல் அமைப்பில் சிறந்த ஒருமைப்பாடு உண்டாகிவிடும்.




படம் 9

உடல் அமைப்புவகைகள்பற்றிப் பலர் ஆராய்ச்சிகள் செய்திருக் கின்றார்கள். ஷெல்டன் (Sheldon) என்பவர் நிரம்ப ஆராய்ச்சிகள்

செய்தபிறகு உடம்பின் வகைகளை மூன்ருகப் பிரிக்கலாம் என்று கருதுகின்ருர். அவையாவன; 'endomorphs, masomorphs, ectomorphs'. முதல் வகையைச் சேர்ந்தவர்கள் அதிகச் சதை உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்களது வயிறு, மற்றும் உறுப்புகள் பருமஞக இருக்கும். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களினுடைய எலும்பு, தசையெல்லாம் மற்ற உறுப்புகளைவிட அதிகமாக வளர்ந்திருக்கும். மூன்ருவது வகையைச் சேர்ந்தவர்கள் ஒல்லியாக இருப்பார்கள். நரம்பு மண்டலமும், தோல் மண்டலமும் இவற்றில் அதிகமாக வளர்ச்சியுற்று இருக்கும். எலும்புகளும் தசைகளும் அவ்வளவு நன்ருக வளர்ந்திருக்காது. இம் மூன்று உடல் அமைப்பின் வகைகளைப் படம் 9-ல் காணலாம்.

சுரப்பிகளின் வளர்ச்சி

சுரப்பிகளில் இரண்டு வகை. உமிழ்நீர் சுரப்பி, வியர்வைச் சுரப்பிபோன்ற சுரப்பிகள் ஒருவகை. இச் சுரப்பிகளில் உண்டாகும்




என்டோகிரீன் சுரப்பிகள் இருக்கும் இடம்.

படம் 10

நீர் சிறு குழாய்களின்வழியாகச் சென்று வியர்வையாகத் தோலின் மேல் அரும்பும், அல்லது உமிழ்நீராக சீரணத்திற்கு உதவும்

இன்னொருவகை : நாளமில்லாத சுரப்பிகள். தைராய்டு, பிட்யூட்டரி, பீனியல், அட்ரிநல் முதலியன இவ்வகைச் சுரப்பிகள். பால் சுரப்பிகளும் இவ்வகையைச் சேர்ந்தவை. ஆண்களுக்கு இவை விந்து சுரப்பிகளாகவும், பெண்களுக்கு அண்டச் சுரப்பிகளாகவும் இருக்கும். உடம்பில் நாளமில் சுரப்பிகளின் இருப்பிடங்களைப் படம் 10-ல் காணலாம்.

இச் சுரப்பிகள் வளரும் வேகம்பற்றியும், எந்தப் பருவத்தில் அதிகம் வளருகின்றன என்பதைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இது கீழ்க்கண்ட படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.




சில சுரப்பிகளின் வளர்ச்சித் தரம்
படம் 11

இப் படத்தில் ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. பால் சுரப்பிகள் குமரப் பருவத்தில் வேகமாக வளருகின்றன; குழந்தைப் பருவத்தில் அவை சிறிதுகூட வளருவது இல்லை. பெண்பிள்ளை 12 வயதாக

இருக்கும்பொழுது அண்டச் சுரப்பிகள் 40% வளர்ந்திருக்கின்றன. ஆண்பிள்ளைகள் 14 வயது இருக்கும்பொழுது விந்து சுரப்பிகள் 10%தான் வளர்ந்திருக்கின்றன. 12 வயதிலிருந்து 17 வயதுவரை அண்டச் சுரப்பிகள் வேகமாக வளருகின்றன. அதுபோலவே 14 வயதுக்குமேல் விந்து சுரப்பிகள் வேகமாக வளருகின்றன. பால் சுரப்பிகள் இவ்வாறு வளருவதால் ஆண், பெண்பிள்ளைகளின் உடல் வளர்ச்சி குறிப்பாகப் பால் சம்பந்தப்பட்ட உறுப்புகளின் வளர்ச்சி அதிகமாக நிகழ்கின்றது.

பால் சுரப்பிகள்

பால் சுரப்பிகள் வளருவதற்குத் தூண்டுதலாக இருப்பது பிட்யூட்டரி சுரப்பியாகும். இச் சுரப்பியில் இரண்டு ஹார்மோன்கள் உற்பத்தியாகின்றன. ஒன்று உடல் வளர்ச்சியைத் தூண்டும் ஹார்மோன். இந்த ஹார்மோன் காரணமாக உடம்பின் பல்வேறு உறுப்புகள் வளருகின்றன. இந்த ஹார்மோன் வேண்டிய அளவிற்கு உற்பத்தியாகாவிட்டால் உடம்பின் இயற்கையான வளர்ச்சி குன்றி, குழந்தை குள்ளமாக இருந்துவிடும். இதற்கு மாறாக இந்த ஹார்மோன் அளவுக்கு அதிகமாக உற்பத்தி ஆகிவிட்டால் குழந்தையின் உடம்பு மிக அதிகமாக வளர்ந்துவிடும்.

பிட்யூட்டரி சுரப்பியில் உற்பத்தியாகும் இன்னொரு ஹார்மோன் பால் சுரப்பியைத் தூண்டும் ஹார்மோனாகும். இந்த ஹார்மோன் குமரப் பருவம் தொடங்குவதற்குச் சிறிது முன்னே சரியாக உற்பத்தியாகாவிட்டால் விந்து சுரப்பிகள் அல்லது அண்டச் சுரப்பிகள் சரியாக வளராதுபோய்விடும். இதற்கு மாறாக, இந்த ஹார்மோன் அதிகமாக உற்பத்தியாகிவிட்டால் உரிய காலத்திற்கு முன்பே பால் வளர்ச்சி ஏற்பட்டுவிடும்.

பிட்யூட்டரிச் சுரப்பியில் உண்டாகின்ற இந்த இரண்டாவது ஹார்மோன் பால் சுரப்பிகளைத் தூண்டியவுடன், பால் சுரப்பிகள் தாமாகவே ஹார்மோனை உண்டாக்க ஆரம்பிக்கின்றன. இந்த ஹார்மோன்களைப் 'பால் ஹார்மோன்கள்' என்று சொல்லலாம். இவை பெண்பிள்ளைகளிடம் மார்பு, கருப் பை (uterus) அண்டக் குழாய், பெண்குறி முதலிய பால் உறுப்புகளை வேகமாக வளரவைக்கின்றன. இதேபோன்று ஆண்பிள்ளைகளிடம் மீசை, தாடி, விந்துப் பை, ஆண்குறி முதலிய உறுப்புகளை வேகமாக வளரவைக்கின்றன.

பால் சுரப்பிகளிடமிருந்து உண்டாகின்ற ஹார்மோன்களுக்கு இன்னொரு முக்கிய வேலையும் உண்டு. அவை பிட்யூட்டரிச் சுரப்பியில் உண்டாகின்ற முதல்வகை ஹார்மோன்களின் வளர்ச்சியைக் குறைக்

கின்றன. இதன் விளைவாக உடம்பின் வளர்ச்சி குறையும். இறுதியில் உடம்பின் வளர்ச்சி முழுவதும் நின்றுவிடும். பிட்யூட்டரிச் சுரப்பியில் தக்க சமயத்தில் போதிய அளவு வளர்ச்சி ஹார்மோன்கள் உண்டானால்தான் ஒரு குழந்தையின் உடம்பு இயற்கையாக வளரும் என்று பார்த்திருக்கின்றோம். நல்ல இவ் வளர்ச்சி தக்க சமயத்தில் நின்றுவிடுவதற்குப் பால் சுரப்பிகளின் பால் ஹார்மோன்கள் போதிய அளவுக்கு உண்டாவது இன்றியமையாதது.

பிட்யூட்டரிச் சுரப்பியும், பால் சுரப்பிகளும் தக்க முறையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவது மிக முக்கியம். இதைப் பற்றி ஓர் ஆராய்ச்சியாளர் பின்வருமாறு கூறியுள்ளார். ‘விந்து சுரப்பிகளோ அல்லது அண்டச் சுரப்பிகளோ உரிய காலத்திற்கு முன்பாகவே நன்கு செயல்படத் தொடங்கிவிட்டால் அதனால் உடம்பின் வளர்ச்சி குறைந்துபோய்க் குழந்தை குள்ளமாகப் போய்விடும். இதற்கு மாறாக, அண்டச் சுரப்பிகள் அல்லது விந்து சுரப்பிகளில் தோன்றும் ஹார்மோன்கள் மிகவும் காலம் தாழ்த்து உண்டாகுமெனில், உடம்பின் வளர்ச்சி குறிப்பாக, கை கால்களின் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டு உடலமைப்பானது எலியினதுபோன்று ஆகிவிடும். இயற்கையான வளர்ச்சி ஏற்படுவதற்குப் பிட்யூட்டரி ஹார்மோன்களும், பால் ஹார்மோன்களும் உற்பத்தியாவதில் ஒருவகை இணக்கமும் இயைபும் கட்டாயம் வேண்டும் எனத் தோன்றுகிறது.’

மேற்கூறியவாறு பிட்யூட்டரிச் சுரப்பியும், பால் சுரப்பியும் சரியான முறையில் இணங்கி இயங்காவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி விநோதமாகப் போய்விடுவது உண்டு. ஒரு குழந்தை ஒரு வயதாக இருந்தபொழுதே அதனுடைய மார்பு சாதாரண அளவுக்கும் அதிகமாக இருப்பதாகத் தோன்றியது. அக் குழந்தையின் வயது மூன்று ஆண்டுகள் ஏழு மாதங்களானபொழுது அதற்கு முதல் முறையாகத் தீட்டு வந்தது. அதற்கு வயது 3 ஆண்டுகள் 11 மாதங்களானபொழுது எடுக்கப்பட்ட புகைப்படத்தை ஆதாரமாகக்கொண்டு வரையப்பட்டுள்ள படத்தை இங்குக் காணலாம். அப்பொழுது குழந்தையின் உயரம் 3′ 6″ தான்; அதன் எடை 50 பவுண்டு. இவ்வாறு மிகக் குறைந்த வயதில் பால் சுரப்பிகள் இயங்கத் தொடங்கி, பால் உறுப்புகள் வளருவது என்றால் உடம்பின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படும். இத்தகைய பிள்ளைகளின் உடம்பு மிகச் சிறியதாக இருக்கும்.



படம் 12

குழந்தைப் பருவத்தில் மேல் உதடு, கன்னங்கள், தாடை முதலியனவற்றைப் பொறுத்தவரையில் ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் வேற்றுமை ஒன்றும் கிடையாது. ஆனால், குமரப் பருவம் தொடங்கும் சமயத்தில் ஆண்பிள்ளைகளின் மேல் உதட்டின் இரு ஓரங்களிலும் மெல்லிய மயிர் சிறிது அரும்புகின்றது. இது அளவிலும், நிறத்திலும் பின்னர் அதிகமாகின்றது. உதட்டின் இரண்டு ஓரங்களில் தொடங்கி, படிப்படியாக மையத்தை நோக்கி வளர்ந்து, இறுதியில் மீசை உண்டாகிவிடுகின்றது. இந்தக் குழந்தைக்கு மீசை உண்டான சிறிது காலத்தில் கன்னங்களின் மேல்



முக வளர்ச்சியிலும் மயிர் வரம்பிலும் குமரப் பருவத்தில் ஏற்படும் மாறுதல்கள்

படம் 13

பாகத்தில் மயிர் அரும்பத் தொடங்குகின்றது. இது உதட்டின் மயிரைவிட இன்னும் அதிக வேகமாக வளருகின்றது. இந்த வளர்ச்சி முடிகின்ற தறுவாயில் கீழ்த்தாடையிலும், மேல்தாடையிலும் மயிர் வளர்கின்றது. பின்னர்ப் படிப்படியாக முகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மயிர் கறுப்பாகவும் திண்மையாகவும் வளர்ந்து மீசையும், தாடியும் முழுதும் வளர்ந்துவிடுகின்றன.

பொதுவாக, பெண் பிள்ளைகளின் முகத்தில் மயிர் வளருவதில்லை. ஆனால், விதிவிலக்காகச் சில பெண்களின் மேல் உதட்டில் சிறிது

மயிர் முளைப்பது உண்டு. இதனால் அப் பெண்பிள்ளைகளின் பெண் தன்மை பாதிக்கப்பட்டுவிடும் என்று கவலைப்படவேண்டியதில்லை. பள்ளியிலுள்ள ஆசிரியரும் வேறு டாக்டர்களும் இத்தகைய பிள்ளை களுக்குத் தக்க விளக்கமும் யோசனையும் கூறித் தெளிவுபடுத்த வேண்டும்.

குழந்தைப் பருவத்து ஆண்பிள்ளைக்கும், குமரப் பருவத்து ஆண் பிள்ளைக்கும் இடையே, மயிர் வளர்ச்சியில் ஒரு முக்கிய வேற்றுமை உண்டு. சிறு ஆண்குழந்தையின் தலை மயிரில் முன் விளிம்பு எல் லையைப் பார்த்தால் அது ஒரு வளைந்த வில் போன்று இருக்கும். ஆனால், குமரப் பருவத்து ஆண்பிள்ளைகளின் தலைமயிரின் விளிம்புக் கோடு உள்ளே குழிந்து செல்வதைக் காணலாம். ஆனால், பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் குழந்தைப் பருவத்திலும் சரி, குமரப் பருவத்திலும் சரி, அதற்குப் பின்பும் சரி வளைந்த வில்போன்று நடுவில் குழிவு ஏற்படாது. முதலில் இருப்பதுபோன்று தொடர்ந்து இருக்கும். இவற்றைப் படம் 13-ல் காணலாம்.

குமரப் பருவத்தில் ரோமம் ஆண், பெண் குறிகளைச் சுற்றிப் படிப் படியாக வளருகின்றது. பின்னர் அக்குள்களிலும் ரோமம் வளரும்.




பெண்களின் மார்பு வளர்ச்சி

படம் 14.

குமரப் பருவத்தில் பெண்பிள்ளைகளின் உடம்பில் ஏற்படும் ஒரு முக்கிய மாறுதல் அவர்களது மார்பு வளர்ச்சியாகும். முதலில் அதா வது குழந்தைப் பருவத்தில் மார்புக் காம்பு சிறிது முன்எழுந்து இருக்கும். இரண்டாவதாக 10 அல்லது 11 வயதில் மார்புக் காம்பைச்

சுற்றியுள்ள சிறுவட்டப்பகுதி மட்டும் முன் எழுந்து மொட்டு நிலையில் இருக்கும்; மூன்றாவதாக இம் மொட்டு நிலையைச் சுற்றியும் வட்டமாக சதை திரண்டு மார்பு பெரிதாகி முலை உண்டாகிவிடும். இது குமரப் பருவத்தில் முழுதும் வளர்ச்சியுற்றுவிடும். பின்னர், முதிர்ச்சிப் பருவத்தில் இது இன்னும் சிறிது மாறும் என்று சொல்லுவார்கள்.

### குரல் மாற்றம்

குழந்தையாக இருக்கும்பொழுது ஆண்பிள்ளைகளின் குரல் உச்சஸ்தாயியில் இருக்கிறது. ஆனால், இக் குரல் குமரப் பருவத்தில மாற ஆரம்பிக்கிறது. அது கனத்தன்மை அடைந்து வயது வந்தவர்களுடைய குரல்போன்று மாறுகின்றது. இதற்குக் காரணம் குரல் தந்திகள் நீளமாக வளர்ந்துவிடுவதாகும். அவை வளருவதால் குரலின் 'கட்டை' குறைந்துவிடுகிறது. பெண்பிள்ளைகளுக்கும் இம் மாற்றம் உண்டாகின்றது. ஆனால், ஆண்பிள்ளைகளைப்போல அவ்வளவு அதிகமான மாற்றம் ஏற்படுவதில்லை.

### இரத்த அமுக்கம், நாடி வேகம்

குமரப் பருவத்தில் மற்றும் பல உறுப்புகளைப்போல இருதயமும் வேகமாக வளருகின்றது. இப் பருவத்தில் அதன் எடை இருமடங்கு ஆகின்றது. அதன் உள் அகலத்தின் வளர்ச்சியைப் பின்வரும் படத்தில் பார்க்கலாம்:




4 லிருந்து 18 வயதினாது இருதயத்தின் குறுக்கு வெட்டு விட்டத்தின் வளர்ச்சி.

படம் 15

குழந்தைப் பருவத்தில் ஆண்பிள்ளைகளின் இருதயம் பெண்பிள்ளைகளின் இருதயத்தைவிடச் சிறிது பெரிதாக இருக்கின்றது. ஆனால்,

9, 10 வயதிலிருந்து 13, 14 வயதுவரை பெண்பிள்ளைகளின் இருதயம் ஆண்பிள்ளைகளின் இருதயத்தைவிடப் பெரிதாக இருக்கின்றது. இதற்குப் பின்னர் பையனின் இருதயம் வேகமாக வளருகின்றது. பெண்பிள்ளையின் இருதயம் சிறிது மெதுவாக வளருகின்றது.

இரத்தக் குழாய்களின் வளர்ச்சி இருதயத்தின் வளர்ச்சியினின்றும் வேறுபட்டது. குமரப் பருவம் தொடங்குவதற்கு முன்னுல் இரத்தக் குழாய்கள் வேகமாக வளர்கின்றன. குமரப் பருவத்தின் போது அவை அதிகம் வளருவதில்லை. ஆகவே, குமரப் பருவத்திற்கு முன் குழந்தையின் இருதயம் சிறிதாகவும், குழாய்கள் பெரிதாகவும் இருக்கும். ஆனுல், இந்த விகிதம் குமரப் பருவத்தில் மாறுகின்றது. இதற்கேற்ப இருதய அமுக்கம் மாறுகின்றது. குழந்தைப் பருவத்தில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் இரத்த அமுக்கத்தில் வேற்றுமை அதிகம் இல்லை. ஆனுல், 10 வயதிலிருந்து 13 வயது வரை பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகளைவிட இரத்த அமுக்கம் அதிகமாக இருக்கும். 13 வயதிற்குப்பிறகு ஆண்பிள்ளைகளுக்கு இரத்த அமுக்கம் அதிகமாகவும், பெண்பிள்ளைகளுக்குக் குறைவாவும் இருக்கும்.

### ஜீரண உறுப்புகள்

குமரப் பருவத்தில் ஜீரண உறுப்புகள் மிகவும் மாறுகின்றன. இரைப் பையானது உருவத்திலும் கொள்ளளவிலும் பெரிதாகின்றது. உடம்பின் உறுப்புகள் வேகமாக வளருவதால் உணவின் தேவை அதிகமாகின்றது. இரைப்பை பெரிதாவதால் குமரப் பருவத்

| வயது | தேவையான கலோரிகள் | |
|---|---|---|
| | ஆண் பிள்ளைகள் | பெண் பிள்ளைகள் |
| 10 | 2,000 | 2,000 |
| 11 | 2,500 | 2,100 |
| 12 | 2,400 | 2,200 |
| 13 | 2,600 | 2,300 |
| 14 | 2,800 | 2,400 |
| 15 | 3,000 | 2 500 |
| 16 | 3,200 | 2,400 |
| 17 | 3,400 | 2,400 |
| 18 | 3,600 | 2,400 |
| 19 | 3,800 | 2,400 |

துப் பிள்ளைகளின் பசியும் அதிகமாகின்றது. வயது முதிர்ந்தவர்கள் உண்ணுவதைவிட அதிக அளவு குமரப் பருவத்தில் உண்ண முடியும். இதில் பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் அதிக வேற்றுமை இல்லை. இப் பருவத்தில் பிள்ளைகள் நல்ல உணவை மிகுதியாக உண்ணவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்குத் தேவையான கலோரிகளின் விகிதம் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

குமரப் பருவத்து ஆண்பிள்ளைகளுக்கு உணவுக் கலோரிகளின் தேவை படிப்படியாக அதிகமாகி வருவதைப் பார்க்கின்றோம். பெண்பிள்ளைகளுக்கும் இவ்வாறு அதிகமாக வந்தபோதிலும் 16 வயதிற்குப் பிறகு உடல் முழு வளர்ச்சியுற்ற நிலையில் உணவுத் தேவை குறைய ஆரம்பிக்கின்றது.

## உடல் வளர்ச்சியில் ஏற்படும் பிரச்சினை

குமரப் பருவத்தில் பலவகைகளில் உடல் வேகமாக வளருவதால் பிரச்சினைகள் சில ஏற்படலாம். சில பிள்ளைகளுடைய உறுப்புகள் முறையாக வளராதுபோவதால் உடல் அமைப்பிலும், தோற்றத்திலும் விகாரம் உண்டாகிவிடும். இந்தப் பருவத்தில் மார்பு வளர்ச்சி

| உடல் அமைப்புகளின் தன்மை | சொல்லுபவர்களின் சதவிகிதம் | | சொல்லுபவர்களில் கவலை தெரிவிப்பவர்களின் சதவிகிதம் | |
|---|---|---|---|---|
| | ஆண் பிள்ளைகள் | பெண் பிள்ளைகள் | ஆண் பிள்ளைகள் | பெண் பிள்ளைகள் |
| ஒல்லியாக இருத்தல் | 21 | 16 | 22 | 48 |
| குண்டாய் இருத்தல் | 13 | 30 | 3 | 55 |
| குள்ளமாய் இருத்தல் | 26 | 27 | 39 | 22 |
| நெட்டையாய் இருத்தல் | 28 | 22 | 4 | 49 |
| விரைவான வளர்ச்சி | 19 | 24 | 6 | 15 |
| மெதுவான வளர்ச்சி | 17 | 13 | 40 | 36 |

முதலிய பால் சம்பந்தப்பட்ட மாறுதல்கள் உண்டாகின்றன. இம் மாறுதல்கள் குழந்தைக்குக் குழந்தை காலத்தால் அதிகம் வேறுபடு கின்றன; ஆகையால், சில குழந்தைகளைப்பற்றி மிகக் கவலை உண்டாகிவிடும். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நண்பர்களாக இருந்துவரும் இரண்டு பிள்ளைகளில் ஒரு குழந்தைக்குப் பால் சம்பந் தப்பட்ட மாறுதல்கள் ஏற்பட்டு இன்னொரு குழந்தைக்கு அவை ஏற்படாதபொழுது, இரண்டாவது குழந்தைக்கு அச்சமும் கவலையும் உண்டாகும். குறிப்பாக, பெண்பிள்ளைகளுக்கு இந்த அச்சம் அதிக மாக உண்டாகும். மேலும், உடல் அமைப்பு அழகாக இல்லாவிட்டால் அவர்கள் மிகவும் வருந்தி, அதற்காக உணவைக் குறைக்கவும், கூட்டவும், மாற்றவும் எதற்கும் தயாராக இருப்பார்கள். ஆண் பிள்ளைகளும் உடல்பயிற்சி செய்து தங்கள் உடம்பை நல்ல அமைப் புடன் விளங்கச்செய்வதற்கு ஆவன செய்வார்கள்.

குமரப் பருவத்தில் ஏற்படும் உடல் மாறுதல் காரணமாகப் பிள்ளைகளின் உள்ளத்தில் ஏற்படும் கவலைகளைப்பற்றி அமெரிக்க அறிஞர் இருவர் ஆராய்ச்சி செய்தார்கள். அவர்கள் கண்ட விவரங் களை வகைப்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். பத்தாம் வகுப்பில் படிக்கும் 580 மாணவ, மாணவிகள் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

முதலாவதாக, தங்களுடைய உடல் அமைப்பின் தன்மையை விவரித்துச் சொல்லுமாறு இந்த 580 பிள்ளைகளிடமும் ஆராய்ச்சி யாளர்கள் கேட்டார்கள். அதுபற்றி அவர்களுக்கு ஏதும் கவலை உண்டா என்று கேட்டார்கள். அவர்கள் அளித்த விடையின் விவரத்தை முன் பக்கத்திலுள்ள அட்டவணையில் காணலாம்.

மேற்கண்ட அட்டவணையிலிருந்து பெண்பிள்ளைகள் மிகவும் ஒல்லியாக இருப்பதைப்பற்றிக் கவலைப்படுவதாகத் தெரிகின்றது. அதற்கு மேலாகக் குண்டாய் இருப்பதுபற்றியும், நெட்டையாய் இருப்பதுபற்றியும் கவலைப்படுவதாகத் தெரிகின்றது. ஆண் பிள்ளைகள் குள்ளமாய் இருப்பதுபற்றியும், மெதுவான வளர்ச்சி பற்றியும் அதிகமாகக் கவலைப்படுவது தெரிகின்றது.

முகத்தோற்றத்தின் தன்மையை விவரித்துக் கூறுமாறும் மேற் சொன்ன மாணவர்களைக் கேட்டார்கள். இதுபற்றி அவர்களுக்கு ஏதேனும் கவலை உண்டா என்றும் கேட்டறிந்தனர். அவர்கள் அளித்த விடைகளின் விபரத்தைக் காணலாம்.

| முகத்திலுள்ள குறை | கூறுபவர்களின் சதவீதம் | கூறுபவர்களில் கவலை தெரிவிப்பவர்களின் சதவீதம் |
|---|---|---|
| **ஆண்பிள்ளைகள்** | | |
| பருக்கள் ... ... | 57 | 51 |
| தாடி இல்லாமை ... ... | 34 | 2 |
| அடர்ந்த புருவங்கள் ... ... | 27 | 5 |
| மருக்கள் தழும்புகள் ... ... | 20 | 13 |
| பற்கள் ஒழுங்கு இல்லாமை ... | 17 | 39 |
| தடித்த உதடுகள் ... | 14 | 5 |
| வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் காது | 13 | 6 |
| முகத்தில் எண்ணெய் வழிதல் ... | 12 | 27 |
| அடர்த்தியான தாடி மயிர் ... | 11 | 13 |
| கண்ணாடி போட்டிருத்தல் ... | 11 | 23 |
| கருமையான நிறம் ... | 10 | 4 |
| பற்களில் இடைவெளி இருத்தல் | 10 | 26 |
| நீளமான மூக்கு ... | 10 | 8 |
| ஒட்டிய முகம் ... | 10 | 15 |
| பெரிய காதுகள் ... | 10 | 8 |
| **பெண்பிள்ளைகள்** | | |
| பருக்கள் ... ... ... | 57 | 82 |
| அடர்த்தியான புருவங்கள் ... | 24 | 11 |
| முகத்தில் எண்ணெய் வழிதல் ... | 22 | 52 |
| மருக்கள் தழும்புகள் ... | 22 | 30 |
| கண்ணாடி போட்டிருத்தல் ... | 21 | 31 |
| உருண்டையான முகம் ... | 19 | 21 |
| கவர்ச்சியில்லாத முகம் ... | 18 | 42 |
| வறட்சியான தோல் ... ... | 16 | 43 |
| பற்கள் ஒழுங்காக இல்லாமலிருத்தல் | 16 | 42 |
| சிறிய உதடுகள் ... ... | 15 | 13 |
| நீளமான மூக்கு ... ... | 11 | 23 |
| பெரிய மூக்கு ... ... | 11 | 44 |
| விநோத வடிவுள்ள மூக்கு ... | 10 | 21 |

மேற்கண்ட அட்டவணைகளிலிருந்து பெருவாரியான ஆண், பெண்பிள்ளைகள் தங்கள் முகத்தில் பருக்கள் வருவதைப்பற்றி மிகவும் கவலைப்படுகிறார்கள் என்பது தெரியவருகின்றது. மற்ற எல்லாவற்றையும்விட இதைப்பற்றியே அவர்கள் அதிகம் கவலைப்படு கிறார்கள். மேலும், ஆண் பெண் இருபால் பிள்ளைகளும் எண்ணெய் வழிதல், பற்கள் ஒழுங்காக இல்லாமல் இருத்தல், கண்ணாடி போட்டிருத்தல் முதலியவைபற்றிக் கவலைப்படுவது தெரிகின்றது. பெண்பிள்ளைகள் தங்களுடைய மூக்கின் அமைப்புகளைப்பற்றியும், தோலின் வறட்சிபற்றியும், முகம் கவர்ச்சி இல்லாது இருப்பதைப் பற்றியும் கவலைப்படுவதும் தெரிகின்றது.

சில பெண்பிள்ளைகள் சொன்ன கூற்றுகளைக் கீழே காணலாம் :

'என்னுடைய இடுப்பின் அகலம் மிகவும் பெரிதாக உள்ளது ;'

'அது சிறிதாக இருந்தால் என்னுடைய உடல் வடிவம் இப்பொழுது இருப்பதைவிட மிகவும் நன்றாக இருக்கும்.'

'எனது மார்பு இப்பொழுது மோசமாக இல்லாவிட்டாலுங்கூட இன்னும் சிறிது வளர்ச்சியுற்றால் நன்றாக இருக்கும்.'

'முகத்தில் இத்தனை பருக்கள் வராமலும், கண்ணுக்குக் கண்ணாடி போடாமலும் இருக்கவேண்டும் என்று மிகவும் விரும்புகின்றேன்.'

'நான் இன்னும் கொஞ்சம் ஒல்லியாக இருக்கவேண்டும்.

என்னுடைய காதுகள் முன்னே நீட்டிக்கொண்டிருக்காமல் பின்னால் போகவேண்டும்.

என்னுடைய நெற்றி இன்னும் கொஞ்சம் தாழ்ந்திருக்க வேண்டும்.

பருக்கள் எல்லாம் மறைந்துபோய் என்னுடைய முகம் மென்மையாகவும், சுத்தமாகவும் ஆகவேண்டும்.

என்னுடைய கண்கள் இன்னும் கொஞ்சம் பெரியனவாக இருந்தால் நன்றாக இருக்கும்.

என்னுடைய பாதங்கள் இன்னும் கொஞ்சம் சிறியனவாக இருந்தால் நன்றாக இருக்கும்.'

'முதலில் என்னுடைய மூக்கு மிகவும் பெரிதாக இருப்பதால் இதனைச் சரிசெய்துகொள்ள விரும்புகிறேன்.

ஒருநாள் ஒரு பிளாஸ்டிக் அறுவை மருத்துவரிடம் சென்று என்னுடைய மூக்கைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

நான் இவ்வளவு நெட்டையாக இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை.

எனது கீழ்த்தாடை இன்னும் சிறிது அகலமாக இருந்தால் நன்றாக இருக்கும்.

என்னுடைய பற்களை நான் சரிப்படுத்திய பிறகு கீழ்த்தாடை பெரிதாகிவிடும் என நினைத்தேன். ஆனால், அது இன்னும் குறுகலாகவே இருக்கின்றது......'

'என்னுடைய கண்கள் சிறியனவாக இருக்கின்றன ; இமைகளும் வேண்டியஅளவு நீளமாய் இல்லை; எனக்கு நிறைய மருக்கள் உள்ளன. இவற்றைப்பற்றி நான் டாக்டரிடம் கேட்டபொழுது அவற்றை நீக்குவது என்றால் தழும்புகள் உண்டாகும் என்று சொல்லிவிட்டார்.'

'கண்ணாடி போடாமல் இருந்தால் நன்றாக இருக்கும். எனது எடை 10 பவுண்டுகள் குறையவேண்டும். எப்பொழுதும் கவர்ச்சியாக இருக்கின்ற தோல் நிறம் வேண்டும்'

ஆண்பிள்ளைகளில் சிலர் கூறியவற்றைக் கீழே காணலாம்:

'என்னுடைய மார்பு இப்பொழுது உள்ளதைவிட அகலமாக இருந்தால் நன்றாக இருக்கும்.

தோள்களும் அகலமாக வேண்டும். இப்பொழுதுள்ளதைவிட எனது எடை இன்னும் சிறிது 20, 25 பவுண்டுகள் அதிகமானால் நல்லது.'

'இன்னும் கொஞ்சம் பெரிதாகி எனது தசைகளெல்லாம் நன்கு வளரவேண்டும். இன்னும் உயரமாக வளரவேண்டும். முகத்திலுள்ள பருக்கள் முதலிய குறை போகவேண்டும்.'

'நான் இன்னும் அழகாகவேண்டும். நல்ல தடிப்பாக விரும்பவில்லை. தலைமயிர் அலைபோன்று வளைவுற்று அழகாக இருக்க வேண்டும். என்னுடைய உடல் தோற்றம் முழுவதையுமே நான் மாற்ற விரும்புகின்றேன். நல்ல கட்டோடு அழகாக இருக்கவேண்டும்.'

'என்னுடைய முழங்கை, புயம், மார்பு, தோள், வயிற்றுத் தசைகள் எல்லாம் நன்றாக வளர்ந்து திரட்சியுறுவதை விரும்புகின்றேன்.'

குமரப் பருவத்துப் பிள்ளைகளின் உடல்வளர்ச்சியில் உண்டாகும் சிறுசிறு பிரச்சினைகளைப்பற்றி இதுவரையில் பார்த்தோம். ஆனால், இவற்றைவிட மிகக் கடுமையான உடல் குறைகளும் ஏற்படுவதும் உண்டு. குழந்தை பிறக்கும்பொழுதே இக் குறைகள் அமைந்திருக்கலாம். அல்லது பின்னர் ஏற்படலாம். எப்படியாயினும் உடற் குறைகள் குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கும்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும், குமரப் பருவத்துப் பிள்ளைகளிடம் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்து அவ்வப்போது தக்க யோசனைகளையும், விளக்கங்களையும் அன்போடு கூறி அவர்கள் கவலையின்றி வளருவதற்குத் துணைசெய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

### உடல்நலத்தின் முக்கியத்துவம்

குமரப் பருவத்தில் பல வகைகளில் உடல் வளருகின்றது என்று பார்த்தோம். உடல் வளர்ச்சி வேகமாக நடைபெறுகின்றது என்றும் பார்த்தோம். இப் பருவத்தில் ஆண் பெண் பிள்ளைகள் நல்ல உடல் நலத்துடன் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். இதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் உதவவேண்டும். நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்கள் பிள்ளைகளிடம் ஏற்படுவதற்குத் துணை செய்ய வேண்டும். சிறந்த உடல்நலம் இல்லாவிட்டால் அது பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியை மிகவும் பாதிக்கும்.

உடல்நலப் பிரச்சினைகள்

குமரப் பருவத்துப் பிள்ளைகளில் பலருக்குக் கண் பார்வையில் குறை ஏற்படுகின்றது. தற்கால நகர வாழ்க்கைப் போக்கால் இக் குறை இன்று அதிகமாகப் பரவிவருகிறது. கண் பார்வை குறைபட்டால் பிள்ளைகள் புத்தகங்களைச் சரியாகப் படிக்கமுடியாது. ஆசிரியர்கள் கரும்பலகையில் எழுதுவதைச் சரியாகப் படிக்க முடியாது. நோட்டுப் புத்தகங்களில் எழுதுவதும் இடைஞ்சலாக இருக்கும். ஆகவே, கண் பார்வையில் குறை இருந்தால் அதைத் தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்து உடனடியாக மாற்றுத் தேடவேண்டியது கட்டாயமாகும். சில பிள்ளைகள் மிகவும் அதிகமாகப் படிக்கின்ற காரணத்தால் பார்வை கெடுகின்றது. மங்கலான வெளிச்சத்தில் படிப்பதனுலும் பார்வை கெடும். பார்வை கெடுவதற்கு இவை தவிர வேறு பல காரணங்களும் உண்டு.

கண் பார்வை கெடுவதுபோலவே குமரப் பருவத்துப் பிள்ளைகள் பலருக்குப் பற்கள் கெடுவதுண்டு. பல்லில் சொத்தை விழலாம். இன்னும் பலவகைப் பல்நோய்கள் ஏற்படலாம். பல்நோய் வரும்போது அதிக வலி உண்டாகும். வாயில் ஊறும் உமிழ்நீர் கெட்டு, அதனுல் சீரணம் பாதிக்கப்படும். பல்நோய் காரணமாக உடம்பில் பல கோளாறுகள் உண்டாகின்றன என்று மருத்துவர்கள் கூறுகிருர்கள்.

கண் நோய்களும், பல்நோய்களும் எடுத்துக்காட்டுகளாகச் சொல்லப்பட்டன. இவைபோன்றே உடம்பிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றிலும் குறைகள் ஏற்பட்டு நோய்கள் உண்டாகலாம். இவ்வாறு ஏற்படுகின்ற நோய்கள் காரணமாக முக்கிய மாறுதல் பருவமாகிய குமரப் பருவத்தில் பலவகையான கோளாறுகள் உண்டாகும். இவற்றையெல்லாம் தடுப்பதற்காக ஆரம்பத்திலேயே மருத்துவச் சோதனை செய்யவும் குறைகள் நீக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

'அ' ஒரு பருமனுன, மந்த குணமுள்ள, மெதுவாக இயங்கும் பெண்பிள்ளை. அவள் வகுப்பில் அடிக்கடி தூங்கிவிடுவாள். இவ்வாறு தூங்குவதுபற்றி ஆசிரியர்களும் மற்ற மாணவர்களும் அவளைக் கேலிபண்ணுவது உண்டு. இதனுல் அவள் பலமுறை அழுதிருக்கிருள். இதனுல் அவளுக்கு மிக்க கலக்கமும் வருத்தமும் ஏற்படுவதுண்டு. தூங்காமல் இருப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தபோதிலும், எப்படியோ தூக்கம் வந்துவிடுகிறது என்று அவள் சொன்னுள். கடைசியாக அவளைப் பள்ளி மருத்துவரிடம் அனுப்பினுர்கள். மருத்துவர் சோதனை செய்து அவளுடைய தைராய்டுச் சுரப்பி சரியாக வேலை செய்யவில்லை என்று உடனே கண்டுபிடித்துவிட்டார். அவளுக்குச் சீரணமாவது மந்தமாக இருந்தது. மலச்

சிக்கல் மிகவும் அதிகமாக இருந்தது. கழிவுப் பொருள் சரியாக வெளியாகாதபடியால் உடம்பில் அசுத்தம் அதிகமாயிற்று. இவ்வாறு இருந்தபோதிலும் அவள் ஒழுங்காகப் படிப்பில் தேர்ச்சி பெற்று வந்தது அவளுடைய இயற்கையான ஆற்றலைக் காட்டியது. தைராய்டுச் சுரப்பி நன்ருக இயங்குவதற்கு மருந்து கொடுக்கப்பட்டது. ஒருமாத காலத்திற்குள் அவள் பகல் வேளையில் தூங்குவது என்பதே இல்லாமல் போய்விட்டது. வகுப்பில் அவளது வாய் திறந்தபடியே இருப்பதில்லை. இருதயத் துடிப்பின் வேகம் முன்பு 52 ; அதாவது சராசரிக்கும் கீழே இருந்தது. இப்பொழுது சராசரியாகிய 72-க்கு வந்துவிட்டது. மலக் கழிவு ஒழுங்காக நடைபெற்றது. அவளது எடை சிறிது குறைந்தது. விரைவில் அவள் சாதாரண நிலையை அடைந்துவிட்டாள். இப்பொழுது அவள் வகுப்பில் நன்ருக கவனித்துப் படிக்க முடிந்தது; தூங்குவது என்பதே இல்லாமல் போய்விட்டது. இதனுல் அவளது பள்ளிப் படிப்பில் பெரிய முன்னேற்றம் உண்டாயிற்று. இதைவிட முக்கியமானது என்னவென்ருல், அவளது சமூக வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் உண்டாயிற்று. ஆண்டு முடிவதற்குள்ளாக அவள் பலரும் விரும்புகின்ற ஒரு சிறந்த மாணவியாகத் திகழலானுள்.

இவ்வெடுத்துக்காட்டிலிருந்து உடல்நலத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் உள்ள முக்கியத் தொடர்பு தெளிவாகின்றது ; மருத்துவச் சோதனையின் முக்கியத்துவமும் தெளிவாகின்றது. இது போன்றே இன்னும் எவ்வளவோ எடுத்துக்காட்டுகள் தரலாம். கண், காது, பல், மூக்கு முதலிய உறுப்புகளில் ஏற்படும் குறைகள் பற்றி நாம் பார்த்தோம். பேசும்பொழுது திக்குதல், கொன்னுதல் போன்ற குறையுடைய சில பிள்ளைகள் உண்டு. இக் குறையுடைய பிள்ளைக்கு அதனுல் பல்வேறு பிரச்சினைகள் உண்டாகலாம். பிற பிள்ளைகள் கேலி செய்வார்கள். மேலும் ஆண், பெண்பிள்ளைகள் சேர்ந்து படிக்கும் கூட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தப் பிரச்சினை இன்னும் தீவிரமாகிவிடும். பெண்பிள்ளைகள் முன்னிலையில் இக் குறையுடன் ஒரு பையன் தோன்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கும். திக்கல், கொன்னல் ஆகிய பேச்சுக் குறைகள் ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். இது நரம்பு அல்லது வேறு உள்ளுறுப்பின் கோளாறு காரணமாக வரலாம். அல்லது உணர்ச்சிகள் காரணமாக வரலாம். இதுபற்றி நிபுணர்கள் சொல்லும் வழிமுறையைக் கைப்பற்றிப் பயிற்சிகள் செய்தால் இக் குறை நீங்குவதற்கு வாய்ப்பு உண்டு.

உடல்நலக் கல்வி

குமரப் பருவத்துப் பிள்ளைகள் உடல்நலம்பற்றிக் கல்விபெற வேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்த வேண்டியதில்லை.

அவர்கள் உடல் உறுப்புகளை எவ்வாறு பேணவேண்டும் என்றும், நல்ல சத்துள்ள சமச்சீர் உணவு உண்பது எவ்வாறு என்றும், நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களை எவ்வாறு ஏற்படுத்துவது என்றும் கல்விபெற வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

முதலாவதாக, பிள்ளைகள் தங்களுடைய கண்கள், காதுகள், பற்கள், மூக்கு, தலைமயிர், தோல் இன்னும் மற்ற உறுப்புகளின் அமைப்பைப்பற்றி நன்ருகத் தெரிந்துகொள்ளவேண்டும். இவ் வுறுப்புகளை நாள்தோறும் எவ்வாறு துப்புரவாக வைத்துப் பேணுவது என்பது பற்றி அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும். இவ் வுறுப்புகளுக்கு வருகின்ற சாதாரண நோய்கள், அவற்றின் தன்மைகள், நோய் வருவதற்கான அறிகுறிகள், அவற்றை வராது தடுக்கும் முறைகள், வந்தால் அவற்றைக் குணமாக்கும் முறைகள் முதலியனபற்றியும் அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும். இவ்வாறு தங்களுடைய உடம்பின் ஒவ்வொரு பாகம்பற்றியும் தெளிவான அறிவு அவர்களுக்கு இருக்குமென்ருல், நல்ல உடல்நலத்துடன் அவர்கள் வளருவதற்கு அது மிகவும் உதவியாக இருக்கும்.

இரண்டாவதாக, அவர்கள் தாங்கள் உண்ணும் உணவுபற்றியும் நல்ல அறிவு உடையவர்களாக இருக்கவேண்டும். தங்கள் வயதிற்கேற்ப எத்துணைக் கலோரிகள் தேவை என்றும், அக் கலோரிகள் கிடைப்பதற்கு என்னென்ன வகையான உணவுகளை உண்ணவேண்டும் என்றும், இவ் வுணவுகளை எந்த அளவுக்கு உண்ணவேண்டும் என்றும் அவர்களுக்கு நன்ருகத் தெரிந்திருக்கவேண்டும். குமரப் பருவத்தில் பிள்ளைகளின் உறுப்புகள் வேகமாக வளருகின்ற காரணத்தால் அதற்கேற்ப அவர்கள் சத்துள்ள உணவைப் போதிய அளவுக்கு உண்ணவேண்டியது அவசியம். பல சமயங்களில் அவர்களது உணவில் கால்சியம், அல்லது உயிர்ச்சத்து (வைட்டமின்) குறைவாக இருக்கலாம். கால்சியம் குறைவாக இருந்தால் எலும்பு வளர்ச்சியும், பல் வளர்ச்சியும் குறைபடும். உயிர்ச்சத்து குறைவாக இருந்தால் எல்லா வளர்ச்சியும் குறையும். இவற்றையெல்லாம் ஆசிரியர்களும், பெற்ரேர்களும் முதலில் தாங்கள் தெரிந்துகொண்டு, பின்னர்ப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும்.

மூன்ருவதாக, குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு நல்ல சுகாதாரமான பழக்கங்களில் பயிற்சி தரவேண்டும். வளரும் பிள்ளைகள் குறித்த நேரத்தில் உண்ணவும், போதிய காலம் உறங்கவும், மலம் கழிப்பதில் ஒழுங்காக இருக்கவும், தினம் ஓரிரு மணி நேரம் உடற்பயிற்சி செய்யவும், போதிய ஓய்வும், பொழுதுபோக்கு பெறவும் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். இந்தப் பழக்கங்களெல்லாம் அவர்களிடம் நன்கு அமைந்துவிட்டால் குமரப் பருவத்தில்

அவர்களது உடல்நலம் நன்ருக இருப்பதுமட்டுமல்லாது பிற்காலத்திலும் அது மிகவும் நன்ருக இருக்க உதவும்.

### பால்பற்றிய கல்வி

இன்னென்றும் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியது அவசியம். குமரப் பருவத்தில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் பால் உணர்வு பெற்று வளர்ச்சியுற்ற ஆண்களாகவும், பெண்களாகவும் ஆகின்ருர்கள். ஆண் பையனின் பால் உறுப்புகளெல்லாம் வளர்ச்சியுற்று, அதற்கேற்ப அவனது தோற்றம் மாறிவிடுகின்றது. இதுபோலவே, பெண்பிள்ளையின் பால் உறுப்புகளும் வளர்ச்சியுற்று, அதற்கேற்ப அவளது தோற்றமும் மாறிவிடுகின்றது. இருபாலாரிடமும் பால் உணர்ச்சி தோன்றி மேலோங்கி வளரும். இக்காலத்தில் பிள்ளைகளின் உள்ளத்தில் எத்தனையோ கேள்விகளும் ஐயங்களும் உண்டாகலாம். இந்தக் கேள்விகளுக்கு விடையும், ஐயங்களுக்கு விளக்கமும் தக்க முறையில் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆனல், சில காரணங்களால் பெற்ருேர்கள் இதனைச் செய்வதில்லை. ஆகவே, பிள்ளைகள் பல தீய புத்தகங்களைப் படித்துப் பால்பற்றிய செய்திகளைத் தவருகத் தெரிந்துகொள்ளுகிருர்கள். அல்லது தங்களினும் வயது மிகுந்த பிள்ளைகளுடன் சேர்ந்து அரைகுறையாகத் தெரிந்துகொள்ளுகிருர்கள். இம்முறையில் அவர்களுக்குச் சரியான பால் அறிவு கிடைப்பதில்லை. இதனல் பல தீங்குகள் விளையலாம்.

பால் மாறுதல்பற்றிய முக்கிய விவரங்களைப் பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லவேண்டியது மிகவும் அவசியம். பெற்ருேர்கள் இக் கடமையைச் செய்யாவிட்டால் பள்ளி ஆசிரியர்கள் செய்ய வேண்டும். இதனைப் 'பால்பற்றிய கல்வி' (Sex Education) என்று சொல்லுகிருர்கள். இது பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்று கல்வி அறிஞர்கள் இக்காலத்தில் கருதுகின்றனர். பள்ளிக்கூடம் இக் கடமையைச் செய்யாவிட்டால் பிள்ளைகள் தவருன பல்வேறு வழிகளில் தெரிந்துகொண்டு அதனல் தீங்குகள் உண்டாக ஏதுவாக இருக்கும்.

### உடல்நலத்திற்கும் உள்ள வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு

பிள்ளைகள் சிறந்த உடல்நலத்துடன் வளர்வார்கள் என்ருல் அதனல் அவர்களது மனநிலையும் சிறந்து அமையும். உடல்நலம் குன்றிப்போனல் உளநலமும் குன்றிப்போகும். உள்ளத்தில் ஏற்படும் பல திரிபுகளுக்குக் காரணம் உடலில் இருக்கும் என்ற இவ்வுண்மை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தெரியாமல் போவதுண்டு. ஒரு பையன் பாடத்தில் மோசமாக இருக்கின்ருன்

என்றால் அதற்குக் காரணம் அவனது நுண்ணறிவுக் குறைவு அன்று. ஏதோ ஒரு சுரப்பி சரியாக வேலை செய்யாமை என்பது மாணவனுக்கும் தெரியாமற் போகலாம்; ஆசிரியர்களுக்கும் தெரியாமற் போகலாம். இது தெரியாமையால் மாணவன் தன்னைப்பற்றித் தாழ்வு மனப்பான்மை கொள்ளுவதும், ஆசிரியர்கள் மாணவனைப் பற்றிக் குறைவாக நினைப்பதும் எவ்வளவு வருந்தத்தக்கது என்பது சொல்லாமலே விளங்கும். இதுபோன்றே இன்னும் பல எடுத்துக் காட்டலாம். இதற்கெல்லாம் வழி அவ்வப்பொழுது ஒவ்வொரு குழந்தைக்கும் பள்ளிக்கூடத்தில் ஒழுங்காக மருத்துவச் சோதனை செய்வதாகும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு மருத்துவ நிபுணரின் சேவை இருக்கவேண்டியது அவசியம். மேலை நாடுகளில் பல பள்ளிகளில் டாக்டர்கள் முழுநேர ஊழியராகப் பணியாற்றுகிறார்கள். நம் நாட்டில் தற்பொழுதுள்ள பொருளாதார நிலையில் இது நினைக்கமுடியாத ஒன்று. ஆனால், அவ்வப்பொழுது டாக்டர்களை அழைத்துப் பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம் மருத்துவச் சோதனை செய்வது முடியாத ஒன்றன்று.

சில பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. இன்னும் சில பிள்ளைகள் ஆசிரியர்களுக்குக் கட்டுப்படாமல் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளுவது உண்டு. மேலும் சில பிள்ளைகள் திருடுதல், பிறரைத் துன்புறுத்துதல், பொருள்களை அழித்தல் போன்ற சமூக விரோதமான செயல்களில் ஈடுபடுவது உண்டு. இவ்வாறு பிறழ்வான நடத்தையுடைய பிள்ளைகள் ஏன் அவ்வாறு பிறழ்வாக நடக்கின்றார்கள் என்று காரணகாரியமாக ஆராய வேண்டியது அவசியம். இவ்வாறு ஆராயும்பொழுது சில சமயங்களில் உடல் குறைகள்தாம் அடிப்படையான காரணம் என்று தெரியவருவதுண்டு.

மனக்கோளாறுகளுக்கும், நடத்தைக் கோளாறுகளுக்கும் அடிப்படைக் காரணம் உடல் கோளாறாக இருக்கலாம் என்பதற்குப் பின் வருவது ஒரு நல்ல உதாரணம் : 'ஜே' மிகவும் ஒதுங்கிப் போகின்ற கூச்சம் நிறைந்த பையன். அவன் பெரும்பாலும் தனியாகவே இருப்பதுண்டு. வகுப்பறைக்குள் வரும்பொழுதும் வெளியே போகும்பொழுதும், மற்றப் பிள்ளைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டே அவன் செல்வான். வகுப்பில் ஆசிரியர் ஏதாவது பாடம் சொல்லச் சொன்னால் அவன் மறுத்துவிடுவான். எப்பொழுதும் தனது கைக்குட்டையைக் கொண்டு முகத்தை மறைத்துக்கொள்ளுகின்ற பழக்கம் அவனிடம் இருந்தது. அவனது ஆங்கில ஆசிரியர் அவனிடம் தனியாகப் பேசவேண்டியது அவசியம் என்று நினைத்து, ஒருநாள் அவனை வரச்சொன்னார். நெடுநேரம் பேசிய பிறகு பையன் உண்மையை ஒத்துக்கொண்டான், அவனது முகத்தில் சிறு

சிறு பருக்கள் இருப்பதும், அதனால் முகத்தின் நிறம் மாறிப்போய் இருப்பதும்தான் அவனது உள்ளத்தை வாட்டி வதைத்து வந்தன. ஆகவே, அவன் பிறர் தன்னைப் பார்க்கக்கூடாது என்று முகத்தைக் கைக்குட்டையால் மறைத்துக்கொண்டான். எழுந்து நின்று பாடம் சொல்ல மறுத்து வந்தான். பிறர் பார்க்க முடியாதபடி மற்றவர்களுக்கும் பின்னால் ஒளிந்துகொண்டு போவதும், வருவதுமாக இருந்தான். மேலும், அவனது வயிற்றுக்குள் குடல்வலி அதிகமாக இருந்ததாகவும் அவன் சொன்னான். எழுந்து நின்று பாடம் சொல்லும்பொழுது வலி அதிகமாக ஏற்பட்டு அவனுக்கு நிற்பதற்கும் கஷ்டமாகப் போய்விடும். பையன் உடனே டாக்டரைப் போய்ப் பார்ப்பதற்குத் தயங்கியதை உணர்ந்த ஆசிரியர் தாமே சிறிது விசாரணை செய்தார். கடந்த இரண்டு நாட்களில் என்னென்ன உணவுகள் உண்டான் என்பதைக் கேட்டார். எண்ணெயில் வறுக்கப் பட்ட பல உணவுப் பொருள்களை அவன் உண்டு வந்தது தெரிந்தது. சர்க்கரையும், காப்பியும் மற்றும் மசாலாப் பொருள்களும் அவன் அதிக அளவில் உண்டு வந்தான். இவ்வாறு பல ஆண்டுகளாக அவன் உண்டு வந்ததாகவும் தெரிந்தது. அவனுடைய எடையைப் பார்த்ததில் அவனது உயரத்திற்கு 20 பவுண்டுகள் குறைவாக இருந்தது. இந்த விவரங்களை வைத்துக்கொண்டு பள்ளி டாக்டரோடு ஆசிரியர் கலந்து பேசி, சரியான உணவுப் பட்டியல் ஒன்று தயார் செய்து அதன்படி உணவு உண்ணுமாறு பையனுக்கு யோசனை கூறினார். இப்புதிய பட்டியலின்படி உணவு உண்பதில் பையனுக்கோ அல்லது அவனது அம்மாவுக்கோ ஒருவிதமான தடையும் இல்லை. இரண்டு வார காலத்திற்குள் பையனுடைய முகத்தில் தெளிவு உண்டாக ஆரம்பித்தது. ஒரு மாதம் முடிவதற்குள் அவனது தோற்றத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாகிவிட்டது. இம் மாற்றத்தின் விளைவாக அவன் நிமிர்ந்து நின்று மற்றவர்களுடன் நன்றாகப் பேசி, வகுப்பில் தடையின்றி விடை சொல்லி, எல்லோருடனும் சாதாரணமாகப் பழக ஆரம்பித்தான். பள்ளிக்கூடத்து விளையாட்டுகளில் கலந்துகொண்டான். எல்லா வகையிலும் அவனது போக்கு திருந்தி நன்றாக ஆகிவிட்டான். மேலும், டாக்டர்பற்றிய பயமும் அவனை விட்டு நீங்கியது.

இவ்வுதாரணத்திலிருந்து உள நலத்திற்கும் உடல் நலத்திற்கும் எத்தனை நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்பது தெரியவருகின்றது. ஒரு சிறிய தவறான உணவுப் பழக்கம் காரணமாக எத்துணைப் பெரிய தீங்குகள் விளையலாம் என்பது தெரியவருகின்றது. குமரப் பருவத்தில் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற பல உள நலப் பிரச்சினைகள் அடிப்படையில் உடல்நலப் பிரச்சினைகளாகவே இருக்கலாம்.

# 3. உணர்ச்சியின் எழுச்சி

மனித வளர்ச்சியில் இரண்டு பருவங்களில் உணர்ச்சி உச்சநிலை அடைகின்றது. ஒன்று, குழந்தைப் பருவத்தில்; இரண்டாவது, குமரப் பருவத்தில். குமரப் பருவத்திற்குப் பிறகு உணர்ச்சியின் தீவிரம் குறையத் தொடங்குகிறது.

## உணர்ச்சியின் இயல்பு

குழந்தைப் பருவத்தில் உணர்ச்சிகள் தீவிரமாக இருக்கலாம்; ஆனால், அவை மாறும் தன்மையன. சிறிது நேரமே உணர்ச்சி நிற்கும், பின்னர் மாறிவிடும். அச்சம், வெறுப்பு, மகிழ்ச்சி, கோபம் முதலியவை குழந்தைப் பருவத்தின் முக்கிய உணர்ச்சிகள். குழந்தை வளர்ந்து குமரப் பருவம் எய்தும்பொழுது, உணர்ச்சிகள் ஆழமும், நுண்மையும் பெறுகின்றன. அவை பலதரப்பட்டவையாகவும் ஆகின்றன. குமரப் பருவத்தில் இளம்பிள்ளைகள் உள்ளத்தில் பெரும் மனவெழுச்சி உண்டாகின்றது. இப் பருவத்தில் பால் உணர்வு வேகம் அடைதல் காரணமாக உணர்ச்சி வாழ்க்கை உச்சநிலை அடைகின்றது.

உணர்ச்சி என்றால் என்ன ? ஒருவன் உணர்ச்சியுறும்பொழுது என்ன நிகழ்கின்றது ? சுருக்கமாகச் சொன்னால், ஒருவனது உடல், உள்ளம் முழுவதும் எழுச்சியுற்று நிற்கின்ற நிலையை உணர்ச்சி என்று கூறுகிறோம். இத்தகைய எழுச்சி உண்டாவதற்கு எப்பொழுதும் ஒரு தூண்டல் (stimulus) காரணமாக இருக்கும். எழுச்சியுற்ற நிலைக்குப் பிறகு ஒரு துலங்கற் செயலும் (response) நிகழும். ஆகவே, ஒருவன் உணர்ச்சியுறுகின்றான் என்றால், அந்த உணர்ச்சி அனுபவத்தில் மூன்று கூறுகள் உண்டு. அவை (1) தூண்டல், (2) உணர்ச்சியின் எழுச்சி, (3) துலங்கற் செயல் என்பன.

## உடலியல் மாறுதல்கள்

உணர்ச்சியுறும்பொழுது, உடல் உள்ளம் எல்லாம் எழுச்சி அடைகின்றன என்று பார்த்தோம். உடலிலுள்ள அக உறுப்பு

கள் எல்லாமே இயங்க ஆரம்பிக்கின்றன. அதற்குக் காரணம் நரம்பு மண்டலத்தில் உண்டாகும் மாற்றம். தானாக இயங்கும் நரம்பு மண்டலம் (autonomic nervous system) புறத்தூண்டுதல் காரணமாகச் செயல்படும்பொழுது அதனோடு இணைந்துள்ள பல்வேறு உறுப்புகள் இயங்க ஆரம்பிக்கின்றன. இந்த நரம்பு மண்டலத்தில் மூன்று பிரிவுகள் உண்டு (the cranial, the sympathetic and the sacral). முதல் பகுதியும் கடைசிப் பகுதியும் சேர்ந்து உறுப்புகளைத் தீவிரப் படுத்துகின்றன. இவற்றிற்கெதிராக இடைப்பகுதி செயல்படும் (படம் 16-ஐப் பார்க்கவும்).

நரம்புகளின் இயக்கம் காரணமாக இருதயம், இரத்தக் குழாய்கள், நுரையீரல்கள், சிறுநீரகம் (kidneys), சிறுநீர்ப் பை, பால் உறுப்புகள் முதலியன இயக்கப்படுகின்றன. இதன் விளைவாக ஜீரணம் குறைகின்றது; இரத்தக் குழாய்கள் சுருங்குகின்றன; விழி விரிவடைகின்றது; நுரையீரலிலுள்ள காற்றுக் குழாய்கள் பெரிதாகின்றன; உரோமம் நிமிர்ந்து நிற்கின்றது; கல்லீரலிலிருந்து சர்க்கரைச் சத்து வெளியிடப்படுகின்றது; வியர்வைநீர் சுரப்பிகளிடமிருந்து வெளிவருகின்றது; அட்ரிநல் சுரப்பிகளிலிருந்து அட்ரிநலின் எனும் நீர் சுரந்து வெளிவருகின்றது; இரத்த அமுக்கமும் நாடி வேகமும் அதிகமாகின்றன; உமிழ்நீர் சுரப்பது குறைகின்றது. இம் மாறுதல்களுக்கு நேர்மாறான விளைவுகளைச் 'சிம்ப்பதடிக்' (sympathetic) நரம்புப்பகுதி உண்டாக்குகின்றது.

ஒருவனுக்கு உணர்ச்சி உண்டாகும்பொழுது, உடனடியாக உடம்பினுள் ஏற்படும் மாறுதல் ஜீரணவேலை குறைந்துவிடுவதாகும். சாதாரணமாக நடப்பதில் 15% வேலையே நடைபெறும். சில சமயங்களில் ஒன்றுமே நடைபெறாமல் போவதுண்டு. இதேபோல் உணர்ச்சி ஏற்பட்டதும் உடனடியாக ஏற்படுகின்ற இன்னொரு நிகழ்ச்சி அட்ரிநல் சுரப்பிகளிலிருந்து அட்ரிநலின் வெளியாகி இரத்த ஓட்டத்தில் கலந்துகொள்ளுவதாகும். சில விநாடிகளில் அது உடம்பு முழுவதும் பரவிவிடுகின்றது. அதன் விளைவாகக் கல்லீரலிலிருந்து சர்க்கரைச் சத்து வெளிவந்து உடம்பிலுள்ள தசைகளுக்கும், நரம்புகளுக்கும் சென்று மிகுந்த சக்தியைக் கொடுக்கின்றது. உணர்ச்சியுற்ற நிலையில் இருக்கின்ற ஒருவனுக்கு அந்தச் சமயத்தில் அதிக வேலைசெய்ய வலிமை உண்டாகிவிடுகின்றது. மேலும், அட்ரிநலின் நீர் வயிற்றுக்கு அடியிலுள்ள இரத்தத்தையெல்லாம் மேல்நோக்கிப் போகவைக்கிறது. அதனால் ஒருவனது முகத்திலும், மேல் தோலிலும் சிவப்பு நிறமும் சூடும் உண்டாகின்றன.

ஒருவன் உணர்ச்சியுறும்பொழுது உடம்பில் மிகப் பெரிய மாறுதல் உண்டாகிறது என்பது தெளிவாகின்றது. இத்தகைய உணர்ச்சி மிகத் தீவிரமாக இருக்கும். ஆதலால், அது அதிக நேரம் நீடித்து

இருக்கமுடியாது. விரைவில் உடம்பிலுள்ள சக்தி செலவாகி, சோர்வு உண்டாகும். பொதுவாக ஒருவன் தீவிர உணர்ச்சியுற்ற பிறகு




1. பெரிய சில்பெலேன்கினிக்

2. சிறிய சில்பெலேன்கினிக்

படம் 16

சோர்ந்து அடங்கிப்போவதை நாம் பார்க்கிறோம். அதற்குக் காரணம் உணர்ச்சி ஏற்பட்ட சமயத்தில் மிகுந்த சக்தி செலவானதுதான்.

உணர்ச்சிகளில் பலவகை உண்டு. எனினும், அவற்றால் உடம்பின் அக உறுப்புகளில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்தவரையில் வேற்றுமை ஒன்றும் இல்லை. புறத்தோற்றத்தில் உணர்ச்சிக்கு உணர்ச்சி வேற்றுமை இருக்கலாம். முகத்தில் தோன்றும் பாவனை, உடம்புநிலை, தோல் நிறம் முதலியவை சின உணர்ச்சியின்போது இருப்பதுபோல மகிழ்ச்சி உணர்ச்சியின்போது இருப்பதில்லை. ஆனால், உடம்பின் உள்ளே உள்ள உறுப்புகளின் இயக்கத்தைப் பொறுத்த வரையில் உணர்ச்சி எத்தகையதாயினும் சரி அது ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது.

### உணர்ச்சியும் பருவமும்

உணர்ச்சிகள் வயதிற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுகின்றன. சிறு குழந்தைப் பருவத்தில் அடிக்கடி தோன்றும் உணர்ச்சிகள்




பள்ளி மாணவர்களின் உண்மை வயதுடன் நடத்தையில் ஏற்படும் மாறுதல்கள்.

படம் 17

குமரப் பருவத்தில் மாறிவிடுகின்றன. உதாரணமாக, தாக்கும் அல்லது போரிடும் (aggressive) உணர்ச்சியை எடுத்துக்கொள்ளு

வோம். குழந்தைப் பருவத்தில் தாக்குவதும், போரிடுவதும் அதிகமாக இருக்கின்றது. ஆனால், குமரப் பருவத்தில் இத்தகைய உடல் தாக்குதல் குறைந்துவிடுகின்றது. ஏதோ அசாதாரணமாகத்தான் இரண்டுபேர் போராடுகின்ற நிலை உண்டாகின்றது. குமரப் பருவத்தில் பிள்ளைகளுக்கு நன்கு பேசுகின்ற திறமை இருக்கின்ற காரணத்தால் வாயால் போராடுவதுதான் அதிகமாக இருக்கும்! படம் 17ஐப் பார்க்கவும்.

மேற்கண்ட படத்தில் தாக்கும் நடத்தையின் அலைவெண் (frequency) ஏழு, எட்டு வயதில் மிக அதிகமாக இருப்பதையும், பதினைந்து, பதினாறு வயதில் இல்லாமல் போவதையும் பார்க்கலாம். இதற்கு மாறாக 'impertinence and sulkiness' போன்ற உணர்ச்சிகள் குழந்தைப் பருவத்தில் குறைவாக இருப்பதையும் குமரப் பருவத்தில் அதிகமாவதையும் பார்க்கலாம்.

உணர்ச்சி வகைகள்

உணர்ச்சிகள் பலவகைப்பட்டன. இவைபற்றி வல்லுநர்கள் முடிந்த முடிவாக அறுதியிட்டுச் சொல்லிவிடவில்லை. பலரும் பல விதமாக உணர்ச்சிகளை வகைப்படுத்தி யிருக்கிறார்கள். சிலர் உணர்ச்சிகளை மூன்று வகைகளாகப் பிரித்திருக்கின்றனர் .

1. அச்சமும் அச்சம்சார் உணர்ச்சிகளும்? இவை உட்செல் அல்லது உள் அடங்கும் உணர்ச்சிகளாகும்.

2. சினமும் சினம்சார் உணர்ச்சிகளும். இவை வெளிச்செல் அல்லது தாக்கும் உணர்ச்சிகளாகும்.

3. அன்பும் அன்புசார் உணர்ச்சிகளும். இவை இன்ப உணர்ச்சிகள்.

உள்ளடங்கு உணர்ச்சிகளின் (inhibitory emotions) கீழ் அச்சம், கவலை, பீதி, வெட்கம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

தாக்கும் உணர்ச்சிகளின் (aggressive emotions) கீழ் சினம், பொறாமை, வெறுப்பு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இன்ப உணர்ச்சிகளின் (joyous emotions) கீழ் அன்பு, காதல், மகிழ்ச்சி, உற்சாகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இம் மூன்று வகைகளைச் சேர்ந்த உணர்ச்சிகள் குமரப் பருவத்தில் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைப்பற்றிப் பார்ப்போம். இவ்

வுணர்ச்சிகள் குழந்தைப் பருவத்திலும் ஏற்படுகின்றன. ஆனால், அவற்றின் தன்மைக்கும் குமரப் பருவத்தில் ஏற்படும் உணர்ச்சிகளின் தன்மைக்கும் வேற்றுமை உண்டு. குமரப் பருவத்தில் உணர்ச்சிகள் நுண்மை அடைவதோடு பலதரமுடையவையாகவும் ஆகின்றன.

### அச்சம்

அச்சம் மிகவும் முக்கியமான ஓர் உணர்ச்சி. சின்னஞ்சிறு குழந்தையிலிருந்து மிகவும் அதிகமான வயதுடைய முதியவர்கள் வரைக்கும் அச்சம் ஏற்படுகிறது. சிறு குழந்தை முதலில் அச்ச உணர்ச்சியுறுவதற்குக் காரணமாக இருப்பது பெரும் சத்தம் அல்லது கீழே விழுந்துவிடுவோம் என்னும் பாதுகாப்பில்லாத உணர்ச்சி. பின்னர் குழந்தை வளர வளர எத்தனையோ வகையான அச்சங்கள் உண்டாகிவிடுகின்றன. அச்சத்திற்குரிய சில காரணங்கள், கூரிய கத்தி வெள்ளம், பாம்பு, நாய் முதலிய மிருகங்கள் முதலியன. அச்சத்திற்குரிய இன்னும் சில காரணங்கள் தனியாக இருப்பது, புதியவர்களைச் சந்திப்பது, மேடையில் பேசுவது, கூட்டத்தில் போவது, பரீட்சை எழுதுவது போன்றவை ஆகும். மேலும் சாவு, நோய், வியாபாரத்தில் நஷ்டம், வேலை இல்லாமல் போய்விடுமோ என்கிற கவலை முதலான காரணங்களாலும் அச்சம் உண்டாகின்றது. அநேகமாக எதுவுமே அச்சம் உண்டாவதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

குழந்தைகளின் அச்சங்களைப்பற்றி சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற பொருள்பற்றி ஆராய்வது எளிதன்று. அகவயமான உணர்ச்சி நிலையைப் புறச்செயல்களில் பிரதிபலிப்பதை வைத்துக்கொண்டு மதிப்பிடவேண்டும். அவ்வுணர்ச்சியைப்பற்றிக் குழந்தைகள் சொல்லுவதை வைத்துக்கொண்டும் மதிப்பிடலாம். அச்சங்கள்பற்றிய ஆராய்ச்சியிலிருந்து நமக்குச் சில முக்கியச் செய்திகள் தெரியவருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்து ஆராய்ச்சி மாணவர் ஒருவர் சென்னை நகரத்தைச் சேர்ந்த 380 ஆண், பெண்பிள்ளைகளுடைய அச்சங்கள்பற்றி ஓர் ஆராய்ச்சி செய்திருக்கின்றார். இப் பிள்ளைகள் 11 வயதிலிருந்து 14 வயதுடையவர்கள். சென்னை நகரத்திலுள்ள நான்கு உயர்நிலைப் பள்ளிகளில் படித்தார்கள். 11 வயதிலிருந்து 14 வயது என்பது குழந்தைப் பருவத்தின் இறுதிக் காலம் என்றும், குமரப் பருவத்தின் தொடக்க காலம் என்றும் சொல்லலாம். இதனை ஒரு மாறுதல் கட்டம் என்றும் சொல்லலாம். 13, 14 வயதுடைய பெண்பிள்ளைகள் பருவமடைந்துவிடுவது உண்மைதான். ஆனால், ஆண்பிள்ளைகள் 13, 14 வயதில் முழுக் குமரத்தன்மை அடைவதில்லை.

இப்பிள்ளைகளின் அச்சங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக அச்சங்களின் பட்டியல் ஒன்றை ஆராய்ச்சியாளர் தயார் செய்தார். பத்து வகையான அச்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பத்துத் தலைப்புகளின் கீழ் மொத்தம் 115 அச்சங்கள் தேர்ந்தெடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. சமயம், ஒழுக்கம்பற்றி அச்சங்கள்:
   1. பொய் சொன்னால் பிறர் கோபிப்பார்கள் என்ற பயம்.
   2. செய்த பாவங்களுக்குக் கடவுள் தண்டிப்பார் என்ற பயம்.
   3. யாரும் பார்க்காமல் இருக்கும்பொழுது சரியில்லாத காரியங்களைச் செய்ய பயம்.
   4. கெட்ட வார்த்தைகளைச் சொன்னால் பிறர் கோபிப்பார்கள் என்ற பயம்.
   5. பிறர் பொருளைத் திருடுவதில் பயம்.
   6. வீட்டிலுள்ள பெரியோர்களின் சொல்லைத் தட்டி நடப்பதற்கு பயம்.
   7. தங்களுடைய சமயம் கூறுகின்ற கோட்பாட்டை எதிர்த்துக் கேள்வி கேட்க பயம்.
   8. பிரார்த்தனை செய்யாவிட்டால் கடவுள் தண்டிப்பார் என்ற பயம்.
   9. வீட்டுக்கு வெளியில் பெரியவர்களின் சொல்லைத் தட்டி நடக்க பயம்.
   10. தங்களுடைய சமய நூல்கள் கூறும் வார்த்தைகளைத் தட்டி நடக்க பயம்.

2. குடும்பம், சமூக வாழ்க்கைபற்றிய அச்சங்கள்:
   1. பெற்றோர்கள் தண்டிப்பார்கள் என்ற பயம்.
   2. குடும்பத்திலுள்ள மற்ற நபர்கள் சரியாக நடத்தமாட்டார்கள் என்ற பயம்.
   3. சகோதர, சகோதரிகளுடன் சண்டைபோட பயம்.
   4. தகப்பனாரிடம் ஏதாவது சலுகை கேட்க பயம்.
   5. மற்றவர்கள் கேலி செய்வார்கள் என்ற பயம்.
   6. செய்யாத ஒரு காரியத்திற்குத் தன்மீது பழி சுமத்தப்படும் என்ற பயம்.
   7. வீட்டுக்கு மாலை வேளையில் நேரம் கழித்துத் திரும்ப பயம்.

8. தன் வகுப்பில் உள்ளவர்கள் தன்னைத் தாக்கக்கூடும் என்ற பயம்.
9. தாயிடம் ஏதாவது சலுகை கேட்க பயம்.
10. மற்றவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்குத் தன்னால் வாழ்க்கையில் இருக்கமுடியவில்லையே என்ற பயம்.
11. முக்கியமான மனிதர் ஒருவரிடம் பேசும்பொழுது பயம் உண்டாதல், நாக்குக் குழறல்.
12. தனக்கு மிகவும் விருப்பமானவர்களை எதிர்க்க பயம்.
13. மற்றவர்கள் தன்னை விரும்பமாட்டார்களோ என்ற பயம்.
14. தன்னுடைய அறியாமையைக் கண்டு மற்றவர்கள் நகைப்பார்கள் என்ற பயம்.
15. தன்னுடைய பெற்றோர் முன்னிலையில் சுதந்திரமாக இருக்க பயம்.

3. பாடம் பரீட்சைபற்றிய அச்சங்கள் :

1. பள்ளிக்கு நேரம் கழித்துச் செல்ல பயம்.
2. மிகவும் குறைவான மார்க்குகள் வாங்க பயம்.
3. பள்ளிவேலையைக் குறித்த காலத்தில் முடிக்க முடியாமைக்கு பயம்.
4. வகுப்பில் மற்றப் பிள்ளைகளுக்கு எதிரில் செய்யுட்களை ஒப்பிக்க பயம்.
5. வகுப்புப் பரீட்சையில் 'பெயிலாகி'விடுமோ என்ற பயம்.
6. வகுப்பு ரிகார்டு நோட்டுகளை மற்றப் பிள்ளைகளுக்குக் காட்ட பயம்.
7. வகுப்பில் மற்றப் பிள்ளைகளுக்கு எதிரில் கரும்பலகையின் மேல் எழுத பயம்.
8. அமிலங்கள், மற்றும் இரசாயனப் பொருள்களைக் கையாள பயம்.
9. வகுப்பில் கேள்விகளுக்கு விடையளிக்க பயம்.
10. ஆசிரியருடைய தவறைச் சுட்டிக்காட்ட பயம்.
11. தவறான விடைகளுக்குத் தண்டிக்கப்படுவோம் என்ற பயம்.
12. ஆண்டுத்தேர்வுப் பரீட்சையில் ' பெயில் ' ஆவதில் பயம்.
13. விளையாட்டு, வகுப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ள பயம்.

14. படிப்பில் தான் காட்டுகின்ற அசிரத்தைபற்றி ஆசிரியர் வகுப்புக்கு எதிரில் கேட்பாரோ என்ற பயம்.
15. முறையான வழியில் அனுமதி பெறுமலே சில வகுப்பு களுக்குப் போகாமல் இருக்க பயம்.

4. நோய்கள், சாவுபற்றிய அச்சங்கள் :

1. உடம்பு அசௌக்கியம் ஏற்படும் என்ற பயம்.
2. புற்றுநோய், க்ஷயரோகம், குஷ்டம் போன்ற கொடிய வியாதிகள் வருமோ என்ற பயம்.
3. டாக்டரிடம் ஆப்பரேஷன் செய்துகொள்ள பயம்.
4. ஏதோ ஒரு விபத்தினுலோ அல்லது வியாதியினுலோ அங்க கீனம் அடைவதுபற்றி பயம்.
5. கொடிய புயலினுல், மின்னலினுல் தாக்கப்படுவோம் என்ற பயம்.
6. மோட்டார்காரில் செல்லும்பொழுது விபத்து நேரிடக்கூடும் என்ற பயம்.
7. பல் வைத்தியரிடம் தனது சொத்தைப் பல்லைப் பிடுங்க பயம்.
8. ஜனநடமாட்டம் மிகுந்த தெருவழியே சைக்கிளில் செல்ல பயம்.
9. இன்ஜெக்ஷன் போட்டுக்கொள்ள பயம்.
10. பிணத்தைப் பார்க்க பயம்.
11. துப்பாக்கி குண்டினுல் காயமுறுவோம் என்ற பயம்.
12. பிளேக், காலரா போன்ற தொத்துநோய்கள் இருக்கும் பகுதிகளில் வசிப்பதற்கு பயம்.
13. தன்னுல் மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவரின் மரணத் தைக் குறித்து பயம்.
14. தலைவலி, அஜீரணம் போன்ற சிறு உடல் கோளாறுகளி னுல் பயம்.
15. தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துபோவதைப் பற்றி பயம்.

5. தனது சுற்றுப்புறத்திலுள்ள உயிர்வாழ் பிராணிகள்பற்றிய அச்சங்கள் :

1. பாம்பு, பல்லியைப் பார்க்கும்பொழுது பயம்.
2. தேனீக்கள் தன்னைச் சுற்றிப் பறந்தால் பயம்,

3. பக்கத்தில் குரைக்கும் நாய் துரத்துமென்றல் பயம்.
4. மிருகக்காட்சிச் சாலையில் கொடிய மிருகங்களைப் பார்க்க பயம்.
5. இரவு வேளைகளில் பறவைகளும், பூச்சிகளும் செய்யும் வெவ்வேருன சத்தங்களைக் கேட்க பயம்.
6. கொடிய மிருகங்கள் வாழும் காட்டு வழியே செல்லுதற்கு பயம்.
7. போலீஸ்காரனைக் கண்டால் பயம்.
8. தனக்குத் தெரியாத வேறு மனிதர்கள் தன்னைத் தொடுவதைக் கண்டு பயம்.
9. திருடர்களோ, அல்லது வழிப்பறி ஆட்களோ தன்னைத் தாக்குவார்கள் என்ற பயம்.
10. தனக்குத் தெரியாத வேற்று மனிதர்கள் தன்னைத் தூக்கிச் சென்றுவிடுவார்கள் என்ற பயம்.

6. உயிர்வாழ் பிராணிகள் அல்லாத சிலவற்றைப்பற்றிய அச்சங்கள்:
1. மின்சார சக்தியைப் பயன்படுத்தும்பொழுது தனக்கு அபாயம் நேரிடக்கூடும் என்று பயம்.
2. இருட்டு அறைக்குள் செல்ல பயம்.
3. மொட்டை மாடியில் கைப்பிடிச் சுவர்மீது நிற்க பயம்.
4. தெருவைக் கடக்கும்பொழுது ஏதாவது ஒரு கார் மோதிவிடும் என்ற பயம்.
5. ஏரியில் படகில் பிரயாணம் செய்ய பயம்.
6. 'கிரீச்' சிடும் பழைய மாடிப்படிகளில் இறங்கிவர பயம்.
7. படகின்மூலம் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நதியைக் கடக்க பயம்.
8 ஆற்றின் படுகைமீது அமைக்கப்பட்டுள்ள பாலத்தைக் கடக்க பயம்.
9. வீட்டில் மற்றவர்கள் வெளியே சென்றிருக்கும்பொழுது தனியாக இருக்க பயம்.
10. ஆகாய விமானத்தில் பறக்க பயம்.

7. எதிர்காலம்பற்றிய அச்சங்கள் :
1. பள்ளிப் படிப்பை முடித்தவுடன் வேலை கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயம்.

2. வயதான காலத்தில் தனிமையாக இருக்க நேரிடுமோ என்ற பயம்.
3. பின் ஒரு காலத்தில் பைத்தியமாகிவிடுவோமோ என்ற பயம்.
4. நாள்தோறும் என்ன நன்மை நேருமோ அல்லது தீமை நேருமோ என்ற பயம்.
5. முதுமை அடைவதில் பயம்.
6. எந்த நேரத்திலும் தனக்கு ஏதாவது கெடுதி ஏற்படுமோ என்ற பயம்.
7. பிற்காலத்தில் தன் சுக வாழ்க்கையைக் குறித்து பயம்.
8. தன் மரணத்தைக் குறித்து பயம்.
9. தன் தலைமயிர் நரைத்துப்போவதுபற்றியோ, வழுக்கை விழுவதுபற்றியோ பயம்.
10. இன்னும் சிறிது காலத்தில் தன் நண்பர்களின் நட்பை இழக்கக்கூடும் என்ற பயம்.

8. தன்னுடைய சொந்தக் குறைபாடுகள்பற்றிய அச்சங்கள் :

1. பள்ளிக்கூடத்துக்கு நல்ல உடைகள் இல்லாமல் போவதற்கு பயம்.
2. தன்னுடைய பேனாவையோ அல்லது புத்தகங்களையோ தொலைத்துவிடுவோமோ என்ற பயம்.
3. காரிலோ அல்லது பஸ்ஸிலோ மிகவும் வேகமாகச் செல்லுவதற்கு பயம்.
4. உயரமான ஓர் இடத்தில் நிற்கும்பொழுது தன்னை யாராவது தள்ளிவிடுவார்களோ என்ற பயம்.
5. பள்ளிக்குச் சம்பளம் கட்டுவதற்குக் கொடுக்கப்பட்ட பணத்தைத் தொலைத்துவிடுவோமோ என்ற பயம்.
6. தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கியைக் கையாள பயம்.
7. காகிதத்தைக் கிழிக்க அல்லது எழுதுகோலைச் சீவ கத்தியைக் கையாள பயம்.
8. சோதனைச் சாலையில் அல்லது தன் வீட்டில் ஏதாவது எரியும் பொருளை விட்டுவிட்டு வந்தால் அதனால் ஏதேனும் விபத்து ஏற்படுமோ என்ற பயம்.

9. தன் நண்பர்களை அழைத்துவந்து அவர்களுக்கு உபசாரம் செய்வதற்குத் தன் வீடு நன்றாக இல்லையே என்ற பயம்.
10. தன் வீட்டுக் கதவுகளையோ அல்லது பெட்டிகளையோ பூட்டி விட்டுச் சிறிதுநேரம் கழித்துச் சரியாகப் பூட்டவில்லையோ என்று நினைக்கும் பயம்.

9. கிலிகளும் அர்த்தமில்லாத அச்சங்களும்:
1. மந்திரவாதிகளைப் பற்றிய பயம்.
2. மூச்சு முட்டி இறந்துவிடுவோம் என்ற பயம்.
3. தன் வீடு தீக்கிரையாகிவிடுமோ என்ற பயம்.
4. பள்ளிக்குச் செல்லும்பொழுது யாராலேனும் கடத்திச் செல்லப்படுவோம் என்ற பயம்.
5. நீரில் மூழ்க்கடிக்கப்படுவோம் என்ற பயம்.
6. ரயிலில் போகும்போது ஒருவரால் கத்தி முனையைக் காட்டி மிரட்டப்படுவோம் என்று பயம்.
7. ரயிலிலோ அல்லது பஸ்ஸிலோ பிரயாணம் செய்யும்பொழுது அது விபத்துக்குள்ளாகிவிடும் என்று பயம்.
8. தன்னைப் பேயோ, பிசாசோ பிடித்துக்கொள்ளும் என்று பயம்.
9. திடீர் என்று ஏதாவது ஒரு துக்கம் தரக்கூடிய நிகழ்ச்சி நிகழக்கூடும் என்று பயம்.
10. போலீஸ்காரன் தன்னை விலங்கிட்டு அழைத்துக் செல்லு வான் என்ற பயம்.

10. 'பால்' தொடர்பான அச்சங்கள்:
1. திருமணம் செய்துகொள்ள பயம்.
2. தன் பால் அல்லாத ஒரு நண்பருடன் சினிமா பார்க்க பயம்.
3. தன் வயதுடைய, ஆனால் தன் பால் அல்லாதவர்களிடம் பயம்.
4. தன்னைவிடப் பெரியவர்களிடம் ஆண், பெண்பாலரைப் பற்றிய கேள்விகள் கேட்க பயம்.
5. நண்பர்களுக்கு ஒழுங்கீனமான கெட்ட ஆண், பெண் பாலரைப்பற்றிய கதைகள் சொல்ல பயம்.
6. தன் பால் அல்லாத தன் வயதுடைய ஆண்பிள்ளையோ, பெண்பிள்ளையோ தனியாக இருக்கும்பொழுது ரகசிய உரையாடல் செய்ய பயம்.

7. தன் பால் அல்லாத, ஆனால் தன்னைவிடப் புத்திசாலியான தன் வகுப்பில் படிக்கும் ஆண், பெண்ணிடம் தன் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள பயம்.

8. தன் பால் அல்லாத சிறிய குழந்தைகளைத் தனக்கு எதிரில் உடைகளைக் களையுமாறு தூண்ட பயம்.

9. பள்ளி நாடகங்களில் தான் ஆணாக இருந்தால் பெண் வேடமும், பெண்ணாக இருந்தால் ஆண் வேடமும் ஏற்று நடிக்க பயம்.

10. நேர்மையற்ற விதத்தில் தான் தந்தையாகவோ, தாயாகவோ ஆவது குறித்து பயம்.

மேற்கண்ட 10 வகைகளின் கீழ் அன்றாட வாழ்க்கையில் ஏற்படக் கூடிய பல அச்ச இனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 380 பள்ளிப் பிள்ளைகள் இவை அடங்கிய கேள்வி நிரலைப் படித்துப் பொருத்தமான விடையைக் குறிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். விடைகள் மூன்றில் ஒன்றாக இருக்கலாம்: (1) பயம் இல்லை, (2) கொஞ்சம் பயம், (3) மிகவும் பயம். இவ்வாறு விவரங்கள் சேர்த்ததில் பல உண்மைகள் புலனாகின்றன.

முதலாவதாக மாணவர்களில் பெரும்பாலோர் தங்களுக்குப் பின் கண்ட நான்கு வகையான அச்சங்கள் மிகவும் அதிகமாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்: (1) சமயம், ஒழுக்கம்பற்றிய அச்சங்கள், (2) பாடம், பரீட்சைபற்றிய அச்சங்கள், (3) நோய்கள், சாவு பற்றிய அச்சங்கள், (4) பால் தொடர்பான பிரச்சினைகள்பற்றிய அச்சங்கள். தங்களுடைய எதிர்காலம்பற்றி மாணவர்கள் அதிகமாகக் கவலை கொள்ளுவதாக இல்லை.

சமயம், ஒழுக்கம் சம்பந்தமான அச்சங்களைப் பொறுத்தவரையில் 80 சதவிகிதத்துக்கு மேலான மாணவர்கள் மற்றவர்கள் பொருள்களைத் திருடுதல், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துதல், செய்யும் பாவங்களுக்குக் கடவுளிடம் தண்டனை பெறுதல், பொய் சொல்லுதல், வீட்டிலும் வெளியிலும் பெரியவர்களுக்குக் கீழ்ப்படியாது நடத்தல் முதலியனபற்றி அதிகமாகக் குறித்திருந்தார்கள்.

சமூகம், குடும்ப சம்பந்தமான அச்ச வகையில் பெற்றோர்கள் தண்டிப்பது, பெற்றோர் அல்லது மற்றவர்களால் நியாயமாக நடத்தப்படாமல் போவது, சகோதர சகோதரிகளிடம் சண்டை போடுதல் முதலிய இனங்களை அதிகமாகக் குறித்திருக்கிறார்கள்.

பாடங்கள், பரீட்சைபற்றிய அச்ச வகையின்கீழ் 95 சதவிகிதத்துக்கும் அதிகமான மாணவர்கள் பாடங்களில் குறைவான மார்க்கு

வாங்குதல், வகுப்புச் சோதனையில் தேருதுபோதல், இறுதித் தேர்வில் தேருது போதல் ஆகியவற்றைக் குறித்திருந்தார்கள். 65 சதவிகிதத்துக்கும் மேலான மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்கு நேரம் கழித்துப் பிந்திச் செல்லுதல், பள்ளி வேலையைக் குறித்த நேரத்தில் முடிக்காமல் போதல், ஆசிரியர்கள் செய்யும் தவறைச் சுட்டிக்காட்ட முடியாமல் இருப்பது, தவறான விடைகளைக் கொடுத்தல், அதற்குக் கொடுக்கும் தண்டனை, அனுமதி பெருமலே வகுப்புகளுக்குச் செல்லாதிருத்தல், பாடத்தில் அசட்டையாக இருப்பதற்காக ஆசிரியர் திட்டுதல் முதலிய அச்சங்களைக் குறித்தார்கள்.

நோய்கள், சாவுபற்றிய அச்ச வகையின்கீழ்ப் பெரும்பாலான பிள்ளைகள், நோயுள்ள இடங்களில் வசித்தல், குடும்பத்தில் ஒருவர் இறத்தல், மிக்க அன்போடு நேசித்த ஒருவர் இறத்தல், மின்னல் காரணமாக இறத்தல், கான்சர், க்ஷயரோகம், குஷ்டம் போன்ற நோய்கள், விபத்துகள் காரணமாக உடல் குறை உண்டாவது முதலியவற்றைக் குறித்தார்கள்.

சுற்றுப்புறத்திலுள்ள உயிர்வாழ் பிராணிகள்பற்றிய அச்ச வகையின்கீழ் ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் பாம்புகள், முன்பின் தெரியாதவர்கள் பின்தொடர்ந்து வருதல், திருடுபவர்கள், வீட்டில் தனியாக இருந்தல் முதலியவற்றைக் குறித்தார்கள். மிருகக் காட்சிச் சாலையில் வன விலங்குகளைப் பார்ப்பதுபற்றி ஒருவரும் பயம் தெரிவிக்கவில்லை. ஆனால், வனவிலங்குகள் வசிக்கும் காடுகளிடையே செல்வதுபற்றி பயம் தெரிவித்தார்கள்.

உயிர்வாழ் இனங்கள் அல்லது வேறு நிலைகளைப்பற்றிய பய வகையின்கீழ் வயோதிகக் காலத்தில் தள்ளாமை, தலை நரைத்தல் போன்றவற்றைப் பெரும்பாலான மாணவர்கள் குறிப்பிட்டார்கள். சொந்தக் குறைபாடுகள்பற்றிய அச்ச வகையின்கீழ்ப் பணத்தை இழத்தல், பௌண்டன் பேனு இழத்தல், வெடிமருந்து நிரப்பிய துப்பாக்கியைக் கையாளுதல் பயம், ஏதாவது ஒன்றை எரியவிட்டு அதனுல் விபத்து உண்டாதல் முதலியனபற்றிப் பெரும்பாலோர் குறித்தார்கள். நல்ல உடைகள் இல்லாமல் பள்ளிக்கூடத்துக்குப் போதல், வசதி இல்லாத வீட்டில் வாழுதல்பற்றிப் பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகளைவிட அதிகமாக அச்சம் தெரிவித்தார்கள்.

கிலிகள், அர்த்தம் இல்லாத பயங்கள் வகைகளின்கீழ்ப் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குச் செல்லும்பொழுது கடத்திச் செல்லுதல், நீரில் மூழ்கிப்போதல், ரயில், பஸ், பேய் பிசாசுகள்பற்றி அதிகமாகக் குறித்தார்கள். பால் சம்பந்தமான பயங்களைப் பொறுத்த வரையில் பள்ளிக்கூடத்தில் வேற்றுப் பாலைச் சேர்ந்த பெண்பிள்ளை

களையோ அல்லது ஆண்பிள்ளைகளையோ சந்தேகம் கேட்டல், அல்லது நாடகத்தில் தன் பால் அல்லாத இன்னொரு பால் பாத்திரத்தை ஏற்று நடித்தல் ஆகியவைபற்றி ஒருவரும் பயம் தெரிவிக்கவில்லை. நேர்மையில்லாத முறையில் தந்தை, தாய் ஆதல், வேற்றுப் பாலைச் சேர்ந்த ஒருவரோடு தனியாக ரகசியமாகப் பேசுதல், பால் சம்பந்தமான ஆபாசமான கதைகள் சொல்லுதல் முதலியனபற்றி மாணவர்கள் பயம் தெரிவித்தார்கள். பெரியவர்களிடம் பால் சம்பந்தமான கேள்விகள் கேட்பதற்கும் அவர்கள் பயம் தெரிவித்தார்கள். இன்னொன்று என்னவெனில், ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் திருமணம் ஆவதுபற்றிப் பெருவாரியாக பயம் தெரிவித்தார்கள்.

மேற்கண்ட ஆராய்ச்சியிலிருந்து இருபாலரையும் சார்ந்த பெருவாரியான பிள்ளைகள் பின்வருவனபற்றி அச்சம் கொள்ளுகிறார்கள் என்பது தெரியவருகின்றது :

1. பிறர்பொருளைத் திருடுதல்.
2. கெட்ட வார்த்தைகளைச் சொல்லித் திட்டுதல்.
3. பாவங்களுக்காகக் கடவுள் தரும் தண்டனை.
4. பொய்கள் சொல்லுதல்.
5. வீட்டில் பெரியோருக்குக் கீழ்ப்படியாது இருத்தல்.
6. பெற்றோர் தரும் தண்டனை.
7. வீட்டுக்கு வெளியிலுள்ள பெரியோரை எதிர்த்தல்.
8. சகோதர சகோதரிகளுடன் சண்டையிடுதல்.
9. மிகவும் குறைவான மார்க்குகள் வாங்குதல்.
10. வகுப்புச் சோதனையில் தேர்ச்சி அடையாதுபோதல்.
11. இறுதித் தேர்வில் வெற்றியடையாதுபோதல்.
12. பள்ளிக்கூடத்துக்குப் பிந்திச் செல்லுதல்.
13. பள்ளி வேலையைக் குறித்த நேரத்தில் முடிக்காதிருத்தல்.
14. ஆசிரியர்களின் குறைகளை எடுத்துக்காட்டல்.
15. தவறான விடைகளுக்குக் கிடைக்கும் தண்டனை.
16. உரிய அனுமதியில்லாமலே பள்ளிக்கூடம் போகாது இருத்தல்.
17. பாடங்களை அசட்டை செய்தல்.
18. தொத்துநோயுள்ள இடங்களில் வசித்தல்.
19. குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துபோதல்.
20. மின்னலின் தாக்குதல்.
21. மிக்க அன்புடன் நேசித்த ஒருவர் இறந்துவிடுவது.
22. க்ஷயம், குஷ்டம், புற்றுநோய் போன்ற நோய்கள்.

23. விபத்துகள் அல்லது நோய்கள் காரணமாக உடல் குறைகள் உண்டாதல்.
24. பணத்தை இழத்தல்.
25. பௌண்டன் பேனவை இழத்தல்.
26. மருந்து (தோட்டா) போட்டுவைத்திருக்கும் துப்பாக்கியைக் கையாளுதல்.
27. ஏதாவது ஒன்றை எரிய விட்டுவிட்டு வருதல்.
28. நேர்மையற்ற முறையில் பெற்றோர் ஆதல்.
29. தனிமையாக எதிர்ப்பாலைச் சேர்ந்த ஒருவரோடு உரையாடுதல்.
30. ஆபாசமான 'பால்' பற்றிய கதைகளைச் சொல்லுதல்.
31 'பால்' சம்பந்தமாகப் பெரியவரிடம் கேள்விகள் கேட்டல்.
32. வயது காலத்தில் தனிமையாக இருத்தல்.
33. மயிர் நரைத்தல் அல்லது வழுக்கை விழுதல்.

ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் பின்வருவனபற்றி அதிகமாக அச்சம் கொண்டார்கள் :

1. பாம்புகள்.
2. கடத்திச் செல்லுபவர்கள்.
3. முன்பின் தெரியாதவர்கள் பின்தொடர்ந்து வருதல்.
4. திருடர்கள்.
5. வீட்டில் தனிமையாக இருத்தல்.
6. காட்டு மிருகங்கள் நிறைந்த இடத்தின் வழியாகப் போதல்.
7. நல்ல உடை அணியாது பள்ளிக்கூடத்துக்குப் போதல்.
8. மோசமான வீட்டுச் சூழ்நிலையில் வாழுதல்.
9. பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழியில் யாரும் கெடுதி செய்துவிடுவார்கள் என்பதில் பயம்.
10. நீரில் மூழ்கிப்போதல்.
11. பஸ், ரயில் விபத்துகள்.
12. பேய், பிசாசுகள்.

இவ்வாராய்ச்சியிலிருந்து ஓர் உண்மை தெளிவாகிறது. பிள்ளைகளின் வயது 11-லிருந்து 15-க்கு உயர உயர அவர்களின் அச்சங்களின் அளவு குறைந்துகொண்டே வருகின்றது. இரண்டு, மூன்று ஆண்டுகளில் அவர்களுடைய அச்சம் குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துவிடுகின்றது.

இவ்வாராய்ச்சியில் எடுத்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகள் சமயம், ஒழுக்கம் சம்பந்தமாக அதிகம் பயம் கொண்டிருந்தார்கள் என்று

பார்த்தோம். மேலைநாட்டுச் சமுதாயங்களில் வாழும் பிள்ளைகள் இவ்வாறு இருப்பதில்லை. நம் நாட்டிலுள்ள பிள்ளைகள் இவ்வாறு இருப்பதற்கு முக்கியக் காரணம் நமது சமுதாயத்தின் பண்பாடு ஆகும். இங்குக் கடவுள்பக்தி, நல்லொழுக்கம், நீதி நெறிமுறை, சமய வளர்ச்சி முதலியவற்றிற்கெல்லாம் மிக அதிகமான முக்கியத் துவம் கொடுக்கிறோம். ஆகவே, அவை சம்பந்தமாகப் பிள்ளைகள் அதிக அக்கறையோடும், கவலையோடும் இருப்பதில் வியப்பு இல்லை. ஆனால், பிள்ளைகளின் உள்ளத்தில் அச்சம் அதிகமாக இருக்கு மென்றால் அதனைப் போக்குவதற்கு ஆவன செய்யவேண்டும். நல்ல முறையில் தக்க சமய போதனை, நீதிபோதனை செய்வது மிகவும் அவசியமாகும்.

அச்சம் என்பது உள்ளத்தைக் கெடுக்கின்ற ஓர் உணர்ச்சி. அது அதிகமாக இருக்குமானால் குழந்தை இயல்பாக வளர்ந்து சிறந்த ஆளுமை பெறமுடியாது. ஆகவே, குழந்தைகளின் உள்ளங்களில் அச்சம் வளருவதற்கு ஆசிரியர்கள் இடம் கொடுக்கக்கூடாது. ஆசிரி யர்கள் தனக்கும் பிள்ளைகளுக்குமிடையே அச்சம் என்னும் சுவர் தோன்றவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும். நல்ல அன்புடனும் அதே சமயத்தில் உறுதியுடனும் ஆசிரியர்கள் குழந்தைகளை நடத்த வேண்டும்.

மேலும், நோய்கள்பற்றிப் பிள்ளைகளுக்கு அதிகம் அச்சம் இருப்பதாகத் தெரியவருகிறது. அப்படியென்றால் குழந்தை சிறு வயது முதலிலிருந்து நல்ல சுகாதாரமான பழக்கங்களைக் கடைப் பிடித்து, உடல் உறுதியோடும், நலத்தோடும் வளருமாறு உதவ வேண்டும். சமய போதனை போன்றே சுகாதார போதனையும் ஒரு பள்ளிக்கூடத் திட்டத்தில் நல்ல இடம் பெறவேண்டும்.

ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளுக்கு அதிக அச்சம் இருப்பதாக இந்த ஆராய்ச்சியில் தெரியவருகிறது. தற்காலத்தில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் சம வாய்ப்பு ஏற்பட்டுவந்தபோதி லுங்கூட இன்னும் பெரும்பாலான பெண்பிள்ளைகள் சுதந்திரமாகத் தன்னம்பிக்கையுடன் வாழ்வதற்கான முழு வாய்ப்பு ஏற்பட்டுவிட வில்லை. அவர்கள் வெளியில் சென்று தன்னம்பிக்கையுடன் சுற்றுப் புறத்தையெல்லாம் தெரிந்துகொள்ளுவதற்கும் இன்னும் போதிய உரிமையும், வாய்ப்பும் சமூகத்தில் வந்துவிடவில்லை. ஆகவே, அவர்களுக்கு அச்சம் சிறிது அதிகமாக இருப்பதில் வியப்பில்லை. இங்கும் பள்ளியில், ஆசிரியர்கள் பெண்பிள்ளைகளுக்குத் தக்க முறை யில் பயிற்சி அளித்து அச்சம் இல்லாமல் தன்னம்பிக்கையுடன் வளரு வதற்கு ஆவன செய்யவேண்டியது அவசியமாகும்.

ஆண்பிள்ளைகளுக்கு வயதாக ஆக அச்சம் குறைகின்றது என்பது பொதுவாக எல்லா ஆராய்ச்சியாளர்களும் எல்லா நாடுகளிலும் கண்டுவருகின்ற ஓர் உண்மை. ஆண்பிள்ளைகள் வளரவளர அவர்களுக்கு அனுபவமும், மனப் பக்குவமும் அதிகமாகின்றன. அதுகாரணமாக அவர்கள் வாழ்க்கையிலுள்ள பொருள்களையெல்லாம் அச்சக் கண்ணோடு பார்க்காது மேலும் மேலும் புரிந்துகொண்ட தன்னம்பிக்கையோடு வாழ்வதற்கான நிலைமை உண்டாகின்றது.

இவ்வாராய்ச்சியிலிருந்து 11 வயதில் பெண்பிள்ளைகளுக்கு மிக அதிகமான அச்சம் இருப்பதாகத் தெரியவருகிறது; 11ஆவது வயது பெண்களுக்குக் குமரப் பருவம் தொடங்கும் கட்டமாகும். அவர்களின் உடலிலும் உள்ளத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு, 'பூப்பு' எய்துகின்ற நிலையில் அவர்களுக்குத் தக்க போதனை அளித்து, வரப் போகின்ற நிகழ்ச்சிகளையெல்லாம் முன்கூட்டியே நன்கு தெரிந்து கொண்டு அதற்கேற்ப ஆயத்தம் செய்துகொள்ளுவதற்கு உதவி செய்யவேண்டும்.

கோவை நகரத்து உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்களிடம், 'உனக்கு மிகவும் பயம் அளித்த அனுபவம் எது?' என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறிய விடைகளின் தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | அச்சம் அளித்த அனுபவம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தேர்வில் தவறியது ... ... | 14 |
| 2. | கனவில் வந்த பேய் ... ... | 5 |
| 3. | வழி தவறிப் போனது ... ... | 5 |
| 4. | தந்தையிடம் ... ... | 5 |
| 5. | இரவில் இருட்டு ... ... | 4 |
| 6. | 'காம்போஸிட்' கணக்கு ... | 4 |
| 7. | பாம்பு ... ... ... | 3 |
| 8. | காட்டு விலங்கு ... ... | 3 |
| 9. | நோய்வாய்ப்பட்டிருந்தபோது ... | 2 |
| 10. | கடலைக் கண்டபோது ... ... | 2 |
| 11. | ரயில் கவிழ்ந்துவிடுமோ என்று ... | 2 |
| 12. | நீரில் மூழ்கிவிட்டபொழுது ... | 2 |
| 13. | ரயில் விபத்து ... ... ... | 1 |
| 14. | மண்டை உடைந்ததைப் பார்த்தபோது | 1 |
| | மொத்தம் ... | 53 |

கிராமப்புறத்தைச் சேர்ந்த குருகுல உயர்நிலைப் பள்ளியிலுள்ள மாணவர்கள் தங்களுக்கு அச்சம் அளித்ததாகக் கூறிய அனுபவங்களின் தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | அச்சம் அளித்த அனுபவம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பயங்கரக் கனவு ... ... ... | 9 |
| 2. | இரவில் வெளியே செல்லுவது ... ... | 8 |
| 3. | பேய் ... ... ... ... | 5 |
| 4. | பாம்பு ... ... ... ... | 5 |
| 5. | திருடர் ... ... ... ... | 4 |
| 6. | தண்டனை ... ... ... ... | 4 |
| 7. | கேள்விக்குப் பதில் தெரியாமை ... | 3 |
| 8. | இடிச் சத்தம், மின்னல் ... ... | 2 |
| 9. | காட்டுப் புதர்கள் ... ... ... | 2 |
| 10. | மரங்கள் ... ... ... ... | 2 |
| 11. | மூட நம்பிக்கை ... ... ... | 2 |
| 12. | கருங்கல் கட்டடங்கள் ... ... | 1 |
| 13. | மலையில் வழுக்கி விழுந்தது ... ... | 1 |
| 14. | நஞ்சு கலந்த நீரைக் குடித்தபொழுது ... | 1 |
| 15. | 'காப்பி' அடிக்கும்போது ... ... | 1 |
| 16. | மாடு முட்டியபொழுது ... ... | 1 |
| 17. | வெளிச் செயல்களில் ஈடுபட்டபோது ... | 1 |
| 18. | முதியவர்களாகப் போகிறோமே என்றபோது | 1 |
| 19. | பரீட்சையில் தவறியபோது ... ... | 1 |
| | மொத்தம் ... | 54 |

மேற்கண்ட இரண்டு அட்டவணைகளிலிருந்து கனவுகள், திருட்டு, இருட்டு, பாம்பு, பெற்றோர், தண்டனை, 'காம்போஸிட்' கணக்குப் போன்ற பாடங்கள் முதலியன காரணமாக இளைஞர்கள் அச்சம் கொள்ளுகின்றார்கள் என்பது தெரியவருகின்றது.

குமரப் பருவத்தைச் சேர்ந்த பிள்ளைகளைப்பற்றி ஹிக்ஸ் (Hicks), ஹேஸ் (Hayes) என்னும் இருவர் ஆராய்ச்சி செய்ததில் 50 சதவிகிதம் தாங்கள் ஏதாவது ஒன்றைப்பற்றி அச்சம் உடையவர்களாய் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த அச்சங்கள் அவற்றின் அலைவெண்படி பின்வருவனவாகும்: பாம்புகள், நோய்கள், இருட்டு, புயல், விபத்துகள், உயரமான இடங்கள், புதுமையான சத்தங்கள், வீட்டில் தனிமையாக இருத்தல், திருடர்கள், என்னவென்று தெரியாத நிலை (the unknown). இப் பிள்ளைகள் குமரப் பருவத்தின் முன்

பகுதியைச் சேர்ந்தவர்கள். குமரப் பருவத்தின் பின் பருவத்துப் பிள்ளைகளின் அச்சங்களைப்பற்றி அலேவெண் வரிசை நமக்குத் தெரியாதபோதிலும் அவர்களுடைய அச்சங்கள், சமூகப் பிரச்சினைகளைப் பற்றியும், சொந்தக் குறைபாடுகள்பற்றியும் இருக்கவேண்டும் என்று நம்புவதற்கு வேண்டிய இடம் இருக்கின்றது.

மீன்ஸ் என்பவர் 1,000 கல்லூரி மாணவிகளின் அச்சங்கள்பற்றி 349 தூண்டல் சொற்கள் அல்லது சொல் தொடர்கள் அடங்கிய பயப் 'பட்டியல்' ஒன்றின் உதவிகொண்டு ஆராய்ச்சி செய்தார். கல்லூரியில் முதல் ஆண்டு படிக்கின்ற மாணவிகளுக்கு உயர்ந்த வகுப்பில் படிக்கின்ற மாணவிகளைவிட அதிகமான பயங்கள் இருந்தன. அவையாவன: காட்டு எருமைகள், நரி, காய்ச்சல், நிமோனியா, அம்மை, கால் முழி அடிபடுதல், பிசாசு, பூதங்கள், கடவுள், நஞ்சு உண்ணுதல், பிறரைத் திட்டுதல், தூக்கிக்கொண்டு போய்விடுதல், பாவம் செய்தல், போதைதரும் மதுபானம் குடித்தல், பள்ளிப்பாடத்தில் தேருமல்போதல், பரீட்சையில் தேருமல்போதல், பசி காரணமாக இறந்துபோதல், தற்கொலே, அளவுக்கு அதிகமான குழந்தைகள் பெறுதல், கேலி செய்தல், ஊழ், திருடிவிடுதல், வகுப்புக்குப் பிந்திச் செல்லுதல், தங்கிவிடுதல், பிறர் கடிதங்களை உடைத்துப் பார்த்தல், அச்சத்தால் கூவுதல், பாதுகாப்பு இல்லாத இடத்தில் தூங்குதல், வீடுபற்றிய ஞாபகம் வருதல். இத்தகைய பயங்களெல்லாம் கல்லூரியில் அப்போதுதான் சேர்ந்த மாணவர்களுக்கு ஏற்படுவதற்குக் காரணம், அவர்கள் வாழ்க்கையில் இன்னும் பக்குவம் அடையாது இருத்தலாகும்.

மேற்சொன்ன ஆராய்ச்சியில் பட்ட இறுதி வகுப்பு மாணவர்கள் முதலாண்டு மாணவர்களைவிடப் பின்வரும் அச்சங்கள் அதிகமாகக் கொண்டிருந்தார்கள். நோய்கள், நேர்மையில்லாத மோசக்காரர்கள், ஆத்திர நிலேயில் உள்ளவர்கள், நீரில் மூழ்குதல், வேகமாகக் கார் ஓட்டுதல், அசட்டையுடன் கவனமில்லாது கார் ஓட்டுதல், மிக ஆழமான கருநிறத் தண்ணீர், நீர்நிலேகள், காற்று, கார் விபத்துகள், உறைபனியில் சறுக்கி விளையாடும்போது வழுக்கி விழுதல், கூட்டங்கள், சம வயது உள்ளவர்களின் கூட்டம், குறிப்பிட்ட சில இடங்களில் உண்ணுதல், பால் உறுப்புகள் சம்பந்தமான நோய்கள், கிழ வயது, பொருத்தமில்லாத ஒருவரைத் திருமணம் செய்தல், சோர்வுற்று இருத்தல், மாறுகின்ற மனநிலேகள், எதிர்காலம், பிறரைக் குறைகூறுதல், ஒருவரைச் சார்ந்திருத்தல், பகடி பண்ணுதல், ஏமாற்றித் தவறான வழியில்விட்டுச்செல்லுதல், ரயில் வண்டியைத் தவறவிடுதல், உள்சிந்தனையை வெளிச்சொல்லல், தன்னம்பிக்கை இழத்தல், பொது இடத்தில் செயல்படுதல், எதிர்காலம், வாழ்க்கை,

பொதுஜன அபிப்பிராயம். இவ் அச்சங்களையெல்லாம் சிறிது கூர்ந்து பார்த்தால் அவை பரந்த அனுபவம், மனப்பக்குவம் உள்ளவர்கள் கூறுவது என்று தெரியவரும்.

கிரீஸ் நாட்டைச் சேர்ந்த 2,000 ஆண், பெண்பிள்ளைகள் பற்றி 'Sakellarion' என்பவர் ஓர் ஆராய்ச்சி செய்தார். அவர்களிடம் நேரிடையாகப் பேசி, ஆராய்ச்சிக்கான விவரங்களைச் சேகரித்து அதிலிருந்து சில முடிவுகளுக்கு வந்தார். வயது ஆக ஆக ஆண் பிள்ளைகளுக்குக் கவலைகள் குறைவதாகவும், அதுபோலவே பெண் பிள்ளைகளுக்கும் வயது ஆகும்பொழுது கவலைகள் குறைவதாகவும் அவர் கண்டார். ஆனல், 15 வயது முதல் 17 வயதுவரை உள்ள பெண்களுக்குக் கவலை குறைவதில்லை. 12 வயது முதல் 14 வயது வரை உள்ள குமரப் பருவத்துப் பிள்ளைகள் பெரும்பாலும் தங்களுடைய கல்விபற்றியும், தங்களுடைய எதிர்காலம்பற்றியும் கவலை கொண்டிருக்கிருர்கள். 15 வயது முதல் 17 வயதுவரையுள்ள பிள்ளைகள் தங்களது கல்வி, எதிர்காலம், காதல், விவகாரங்கள், வறுமை, அச்சம் முதலிய கவலைகள் கொண்டிருக்கிருர்கள். 18 வயதிலிருந்து 22 வயதுள்ள பிள்ளைகள் மேற்சொன்ன பிரச்சினைகளைப்பற்றி கவலை கொள்வதோடு மட்டுமல்லாமல் திருமணம்பற்றியும் கவலை கொள்ளுகிருர்கள்.

'Bronner' என்பவர் குமரப் பருவத்துப் பள்ளைகளினுடைய கவலைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்துவிட்டுச் சொல்லியிருக்கின்ற ஒரு முடிவு என்னவெனில், குமரப் பருவத்துப் பிள்ளைகள் எல்லோருக்குமே கவலைகள் இருப்பதில்லை. அதாவது, சில பிள்ளைகள் கவலையின்றிச் சாதாரணமாக இருக்கின்ருர்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கேற்ப குமரப் பருவத்துப் பிள்ளைகளினுடைய கவலைகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம் :

1. விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழ்வது சம்பந்தமான பிரச்சினைகள்.
2. சொந்தப் பிரச்சினைகள். உதாரணமாகச் சொந்தத் தோற்றம், திறமைகள், அறிவுத்திறன் முதலியன.
3. கல்வி.
4. தொழில் தேர்ந்தெடுத்தல்.
5. பால் சம்பந்தமான பிரச்சினைகள்.

இதுபோன்று இளம் பிள்ளைகளின் கவலைகள் அச்சங்கள்பற்றிப் பல நாடுகளில் ஆராய்ச்சி செய்திருக்கின்ருர்கள். இவற்றிலெல்லாம் ஓரளவுக்கு ஒருமைப்பாடு நிலவுவதையும் காண்கின்ருேம்.

குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு அச்சம் ஏற்படுவதற்கான காரணங்கள்பற்றி மேலைநாட்டில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். முடிந்த முடிவாகச் சொல்லமுடியாவிட்டாலும், பின்வருவன முக்கியமான காரணங்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் தேர்ச்சி கிடைக்குமா என்ற பயம்.

நோய்பற்றிய பயம்.

கெட்ட நண்பர்கள்பற்றிய பயம்.

தவருக நடந்துகொள்ளுவதைப்பற்றிய பயம்.

மிகவும் கூச்சமாக இருத்தல்.

பால் உணர்ச்சி காரணமாக உண்டாகும் பயம்.

உடுத்துகின்ற ஆடை சரியாக இருக்கிறதா என்ற பயம்.

பிறர் கேலி பண்ணுவார்கள் என்ற பயம்

வேலை கிடைக்குமா என்ற பயம்.

சாவுபற்றிய பயம்.

வேற்றுப் ‘பாலர்’களோடு பேசுவதற்கு பயம்.

மற்றவர்களோடு திறமையாகப் பழகுவதுபற்றிய பயம்.

பாம்பு, நாய் முதலிய பிராணிகள்பற்றிய பயம்.

இடி, மழை, தீப்பிடித்தல்பற்றிய பயம்.

வெள்ளம், வெறும் சத்தம்பற்றிய பயம்.

பெற்றோர்களுக்கு நோய் அல்லது கஷ்டம் வருவதுபற்றி பயம்.

ஆசிரியர் ஏதோ காரணமாக வைவார் என்கின்ற பயம்.

போர்பற்றிய பயம்.

அச்சம் உண்டாகும்பொழுது ஒருவன் ஒருவாறு நடந்துகொள்கிருன். முகம் வெளுத்தல், நடுங்குதல், வியர்த்தல், மூச்செறிதல், மரத்துப்போதல் அல்லது இடத்தைவிட்டு ஓடிப்போதல் போன்ற பல விதமான மாறுதல்களைப் பார்க்கலாம். இத்தகைய மாறுதல்கள் ஒவ்வொரு, பருவத்திலும் ஏற்படத்தான் செய்கின்றன.

அச்சம் சில சமயங்களில் ஒருவரது உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டால் அது அவருடைய வாழ்க்கையின் போக்கையும் வளர்ச்சி முழுவதையுமே பாதிக்கக்கூடும். இதற்கு உதாரணமாக ஓர் அமெரிக்கப் பெண்ணின் வாழ்க்கை வரலாற்றைக் கூறலாம்.

'டோ' என்னும் இப் பெண்ணுக்கு இப்பொழுது வயது 45-க்கு மேல் ஆகிறது. பொதுவாகப் பார்த்தால் அவள் சாதாரணமான பெண் போன்றுதான் தோன்றுகிறாள். ஆனால், அவளிடம் ஒரு பிறழ் வான நடத்தையைமட்டும் பார்க்கலாம். யாராவது தொடுவது என்றால் அவளுக்கு ஒரே பயம். தொட்ட உடனேயே அவள் முகம் எல்லாம் கறுத்துவிடும். நடுங்க ஆரம்பித்துவிடுவாள். தொட்ட அவளிடமிருந்து துள்ளி தூரப் போய்விடுவாள். இவ்வாறு செய்யாமல் இருப்பதற்காக 'டோ' எவ்வளவு முயற்சி செய்தாலும் அது முடிவதில்லை. ஆகவே, அவளுக்கு நெருங்கிய நண்பர்கள் ஒருவரும் கிடையாது. ஆண்பால் நண்பர்களும் இல்லை; பெண்பால் நண்பர்களும் இல்லை. பலர் அவளை விரும்பாமல் இல்லை. அவளைத் தொடாது இருக்கும்வரைக்கும் அவளுடன் சேர்ந்து நண்பராக இருக்கமுடிகின்றது. ஆனால், தொட்டுவிட்டால் எல்லாம் போய்விடுகின்றது. பலருக்கு ஏன் அவள் இவ்வாறு நடந்துகொள்ளுகிறாள் என்பதைப்பற்றி அன்போடு எண்ணிப் பார்ப்பதற்கு அவகாசம் இருப்பதில்லை. இந்தத் தொடுதல் அச்சத்துக்கு ஒரு நல்ல காரணம் உண்டு. அவள் குழந்தையாக இருந்தபொழுது இது உண்டாயிற்று. அதைப்பற்றிச் சில மாதங்களுக்கு முன்வரை அவள் ஒருவரிடமும் கூறியது கிடையாது. 12 வயதுக் குழந்தையாக இருக்கும்பொழுது ஒரு கீழ்த்தரமான ஆண்மகன் அவளை முறையற்ற முறையில் தாக்கிக் கேவலமாக நடந்துகொண்டான். உடனடியாக வீட்டில் சென்று அம்மாவிடம் அவள் இதைச் சொல்லியிருக்கலாம். ஆனால், அவ்வாறு சொல்லாது இந்த நிகழ்ச்சியைத் தனது உள்ளத்திலேயே அடக்கி வைத்துக்கொண்டாள் (suppression). அதற்குப் பிறகு பல ஆண்டுகள் எந்த வேலைக்காகவும் தனியாகப் போவதற்கு அவள் மறுத்துவிடுவாள். அவள் நடத்தையில் பயமும் தயக்கமும் தென்பட்டன. 17, 18 வயது ஆனபோது அவள் தனது உடல்நலத்தைப் பற்றி அசாதாரணமான அக்கறை எடுத்துக்கொண்டாள். இதைப் பார்த்த பலர் இவ்வாறு இருப்பதற்குக் காரணம் நோய்பற்றிய கிலி என்று நினைத்தார்கள். ஆனால், உண்மை அதுவன்று. அவளுடைய உண்மையான பயம் என்னவென்றால், டாக்டர் அவளைச் சோதனை செய்தால் தொடவேண்டி நேரிடும் என்பதே. ஆகவே, டாக்டரைக் காணவேண்டிய அவசியம் ஏற்படாத முறையில் நடந்துகொண்டாள். நெடுநாளைக்கு முன் நடந்த அந்தப் பயங்கர நிகழ்ச்சியை அவள் மறந்துவிட்டாள். அதற்கும் தற்சமய நடத்தைக்கும் தொடர்பு இருப்பதாக அவளுக்குப் படவில்லை. புதிதாக யாராவது தொட்டுவிட்டால் முன்பு சிறு குழந்தையாக இருக்கும்பொழுது எப்படி அச்சமும் கோபமும் கொண்டு நடந்துகொண்டாளோ அதுபோலவே இப்பொழுதும் நடந்துகொள்ளுவாள். ஆரம்பத்திலேயே பெற்றோர்களிடம் அந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சொல்லியிருந்தால், பின்னர்

அவள் நடந்துகொண்ட விதத்துக்கு எது காரணம் என்று தெரிந்திருக்கும். இப்பொழுதுள்ள கிலி உண்டாகியிராது. அந்த நிகழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பயம் அவளது வாழ்க்கை முழுவதும் பரவி, அவள் செய்யும் தொழிலை நிர்ணயித்து, நண்பர்கள் ஏற்படாதபடி செய்து, திருமணம் என்பது முடியாத ஒன்றாக ஆக்கி, இன்னும் எத்தனையோ தப்பெண்ணங்களுக்குக் காரணமாக அமைந்துவிட்டது. அதனால் அவளுடைய வாழ்க்கை முழுவதும் நாசமாகாததற்குக் காரணம் அவள் அடிப்படையான உயர் சக்தியே. எனினும், சமூகத்திற்கு அவளால் ஏற்படும் பயன் அதனால் குறைந்துவிட்டது.

அச்சம் அழிவு தரக்கூடிய ஒரு தீய உணர்ச்சி. ஆபத்துக் காலத்தில் விழிப்பாக இருப்பதற்கு அது உதவியாக இருந்தபோதிலுங்கூடப் பொதுவாக அச்சம் பிறழ்வான நடத்தைக்கும், குன்றிய வளர்ச்சிக்கும் காரணமாக அமையும். அச்சத்தை வெல்லுவது மன நலம் பெறுவதற்கு மிகவும் தேவையாகும்.

சினம்

சினம் அடிக்கடி உண்டாகின்ற ஓர் உணர்ச்சி. அது எளிதாக உண்டாகிவிடுகின்றது. குழந்தைப் பருவத்தில் பொதுவாக, குழந்தையின் விளையாட்டில் யாராவது குறுக்கிட்டு விளையாட்டுப் பொருளை எடுத்துக்கொண்டு போய்விடும்போதும், குளிப்பாட்டுதல், ஆடை உடுத்துதல், உணவு உண்ணவைத்தல் போன்ற தினசரி சேவைகளில் ஈடுபடும்போதும் குழந்தைக்குச் சினம் உண்டாகின்றது. ஆனால், குமரப் பருவத்தில் நிலைமை முற்றிலும் மாறிவிடுகின்றது. பலர் முன்னிலையில் ஆசிரியர் ஒரு பையனைப்பற்றி இழிவாகப் பேசினால் அதனால் அவனுக்குச் சினம் உண்டாகின்றது. இன்னொரு பையனோடு தீவிரமாக வாக்குவாதம் பண்ணும்பொழுது சினம் ஏற்பட ஏதுவாகின்றது. பரீட்சைக்காக அதிகக் கவலையோடு படித்துக்கொண்டிருக்கும்பொழுது யாரும் குறிக்கிட்டால் சினம் உண்டாகின்றது. அதாவது குமரப் பருவத்தில் சினம் உண்டாவதற்கான காரணங்கள் பெரும்பாலும் சமூக வாழ்க்கையைப் பற்றியனவாக இருக்கும்.

குழந்தைப் பருவத்தில் உண்டாகும் சின உணர்ச்சிக்கும் குமரப் பருவத்தில் உண்டாகும் சின உணர்ச்சிக்கும் இன்னொரு முக்கிய வேற்றுமை உண்டு. அதாவது குழந்தைகளின் சின உணர்ச்சி பெரும்பாலும் 4, 5 நிமிஷங்களுக்குமேல் நீடிப்பது கிடையாது. ஆனால், குமரப் பருவத்துப் பிள்ளைகளின் சின உணர்ச்சிகள் பெரும்பாலும் சுமார் 15 நிமிஷங்கள் நீடித்து இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இன்னொரு வேற்றுமையும் உண்டு. சினம் வரும்பொழுது குழந்தைப் பருவத்துப் பையன் நடந்துகொள்ளுவதற்கும், குமரப் பருவத்துப் பையன் நடந்துகொள்ளுவதற்கும் அதிக வேற்றுமை உண்டு. சிறு குழந்தைக்குச் சினம் வந்தால் அழும், கூக்குரல் இடும், அடிக்கும், உதைக்கும், கடிக்கும், குதிக்கும், காலைத் தரையின்மேல் போட்டு உதைக்கும், சில சமயங்களில் தரையில் விழுந்து புரளும், சிறிது எதிர்த்துப் பேசலாம், வையலாம். ஆனால், குமரப் பருவத்துப் பையன் குழந்தைபோன்று பலவிதப் புறச் செயல்களில் ஈடுபடுவதில்லை. பெரும்பாலும் தன்னுடைய கோபத்தையெல்லாம் பேச்சிலேயே காட்டிவிடுகிறான். அப்படி மிகவும் அதிகமாகக் கோப உணர்ச்சி வந்துவிட்டால் அறையில் சிறிது அங்கும் இங்கும் நடக்கலாம்; அல்லது வெளியே போய்விடலாம். வெகு சில சமயங்களில் தான் குமரப் பருவத்துப் பையன் சிறு குழந்தையைப்போலக் காலை உதைப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கலாம். பெண் பிள்ளைகள் அழுவதையும் பார்க்கலாம். ஆனால், இவற்றை விதிவிலக்காகக் கொள்ளவேண்டும்.

கோவை நகரத்தைச் சேர்ந்த ஓர் உயர்நிலைப் பள்ளியிலுள்ள மாணவர்களிடம் 'உனக்கு மிகவும் கோபம் தந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுக' என்ற கேள்வி கேட்கப்பட்டது. 14 வயதிலிருந்து 18 வயது வரையுள்ள 58 மாணவர்கள் இக் கேள்விக்கு விடையளித்தார்கள். அவ் விடைகளின் தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | கோபம் தந்த நிகழ்ச்சி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அவதூறாகப் பேசியபொழுது ... ... | 17 |
| 2. | நண்பர்களின் தீய செயலைப் பார்க்கும்போது | 8 |
| 3. | பழி சுமத்தியபோது ... ... | 7 |
| 4. | அடித்தபோது ... ... ... | 7 |
| 5. | வெற்றி கிடைக்காவிட்டால் ... ... | 5 |
| 6. | பிறர் இடையூறு செய்தால் ... ... | 3 |
| 7. | அரசியலைப்பற்றிப் பேசும்போது ... ... | 2 |
| 8. | பிறர் திருடினால் ... ... ... | 2 |
| 9. | எதிரிகளைக் கண்டால் ... ... | 2 |
| 10. | தேர்வு முடிந்த நேரத்தில் ... ... | 2 |
| 11. | 'ஏப்ரல்' முட்டாளாகக் கூறியபொழுது ... | 2 |
| 12. | நிரபராதியைத் தூக்கிலிடும்போது ... | 1 |

கிராமச் சூழ்நிலையிலுள்ள இன்னோர் உயர்நிலைப் பள்ளியில் மேற்குறிப்பிட்ட அதே கேள்வி கேட்கப்பட்டது. இப் பள்ளியின் எல்லா மாணவர்களும் விடுதியிலேயே தங்கிக் குருகுல வாழ்க்கை வாழ்பவர்கள். 13 வயதிலிருந்து 17 வயது வரையுள்ள 43 மாண வர்கள் கொடுத்த விடைகளின் தொகுப்பைக் கீழே காணலாம்.

| | கோபம் தந்த நிகழ்ச்சி | மாணவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கேலி செய்வது ... ... ... | 9 |
| 2. | அடித்தபோது ... ... ... | 8 |
| 3. | பழி சுமத்தியபோது, திருட்டுப் பட்டம் சுமத் தியபோது ... ... ... | 6 |
| 4. | திட்டியபோது ... ... ... | 4 |
| 5. | விடுதி உணவு ... ... ... | 3 |
| 6. | எதிரிகளைக் கண்டால் ... ... | 2 |
| 7. | பிற மாணவர்கள் பாரபட்சமாக இருந்தபோது | 2 |
| 8. | சோம்பேறித்தனம் ... ... ... | 2 |
| 9. | ஆசிரியர் ஊருக்குச் செல்லவிடாதபோது ... | 1 |
| 10. | குற்றம் செய்தபோது ... ... | 1 |
| 11. | தண்டனை தந்தபொழுது ... ... | 1 |
| 12. | பிறர் அமைதியைக் கெடுத்தபொழுது ... | 1 |
| 13. | அநாவசியமான கேள்விகள் கேட்டபொழுது | 1 |
| 14. | நண்பர்களின் துரோகம் ... ... | 1 |
| 15. | மாணவர்களின் கெட்ட பழக்கங்கள் ... | 1 |
| | மொத்தம் ... | 43 |

மேலே கண்ட இரண்டு அட்டவணைகளைப் பார்க்கும்பொழுது குமரப் பருவத்துப் பிள்ளைகள் கோபம் அடைவதற்கு முக்கியமான காரணங்கள் பிறர் கேலி செய்வது, அவதூறாகப் பேசுவது, பழி சுமத்து வது, அடிப்பது போன்றவை என்பது தெரியவருகின்றது.

அன்பு, காதல்

இன்ப உணர்ச்சிகளில் அன்பு, காதல் முதன்மையானவை. உளவியல் வல்லுநர் ஃபிராய்ட் செய்துள்ள ஆராய்ச்சி காரண மாகப் பால் உணர்ச்சி என்பது சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே வெளிப்படுகின்றது என்று தெரியவருகின்றது. சிறு குழந்தை முதன்முதலில் தன்னைத் தானே விரும்புகிறது. அது அன்பு கொள் வது தன் நிலையைத்தான். அடுத்தபடியாகக் குழந்தை தன்னுடைய தாயின்மேல் அன்பு கொள்ளுகிறது. முதல் சில ஆண்டுகளில்

குழந்தையின் அன்புக்கு மையமாக விளங்குவது தாய். அதற்குப் பிறகு பெண் பிள்ளைகள் தந்தையின் மேல் சிறப்பாக அன்பு கொள்ளுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஆண் பிள்ளைகள் அவ்வளவு தூரம் தந்தையின்மேல் அன்பு கொள்ளுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இது பெரும்பாலும் மேலைநாட்டுக் குடும்ப வாழ்க்கைக்குப் பொருந்துவதாகும் என்று சொல்லலாம். பின்னர் குழந்தை பள்ளிக்குச் செல்லலாம். அங்கு வயது முதிர்ந்த ஆசிரியர்களின்பால் அன்பு உண்டாகின்றது. 8, 9 வயதுவரைக்கும் இந்த நிலை இருக்கின்றது. பின்னர்த் தன் பால் குழந்தைகளோடு தீவிர நட்பு உண்டாகின்றது. பெரும்பாலும் ஒத்த வயதுள்ள பிள்ளைகளோடுதான் இந்த நட்பு உண்டாகிறது. குழந்தைப் பருவம் முதிர்ந்து குமரப் பருவம் தொடங்கியபிறகு படிப்படியாகத் தன் பால் பிள்ளைகளைவிட வேற்றுப் பாலாரிடத்து அன்பும், கவர்ச்சியும் உண்டாகின்றன. இதுவே காதலாக மாறுகிறது. குமரப் பருவத்தில் பையன்களும், பெண்களும் கலந்து பழகுவதற்கான பழக்கம் மேலைநாட்டுச் சமூகத்தில் அதிகமாகவும், இந்தியா போன்ற ஆசிய நாட்டுச் சமூகத்தில் குறைவாகவும் இருக்கின்றது. வாய்ப்பு அதிகமாகவோ, குறைவாகவோ இருந்தபோதிலுங்கூட உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி ஒன்று போலத்தான் இருக்கும். வேற்றுப்பால் பிள்ளைகளோடு பழகுவதற்கான வாய்ப்பு அதிகமாகவோ குறைவாகவோ இருக்குமேயொழிய மனத்தில் உண்டாகும் ஆர்வம் அல்லது உணர்ச்சி அடிப்படையில் ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றது.

இந்த உணர்ச்சியின் வளர்ச்சியானது பொதுவாக மேற்சொன்னதுபோல் இருந்தபோதிலும் ஆளுக்கு ஆள் பெரிதும் வேறுபடுகின்றது. உள்வளர்ச்சியில் இதன் வேற்றுமைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சில சமயங்களில் சிக்கல்களும் உண்டாகிவிடுகின்றன. உதாரணமாக, ஒரு பையன் தனது வீட்டில் தாயுடனேயே பல ஆண்டுகளாக வளர்ந்து வேறுபட்ட இளம் பெண்பிள்ளைகளோடு பழகுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டால், சில சமயங்களில் தனது தாய்போன்ற அதே மாதிரியான லட்சிய பெண்ணைப்பற்றிக் கனவு காணும் தன்மை உண்டாகிவிடுகின்றது. இப்படிக் கனவு காணும் இளைஞர்கள் வீணாகத் தேடி அலைந்து இறுதியில் தனி வாழ்க்கை வாழ்பவர்களாக ஆவதும் உண்டு. இதுபோலவே மேலைநாட்டுச் சமூகத்தில் குமரப் பருவத்தில் ஆண்பிள்ளைகளோடு பழகுவதற்கு வாய்ப்புக் கிடைக்காமல்போய்விடுகின்ற காரணத்தால் சில பெண்கள் பிறழ்வான முறையில் வளருகிற நிலை ஏற்படுகிறது. இத்தகைய இளம்பெண் தன்னைவிடச் சில ஆண்டுகள் வயது முதிர்ந்த இன்னொரு பெண்ணின்பால், சில சமயங்களில் ஆசிரியர்பால் தீவிர காதல் கொள்ளுவது உண்டு. இதையே ஆங்கிலத்தில் 'கிரஷ்' (crush) என்று சொல்லுவார்கள்.

மகிழ்ச்சி

ஓர் ஆராய்ச்சி ஆசிரியர் கோவை நகரத்திலுள்ள ஓர் உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் 80 குமரப் பருவத்துப் பையன்கள்பற்றி ஆராய்ச்சி செய்தார். குறிப்பாக, பிள்ளைகளின் பால் நடத்தையைப் பற்றியும் அதுபற்றி அவர்களது மனப்பான்மைபற்றியும் அவர் ஆராய்ச்சி செய்தார். குமரப் பருவத்தில் எல்லா இளம் பிள்ளைகளுக்கும் பால் உணர்வு தோன்றி மேலோங்கி நிற்பது ஆராய்ச்சியிலிருந்து தெரியவந்தது. அதிலும் 17, 18 வயதுள்ள இளம் பிள்ளைகளிடம் பால் உணர்வு மிகவும் அதிகமாக மேலோங்கி நின்றது. 18 வயதுக் குமரப் பருவத்து இளைஞன் ஒருவன் ஆராய்ச்சியாளரிடம் 'இதனை என்னால் தாங்க முடியவில்லை' என்று சொன்னானாம். வகுப்பறையில் பாடம் நடக்கும்பொழுதுகூட 'ஜோடி', 'இரட்டை,' 'கட்டு', 'கலர்' என்ற சொற்கள் வந்தால் உடனே பிள்ளைகள் தங்களுக்குள்ளேயே சிரிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஏனென்றால், இச் சொற்கள் அவர்களது பால் உணர்வைத் தூண்டுவதாக இருக்கின்றன. இரண்டு மூன்று நிமிஷங்கள் கழித்த பிறகே பிள்ளைகளின் கவனம் பாடத்தில் சரியானபடியாகச் செல்லும்.

தற்காலத்தில் இளைஞர்களைத் தூண்டும்படியாக எத்தனையோ பொருள்கள் சமூகச் சூழ்நிலையில் இருக்கின்றன. சரோகின் என்னும் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார்; 'நவீன நாகரீகம் என்பதன் பேரால் தற்காலத்தில் எத்தனையோ புறத்தூண்டுதல்கள் இளம் பிள்ளைகளினுடைய பால் உணர்வை ஊக்கிவிடுகின்றன. படம், சுவரொட்டி, விளம்பரப் பலகைகள் போன்ற பிரசார சாதனங்கள் ஒவ்வொன்றிலும் பால் உணர்வுத் தூண்டுதல் நிரம்பியிருப்பதைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு நாளும் இளைஞர்கள் பார்ப்பதிலிருந்தும். கேட்பதிலிருந்தும் அவர்களுடைய பால் உணர்வு தாக்கப்படுகின்றது. சமூகக் கலாசாரம் முழுவதுமே பால்மயமாகின்ற ஓர் ஆபத்தான போக்கினை நாம் இன்று காண்கின்றோம்.' மேல்நாட்டில் தொடங்கிய இப் போக்கு இப்பொழுது இந்தியாவிலும் நிகழ்ந்துவருவதைக் காண்கின்றோம். இளைஞர்கள் படிக்கின்ற பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியன அவர்களது பால் உணர்வை இன்னும் தூண்டிவிடுகின்றன. ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 80 மாணவர்களில் 1/5 பங்கினரிடம் ஆபாசமான நூல்கள் இருந்தன. இவை தவிர 'ஃபிரெஞ்சுப் படுக்கையறை போட்டோ'க்கள் சிலரிடம் இருந்தன.

இவ்வாராய்ச்சி ஆசிரியர், தாம் ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்ட இளைஞர்களுடைய பால்நடத்தை எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக முயற்சி செய்தார். உண்மையைத் தெரிந்துகொள்ளுவதில் தடைகள் இருந்தபோதிலுங்கூட அவர் படிப்படியாகப் பிள்ளைகளிடம் பேசி அவர்களது நம்பிச்கைக்குப் பாத்

திரமானவராகத் தன்னை ஆக்கிக்கொண்டார். இளைஞர்களிடம் சுற்றி வளைத்துக் கேட்காமல் நேரிடையாக அவர்களது பால் நடத்தையைப் பற்றிக் கேள்விகள் கேட்டார். அவர்கள் தங்களது பால் உந்தல் ஓரளவுக்கு நிறைவு பெறுவதற்காகத் தற்பால் உறவிலும், 'மாஸ்டர் பேஷனி'லும் (masterbition) ஈடுபட்டதாகச் சொன்னார்கள். இவ்விரண்டில் மாஸ்டர்பேஷனில் இளைஞர்கள் பெருவாரியாக ஈடுபட்டார்கள். இதற்குக் காரணம் இது ரகசியமாகத் தனிமையில் செய்யக் கூடியது. ஆனால், தற்பால் உறவுக்கு இன்னொருவருடைய கூட்டுறவு வேண்டும். வீட்டுச் சூழ்நிலையில் கட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால் தற்பால் தொடர்பு அவ்வளவு எளிதாக முடிவதில்லை. ஆனால், மாணவ விடுதிபோன்ற இடங்களில் தற்பால் தொடர்பு போன்ற செயல்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கின்றது. மேற்சொன்ன உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த விடுதியில் சில ஏழ்மையான கல்லூரி மாணவர்கள் தங்கியிருந்தார்கள். விடுதியில் போதிய இடவசதி கிடையாது. ஆகவே, ஓர் அறையில் வெவ்வேறு வயது நிலைகளிலுள்ள 4, 5 மாணவர்களைப் போடவேண்டியதாயிற்று. இதன் விளைவாக வயது வந்த மாணவர்கள் கள்ளம் இல்லாத இளம் பையன்களோடு தற்பால் உறவுகொள்ள ஆரம்பித்தார்கள். முதலில் இளம் பிள்ளைகள் சிறிது எதிர்ப்பு உணர்ச்சி காட்டுவார்கள்; ஆனால், பின்னர் ஒத்துக்கொண்டு போகவேண்டியது வரும். அதற்குப் பிறகு எல்லாம் பழக்கம் ஆகிவிடும். இந் நிலையை விடுதி காவலர் அறிந்த பிறகு கூடியமட்டும் சமவயது பிள்ளைகளையே விடுதியில் தங்குமாறு ஏற்பாடு செய்தார். என்றாலும், தற்பால் தொடர்புச் செயல்களைக் குறைக்க முடிந்ததேயொழிய முழுவதும் நீக்க முடியவில்லை. மாஸ்டர் பேஷனைப் பொறுத்தவரையில் இது பொதுவாக எல்லாப் பிள்ளைகளிடம் பரவியிருந்தது என்று தெரியவந்தது. பெற்றோர்களோடு வீட்டுச் சூழ்நிலையில் வாழ்கின்ற பிள்ளைகள் கூடத் தனிமையாக இருக்கும் வாய்ப்பு கிடைக்கும்பொழுது மாஸ்டர்பேஷனில் ஈடுபடுவதாகச் சொன்னார்கள்.

மேற்சொன்ன 80 பிள்ளைகளின் பால் உணர்வுபற்றி இன்னும் தெரிந்துகொள்ளுவதற்காக ஆராய்ச்சியாளர் ஒரு பொருள் அறிவோடு புணர்தற் சோதனை (thematic apperception test) ஒன்றைக் கொடுத்தார். ஆற்றங்கரையில் ஓர் இளம் ஆண்மகனும், பெண்ணும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது போன்று இரண்டு வர்ணப் படங்கள் பிள்ளைகளுக்குக் காட்டப்பட்டன. அப் படத்தைப் பார்த்தவுடன் அவர்கள் மனத்தில் தோன்றியதை எழுதுமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். ஒரு படத்தில் இரண்டுபேர்களுடைய உருவங்கள் மிகச் சிறியவையாகக் காட்டப்பட்டன. இயற்கைக் காட்சியும், சூழ்நிலையும் அப் படத்தில் மிகவும் பெரிதாகவும் காட்டப்பட்டன. இதற்கு மாறாக இரண்டாவது படத்திலோ இரண்டு

பேர்களுடைய உருவங்கள் மிகப் பெரிதாகக் காட்டப்பட்டன. இவ் வேற்றுமை மாணவர்களது கவனத்தைச் சிறிதும் கவரவில்லை. இயற் கைக் காட்சி, அதன் அழகு முதலியனவற்றில் அவர்கள் கவனம் சிறிதும் செல்லவில்லை. அவர்கள் எழுதியவையெல்லாம் அந்த இரண்டுபேர்களுடைய காதல்பற்றியே இருந்தன. அவர்கள் இரு வரது காதல் உறவினைக் குறிப்பதாகப் படங்களில் ஒன்றும் கொடுக் கப்படவில்லை. ஆனால், அநேகமாக எல்லா மாணவர்களும் அவர்கள் இருவரையும் காதல் கண்ணோட்டத்திலேயே பார்த்தார்கள். அவர் களில் பலர் கூறியவை :

1. 'அவர்கள் ரகசியமாக ஒருவரோடு ஒருவர் காதல் செய்துகொண்டு இருக்கிறார்கள்.'
2. 'அவர்கள் ஓர் அநீதியான சமூகத்தால் அடக்கப்பட் டுள்ள தெய்வீகக் காதலர்கள்.'
3. 'இன்பத்தை நாடி ஓடிப்போய்விட்ட காதலர்கள்.'
4. 'திருமணம் ஆகாத காதலர்கள்.'
5. 'தவறு......தவறு' 'மிகவும் தப்பு.'
6. 'நான்சென்ஸ்...... . இத்தகைய படங்களை எங்களுக்கு ஏன் கொடுக்கிறீர்கள்.'

கடைசி இரண்டு மாணவர்கள் சொல்லியிருப்பதிலிருந்து அவர்க ளுக்குப் பால் உணர்வு இல்லை என்று சொல்லுவதற்கில்லை. சமூகத் தில் எது சரி என்று கருதினார்களோ, அதனை அவர்கள் கூறியிருக்கி றார்கள். ஆனால், அவர்கள் உள்ளத்திலும் பால் உணர்வு இருக்கத் தான் செய்கிறது.

ஆராய்ச்சியாளர் இன்னொரு சோதனையும் செய்தார். அவர் பிள்ளைகளிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார்; 'நீங்கள் தன்னந் தனியாக ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமான இடத்தில் இருப்ப தாக வைத்துக்கொள்வோம். உன்னுடன் ஓர் அழகான இளம் பெண் இருக்கிறாள் என்றும் வைத்துக்கொள்வோம். இந்த நிலையில் நீ என்ன செய்வாய்'. 15% மாணவர்கள் இக் கேள்விக்கு விடை தர மறுத்துவிட்டார்கள். 20% மாணவர்கள் 'நான் என்ன செய் வேன் என்று எனக்குத் தெரியாது' என்று சொன்னார்கள். 30% மாணவர்கள் பொதுவாகச் சமூகத்தில் நல்லொழுக்கம் என்று எது கரு தப்படுகிறதோ அதற்கேற்ப விடையளித்தார்கள். 35% மாணவர்கள் மட்டும் சமூகத்தில் தவறு என்று கருதப்படும்படியான விடைகளை அளித்தார்கள்.

மேற்சொன்ன இளைஞர்களது கனவுகள்பற்றிக் கேட்டபொழுது 20% மாணவர்கள் பால்-உணர்வு சம்பந்தமான கனவுகள் வந்து தொந்தரவு செய்வதாகவும் சொன்னார்கள். 40% மாணவர்கள் தங்க ளுக்குக் கனவு வருவதில்லை என்று சொன்னார்கள். அவர்களது கனவு களில் பெரும்பாலானவை வீரதீரச் செயல்கள் சம்பந்தமாக இருந்தன.

முன்னொரு பகுதியில் குறிப்பிட்ட இரண்டு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களிடம் 'உனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்த அனுபவம் எது' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த விடைகளின் தொகுப்புக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நகரத்திலுள்ள உயர்நிலைப்பள்ளி

| மகிழ்ச்சியளித்த அனுபவம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. உல்லாசப் பயணம் ... ... ... | 22 |
| 2. ஆண்டு விழா ... ... ... | 14 |
| 3. சகோதரியின் திருமணம் ... ... | 9 |
| 4. பரிசு கிடைத்தபோது ... ... | 6 |
| 5. பரீட்சையில் தேறியபோது ... ... | 3 |
| 6. புத்தகங்களைப் படிக்கும்போது ... ... | 3 |
| 7. பள்ளி வாழ்க்கை ... ... ... | 3 |
| 8. தம்பி பிறந்தது ... ... ... | 2 |
| 9. நேருவைச் சந்தித்தது ... ... | 1 |
| 10. நாடு விடுதலை பெற்றது ... ... | 1 |
| 11. அண்ணனது தியாகம் ... ... | 1 |
| 12. தான்விரும்பும் கட்சித் தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றது ... ... | 1 |
| மொத்தம் ... | 66 |

கிராமப்புறத்திலுள்ள குருகுல உயர்நிலைப்பள்ளி

| மகிழ்ச்சியளித்த அனுபவம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. உற்சவம், குருபூஜை விழா ... ... | 12 |
| 2. குருகுலப் பள்ளி வாழ்க்கை ... ... | 7 |
| 3. உல்லாசப் பயணம் ... ... ... | 5 |
| 4. பரீட்சையில் நல்ல மதிப்பெண் ... ... | 5 |
| 5. போட்டியில் வெற்றி ... ... ... | 4 |
| 6. விளையாட்டு ... ... ... | 4 |
| 7. விசேஷ பூஜை ... ... ... | 4 |
| 8. வழிபாடு ... ... ... ... | 2 |
| 9. பெரியோரது பழக்கம் ... ... | 2 |
| 10. ஊருக்குப் போவது .. ... ... | 1 |
| 11. கடமைப் பயிற்சி முகாம் ... ... | 1 |
| 12. கதை எழுதுவது ... ... ... | 1 |
| 13. நேருவைப் பார்த்தது ... ... | 1 |
| 14. தம்பியுடன் விளையாட்டு ... ... | 1 |
| மொத்தம் ... | 50 |

இந்த இரண்டு அட்டவணைகளையும் ஒப்பிடும்பொழுது பிள்ளைகளின் சூழ்நிலைக்கேற்ப மாணவர்களது மகிழ்ச்சி அனுபவங்கள் வேறுபடும் என்பது தெரியவருகின்றது. இரண்டு அட்டவணைகளுக்கும் ஒப்புமையில்லாமலும் இல்லை. உல்லாசப் பயணம், பரீட்சை, போட்டியில் வெற்றி பெறுவது, பள்ளி வாழ்க்கை முதலியன இளம் பிள்ளைகளுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கின்றன.

உணர்ச்சி வயது

கால வயது போன்று மன வயது என்றும் ஒன்று உண்டு. கால வளர்ச்சியைப் போன்று மனவளர்ச்சியும் ஏற்படவேண்டும். அந்தந்த ஆண்டுக்குரிய மன வளர்ச்சி ஏற்பட்டால், அது சாதாரணமான வளர்ச்சி ஆகும். வேகமாக மனம் வளருகின்றவர்களுக்குக் கால வயதைவிட மனவயது அதிகமாகவும், சிறிது மெதுவாக மனம் வளருகின்றவர்களுக்குக் கால வயதைவிட மன வயது குறைவாகவும் இருக்கும். மனவயதை அளப்பதுபற்றி அடுத்த அதிகாரத்தில் காணலாம். மனவயது போலவே உணர்ச்சி வயது என்பதும், உணர்ச்சி வயதை அளப்பதற்கு வழி முறை செய்யலாம். சாதாரணமாக, சராசரிக் குழந்தை ஒரு வயதில் எத்தகைய உணர்ச்சி நிலை அடைந்திருக்கவேண்டும் என்பதை நாம் தரப்படுத்திச் சொல்ல முடியும் என்றால் அதன் அடிப்படையில் ஒரு குழந்தையினது உணர்ச்சி வயதை அளவிட்டுவிடலாம். இத்தகைய சோதனைகள் இப்பொழுது உண்டாக்கப்பட்டுள்ளன. அந்தச் சோதனைகளைக் கொடுத்துக் குழந்தையின் உணர்ச்சி வளர்ச்சியை நாம் கண்டுபிடித்துக் கொள்ளலாம். இத்தகைய ஒரு சோதனையைப் பிள்ளைகளுக்குக் கொடுத்துக் கிடைத்த முடிவுகளைப் பின்வரும் வரைபடத்தில் பார்க்கலாம். குழந்தைகளின் வயதுக்கும் உணர்ச்சியின் வளர்ச்சிக்குமுள்ள தொடர்பு இதில் தெரிகின்றது. பொதுவாக ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் உணர்ச்சி வயது மிகுந்திருப்பதைக் காணலாம்.

அச்சம், சினம், அன்பு ஆகிய மூன்று முக்கிய உணர்ச்சிகள் பற்றியும் அவை சார்ந்த உணர்ச்சிகள்பற்றியும் முன்னர் பார்த்தோம். இம்மூன்று உணர்ச்சி வகைகளும் குழந்தைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரைக்கும் ஒருவனிடம் இருந்து வருகின்றன. இம்மூன்றும் சேர்ந்து ஒரு சமூகத்தில் ஒருவனது உணர்ச்சி நிலையை நிர்ணயிக்கின்றன. சமூகத்தில் மற்றவர்களோடு நல் உறவும் ஒருவனது உணர்ச்சிகளுக்குத் தக்க வெளியீடும் இருக்குமென்றால் ஒருவனது உணர்ச்சி நிலை சமதன்மையதாக இருக்கும். இல்லாவிட்டால் மனத்தில் போராட்டம் உண்டாகலாம். அதிகமான எழுச்சியும், அதிகமான சோர்வும் உள்ளத்தில் ஏற்படலாம். சமூகத்




மனவெழுச்சி வயதின் மிக்கோள்கள்

படம் 18

தோடு இயைந்து நன்கு வாழ்ந்துகொண்டு உணர்ச்சிச் சமநிலையில் இருப்பது நலம்.

பொதுவாகக் குமரப் பருவத்தில் உணர்ச்சியின் எழுச்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் குமரப் பருவத்துப் பிள்ளைகளிடம் உணர்ச்சிச் சமநிலை சிறிது குறைந்து காணப்படுவது இயற்கையே. டாக்டர் சண்முகம் அவர்கள் ஓர் ஆளுமைச் சோதனைப் பட்டியலின் மூலமாக 15 வயது நிலையிலுள்ள 40 பிள்ளைகளின் உணர்ச்சிச் சமநிலை பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். மற்ற வயது நிலையைச் சேர்ந்த 120 பிள்ளைகளைப்பற்றியும், பூப்பு நிலை எய்தியுள்ள 124 பிள்ளைகளைப் பற்றியும், பூப்பு நிலை எய்தாத 96 பிள்ளைகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்துள்ளார்.

இந்த ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஆளுமைச் சோதனைப் பட்டியலின் இனங்கள் பின்வருமாறு :

1. நீ குழந்தையாய் இருந்தபொழுது தனியாக விளையாட விரும்பியது உண்டா ?
2. உனக்கும் உன் தாய்க்கும் உள்ள உறவு எப்பொழுதும் இன்பமாகவே இருந்துள்ளதா ?
3. திக்கிப்பேசும் பழக்கம் உனக்கு எப்பொழுதாவது இருந்தது உண்டா ?
4. ஆபத்தான நிலைகளில் நீ தன்னுணர்வை இழந்து ஒரே குழப்பமாகிவிடுவதுண்டா ?
5. நீ எளிதில் சிரிப்பதுண்டா ?
6. முடியாத காரியங்களைப்பற்றி நீ பகல் கனவு காண்பது உண்டா ?
7. மற்றவர்களோடு இருக்கும்பொழுதும், நீ தனிமையாக இருப்பதுபோல் உணர்வதுண்டா ?
8. உனது தந்தையைவிடத் தாயின்மேல் உனக்கு அதிக அன்பு உண்டா ?
9. உனக்கு அச்சம் தரும் பொருட்கள் பலபல உண்டா ?
10. அடிக்கடி உன் மனத்தில் எண்ணங்கள் வந்து உன்னைத் தூங்கமுடியாதபடி செய்வதுண்டா ?
11. அஜீரணம் காரணமாக அடிக்கடி தொல்லைப்படுவது உண்டா ?
12. நீ பலரைத் தீவிரமாக வெறுப்பதுண்டா ?

13. நீ பொதுவாக மற்றவர்களை நம்புவதுண்டா?

14. உனக்கு முன்கோபம் வருவதுண்டா?

15. உன்னுடைய தாய் பொதுவாக உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் இருக்கிறாளா?

16. நீ காலையில் எழும்பொழுது பொதுவாகச் சோர்வு உணர்ச்சி இருப்பதுண்டா?

17. நீ தூக்கத்தில் பேசுவதுண்டா?

18. நீ ஒருமுறை மகிழ்ச்சியாகவும், மறுமுறை வருத்தமாகவும் மாறிமாறி இருப்பதுண்டா?

19. உன்னுடைய கால் அல்லது கை எப்பொழுதாவது உணர் விழந்து பக்கவாதம் வந்ததுண்டா?

20. நீ அதிக வெட்க உணர்ச்சி காரணமாக இடர்ப்படுவதுண்டா?

21, பைத்தியம் பிடித்துவிடுமோ என்று நீ எப்பொழுதாவது பயந்ததுண்டா?

22. உனக்கு எப்பொழுதாவது அசாதாரணமான காட்சி தோன்றுவதுண்டா?

23. நள்ளிரவில் அடிக்கடி நீ பயந்ததுண்டா?

24. உனக்குத் தீங்கிழைக்க முயலுபவர்கள் எவரேனும் உண்டா?

25. உன்னுடைய சகோதர சகோதரிகளில் யாரிடமாவது உன் பெற்றோர் அதிக விருப்பு உள்ளவர்களாக இருக்கிறார்களா?

26. தற்கொலை செய்துகொள்ளவேண்டும் என்று தீவிர விருப்பம் உனக்குண்டா?

27. நீ அடிக்கடி பகல் கனவு காண்பதுண்டா?

28. உன்னுடைய குழந்தைப் பருவம் மகிழ்ச்சி உள்ளதாக இருந்ததா?

29. அந்தச் சமயத்தில் திடீரென்று ஏதாவது சொல்லிவிட்டு, பின்னால் அவ்வாறு சொல்லியதைப்பற்றி நீ வருந்துவதுண்டா?

30. உனக்குத் திடீரென்று மயக்கம் எப்பொழுதாவது வந்ததுண்டா?

31. உனக்கும் உன் தந்தைக்குமுள்ள உறவு எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதுண்டா?

32. உனக்கு மிக அதிகமாகத் தலைவலிகள் வருவதுண்டா?

33. வீட்டிலிருந்து ஓடிவிடவேண்டும் என்ற தீவிர ஆசை உனக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா ?
34. உனக்கு எப்போதாவது வலிப்பு ஏற்பட்டதுண்டா?
35. வலியை நீ அமைதியாகத் தாங்கிக்கொள்ள முடியுமா ?
36. நீ அதிக நேரம் தனிமையாக இருக்க விரும்புகிருயா ?
37. உனக்குக் கண்ணீர் விரைவில் வருவதுண்டா ?
38. பாம்பைக் கண்டவுடனேயே உனக்கு பயம் உண்டாவதுண்டா ?
39. பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு உனக்கு விருப்பம் உண்டா ?
40. யாராவது ஒருவர் உன்னை வசியப்படுத்தி உனது சித்தத்துக்கு மாருக நடக்கச் செய்கிருர் என்று நீ எப்பொழுதாவது நினைத்ததுண்டா ?
41. உன்னைப்பற்றி பிறர் குறை கூறும்பொழுது நீ மன வருத்தப்படாது ஏற்றுக்கொள்ளுவதுண்டா ?
42. புதியவர்களிடம் பழகி நட்பை வளர்ப்பதில் உனக்குக் கஷ்டம் உண்டா ?
43. ஏதாவது ஒன்றுக்குத் தீ வைக்கவேண்டும் என்ற தீவிர ஆசை உனக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா ?
44. உன்னுடைய குடும்பத்தில் யாருக்காவது வலிப்பு, பைத்தியம் அல்லது மன ஆற்றற்குறைவு உண்டா ?
45. இன்பமற்ற பொருள்களைப்பற்றி நீ பகல் கனவு காண்பதுண்டா ?
46. உன்னுடைய தற்கால வாழ்க்கைபற்றி நீ மகிழ்ச்சியாக இருக்கின்ருயா ?
47. நீ செய்துகொண்டிருக்கும் ஒன்றை மறந்துவிட்டு உன் மனம் எங்கெங்கோ சுற்றித் திரிவதுண்டா ?
48. உனக்குத் தூக்கம் வரும்பொழுது விழுந்துவிடுவது போன்ற உணர்வு ஏற்பட்டிருக்கின்றதா ?
49. கண்களில் அடிக்கடி வலி உண்டாவது உண்டா ?
50. நீ தூக்கத்தில் நடப்பது உண்டா ?
51. நெருப்புபற்றி உனக்கு அதிக பயம் உண்டா ?
52. மற்றவர்கள் உன்னுடைய மனத்திலுள்ள எண்ணங்களைப் ‘படிக்கிருர்’ என்று நினைத்து நீ தொல்லைப்பட்டது உண்டா?

53. பிறர் சொல்லுவதற்கு எதிராகப் பேசுகின்ற பழக்கம் உனக்கு உண்டா?

54. உன்னுடைய பெற்றோர்களின் திருமணம் இன்பமான முறையில் நடைபெற்றதா?

55. உன்னை விநோதமானவன் என்று பிறர் அடிக்கடி எண்ணு கிறார்கள் என்று நீ நினைப்பதுண்டா?

56. சாவுபற்றிய எண்ணங்கள் வந்து உனக்குத் தொல்லை தருவதுண்டா?

57. உன்னுடைய நண்பர்கள் உனக்கு எதிராக எப்பொழு தாவது திரும்பியதுண்டா?

58. உனக்குக் குருடு அல்லது பாதிக்குருடு, செவிடு அல்லது ஊமை ஏற்பட்டதுண்டா?

59. உன்னுடைய தோழர்களைவிட உனது உடல் தரம் குறை வானதா?

60. உன்னுடைய குடும்பத்தில் யாராவது தற்கொலை செய்து கொண்டதுண்டா?

61. மோசமான உடல்நலம் காரணமாக நீ தொல்லைப்படுவது உண்டா?

62. அடிக்கடி நீ அதிக உணர்ச்சியுறுவது உண்டா?

63. யாராவது ஒருவரைச் சந்திப்பதைத் தவிர்ப்பதற்காக நீ எப்பொழுதாவது தெருவைக் கடந்து அடுத்த பக்கம் செல்வதுண்டா?

64. இரத்தத்தைப் பார்த்தால் அதை உன்னால் தாங்கிக்கொள்ள முடியுமா?

65. பொதுவாக நீ நல்ல உற்சாகமான மன நிலையில் இருக் கிறாயா ?

66. மற்றவர்கள் உன்னைப்பற்றி அதிகமாகக் கேலி செய்கிறார் கள் என்று நீ நினைக்கிறாயா ?

67. வாந்தி வந்து உனக்கு எப்பொழுதாவது தொல்லை ஏற் பட்டதுண்டா ?

68. தன்னுடைய வாழ்க்கை நிலைபற்றி உனது தாய் அதிருப்தி யுற்று இருக்கிறாளா ?

69. காரணமில்லாமல் அடிக்கடி உன் காரியமெல்லாம் தவறாகப் போவது உண்டா ?

70. நீ முன்பிருந்ததுபோல் இப்பொழுது இல்லை என்கின்ற ஒரு விநோத உணர்ச்சி உனக்கு எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா ?

71. நீ இளமையாக இருந்தபொழுது மற்றக் குழந்தைகள் உன்னை விநோதமானவன் என்று கருதியது உண்டா ?

72. இரவில் கெட்ட கனவுகள் வந்து உனக்கு அடிக்கடி தொல்லை தருவது உண்டா ?

73. பொதுவாகவே நீ நல்ல உணர்வுடன் உறுதியாக இருக்கின்றாயா ?

74. சாதாரணமாக நீ நன்றாகத் தூங்கி வருகிறாயா ?

75. முகம், கழுத்து, தோள் முதலியவற்றைச் சுளிக்கின்ற பழக்கம் உனக்கு எப்பொழுதாவது இருந்ததா ?

76. ஒருவரும் கவனிப்பாரற்றுத் தன்னந்தனியாக இருப்பதான உணர்ச்சி உனக்கு அடிக்கடி ஏற்படுவது உண்டா?

77. உனக்கு மேலானவர்கள் முன்பாக நீ சாதாரணமாக இயல்பாக இருக்க இயலாது அடிக்கடி கஷ்டப்படுவதுண்டா ?

78. பிறரைப்பற்றி உனக்குச் சலிப்பு உண்டாவதுண்டா ?

79. நீ தன்னம்பிக்கை இல்லாது இருக்கின்றாயா ?

80. இரவு நேரத்தில் ஏதாவது ஒரு பொருளோ அல்லது ஒருவரோ உன்னைத்தொடர்ந்து வருவதுபோல் எண்ணம் வந்து அடிக்கடி உனக்குத் தொல்லை கொடுப்பதுண்டா ?

81. பொதுவாக நீ துரதிர்ஷ்டமானவன் என்று உன்னைப்பற்றி நீ நினைப்பதுண்டா ?

82. தலையில் சில சமயங்களில் குத்தும் வலி ஏற்படுவதுண்டா?

83. உன்னுடைய உடம்பின் எப்பாகத்திலாவது ஓர் உணர்ச்சி அடிக்கடி உண்டாவதுண்டா ?

84. ஏதாவது நோய் வரும் என்று நீ பயப்படுவதுண்டா ?

85. ஆற்றின்மேலுள்ள பாலத்தைக் கடக்கப் பயப்படுவதுண்டா ?

86. மின்னலைப் பார்த்து நீ பயப்படுவதுண்டா ?

87. நீ செய்கின்ற ஒன்றை முடித்துவிடுமுன் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யவேண்டும் என்று நீ நினைப்பதுண்டா ?

88. தாழ்வு உணர்ச்சி காரணமாக நீ தொல்லைப்படுவதுண்டா ?

89. திக்குமுக்காடும் உணர்ச்சி உனக்கு வருவதுண்டா ?

90. உனக்கு உடற் குறைகள் ஏதாவதுண்டா ?

91. உனக்குக் கோபம் வந்தால் அதைத் தடுத்து நிறுத்தாமல் அப்படியே 'வைத்து வாங்கு'வதுண்டா ?

92. நீ பார்த்துக்கொண்டிருக்கும்போது எல்லாம் அப்படியே மயங்கிப்போவதுண்டா ?

93. உனக்கு நல்ல பசி ஏற்படுவதுண்டா ?

94. நீ எப்பொழுதாவது உன் ஞாபக சக்தியை இழந்தது உண்டா ?

95. உனது வீட்டுச் சூழ்நிலை மகிழ்ச்சியாக இருக்கிறதா ?

96. உன்னுடைய குடும்பத்தினர் உன்னை எப்பொழுதும் நல்ல முறையில் நடத்துவது உண்டா ?

97. ஐந்து வயதிற்குப் பிறகு தூக்கத்தில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் இருந்தது உண்டா ?

98. கூட்டத்தில் நசுக்கப்பட்டுவிடலாம் என்ற பயம் வந்து உனக்கு அடிக்கடி தொல்லை தருவது உண்டா ?

99. மறு பாலர்பால் நீ அசட்டையாக இருக்கிறாய் என்று பிறர் உன்னைப் பொதுவாகக் கருதுவது உண்டா ?

100. மறுபாலாரிடம் உனக்குப் புளிப்பு உணர்ச்சி உண்டா ?

மேற்கண்ட ஆளுமைப் பட்டியலைக் கொடுத்ததன்பேரில் பின் வரும் விவரங்கள் தெரியவந்தன. 15 வயதுப் பிள்ளைகளுக்கும் மற்ற வயதுப் பிள்ளைகளுக்கும் சில முக்கிய வேற்றுமைகள் தெரியவந்தன. 15 வயதுப் பிள்ளைகளிடம் 'அதி உணர்வு' (hyper sensitivity), உண்மை நிலைபற்றிய உணர்வு (orientation towards reality), நரம்பு நோய்த் தன்மை (neuresthemic tendences) முதலியன காணப்பட்டன. ஆனால், மற்ற வயதுப் பிரிவினர்களிடம் அதி உணர்வுமட்டும் தான் முக்கியமானதாகக் காணப்பட்டது.

பூப்பு வந்த பிள்ளைகளுக்கும், பூப்பு வராத பிள்ளைகளுக்கும் இடையே சில வேற்றுமைகள் தெரியவந்தன. அதி உணர்வு, கவலை (anxiety), தூக்கத் தொல்லைகள் (sleep difficulties), உண்மைநிலை பற்றிய உணர்வு முதலியன பூப்புஎய்திய பிரிவினரிடம் முக்கியமாகக் காணப்பட்டன. ஆனால், அதி உணர்வு, உணர்ச்சி வயப்படும் தன்மை ஆகியவைமட்டுமே பூப்பு எய்தாத பிரிவினரிடம் முக்கியமாகக் காணப்பட்டன.

மேற்சொன்னதிலிருந்து நாம் சில முடிவுகளைச் செய்யலாம். 15 வயதுப் பிரிவினருக்கும், பூப்பு எய்திய பிரிவினருக்கும் உணர்ச்சிச் சமநிலை அதிகமில்லாத காரணத்தால் அவர்களிடம் அதி உணர்வு காணப்படுகின்றது. ஆனால், இந்த அதி உணர்வு மற்ற வயதுப் பிரிவினரிடமும், பூப்பு எய்தாத பிரிவினரிடமும் காணப்படவும் செய்கிறது. ஆகவே, இது குமரப் பருவத்துப் பையன்கள் எல்லோருக்குமே பொதுவான ஒரு தன்மை என்று கூறலாம்.

அதி உணர்வுத் தன்மை தவிர 15 வயதுப் பூப்பு எய்திய பிரிவுப் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் கவலை, உண்மைநிலைபற்றிய உணர்வு முக்கியத் தன்மைகளாகக் காணப்பட்டன. இந்த இரண்டு பிரிவினரைச் சார்ந்தவர்களுக்கு அதிகமான உணர்ச்சிச் சமநிலை இல்லாததால் இவ்விரண்டு தன்மைகளும்—அதாவது கவலை, உண்மைநிலைபற்றிய உணர்வு முதலியன—உணர்ச்சிச் சமநிலையின்மையின் தன்மை என்று கொள்ளலாம். ஆனால், 15 வயதுப் பிள்ளைகளுக்கும், பூப்பு எய்திய பிள்ளைகளுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. அதாவது 15 வயதுப் பிள்ளைகளுக்கு நரம்புநோய்த்தன்மை உள்ளது; ஆனால், பூப்பு எய்திய பிரிவினருக்குத் தூக்கத் தொல்லைகள் முக்கியமானவையாக உள்ளன.

இந்த ஆராய்ச்சியிலிருந்து உணர்ச்சிச் சமநிலை இல்லாத பையன்களிடம் அதி உணர்வு, கவலை, உண்மைநிலைபற்றிய உணர்வு, தூக்கத் தொல்லைகள், நரம்புநோய்த்தன்மை உள்ளன என்று தெரிய வருகின்றது.

### பள்ளியின் பங்கு

பிள்ளைகளின் உணர்ச்சி நல்ல முறையில் வளர்க்கப்படுவதற்குப் பள்ளிக்கூடம் மிக முக்கியமான ஒரு கருவியாகும். பள்ளிக்கூடத்திலுள்ள ஆசிரியர்களும், மற்றும் டாக்டர், உளநூல் வல்லுநர் போன்றவர்களும் இவ் வகையில் கவனம் செலுத்திப் பிள்ளைகளுக்கு உதவி செய்யவேண்டும்.

எதிர்மறையாகச் சொன்னால் முதலில் பள்ளிக்கூடம் பிள்ளைகளிடம் அழிவு உணர்ச்சிகள் தோன்றி வளராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். ஏற்கெனவே அழிவு உணர்ச்சிகள் சில பிள்ளைகளிடம் வளர்ந்துவிட்டிருந்தால் அவற்றை மாற்றுவதற்கு உதவி செய்யவேண்டும். பள்ளிக்கூடச் சூழ்நிலையில் சில பிள்ளைகளிடம் அதிகபட்சம் அச்ச உணர்ச்சி உண்டாகிவிடுவது உண்டு. பள்ளிக்கூட வேலைகள் காரணமாகவும், ஆசிரியர்களின் கோபம் காரணமாகவும், பரீட்சைகள் காரணமாகவும் சில பிள்ளைகளிடம் அதிகமான அச்சம் உண்டாவதுண்டு. சில ஆசிரியர்கள் வகுப்புகளில் கடுமை

யாகக் கேலிசெய்தால் அதனால் மாணவர்களுடைய விரோதம் மிகவும் அதிகமாகிவிடுவதுண்டு. இவ்வாறு பிள்ளைகளின் உள்ளத்தில் ஏற்படும் அச்ச உணர்ச்சியைப் போக்குவதற்கு ஆவன செய்யவேண்டியது அவசியம்.

பள்ளிக்கூட வாழ்க்கை என்றால் சில விதிமுறைகளும் கட்டுத்திட்டங்களும் பொதுவாக இருக்கும்; இது இயற்கையே. ஆனால், வெறும் விதிமுறைகளுக்கு பயந்து மாணவர்கள் கட்டுப்பாடாக இருப்பது நன்றன்று. விதிமுறையை மீறினால் தண்டனை கொடுக்கப்படுவதிலும் தவறில்லை. ஆனால், தண்டனைக்கு பயந்து மாணவர்கள் கட்டுப்பாடாக இருப்பார்கள் என்றால், அது நல்ல கட்டுப்பாடாகாது. வகுப்புகளிலும் பொதுவாகப் பள்ளிக்கூடத்திலும் ஆசிரியர்கள்பால் அச்சம் காரணமாகவே கட்டுப்பாடு நிலவுமென்றால் கொஞ்ச காலம் கழித்து மாணவர்களது உள்ளத்தில் அடக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிகளெல்லாம் ஒன்று திரண்டு ஏதாவது ஒழுங்கீனமான செயலில் வந்து முடியலாம். ஆகவே, அச்சுறுத்திமட்டும் கட்டுப்பாட்டை நிலவச் செய்யாமல் பிள்ளைகளுக்கு விதிமுறைகளின் முக்கியத்துவம், அதன் தேவை முதலியவற்றையெல்லாம் விளக்கி மாணவர்களுக்குச் சொன்னால் அவர்கள் விதிமுறைகள் நியாயமானவை என்று நினைப்பதனால் தாமாகவே கட்டுப்பாடாக நடந்துகொள்ளுவார்கள். இல்லாவிட்டால் சில சமயங்களில் வேலைநிறுத்தங்களும், ஆரவாரங்களும் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளிலும் நடந்து விடுவதைப் பார்க்கிறோம்.

மாணவர் ஒவ்வொருவரும் தங்களது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் சமநிலையில் வைத்துக்கொள்ளுவதற்கும் பயிற்சி தர வேண்டியது அவசியம். சில சமயங்களில் சினம் பொங்கி வரலாம். ஆனால், அதனை அடக்கிக்கொண்டு கட்டுப்பாடாக நடந்துகொள்ளுவதற்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். இம்மாதிரி சமயங்களில் வார்த்தைகளைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருக்கவேண்டும். அடிதடி, கைகலப்புப்போன்ற நிலைகள் வராமல் இருக்கவேண்டும். இன்னும் சில சந்தர்ப்பங்களில் அச்சம் உண்டாகும் என்றால் அதனையும் சமாளித்துக்கொள்ளத் தெரியவேண்டும் பொதுவாக, திடீரென்று கஷ்டங்கள் வருகின்றபொழுது அவற்றைச் சமாளித்துத் தீர்வு காணுவதற்கு உரிய திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும். இதற்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டிப் பயிற்சி கொடுக்கவேண்டும்.

மாணவர்கள் தங்களது உணர்ச்சிகளை ஆக்கமுறையில் வெளியிட்டு, அதன்மூலம் சமநிலையில் உள்ள ஆளுமை பெறுவதற்குப்

பள்ளிக்கூடம் பல வகைகளில் உதவலாம். உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி குமைந்துவந்தபோதிலும், மாலை நேரத்தில் பிள்ளைக ளெல்லோரும் சேர்ந்து விளையாட்டுகளில் ஈடுபடுவார்களென்றால் உணர்ச்சிகள் வெளியீடாகி மனத்தில் தெளிவுநிலை உண்டாகும். விளையாட்டு மைதானத்தில் கால்பந்தை உதைத்து வீசுவதற்கு வாய்ப்பு இல்லாமல்போனால் அந்தப் பையன் வகுப்பிலுள்ள நாற் காலியைத் தள்ளி உதைக்கலாம். நாற்காலியை உதைப்பதைவிடப் பந்தை உதைப்பது எவ்வளவோ நல்லது. விளையாட்டுப்போலவே பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் சேர்ந்து கலைநிகழ்ச்சிகளில் ஈடு படுவது, ரேடியோ கேட்பது, சமூக சேவையில் ஈடுபடுவது, உல்லாசப் பிரயாணங்கள் செல்லுவது, சிரமதானம் செய்வது, மற்றும் நல்ல முறையான களியாட்டங்களில் ஈடுபடுவது முதலியனமூலமாக வேண் டாத உணர்ச்சிகள் உள்ளத்தில் குமைந்திருப்பதைத் தடுக்கலாம்.

குமரப் பருவத்துப் பிள்ளைகளிடம் பால் உணர்வு மிகுந்து நிற் பதை ஏற்கெனவே பார்த்துள்ளோம். கூட்டுக் கல்வி நல்லதா, தீயதா என்பதுபற்றிக் கல்வி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவு கின்றது. ஏற்கெனவே கோவை நகரத்திலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் 80 குமரப் பருவத்துப் பையன்களைப்பற்றி ஓர் ஆராய்ச்சி யாளர் ஆராய்ச்சி செய்துள்ளதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். அந்தப் பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகளாக ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் சேர்ந்து கற்று வந்தார்கள். பின்னர்த் தனியாக ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடக்கப்பெற்று, கூட்டுக் கல்வி நின்றுபோயிற்று. கூட்டுக்கல்வி நின்றுபோய் மூன்று ஆண்டுகளில் ஆண்பிள்ளைகளுடைய கல்வித்தரம் குறைந்துபோவதாகக் காணப் பட்டது. ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் சேர்ந்து கற்றுவந்த பொழுது இருபாலாரிடையேயும் ஒரு நல்ல போட்டி இருந்தது. பெண்பிள்ளைகளின் நல்ல மதிப்பைப் பெறுவதற்காகப் பையன்கள் பாடங்களைச் சிறப்பாகக் கற்றுவந்ததுமட்டுமல்லாமல் விளையாட்டு களிலும் மற்றும் பல செயல்களிலும் அதிகமாகப் பங்கு ஏற்றுக்கொண் டார்கள். பெண்பிள்ளைகள் தனியாகச் சென்றுவிட்டபிறகு இத் தகைய ஊக்கத்திற்கு ஒரு தூண்டல் இல்லாமற்போய்விட்டது. அது மட்டுமல்லாமல் இளம் பையன்களுடைய கவனமெல்லாம் தங்கள் பள்ளிக்கூடத்தைவிட்டுப் பெண்கள் பள்ளிக்கூடத்துப்பக்கம்நோக்கிப் போய்விடும். தங்களுக்குப் பிடித்தமான 'கலர்கள்' பள்ளியிலிருந்து வெளியே வரும்பொழுது பார்ப்பதற்காக நெடுநேரம் தெரு மூலை களில் காத்துக்கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் பள்ளிக் கூடத்திலிருந்து வீடுவரைக்கும் பெண்பிள்ளைகளுக்குப் பாதுகாப் பாகப் பின் தொடர்ந்தும் செல்லுவார்கள். கூட்டுக் கல்வி இருக்கு மென்றால் இத்தகைய நிலைகள் வருவதற்கு அவசியம் இருக்காது.

பால் உணர்வு மிகுந்து விளங்குகின்ற குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்குப் பால் சம்பந்தமாகத் தக்க கல்வி அளிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம். பால் சம்பந்தமான செயல்கள் தெரியவேண்டும் என்று ஒவ்வோர் இளைஞனும், இளம் பெண்ணும் ஆர்வமாக இருப்பது மிகவும் இயற்கை. அவர்களுக்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தக்க முறையில் உரிய செயல்களைச் சொல்லி அவர்களது ஆர்வத்தை நிறைவு செய்யாவிட்டால் அவர்கள் ஆபாசமான வெளியீடுகளைத் தேடிச் செல்லுவதில் ஆச்சரியமில்லை. தவறான செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதால் ஆபத்துதான் உண்டாகும். பால் சம்பந்தமாக ஓர் அருவருப்பு உணர்ச்சி இளைஞர்களிடம் உண்டாவதும் நன்றன்று. இத்தகைய அருவருப்பு உணர்ச்சி பின்னால் அவர்களது மன நிலைகளைப் பாதிக்கும். அவர்களது இல்வாழ்க்கை நன்றாக அமையாது போவதற்கும் அது காரணமாகிவிடலாம். ஆகவே நல்ல முறையில் குமரப் பருவத்தின்போது பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் பால் சம்பந்தமாகப் பிள்ளைகளுக்கு அறிவூட்டவேண்டியது இன்றியமையாததாகும்.

# 4. அறிவின் வளர்ச்சி

குமரப் பருவத்தில் பிள்ளைகளின் அறிவு எவ்வாறு வளர்கின்றது என்று பார்க்கலாம். குமரப் பருவம் குழந்தைப் பருவத்தை அடுத்து வருவது. ஆராய்ச்சியாளர்கள் குழந்தைப் பருவம், குமரப் பருவம் என்று பிரித்துச் சொன்னபோதிலும் இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து வருவதாகும். எப்பொழுது குழந்தைப் பருவம் முடிகின்றது; எப்பொழுது குமரப் பருவம் தொடங்குகின்றது என்று திட்ட வட்டமாகக் கூறமுடியாது. ஆகவே, குமரப் பருவத்து மனவளர்ச்சி குழந்தைப் பருவத்து மனவளர்ச்சியோடு இணைந்து தொடர்ந்து வருவது ஒன்றாகும். இது ஒரு முக்கியமான உண்மை.

இன்னொரு முக்கியமான உண்மை: அறிவு வளர்ச்சி என்பது தனித்த ஒன்றன்று. அது உடல் வளர்ச்சி, உணர்ச்சியின் வளர்ச்சி, சமூக நடத்தை முதலியனவற்றோடு நெருங்கிய தொடர்புடையது. அறிவு வளர்ச்சி மொத்த வளர்ச்சியாகிய முழுமையின் ஒரு கூறு. எப்பொழுதும் குழந்தையின் வளர்ச்சி முழுமையாகவே கருதப்பட வேண்டும்.

### நுண்ணறிவு

அறிவு வளர்ச்சியின் ஒரு முக்கியக் கூறு நுண்ணறிவு அல்லது அறிதிறன் (Intelligence) ஆகும். நுண்ணறிவுக்குப் பலர் பலவகையாக இலக்கணம் கூறியுள்ளனர். பீனே என்னும் புகழ்பெற்ற உளவியல் வல்லுநர் நுண்ணறிவுக்கு 'அறிதல், ஆக்கத்திறன், தொடர்ந்து முயலுதல், நுணுக்கமாக ஆராய்தல்' என்று இலக்கணம் கூறி இருக்கிறார். டெர்மன் என்னும் வல்லுநர், 'கருத்தியல் சிந்தனை செய்யும் திறமை' என்று சொல்லுகிறார். இன்னொருவர், 'ஒருவன் தனது சூழ்நிலையுடன் இணங்கிப்போகக் கற்றுக்கொள்ளும் திறமை' என்று சொல்லுகிறார்.

பேராசிரியர் ஸ்பியர்மன் என்னும் ஆங்கில உளவியல் வல்லுநர் நுண்ணறிவுபற்றி நிரம்ப ஆராய்ச்சி செய்து ஒரு முக்கியக்

கொள்கையை வெளியிட்டார். அவரது கொள்கையின்படி. நுண்ணறிவில் இரண்டு கூறுகள் உண்டு. ஒன்று, பொதுக்கூறு ; இன்ஞென்று சிறப்புக் கூறு. இவ்வாறு நுண்ணறிவை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கூறும் கொள்கைக்கு 'இரு காரணிக் கொள்கை' (Two Factor Theory) என்று பெயர்.

தார்ன்டைக் என்னும் உளவியல் வல்லுநர் நுண்ணறிவு என்பது மூன்று வகைப்படும் என்று கூறியிருக்கிருர். அவை கருத்தியல் நுண்ணறிவு, பொறி நுண்ணறிவு, சமூக நுண்ணறிவு என்பன. சொற்கள், கருத்துகள் முதலியவற்றின் சின்னங்களைப் புரிந்து கொள்ளவும் அவற்றைப் பயன்படுத்தவும் ஒருவனிடத்திலுள்ள ஆற்றலைக் கருத்தியல் நுண்ணறிவு குறிக்கும். மண்வெட்டி, சுத்தி போன்ற கருவிகளையும், கை போன்ற உடல் உறுப்புகளையும் நுட்பமாகப் பயன்படுத்துகின்ற ஆற்றலைப் பொறி நுண்ணறிவு குறிக்கும். பிற மனிதர்களோடு நல்லுறவுகொண்டு சமூகச் செயல்களை அறிவுடன் செய்யும் ஆற்றலைச் சமூக நுண்ணறிவு குறிக்கும். கோடார்டு என்னும் இன்ஞெரு வல்லுநர் இறந்தகால அனுபவங்களைத் தொகுத்து இன்றைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், நாளைய பிரச்சினைகளை எதிர்நோக்குதற்கும் உதவுவது நுண்ணறிவு என்று சொல்லியுள்ளார்.

ஆல்பிரெட் பீனே என்னும் ஃபிரெஞ்சுப் பேராசிரியர்தாம் முதன் முதலாக நுண்ணறிவை எவ்வாறு அளப்பது என்று கண்டுபிடித்தார். பாரீஸ் நகரத்திலுள்ள பள்ளி நிர்வாகிகள் நுண்ணறிவு மிகுதியுள்ள பிள்ளைகளினின்றும், நுண்ணறிவு குறைவாக உள்ள பிள்ளைகளைப் பிரிப்பதற்கு ஒரு வழிவகை கண்டுபிடிக்கவேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர் பல வயது நிலையிலுள்ள ஏராளமான பிள்ளைகளுக்கு நுண்ணறிவுச் சோதனைகளைக் கொடுத்து ஆராய்ச்சி செய்தார். வயது நிலைகளுக்கேற்பச் சோதனைகளின் கடினத்தன்மை தரப்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, நான்கு வயதுப் பிள்ளைகளுக்குரிய சோதனையில் அந்த வயதுப் பிள்ளைகளில் 60-லிருந்து 90 வரை தேர்ச்சி மதிப்பெண் பெற்ருர்கள். இச் சோதனைகள் மறுபடியும் ஏராளமான பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டன. 1905ஆம் ஆண்டில் முதன்முதலாகச் சோதனைகள் வெளிவந்தன. திருத்தியமைக்கப்பட்ட சோதனைகள் 1911ஆம் ஆண்டில் வெளிவந்தன.

மன வயது

ஐந்து வயதுக் குழந்தை ஐந்து வயதிற்குரிய சோதனைகளைச் செய்யும் திறமை பெற்றிருக்கும். இது சாதாரணக்குழந்தை. ஆனல்,

ஒரு நான்கு வயதுக் குழந்தை ஐந்து வயதிற்குரிய சோதனையைச் செய்துவிடுகின்றதென்றால் அக் குழந்தை சாதாரணக் குழந்தையை விடத் திறமையுள்ள குழந்தையாகும். ஆறு வயதுக் குழந்தை ஐந்து வயதிற்குரிய சோதனையைச் செய்ய முடியவில்லை என்றால், அவன் பின்தங்கிய குழந்தை ஆவான். இதிலிருந்து ஒரு புதிய கருத்து உண்டாயிற்று. அதுதான் 'மன வயது' என்னும் கருத்து. ஒரு குழந்தை 5 வயது உடையது என்றால், 5 வயது என்பது அக் குழந்தையின் பிறந்து வளர்ந்துள்ள காலத்தைக் குறிக்கின்றது. இதைக் 'கால வயது' (Chronological Age) என்று சொல்லலாம். அப் பிள்ளை எந்த வயதுக்குரிய நுண்ணறிவுச் சோதனைகளைச் செய்யமுடிகிறதோ அந்த வயது மன வளர்ச்சியைக் குறிக்கும். அதனை 'மன வயது' என்று சொல்லலாம். 5 வயதுப் பிள்ளை 4 வயதிற்குரிய சோதனையைத்தான் செய்யமுடிகின்றது என்றால் அதன் மன வயது நான்கு ஆகும். அக் குழந்தையின் கால வயது ஐந்து. ஐந்து வயதுப் பிள்ளை ஆறு வயதிற்குரிய நுண்ணறிவுச் சோதனைகளைச் செய்யமுடிகின்றது என்றால் அதன் கால வயது ஐந்து; ஆனால், மன வயது ஆறு. இவ்வாறு மனவயது என்னும் கருத்தைக் கண்டுபிடித்து அதனைக் கணிப்பதற்கு ஒரு சோதனை முறையையும் கண்டுபிடித்தது உளவியல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

நுண்ணறிவு ஈவு

மன வயதிலிருந்து ஒரு பிள்ளையின் நுண்ணறிவைக் காண்பதற்கு ஒரு முறை வகுக்கப்பட்டது. 4, 5, 6 வயதுடைய மூன்று இளம் பிள்ளைகளுக்கு ஒரே மன வயது 5 என்று வைத்துக்கொள்வோம். இம் மூன்று பிள்ளைகளின் நுண்ணறிவை எவ்வாறு பிரித்துக் காட்டிப் பேசுவது ?. இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டது. மன வயதைக் கால வயதால் வகுத்து அதனை 100ஆல் பெருக்கினால் வருகின்ற எண் 'நுண்ணறிவு ஈவு' (intelligence quotient) ஆகும். அதாவது :

$$\frac{\text{மன வயது}}{\text{கால வயது}} \times 100 = \text{நுண்ணறிவு ஈவு}$$

நுண்ணறிவு கணக்கிடுவதில் கால வயது அதிகபட்சமாக 16-க்கு மேல் போடுவதில்லை.

பிள்ளைகளின் மன வளர்ச்சி அல்லது அறிவு வளர்ச்சிபற்றிப் பின்னர் ஏராளமான ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றது. பீனே முதன்முதலாக உண்டாக்கிய நுண்ணறிவுச் சோதனையை மறுபடியும் பல நிபுணர்கள் மாற்றியும் திருத்தியும் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாராய்ச்சியிலிருந்து பிள்ளைகளின் அறிவானது வயதிற்கேற்ப எவ்வாறு வளருகின்றது என்பது தெரியவருகின்றது.

இந்த வளர்ச்சிக் கோடுகள் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒன்றுபோல இருப்பதில்லை. திறமை வாய்ந்த பிள்ளையின் அறிவு வேகமாக வளரும், திறமை குறைந்த பிள்ளையின் அறிவு மெதுவாக வளரும் என்று சொல்லுவதற்கில்லை. வேகமாக அறிவு வளர்வதாலேயே ஒரு பிள்ளையின் நுண்ணறிவு அதிகம் என்று சொல்லுவதற்கில்லை. திறமை வாய்ந்த பிள்ளையின் அறிவு வளர்ச்சி ஆரம்பத்தில் மெதுவாக இருக்கலாம். திறமை குறைந்த பிள்ளையின் அறிவு வளர்ச்சி ஆரம்பத்தில் வேகமாகவும் இருக்கலாம். ஒவ்வொரு வயது நிலையிலுள்ள பல பிள்ளைகளின் வளர்ச்சி வேகம் வெவ்வேறு வகையாக இருக்கும். இத்தகைய தனியாள் வேற்றுமைகள் இருந்த போதிலுங்கூடச் சராசரிப் பிள்ளைகளின் வளர்ச்சியைவிடத் திறமை வாய்ந்த பிள்ளைகளின் வளர்ச்சி, வயது ஆக ஆக வேகமாகின்றது என்று சொல்லலாம். அதுபோலவே, சராசரிப் பிள்ளைகளின் வளர்ச்சியைவிடத் திறமை குறைந்த பிள்ளைகளின் வளர்ச்சி, வயது ஆக ஆக வேகம் குறைகின்றது என்று சொல்லலாம். இந்த உண்மையைக் கீழ்க்கண்ட படத்தில் பார்க்கலாம்.




(1) திறமை வாய்ந்த
(2) சராசரி
(3) திறமை குறைந்த

குழந்தைகளின் மன வளர்ச்சி.

படம் 19

## நுண்ணறிவின் நிலையான தன்மை

சிறிது முன்னர் நுண்ணறிவு ஈவு கணக்கிடுவதில் மன வயது அதிகபட்சம் 16-க்குமேல் போடுவதில்லை என்று பார்த்தோம். இதில் ஒரு முக்கிய உண்மை இருக்கின்றது. பிள்ளைகளின் வளர்ச்சிக் கோடுகள்பற்றி விரிவாக உளவியல் வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். இதுபற்றிக் கருத்து வேற்றுமை எவ்வளவோ இருந்த போதிலும், எல்லோரும் ஒன்றை ஒத்துக்கொள்கின்றனர். அதாவது,

16 வயதிற்குப் பிறகு மன வளர்ச்சிக் கோடுகளில் மாறுதல் ஏற்படுவதில்லை என்பது. அதாவது, நுண்ணறிவு ஈவு ஒரே மாதிரியாக இருக்கும். அது மாறுவதில்லை. எடுத்துக்காட்டாகக் கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் 252 பிள்ளைகளுக்கு இரண்டு வயதிலிருந்து பதினெட்டு வயதுவரைக்கும் மன வளர்ச்சிச் சோதனைகள் கொடுக்கப்பட்டன. இவ்வாறு கொடுக்கப்பட்ட சோதனைகளிலிருந்து கிடைத்த சோதனை மதிப்பெண்களையெல்லாம் சேர்த்து ஆராய்ச்சி செய்து கிடைத்த முடிவுகளைக் கீழ்க்காணும் வரைபடத்தில் காணலாம்.




ஒரே தனிப்பிள்ளைகளை திரும்பத் திரும்ப சோதனை செய்வதன் மூலம் நுண்ணறிவு ஈவு மாறுத்தன்மையைக் காணல்.

படம் 20

இப் படத்தைப் பார்க்கும்பொழுது ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. பிள்ளைகளின் ஆரம்ப ஆண்டுகளில் வேறுபாடுகள் அதிகமாக உள்ளன. ஆனால், 12, 13 வயதிற்குப் பிறகு அத்தனை வேறுபாடுகள் இல்லை. வரைபடத்தில் நான்கு பிள்ளைகள்பற்றிய வளர்ச்சிக் கோடுகளைப் பார்க்கலாம். இந்த ஆராய்ச்சியிலிருந்து இன்னொன்றும் தெளிவாயிற்று. அதாவது அறிவு வளர்ச்சிக்கும், சூழ்நிலை மாற்றத்திற்கும் ஒரு முக்கியக் காரணகாரியத் தொடர்பு இருக்கின்றது என்பது. பல பிள்ளைகளின் மன வளர்ச்சி நின்றுபோனதற்குக் காரணம் தக்க சூழ்நிலையில் தூண்டுதல் இல்லாமை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குமரப் பருவத்தின்போது பிள்ளைகளின் தன்மைக்கு ஏற்ப மன வளர்ச்சியில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதனைப் படம் 21-ல் பார்க்கலாம்.

தனிப்பிள்ளையைப் பொறுத்தவரையில் வளர்ச்சியில் வேறுபாடுகள் ஏற்பட்டபொழுதுங்கூடக் குமரப் பருவத்தில் உள்ள பிள்ளைகளுக்கு




தனிப்பிள்ளைகளின் மனவளர்ச்சி வளைவுகள் பிரிந்து செல்லுதல்.

படம் 21

மன வளர்ச்சியில் அதிக மாறுதல் இருப்பதில்லை. நுண்ணறிவு ஈவு பெரும்பாலும் மாறுதல் இல்லாது நிலையாக இருக்கின்றதை ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். இவ்வாறு நுண்ணறிவு ஈவு நிலையாக இருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. இந்தப் பருவத்தில் பிள்ளைகளின் சூழ்நிலை பெரும்பாலும் மாருத ஒரே நிலையில் இருக்கும். ஆனால், முன்னைய பருவத்தில் சூழ்நிலை இவ்வளவு தூரம் நிலையாக இருப்பதில்லை. மேலும், குமரப் பருவத்தில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் சோதனைகள் நன்கு ஆக்கப்பட்டிருக்கும். பாடங்களில் கொடுக்கப்படும் சோதனைகள் பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக இருக்கும்.

நுண்ணறிவுச் சோதனைகள் இரண்டு வகைப்பட்டன. ஒன்று சொற்சோதனை (verbel test); மற்ருென்று, சொல்லிலாச் சோதனை (non-verbel test). சொல்லிலாச் சோதனைகளில் படங்கள் அல்லது பொருள்கள்மட்டுமே பயன்படுத்தப்படும். சொற் சோதனைகளில் பிள்ளைகள் படித்தும் கேட்டும் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் சோதனைகள் பெரும்பாலும் சொற் சோதனைகளாகும்.

சோதனைகளில் தனியாள் சோதனை, குழுச் சோதனை என்று இருவகை உண்டு. தனியாள் சோதனை என்றால் ஒரே சமயத்தில் ஒரு பிள்ளைக்குத்தான் சோதனை கொடுக்க முடியும். குழுச் சோதனையில் ஒரே சமயத்தில் பல பிள்ளைகளுக்குச் சோதனை கொடுக்கலாம். பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்ற தனியாள் சோதனை பீனே உண்டுபண்ணிய சோதனையாகும். அதனை டெர்மன், மெரில் திருத்தியமைத்துள்ளார்கள். இந்தத் திருத்திய சோதனை பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் சோதனைகளின் மூலமாகக் குமரப் பருவத்துப் பிள்ளைகளின் நுண்ணறிவை நம்பகமான முறையில் நிர்ணயிக்க முடியும். இந்தச் சோதனையில் உள்ள கேள்விகளுக்குச் சில உதாரணங்கள் :

1. விறகு, நிலக்கரி—இரண்டிற்குமுள்ள ஒற்றுமை என்ன? இதுபோல ஆப்பிள்—பீச்சு, கப்பல்—மோட்டார், இரும்பு—வெள்ளி ஆகிய இவற்றுக்குள்ள ஒற்றுமை என்ன ?

2. ‘இளம் வயதுள்ள ஒரு மனிதன் அவனுடைய அறையில் கைகளும் கால்களும் கட்டப்பட்டுக் கிடந்ததைக் கண்டார்கள். அறை பூட்டப்பட்டிருந்தது. அவன் தானே அறையைப் பூட்டி இருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.’ இதில் நீ என்ன தவறு காண்கிறாய்.

3. கீழ்க்கண்ட சொற்களை மாற்றி அமைத்து வாக்கியம் உண்டாக்கு :

For the Started an we country early at hour

4. Laziness, idleness — இவ்விரண்டு சொற்களுக்குள்ள பொருள் வேறுபாடு என்ன? இதேபோல் poverty—misery; character—reputation—இவற்றுக்குள்ள பொருள் வேறுபாடு என்ன ?

குழுவகைச் சோதனைகள் பலவுள்ளன. அவை பெரும்பாலும் பீனே சோதனைகளைப் போன்றவையே. ஆனால், கேள்விகள் பெரும்பாலும் எழுதிக்கொடுக்கப்படும். குழுச் சோதனையில் பயன்படுத்தப்படும் கேள்விகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு: கீழே சில சொல் வரிசைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வரிசையிலுள்ள நான்கு சொற்கள் கூறுகின்ற பொருள்களிடையே ஒற்றுமை உண்டு. இன்னொன்று தனித்து நிற்பது. இவ்வாறு தனித்து நிற்கும் ஐந்தாவது சொல்லின் கீழ் கோடிடுக.

1. Snake, bird, elephant, chair, whale.
2. Taffeta, vellum, calico, muslin, serge.
3. Preface, illustrations, title, volume, cabinet.
4. Vertical, transverse, sequential, horizontal, perpendicular.
5. Every, about, over, untill, between.

மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பயன்படுத்தப்படுகின்ற ஆங்கிலச் சோதனையி லிருந்து எடுக்கப்பட்டவை ஆகும். மேல்நாட்டு நுண்ணறிவுச் சோதனைகள் மேல்நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டவை. இந்திய நாட்டுச் சூழ்நிலைக்கேற்ப நுண்ணறிவுச் சோதனைகளை உரு வாக்குவதற்குச் சில முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. 1922ஆம் ஆண்டில் டாக்டர் ரைஸ் என்பவர் ஹிந்துஸ்தானி பீனே செயல் சோதனை ஒன்றைத் தயார் செய்தார். அது பஞ்சாபிலுள்ள குழந்தை களுக்காகச் செய்யப்பட்டது. பின்னர் 1939ஆம் ஆண்டில் டாக்டர் காமத், பீனே சோதனைகளை மராத்தி, கன்னட மொழி பேசும் பிள்ளை , களுக்கு மாற்றியமைத்தார். பின்னர் வேறு சில ஆராய்ச்சியாளர் களும் நுண்ணறிவுச் சோதனைகள் செய்திருக்கின்றனர்கள்.

டாக்டர் C. M. பாட்டியா என்பவர் வெளியிட்டுள்ள நுண்ணறி வுச் செயல் சோதனை குறுப்பிடத்தக்கது. இந்திய சமூகத்திலுள்ள பிள்ளைகளில் பெரும்பான்மையினர் படிக்காதவர்கள்; சிறுபான்மையர் படித்தவர்கள். பொதுவாகப் படிக்காத பிள்ளைகள் கிராமங்களிலும், படித்த பிள்ளைகள் நகரங்களிலும் இருப்பதைக் காண்கின்றோம். இது முற்றிலும் உண்மையன்று. டாக்டர் பாட்டியா ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது 1942, ஆராய்ச்சி முற்றுபெற்றுத் தரப்படுத்திச் சோதனை வெளிட்டது 1953. அதற்குப் பிறகு படிப்பு கிராமப்புறங் களில் அதிகமாகப் பரவியிருக்கின்றது. இருந்தபோதிலும் இப் பொழுதும் நகரத்திலுள்ள பிள்ளைகளில் பெரும்பான்மையினர் படித்த வர்களாக இருப்பதையும், கிராமங்களில் பிள்ளைகள் படிக்காதவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். ஆகவே, படிக்காத பிள்ளைகளுக்கும் படித்த பிள்ளைகளுக்கும் ஒருங்கே பயன்படும்படியாக டாக்டர் பாட்டியா செயல் சோதனை ஒன்றை ஆக்கியிருக்கின்றார். சொல் சோதனை படித்த பிள்ளைகளுக்குமட்டுமே செய்யக்கூடியது. இச் சோதனை 11 வயதிலிருந்து 16 வயதுவரையுள்ள குமரப் பருவத்து ஆண் பிள்ளைகளுக்குப் பயன்படும். இச் சோதனையைத் தரப்படுத்து வதற்காக மொத்தம் 1,154 ஆண்பிள்ளைகளுக்கு இச் சோதனை கொடுக் கப்பட்டது. இவர்களில் 642 பேர்கள் படித்தவர்கள் ; 512 பேர்கள் படிக்காதவர்கள். பெண்பிள்ளைகளை இவ்வாராய்ச்சிக்கு உட்படுத்த வில்லை.

டாக்டர் பாட்டியாவின் சோதனையில், 'கட்டைக் கோலம்' (Block design) உண்டாக்குதல், வடிவம் வரைதல், படம் உண்டாக்கு தல் முதலிய செயல் அடங்கிய சோதனைகள் தரப்பட்டுள்ளன. படம் உண்டாக்கும் சோதனையில் இந்தியக் காட்சிகள் பயன்படுத்தப் பட்டன. பாட்டியாவின் சோதனைகள் 642 படித்த பிள்ளைகளுக்கும், 542 படிக்காத பிள்ளைகளுக்கும் கொடுக்கப்பட்டதாகப் பார்த்தோம்.

படித்த பிள்ளைகளின் பெற்றோர்களின் தொழில்களுக்கேற்பச் சராசரி நுண்ணறிவு கணக்கிடப்பட்டதன் விவரத்தைக் கீழேயுள்ள அட்டவணையில் காணலாம்.

பெற்றோர்களின் தொழிலும் நுண்ணறிவு ஈவும் (படித்த பிள்ளைகள்)

| பெற்றோர் தொழில் | பிள்ளைகளின் எண்ணிக்கை | சராசரி நுண்ணறிவு ஈவு |
|---|---|---|
| உயர்வான தொழில்கள் (வழக்கறிஞர், டாக்டர்கள், இஞ்ஜினியர்கள், ஆசிரியர்கள், உயர்ந்த அரசாங்க அதிகாரிகள், மாத வருமானம் ரூ. 200-க்கு மேல்). | 135 | 106·52 |
| நடுத்தரத் தொழில்கள் (குமாஸ்தா, ரயில்வே ஊழியர்கள், மெக்கானிக்குகள், பொது அலுவலக ஊழியர்கள், மாத வருமானம் ரூ. 100-லிருந்து 200 வரை). | 227 | 100·37 |
| கீழ்நிலைத் தொழில்கள் (சாதாரணத் தொழில்கள் வேலையாட்கள் முதலியவர்கள், மாத வருமானம் ரூ. 100-க்கும் கீழே). | 47 | 93·49 |
| வாணிகம் ... ... ... | 83 | 96·88 |
| விவசாயம் (சொந்த நிலம் உடையவர்கள்). | 92 | 91·29 |
| தொழில் குறிப்பிடாதது (அனாதைகள், வேலையில்லாதவர்கள் உட்பட). | 58 | ... |
| மொத்தம் ... | 642 | 99·37 |

இவ்வட்டவணையிலிருந்து உயர்வான தொழில் செய்பவர்களது பிள்ளைகள் அதிக நுண்ணறிவு உடையவர்களாக உள்ளார்கள். நடுத்தரத் தொழில் செய்பவர்களின் பிள்ளைகள் கீழ்நிலைத் தொழில் செய்பவர்களைவிட நுண்ணறிவு அதிகம் உடையவர்களாக உள்ளார்கள். வாணிகம், விவசாயம், கீழ்நிலைத் தொழில் செய்பவர்களது பிள்ளைகளிடையே அதிக வேற்றுமையில்லை. இத்தகைய நிலையே பிற நாடுகளிலுள்ள பிள்ளைகளிடமும் நிலவுவதாக ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகின்றது.

படிக்காத பிள்ளைகள் 512 பேர்களுடைய பெற்றோர்களின் தொழில்களுக்கும் பிள்ளைகளின் நுண்ணறிவு ஈவுக்குமுள்ள தொடர்பைக் கீழே கொடுத்துள்ள அட்டவணையில் காணலாம்.

பெற்றோரின் தொழிலும் நுண்ணறி ஈவும் (படிக்காத பிள்ளைகள்)

| பெற்றோர்களின் தொழில் | பிள்ளைகளின் எண்ணிக்கை | சராசரி நுண்ணறிவு ஈவு |
|---|---|---|
| விவசாயிகள் (நிலத்தில் வேலை செய்யும் எல்லா வேலையாட்களும் உட்பட). | 320 | 97·48 |
| சிறு கடை வைத்திருப்பவர் ... | 40 | 99·88 |
| கைத்தொழில் செய்பவர்கள் (தச்சர்கள், நெசவாளிகள், நாவிதர்கள், சலவை செய்பவர்கள், சமையல் செய்பவர்கள் முதலியவர்கள்). | 58 | 100·79 |
| கூலி வேலை செய்பவர்கள் ... | 29 | 94·59 |
| வீட்டு வேலையாட்கள் ... | 43 | 103·74 |
| தொழில் குறிப்பிடப்படாதது (வேலையில்லாதவர்கள் உட்பட) | 22 | ... |
| மொத்தம் ... | 512 | 98·73 |

இவ்வட்டவணையிலிருந்து கைத்தொழில் செய்பவர்களின் பிள்ளைகள் அதிக நுண்ணறிவு உடையவர்களாக இருப்பதைக் காண்கின்றோம். கடை வைத்திருப்பவர்களின் பிள்ளைகள் அடுத்தபடியாகவும், விவசாயம் செய்பவர்களின் பிள்ளைகள் அதற்கு அடுத்தபடியாகவும், கூலி வேலை செய்பவர்களின் பிள்ளைகள் கடைசியாக வருவதையும் காண்கின்றோம். வீட்டு வேலை செய்பவர்களின் பிள்ளைகள் மிக அதிக நுண்ணறிவு உடையவர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் நகரத்தினுள் வாழ்வதாகும். நகரத்தில் வாழ்ந்தபோதிலும் அவர்கள் படிக்காத நிலையில் இருப்பவர்கள். மற்றத் தொழில் வகைகளைச் சேர்ந்தவர்களெல்லாம் கிராமப்புறத்தில் வாழ்பவர்களாவர்.

மன வளர்ச்சி நின்றுபோகும் வயது

இது சம்பந்தமாகப் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எந்த வயதில் மன வளர்ச்சி நிற்கின்றது என்பதுபற்றி முடிந்த முடிவு ஒன்றும் சொல்லுவதற்கில்லை. முதலில் ஆராய்ச்சி செய்த பலர் 13 வயதிலிருந்து 14 வயதிற்குள்ளாக மன வளர்ச்சி நின்றுபோகின்றது என்று கூறினார்கள்; பின்னல் ஆராய்ச்சி செய்தவர்கள் 20 வயது வரைக்கும் மன வளர்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது

என்று கூறியுள்ளார்கள். ஆனால், எல்லோருமே மன வளர்ச்சியின் வேகம் அதிகமாக இருப்பது ஆரம்பத்தில்தான் என்றும், பின்னர் அது படிப்படியாகக் குறைந்துவிடுகின்றது என்றும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். தார்ன்டைக் எல்லா ஆராய்ச்சிகளையும் பரிசீலனை செய்துவிட்டு 20 வயதுவரைக்கும் மன வளர்ச்சி தொடர்ந்து நடைபெறுகின்றது என்று கூறியிருக்கிறார். எழுத்துச் சோதனைகளின் மூலம் அளவிடும்பொழுது 20 வயதிற்குப் பிறகுங்கூட மன வளர்ச்சி தொடர்ந்து நடைபெறுவதாகச் சிலர் சொல்லுகின்றனர்.

சிறு குழந்தைப் பருவத்திலிருந்து வயது முதிர்ந்த முதுமைப் பருவம்வரை மன வளர்ச்சி எவ்வாறு நிகழ்கின்றது என்பது பற்றி வேஷ்லர் (Wechsler) என்பவர் விரிவாக ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துள்ளதைக் கீழ்க்கண்ட வரைபடத்தில் காணலாம் :




குழந்தைப் பருவத்திலிருந்து முதிர்ந்த முதுமைப் பருவம் வரை ஏற்படும் மனவளர்ச்சி.

படம் 22

7 வயதிலிருந்து 13 வயதுவரை மன வளர்ச்சி மிக வேகமாக இருப்பதைப் பார்க்கலாம். அதற்குப் பிறகு 18 வயதுவரை சாதாரணமாக இருக்கின்றது. அதற்குப்பின் 22 வயதுவரை கூடுதலும் இல்லாமல் குறைதலும் இல்லாமல் இருக்கின்றது. அதற்குப்பின்

50 வயதுவரை மெதுவாகக் குறைவதைக் காண்கின்றோம். 50 வயதுக்குப் பிறகு குறைவது அதிகமாக இருப்பதைக் காணலாம். ஒருவர் இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து வாழ்வார் என்றால், அவரது அறிவுத் திறமை மிகவும் குறைந்து குமரப் பருவ நிலைக்கும் குறைவாகப் போய்விடும். ஆனால், மன வளர்ச்சிபற்றிய இந்தக் கொள்கையைப் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. 22 வயதிற்குப் பிறகு மன வளர்ச்சி மெதுவாகக் குறைந்துபோகின்றது என்பது அவ்வளவு உண்மையாகத் தோன்றவில்லை. இப் பிரச்சினைபற்றிக் கருத்து வேறுபாடு இருப்பதற்கு ஒரு முக்கியக் காரணம் முதிர்ச்சிப் பருவத்தில் உள்ளவர்களின் மனத்திறமைகளை அளவிடுவதற்கான நல்ல சோதனைகள் இல்லாமையாகும்.

## திறமைகளின் பரவல் (Distribution of Abilities)

உயர்நிலைப் பள்ளியிலுள்ள ஒரு குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களுக்கு நுண்ணறிவுச் சோதனை கொடுக்கப்பட்டதாக வைத்துக்கொள்வோம். அந்தச் சோதனையில் மாணவர்கள் வாங்கும் மதிப்பெண்களை ஆராய்வோம். அதிலிருந்து ஒரு முக்கிய உண்மை தெரியவரும். அதாவது, அந்த வகுப்பில் மிகவும் குறைவான நுண்ணறிவுடைய மாணவர்களிலிருந்து மிகவும் அதிகமான நுண்ணறிவுள்ள மாணவர்கள்வரை அறிவுத் திறமை பரவிக் கிடப்பதைக் காண்போம். எடுத்துக்காட்டாக 66,715 உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நுண்ணறிவுச் சோதனை கொடுக்கப்பட்டது. சில மாணவர்களுடைய மன வயது ஆரம்பப் பள்ளியிலிருந்து 4ஆவது வகுப்பு மாணவர்களின் சராசரி மன வயதாக இருந்தது. அதே சமயத்தில் இன்னும் சில மாணவர்களுடைய மன வயது கல்லூரி வகுப்புகளிலுள்ள மாணவர்களின் மன வயதிற்குச் சமமாக இருந்தது. பெரும்பான்மையான மாணவர்களின் மன வயது அந்த வகுப்பு நிலைக்குரிய மன வயதாக அமைந்திருந்தது. இவ்வாறு வகுப்பிலுள்ள மாணவர்களின் மனத்திறமைகள் மிகவும் குறைவான நிலையிலிருந்து மிகவும் உயர்வான நிலைவரைக்கும் பரவி இருப்பதை 'இயல்நிலைப் பரவல்' (Normal Distribution) என்று சொல்லுவார்கள். இதனைப் படம் 23-ல் காணலாம்.

ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் திறமை கீழ்நிலையிலிருந்து மேல்நிலைவரை பரவி இருப்பதுபோன்று சமூகத்திலுள்ள மக்களின் நுண்ணறிவும் பரவியிருப்பதைக் காணலாம். மக்களில் ஒரு சிலர் பேதைகளாகவும், அறிவீனர்களாகவும் இருப்பார்கள். இது கீழ் எல்லை. இன்னும் ஒருசிலர் உயர்ந்த அறிஞர்களாகவும் மேதைகளாகவும் இருப்பார்கள்; இது மேல் எல்லை. இவ்விரண்டு எல்லைகளுக்குமிடையே பெருவாரியான மக்கள் சராசரி அறிவு உடையவர்களாக இருப்பார்கள். இவ்வாறு மக்களிடையே அறிவுத் திறமை




*நடுத்தர நு. ஈவு = 106.2*

நுண்ணறிவு ஈவு : **66,715** உயர்நிலைப்பள்ளி முதலாண்டு மாணவர்களது பங்கீடு
படம் 23

இயல்நிலை முறையில் பரவிக்கிடக்கின்றது. நுண்ணறிவு ஈவு 80-க்குக் கீழ் இருக்குமென்றால் அறிவீனர் என்றும், 70-க்குக் கீழும் இருக்குமென்றால் பேதைகள் என்றும், 50-க்கும் கீழே இருந்தால் நனிபேதைகள் என்றும் சொல்லலாம். அதுபோலவே நுண்ணறிவு ஈவு 120-க்கு மேல் இருந்தால் 'உயர்ந்த அறிஞர்' என்றும், 130-க்கு மேல் இருந்தால் 'மேதைகள்' என்றும், 140-க்கு மேல் இருந்தால் 'மகா மேதைகள்' என்றும் சொல்லலாம். நுண்ணறிவு ஈவு 80-லிருந்து 120வரை இருப்பவர்கள் சராசரி நிலையில் இருப்பவர்கள். மக்களில் பெரும்பாலோருடைய அறிவு நிலை இவ்விரண்டு நிலைகளுக்கிடையே இருப்பதைக் காணலாம்.

நுண்ணறிவும் பால் வேற்றுமையும்

ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்குமிடையே நுண்ணறிவு வேற்றுமை இருப்பதாகச் சிலர் கருதுவது உண்டு. ஆண்பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் பெண்பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் சில வேற்றுமைகள் உண்டு என்பதை நாம் அறிவோம். உடல் வளர்ச்சியில் வேற்றுமை இருப்பது நமக்குத் தெரியும். பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைவிட ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பாகவே உடல் பக்குவம் அடைந்துவிடுகின்றார்கள். இதுபோலவே உணர்ச்சியின் வளர்ச்சியில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வேறுபாடு உண்டு. ஆனால், நுண்ணறிவைப் பொறுத்தவரையில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வேற்றுமை உண்டு என்பது பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. பர்ட் (Burt) என்னும் உளவியல் அறிஞர் லண்டனிலுள்ள 3,000 பிள்ளைகளுக்காக நுண்ணறிவுச் சோதனை கொடுத்தார். 3ஆம் வயதிலிருந்து 14ஆம் வயதுவரை ஒவ்வொரு வயது நிலையிலும் பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளை விடச் சிறந்து விளங்கியதாக அவர் கண்டுபிடித்தார். அவர் கூறுவதாவது, 'ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்குமுள்ள வேறுபாடானது 6 அல்லது 7ஆம் வயதில் உச்சநிலை அடைகின்றது. 10ஆம் வயதில் ஆண்பிள்ளைகள் சிறந்து விளங்குகின்றார்கள். ஆனால், அது மாறி 14 வயது வருவதற்குள் பெண்பிள்ளைகள் சிறந்து விளங்கிவிடுகின்றார்கள்.' இதிலிருந்து ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் சிறிது வேகமாக வளர்ச்சி எய்துகின்றார்கள் என்று தெரியவருவதாக பர்ட் கருதுகிறார். ஆனால், நுண்ணறிவைப் பொறுத்தவரையில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்குமுள்ள வேறுபாடு மிகச் சிறிதே என்பது அவரது கருத்து. இந்தப் பிரச்சினைபற்றி வேறு சில அறிஞர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். அவர்களும் 'ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்குமிடையே நுண்ணறிவு வேற்றுமை இல்லை' என்றே கருதுகிறார்கள். ஆண்பிள்ளைகளின் சராசரி நுண்ணறிவும் பெண்பிள்ளைகளின் சராசரி நுண்ணறிவும் அநேகமாக ஒரே மாதிரியாகவே இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பெண்பிள்ளைகளிடையே நுண்ணறிவு ஈவு வேறுபடும் நிலைக்கும் (variability) ஆண்பிள்ளைகளிடையே நுண்ணறிவு ஈவு வேறுபடும் நிலைக்கும் வேற்றுமை இருப்பதாகவும் தெரியவருகின்றது.

நுண்ணறிவும் பள்ளிப் படிப்பும்

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவர் ஒருவர் ஐந்து உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 225 மாணவர்கள் பற்றி ஆராய்ச்சி செய்தார். அவர்களுக்கு ஒரு நுண்ணறிவுச் சோதனை கொடுக்கப்பட்டது. இச் சோதனையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கும் அவர்கள் பல்வேறு பாடங்களில் எடுத்துள்ள மதிப்பெண்களுக்கு மிடையேயுள்ள ஒப்புமை கணக்கிடப்பட்டது. இவ்விரண்டிற்குமிடையே நல்ல தொடர்பு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தொடர்புக் கெழு (correlation coefficient) +0·4-க்கும், +0·6-க்கும் இடையே இருந்தது. மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் சோரன்சன் கண்டுபிடித்திருப்பதும் இதுபோன்றதே. அவர் தொடர்புக் கெழுக்கள் +0·40-க்கும், +0·50-க்குமிடையே உள்ளன என்று கூறியுள்ளார். ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனியாக எடுத்து நுண்ணறிவுடன் தொடர்புபடுத்திப் பார்த்தபோது, பாடத்துக்குப் பாடம் வேறுபாடு இருப்பது தெரியவந்தது. பொது விஞ்ஞானத்துக்கும் நுண்ணறிவுக்குமிடையே அதிகபட்சத் தொடர்பும், இரண்டாவது மொழிக்கும் நுண்ணறிவுக்குமிடையே குறைந்தபட்சத் தொடர்பும் இருப்பது தெரியவந்தது. நுண்ணறிவைப் பொறுத்த வரையில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் முக்கிய வேற்றுமை ஒன்றும் இல்லை.

நினைவாற்றல்

பொதுவாகச் சிறு பிள்ளைகளுக்குப் பெரியவர்களைவிட நினைவாற்றல் அதிகம் என்று கருதப்படுகிறது. ஆனால், இது உண்மையன்று. சிறு பிள்ளைகள் பாடப்பகுதிகளை நெட்டுருப்போடுவதில் திறமையுடையவர்கள். வயது ஆக ஆக நெட்டுருப்போடும் ஆர்வமும் திறமையும் குறைந்துவிடும். இதன் காரணமாக நினைவாற்றல் குறைகின்றது என்று கருதப்படுகிறது. நெட்டுருப்போடும் நினைவாற்றல் குறைகின்றதே ஒழிய வாழ்க்கையோடு ஒட்டிய நினைவாற்றல் குறைவதில்லை.

சிறு குழந்தைப் பருவத்திலிருந்து குமரப் பருவம்வரை நினைவாற்றல் எவ்வாறு மாறுகின்றது என்று பார்க்கலாம்; பீனேயினுடைய சோதனைகளை வைத்துப் பார்த்தால் இந்த உண்மை வெளியாகின்றது. $1\frac{1}{2}$, 2 வயதுக் குழந்தை இரண்டு இலக்கங்களுடைய எண்ணைத் திருப்பிச் சொல்லமுடியும். மூன்று வயதுக் குழந்தை மூன்று இலக்கங்களுடைய எண்ணைத் திருப்பிச்சொல்ல முடியும். $4\frac{1}{2}$ வயதுப் பிள்ளை நான்கு இலக்கங்களுடைய எண்ணைத் திருப்பிச் சொல்ல முடியும். 7 வயதில் ஐந்து இலக்கங்களுடைய எண்ணைத் திருப்பிச்

சொல்ல முடியும். 10 வயதில் ஆறு இலக்கங்களுடைய எண்ணைத் திருப்பிச் சொல்ல முடியும். சிறப்பான அறிவுத்திறமையுள்ள ஒருவர் 8 இலக்கங்களுடைய எண்களைத் திருப்பிச் சொல்ல முடியும். நினைவாற்றல்பற்றிய ஓர் ஆராய்ச்சியின் முடிவைக் கீழ்க்கண்ட படத்தில் காணலாம்:




**நினைவாற்றலின் வளர்ச்சி**

படம் 24

8 வயதிலிருந்து 18 வயதுவரை பிள்ளைகள் வார்த்தைகளை நெட்டுருச் செய்வதில் திறமையுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களது திறமை ஆண்டுக்காண்டு வளர்ந்துகொண்டே செல்கிறது. குமரப் பருவத்துப் பிள்ளைகள் பொதுவாக நெட்டுருப் போடுவதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை என்று கருதப்படுகின்றது. ஆனால், நெட்டுருபண்ண விரும்பினால் அவ்வாறு செய்வதற்கான சக்தி அவர்களிடம் இருக்கவே இருக்கிறது.

நெட்டுருப்போடுவது அவ்வளவு நல்லதல்ல என்று இக் காலத்தில் கருதப்படுகின்றது. பாடங்கள் சுவையாக இருக்கவேண்டும். மாணவர்கள் ஆர்வம் காரணமாகப் படிக்கவேண்டும் என்ற கொள்கை பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகின்றது. ஆனால், இப்பொழுது சில பாடங்களைப் பொறுத்தவரையில் சில சமயங்களில் நெட்டுருப் போடுவது நல்லது என்று கருதி, அதற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். நெட்டுருப் போடுதல் தக்க காரணத்தோடு செய்யப்படும்பொழுது மிக்க பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை. அது பொருள் உணர்வுடன் செய்யப்படுவது நலம்.

## ஒருமுகப்படுத்துதல் (Concentration)

ஒருமுகப்படுத்துதல் என்பது சிறு பிள்ளைகளுக்கு எளிதாக வருவதில்லை. வகுப்பறையில் ஏதாவது ஒரு செயல் நிகழ்ந்தால் பிள்ளைகளின் கவனமெல்லாம் உடனே மாறிவிடும். ஆனால், வயது ஆகஆக மனத்தை ஒருமுகப்படுத்தும் சக்தி மாணவர்களுக்கு அதிகமாக வளருகின்றது. இதுபற்றிச் செய்யப்பட்ட ஒரு சோதனையின் முடிவுகளைப் படம் 25-ல் காணலாம்.

அந்தப் படத்திலிருந்து 6 வயதிலிருந்து 16 வயதுவரை குழந்தையின் ஒருமுகப்படுத்தும் சக்தி வளருவதைக் காணலாம். இந்தச் சோதனை தனிவகைச் சோதனையைச் சேர்ந்தது. இந்தச் சோதனையின் விவரம் பின்வருமாறு: ஒரு மேஜையில் ஒரு துவாரம் இருக்கும். அதனடியில் சுற்றிவரும் ஒரு வட்டகை இருக்கும். இந்தத் துவாரத்தின் வழியாகப் பார்க்கும்பொழுது சுற்றுகின்ற வட்டகையில் ஒரு புள்ளி தோன்றும். அந்தப் புள்ளியைக் குழந்தை பார்த்துக் குறியிடவேண்டும். இவ்வாறு செய்யும் குழந்தையின் ஒருமுகப்படுத்தும் சக்தி மாறும்பொழுது புள்ளிகளில் குறியிட முடியாது போகும். தொடர்ந்து இடைவிடாது எத்தனைப் புள்ளிகளில் குறியிட முடிகின்றது என்பதைக் கணக்கிட்டு அதிலிருந்து குழந்தையின் ஒருமுகப்படுத்தும் சக்தியை அளவிடலாம். அந்தப் படத்தில் குமரப் பருவத்தின்போது இந்தச் சக்தி அதிகமாவதைக் காணலாம். ஆனால், குமரப்பருவத்துப் பிள்ளைகள் ஒருமுகப்படுத்துவதில்லை என்று பெற்றோர்களும், ஆசிரியர்களும் சொல்லக் கேட்கிறோம். பிள்ளைகள் விரும்பு

கிற காரியங்களல்லாமல் விரும்பாத பலவற்றில் மனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது, அவர்கள் ஒருமுகப்படுத்தும்




**ஒருமுகப்படுத்தும் சக்தியின் வளர்ச்சி**

படம் 25

சக்தி இல்லாதவர்களாகத் தோன்றுகிருர்கள்; ஆனல், அவர்கள் விரும்புகின்ற காரியங்களில் மனத்தை மிகவும் ஒருமுகப்படுத்திச் செலுத்துவதைப் பார்க்கலாம். ஆசிரியர்கள் அல்லது பெற்றேர்கள் முக்கியமானவை என்று கருதும் பொருள்களில் பிள்ளைகள் கவனம் செலுத்தாவிட்டாலுங்கூட அவர்களுக்கு ஆர்வமாக இருக்கின்ற காரியங்களில் கவனம் செலுத்துகிருர்கள் என்பதில் ஐயமில்லை.

மனத்தைச் செலுத்திப் படிப்பதற்கோ அல்லது வேறு காரியங்கள் செய்வதற்கோ சூழ்நிலை மிகவும் அவசியமாகும். வீட்டில் சத்தமும், சந்தடியும் இருந்தபோதிலுங்கூடச் சில பிள்ளைகள் கவனத்தோடு படிக்க முடிகின்றது. சில பிள்ளைகள் அமைதியாக அறையில்

தனித்து இருந்தபோதிலும் மனம் செலுத்திப் படிக்க முடிவதில்லை மனம் ஒருமித்துக் காரியம் செய்வதற்கு உதவியாக உள்ள சூழ்நிலை ஆளுக்கு ஆள் வேறுபடும்.

கற்பனை

ஒரு குழந்தையின் கற்பனைச் சக்தியை அளவிடுவது மிகவும் கடினமானது. ஆனால், குமரப் பருவத்தில் கற்பனைச் சக்தி வேகமாக வளருகிறது என்பதில் ஐயமில்லை. இப் பருவத்தில் பிள்ளைகள் பாட்டுகள் கட்டுகிறார்கள். கதைகள் எழுதுகிறார்கள். கவிதைகள் புனைகிறார்கள். ஓவியங்கள் வரைகிறார்கள். குழந்தைகளின் கற்பனைச் சக்தி வளருவதுபற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை. ஆராய்ச்சி செய்வதும் கஷ்டம். ஓர் ஆராய்ச்சிபற்றி இங்குக் குறிப்பிடலாம். இதில் 2,642பையன்களும், 2,138 பெண்களும் கலந்துகொண்டார்கள். ஒரு கதையின் ஆரம்பத்தைக் கொடுத்து அதை முடிக்கச் சொல்லிப் பிள்ளைகளைக் கேட்டார்கள். கதையைப் பூர்த்தி செய்வதற்கான சில குறிப்புகளும் கொடுக்கப்பட்டன. சந்திரன்பற்றிய இக் கதையின் ஆரம்பம்:

> சந்திரன் சொல்லுகிறான், 'அண்மையில் ஓர் இரவு நான் உறைபனி மிகுந்த மேகங்களிடையே போய்க்கொண்டிருந்தேன். என்னுடைய ஒளிக்கதிர்கள் மேகங்களை ஊடுருவிச் சென்று உலகத்தில் என்ன நடக்கின்றது என்பதைப் பார்ப்பதற்காக முயன்றன. மேகங்கள் சிதறிப்போகவே என் முன்னால்................'

இந்தக் கதையைப் பூர்த்தி செய்யவேண்டும். இதற்கு உதவியாகப் பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் :

1. சந்திரன் ஒரு கப்பல் உடைந்துபோவதைப் பார்க்கிறது.
2. பிரிமன் நகரத்துப் பொது மண்டபத்தில் சந்திரன் ரோலண்டு என்கிற அரக்கனோடு உரையாடல் நிகழ்த்துகிறது.
3. படுக்கையில் கிடக்கும் ஒரு நோயாளிக்குச் சந்திரன் ஆறுதல் சொல்லுகிறது.
4. பிரிமனுக்குப் பக்கத்திலுள்ள மலை ஏறுவோர்களின் முகாம் பற்றிச் சந்திரன் சொல்லுகிறது.
5. தன்னுடைய பாடங்களைச் சரியாகப் படிக்கவியலாத ஒரு மாணவனோடு சந்திரன் பேசுகிறது.

மேற்கண்ட தலைப்பில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அதைப்பற்றிக் கற்பனை செய்து கதையைப் பூர்த்தி செய்ய வேண்டும். எதுபற்றிக் கற்பனை வேகமாவும், எளிதாகவும் வருகின்

றதோ அதைத்தான் குழந்தைகள் தேர்ந்தெடுப்பார்கள். இவ் வாராய்ச்சியின் முடிவாகக் குழந்தைகளுடைய கற்பனைபற்றிப் பல விவரங்கள் தெரியலாயின, சிறு குழந்தைகள் சந்திரனைப்பற்றிக் கற்பனை செய்யும்பொழுது சந்திரனுடைய பல செயல்களைப்பற்றி எழுதுகிறார்கள். ஆனால், குமரப் பருவத்துப் பிள்ளைகள் கற்பனை செய்யும்பொழுது சந்திரனுடைய உணர்ச்சிகளைப்பற்றி எழுது கிறார்கள். சிறு குழந்தை எழுதியதற்கு உதாரணமாகக் கீழே ஒரு பகுதி தரப்பட்டிருக்கின்றது :

"நெடுந் தூரமாக இருப்பதால் சந்திரன் சில சமயங்களில் பூதக்கண்ணாடி பயன்படுத்தவேண்டும், அல்லது அதனுடைய ஒளிக்கதிர்களைத் தூதுவர்கள்போன்று அனுப்பவேண்டும். சந்திரனுக்குத் தூரத்திலுள்ள மனிதர்கள் சிறு எறும்புகள்போல வும், அவர்களுடைய விளக்குகள் சிறு மின்மினிப் பூச்சிகள் போலவும் தோன்றும். வானத்தில் மிகுந்த உயரத்தில் சந்திரன் மேகங்களினிடையே ஓடிச் செல்லுகிறது. ஒரு சமயம் ஒரு பள்ளிப் பையன் தன்னிடம் வரச் சந்திரன் அனுமதியளிக்கிறது. அவனைப் பார்த்துச் சந்திரன் கேட்டது: 'ஏ, தம்பி உன் பள்ளி வேலையைச் சரியாகச் செய்ய முடியவில்லையா?', 'அன்புள்ள சந்திரனே, என்னால் முடியவில்லை' என்று பையன் பதில் சொன்னான். அதற்குச் சந்திரன், 'சரி, அப்படியானால் இங்கு என்னுடன் மேலே வா' என்று சொன்னது பையன் தன்னுடைய பள்ளிப் புத்தகங்களை எடுத்துத் தனது பையில் போட்டுக்கொண்டு சந்திரனை நோக்கிச் சென்றான். அங்குப் போனவுடன் பள்ளிக்கூடத்து வகுப்பறை போன்று தோன்றிய ஓர் அறையைச் சந்திரன் காட்டியது. பின்னால் சந்திரன் அந்த அறைக்கு வந்தது. பையனுக்கு உதவி செய் வதற்காக ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பேனாவை எடுத்துச் சில கணக்குகளைப் போட்டுக் கொடுத்தது. பின்னால் அவன் தைரியமாக இருக்கவேண்டும் என்று அது பையனிடம் சொல்லி யது. அதற்குப் பிறகு ஒரு புத்தகத்தை எடுத்து அதிலிருந்து உரக்கப் படித்துக் காட்டியது."

மேலே நாம் பார்த்தது ஒரு சிறு குழந்தையின் கற்பனை. குமரப் பருவத்துப் பையனின் கற்பனையைக் கீழே பார்க்கலாம் :

"ஒருநாள் மாலை நான் வழக்கம்போல் வானத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். சிறு தேவதூதர்கள் என்னை நன்றாக விளக்கிவிட்டிருந்தார்கள். அதனால் நான் நல்ல பிரகாசமாயிருந்தேன். என்னைப்பற்றி எனக்கு நல்ல மன நிறைவாக இருந்தது. எனது சபையின் உறுப்பினர்களாகிய சிறிய நட்சத்திரங்களை வானத்துக் காவலாளிகள் நன்றாகச்

சுத்தப்படுத்தி எண்ணெய் ஊற்றி நிரப்பிவைத்திருந்தார்கள். இந்த நட்சத்திரங்கள் வெளிச்சம் தருவது நின்றுவிட்டால் அது பெரும் மோசமாகப் போய்விடும். நான் வயோதிகன்தான் என்றபோதிலுங்கூட எனது நடை எளிய, சுக நடையாக இருந்தது. நான் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த மகிழ்ச்சியில் ஒரு சிறிய நட்சத்திரத்திற்கு மிக அருகில் வந்துவிட்டதைப் பார்க்கவில்லை! திடீரென்று ஒரு மோதல்! ஒரு பெரிய சத்தம்! நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் மோதிக்கொண்டோம். நட்சத்திரத்தினுடைய ஒரு சிறிய பகுதி பெருஞ் சத்தத்துடன் ஒளிமிக்க வளைவுபோன்று ஓடிச்சென்றது. திடீரென்று தூரத்தில் இருந்து ஒரு சிறிய குரல் கேட்டது, 'அதோ பார், ஓர் எரி நட்சத்திரம்! எனக்கு நூறாயிரம் டாலர் கிடைக்கவேண்டும் என்று விரும்பிக்கொள்கிறேன்.' அது தூரத்தில் உலகிலுள்ள ஒரு சிறிய மனிதனுடைய குரல் என்பதில் ஐயமில்லை. அவன்தான் இதனை எரிநட்சத்திரம் என்று சொல்லி இருக்கவேண்டும். இத்தகைய எரிநட்சத்திரத்தை உலகத்தவர் பார்க்கும்பொழுது தாங்கள் மிகவும் விரும்புகின்ற பொருள்கள் கிடைக்கவேண்டும் என்று வேண்டுதல் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். ஆனால், ஊறுபட்ட நட்சத்திரத்தினுடைய புலம்பல் கேட்டுச் சிந்தனை கலைந்து பார்த்தேன். அந்த நட்சத்திரம் தனது தலையைத் தடவிக்கொண்டு அழுதது, 'ஐயோ, எனது அழகான தொப்பி போய்விட்டதே!' நான் அவனுக்குச் சமாதானம் சொல்லி, அவனுடைய பெயர் என்ன என்றும், அவன் எவ்வளவு காலம் வானத்தில் காவலாளியாகப் பணியாற்றி வருகின்றான் என்றும் கேட்டேன். அதற்கு அவன் பதில் சொன்னது, 'எனது மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் இந்த வேலையில் சேர்ந்து நெடுங்காலம் ஆகவில்லை, 800 ஆண்டுகள்தான் ஆகின்றன.''

மேற்கண்ட இரண்டு பகுதிகளிலிருந்து குமரப் பருவத்துப் பிள்ளைகளின் கற்பனைக்கும், சிறு குழந்தைகளின் கற்பனைக்குமுள்ள வேற்றுமையைப் பார்க்கலாம். குழந்தையின் கற்பனை வயதுக்கேற்ப மாறுகின்றது. சில குழந்தையாக இருக்கும்பொழுது தேவதைக் கதைகள் போன்ற கற்பனையும், பின்னால் உணர்ச்சி, சிந்தனை, லட்சியங்கள் நிறைந்த கற்பனைகளும் அதற்குப் பின் கற்பனை சிறிது குறைந்து, உணர்ச்சியும் சிறிது குறைந்து நடைமுறைக்கு ஒத்த கற்பனையும் உண்டாவதாகக் காண்கின்றோம்.

## குமரப் பருவத்துப் பிள்ளைகளின் கற்பனை

நான்கு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 4ஆவது, 5ஆவது, 6ஆவது படிவ மாணவர்களுக்கு ஒரு கற்பனைச் சோதனை கொடுக்கப்

பட்டது. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் 10 மாணவர்கள் 'ராண்டம்' மாதிரி முறையில் சோதனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆக, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலிருந்தும் 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மொத்தம் 120 மாணவர்கள் இந்தச் சோதனையில் கலந்து கொண்டார்கள். இம் மாணவர்களின் சராசரி வயது 13-லிருந்து 16 வரை. ஒரு சில மாணவர்கள் 16-க்கு மேலாக 19 வயதுவரை இருந் தார்கள்.

ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு படமாகப் பத்துப் படங் கள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு படமும் மாணவனிடம் இரண்டு நிமிடங்கள் இருக்கும். படம் ஒவ்வொன்றும் ஒரு திட்ட வட்டமான உருவத்தைக் குறிப்பிடுவதில்லை. ஆகவே, மாணவனுக்கு இரண்டு நிமிடங்களில் ஒவ்வொரு படமும் எவ்வாறு தோன்று கிறதோ, எது எதுபோல் தோன்றுகிறதோ அதை விடைத்தாளில் எழுதவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு படமாகப் பத்துப் படங்களைப் பார்த்துத் தங்கள் மனத்தில் தோன்றியதையெல்லாம் எழுதினார்கள். இரண்டு மாணவர்கள் எழுதியுள்ள விடைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(உங்களது கற்பனை வளத்தை அறியும்பொருட்டு இப் பொழுது ஒரு சிறு சோதனை நடைபெறவிருக்கின்றது. உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு படமாக 10 படங்கள் அளிக்கப் படும். ஒவ்வொரு படமும் உங்களிடம் இரண்டு நிமிடங்கள் இருக்கும். படம் ஒவ்வொன்றும் ஒரு திட்டவட்டமான உருவத் தைக் குறிப்பிடுவதில்லை. எனவே, உங்களைப் பொறுத்தவரையில் இரண்டு நிமிடங்கள் அளவில் ஒவ்வொரு படமும் எவ்வெவ்வாறு தோன்றுகின்றதோ எது எதுபோலத் தோன்றுகின்றதோ அதையெல்லாம் இந்த விடைத்தாளில் எழுதவும்.

குறிப்பு:—படத்தின் பின்புறமுள்ள எண்ணைக் கவனித்து இவ் விடைத் தாளில் அந்த எண்ணுக்குரிய இடத்தில் உங்கள் விடைகளை எழுதவும்.)

---

1. ஒரு மனிதன் முகத்தைப்போல் உள்ளது. மேலும், இது ஒரு கடைபோல் காட்சி அளிக்கிறது. மேலும், வெற்றி பெற்றால் வெள்ளிக்கோப்பை கொடுப்பார்களே அதனுடைய மேல்புறம்போல் உள்ளது.

---

2. இதில் இரண்டு துஷ்ட மிருகங்கள் சண்டைபோடுவது போல் உள்ளது. கோமாளிகள் கூத்தாடுகிறார்கள். சூரியன் தோன்றுவதுபோன்றும், பூகம்பம் ஏற்படுவது போன்றும் உள்ளது.

---

---

3. இரண்டு மனிதர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். மேலும் வேறு இரு மனிதர்கள் ஒருவரையொருவர் பார்க்கிறார்கள். இருவர் பந்து விளையாடுகிறார்கள். நடுவில் உள்ள சிவப்பு பாகம் ஐஸ்கிரீம்போல் உள்ளது.

---

4. இந்தப் படம் இலைகள் குவிந்திருப்பதைக் காட்டுகிறது. மேலும், இது ஒரு கருமேகம்போல் உள்ளது.

---

5. இது வௌவால் போல் உள்ளது. இது பறப்பதைபோல் உள்ளது. தலைகீழாக நிற்கும் மனிதனுடைய கால்களைப் போல் உள்ளது.

---

6. இது ஓர் இறந்துபோன பிராணியின் தோலைப்போல் உள்ளது. அங்கு ஒரு குகை மாதிரியும் அந்தக் குகையில் இரு பாம்புகள் எட்டிப்பார்ப்பது மாதிரியும் உள்ளன. பறவைபோல் உள்ளது.

---

7. பெரிய பாறைகளைப்போல் காட்சியளிக்கின்றன. இது குழந்தைகளின் உருவங்கள் போல் உள்ளது இந்தக் குழந்தைகளுக்கு இரண்டு இறகுகள் உள்ளன. மேகம் போல் உள்ளது.

---

8. வேரோடு உள்ள செடி மாதிரி இருக்கிறது. பக்கத்தில் இருக்கும் சிவப்புப்பாகம் இரண்டு பூனைகள் மாதிரி உள்ளது. அந்தப் பூனைகள் ஒரு மலையின்மீதிருந்து இன்னொரு மலை மீது தாவுவதுபோல் உள்ளது.

---

9. இது ஒரு மரத்தைப்போல் உள்ள படம். மஞ்சள் பாகமாய் இருப்பது பறவையின் இறக்கைகளைப் போல் தோன்றுகின்றது. மஞ்சள் பாகத்தில் வானவில் போல் உள்ளது.

---

10. இது புஷ்பத்தைப்போல் உள்ளது. இந்தப் புஷ்பத்தில் தேனீ வந்து தேன் பருகுகிறது. ஒரு செடியின் இலையைப் போல் உள்ளது. சிவப்புப் பாகம் மேகம்போல் காட்சியளிக்கிறது.

---

மேலே கொடுத்துள்ள விடைகளை வகைப்படுத்தி ஆராய்வதற்குப் பின்வரும் பட்டியல் பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு விடையிலும் வருகின்ற பொருள்கள் இப் பட்டியலுக்கேற்பக் கணக்கிடப்பட்டன.

மிருக உருவங்கள்
மனித உருவங்கள்
மிருகம்பற்றிய விவரங்கள்
மனிதர்பற்றிய விவரங்கள்
இயற்கை
செடிகள்
பொருள்கள்
மிருகங்களின் இயக்கம்
மனிதர்களின் இயக்கம்
உயிரில்லாப் பொருள்களின் இயக்கம்
இயற்கைக்கு அப்பாற்பட்டவை
நெருப்பு
இரத்தம்
கலை
மற்றும் பிற

இவ்வாறு ஆராய்ச்சி செய்ததில் சில முடிவுகள் தெரிய வந்தன. அவையாவன:

1. 4ஆவது, 5ஆவது, 6ஆவது படிவங்களைச் சேர்ந்த மாணவர்களின் கற்பனைகளிடையே குறிப்பாக வேற்றுமை ஒன்றும் இருக்கவில்லை.
2. 13 வயதிலிருந்து 16 வயதுவரையுள்ள ஆண்பிள்ளைகளின் கற்பனைப் பொருள்களுக்கும், பெண்பிள்ளைகளின் கற்பனைப் பொருள்களுக்கும் இடையே சிறிது வேற்றுமையிருந்தது.
3. குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலைக்கும் மாணவர்களது கற்பனைக்கும் தொடர்பு இருக்கவில்லை.
4. மாணவர்களின் நுண்ணறிவுக்கும் கற்பனைக்கும் தொடர்பு இருப்பதாகவும் தெரியவில்லை.
5. மாணவர்களின் வயது ஆக ஆக மனிதர்களிடம் அவர்களது ஈடுபாடு சிறிது சிறிதாக அதிகமாவது தெரியவந்தது.
6. மிருகங்களைப்பற்றிய விவரங்களைவிட மனிதர்களைப்பற்றிய விவரங்கள் இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த பிள்ளைகளின் கற்பனையில் இடம் பெறுவது ஒரு முக்கியமான உண்மையாகும்.
7. மிருகங்களுக்கு அடுத்தபடியாக இம் மாணவர்கள் இயற்கையின்பால் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

8. வயது அதிகம் ஆகஆக மாணவர்கள் இயக்கங்களைப்பற்றி அதிகமாகக் கற்பனை செய்கிறார்கள். வயது குறைந்துள்ள மாணவர்கள் இவ்வாறு இயக்கங்களைக் காண்பதில்லை.

9. ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் மனிதர்களிடம் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். மிருகங்களிடம் பெண் பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைவிடக் குறைவாக ஆர்வம் காட்டுகின்றார்கள்.

10. பெண்பிள்ளைகளைவிட ஆண்பிள்ளைகள் மைத்தடங்களைக் கூர்மையாகப் பார்த்து அதிகமாக மனிதர், மிருகங்கள் பற்றிய விவரங்களைக் காண்கின்றார்கள்.

11. இந்த ஆராய்ச்சியிலிருந்து ஆண்பிள்ளைகளைவிடப் பெண் பிள்ளைகளுக்கு அதிகக் கற்பனை வளம் இருப்பதும், பெண் பிள்ளைகள் மைத்தடங்களில் அதிக இயக்கங்களைக் காண்பதும் தெரியவருகின்றது.

குமரப் பருவத்தின் பின்பகுதியைச் சேர்ந்த 150 பிள்ளைகளின் கற்பனைபற்றி இன்னொருவர் ஆராய்ச்சி செய்தார். இப் பிள்ளைகள் 17 வயதிலிருந்து 21 வயதுடையவர்கள். 5 ஆசிரியப் பயிற்சிப்பள்ளி களைச் சேர்ந்த இவர்களில் 100 பேர் ஆண்கள், 50 பேர் பெண்கள். இந்த ஆராய்ச்சிக்கும் முன்கூறிய முறையே பயன்படுத்தப்பட்டது. அதாவது, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு படமாகப் பத்துப் படங்கள் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு படமும் இரண்டு நிமிடங்கள் மாண வர்களிடம் இருக்கும். திட்டவட்டமான உருவமில்லாத இப் படத் தைப் பார்த்து மாணவர் தாம் கற்பனை செய்கின்ற பொருள்களின் பெயர்களையெல்லாம் எழுதவேண்டும். ஒவ்வொரு படமாக 10 படத் துக்கும் இவ்வாறு செய்யவேண்டும். ஒரு மாணவியினுடைய விடை கள் எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(உங்கள் ஒவ்வொருவரிடமும் ஆளுக்கு ஒரு படம் வீதம் பத்துப் படங்கள் தரப்படும். ஒவ்வொரு படமும் உங்களிடம் இரண்டு நிமிடங்கள் இருக்கும். இப்படங்கள் ஒரு திட்டவட்ட மான உருவத்தைக் குறிப்பிடுவதில்லை. ஆகவே, பலர் இப் படங் களில் பலவற்றைப் பார்க்கிறார்கள்.

இப் படங்களில் நீர் என்னென்ன பார்க்கிறீர் என்பதையும் இப் படங்களைப் பார்த்ததும் உமது நினைவுக்கு வரும் காட்சிகளை யும் தயவு செய்து குறிப்பிடுக. படத்தின் பின்புறமுள்ள எண்ணைக் கவனித்து அந்த எண்ணுக்குரிய இடத்தில் உமது விடையைக் குறிப்பிடுக.)

(1) வண்ணாத்திப் பூச்சி. 2. மார்பெலும்பு. 3. ஈ. 4. வௌவால். 5. தொங்குவால் எலும்பு. 6. ஒரு மனிதன் குகைக்குள் உட்கார்ந்திருப்பது.

(2) இரண்டு பிள்ளைகள் நடனம் ஆடுவதுபோல். 2. இரண்டு பேர் சண்டைபோடுவதுபோல். 3. இரண்டுபேர் முழங் காலில் நின்று கைகோத்து நிற்பதுபோல். 4. ஒரு பூ இருப்பதுபோல். 5. விளக்கு எரிவதுபோல்.

(3) இரண்டுபேர் ஒரு பாத்திரத்தைத் தூக்குவதுபோல். 2. இரண்டு கரையிலும் குரங்கு உட்கார்ந்து இருப்பதுபோல். 3. இரண்டு எலும்பு மனிதர் ஒரு கம்பியில் உட்காருவது போல். 4. பன்றிமுகம். 5. இரண்டு தாத்தா முகம் தாடி யுடன்.

(4) ஒரு சிம்மாசனம். 2. ஓர் அம்மன் கோயில் உருவம்போல். 3. அதன் இருபுறமும் இரண்டு மூன்று மிருகம் இருப்பது போல். 4. இரண்டு பக்கமும் இரண்டு பாப்பா உட்கார்ந்து இருப்பதுபோல்.

(5) வௌவால். 2. இரண்டு பக்கமும் கோமாளி அம்பு எய்ய நிற்பதுபோல். 3. ஒரு மனிதன் நடுவில் நிற்பதுபோல். 4. கரடி நடுவில் நிற்பதுபோல். 5. இரண்டுபேர் முகம் பருத்திருப்பதுபோல்.

(6) ஒரு மனிதன் உடற்பயிற்சி செய்வதுபோல். 2. இரண்டு பேர் கடலில் இருப்பதுபோல். 3. இரண்டு பக்கமும் இரண்டு பேர் ஜெபம் செய்வதுபோல். 4. ஒரு குத்துவிளக்கு எரிவது போல்.

(7) ஒரு கோயிலில் மெழுகுவர்த்தி எரிவதுபோல். 2. இரண்டு முகம் கொம்புடன் இருப்பதுபோல். 3. இரண்டு சிங்கம் நிற்பதுபோல். 4. இரண்டுபேர் படுத்திருப்பதுபோல். 5. இரண்டு கும்பம் ஆடுவதுபோல்.

(8) இரண்டு மூன்று பிள்ளைகள் பிரமிடு டிரில் செய்வதுபோல். 2. இரண்டு பன்றி இருப்பதுபோல். 3. இரண்டு தவளை இருப்பதுபோல். 4. இரண்டு கோழி இருப்பதுபோல். 5. ஒரு மெழுகுவர்த்தி எரிவதுபோல். 6. இரண்டு பேபி உட்கார்ந்து விளையாடுவதுபோல்.

(9) ஒரு பூ இருப்பதுபோல். 2. ஒரு பூனைத் தலை. 3. ஓர் அம்மா பேபியைக் குளிப்பாட்டுவதுபோல். 4. இரண்டு முயல் குட்டி இருப்பதுபோல். 5. ஒரு மனிதன் மூக்கில் கை வைப்பதுபோல். 6. மண் ஜாடி.

(10) இரண்டு நாய்க்குட்டி படுத்திருப்பதுபோல். 2. ஒரு மனிதன் இரண்டு குழாய் வைத்திருப்பதுபோல். 3. ஒரு வீட்டு வாசல். 4. இரண்டு சிங்கம். 5. இரண்டு சிலந்திப் பூச்சி. 6. இரண்டு மனிதர் ஒரு பொருள் வைத்திருப்பதுபோல். 7. ஒரு தண்டில் விளக்குக் கம்பம்.

வயது அதிகமாகவுள்ள இம் மாணவ, மாணவிகளின் கற்பனைத் தன்மைக்கும், வயது குறைவாயுள்ள மாணவ மாணவிகளின்கற்பனைத் தன்மைக்கும் முக்கிய வேற்றுமை இருக்கும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால், இதற்கு மாறாக இந்த ஆராய்ச்சியிலிருந்து எல்லா மாணவர்களும் அதிகமாகக் குறிப்பிட்டது மிருகங்களின் உருவங்கள் என்று தெரிகின்றது. குமரப் பருவத்தின் முன் பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் மிருகங்களின் உருவங்களையே அதிகமாகக் குறிப்பிடுகின்றனர்கள்.

மிருகங்களின் உருவங்களுக்கு அடுத்தபடியாக மனித உடம்பிலுள்ள உறுப்புகள் முதலியனவற்றைப் பிள்ளைகள் குறித்துள்ளார்கள். இவ்வாறு குறிப்பது வயது ஆகஆக அதிகமாகிறது. அதுபோலவே மனித உருவங்களைக் குறிப்பதும் வயது ஆகஆக அதிகமாகிறது. மேலும் வயது ஆகஆக இயற்கையைப்பற்றிப் பிள்ளைகளின் ஈடுபாடும் அதிகமாகின்றது. மிருகங்களின் இயக்கங்களும் மனிதர்களின் இயக்கங்களும் வயது ஆகஆக அதிகமாகின்றன. பொதுவாக ஆண்பிள்ளைகளை விடப் பெண்பிள்ளைகள் சிறிது அதிகக் கற்பனை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். பிள்ளைகளின் சமூகம் பொருளாதார நிலைக்கும் கற்பனைத் திறனுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வுண்மை முந்திய ஆராய்ச்சியிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டது.

### கற்பனை வளத்திற்கும் பள்ளிப் படிப்புக்கும் உள்ள தொடர்பு

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சி மாணவர், மாணவர்களின் கற்பனை வளத்துக்கும் பள்ளிப் படிப்பிற்குமுள்ள தொடர்புபற்றி ஆராய்ச்சி செய்தார். இவ் ஆராய்ச்சிக்காக அவர் 3 வகையான சோதனைகளைப் பயன்படுத்தினர். முதலாவதாக, சொல் அமைக்கும் சோதனை. 5 அல்லது 6 எழுத்துகள் கொடுக்கப்படும். மாணவர் அந்த எழுத்துகளைப் பயன்படுத்தி எத்துணைச் சொற்கள் எழுத முடியுமோ அத்துணைச் சொற்கள் எழுதவேண்டும். அவர்கள் எழுதும் சொற்களில் ஓர் எழுத்து ஒருமுறைதான் வரவேண்டும். இத்தகைய சோதனையில் சொந்தக் கற்பனைக்கு அதிக இடம் கிடையாது. நினைவு ஆற்றலையும் சொல்லறிவையும் பயன்படுத்திச் சொற்களை உண்டுபண்ண

வேண்டும். இதில்வரும் கற்பனை மறுஆக்கக் (reproductive) கற்பனை யாகும். இவ்வாராய்ச்சியாளர் பயன்படுத்திய இரண்டாவது சோதனை ரோஷாக் மைத்தடச் சோதனை ஆகும். இச் சோதனை சொல்லமைக்கும் சோதனையைவிடச் சிறந்ததாகும். இங்கு நினைவிலிருந்து சொற்களை அப்படியே திருப்பி எழுதுவதுபோல் அல்லாது கற்பனையை அதிகமாகப் பயன்படுத்தி மைத்தடத்திலிருந்து ஒருவருக்குத் தோன்றும் காட்சிகளைக் குறிப்பிடவேண்டும். இந்தச் சோதனை ஆராய்ச்சியாளர்களால் பெருவாரியாகப் பயன்படுத்தப் படுவதொன்றாகும். 5 மைத்தட அட்டைகள் இவ்வாராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன. மூன்றாவதாக, 'கதை—பொருள்' சோதனை கொடுக்கப்பட்டது. இது பிள்ளைகளின் கற்பனை வளத்தை இன்னும் அதிகமாக வெளிக்கொணரக்கூடிய சோதனையாகும். கதைத் தலைப்பினைத் தேர்ந்தெடுத்து அதனை வினா வடிவில் கொடுத்து மாணவர்களைக் கற்பனை செய்து கதையை எழுதச்சொல்லும்பொழுது அவர்களது கற்பனை வெளிவருவதற்கு நல்ல வாய்ப்பு உண்டாகிறது.

மேற்குறித்த மூன்று சோதனைகளையும் ஆராய்ச்சியாளர் சென்னை நகரத்திலுள்ள 6 பள்ளிகளைச் சேர்ந்த 255 பிள்ளைகளுக்குக் கொடுத்தார். பெரும்பான்மையான பிள்ளைகளின் வயது 11-லிருந்து 15 வரை இருந்தது. ஒரு சில பிள்ளைகள் 10 வயதினர்களாகவும், இன்னும் சிலர் 16 வயதினர்களாகவும் இருந்தார்கள். முதல் சோதனையாகிய சொல்லமைப்புச் சோதனைக்கு ஒரு மாணவர் அளித்த விடை எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> அகல், அகம், அவல், அவரும், அடம், அல்பம், பகல், படம், பருவம், பருகல், படரும், கபம், கடல், கடம், கபடம், கருவம், கவரும், வருடம், வருக, வரும், குடம், குடல், படகு, அடகு, பருகு, பருகுக, பருகும், கும்பல், கடன், அவன் குருடன், வம்பன், பகவன், கருடன், கபடன், அவருடன், அகடம், வடம், படல், கடரும்.

இரண்டாவது சோதனையாகிய ரோஷாக் மைத்தடச் சோதனைக்கு ஒரு மாணவர் அளித்த விடைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. ஒரு கோயிலைப் போலவும், ஒரு வீட்டின் கதவுகளைப் போலவும், கொடியைப் போலவும் காணப்படுகின்றது.
2. ஒரு பூச்செடியைப் போலவும், தண்ணீர் இரண்டு பக்கத்தில் கொட்டுவதைப் போலவும், சாமியின் உருவச்சிலை போலவும் காணப்படுகிறது.
3. இரண்டு சிங்கங்களும் சண்டை இடுவதைப் போலவும் ஒரு மாட்டைக் கொல்லுவதாகவும் காணப்படுகிறது.

4. ஒரு கல்தூண் போலவும், வீடுகளைப் போலவும் காணப் படுகிறது.
5. தோட்டம் போலவும், மலைகளைப் போலவும் காணப்படு கிறது.
6. வீடுபோலக் காணப்படுகிறது. மேகம்.
7. இரு மனிதர்கள் பேசுவது போலவும், மேலே ஏதோ தொங்குவதைப் போலவும் இருக்கிறது.
8. இரு புலிகள் எதன்மேலேயோ பாய்வதைப் போலவும். அடியில் பாறைகள் போலவும் உள்ளன.
9. இரு ராட்சசர்கள் ஏதோ பானம் அருந்துவதைப் போல வும் சண்டையிடுவதைப் போலவும் தெரிகிறது.
10. இரு யானைகள் கம்பத்தை ஆட்டுவதைப் போலவும், ஒரு முயலின் கண்களில் ஏதோ பச்சையாகவும் உள்ளது.

மூன்ருவது சோதனையாகிய கதைப்பொருள் சோதனையில் கொடுத்த கதை வினுக்களும், மாதிரி விடைகளும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

(இப்பொழுது நீங்கள் எட்டுக் கதை வினுக்களுக்கு விடை எழுதவேண்டும். ஒவ்வொரு வினுவும் இருமுறை வாசிக்கப் படும். நீங்கள் உன்னிப்பாகக் கவனித்து உங்களுக்கு என்ன வெல்லாம் தோன்றுகிறதோ அவற்றை எழுதவேண்டும். இதில் சரியான விடை அல்லது தவருன விடை என்பது கிடையாது. இங்கு உண்மையான விடைமட்டும்தான் இருக்கிறது. கேலியாக எழுதாதீர்கள். ஒவ்வொரு கதை வினுவிற்கும் நான் உங்களுக்கு இரண்டு நிமிடம்தான் தரு வேன். கதைகளுக்கு வரிசைக்கிரமமாக எண் இடுங்கள். அமைதியாக இருக்க முயற்சி செய்து தெளிவாக யோசியுங் கள். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எழுதப் பாருங்கள்.)

1. நடுக்கடலில் ஒரு சிறு படகில் நீ தன்னந் தனியாக இருந் தால் என்ன செய்வாய்?

நடுக்கடலில் இருந்தால் நான் நீந்த முடிந்தால் நீந்தி விடுவேன். இல்லாவிட்டால் படகு ஓட்டிக் கரையை அடை வேன். இல்லாவிட்டால் உயிர் விடுவேன் என்று எனக்குத் தோன்றுகிறது.

2. திடீர் என்று உனக்கு யாராவது 1,000 ரூபாய் கொடுத்தால் என்ன செய்வாய்?

எனக்கு 1,000 ரூபாய் கொடுத்தால் கோயில்களுக்கும், ஏழைகளுக்கும் கொடுப்பேன். யாராவது வந்து கேட்டால்

அவர்களுக்கும் கொடுப்பேன். பிறகு மீதியிருந்தால் தாயாரின்மேல் எழுதிவிடுவேன். இவ்வளவுதான் பண்ணுவேன். என்னுடைய பையன்களுக்கெல்லாம் கொடுப்பேன்.

3. வளர்ந்து பெரியவனாக ஆன (பெரியவர்களாகிய) பிறகு நீ என்ன செய்வாய்?

நான் வளர்ந்து பெரியவனாகிய பிறகு எங்கேயாவது வேலை செய்துகொண்டு தாயைக் காப்பேன். பிறகு, பணம் கிடைத்தால் கல்யாணம் செய்துகொண்டு கூலி வேலை யாவது செய்து பிள்ளைகளைக் காப்பாற்றுவேன். குடும்பத்துக்காக மிகவும் ஒத்துழைப்பேன். இவ்வளவுதான்.

4. சந்திர மண்டலத்திற்கு உன்னால் போகமுடிந்தால் நீ அங்கு என்ன செய்வாய்?

சந்திர மண்டலத்திற்குச் சென்று அங்கு யார் இருக்கிறார்கள், அது எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பேன். பார்த்துவிட்டுத் திரும்பிவர முடிந்தால் வந்து மக்களிடம் பார்த்ததை எல்லாம் சொல்லுவேன். இவ்வளவுதான்.

5. ஒரு நாள் நீ உன் சகோதரனோடு (சகோதரியோடு) யாரும் இல்லாத ஒரு பாதையில் நடந்துகொண்டு இருக்கும்போது திடீரென்று உன்னுடைய தோழன் (தோழி) மயங்கி விழுந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?

தம்பி விழுந்துவிட்டால் அங்கு எங்கேயாவது குளம், குட்டைகளில் இருந்து தண்ணீர் கொடுப்பேன். இல்லாவிட்டால் கூச்சலிட்டுப் பக்கத்திலிருக்கும் மக்களைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்லுவேன். பிறகு தம்பியைத் தூக்கிக் கொண்டு வீடு திரும்புவேன். இவ்வளவுதான்.

6. தேவலோகம் எப்படி இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?

தேவலோகம் ஒரு குகைபோல் இருக்கும். அங்கே பக்தர்கள் இருப்பார்கள். அங்குதான் பாவத்திற்குத் தண்டனை கொடுப்பார்கள். நாம் இறந்தவுடன் முதலில் அங்குதான் போகிறோம். இதற்குத் தேவலோகம் என்று பெயர்.

மாணவர்களின் கற்பனை வளத்துக்கும் பள்ளிப் படிப்புக்கு முள்ள தொடர்பு என்ன? மேற்கூறிய ஆராய்ச்சியிலிருந்து கிடைத்த விவரங்களை வைத்துக்கொண்டும் பார்த்தால் இரண்டுக்குமிடையே 'உடன்பாட்டுத் தொடர்பாடு' (positive correlation) இருப்பதாகத் தெரியவருகிறது. தொடர்பாட்டுக் கெழு ·32-லிருந்து ·52 வரைக்கும் உள்ளது. ஒரே ஒரு முறைதான் எதிர்மறைத் தொடர்பாடு இருப்பதாகத் தெரிகிறது. உடன்பாட்டுத் தொடர்பாடும் மிகவும் அதிகம்

என்று சொல்லிவிட முடியாது. குறைந்த நிலையிலேயே இருப்பதாகத் தான் சொல்லவேண்டும். பொதுவாக வயது ஆகஆக கற்பனைக்கும் பள்ளிப் படிப்புக்கும் அதிகத் தொடர்பு இருப்பதாகத் தோன்றுகின்றது. மேலும், இரண்டாவது படிவத்தில் தமிழ் மொழிப் பாடத்துக்கும் கற்பனை வளத்துக்கும் மிக அதிகத் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதற்கு மாறாக இப் படிவத்தில் கணிதத்துக்கும் கற்பனை வளத்துக்கும் மிகக் குறைந்த தொடர்பு இருப்பது தெரிய வந்தது.

## சொல்லறிவின் வளர்ச்சி

தார்ன்டைக் முதலியவர்கள் பிள்ளைகளின் சொல்லறிவு எவ்வாறு படிப்படியாக அதிகமாகின்றது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். சொற்களின் எண்ணிக்கை அதிகமாவதோடுகூட,




1- ஒருபொருள் குறிக்கும் சொற்கள்
2- விளக்கம்
3- பயனும் விரிவுரையும்
4- விளக்க செய்து காட்டல்

வயதின்படி நான்கு குண இயல்பு பதார்த்தங்களைப் பயன் படுத்தியதின் மைய அளவு எண்.

படம் 26

சொற்களின் பொருளும் விரிந்துகொண்டே போகும். முதலில் ஒரு சொல்லுக்கு என்ன பொருள் ஒரு குழந்தைக்கு தோன்றுகின்றதோ

அதைவிட ஆழமாகவும் நுட்பமாகவும் அதே சொல்லுக்குச் சில ஆண்டுகள் கழித்துப் பொருள் தோன்றும். ஒரு குழந்தை பள்ளியில் சேருவதற்கு முன்னால் சுமார் 2,000 சொற்களைப் பயன்படுத்துவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பள்ளியில் சேர்ந்தபின் நான்காவது வகுப்பு நிலையில், அதாவது 10 வயது நிலையில் சுமார் 3,000 சொற்கள் தெரியும் என்று சொல்லுகிறார்கள். 8ஆவது வகுப்பு நிலையில் சுமார் 6,000 சொற்கள், 11ஆவது, 12ஆவது வகுப்பு நிலையில், 8,000 சொற்கள் தெரியும் என்று சொல்லுகிறார்கள். குழந்தையின் சொல்லறிவின் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு

மாணவர்களின் சொல்லறிவைப்பற்றி இரண்டுபேர் ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட 900 பிள்ளைகள் இதில் கலந்துகொண்டார்கள். அவர்களின் நுண்ணறிவு சராசரிக்குச் சிறிது அதிகம் என்று சொல்லலாம். பீனே சோதனையிலுள்ள சொல்லறிவுப் பகுதி இப் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் கொடுத்த விடைகள் அவற்றின் தன்மைக்கேற்ப வகை செய்யப்பட்டன. ஆராய்ச்சியின் முடிவு படம் 26-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### காரணகாரிய அறிவின் வளர்ச்சி

மனவளர்ச்சி அதிகமாக ஆக, குழந்தையின் காரணகாரிய அறிவு மிகுதியாகின்றது. கல்வி வளர்ச்சிக்கும் காரணகாரிய அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு நிகழ்ச்சி அல்லது பிரச்சினையை நன்கு புரிந்துகொள்ளுவதற்கும் அறிவோடு நடந்துகொள்ளுவதற்கும் வயதுவந்த பிள்ளைகளுக்கு அதிகத் திறமையுண்டு.

சிறு குழந்தை நிலையில் காரணகாரிய அறிவு அதிகமிருப்பதில்லை. ஒரு சிறிய பையன் இளவேனில் காலத்தில் விடுமுறையின்போது பட்டம் விட்டுக்கொண்டிருந்தான். நல்ல அழகான பலவர்ணக் காகிதங்களால் செய்யப்பட்ட பட்டம் மேலே உயர்ந்து பறந்துகொண்டிருந்தது. பட்டம் மேலும் மேலும் உயரச் செல்லுவதற்காகப் பையன் நூலை விட்டுக்கொண்டேயிருந்தான். இந் நிலையில் அவனது மூளை வேலை செய்ய ஆரம்பித்தது. 'இப் பட்டம் ஏன் பறக்கின்றது?' என்ற கேள்வி உதயமாயிற்று. அதற்கு விடை தெரியாமல் அவன் அருகில் இருந்த தன் தந்தையை நோக்கிக் கேட்டான். 'அப்பா பட்டம் ஏன் உயரப் பறக்கின்றது?'. அவனுடைய தந்தை சிறிது பௌதிகம் படித்தவர். ஆகவே, காற்று அடிக்கும் திசைபற்றியும், காற்றின் அமுக்கம்பற்றியும், காற்றில் நூலைப் பிடிப்பதனால் உண்டாகும் சக்திபற்றியும், மற்றும் சில பல சொல்லிப் பட்டம் பறப்பதன்

காரணத்தை விளக்கிச் சொன்னார். ஆனால், இந்த பௌதிக விளக்கம் பையனுக்கு நிறைவு தரவில்லை. 'பட்டம் ஏன் பறக்கின்றது?' என்ற கேள்வியை அவன் மீண்டும் கேட்டுக்கொண்டபின் சில விநாடிகள் கழித்துத் தன் கேள்விக்குத் தானே பதில் சொன்னான். 'பட்டம் பறக்கிறது, ஏனெனில் அதற்கு நீந்தத் தெரியாது?' (the kite flies because it can't swim). பையன் தண்ணீரில் மீன்களும், மனிதர்களும், படகுகளும் பொருள்களும் நீந்திப் போவதைப் பார்த்திருக்கிறான். பட்டத்திற்குத் தண்ணீரில் நீந்தத் தெரியாது, ஆகவே அது பறக்கிறது! இவ்வாறு சொல்லுவது அவனது காரண காரியக் குழப்பத்தைக் காட்டுகின்றது. காரணகாரிய அறிவு சரியாக ஏற்படாதிருப்பதைக் காட்டுகின்றது. ஆனால், வயது ஆகஆகப் பிள்ளைகளின் காரணகாரிய அறிவு நன்கு வளர்ந்துவிடுகின்றது.

### சிந்தனை செய்தல், ஆராய்தல் முதலியன

வயது ஆகஆகச் சிந்தனைச் சக்தி, ஆராய்ச்சித் திறன் முதலியன வளர்கின்றன. பீனே சோதனையில் வயதுக்கேற்ப அமைந்துள்ள கேள்விகளைப் பார்த்தால் இவ் வளர்ச்சியை ஓரளவுக்கு உணரலாம்.

வயது 3½—உனக்குத் துக்கமாக இருக்கும்பொழுது நீ என்ன செய்வாய்?

வயது 4—நமக்கு ஏன் வீடுகள் இருக்கின்றன?

வயது 7—இன்னொருவருக்குச் சொந்தமான ஒரு பொருளை நீ உடைத்துவிட்டால் நீ செய்யவேண்டிய காரியம் என்ன?

வயது 8—பாய்மரப் படகை ஓடச்செய்வது எது?

வயது 10—பெரும்பாலான மக்கள் சைக்கிளைவிட்டு, கார் வைத்துக் கொள்ள விரும்புவதற்கு இரண்டு காரணங்கள் கொடு.

வயது 11—டொனால்டு காட்டில் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவன் ஒரு சிறிய அழகான மிருகத்தைப் பார்த்து அதனை வீட்டிற்குக் கொண்டுவந்து வளர்ப்பதற்காக எடுத்துவர முயன்றான்; ஆனால், அது தப்பிப்போய்விட்டது. அவன் வீட்டிற்குத் திரும்பியதும் அவனுடைய துணிகளை வீட்டார் தீயிலிட்டுக் கொளுத்தினார்கள். ஏன்?

வயது 13—ஓர் அமெரிக்க இந்தியன் முதல் முறையாக நகரத்துக்கு வந்தபொழுது ஒரு வெள்ளைக்காரப் பையன் சவாரி செய்து போவதைப் பார்த்தான். அமெரிக்க

இந்தியன் சொன்னான் : 'இந்த வெள்ளைக்காரப் பையன் சோம்பேறி. அவன் உட்கார்ந்துகொண்டு நடந்து செல்லுகிறான்.'

வெள்ளைக்காரப் பையன் எதன்மேல் சவாரி செய்ததின் காரணமாக இந்தியன் 'உட்கார்ந்து நடக்கிறான்" என்று சொன்னான்.

முதிர்ச்சிநிலை—சில காசுகள் கொடுத்து மையும் பேனாவும் வாங்கி எழுதுவதற்குப் பதிலாக அதிகப் பணம் கொடுத்து டைப்ரைட்டர்கள் வாங்குகிறார்கள்—இதற்கு மூன்று காரணங்கள் கூறுக.

சிந்தனை செய்தல், ஆராய்தல் முதலிய திறமைகளின் வளர்ச்சி பற்றி விரிவான ஆராய்ச்சி தேவை.

# 5. குமரப் பருவ ஆர்வங்கள்

குமரப் பருவத்தில் பிள்ளைகளுக்குப் புதிய ஆர்வங்கள் பிறக்கின்றன. குழந்தையாக இருந்தபொழுது இல்லாத புதிய ஈடுபாடுகள் உண்டாகின்றன. ஆர்வம் என்றால் என்ன? ஆர்வம் என்றால் ஒருவனுக்கு ஏதாவது ஒன்றுபற்றி அதிகமாக விருப்ப உணர்வு இருப்பதாகும். அந்த விருப்ப உணர்வு இருப்பது காரணமாக அது சம்பந்தமான செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டுதல் ஏற்படும். அத் தூண்டுதல் காரணமாகச் சில குறிப்பிட்ட செயல்களில் ஒருவன் ஈடுபடுகிறான். ஒருவனுக்கு எதில் ஆர்வம் அதிகம் இருக்கின்றதோ, அது தொடர்பான செயல்களில் அவன் ஈடுபடுகிறான். அதற்குத் தொடர்பில்லாத செயல்களில் அவன் ஈடுபடுவதில்லை. அவற்றை அவன் மனம் நாடுவதும் இல்லை. சுற்றப்புறத்தில் பல வாய்ப்புகள் இருக்கலாம். ஆனால், எல்லா வாய்ப்புகளையும் ஒருவன் பயன்படுத்துவதில்லை. அவனது ஆர்வத்துக்குத் தொடர்பான வாய்ப்புகளையே ஒருவன் பயன்படுத்துகின்றான். இதிலிருந்து ஆர்வம் காரணமாக அவன் சுற்றுப்புறத்திலுள்ள வாய்ப்புகளிலிருந்து சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பயன்படுத்துவதை நாம் காண்கின்றோம்.

ஆர்வத்துக்கும் (interest) கவனத்திற்கும் (attention) முக்கியத் தொடர்பு உண்டு. ஒன்றில் ஆர்வம் இருக்குமென்றால் அதில் கவனம் உண்டாகின்றது. கவனம் தொடர்ந்து ஆழ்ந்திருக்க ஆர்வம் காரணமாகின்றது. ஆர்வம் இல்லாத ஒரு செயலிலோ அல்லது பொருளிலோ கவனம் நிலைத்து நிற்பதில்லை. அது விரைவில் சிதைந்து விடுவதும் உண்டு. ஆர்வம் இல்லாத ஒன்றில் சில சமயங்களில் கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்படலாம். சோர்வு காரணமாக ஆர்வம் இல்லாத பாடப் புத்தகத்தில் கவனம் செலுத்திப் படிக்க வேண்டிய தேவை உண்டாகின்றது. இவ்வாறு தேவை காரணமாகச் செலுத்துகின்ற கவனம் வலிந்து செலுத்தும் கவனமாகும். ஆனால், ஆர்வம் இருந்தால் கவனம் வலிந்து செல்லுவதாக இருக்காது. அது தானே முயற்சியின்றி எளிதாகச் செலுத்தும் கவன

மாகும். இன்னும் சொன்னால், கவனத்தை நாம் செலுத்துவதில்லை, அது தானாகச் செல்லுகிறது.

ஆர்வங்களின் வளர்ச்சியும் மாறுதலும்

குழந்தைப் பருவத்தில் காணப்படும் சில ஆர்வங்கள் தொடர்ந்து குமரப் பருவத்திலும் இருப்பதைக் காணலாம். இவை தவிர குமரப் பருவத்தில் சில புதிய ஆர்வங்களும் உண்டாகின்றன. மேலும், குழந்தைப் பருவத்தில் உள்ள சில ஆர்வங்களின் வேகம் படிப்படியாகக் குமரப் பருவத்தில் குறைந்துபோவதை உணரலாம். குழந்தைப் பருவத்தில் சிறிய அளவில் இருக்கின்ற ஆர்வங்கள் குமரப் பருவத்தில் வேகம் முற்றிப் பெரிதாவதும் உண்டு. எடுத்துக் காட்டாகப் பின்வரும் இரண்டு படங்களையும் (படம்-27) பார்க்கலாம்.

முதல் படத்தில் வயது ஆகஆகக் குறைந்து வரும் சில ஆர்வங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாட்குறிப்பு எழுதுதல், ரகசிய இடங்களுக்குச் செல்லுதல் போன்ற ஆர்வங்கள் 11, 12 வயதில் அதிகமாக இருக்கின்றன. ஆனால் 16, 17 வயது ஆகும்பொழுது மிகவும் குறைந்துபோவதைப் படத்தில் காணலாம். இரண்டாவது படத்தில் இதற்கு நேர்மாறான சில ஆர்வங்களின் வளர்ச்சியைக் காண்கின்றோம். கண்காட்சிகளைப் பார்த்தல், சீட்டு விளையாடுதல் முதலிய ஆர்வங்கள் 11, 12 வயதில் மிகக் குறைவாக இருந்து, 16, 17 வயது ஆகும்பொழுது மிகவும் அதிகமாவதையும் காண்கிறோம்.

ஆர்வங்களின் மாறுதல்பற்றிச் செய்யப்பட்ட இன்னோர் ஆராய்ச்சியின் முடிவுகள் படம் 28-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கும் 6ஆவது வகுப்புப் பிள்ளைகள் அதாவது 12 வயதுப் பிள்ளைகள் மிகவும் விரும்பிச் செய்கின்ற சில ஆர்வங்கள் படிப்படியாகக் குறைந்து 12ஆவது வகுப்புநிலை வரும்பொழுது அதாவது 18 வயது ஆகும்பொழுது அந்த ஆர்வங்கள் அநேகமாக இல்லாமல் போய் விடுவதையும் படத்தில் பார்க்கலாம். சிறு குழந்தைக்கான 'குழந்தை வாழ்க்கை' என்ற பத்திரிகையை 6ஆவது வகுப்புப் பிள்ளைகளில் 60% பேர் படிக்கிறார்கள். ஆனால், 12ஆவது வகுப்புப் பிள்ளைகளில் ஒருவர்கூட அதைப் படிப்பது கிடையாது.

ஆர்வங்களின் வளர்ச்சியில் இன்னொரு வகை உண்மையைப் பார்க்கலாம். சிறு குழந்தை கொள்ளும் ஆர்வம் பொதுவாகத் தனது சொந்த வாழ்க்கையோடு ஒட்டி அமைவதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சிறு குழந்தை ஒரு புதிய மிருகத்தைப் பார்க்கும் பொழுது, 'இது என்ன மிருகம், இது என்னைக் கடிக்குமா' என்று எண்ணுகிறது. அந்த மிருகத்தினுடைய சிறப்பான தன்மை என்ன என்பதைப்பற்றி அறிவுபூர்வமாகத் தெரிந்துகொள்ளவேண்டும்

என்ற ஆர்வம் அதிகம் இல்லை. ஆனால், அந்த மிருகம் கடிக்குமா அல்லது வேறு ஏதாவது தீங்கிழைக்குமா என்று தனது சொந்த வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கின்ற மனப்பான்மை சிறு குழந்தையிடம் பார்க்கின்றோம். ஆனால், வயது ஆகஆக விஞ்ஞான




1. இரகசியமாக குழு கூடுகின்ற இல்லத்திற்கு போக விருப்பம்.
2. உருவாக்கும் விளையாட்டுப்பொருளை வைத்திருக்க விருப்பம்.
3. "கண்டுபிடிப்பு" என்னும் சஞ்சிகையை படிக்க விருப்பம்.
4. நட்சத்திரங்களைப்பற்றி கற்க விருப்பம்.
5. நாட்குறிப்பு எழுத விருப்பம்.

1. கார் கண்காட்சியைச் சென்று பார்க்க விருப்பம்
2. கட்டிடக்கலைஞராக விருப்பம்.
3. 'டைம்' எனும் சஞ்சிகையை படிக்க விருப்பம்.
4. நடனமாட விருப்பம்
5. சீட்டு விளையாட விருப்பம்.

ஆண்பிள்ளைகளிடத்து தனித்த அக்கரையின் வளர்ச்சி அல்லது குறைவு.

படம் 27

பூர்வமாகத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகின்றது. ஆர்வங்களின் வளர்ச்சிக்கும், மனத்தின் பக்குவத்தின் வளர்ச்சிக்கும் முக்கியத் தொடர்பு உண்டு. குமரப் பருவத்தில் அறிவு பல வகைகளிலும் வளருகின்றது என்பதை முன்னரே பார்த்திருக்கின்றோம். இத்தகைய அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப ஆர்வங்களும் வளருகின்றன.




- - - - - தபால் பில்லைகளின் சேகரிப்பை வைத்திருக்க அக்கரை.

—— — — மந்திரவாதியின் உடையை வைத்திருக்க் ஆர்வம்.

—— - - - ‘குழந்தை வாழ்க்கை’ எனும் சஞ்சிகையைப் படிகக ஆர்வம்

———— குண்டு விளையாட ஆர்வம்.

வகுபபுநிலை அந்தஸ்து மாறும்பொழுது நான்கு குழந்தைப்பருவ அக்கரையின் ஏற்படும் மாறுதல்கள்.

படம் 28

குமரப் பருவத்தில் பையன்களுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் பால் உணர்வு அதிகமாக உண்டாகின்றது என்பதையும் முன்னர்ப் பார்த்திருக்கின்ரேம். இது அவர்களுடைய ஆர்வங்களில் பிரதிபலிக்கின்றது. இருபாலாருக்குமே தங்களது சொந்தத் தோற்றத்தில் அதிக ஆர்வம் உண்டாகின்றது. தலையை வாருவதிலும், துப்புரவான அழகிய துணிகள் அணிவதிலும் இருபால் பிள்ளைகளுக்கும் ஒரு புதிய ஆர்வமும் அக்கறையும் உண்டாகின்றன. சிறு குழந்தைகளாய் இருக்கும்பொழுது பெற்ரேர்தான் உடல் துப்புரவு பற்றியும், உடுத்தும் துணிபற்றியும் அக்கறை எடுக்கவேண்டியிருக்கின்றது. அவர்கள் சொல்லிச் சொல்லிச் சிறிது கட்டாயப்படுத்திக்கூட, இது சம்பந்தமாகப் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கிருர்கள். ஆனல், குமரப் பருவம் வந்தபிறகு நிலைமை முற்றிலும் மாறிவிடுகின்றது. பெற்ரேரது தூண்டுதல் இப்பொழுது அவசியமில்லை. பிள்ளைகளுக்கு உடையிலும், துப்புரவிலும், முக அழகிலும் ஆர்வம் மிகுந்துவிடுகின்றது.

மன வளர்ச்சியும், பால் உணர்வும் ஆர்வங்கள் அமைவதற்குக் காரணமாக இருப்பதுபோல ஊர்ச் சூழ்நிலையும் ஒரு முக்கியமான காரணமாகவுள்ளது. கிராமப்புறங்களில் வாழ்கின்ற பிள்ளைகளின் ஆர்வங்களுக்கும், நகர்ப்புறத்தில் வாழ்கின்ற பிள்ளைகளின் ஆர்வங்களுக்கும் வேற்றுமை இருப்பதைக் காணலாம். நகரத்துப் பிள்ளைகள் சமூகச் செயல்களிலும், சமூக வாழ்வுக்கான திறமைகளை வளர்ப்பதிலும் அதிகமாக ஆர்வம் காட்டுகின்ருர்கள். கிராமத்துப் பிள்ளைகள் இதில் அவ்வளவுதூரம் ஆர்வம் காட்டுவதில்லை. இரண்டு இடத்துப் பிள்ளைகளுக்கும் பொதுவாகவுள்ள ஆர்வங்களிலும் வேற்றுமை இருப்பதைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, பொருள்களைச் சேர்த்தல் என்பது எல்லாப் பிள்ளைகளிடமும் காணப்படுகின்ற ஓர் ஆர்வம். ஆனல், கிராமத்துப் பிள்ளைகள் (மேலைநாட்டில்) பறவைகளின் முட்டைகளைச் சேகரிக்கிருர்கள் என்ருல், நகரத்துப் பிள்ளைகள் பாட்டில் மூடியைச் சேகரிப்பதாகச் சொல்லுகிருர்கள். நம்முடைய நாட்டில் நகரத்துப் பிள்ளைகள் சர்வதேசத் தபால் தலைகளையும், பத்திரிகைப் படங்களையும் சேகரிக்கிருர்கள் என்ருல், கிராமத்துப் பிள்ளைகள் அழகிய கூழாங்கற்களையும், குண்டுமணி போன்ற பொருள்களையும் சேகரிக்கிருர்கள்.

இரண்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களிடம் அவர்கள் ஓய்வுநேரத்தில் பொழுதுபோக்குக்காக என்னென்ன செயல்களில் ஈடுபடுகின்ருர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த விடைகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளோம்.

உயர்நிலைப்பள்ளி—1 (31 மாணவர்கள்)

| ஓய்வுநேரச் செயல் | ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. புத்தகம் படித்தல் ... ... | 16 |
| 2. பட ஆல்பம் தயாரித்தல் ... ... | 11 |
| 3. ஓவியம் வரைதல் ... ... | 8 |
| 4. விளையாட்டு ... ... | 6 |
| 5. தோட்ட வேலை ... ... | 6 |
| 6. வானொலி கேட்டல் ... ... | 5 |
| 7. அரட்டையடித்தல் ... ... | 4 |
| 8. செய்தித்தாள் படித்தல் ... ... | 3 |
| 9. சினிமா பார்த்தல் ... ... | 2 |
| 10. பிறருக்கு உதவுதல் ... ... | 2 |
| 11. கணக்குப் போடுதல் ... ... | 1 |
| 12. ஆட்டோகிராப் வாங்குதல் ... | 1 |
| 13. சிந்தனை செய்தல் ... ... | 1 |
| 14. தூங்குதல் ... ... | 1 |

உயர்நிலைப்பள்ளி—2 (71 மாணவர்கள்)

| ஓய்வுநேரச் செயல் | ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. புத்தகம் படித்தல் ... ... | 44 |
| 2. விளையாடுதல் ... ... | 26 |
| 3. வீட்டிற்கு வேண்டியன செய்தல் ... | 17 |
| 4. தோட்டவேலை செய்தல் ... | 12 |
| 5. ஓவியம் வரைதல் ... ... | 7 |
| 6. பட ஆல்பம் தயாரித்தல் ... | 6 |
| 7. ஊர் சுற்றுதல் ... ... | 6 |
| 8. சினிமா பார்த்தல் ... ... | 5 |
| 9. பாட்டுக் கேட்டல் ... ... | 5 |
| 10. கதை எழுதுதல் ... ... | 5 |
| 11. பத்திரிகைகள் படித்தல் ... ... | 4 |
| 12. அரட்டை அடித்தல் ... ... | 4 |
| 13. சிந்தனை செய்தல் ... ... | 4 |
| 14. தலைவர்களின் பேச்சைக் கேட்டல் ... | 2 |
| 15. வானொலி கேட்டல் ... ... | 1 |
| 16. 'பைண்டிங்' செய்தல் ... ... | 1 |
| 17. குழந்தைகளிடம் விளையாடுதல் ... | 1 |
| 18. விலங்குகளிடம் அன்பு செலுத்துதல் ... | 1 |
| 19. குரான் ஓதுதல் ... ... | 1 |

மேற்கண்ட விவரங்களிலிருந்து மாணவர்கள் பலதரப்பட்ட செயலில் ஈடுபடுவது தெரிகின்றது. இதுபற்றி விரிவாக விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம். இத்தகைய ஆராய்ச்சி நம் நாட்டில் இன்னும் செய்யப்படவில்லை.

## ஆர்வங்களின் வகைகள்

குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஆர்வங்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். பொதுவாக அறிஞர்களால் முக்கியமாகக் கருதப்படு கின்ற சில வகைகளாவன :

(1) விளையாட்டைப்பற்றிய ஆர்வங்கள்
(2) புத்தகம், பத்திரிகை படித்தல்பற்றிய ஆர்வங்கள்
(3) சினிமாபற்றிய ஆர்வங்கள்
(4) தொழில்பற்றிய ஆர்வங்கள்
(5) பாட சம்பந்தமான ஆர்வங்கள்

இவ் ஆர்வ வகைகள்பற்றி நாம் இப்போது பார்க்கலாம்.

## விளையாட்டுபற்றிய ஆர்வங்கள்

சிறு குழந்தைப் பருவத்திலிருந்து குமரப் பருவம் முடிய குழந்தைகள் என்னென்ன விளையாட்டுகளை விரும்புகிறார்கள் என்று ஆராய்ச்சி செய்தால் சில முக்கிய உண்மைகள் தெரியவரும். நம்முடைய நாட்டில் அதுபற்றிய அதிக ஆராய்ச்சி இன்னும் நடைபெறவில்லை. ஆனால், மேலை நாடுகளில் மிக விரிவான ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதன் பயனாக வயதுநிலைக்கேற்ப குழந்தைகள் ஆர்வத்துடன் விளையாடும் விளையாட்டுகள் மாறுவதைக் கண்டு அவற்றை வரிசைப்படுத்தியும் வருகின்றார்கள். இவ் வகையில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சில முக்கிய வேற்றுமைகள் உண்டு. அவற்றையும் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள் (படம் 29 பார்க்கவும்).

மூன்று வயதுள்ள ஆண்பிள்ளைகள் பொதுவாகத் தன்னந் தனியாக இருந்துகொண்டு, சில பொருள்களை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும். 6 வயது ஆண்பிள்ளை பந்து அல்லது வேறு பொருள்களை வைத்துக்கொண்டு ஓடியும் ஆடியும் விளையாடும். பின் இன்னும் கொஞ்சம் வயது ஆன பிறகு கோலி விளையாடுதல், பம்பரம் சுற்றுதல், பட்டம் விடுதல் போன்ற விளையாட்டுகளில் பையன்கள் இருந்துவிடுகின்றார்கள். இவை தவிர, பிள்ளைகள் குழுக்களாகச் சேர்ந்து, கைப்பந்து, மட்டைப்பந்து போன்ற விளையாட்டு களில் ஈடுபடுகிறார்கள். குமரப் பருவத்து ஆரம்பத்தில் உல்லாசப்




வெவ்வேறு வயது நிலைகளில் தனித்த விளையாட்டில் ஆர்வங்கள்.

படம் 29

பிரயாணம் செல்லுதல், முகாமிடுதல், நீந்துதல் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உண்டாகிறது. பின்னர்க் குழு விளையாட்டுப் போட்டிகளில் தீவிர ஆர்வம் உண்டாகும். குமரப் பருவம் முதிர்ச்சி அடைகின்ற நிலையில் தவிர, வெளி விளையாட்டுகளில் ஆர்வம் குறைந்து இருபால் பிள்ளைகளும் சேர்ந்து விளையாடக்கூடிய வீட்டு விளையாட்டுகளிலும் ஈடுபாடு அதிகமாகும்.

மேற்படி படத்தில் பெண்பிள்ளைகள் விரும்புகின்ற விளையாட்டுகளின் வரிசையையும் பார்க்கலாம். 3 வயது சமயத்தில் பெண் குழந்தையும் தனியாக உட்கார்ந்து ஏதாவது ஒரு பொருளை வைத்துக்கொண்டு விளையாடுகின்றது. ஆனால், அது பயன்படுத்தும் பொருள்கள் ஆண்பிள்ளை பயன்படுத்தும் பொருள்களினின்றும் வேறுபட்டதாகும். என்றாலும், விளையாடுகின்ற முறையிலே ஆண் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வேற்றுமை இல்லை. 6 வயதானதும் பெண் குழந்தை பொம்மை முதலியன வைத்துக் கொண்டு விளையாடுகின்றது. பின்னர் வேறு சில குழந்தைகளோடு சேர்ந்து வீட்டுச் சம்பந்தமான விளையாட்டுகளில் ஈடுபடுகின்றது. 12 வயது ஆகும்பொழுது பெண்பிள்ளைகளும், ஆண்பிள்ளைகளைப் போல் நீந்துதல், பனிச்சறுக்கல் (skate) பண்ணுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சில ஆண்டுகளாகும் பொழுது விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமாக ஈடுபடுகிறார்கள். ஆனால், ஆண்பிள்ளையைப்போன்று அவ்வளவு தூரம் ஆர்வம் காட்டுவதில்லை. ஆண்பிள்ளைகளுக்கு ஓர் ஆண்டுக்கு முன்பாகவே பெண்பிள்ளைகளுக்குச் சமூக இயல்புடைய பொழுதுபோக்குச் செயல்களில் ஆர்வம் உண்டாகின்றது. தேநீர் விருந்துகள், சினிமாவுக்குப் போதல், நடனங்களுக்குச் செல்லுதல் போன்ற செயல்களில் விருப்பம் உண்டாகின்றது. ஓரிரு ஆண்டுகளுக்குமுன்பே பெண்பிள்ளைகள் உடலும் மனமும் பக்குவம் அடைவது நமக்குத் தெரிந்ததே. அதற்காகத் தீவிரமாக விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டிருக்கும் ஆண்பிள்ளைகளுக்கும், 17, 18 வயது ஆகும்பொழுது திடீரென்று அவர்களின் ஆர்வம் அவற்றில் குறைந்துவிடுகிறது. இதற்குப் பின் சமூக இயல்புடைய பொழுதுபோக்குச் செயல்களில் அதிக ஆர்வம் உண்டாகிறது. இருபாலாரும் சேர்ந்து ஈடுபடக்கூடிய செயல்களிலே அதிக ஆர்வம் உண்டாகிறது.

வயது நிலைக்கேற்ப ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகளிடம் என்னென்ன விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதுபற்றி ஒருவர் செய்த ஆராய்ச்சியின் முடிவுகள் அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

| பையன் | வயது | பெண் |
|---|---|---|
| | 6-லிருந்து 8 வரை | |
| 1. கோலி விளையாடுதல்<br>வண்டி ஓட்டுதல்<br>'Cow boy' விளையாடுதல் | | வீடுகட்டி விளையாடுதல்<br>பொம்மைகள் வைத்து விளையாடுதல்<br>பள்ளிக்கூடம் போன்று விளையாடுதல் |
| | 9-லிருந்து 10 வரை | |
| 2. 'Skating' விளையாடுதல்<br>பந்து விளையாடுதல்,<br>சைக்கிள் ஓட்டுதல் | | 'Skating' ஆடுதல்<br>பெரியவர்களைப் போன்று உடை அணிந்து கொள்ளுதல்<br>'Jack' விளையாடுதல் |
| | 11-லிருந்து 12 வரை | |
| 3. கட்டைப் பந்து விளையாடுதல்<br>சைக்கிள் ஓட்டுதல்<br>'Scouting' போதல்<br>மட்டைப் பந்து விளையாடுதல் | | 'Skating' ஆடுதல்<br>வெளியிடங்களுக்கு ஹைகிங் போதல்<br>நீந்துதல்<br>புத்தகம் வாசித்தல் |
| | 13-லிருந்து 15 வரை | |
| 4. மட்டைப் பந்து விளையாடுதல்<br>கட்டைப் பந்து விளையாடுதல்<br>சினிமாவுக்குச் செல்லுதல்<br>வேட்டைக்குப் போதல்<br>விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்தல் | | புத்தகம் படித்தல்<br>நடனம் ஆடுதல்<br>விருந்துகளுக்குச் செல்லுதல்<br>சினிமாவுக்குச் செல்லுதல்<br>ஆண்பிள்ளைகளோடு வெளியே செல்லுதல்<br>விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்தல். |

மேற்கண்ட முடிவுகளைப் பார்க்கும்பொழுது ஆண்பிள்ளைகள் விரும்பும் விளையாட்டுகள் பொதுவாக நிரம்ப உடற்பயிற்சிக்கும், ஓடியாடி விளையாடுவதற்கும் வாய்ப்பளிப்பனவாக உள்ளன. பெண் பிள்ளைகள் விரும்பும் விளையாட்டுகள் அவ்வளவு தீவிர உடற்பயிற்சி உள்ளனவாக இல்லை. மேலும், ஆரம்ப வயதுகளில் பெண்பிள்ளைகளின் விளையாட்டுகள் ஆண்பிள்ளைகளின் விளையாட்டுகளிலிருந்து பெரும்பாலும் வேறுபட்டனவாக உள்ளன. ஆனால், குமரப் பருவம் எய்தும்பொழுது இருபாலாரும் விரும்புகின்ற பொதுவான விளையாட்டுகளில் ஈடுபடுவதைப் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் பால் உணர்வு ஏற்படுவது என்பது முன்னரே பார்த்திருக்கின்றோம். பால் உறவு காரணமாகப் பிற-பால் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட ஆர்வம் உண்டாகிறது.

புத்தகம், பத்திரிகை படித்தல்

குமரப் பருவத்தில் பிள்ளைகள் புத்தகம் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். புத்தகங்களைப் படிப்பதுபோலவே பத்திரிகைகளைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

கோவை மாவட்டத்திலுள்ள ஓர் உயர் நிலைப் பள்ளியைச் சேர்ந்த 31 பிள்ளைகளிடம் அவர்கள் விரும்பிப் படித்த புத்தகங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அவர்கள் அதிகமாக விரும்பிப் படித்த புத்தகங்கள் வாழ்க்கை வரலாறு நூல்கள், நாவல்கள், இதிகாசங்கள், சிறுகதைகளாகும். இதுபற்றிப் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விரும்பிப் படித்த நூல் | படித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. வாழ்க்கை வரலாறு ... ... | 31 |
| 2. நாவல் ... ... | 26 |
| 3. இதிகாசம், சமய நூல் ... | 24 |
| 4. வேறு கதைகள் | 18 |
| 5. கல்வி ... ... | 10 |
| 6. கட்டுரை ... ... | 9 |
| 7. இலக்கியம் ... ... | 3 |

இன்னொர் உயர் நிலைப் பள்ளியிலுள்ள 71 மாணவர்களிடம் மேலே குறிப்பிட்ட கேள்வி கேட்கப்பட்டது. அவர்கள் அளித்த விடைகளின் விவரம் பின்வருமாறு:

| விரும்பிப் படித்த நூல் | படித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. நாவல் ... ... | 57 |
| 2. இதிகாசம் ... ... | 39 |
| 3. அறநூல் ... ... | 35 |
| 4. கவிதை, கட்டுரை ... ... | 28 |
| 5. இலக்கியம் ... ... | 22 |
| 6. சிறுகதை ... ... | 18 |
| 7. வாழ்க்கை வரலாறு ... ... | 14 |
| 8. விஞ்ஞானம் ... ... | 8 |

மேலே கொடுத்துள்ள விவரங்களைப் பார்க்கும்பொழுது குமரப் பருவத்து மாணவர்கள் நாவல் புத்தகங்களை வெகுவாக விரும்புவது தெரிகிறது. இதிகாசம், சமய, அற நூல்கள் முதலியவற்றையும் அவர்கள் விரும்புவது குறிப்பிடத்தக்கது. நம்நாட்டுப் பிள்ளைகளின் படிப்பு ஆர்வம்பற்றி அதிகமாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை. இத் துறையில் விரிவான ஆராய்ச்சி செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும்.

மெக்கார்ட்டி என்பவர் மேலைநாட்டுப் பிள்ளைகளின் புத்தக ஆர்வங்கள்பற்றிச் செய்த ஆராய்ச்சியின் முடிவுகள் அடுத்துள்ள இரண்டு அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்பிள்ளைகள் விரும்பிப் படித்த புத்தகங்களின் வகைகள் வகுப்புவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| புத்தகங்களின் பெயர்கள் | VII | VIII | IX | X | XI | XII | All Grades |
|---|---|---|---|---|---|---|---|
| வீரச்செயல் ... ... | 29·4 | 32·4 | 29·4 | 28·4 | 20·8 | 16·6 | 27·8 |
| நாவல் கதை ... ... | 23·0 | 20·1 | 24·0 | 25·2 | 34·1 | 34·5 | 25·2 |
| மிருகங்கள் ... ... | 23·9 | 12·7 | 12 6 | 9·5 | 4·5 | 2·7 | 10·6 |
| வாழ்க்கை வரலாறு பற்றியது | 6·4 | 6·0 | 7·9 | 7·6 | 9·0 | 7·4 | 7·2 |
| பொழுதுபோக்குச் செயல்கள், விளையாட்டுகள்... ... | 5·5 | 7·7 | 7·8 | 6·6 | 4·5 | 4·5 | 6·4 |
| போர் ... ... ... | 5·0 | 6·0 | 7·2 | 6·0 | 5·3 | 7·3 | 6·1 |
| துப்பறியும் கதைகள் ... | 8·1 | 6·1 | 4·2 | 3·7 | 2·5 | 2·1 | 5·0 |
| பலவகை ... ... | 2·7 | 3·0 | 2·3 | 4·7 | 6·3 | 9·8 | 4·0 |
| விஞ்ஞானம் ... ... | 2·0 | 2·2 | 1·6 | 2·2 | 2·5 | 2·8 | 2·1 |
| கலைகள் ... ... | ·7 | ·8 | ·4 | 2·3 | 4·5 | 7·1 | 1·9 |
| சரித்திரம், பூகோளம் ... | 1·2 | ·9 | ·7 | 1·3 | 2·2 | 2·3 | 1·3 |
| நகைச்சுவை ... ... | ·4 | ·7 | ·9 | ·9 | 2·0 | ·9 | ·9 |
| புராணக் கதைகள், தேவதைக் கதைகள் ... ... | 1·1 | ·7 | ·4 | ·4 | ·5 | ·3 | ·6 |
| தொழில்கள் ... ... | ·2 | ·3 | ·1 | ·9 | ·7 | 1·1 | ·5 |
| தொழில்பற்றிய கதைகள் ... | ·4 | ·3 | ·5 | ·3 | ·4 | ·6 | ·4 |
| மொத்தம் | | | | | | | 100·00 |

பெண்பிள்ளைகள் விரும்பிப் படித்த புத்தகங்களின் வகைகள் வகுப்புவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| புத்தகங்களின் பெயர்கள் | VII | VIII | IX | X | XI | XII | All Grades |
|---|---|---|---|---|---|---|---|
| நாவல் கதை ... ... | 47·0 | 50·8 | 53·0 | 54·4 | 58·0 | 57·2 | 52·5 |
| வீரச்செயல் ... ... | 12·0 | 9·7 | 10·6 | 8·0 | 6·3 | 3·5 | 9·1 |
| மிருகங்கள் ... ... | 10·8 | 9·1 | 6·2 | 4·4 | 1·6 | 1·9 | 6·5 |
| வாழ்க்கை வரலாறு பற்றியது | 5·3 | 5·2 | 6·8 | 6·7 | 8·8 | 6·0 | 6·3 |
| துப்பறியும் கதைகள் ... | 11·0 | 7·2 | 5·9 | 3·5 | 1·4 | 1·4 | 5·8 |
| தொழில்பற்றிய கதைகள் ... | 5·2 | 7·7 | 6·5 | 5·4 | 2·8 | 1·7 | 5·4 |
| பலவகை ... ... | 3·3 | 3·3 | 4·3 | 6·8 | 7·2 | 12·4 | 5·4 |
| கலைகள் ... ... | ·7 | ·7 | ·8 | 2·7 | 6·4 | 9·2 | 2·5 |
| விஞ்ஞானம் ... ... | 1·2 | 2·1 | 1·0 | 1·6 | 1·4 | ·7 | 1·4 |
| போர் ... ... ... | ·6 | ·9 | 1·3 | 2·0 | 1·2 | 1·5 | 1·2 |
| பொழுதுபோக்குச் செயல்கள், விளையாட்டுகள் ... | ·7 | 1·1 | 1·2 | 1·4 | ·5 | 1·1 | 1·0 |
| சரித்திரம் பூகோளம் ... | ·7 | ·6 | ·8 | 1·1 | 2·0 | ·8 | ·9 |
| நகைச்சுவை ... ... | ·5 | ·4 | ·8 | ·8 | 1·3 | 1·2 | ·8 |
| புராணக் கதைகள், தேவதைக் கதைகள் ... ... | ·9 | 1·0 | ·3 | ·5 | ·3 | ·7 | ·7 |
| தொழில்கள் | ·1 | ·2 | ·5 | ·7 | ·8 | ·7 | ·5 |
| மொத்தம் | | | | | | | 100·00 |

இந்த இரண்டு அட்டவணைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சில முக்கியமான உண்மைகளைக் காணலாம். ஆண்பிள்ளைகள் விரும்பிப் படிக்கும் நூல்களில் தலையாய வகை வீரச்செயல்கள் பற்றியது. ஆனால், பெண்பிள்ளைகள் விரும்பிப் படிக்கின்ற புத்தகங்களில் தலையாய வகை நாவல் கதைகள்பற்றியது. மேலும், இவற்றின் சதவிகிதங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஆண்பிள்ளைகள் வீரச் செயல்களைப்பற்றிய நூல்களைப் படிப்பது 20-லிருந்து 30 சதவிகிதம் வரைக்கும்தான். ஆனால், பெண்பிள்ளைகள் கதை நாவல்களை விரும்பிப் படிப்பது மிகவும் அதிகம்; அதாவது 47-லிருந்து 58 சதவிகிதம் வரைக்கும். ஆண்பிள்ளைகள் கதை நாவல்களைப் படிக்காமல் இல்லை. அவர்கள் இரண்டாவதாக விரும்பிப் படிப்பது இந்த வகை நூல்கள்தாம். ஆனால், சதவிகிதம் மிகவும் குறைவு. 11, 12ஆவது வகுப்புகளில் படிக்கும்பொழுது ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் நாவல் கதைகளை மிகவும் அதிகபட்சமாகப் படிப்பதைப் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் என்ன என்பதும் நமக்குத் தெரியும். 17, 18 வயதுள்ள இருபால் பிள்ளைகளுக்கும் பால் உணர்வு காரணமாகக் காதல் முதலிய சுவைகள் நிறைந்த நூல்களைப் படிப்பதில் அதிக ஆர்வம் உண்டாகின்றது.

புத்தகங்கள் படிப்பதில் பிள்ளைகள் காட்டும் விருப்பம், பத்திரிகைகள் படிப்பதில் பொதுவாகப் பிரதிபலிப்பதைக் காண்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட இரண்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பிள்ளைகளிடம் அவர்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகைபற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. பத்திரிகைகள் என்றால் தினசரி, வார இதழ், மாத இதழ் முதலிய எல்லா இதழ்களும் அதில் அடங்கும் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் அளித்த விடைகளை அடுத்துள்ள இரண்டு அட்டவணைகளில் காணலாம்.

அந்த அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களையெல்லாம் பார்க்கும்பொழுது உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் செய்தித் தாள்களைப் படித்து உலக நடவடிக்கைகள்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொண்டிருப்பது தெரியவருகின்றது. அதுமட்டுமல்லாமல் பலவகைப்பட்ட அரசியல் பத்திரிகைகளும், பொழுதுபோக்குப் பத்திரிகைகளும் அவர்கள் படிப்பது தெரியவருகின்றது.

இளைஞர்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகைகள்பற்றியும் மேல்நாட்டில் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். நம் நாட்டில் இத் துறையில் இன்னும் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

முதல் பள்ளியைச் சேர்ந்த 31 மாணவர்கள் கூறியுள்ள விடைகளின் தொகுப்பு

| விரும்பிப் படிக்கும் பத்திரிகை | படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. நவ இந்தியா ... ... | 16 |
| 2. தினமணி ... ... ... | 15 |
| 3. கண்ணன் ... ... ... | 14 |
| 4. கல்கி ... ... ... | 14 |
| 5. கலைக்கதிர் ... ... ... | 13 |
| 6. மஞ்சரி ... ... ... | 11 |
| 7. ஆனந்தவிகடன் ... ... | 10 |
| 8. தமிழ்நாடு ... ... ... | 10 |
| 9. அம்புலி மாமா ... ... | 9 |
| 10. குமுதம் ... ... ... | 4 |
| 11. கல்கண்டு ... ... ... | 4 |
| 12. ஹிந்து (Hindu) ... ... | 4 |
| 13. தர்ம சக்கரம் ... ... ... | 4 |
| 14. சுதேசமித்திரன் ... ... | 3 |
| 15. நாடோடி ... ... ... | 2 |
| 16. நவசக்தி ... ... ... | 2 |
| 17. தினச் செய்தி ... ... | 2 |
| 18. தினத்தந்தி ... ... ... | 2 |
| 19. மாலை முரசு ... ... ... | 2 |
| 20. ஜனசக்தி ... ... ... | 1 |
| 21. பேசும் படம் ... ... ... | 1 |
| 22. ரீடர்ஸ் டைஜஸ்ட் (Reader's Digest) ... | 1 |
| 23. பிளிட்ஸ் (Blitz) ... ... | 1 |

இரண்டாவது உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 71 மாணவர்கள் கூறியுள்ள விடைகளின் தொகுப்பு

| விரும்பிப் படிக்கும் பத்திரிகை | படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. தினமணி ... ... ... | 36 |
| 2. நவ இந்தியா ... ... | 24 |
| 3. ஹிந்து (Hindu) ... ... | 15 |
| 4. முரசொலி, நம்நாடு ... ... | 15 |
| 5. தனி அரசு, தமிழ்நாடு ... ... | 14 |
| 6. கண்ணன் ... ... ... | 13 |
| 7. குமுதம் ... ... ... | 13 |
| 8. சுதேசமித்திரன் ... ... | 13 |
| 9 கல்கண்டு ... ... ... | 10 |
| 10. கல்கி ... ... ... | 10 |
| 11. மாலை முரசு ... ... ... | 10 |
| 12. ஆனந்த விகடன் ... ... | 8 |
| 13. மஞ்சரி ... ... ... | 7 |
| 14. தினத்தந்தி ... ... ... | 7 |
| 15. கங்கை ... ... ... | 7 |
| 16. கலைக்கதிர் ... ... ... | 6 |
| 17. ஸ்போட்ஸ் அண்டு பாஸ் டைம் (Sports & Past Time) ... ... | 6 |
| 18. இல்லஸ்ட்டேர்டு வீக்லீ (Illustrated Weekly.) ... ... | 5 |
| 19. மெயில் (Mail) ... ... | 5 |
| 20. அம்புலி மாமா ... ... | 4 |
| 21. டிட்-பிட் (Tit-Pit) ... ... | 4 |

சினிமா பார்த்தல்

சினிமா பார்த்தல் என்பது குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு மிகவும் விருப்பமான ஒரு பொழுதுபோக்காகும். மேலைநாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் இப்பொழுது சினிமா மிகவும் பரவி வருகின்றது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது 1952ஆம் ஆண்டில் மொத்தம் 73 சினிமாப் படங்கள் பிடிக்கப்பட்டன. ஆனால், 7 ஆண்டுகள் கழித்து 1959ஆம் ஆண்டில் 136 சினிமாப் படங்கள் பிடிக்கப்பட்டன. இது போன்றே சினிமாப் படம் காட்டும் அரங்குகளும் எண்ணிக்கையில் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற குமரப் பருவத்துப் பிள்ளைகளும் சினிமாவுக்குப் போவது வேகமாக அதிகமாகிக்கொண்டு வருகின்றது. சினிமா ஓர் அற்புதமான விஞ்ஞானச் சாதனை. அதன் கவர்ச்சி மிகவும் அதிகம். கண்ணுக்கும் செவிக்கும் ஒருங்கே விருந்தூட்டிச் சிந்தனையைத் தூண்டவும், உணர்ச்சிகளை எழுப்பவும் வல்ல சக்திவாய்ந்த சாதனம் சினிமாவாகும். ஆகவே, இளைஞர்கள் மிக்க ஆர்வத்துடன் சினிமா பார்க்கச் செல்லுவதில் வியப்பில்லை. சிறு கிராமங்களில் வாழும் இளைஞர்கள் இரவு சைக்கிள்களில் 8 மைல், 10 மைல் தூரம் சென்று சினிமா பார்த்து வருகிறார்கள்.

இரண்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களிடம் அவர்கள் விரும்பிப் பார்த்த சினிமாப் படங்களைப்பற்றிக் கேள்வி கேட்கப்பட்டது. இம் மாணவர்கள் 10, 11 வயதிலிருந்து, 17, 18 வயதுவரையுள்ள இளம் பையன்கள். 'நீங்கள் விரும்பிப் பார்த்த சினிமாப் படங்களின் பெயர்களை எழுதுங்கள்' என்று அவர்களிடம் கேட்டபொழுது பல மாணவர்கள், 'நாங்கள் எல்லாப் படங்களையும் விரும்பித்தான் பார்க்கிறோம், அவை எல்லாவற்றையும் எழுத வேண்டுமா' என்று கேட்டார்கள். இன்னும் சில மாணவர்கள் 'நாங்கள் விரும்பிப் பார்த்த எல்லாப் படங்களையும் எழுதவேண்டுமா' என்று கேட்டார்கள். இதிலிருந்து குமரப்பருவத்துப் பிள்ளைகள் சினிமாவில் கொண்டுள்ள மிக அதிகமான ஆர்வம் அவர்கள் ஏராளமாகச் சினிமாப் படங்கள் பார்ப்பது, அனேகமாக எல்லாப் படங்களையும் ஆசையோடு பார்ப்பது என்பது தெரியவருகிறது. சினிமாபற்றிய இக் கேள்வி அவர்களிடம் ஏப்ரல் மாதம் (1962) கேட்கப்பட்டது. அவர்களிடம் கேட்ட கேள்விகள் இரண்டு. ஒன்று, எத்துணைப் படங்கள் பார்த்துள்ளார்கள் எனக் கேட்பது; மற்றொன்று, விரும்பிப் பார்த்துள்ள படங்களின் பெயர்களைக் கேட்பது.

முதல் உயர்நிலைப் பள்ளியில் விடை சொன்ன 92 பேர்களில் 54 பேர்கள் 50 படங்கள்வரை பார்த்ததாகச் சொன்னார்கள். 29 மாண

வர்கள் 50-லிருந்து 100 படங்கள்வரை பார்த்ததாகச் சொன்னார்கள். 9 மாணவர்கள் 100-லிருந்து 200 படங்கள்வரை பார்த்ததாகச் சொன்னார்கள். இரண்டாவது உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 89 மாணவர்களில் 51 பேர்கள் 50 சினிமாப் படங்கள்வரை பார்ப்பதாகச் சொன்னார்கள். 22 மாணவர்கள் 100 படங்கள்வரை பார்த்ததாகச் சொன்னார்கள். 6 மாணவர்கள் 200 படங்கள்வரை பார்த்ததாகச் சொன்னார்கள். 10 மாணவர்கள் 200-க்கு மேற்பட்ட படங்கள் பார்த்ததாகச் சொன்னார்கள். 'இதுவரை நீங்கள் எத்தனைப் படங்கள் வரை பார்த்திருக்கிறீர்கள், சுமாரான எண்ணிக்கை சொன்னால் போதும்' என்ற கேள்வியைக் கேட்டபொழுது பல மாணவர்கள் திகைப்படைந்தார்கள். அதாவது அவர்கள் எத்தனையோ படங்களைப் பல ஆண்டுகளாகப் பார்த்து வருகின்றார்கள். ஆகவே, அதன் எண்ணிக்கையைப்பற்றிக் கேள்வி கேட்டபோது பெரிய வியப்பாக இருந்தது.

ஒரு சமூகப்பணி ஆராய்ச்சி மாணவர் கோவை நகரத்திலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 80 மாணவர்களின் சினிமா செல்லும் பழக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். 80 மாணவர்களில் 60 மாணவர்கள் ஒரு மாதத்தில் 8-லிருந்து 10 படங்கள்வரை பார்ப்பதாகக் சொன்னார்கள். அதாவது 3 நாட்களுக்கு ஒரு முறை ஒரு சினிமாப்படம் பார்ப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்குப் பெற்றோர் செலவு செய்யக் கொடுக்கும் பணத்தில் 3/4 பங்கு சினிமாவுக்குச் செலவு செய்கிறார்கள். பெங்களூர் நகரத்திலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஓர் ஆசிரியர் 'ஒவ்வொரு வாரத்திலும் சினிமாப்படம் பள்ளிக்கு அருகிலுள்ள கொட்டகையில் மாறுகின்ற நாளன்று மாணவர்கள் சரியாக வகுப்பிற்கு வருவதில்லை' என்று கண்டுபிடித்தார். இது போல் பல பள்ளிகளில் நடைபெறுவதாக அவர் சொன்னார். கோவை நகரத்தைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 80 பேர்களிடம் கேட்டதில் அவர்களில் 64 பேர்கள் சினிமாக் கொட்டகைக்குச் சென்று அங்கு பார்க்கின்ற படத்தையே பள்ளிக்கூடங்களில் காட்டுகின்ற செய்திப் படத்தைவிட அதிகமாக விரும்பியதாகச் சொன்னார்கள். இவ்வாறு விரும்புவதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறினார்கள்:

1. பள்ளிக்கூடத்தில் தரையில் உட்கார வேண்டியிருக்கிறது; ஆனால், கொட்டகையில் உட்காருவதற்கு வசதியான இருக்கைகள் உள்ளன.
2. பள்ளிக்கூடத்தில் காட்டும் படங்கள் போதிய சுவையில்லாத செய்திச் சித்திரங்களாக உள்ளன. ஆனால், நாங்கள் பலதரப்பட்ட படங்களைப் பார்க்க விரும்புகின்றோம். உதாரணமாகக் கார்ட்டூன் படம், செய்திப்படம் (news

reel), டாக்குமென்டரிப் படங்கள் (documentary) இன்னும் பலவகைப் படங்கள் பார்க்கிறோம்.

3. கொட்டகையில் சௌகரியமாகப் போய்வர முடிகின்றது. அங்குப் புகை பிடிக்கலாம்.
4. கொட்டகையில் பள்ளிக்கூட வகுப்பறைச் சூழ்நிலை கிடையாது. கொட்டகையில் பெண்பிள்ளைகள் இருப்பது எங்கள் இன்பத்தை அதிகப்படுத்துகின்றது.
5. அரசாங்கச் செய்திப் படங்கள் எவ்வளவு நன்றாகப் பிடித்திருந்தபோதிலும் அவற்றில் சுவையில்லை.

இந்த 80 பிள்ளைகளிடம் அவர்கள் விரும்பிய படங்கள் என்ன என்று கேட்டபொழுது பலமாணவர்கள் 'மலைக்கள்ளன்', 'நாடோடி மன்னன்' என்ற இரண்டு படங்களைக் குறிப்பிட்டார்கள். வீரச் செயல், காதல் நிரம்பியுள்ள படங்கள் இளம் பிள்ளைகளுக்கு மிகவும் பிடிக்கின்றன. இவர்களில் பலர் டால்ஸ்டாயின் புகழ்பெற்ற நாவல் கதையிலிருந்து தயாரிக்கப்பட்ட 'போரும் அமைதியும்' (War and Peace) என்ற படத்தையும், வால்ட் டிஸ்னியின் அழகிய படப்பிடிப்பாகிய 'உயிருள்ள பாலைவனம்' (Living Desert) என்ற படத்தையும் பார்த்தார்கள். இவ்விரண்டில் அவர்கள் 'உயிருள்ள பாலைவனத்தைப்' பெரிதும் விரும்பினார்கள். இதிலிருந்து கதையில்லாத செய்திப் படத்தையும், மிக நேர்மையான முறையில் பிடித்துக்காட்ட முடியும்; ஏனெனில், அது அவர்களுக்கு விருப்பமாகவே இருக்கின்றது என்பது தெரியவருகின்றது.

முதலில் கூறியுள்ள இரண்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் தாங்கள் மிகவும் விரும்பிப் பார்த்த படங்களைக் கூறுமாறு கேட்டதில் பின்வருமாறு சொன்னார்கள் :

முதல் உயர்நிலைப் பள்ளி

| | படத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பாவ மன்னிப்பு ... ... | 34 |
| 2. | பாசமலர் ... ... ... | 32 |
| 3. | கண் திறந்தது ... ... ... | 25 |
| 4. | பார்த்தால் பசிதீரும் ... ... | 23 |
| 5. | ஔவையார் ... ... ... | 20 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மன் ... | 19 |
| 7. | பாலும் பழமும் ... ... ... | 17 |
| 8. | தாய் சொல்லைத் தட்டாதே ... ... | 13 |
| 9. | தெனாலிராமன் ... ... ... | 13 |
| 10. | சக்கரதாரி ... ... ... | 13 |
| 11. | கப்பலோட்டிய தமிழன் ... ... | 13 |

ஒரு சில மாணவர்கள் இராமகிருஷ்ணர் சரிதம், பத்துக் கட்டளைகள் (Ten Commandments), பென்ஹர் (Benhur) போன்ற படங்களைக் குறிப்பிட்டார்கள். குமரப் பருவத்து மாணவர்கள் சினிமாப் படங்களை மிகவும் நுட்பமாகப் பூர்த்தியாகப் பார்த்து அனுபவிப்பதாகச் சொல்ல முடியாது. மேலும் அதிகமாக மாணவர்கள் குறிப்பிட்டுள்ள படங்கள் அவர்கள் அண்மையில் பார்த்த படங்களாக இருக்கவேண்டும். சினிமாவின் தரம் அல்லது நடிப்பின் நுட்பம் போன்றவற்றைவிடச் சினிமா பார்ப்பதால் ஏற்படுகின்ற ஒரு கிளர்ச்சி, எழுச்சி, ஓர் இனிய அன்புதான் அவர்கள் சினிமாவை விரும்பிப் பார்க்கத் தூண்டுகிறது.

இரண்டாவது உயர்நிலைப்பள்ளி

| | படத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாசமலர் ... ... ... | 40 |
| 2. | வீரபாண்டிய கட்டபொம்மன் ... | 35 |
| 3. | படிக்காத மேதை ... ... | 30 |
| 4. | தாய் சொல்லைத் தட்டாதே ... ... | 28 |
| 5. | கப்பலோட்டிய தமிழன் ... ... | 24 |
| 6. | பத்துக் கட்டளைகள் (Ten Commandments) | 24 |
| 7. | பாவ மன்னிப்பு ... ... | 24 |
| 8. | ஹெர்குலஸ் ... ... ... | 14 |
| 9. | இராமாயணம் ... ... ... | 13 |
| 10. | பாலும் பழமும் ... ... ... | 11 |
| 11. | கல்யாணப் பரிசு ... ... | 11 |
| 12. | கொஞ்சும் சலங்கை ... ... | 11 |
| 13. | சாரதா ... ... ... | 10 |

ஒரு சில மாணவர்கள் ஔவையார் போன்ற படங்களைக் குறிப்பிட்டார்கள். இவ்விரண்டாவது உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் நகரத்துப் பிள்ளைகள் என்ற காரணத்தால் ஆங்கிலப் படங்களில் அதிக ஆர்வம் காட்டியிருப்பது தெரிகின்றது. மேலே குறிப்பிட்ட, முதல் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மேலும், அவர்கள் ஒரு லட்சிய முறையில் விடுதிச் சூழ்நிலையில் வாழ்ந்துவரும் மாணவர்கள். ஆகவே, அவர்கள் ஔவையார் போன்ற படங்களை அதிகம் விரும்புகின்றார்கள். இரண்டாவது உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் வீர தீரச் செயல்கள் நிறைந்த 'ஹெர்குலஸ்' போன்ற படங்களை விரும்பிப் பார்ப்பது அவர்களுடைய குமரப் பருவத்து ஆர்வங்களைக் காட்டுகின்றது.

அமெரிக்காவில் இளம் பிள்ளைகள் சினிமாவுக்குப் போவதைப் பற்றி டாக்டர் எட்கர்டேல் என்பவர் ஒரு முக்கியமான ஆராய்ச்சி செய்தார். சினிமா பார்க்கச் செல்லும் பிள்ளைகள் எத்தனை தடவை சினிமா பார்க்கிறார்கள் என்பதுபற்றியும், யார் யாருடன் செல்லுகிறார்கள் என்பதுபற்றியும், இது சம்பந்தமான மற்றும் முக்கிய அம்சங்கள்பற்றியும் 20ஆயிரம் பிள்ளைகளிடமிருந்து விவரங்கள் சேகரித்து டாக்டர் டேல் ஆராய்ச்சி செய்தார். ஒரு வாரத்தில் எத்தனை தடவைகள் சென்றார்கள் என்பதுபற்றிய விவரம் கீழே காட்டியுள்ள படத்தில் காணலாம்:




சினிமாவுக்கு செல்லும் அளவு.

படம் 30

வயதாக ஆக அதிகமாகச் சினிமாவுக்குச் செல்லுவதைப் படத்தில் பார்க்கலாம்.

யார் யாருடன் செல்லுகிருர்கள் என்பதுபற்றிய விவரத்தைக் கீழ்க்கண்ட படத்தில் பார்க்கலாம் :




சினிமாவுக்கு உடன் செல்பவர்கள்

படம் 31

வயதாக ஆக சம வயதுடைய தோழர்களுடன் சினிமாவுக்குப் போகின்ற பழக்கம் அதிகமாவது படத்தினின்றும் தெரிந்து கொள்ளலாம்.

சினிமா பார்ப்பதனுல் பிள்ளைகளின் மனப்பான்மையில் என் னென்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதுபற்றியும் கவனிக்க வேண்டும். ஒருவர் செய்த ஆராய்ச்சியிலிருந்து 60 சதவிகிதத்துக்கு மேலான மாணவர்கள் காலையில் பகல் கனவு காணும்பொழுது சினிமாவில் கண்ட அனுபவங்களே வந்ததாகச் சொல்லியிருக்கிருர்கள். மேலும், சினிமாவில் வருகின்ற உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகள் அவர்கள் உள்ளத்தைப் பாதித்ததாகவும் சொல்லியிருக்கிருர்கள். 50 சதவிகிதத்துக்கு மேலான மாணவர்கள் சினிமாவில் வருகின்ற காதல் நிகழ்ச்சிகள் தங்களது உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்டி ஏழுப்புவதாகவும் சொன்னுர்கள். பொதுவாகச் சினிமாவில் வருகின்ற நடை, உடை, பாவனைகள், பேச்சுமுறைகள் இன்னும் பலவற்றை இளைஞர்கள் அறிந்தோ அறியாமலோ பின்பற்ற முயற்சி செய்கிருர்கள் என்பது எல்லோரும் கண்கூடாகக் காண்கின்ற ஒன்று.

சினிமாவினுல் உண்டாகும் நன்மை, தீமைகள்பற்றி எவ்வளவோ பேசப்பட்டு வருகின்றன. இவற்றைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

### தொழில்பற்றிய ஆர்வங்கள்

சிறு குழந்தையாக இருக்கும்பொழுது ஒருவனுக்குத் தொழில் பற்றிய எண்ணமோ, ஆர்வமோ சிறிதும் உண்டாவதில்லை. ஆனுல், குமரப் பருவம் எய்தும்பொழுது தொழில்பற்றிய எண்ணங்களும் ஆர்வங்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக ஆண்பிள்ளைகளுக்கு இது பற்றிய எண்ணங்கள் அதிகமாகத் தோன்றும். தற்காலத்தில் பெண்பிள்ளைகளும் வேலைக்குப் போகின்ற பழக்கம் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. ஆகவே, அவர்களுக்கும் ஓரளவுக்குத் தொழில்பற்றிய ஆர்வம் உண்டாகின்றது.

தற்காலச் சமூகம், முற்காலச் சமூகத்தைவிடப் பலவகைகளில் வளர்ச்சி பெற்றிருக்கும் சமூகம், பலவகையான இயந்திரத் தொழில்களும், அலுவலகத் தொழில்களும், சமூக நலம்பற்றிய தொழில்களும் தற்காலச் சமூகத்தில் உண்டாகியுள்ளன. முற்காலத்தில் விவசாயமே பெரும் தொழிலாக இருந்தது. அதனேடு சேர்த்து அதற்குத் துணையாக ஒரு சில துணைத் தொழில்கள்மட்டுமே இருந்தன. ஆனுல், இன்று பலதரப்பட்ட எத்துணையோ தொழில்கள் உண்டாகியிருக்கின்ற காரணத்தால் குமரப் பருவத்திலுள்ள இளைஞர்களுக்குத் தொழில்பற்றிய அறிவுரை கூறி வழிகாட்டவேண்டியது ஆசிரியர், பெற்றேருடைய ஒரு முக்கியமான கடமையாகும்.

இவ்வாறு வழி காட்டுவதற்குப் பையனுடைய இயல்பான ஆர்வங்களின் போக்கு எவ்வாறு அமைகின்றது என்பது தெரிய

வேண்டும். இந்த ஆர்வங்கள் பெரும்பாலும் அவனுடைய இயற்கையான திறமைகளுக்கேற்ப உண்டாகும். இவைபற்றிய விவரம் நமக்குத் தெரிந்தால் பையனுக்குச் சரியான வழி காட்டுவதற்கு உதவியாக இருக்கும்.

பையனது தொழில்பற்றிய ஆர்வங்கள் பலவகைகளில் தெரியலாம். அவன் படிக்கும் புத்தகங்கள், அவன் காட்டும் சொல் திறமைகள், அவன் விரும்பும் தலைவர்கள், முன்மாதிரியாகக் கொள்ளுகின்ற பெரியவர்கள் இன்னும் பல வகைகளில் அவனது ஆர்வத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், ஆர்வங்கள் காலத்திற்கேற்ப மாறவும் செய்யும். ஒரு சமயம் ஒன்றில் அதிக ஆர்வம் காட்டி, இன்னொரு சமயம் வேறொன்றில் ஆர்வம் காட்டுவதும் உண்டு. பெற்றோருடைய விருப்பு, வெறுப்புகள் காரணமாகத் தன்னை அறியாது, பையனுக்கும் விருப்பு வெறுப்புகள் உண்டாவதுண்டு. சில பெற்றோர்கள் தங்களைப்போன்றே தங்கள் பிள்ளைகளும் தொழில் செய்ய வேண்டும் என்று எண்ணி, அவ்வாறே அவனது மனத்தைத் திருப்ப முயற்சி செய்கிறார்கள். இது நல்லதல்ல. ஏனெனில், தந்தையினுடைய தொழிலுக்கும் மகனுடைய இயற்கைத் திறமைக்கும் இயைபு இருக்கவேண்டும் என்பதில்லை.

ஆகவே, ஒரு பையனின் தொழில்பற்றிய உண்மையான ஆர்வங்களை முறையாகக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இவ்வாறு செய்வதற்கு ஆர்வப்பட்டியல் (interest inventory) தயார் செய்திருக்கிறார்கள்.

திரு. கு. வெங்கடாசலம், M.Ed.,[1] என்பவர் தமிழ்நாட்டிலுள்ள சில உயர்நிலைப் பள்ளிகளில் கற்கின்ற 360 மாணவர்களது தொழில் ஆர்வம்பற்றி ஓர் ஆராய்ச்சி செய்துள்ளார். இம் மாணவர்கள் தொழில் பாடங்களைக் கற்றுக்கொடுக்கப்படுகின்ற பலநோக்கு உயர்நிலைப் பள்ளியில் (Multipurpose School) படிப்பவர்கள். பலநோக்கு உயர்நிலைப் பள்ளிகளில் பின்வரும் தொழில் பாடங்களில் ஒரு சில கற்றுக் கொடுக்கப்படும்.

1. அலுவலக வேலை (Secretarial)
2. விவசாயம் (Agriculture)
3. பொறியியல் (Engineering)
4. நூல் தொழில் (Textile Technology)
5. அச்சுத் தொழில் (Printing Technology)

[1] K. Venkatachalam, 'A Study of the Interests of High School Students who have opted for some of the diversified Courses,—M.Ed., Thesis, Madras University—1957.

6. குடும்ப விஞ்ஞானம் (Domestic Science)
7. வரைதல்—ஓவியம் (Drawing & Painting)
8. இசை—நடனம் (Music & Dance)
9. ஆசிரியப் பயிற்சி (Teaching Practice)

மேற்குறிப்பிட்டுள்ள தொழிற் பாடங்கள்பற்றி மாணவர்கள் கொண்டிருந்த ஆர்வங்கள் ஒரு பட்டியல் மூலமாக ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளன. அந்தப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாணவன் இப் பட்டியலை இனம் விடாமல் படித்துக்கொண்டே போக வேண்டும். அப்படிப் படிக்கும்பொழுது அவன் மனத்திற்குப் பட்டதை அப்படியே அந்தந்த இனத்திற்கு எதிரில் குறித்துவிட வேண்டும். ஓர் இனம் பிடித்தமானது எனில் பிடித்தம் என்பதற்குக் கீழும், வெறுப்பாக உள்ளது எனில் வெறுப்பு என்பதற்குக் கீழும், பிடித்தமும் இல்லை, வெறுப்பும் இல்லை எனில் இரண்டும் இல்லை என்பதற்குக் கீழும் (√) என்ற குறியை ஒவ்வோர் இனத்துக்கும் எதிராகக் குறித்துக்கொண்டே போகவேண்டும்.

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 1. நீந்திப் பழகுதல் ... ... | | | |
| 2. அணிவகுப்பில் கலந்து கொள்ளல் ... | | | |
| 3. சமூக சேவையில் ஈடுபடுவது ... | | | |
| 4. பாங்கியில் வட்டி கணக்கிடுவது ... | | | |
| 5. நெல் நடுவதைக் கண்காணித்தல் ... | | | |
| 6. கிரிக் (Grigg) பந்தயங்களில் கலந்து கொள்ளுவது ... ... | | | |
| 7. அறுவடை செய்வதைப் பார்த்தல் ... | | | |
| 8. இயந்திரத்தால் நூல் நூற்கும் விதத்தைத் தெரிந்துகொள்ளுதல் ... | | | |
| 9. கால்பந்து, கிரிக்கெட் விளையாடுதல் | | | |
| 10. அச்சடிப்பதற்கான மைகளைப்பற்றி விவரம் தெரிதல் ... ... | | | |
| 11. கலைக் கண்காட்சிகளுக்குச் செல்லுதல் ... ... ... | | | |
| 12. இசை நிபுணர்களிடம் பேசுதல் ... | | | |
| 13. களைபிடுங்கிப் பயிருக்கு எருவிடுதல் | | | |
| 14. விருந்தினரை உபசரிக்கும் முறை பயிலுதல் ... ... ... | | | |
| 15. காய்கறித் தோட்டம் போடுதல் ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 16. ஆபீஸ் பைல்களை (files) முறையாக வைத்துப் பழகுதல் ... ... | | | |
| 17. பயிருக்கு நீர் பாய்ச்சுதல் ... | | | |
| 18. பங்கு மார்க்கெட்டில் பங்கு வாங்கி விற்கும் முறை தெரிதல் ... | | | |
| 19. நூலின் நம்பரைக் கண்டுபிடித்தல் ... | | | |
| 20. ஆகாய விமானம் பறக்கும் விதத்தை அறிதல் ... ... ... | | | |
| 21. வீட்டைச் சுத்தமாகவும் அழகாகவும் வைக்கத் தெரிதல் ... ... | | | |
| 22. படங்களின் அச்சுகள் (blocks) தயாரித்தல் ... ... ... | | | |
| 23. பாட்டுகளுக்கு மெட்டு அமைத்தல் ... | | | |
| 24. இரசாயனச் சாலைகளைச் சென்று பார்த்தல் ... ... ... | | | |
| 25. பெட்ரோல் தயாரிப்பு முறையைத் தெரிதல் ... ... ... | | | |
| 26. நல்ல ஆசிரியர்கள் போதிப்பதை நேரில் பார்த்தல் ... ... | | | |
| 27. பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களிடம் பேசுவது ... ... | | | |
| 28. கடையில் கமிஷன்(தள்ளுபடி)கேட்டுக் கடிதம் எழுதுவது ... ... | | | |
| 29. ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி பார்வையிடல் ... ... ... | | | |
| 30. வியாபாரிகள் பேச்சில் கவனம் செலுத்துதல் ... ... | | | |
| 31. பருத்தியைப் பஞ்சாக அரைப்பதைக் காணல் ... ... ... | | | |
| 32. மின்சார பாட்டரியைப் (battery) பற்றி அறிதல் ... ... | | | |
| 33. கிணற்றுக்கு மோட்டாரும் பம்பும் அமைத்தல் ... ... ... | | | |
| 34. குழந்தை (தம்பி அல்லது தங்கை) யைத் தாலாட்டுதல் ... ... | | | |
| 35. புத்தகங்கள் பைண்ட் (bind) செய்யக் கற்றுக்கொள்ளல் ... ... | | | |
| 36. நாட்டியக் கச்சேரி செல்லுதல் ... | | | |
| 37. வர்ணங்களின் சேர்க்கை விவரம் அறிதல் ... ... ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 38. குழந்தைகளின் தன்மை, ஆர்வம், புத்திக் கூர்மையைத் தெரிவது ... | | | |
| 39. தவளை சுவாசிப்பதை ஆராய்தல் ... | | | |
| 40. வாயு மண்டலத்தில் உள்ள பொருள்களைப்பற்றி அறிதல் ... ... | | | |
| 41. பள்ளி நிருவாக முறைகளைத் தெரிந்துகொள்ளுவது ... | | | |
| 42. டைப் செய்யக் கற்றுக்கொள்ளுதல் ... | | | |
| 43. ஏர் உழுதல் ... ... ... | | | |
| 44. பஞ்சாலைகளைப் பார்த்து வருதல் ... | | | |
| 45. துணிக்குச் சாயம் இடும் முறையைக் கற்றல் ... ... ... | | | |
| 46. வீட்டு ஜன்னல், கதவுகளுக்குத் திரைத்துணி போடுதல் ... | | | |
| 47. காகிதங்களை அச்சு யந்திரத்தால் வெட்டிப் பழகுதல் ... ... | | | |
| 48. நடனம் ஆடிப் பழகுதல் ... | | | |
| 49. ஓவியப் போட்டியில் கலந்துகொள்ளுதல் ... ... ... ... | | | |
| 50. விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு கேட்டல் ... ... ... | | | |
| 51. பள்ளியையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளல் ... | | | |
| 52. அரசாங்கம் நடக்கும்முறை தெரிதல் | | | |
| 53. ஆதிவாசிகளின் பழக்க வழக்கங்களைப் பார்க்கச் செல்லல் ... ... | | | |
| 54. தண்டால், பஸ்கி செய்து பழகுதல்... | | | |
| 55. மனிதனின் ஆதாரத் தேவைகள் பூர்த்தி செய்யும்விதம் தெரிதல் ... | | | |
| 56. ஆசனங்கள் பயிலுதல் ... . ... | | | |
| 57. பாட்டுக்கட்டிப் பழகுவது ... | | | |
| 58. சங்கிலியால் நிலம் வயல்களை அளத்தல் ... ... ... | | | |
| 59. பத்திரிகை ஆசிரியராக இருப்பது ... | | | |
| 60. அல்ஜீப்ரா கணக்குகளைப் போட்டுப் பழகுதல் ... ... ... | | | |
| 61. இலக்கியப் பெரியார்களுடன் உரையாடல் ... ... ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 62. செக், உண்டியல் மூலம் பணம் மாற்றும் முறை தெரிதல் ... | | | |
| 63. நாடகங்கள் நாவல்கள் படித்தல் ... | | | |
| 64. விதைத் தானியங்களைப் பக்குவப் படுத்துதல் ... ... ... | | | |
| 65. பத்திரிகையில் கட்டுரை எழுதுதல் ... | | | |
| 66. நிழலின் நீளத்தை அளந்து நேரம் கணக்கிடல் ... ... | | | |
| 67. காளைமாடுகளுக்குத் தீனி போடுதல் | | | |
| 68. சத்துள்ள உணவை வீட்டில் தயாரிக்கத் தெரிவது ... ... | | | |
| 69. அபிநயம் பிடித்தல் ... ... | | | |
| 70. கண்பார்வைக்குறை ஏன் ஏற்படுகிறதென ஆய்தல் ... ... | | | |
| 71. பள்ளி ரிஜிஸ்தர்களைப் பூர்த்தி செய்து பழகுதல் ... ... ... | | | |
| 72. எண்களின் விசேஷங்களைப் பூர்த்தி செய்து பழகுதல் ... ... | | | |
| 73. கற்பனைக் கதைகள் எழுதிப் பழகுவது ... ... ... | | | |
| 74. பூமியிலிருந்து கிடைக்கும் கனிப் பொருள்பற்றி அறிதல் ... ... | | | |
| 75. ஐந்து மைல் ஓட்டப் பந்தயத்தைக் கவனித்தல் ... ... ... | | | |
| 76. சமுதாய நலன் திட்டங்களில் வேலை செய்வது ... ... ... | | | |
| 77. பாங்கு நடத்தும் முறையை அறிதல்... | | | |
| 78. டம்பல், லெஸிம், கரலாக்கட்டை சுற்றுதல் ... ... ... | | | |
| 79. மாட்டு வண்டி ஓட்டுதல் ... ... | | | |
| 80. குதிரைச் சவாரி செய்தல் ... ... | | | |
| 81. இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு படித்தல் ... ... | | | |
| 82. கடப்பாரை, மண்வெட்டி வாங்கிவரச் சந்தை செல்லுதல் ... ... | | | |
| 83. ஜனநாயகம் வளர்ந்த வரலாறு அறிதல் ... ... ... | | | |
| 84. நூலைத் துணியாக மாற்றும் வித்தையை அறிதல் ... ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 85. தந்தை மெஷின் வேலை செய்வதை ஆராய்தல் ... ... | | | |
| 86. சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவது ... ... ... | | | |
| 87. உணவு பரிமாறும் கலையைப் பயின்று கொள்ளுவது ... ... | | | |
| 88. அச்சுகள் தயாரிக்கும் முறையைக் கற்றல் ... ... ... | | | |
| 89. தாளம் போட்டுப் பாடக் கற்றுக் கொள்ளல் ... ... | | | |
| 90. சித்திராலயங்கள் பார்க்கத் திருவாங்கூர், மைசூர் செல்லல் ... | | | |
| 91. மிருகங்கள், பறவைகளின் வாழ்க்கையைத் தெரிதல் ... ... | | | |
| 92. நவீன போதனா முறைகளைப் பயிலுதல் ... ... ... | | | |
| 93. ஜாதி மத வேறுபாடுகளை நீக்கப் பயிலுதல் ... ... | | | |
| 94. பாட்டுக் கச்சேரிக்குச் செல்வது ... | | | |
| 95. வீட்டு வைத்தியம் கற்றுக்கொள்ளுவது ... ... ... | | | |
| 96. குடியானவர் சங்கத்தில் அங்கத்தினர் ஆகுதல் ... ... | | | |
| 97. ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி அறிந்துகொள்ளல் ... ... | | | |
| 98. பஞ்சின் விசேஷங்களைப்பற்றி அறிதல் ... ... ... | | | |
| 99. குழந்தை வளர்க்கும் முறைகளை அறிதல் ... ... ... | | | |
| 100. செய்தித்தாள் அச்சிடும் வேகமான (Teleprinting) முறையைத் தெரிதல் ... ... ... | | | |
| 101. ராகம்—தானம்—பல்லவி கேட்டல் ... | | | |
| 102. படம் வரையும் போட்டியில் கலந்து கொள்ளுதல் ... ... | | | |
| 103. கும்மி கோலாட்டம் பயிலுதல் ... | | | |
| 104. தாவரங்களுக்கு உயிர் உண்டா என்று முடிவு காணுதல் ... | | | |
| 105. குழந்தையின் உடல், உள்ளம், மனம் வளரும் போக்கைத் தெரிவது | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 106. கதகளி நாடகம் பார்க்கப் போகுதல் | | | |
| 107. துணிமணிகள் வெட்டிப் பழகுதல் ... | | | |
| 108. நூலுக்குச் சாயம்போடும் விதத்தை அறிதல் ... ... | | | |
| 109. பாலம் கட்டும் முறையைப் பயிலுதல் ... ... ... | | | |
| 110. ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் பண்ணுதல் ... ... | | | |
| 111. பைக்காரா மின்சார நிலையம் சென்று பார்த்தல் ... ... | | | |
| 112. துணிக்குக் கஞ்சி போடும் முறையைத் தெரிதல் ... ... | | | |
| 113. தையல் யந்திரத்தில் தைத்துப் பழகுதல் ... ... ... | | | |
| 114. அச்சுப் பிழைகளைத் திருத்துதல் (Proof Reading) ... ... | | | |
| 115. ஹிந்து பத்திரிகை அச்சாபீஸ் சென்று பார்த்தல் ... ... | | | |
| 116. பத்திரிகையில் ஓவியக் கலைஞராக வேலை பார்த்தல் ... ... | | | |
| 117. இசை, பாட்டுகளை அமைத்துப் பழகுதல் ... ... | | | |
| 118. ரவி வர்மா, நந்தலால் போஸின் வாழ்க்கை வரலாறு அறிதல் ... | | | |
| 119. ஏ.ஸி.ஸி., என்.ஸி.ஸி.-யில் சேருதல் | | | |
| 120. குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுவது ... ... | | | |
| 121. பூ, காயாக மாறுவது எப்படி என ஆராய்தல் ... ... | | | |
| 122. கவிதை புனைந்து பழகுதல் ... | | | |
| 123. முக்கோணங்கள் நாற்கரங்கள் வரைந்து பழகுதல் ... ... | | | |
| 124. கவிதைகளைப் பாடம் பண்ணுதல் ... | | | |
| 125. சுருக்கு முறைகளில் பெருக்கல் வகுத்தல் செய்து பழகுதல் ... | | | |
| 126. இலக்கிய ரசனையுள்ள நூல்களைப் படித்தல் ... ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 127. வரவு செலவு கணக்குகளைப் பரிசோதித்துப் (audit) பழகுதல் ... | | | |
| 128. கடை வைத்து நடத்துதல் ... | | | |
| 129. பஞ்சாலையில் உத்தியோகம் வகித்தல் | | | |
| 130. ரேடியோ செட் ஒன்று தயார்செய்தல் | | | |
| 131. நூலின் முறுக்கு, பலம் இவற்றைத் தீர்மானித்தல் ... ... | | | |
| 132. கிச்சடி, சப்பாத்தி, இட்லி தயாரித்தல் | | | |
| 133. ராக—வர்ணங்கள் பாடப் பயிலுதல் | | | |
| 134. பட ஆல்பங்கள் சேகரம் செய்தல் ... | | | |
| 135. பூதக்கண்ணாடி மூலம் இரத்தத்தைப் பரிசோதிப்பது ... ... | | | |
| 136. கைத்தொழில் கல்வி மூலம் எப்படி எனத் தெரிவது ... ... | | | |
| 137. மஹாபலிபுரம், மதுரை, தஞ்சை சென்று சிற்பங்கள் பார்த்து வரல்... | | | |
| 138. கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொள்ளுதல் ... | | | |
| 139. ஆபீஸ் கடிதப் போக்குவரத்தை (correspondence) கவனித்தல் ... | | | |
| 140. வரைபடங்கள் வரையக் கற்றுக் கொள்ளுவது ... ... | | | |
| 141. மோட்டார் கார் ஓடும் முறையைத் தெரிதல் ... ... | | | |
| 142. அச்சு இயந்திரங்கள் செய்யும் சாலைகளைப் பார்த்தல் ... ... | | | |
| 143. கேலிச் சித்திரம் வரைந்து பழகுதல்... | | | |
| 144. மனித உடல் உறுப்புகள் வேலை செய்யும் விதத்தைத் தெரிவது ... | | | |
| 145. இலக்கியக் கழகத்தில் அங்கத்தினர் ஆகுதல் ... ... | | | |
| 146. ஜியோமிதித் தேற்றங்கள் நிரூபித்துப் பழகுதல் ... ... | | | |
| 147. வீட்டிற்கு மின்சார விளக்குக் கம்பி அமைத்தல் ... ... | | | |
| 148. பூமியின் மேற்பரப்பைக் கணிக்கக் கற்றல் ... ... ... | | | |

| ஆர்வம் காட்டும் பட்டியல் | பிடித்தம் | வெறுப்பு | இரண்டும் இல்லை |
|---|---|---|---|
| 149. கம்பன், காளிதாஸன், ஷேக்ஸ்பியர் போன்றவர்களின் காவியங்களைப் படித்தல் ... ... | | | |
| 150. கட்டடங்கள், மெஷின்களின் படங்கள் வரைதல் ... ... | | | |
| 151. தண்ணீர்த் தொட்டிகளின் கொள் அளவுகளைக் கண்டுபிடித்தல் ... | | | |
| 152. இரும்பை உருக்கிப் பொருளாக வார்த்தல் ... ... | | | |
| 153. தசாம்ச முறையில் கணித்துப் பழகுதல் ... ... ... | | | |
| 154. இரும்புச் சாமான்களை மிஷினில் வைத்துக் கடைதல் ... ... | | | |
| 155 அழைப்புக் கடிதம், புத்தகம், பத்திரிகை அச்சிட்டுக் கொடுத்தல் ... | | | |
| 156. அம்பர் சர்க்கா வேலை செய்வதை அறிதல் ... ... | | | |
| 157. வர்ணப்படங்கள் வரைந்து பழகுதல் | | | |
| 158. குழந்தைகளுடன் உல்லாசப் பிரயாணம் செய்தல் ... ... | | | |
| 159. காந்தச் சக்தியின் தன்மைகளை அறிதல் ... ... ... | | | |
| 160. அச்சுக் கோத்துப் பழகுதல் ... | | | |
| 161. களிமண் பொம்மை செய்து வர்ணமிடுதல் ... ... | | | |
| 162. விளையாட்டு மூலம் கல்வி எப்படி என அறிவது ... ... | | | |
| 163. அச்சு யந்திரத்தில் வேலை செய்தல் .. | | | |
| 164. ஜனநாயக முறையில் பயிற்சி கொள்ளுதல் ... ... | | | |
| 165. விளையாட்டுப் பந்தயங்களில் கலந்து கொள்ளுதல் ... ... | | | |
| 166. வரவு செலவுக் கணக்கு எழுதிப் பழகுதல் ... ... | | | |
| 167. டென்னிஸ் விளையாடுவதைப் பார்த்தல் ... ... | | | |
| 168. உணவுச் சாமான்களைப் பக்குவப் படுத்துதல் ... ... | | | |

மேற்படி ஆர்வப் பட்டியலைப் பயன்படுத்தி 330 மாணவர்களின் ஆர்வங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ததில் பின்வரும் சில முக்கிய உண்மைகள் தெரியவந்தன: பெரும்பாலும் எல்லா மாணவர்களும் ஆசிரியத் தொழில், மருத்துவம் என்ற இரு தொழில்களை மிகவும் விரும்புகிறார்கள். அலுவலக உதவி அதிகாரிகள், விவசாய இன்ஜினியரிங், ஆலைத்தொழில் அதிகாரிகள், ஆசிரியர்கள், வணிகர்கள், போலீஸ் அதிகாரிகள், ரயில்வே அதிகாரிகள் முதலியவர்களது பிள்ளைகளில் (ஆண்) பெரும்பான்மையானவர்கள் தங்கள் பெற்றோரின் அலுவல்களை விரும்புகிறார்கள். ஆனால், சமையல் செய்பவர்கள், அலுவலகச் சேவகர்கள், சலவைத் தொழிலாளர்கள், கூலிவரத் தொழிலாளர்கள் முதலியவர்களது பிள்ளைகள் (ஆண்) தங்கள் பெற்றோரின் தொழில்களின்பால் ஆர்வம் காட்டுவதில்லை. அலுவலக உதவியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களின் பெண்பிள்ளைகள் தங்கள் பெற்றோருடைய தொழில்களை விரும்புகின்றனர். ஆனால், இஞ்ஜினியர்கள், வியாபாரிகள், ரயில்வே அதிகாரிகள் ஆகியோர்களின் பெண்கள் பெற்றோர்களின் தொழில்களை விரும்புவதில்லை. தாதித்தொழில் (nursing), கலை, இசை, மருத்துவம் முதலியவற்றைப் பெண்பிள்ளைகள் பொதுவாக விரும்புகின்றார்கள்.

தொழில் ஆர்வங்களைப் பொறுத்தவரை ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் சில முக்கிய வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் உள்ளன. மேலே சொன்ன ஆராய்ச்சியிலிருந்து தாதித் தொழில் (nursing), கலை, இசை முதலியவற்றைப் பெண்பிள்ளைகள் மட்டுமே விரும்புவதாகவும், விவசாயம், பொறியியல், நூல்கலை, தொழில் முதலிய தொழில்கள் அநேகமாக ஆண்கள் மட்டுமே விரும்புவதாகவும் தெரிகின்றது. ஆண்களைவிடப் பெண்கள் குடும்ப விஞ்ஞானம், வரைதல்-ஓவியம், இசை-நடனம் முதலியவற்றில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால், ஆசிரியர் தொழில், அலுவலகத் தொழில், மருத்துவம், விஞ்ஞானம், சட்டம், தேசீய, சமூக நல வேலை முதலியத் தொழில்களை ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் ஏறக்குறையச் சமமாக விரும்புகிறார்கள்.

இத்தகைய பட்டியலை மாணவர்களுக்குக் கொடுத்து அதில் அவர்கள் பெறுகின்ற மதிப்பெண்களை வைத்துக்கொண்டு அவர்களது ஆர்வங்களைக் காட்டுகின்ற வரைபடம் ஒன்று வரையலாம். இத்தகைய வரைபடத்தை ஆர்வ வரைபடம் (interest profile) என்று சொல்லுவார்கள். எடுத்துக்காட்டாக வரைபடம் ஒன்று (படம் 32) கொடுக்கப்பட்டுள்ளது.

இதைப் பார்த்தால் இந்தப் பெண்ணுக்குச் சில தொழில்களில் ஆர்வம் அதிகமாகவும் சில தொழில்களில் ஆர்வம் இல்லாமலும்

இருப்பதைக் காணலாம். மேலும், இதில் இரண்டு தடவை கொடுத்த சோதனைகளின் முடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் முறை கொடுத்த சோதனையின் முடிவுக்கும், இரண்டாம்முறை கொடுத்த சோதனையின் முடிவுக்கும் சிறிது வேற்றுமை இருந்தபோதிலும் அவை பெரும்பாலும் ஒத்து இருப்பதையும் காணலாம்.




படம் 32

சில சமயங்களில் சில பிள்ளைகள் தங்களுடைய உண்மையான திறமைக்கு மிகவும் அதிகமாக மிக உயரிய வேலைகளைப்பற்றி ஆர்வம் கொள்ளுவது உண்டு. எடுத்துக்காட்டாக, கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களில் திறமை மிகவும் குறைவாக இருந்து, என்ஜினீயரிங் துறையில் சென்று சிறப்படையவேண்டும் என்றும் சில மாணவர்கள் விரும்பலாம். இந்த விருப்பம் அல்லது ஆர்வம் போலியான ஒன்று. ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள இரண்டு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 31, 71 மாணவர்களிடம் அவர்கள் எதிர்காலத்தில் செய்ய விரும்பும் தொழில் என்ன என்று கேள்வி கேட்டபொழுது அதற்கு அவர்கள் கூறியுள்ள விடைகளின் தொகுப்பு அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளி—1 (31 மாணவர்கள்)

| தொழில் | | | விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. என்ஜினீயரிங் | ... | ... | 12 |
| 2. டாக்டர் | ... | ... | 9 |
| 3. கலெக்டர் | ... | ... | 2 |
| 4. விவசாயி | ... | ... | 2 |
| 5. விமானமோட்டி (Pilot) | | ... | 1 |
| 6. ரயில்வே சூப்பிரென்டென்ட் | | ... | 1 |
| 7. ஐ.ஏ.எஸ். | ... | ... | 1 |
| 8. பிரின்ஸிபால் | ... | ... | 1 |
| ஒன்றும் சொல்லாதவர்கள் | | ... | 2 |

உயர்நிலைப்பள்ளி—2 (71 மாணவர்கள்)

| தொழில் | | | விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. என்ஜினீயர் | ... | ... | 19 |
| 2. டாக்டர் | ... | ... | 17 |
| 3. விஞ்ஞானி | ... | ... | 7 |
| 4. அரசாங்க உத்தியோகஸ்தர் | | ... | 6 |
| 5. ஆசிரியர் | ... | ... | 6 |
| 6. தொண்டர் | ... | ... | 6 |
| 7. போலீஸ் இன்ஸ்பெக்டர்... | | ... | 5 |
| 8. நீதிபதி | ... | ... | 2 |
| 9. வியாபாரி | ... | ... | 2 |
| 10. ஐ.ஏ.எஸ். | ... | ... | 1 |

மேலே கொடுத்துள்ள விவரங்களிலிருந்து பெரும்பாலான பிள்ளைகள் இன்ஜினீயர்களாகவும், டாக்டர்களாகவும் ஆவதற்கு விரும்புகிறார்கள் என்பது தெரியவருகின்றது. இவ்வாறு விரும்புகின்ற எல்லாப் பிள்ளைகளும் எந்த வேலைகளுக்கேற்ற திறமையுடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பெற்றோர் அல்லது மற்றவர்கள் இன்ஜினீயரிங் வேலையை மிகவும் மதிப்புடையது அல்லது அதிக வருவாய் தரக்கூடியது என்று நினைத்து அவ்வாறு ஆகவேண்டும் என்று பையன்களின் உள்ளத்தில் சிறு வயதிலிருந்தே இந்த ஆசையை விதைத்திருக்கலாம். சமுதாய மதிப்பீடும் பதியும். ஆகவே, இது பிறர் காரணமாக உண்டாகும் போலி ஆசையே தவிர, அக இயற்கைக்கு ஒத்த உண்மையான ஆர்வமன்று. ஆகவே, இந்த உண்மையை இளைஞர்களுக்கு எடுத்துக்

காட்டி அவர்களது இயல்பான ஆர்வம் இன்னது என்று கண்டு பிடிப்பதற்கு உதவவேண்டும். பல சமயங்களில் தனது இயல்பான ஆர்வத்தைப் புறக்கணித்துவிட்டுச் செயற்கை காரணங்களால் வேறு தொழில்களில் ஈடுபடுகின்றவர்களைக் காணலாம். அவர்கள் உள்ளத்தில் உண்மையான நிறைவு உண்டாவதில்லை.

பாடசம்பந்தமான ஆர்வங்கள்

மாணவர்கள் சில பாடங்களில் அதிக ஆர்வம் காட்டிப் படிப்பது உண்டு. வகுப்பில் பாடத் திட்டத்திற்கேற்பச் சொல்லிக்கொடுப்பதை விட அதிகமாகத் தாங்களாகவே விரும்பிப் பாட சம்பந்தமான நூல்களைப் படிப்பதிலும், வேறு செயல்களில் ஈடுபடுவதிலும் தங்கள் ஆர்வத்தைக் காட்டிக்கொள்ளுவது உண்டு. கோவை நகரத்து உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடம் 'உங்களுக்கு விருப்பமான பாடம் எது' என்று கேட்டபொழுது பின்வருமாறு விடையளித்தார்கள். விடையளித்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 97.

| விருப்பமான பாடம் | விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. தமிழ் ... ... ... | 51 |
| 2. ஆங்கிலம் ... ... ... | 16 |
| 3. கணக்கு ... ... ... | 13 |
| 4. விஞ்ஞானம் ... ... ... | 12 |
| 5. வரலாறு ... ... ... | 3 |
| 6. சமூகம் ... ... ... | 1 |
| 7. ஹிந்தி ... ... ... | 1 |

அடுத்த ஓர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடம் இதே கேள்வியைக் கேட்டபொழுது அவர்கள் அளித்த விடை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. விடையளித்த மாணவர்கள் 31.

| விருப்பமான பாடம் | விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. கணக்கு ... ... ... | 10 |
| 2. ஆங்கிலம் ... ... ... | 8 |
| 3. சமூகம் ... ... ... | 8 |
| 4. விஞ்ஞானம் ... ... | 2 |
| 5. தமிழ் ... ... ... | 2 |
| 6. என்ஜினியர் ... ... ... | 1 |

இப் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் கோவை நகரப் பள்ளி மாணவர்களுக்கும் அதிக வேற்றுமை இருப்பது தெரியவருகின்றது. மாணவர்களுடைய ஆர்வத்துக்கேற்ப ஆசிரியர்கள் யோசனைகள் கூறி அவர்களின் ஆர்வம் தூண்டப்படுவதற்கு உதவியாக இருக்க வேண்டும். விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஆர்வம் இல்லாத போதிலும் அவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் சூழ்நிலையை ஏற்படுத்து வது பள்ளிக்கூடத்துக் கடமை. தற்போது பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானச் சங்கங்கள் ஆரம்பித்து வருகின்றார்கள்.

கணிதம் போன்ற பாடங்களில் இயல்பான ஆர்வமுடைய மாணவர் ஒரு சிலரே இருப்பார்கள். ஆனால், அத்தகைய மாணவர்களுடைய ஆர்வத்தை ஆசிரியர் தெரிந்துகொண்டு அதனை ஊக்குவது மிகவும் அவசியமாகும். மனித நாகரிகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் கணிதம்போன்ற நுண்மையான துறைகளில் சிறப்பான திறமையுடையவர்களை ஆரம்ப காலத்திலேயே தெரிந்து அவர்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியம்.

**பள்ளிக்கூடத்தின் பங்கு**

இதுவரை குமரப் பருவத்தில் இளம் பிள்ளைகளிடம் தோன்றுகின்ற பலவகையான ஆர்வங்கள்பற்றிப் பார்த்தோம். இந்தப் பருவத்தில் குழந்தையின் ஆளுமையில் ஒரு பெரிய எழுச்சி உண்டாகின்றது. பிறரை முழுவதும் சார்ந்து இருக்கின்ற குழந்தைப் பருவத்தினின்றும் நீங்கித் தன்னம்பிக்கையும், தற்சார்பும் உள்ள சுதந்திர நிலை அடைவதற்கான முக்கிய மாறுதல்கள் எல்லாம் நிகழ்வது குமரப் பருவத்தில். இந்தப் பருவத்தில் உண்டாகும் ஆர்வங்களுக்கு ஏற்பவே எதிர்காலத்தில் அவர்களின் தொழிலும், வாழ்க்கையும் ஆளுமையின் சிறப்பான அம்சங்களும் அமையும். ஆகவே, அவர்கள் தங்கள் ஆர்வங்களைத் தடையில்லாது வெளியிடவும் அவற்றை நன்கு வளர்ப்பதற்கும் பள்ளிக்கூடம் வாய்ப்பளித்து உதவ வேண்டும். வீட்டில் பெற்றோர்களும் இவ்வகையில் உதவலாம். ஆனால், பெரும்பான்மையான உதவியும் வாய்ப்பும் பள்ளிக்கூடச் சூழ்நிலையில்தான் ஏற்படமுடியும்.

பிள்ளைகளிடம் தோன்றும் சிறப்பான கலை ஆர்வங்கள், தொழில் ஆர்வங்கள், 'அறிவு வளர்ச்சிபற்றிய ஆர்வங்கள், சமூக வாழ்க்கை பற்றிய ஆர்வங்கள் முதலிய எல்லா வகை ஆர்வங்களும் வெளியிடப்பட்டு வளர்ச்சியுறப் பள்ளிக்கூடத்தில் வாய்ப்புகள் தரவேண்டும். நாடகங்கள், பாடசம்பந்தமான செயல் திட்டங்கள், கல்விப் பயணங்கள், கையெழுத்து மலர்கள், விழாக் கொண்டாடுதல், வெளியூர்ப் பயணங்கள், விளையாட்டுகள், நல்ல நூலகம், பேச்சு அரங்குகள்

இன்னும் இதுபோன்ற எத்துணையோ வகைகளில் பிள்ளைகளின் ஆர்வங்களை வளர்க்கலாம்.

தற்காலத்தில் மாணவர்கள் தங்களுடைய பள்ளிக்கூடப் பொறுப்புகளில் கூடியமட்டும் பங்கு எடுத்துக்கொள்ளுவதற்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. சுய ஆட்சி முறையில் மாணவர்கள் தங்களுக்குள்ளேயே தலைவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் பல காரியங்களைக் கவனித்துக் கொள்ளுமாறு சில பள்ளிக்கூடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவை காரணமாகச் சில மாணவர்களுடைய செயல் ஆர்வம், சமூகப்பணிபற்றிய ஆர்வம் முதலியன வளருவதற்கு வாய்ப்பு உண்டாகும்.

குமரப் பருவத்தில் ஏற்படும் நட்புகள் மிகவும் முக்கியமானவை. இவை வாழ்க்கையில் நீண்டகாலம் தொடர்ந்து ஒருவனைப் பாதிக்கும் சக்தி வாய்ந்தவை. இத்தகைய நட்புகள் மேற்சொன்னவை போன்ற செயல்களில் ஈடுபடும்பொழுது பொதுவாக உண்டாகும். ஆகவே, தற்கால கல்வி நிபுணர்கள் வெறும் புத்தகப்பாடப் படிப்பு மட்டுமல்லாமல் பாடப்புறச் செயல்களும் (extra curricular activities) மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு மிகவும் தேவை என்று சொல்லுகிறார்கள்.

# 6. சமூக நடத்தை

குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி, உணர்ச்சியின் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஆர்வங்களின் வளர்ச்சி முதலியனபற்றி பார்த்தோம். குமரப் பருவத்துப் பிள்ளைகளின் சமூக நடத்தையின் வளர்ச்சியானது மிக முக்கியமான ஓர் அம்சமாகும். இந்தப் பருவத்தில் சமூக நடத்தையில் ஒரு பெரும் மாறுதல் உண்டாகின்றது. சமூக நடத்தையில் ஏற்படும் மாறுதல்களுக்கும், பிள்ளைகளின் உடல், உணர்ச்சி, அறிவு, ஆர்வங்கள் ஆகியவற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பிள்ளைகளின் வளர்ச்சியை ஆராய்ந்து அறிவதற்காக அதனைப் பல கூறுகளாக நாம் பிரித்த போதிலும் உண்மை வாழ்க்கையில் அவையெல்லாம் ஒருமித்து ஒன்றாக உள்ளன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

குமரப் பருவம் குழந்தைப் பருவத்திற்கும், வயது முதிர்ந்த பருவத்திற்கும் இடையேயுள்ள மாறுதல் பருவம் என்று பார்த்துள்ளோம். சிறு குழந்தை நிலையிலிருந்து பெரிய மனித நிலை ஆவதற்கான முக்கிய மாறுதல்கள் எல்லாம் எந்தக் குமரப் பருவத்தில் நிகழ்கின்றன. உடம்பு, உணர்ச்சிகள், அறிவு, ஆர்வங்கள், சமூக நடத்தை யாவும் குழந்தைநிலைவிட்டு மாறி முதிர்ந்த மனித நிலையடைகின்றன. சமூக நடத்தைபற்றிப் பார்ப்போம்.

## சமூக நடத்தை வளர்ச்சியுறும் தன்மை

ஆரம்ப காலத்தில் சிறு குழந்தையின் சமூக வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் தாய். பிறகு தந்தையோடு உறவு உண்டாகிறது. குழந்தைப் பருவத்தில் தன் வயதுப் பிள்ளைகள் இருபாலாரோடும் விளையாடும்பொழுது வேறு சமூக உறவுகள் உண்டாக ஆரம்பிக்கின்றன. குழந்தை பள்ளிக்கூடத்திற்குச் செல்லும்பொழுது ஆசிரியர்களோடு உறவு உண்டாகிறது. இது ஒரு முக்கியமான சமூகத் தொடர்பு. அதே சமயத்தில் தன் வகுப்பு அல்லது பள்ளிக்

கூடத்தைச் சேர்ந்த பிள்ளைகளோடும் உறவு உண்டாகின்றது. குழந்தைப் பருவத்தில் ஆண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளோடுதான் உறவு கொள்கின்றனர். அதுபோலப் பெண்பிள்ளைகள் பெண் பிள்ளைகளோடுதான் உறவு கொள்கின்றனர். இவ்வுறவுகளைத் 'தன்பால் உறவுகள்' என்று சொல்லலாம்.

குழந்தைப் பருவம் முதிர்ந்து குமரப்பருவம் தொடங்க ஆரம்பிக்கின்றது. இந்தச் சமயத்தில் பிள்ளைகளுக்குப் பால் உணர்ச்சி தோன்றி வளர ஆரம்பிப்பதைப் பார்த்துள்ளோம். பால் உணர்ச்சி காரணமாக ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகளின்பால் ஆர்வம் உண்டாகிறது. அதுபோலப் பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகளின்பால் ஆர்வம் உண்டாகிறது. இந்த ஆர்வம் எந்த அளவிற்குச் சமூக உறவுகளில் பிரதிபலிக்க முடியும் என்பது அந்தந்தச் சமூக மரபைப் பொறுத்தது. மேல்நாடுகளில் பொதுவாக ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் இந்தப் பருவத்தில் கலந்து பழகுவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இதனை மேல்நாட்டுச் சமூக மரபு அனுமதிக்கின்றது. ஆனால், இந்தியா போன்ற கீழ்நாடுகளில் அத்துணை வாய்ப்புகள் கிடையா. இது கீழ்நாட்டு மரபு. ஆனால், இம் மரபு நெகிழ்ந்து வருகின்றது.

இப்பொழுது சமூக மரபுகள், பண்பாடுகள் உலகம் முழுவதும் மாறி வருகின்றன. மேல் நாட்டிலும் 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் கலந்து பழகுவதற்கு இருந்த வாய்ப்புகளைவிட இப்பொழுது அதிகம் உள்ளன. அவர்கள் நாட்டில் 'விக்டோரியா காலம்' என்று சொல்லுவார்கள். 'விக்டோரியா காலம்' என்றால் அக் காலத்தில் ஆண்களும், பெண்களும் சுதந்திரமாகப் பழகுவதற்கு சமூகத் தடைகள் மிகக் கடுமையாக இருந்தன. ஆனால், அத் தடைகள் பல காரணங்களால் தகர்ந்துபோய் இப்பொழுது குமரப் பருவத்துப் பிள்ளைகள் மிக்க சுதந்திரத்தோடு பழகுவதற்கான சமூகச் சூழ்நிலை உண்டாகியுள்ளது. நம்முடைய நாட்டில் இப்பொழுது 'விக்டோரியா கால' சமூகத் தடைகள் இருந்து வருகின்றன. ஆனால், அவை ஏற்கெனவே தகரத் தொடங்கிவிட்டன. முன்பு குமரப் பருவத்துப் பெண்பிள்ளைகள் வீட்டின் பின் அறைக்குள் பதுங்கி மறைவார்கள். ஆனால், இப்பொழுதோ பருவம் எய்திய பெண்களும் ஆண்களும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சேர்ந்து படிக்கின்றார்கள். சேர்ந்தே அலுவலகங்களில் வேலை செய்கின்றனர்.

குமரப் பருவத்தில் ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சேர்ந்து பழகும் தன்மை சமூகத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப அதிகமாகவோ

குறைவாகவோ இருந்தாலும், இருபாலாருக்குமிடையே ஒரு புது உணர்ச்சி, ஆர்வம் உண்டாகின்றது என்று சொல்லலாம்.

மேல்நாட்டுப் பிள்ளைகளுடைய சமூக நடத்தை இந்தப் பருவத்தில் எவ்வாறு மாறுகின்றது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்கள். நம்முடைய நாட்டில் அத்தகைய ஆராய்ச்சி இன்னும் செய்யவேண்டியிருக்கின்றது. மேல்நாட்டு ஆராய்ச்சியின் பயனாகப் பின்வரும் முக்கிய மாறுதல்கள் ஏற்படுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள் :

பலதரப்பட்ட பிள்ளைகள் கூட்டமாக இருப்பதைவிட்டுச் சிலரோடு மட்டும் பழகுதல்.

மாறி மாறிப் பலரிடம் பழகுதலைவிட்டுச் சிலரிடம் தொடர்ந்து பழகுதல்.

சத்தமாகவும் ஆரவாரமாகவும் பழகுவதைவிட்டு, அடக்கமாகவும் வயது வந்தவர்கள்போன்று கண்ணியமாகவும் பழகுதல்.

பழகுபவர்களுடைய குடும்ப மரபு, பொருளாதார நிலை முதலியனபற்றி அதிகமாக எண்ணிப் பழகுதல்.

பொதுப்படையாகப் பழகுவதைவிட்டுக் குறிப்பிட்ட வகைகளில் முறையாகப் பழகுதல்.

பல நண்பர்கள் என்ற நிலைவிட்டுச் சில நண்பர்களோடு மிக நெருக்கமாகப் பழகுதல்.

குறுகியகால நட்பைவிட்டு நீண்டகால நட்பு உறவுகளை விரும்பி அமைத்தல்.

தன்னுடைய நடத்தைபற்றியும் பிறருடைய நடத்தைபற்றியும் மேலும் மேலும் அதிகமாகப் புரிந்துகொள்ளும் நுட்பமான அறிவு உண்டாதல்.

வயது வந்தவர்களோடு சம நிலையில் இருந்து பழக முயலுதல்.

மேற்சொன்ன மாறுதல்கள் மேல்நாட்டுப் பிள்ளைகளின் சமூக நடத்தையில் குமரப் பருவத்தின்போது ஏற்படுவதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நம்முடைய நாட்டில் குமரப் பருவத்துப் பிள்ளைகளின் சமூக நடத்தையிலும் இத்தகைய மாறுதல் ஏற்படுவதைக் காணலாம்.

## தோழர்களைத் தேர்ந்தெடுத்தல்

குமரப் பருவம் தொடங்கும் சமயத்திலும் அதற்குப் பின்னும் குழந்தைகள் தோழர்களோடு சேர்ந்து வாழும் தன்மையில் சில சுவையான மாறுதல்கள் ஏற்படுகின்றன. குமரப் பருவத்தில் குழந்தைகள் தங்களுடைய ஒத்த வயதுத் தோழர்களுடன் மிக்க ஆர்வமாகப் பழகுகிறார்கள். வேறு எந்தப் பருவத்திலும் தோழமை வாழ்க்கையில் இத்துணை ஆர்வம் காட்டப்படுவதில்லை. இதற்கு என்ன காரணம் ?

குழந்தைப் பருவம் முதிர்ந்து குமரப் பருவம் தொடங்கும்பொழுது குழந்தையின் உள்ளத்தில் பலதரப்பட்ட உணர்ச்சிகள் ஏற்படுவதை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். தனது உடலில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு குழந்தைகளுக்கு அச்சம், கவலை, வியப்பு போன்ற பல உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. இவை தவிர மன வளர்ச்சி காரணமாக ஏற்படுகின்ற உணர்ச்சிகள் வேறு. வயது வந்த பெரியவர்களுக்கு இந்தப் பிள்ளைகளின் வளர்ச்சி மாறுதல்கள் அவ்வளவு பெரிதாகத் தோன்றுவதில்லை. அவை மிகச் சாதாரணமாகத் தோன்றும். ஆனால், குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கோ தங்களிடம் ஏற்படும் மாறுதல்கள் பிரம்மாண்டமான அனுபவங்களாகத் தோன்றும். குமரப் பருவத்தை எய்துகின்ற ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் இந்தப் பருவத்தில் குழுக்களாகச் சேர்ந்துவிடுவார்கள்.

'கும்பல்' (gang) என்றும், 'கூட்டம்' (croud) என்றும் இரண்டு வகையான குழுக்கள் உண்டு. குமரப் பருவம் ஆரம்பிப்பதற்கு முந்திய நிலையில் பிள்ளைகள் கும்பல்களாகவும் வாழ்வார்கள். பொதுவாக ஒருபால் குழந்தைகள் சேர்ந்து 'கும்பல்' உண்டாகும். ஒரு கும்பலைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பல செயல்களில் ஈடுபடுவார்கள். ஆனால், குமரப் பருவம் ஆரம்பித்தவுடன் கும்பல் வாழ்க்கை நின்றுபோய் 'கூட்ட' வாழ்க்கை உண்டாகின்றது. அதாவது வேறுபால் பிள்ளைகளும் சேர்ந்து கூட்டமாகப் பல செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இக் கூட்டம் குழந்தைப் பருவ கும்பலைவிட அளவில் பெரிதாக இருக்கும். அவர்கள் ஈடுபடும் செயல்களும் வேறுபட்டதாக

யிருக்கும். ஒரு கூட்டம் எவ்வாறு இருக்கும் என்பதைக் கீழ்க்கண்ட விளக்கப்படத்தில் பார்க்கலாம் :




**ஒரு கூட்டத்தினைப் பகுத்தாய்தல்**
**படம் 33**

கோவை நகரத்திலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள்பற்றி ஒருவர் ஆராய்ச்சி செய்தார். அம் மாணவர்கள் குமரப் பருவத்தினர். அவர்களில் ஒரே வகுப்பைச் சேர்ந்த 8 மாணவர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டார் : 'மூன்றுபேருள்ள ஒரு குழுவாக நீங்கள் செயல்படப் போவதாக வைத்துக்கொள்வோம். அக் குழுவில் உங்களோடு வேறு எந்த இரண்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவீர்கள் ? முதலில் யாரைச் சேர்த்துக்கொள்ள விருப்பம்? இரண்டாவதாக யாரைச் சேர்த்துக்கொள்ள விருப்பம் ?' ஒவ்வொருவரும் தங்களுடைய முதல் விருப்பத்தையும் இரண்டாவது விருப்பத்தையும் தெரிவித்தார்கள். அவர்களது விருப்பங்களை அடுத்துள்ள அட்டவணையில் காணலாம்.

| | K.A. | R.J. | S.K. | M.S. | V.T. | J.R. | R.V. | P.S. | No. of 1st choices | No. of 2nd choices |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K.A. | ... | ... | 1 | ... | 2 | ... | ... | ... | Nil | 1 |
| R.J. | ... | ... | 2 | 1 | ... | ... | ... | ... | Nil | Nil |
| S.K. | ... | ... | ... | ... | ... | 1 | ... | 2 | 4 | 1 |
| M.S. | ... | ... | 1 | ... | ... | ... | 2 | ... | 2 | Nil |
| V.T. | ... | ... | ... | ... | ... | ... | 2 | 1 | Nil | 1 |
| J.R. | ... | ... | 1 | ... | ... | ... | 2 | ... | 1 | 1 |
| R.V. | 2 | ... | ... | 1 | ... | ... | ... | ... | Nil | 3 |
| P.S. | ... | ... | 1 | ... | ... | 2 | ... | ... | 1 | 1 |

இந்த அட்டவணையைப் பார்க்கும்பொழுது 8 மாணவர்களில் S.K. என்னும் மாணவன் எல்லோராலும் மிகவும் விரும்பப்படுவது தெரிய வருகின்றது. நான்குபேர் அவரை முதலாவதாக விரும்புகின்றார்கள். ஒருவர் இரண்டாவதாக விரும்புகின்றார். இதற்கு நேர்மாறாக R.J.-ஐ எடுத்துக்கொள்ளலாம். அவரை ஒருவரும் விரும்பவில்லை. இரண்டாவதாகக்கூட ஒருவரும் விரும்பவில்லை. ஆகவே, அக் குழுவில் அவர் மிகவும் ஒதுங்கிய நிலையில் இருப்பவர். பாதுகாப்பற்ற உணர்ச்சி அவருக்கு இருக்கும். அவரைப் போன்றவர்களுக்குப் பெரியவர்கள் அதிகக் கவனம் கொடுத்து அவர்களின் தன்னம்பிக்கை வளர உதவ வேண்டும்.

## பிறர்போல் நடக்க விரும்புதல்

குமரப் பருவத்தில் கூட்டு வாழ்க்கை மிக முக்கியமாக இருப்பதைப் பார்த்துள்ளோம். இதிலிருந்து உண்டாகும் ஒரு முக்கிய நடத்தை என்னவென்றால் அந்தப் பருவத்திலுள்ள பிள்ளைகள் ஒருவர் மற்றவரைப்போல் நடக்க விரும்புவதாகும் (conformity). உடையை எடுத்துக்கொண்டால், மற்றப் பிள்ளைகள் எவ்வாறு உடுத்துகிறார்களோ அவ்வாறே தானும் உடுத்தவேண்டும் என்கின்ற அவா எல்லாப் பிள்ளைகளிடம் இருப்பதைப் பார்க்கலாம். அதுபோலவே தலைப்பின்னல், அழகுச் சாமான்கள் வாங்குவது, களியாட்டங்களுக்குச் செல்லுவது, பேச்சு முறைகள் முதலிய பலவற்றில் மற்றப் பிள்ளைகளைப்போலத் தானும் ஒழுகவேண்டும் என்கின்ற உணர்ச்சி எல்லாப் பிள்ளைகளிடமும் பரவலாக இருப்பதைக் காணலாம்.

வயது வந்தவர்களும் மற்றவர்களைப்போல நடக்கவேண்டும் என்று நினைப்பதுண்டு. ஊரோடு ஒட்டி ஒழுகல் என்பது எல்லோரும் செய்கின்ற ஒன்று. இது எல்லாப் பருவங்களிலும் காணப்பட்டபோதிலும், குமரப் பருவத்தில் அதிகமாகக் காணப்படுவதாகச் சொல்லலாம். குமரப் பருவத்துப் பிள்ளைகள் எந்த அளவுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடமுடிகின்றதோ அந்த அளவுக்குக் குழு மனப்பான்மை மிகுதியாகும். குழு நடத்தைக்கு முக்கியத்துவம் ஏற்படும். ஆகவே, சம வயது பிள்ளைகளைப்போன்று ஒட்டி நடக்கின்ற மனப்பான்மை அதிகமாகும். இதனால் குமரப் பருவத்தில் பிள்ளைகளின் தனித்தன்மை அதிகமாக வெளிப்படுவதில்லை. குமரப் பருவம் முடிந்து முதிர்ச்சிப் பருவம் தொடங்கும் போது மனித வளர்ச்சியில் தனித் தன்மை வெளிப்பட்டு வளர்ச்சியுறும்.

## தலைமை

சமூக வாழ்க்கையில் தலைமை என்பது ஒரு முக்கியமான அம்சம். தலைவர்கள் எண்ணிக்கை சிறிதாயினும் அவர்கள் சமூக வாழ்க்கையின்

தன்மையையும் தரத்தையும் நிர்ணயிக்கின்றார்கள். ஆகவே, தலைமை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கல்விக்கூடங்களில் தலைவனாக இருக்கும் பிள்ளைகளினுடைய தன்மைக்கேற்ப மற்ற எல்லோருடைய நடத்தையும் அமைந்துவிடும்.

ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் உள்ள 9ஆம் வகுப்பைச் சேர்ந்த 44 பிள்ளைகளின் சமூக மனப்பான்மைபற்றி ஒருவர் ஆராய்ச்சி செய்தார். 44 பிள்ளைகளில் ஒருவரைப்பற்றி ஒருவர் என்ன நினைத்தார்கள் என்பதையும் அவர்களில் யார் யார் மற்றவர்களால் மிகவும் விரும்பப்படுகிறார்கள் என்பதுபற்றியும் ஆராயப்பட்டது. சில மாணவிகள் மற்றவர்களால் பெருவாரியாக விரும்பப்படுவதும், ஒரு சிலர் மற்றவர்களால் விரும்பப்படாமலிருப்பதும் தெரியவந்தது. இவ்வாறு பிள்ளைக்குப் பிள்ளை சமூக ஏற்பு (social acceptance) மாறும். 44 பிள்ளைகளிடையே ஒரு பெண் பலராலும் விரும்பப்பட்டாள். அப் பெண் படிப்பில் மிகத் திறமைசாலி என்றும், வகுப்பில் முதன்மையாக வருபவள் என்றும், பொதுவாக அமைதியான இயல்புடையவள் என்றும் தெரியவந்தது. அவள் பிறரிடம் அதிகார தோரணையில் நடந்துகொள்வதில்லை. அவள் நல்ல அழகும் உடல் நலமும் உடையவளாக இருந்தாள். எப்பொழுதும் சுத்தமாக நல்ல தோற்றத்துடன் இருப்பாள். பிறரோடு பழகுவதில் அவளுக்குச் சிறிதும் கஷ்டம் இருப்பதில்லை. ஒரு குழுவில் கலந்து பேசுவதில் அவளுக்குச் சிறிதும் சிரமம் கிடையாது. புதியவர்களோடும் அவள் கஷ்டமில்லாமல் பழக முடியும். பிறரால் அவளுடைய உணர்ச்சி அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. அவளுடைய நெருங்கிய நண்பர் குழு 10பேர்கள் அடங்கியது.

நல்ல தலைவர்களாக விளங்குகின்றவர்களின் சிறப்பியல்புகள் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பொதுவாக அவர்கள் சராசரி பிள்ளையைவிட அதிக நுண்ணறிவு உடையவர்களாக இருப்பார்கள். இது தவிர நல்ல உடல் அமைப்பு, கவர்ச்சியான தோற்றம், அழகு, தன்னம்பிக்கை, புறமுக நோக்கு, உற்சாகம், மகிழ்ச்சி, சொந்தமாகக் காரியங்களைச் செய்யும் திறமை, நிறைந்த சக்தி, மனப்பக்குவம் முதலிய தன்மைகள் உடையவர்களாகவும் இருப்பார்கள். பொதுவாக நடுத்தர அல்லது சிறிது மேல்தர சமூகப் பொருளாதார நிலையிலிருந்து வருபவர்களாக இருப்பார்கள். பாடத்தில் மட்டும் அதிகத் திறமையுடைய இளைஞர்கள் நுண்ணறிவில் உயர்வாக இருந்த போதிலும், தலைமைத் திறமை உடையவர்களாக இருப்பதில்லை.

குமரப் பருவத்தில் உள்ள பிள்ளைகளின் தலைமை இயல்புகளை விஞ்ஞான முறையாக ஆராய்ச்சி செய்வது பலவகையில் பயனுள்ள

தாக இருக்கும். உயர்நிலைப் பள்ளியில் தலைவர்களாக இருக்கும் மாணவர்கள் பொதுவாகக் கல்லூரிகளிலும் தலைவர்களாக விளங்குவதைக் காண்கிறோம். அதுபோலக் கல்லூரிகளில் மாணவர் தலைவர்களாக விளங்குபவர்கள் பின்னால் சமூக வாழ்க்கையிலும் தலைவர்களாக விளங்குவதைக் காணலாம்.

தலைமையில் பலவகைகள் உண்டு. சமயம், சந்தர்ப்பத்திற்கேற்ப தலைமை மாறும். எல்லா நிலைகளிலும் ஒரே பிள்ளை தலைவனாக விளங்க முடியாது. உல்லாசப் பிரயாணம் செல்லும்பொழுது அது சம்பந்தப்பட்ட செயல்களில் திறமையுடைய பிள்ளை தலைவனாகி விடுகிறான். ஆனால், ஓய்வு நேரத்தில் பிள்ளைகள் கூட்டமாகச் சேர்ந்து பாடிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருக்கும்பொழுது பாட்டிலும், விளையாட்டிலும் திறமை மிக்க பிள்ளைகள் தலைவர்கள் ஆகிவிடுகின்றார்கள். ஒரு நாடகத்தைப் போடுவதற்காக ஆயத்தங்கள் செய்யும்பொழுது நடிப்புத் துறையில் திறமையுடையவர்கள் தலைவர்களாகின்றார்கள். விளையாட்டு மைதானத்தில் வேறு சிலர் தலைவராகின்றார்கள். கூட்டங்கள், விவாதங்கள் நடக்கும்பொழுது அவற்றில் திறமை வாய்ந்தவர்கள் அப்பொழுது தலைவர்களாக விளங்குவார்கள். இவ்வாறு தலைமை என்பது சமயத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப மாறுவதைக் காண்கின்றோம்.

### இயைந்து ஒழுகல்

வேகமாக வளருகின்ற குமரப் பருவத்துப் பிள்ளைகள் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தோடு இயைந்து ஒழுகல் ஒரு முக்கியமான பிரச்சினை. அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, அவர்களது வீடு. இரண்டாவது, அவர்கள் கல்வி கற்கும் பள்ளிக்கூடம். மூன்றாவது, அவர்கள் பழகி வாழ்கின்ற சமூகம். இம் மூன்று இடங்களிலும் குமரப் பருவத்துப் பிள்ளைகள் அவர்களது புதிய வளர்ச்சிகள் காரணமாக இயைந்து ஒழுக வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு இயைந்து வாழ்வதில் பல பிரச்சினைகள் உண்டாகும். இத்தகைய பிரச்சினைகளைப்பற்றி வில்லியம்ஸ் என்பவர் ஓர் ஆராய்ச்சி செய்தார்.

### பள்ளிச் சூழ்நிலை

பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு என்னென்ன வகையான பிரச்சினைகள் உள்ளன என்பதுபற்றியும் ஓரளவுக்கு ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பொதுவாகப் பின்வரும் பிரச்சினைகள் முக்கியமானவை என்று கூறலாம்:

படிப்பில் விருப்பமின்மை.
ஆண்டுத் தேர்வில் தவறிவிடுமோ என்ற பயம்.

வகுப்பில் அமைதியின்மை.
தேர்வில் மார்க்குகள் குறைவாக வாங்குதல்.
வகுப்பில் எழுந்து பேசுவதற்குத் தயக்கமாக இருத்தல்.
ஆசிரியர்கள் அதிகக் கண்டிப்பாக இருத்தல்.
வேண்டிய அளவு படிப்பில் திறமையில்லாதிருத்தல்.
பள்ளி வாழ்க்கை பிடிக்காது இருத்தல்.

இவை பள்ளி வாழ்க்கைச் சம்பந்தமான பிரச்சினைகளுக்குச் சில முக்கிய எடுத்துக்காட்டுகள். இப் பிரச்சினைகள் குழந்தைப் பருவத்துப் பிள்ளைகளுக்கும் இல்லாமலில்லை. ஆனால், குழந்தைப் பருவத்துப் பிள்ளைகள் இப் பிரச்சினைகளைப்பற்றி அதிகம் நினைப்பதில்லை. அவை பற்றிக் கவலைப்படுவதில்லை. குமரப் பருவத்துப் பிள்ளைகளோ இவை பற்றி அதிக உணர்வு உடையவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய உணர்வு காரணமாகக் குமரப் பருவத்துப் பிள்ளைகள் மனத்தில் கவலை சஞ்சலம் உண்டாகிறது. மேலும் இப் பருவத்தில் பிள்ளைகளுக்குத் தன்னுணர்வு அதிகமாக இருப்பதால் இப் பிரச்சினைகளைத் தாங்களே தீர்க்கவேண்டும் என்றும் நினைக்கிறார்கள். உரிமை உணர்ச்சியுடைய குமரப் பருவத்துப் பிள்ளைகள் பிறரை அதிகம் சாராது தாங்களே பிரச்சினைகளைத் தீர்க்க நினைப்பதால் பிரச்சினைகள்பற்றிய கவலை அதிகமாவதற்கு ஏதுவாகிறது.

பள்ளி வாழ்க்கையில் உண்டாகும் பிரச்சினைகளைத் தீர்த்து நன்கு இயைபுற்று வாழ்வது மிகவும் முக்கியம். இதற்கு ஆசிரியர்கள் துணை செய்யவேண்டும். இதற்காக மேல்நாடுகளில் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு வழிகாட்டி யோசனை கூறுவதற்காக (guidance and counselling) பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். பிள்ளைகள் தங்களுடையப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசி அவற்றைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு ஒத்தாசையாக இந்த ஆசிரியர்கள் இருப்பார்கள்.

கோவை நகரிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆசிரியர் வகுப்பில் இது நிகழ்ந்தது. அவரது வகுப்பிலுள்ள ஒரு பெண்பிள்ளை குமரப் பருவ நிலையில் இருந்தாள். 13, 14 வயது இருக்கும். சென்ற ஆண்டுவரை நன்றாகப் படித்துக்கொண்டிருந்த அந்தப் பெண் திடீரென்று படிப்பில் மிகவும் மோசமாகப் போய்விட்டாள். ஆசிரியருக்கும் புரியவில்லை. அந்த ஆண்டின் இறுதியில் அவளிடம் தனியாக இருந்து பேசியபொழுதுதான் அந்தப் பெண்ணின் உண்மையான மனக்கவலை தெரியவந்தது. அதுவரைக்கும் தனது உள்ளத்திலிருந்த ஆழ்ந்த மனக்கவலையை ஆசிரியரிடம் சொல்லுவதற்கு அந்தப் பெண்ணுக்குத் தைரியம் வரவில்லை. கடைசியாக

மிக்க அன்போடும், அக்கறையோடும் தனித்துக் கேட்டபொழுதுதான் மனம் திறந்து சொல்லுவதற்கு அவள் துணிந்தாள். அந்த ஆண்டு ஆரம்பத்தில் அவளுடைய முகத்திலெல்லாம் பருக்கள் உண்டாகி முகத்தில் கறுப்புப் புள்ளிகள் ஏற்பட்டு அவளுடைய அழகு மிகவும் குறையலாயிற்று. இந்தக் கவலை அவள் உள்ளத்தில் எப்பொழுதும் இருந்து வாட்டி வந்தது. கறுப்புப் புள்ளிகள் நிறம் மாருமல் அப்படியே இருந்துவிடுமோ என்கின்ற பெரிய அச்சம் அவள் உள்ளத்தைப் பிடித்திருந்தது. அவளுக்குப் பல சமயங்களில் இதுபற்றிக் கனவுகள் வருவதுண்டு. அவற்றையும் வேறு யாரிடமும் சொல்லிக் கொள்ள தைரியம் வரவில்லை. அவள் உள்ளத்திலிருந்த இந்தப் பெரும் கவலையைப் பெற்றேரோ, மற்றவர்களோ புரிந்துகொள்ள வில்லை. வயது வந்தவர்களுக்கு இச் சிறு பெண்ணின் முகத்தில் ஏற்பட்ட பருக்களைப்பற்றி சிறிதும் அக்கறை உண்டாகவில்லை. இந்தக் கறுப்புப் புள்ளிகள் தற்காலிகமாக இருந்துவிட்டுச் சிறிது காலத்தில் மறைந்துபோய்விடும் என்ற உண்மை அந்தப் பெண்ணுக்குத் தெரிந்திருந்தால் அந்த ஆண்டு முழுவதும் அவளுடைய கல்வி கெட்டுப்போயிருக்காது. அது காரணத்தால் அவளுக்கு அதிக வெட்கமும், கூச்சமும் உண்டாகி நண்பர்கள் இல்லாமல் போய்விட வேண்டியதுமில்லை.

வீட்டுச் சூழ்நிலை

இரண்டு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களிடம், 'நீங்கள் மிக நெருங்கிப் பழகுபவர்கள் யார்?' என்ற கேள்வி கேட்கப் பட்டது. அதற்கு அவர்கள் அளித்த விடைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

உயர்நிலைப்பள்ளி—1

| நெருங்கிப் பழகுபவர்கள் | சொன்ன மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நண்பர்கள் ... ... ... | 19 |
| பெற்றேர் ... ... ... | 17 |
| உடன்பிறந்தோர் ... ... | 12 |
| ஆசிரியர் ... ... ... | 12 |
| மாணவர்கள் ... ... ... | 7 |
| நண்பர்கள் ... ... ... | 6 |
| உறவினர் ... ... ... | 6 |
| பெரியோர் ... ... ... | 1 |

உயர்நிலைப்பள்ளி—2

| நெருங்கிப் பழகுபவர்கள் | சொன்ன மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நண்பர்கள் ... ... ... | 19 |
| உறவினர்கள் ... ... ... | 16 |
| பெற்றோர் ... ... ... | 12 |
| ஆசிரியர் ... ... ... | 4 |
| சகோதர சகோதரிகள் ... ... | 3 |
| பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் ... | 3 |
| தாத்தா, பாட்டி ... ... ... | 3 |
| பெரியோர் ... ... ... | 2 |
| குழந்தைகள் ... ... ... | 1 |

முதல் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பிள்ளைகள் 11 வயதிலிருந்து 14 வயதுவரை இருந்தார்கள். இரண்டாவது உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் 13 வயதிலிருந்து 17 வயதுவரை இருந்தார்கள். இவ்விரு வயது நிலைகளுக்குமுள்ள வேற்றுமை மேலே கொடுக்கப்பட்ட அட்டவணைகளிலிருந்து தெரியவருகின்றன. 11 வயதிலிருந்து 14வயதுவரையுள்ள பிள்ளைகள் முன்குமரப் பருவத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அதிகமாக நெருங்கிப் பழகுவது பெற்றோர் என்று கூறியுள்ளார்கள். அடுத்தபடியாக, உடன்பிறந்தவர்கள். அதற்கு அடுத்தபடியாக ஆசிரியர்கள். வயது ஆகஆக இந்நிலை மாறுகின்றது. அதிக வயதுள்ள பெரியவர்களிடம் பழகுவது குறைந்து சமவயதுள்ள நண்பர்களிடம் பழகுவது அதிகமாகின்றது. 13 வயதிலிருந்து 17 வயதுவரையுள்ள பிள்ளைகள் அதிகமாகப் பழகுவது நண்பர்கள். அதற்குப் பிறகு உறவினர்கள், பெற்றோர்கள். குமரப் பருவத்துப் பிள்ளைகள் படிப்படியாகப் பெற்றோர்களிடமிருந்து விடுதலைபெற்று சமவயதுள்ள உடனொத்த பிள்ளைகளோடு நெருங்கிப் பழகுவார்கள்.

வளருகின்ற குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கும் வீட்டில் உள்ள பெற்றோர், அண்ணன், தம்பியர், அக்காள் தங்கையர் மற்றும் உறவினர்களுக்கும் இடையே சிக்கல் எழலாம். குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு அதிக உரிமை உணர்ச்சி உண்டாவதாகப் பெற்றோர்கள் சொல்லுவதை அப்படியே எப்பொழுதும் கேட்கமாட்டார்கள். பெற்றோர்களும் பிள்ளைகள் பெரியவர்களாகிவிட்டார்கள் என்பதைச் சரியாக உணர்ந்துகொள்ளாது சிறு பிள்ளைகளைப்போன்றே நடத்துவதுண்டு. இதன்காரணமாகப் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் சச்சரவுகள் உண்டாகும். இருதரத்தாரும் இது சம்பந்த

மாகப் பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் நடந்துகொண்டால் நலமாக இருக்கும். பெற்றோர்கள் தாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்தபொழுது எப்படி இருந்தார்களோ அப்படியே தங்கள் பிள்ளைகளும் ஒழுகவேண்டும் என்று நினைப்பது தவருகும். ஆனால், பெரும்பாலான பெற்றோர்கள் இவ்வாறு நினைப்பதுண்டு. காலம் எப்பொழுதும் மாறி வரும் ஒன்று. ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் இடையே பல மாறுதல்கள் உண்டாகிவிடுகின்றன. அதனால் இளம் பிள்ளைகளுக்குச் சரியென்று தோன்றுவது பெற்றோர்களுக்குச் சரியென்று தோன்றுவதில்லை. பெற்றோர்களுக்குச் சரியென்று தோன்றுவது பிள்ளைகளுக்குச் சரியென்று தோன்றுவதில்லை. இந்நிலையில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுப்பது நல்லது.

அன்போடு ஆலோசனை சொல்லி வழிகாட்ட வேண்டியது பெற்றோர்களுடைய கடமைதான். சில சமயங்களில் கண்டிப்பாக இருப்பதும் அவர்களது கடமையாகும். ஆனால், போதிய அளவு பிள்ளைகளுக்குச் சுதந்திரம் அளித்து அவர்கள் உரிமையோடு வளர்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டியது பெற்றோர்களது கடமை. இளம் பிள்ளைகளும் பெற்றோர்களுக்குரிய மரியாதையைக் கொடுத்து அதே சமயத்தில் நன்கு சுதந்திரமாக வளர்ந்து முழுமனிதர் ஆக வேண்டியது வளர்ச்சியின் நியதியாகும். இவ்வாறு பெற்றோர்களுடன் நல்ல இயைபு ஏற்படுத்திக்கொள்வது குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஒரு முக்கியமான பிரச்சினை.

வீட்டு வாழ்க்கையில் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பெற்றோர்களை மட்டும் பற்றியது அல்ல. உடன்பிறந்த சகோதர சகோதரிகளுடன் அவர்கள் இயைந்து வாழவேண்டும். வயது ஆகி முழு மனித நிலையை நோக்கி வேகமாக வளர்ந்துவரும் குமரப் பருவத்துப் பையன்கள் தனது மூத்த சகோதரனுக்கு அடங்கி வாழ்வதை விரும்புவதில்லை. மூத்த சகோதரன் அதிகாரம் செய்தால் அவனை எதிர்ப்பார்கள். இதுபோலவே மற்றச் சகோதர சகோதரிகளுடன் சிக்கல் உண்டாகலாம். இந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் முறையில் நன்கு இயைந்து வாழவேண்டியது அவசியம். வீட்டிலுள்ள மற்ற உறவினர்களுடனும், குறிப்பாகப் பாட்டன், பாட்டியுடன் இயைந்து வாழவேண்டியது அவசியம். சில சமயங்களில் பாட்டன், பாட்டிகளுக்கும் இளம் பிள்ளைகளுக்கும் பெரிய சிக்கல் உண்டாகலாம். காரணம், இருதரத்தாருடைய காலங்களுக்கு இடையேயுள்ள வேற்றுமை. வயதாகிக் கிழநிலையிலுள்ள முதியோர்கள் தாங்கள் சிறியவர்களாக இருந்தபொழுது எவ்வாறு என்னென்னவற்றைச் செய்தார்கள், அவற்றை 40, 50 ஆண்டுகளுக்குப் பின்னுள்ள இளம் பிள்ளைகளும் செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தால்

ஏமாற்றம் உண்டாகும். ஆகவே, 'இக் காலத்துப் பிள்ளைகள் கெட்டு விட்டார்கள்' என்று கூக்குரல் எழுப்பினால் அதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. பெரியவர்கள் இதனைத் தெரிந்து இளம் பிள்ளைகள்பால் பரிவுடன் இருக்க வேண்டும். இளம் பிள்ளைகளும் பெரியவர்கள்பால் மரியாதையாக நடந்துகொள்ளவேண்டும்.

### சமூகச் சூழ்நிலை

வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் இயைந்து வாழ்வது ஒருபுற மிருக்க சமூக வாழ்க்கையில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு குமரப் பருவத்துப் பிள்ளைகள் தங்கள் தோழர்களுடனும் மற்றவர்களுடனும் இயைந்து வாழ்வது மிகவும் முக்கியம். வீடு பாதுகாப்பான ஒரு சிறு உலகம். பள்ளிக்கூடமும் பாதுகாப்பான இன்னொரு சிறு உலகம். இவ்விரு இடங்களிலும் பெரியவர்களது ஆதரவும் பாதுகாப்பும் உள்ளன. இத்தகைய பாதுகாப்பான சூழ் நிலைகளில் சிக்கல்களைத் தீர்த்துப் பிறருடன் இயைந்து வாழ்வது அத்தனை கடினமானதன்று. ஆனால், இரு உலகங்களுக்கும் வெளியே உள்ள பரவலான சமூகத்தில் தன்னந்தனியாக எதிர்ப்படும் சிக்கல் களைச் சமாளித்து நன்கு இயைந்து வாழ்வதே கடினமானது. குமரப் பருவத்து இளைஞர்கள் சமூகத்தில் சுதந்திரமாக அனுபவம் பெறும் பொழுது பல்வேறு பிரச்சினைகள் உண்டாகலாம். இருபாலைச் சேர்ந்த நண்பர்கள், தோழர்கள், பெரியவர்கள், சிறியவர்கள், இன்னும் பலதரப்பட்டவர்கள் எல்லோருடனும் பழகுவதற்கு வாய்ப்பு உண்டாகின்றது. இளம் பிள்ளைகளின் சமூக வாழ்க்கை அவர்கள் வாழும் சமூக அமைப்பைப் பெரிதும் பொறுத்து அமையும். மேல் நாடுகளில் ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் கலந்து வாழ்வதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளது. ஆகவே, இத் துறையில் பிள்ளைகளுக்கு நிறைந்த அனுபவங்களும் பிரச்சினைகளும் உண் டாகும். மேலும், மேல்நாடுகளில் இளம் பிள்ளைகள் சுதந்திரமாகப் பல்வேறு செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இதன் காரணமாகவும் பிரச்சினைகள் உண்டாகலாம். இவற்றை யெல்லாம் சமாளித்து நல்ல இயைபுடன் வாழ்வது அவசியம். மேல் நாட்டில் வீட்டு வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் பாதுகாப்பு குறைவு. ஆகவே, நல்ல நண்பர்கள், தோழர்களிடமிருந்து உண்டாகும் சமூகப் பாதுகாப்பு மிக முக்கியமானது. ஆகவே, சமூக வாழ்க்கை நம் நாட்டைவிட மேல்நாட்டில் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### சாதியும் சாதி மனப்பான்மையும்

இந்திய சமூகத்திலுள்ள ஒரு தனிப்பட்ட பிரச்சினை சாதிப் பிரச்சினையாகும். பிறக்கின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் சாதி ஒன்று

அமைந்துவிடுகின்றது. இந்தச் சாதி அமைப்பு நெடுங்காலமாக இருந்து வருகின்ற ஒன்று. இன்றும் சாதியின் பிடிப்பு இருந்து வருகின்றது. கடந்த பல ஆண்டுகளாகச் சமூகச் சீர்திருத்தத் தலைவர்கள் எல்லோரும் சாதியைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். ஆகவே, இளம் பிள்ளைகள் பொதுவாக சாதி மனப்பான்மை கொண்டிருப்பதில்லை. குமரப் பருவத்தின் பின்பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் பலரது சாதி மனப்பான்மைபற்றி ஓர் ஆராய்ச்சி செய்யப்பட்டது. புகழ்பெற்ற அமெரிக்க உளவியல் வல்லுநர் டாக்டர் கார்டனர் மர்பியும் இந்திய வல்லுநர்களும் சேர்ந்து இவ்வாராய்ச்சியை நடத்தினார்கள். சென்னை நகரத்திலுள்ள 7 கல்லூரிகள், நகரத்துக்கு வெளியிலுள்ள 5 கல்லூரிகள் ஆகியவற்றைச் சேர்ந்த மொத்தம் 591 மாணவர்கள் இந்த ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்களில் 468 பேர் இந்துக்கள், 36 பேர் முஸ்லீம்கள், 77 பேர் கிறிஸ்துவர்கள். 10 பேர் இன்ன சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. இந்துக்களில் 188 பேர் பிராமண ஜாதியையும், 279 பேர் பிராமணர் அல்லாத ஜாதியையும், 1 ஹரிசன சாதியையும் சேர்ந்தவர்கள். மொத்த மாணவர்களில் 397 பேர் ஆண்கள், 194 பேர் பெண்கள்.

'சாதி அமைப்பு (1) சரியா ? (2) பரவாயில்லையா ? (3) இருக்கத் தகாதது ?' என்று கேட்டதற்கு 11% பேர்கள்தான் 'சரி' என்று சொன்னார்கள், 32% பேர் 'பரவாயில்லை' என்று சொன்னார்கள். 56% பேர் 'இருக்கக்கூடாதது' என்று சொன்னார்கள். பெருவாரியானவர்கள் சாதி அமைப்பு கூடாது என்று நினைப்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இதே மனப்பான்மை இன்னொரு வகையாகவும் தெரியவந்தது. அதாவது பெருவாரியான மாணவர்கள் தங்களது சாதி, குடும்ப மரபுகளைப் பின்பற்றுவதில்லை என்று சொன்னார்கள். அவர்களிடம் 'சாதி அமைப்பு இருக்கவேண்டுமா அல்லது திருத்தப்படவேண்டுமா அல்லது ஒழிக்கப்படவேண்டுமா?' என்ற கேள்வி கேட்கப்பட்டது. 5% பேர்கள் 'இருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். 37% பேர்கள் 'திருத்தி அமைக்கலாம்' என்று சொன்னார்கள். 58% பேர்கள் 'ஒழிக்கவேண்டும்' என்று சொன்னார்கள்.

சாதி ஒழிக்கப்படவேண்டுமென்றால் கலப்பு மணத்துக்கு ஆதரவு தரவேண்டும். இதுபற்றிக் கேள்வி கேட்கப்பட்டபோது 12.6% பேர் கலப்பு மணத்தை முழுதும் ஆதரித்தார்கள். கலப்பு மணத்துக்கு அடுத்தது 'கலந்து உண்ணல்'. 81.2% பேர் கலந்து உண்ணுவதற்குள்ள எல்லாத் தடைகளையும் நீக்கிவிடவேண்டும் என்று கூறினார்கள்.

ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் சிறிது தீவிரம் குறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களும் சாதி போகவேண்டும் என்றுதான் பொதுவாகக் கூறினார்கள். ஆனால், பலர் சாதியைத் திருத்தி அமைக்கலாம் என்று கூறினார்கள். நகரத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகளைவிடக் கிராமத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகளில் அதிக விகிதம் பேர்கள் சாதி அமைப்புப் பரவாயில்லை என்று கூறினார்கள். பொதுவாக பிராமணரல்லாத சாதியைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் சாதி முறை பரவாயில்லை என்று கருதுபவர்களாக இருந்தார்கள். ஆனால், இதற்கு மாறாக பிராமணரல்லாத சாதியைச் சேர்ந்த ஆண்பிள்ளைகள் சாதிமுறையை மிகவும் தீவிரமாக எதிர்த்தார்கள். நகரத்திலுள்ள பிராமணரல்லாத ஆண்பிள்ளைகளில் 73% பேர்களும், நாட்டுப்புறத்துக் கல்லூரிகளைச் சேர்ந்த பிராமணரல்லாத மாணவர்களில் 69·6% பேர்களும் சாதி அமைப்பு இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். இதுபற்றிப் பேராசிரியர் குப்புசுவாமி பின்வருமாறு கூறுகின்றார்: 'இவ்வாறு பிராமணரல்லாத ஆண்பிள்ளைகள் சாதி அமைப்பை மிக அதிகமாக எதிர்ப்பதற்குக் காரணம் பிராமணர்களும் பிராமணரல்லாதாருக்குமுள்ள வெறுப்பு. பிராமண சாதியைப் பற்றிய வெறுப்பானது சாதி அமைப்பு முழுதும்பற்றிய வெறுப்பாக உருவெடுத்துள்ளது.'

கலப்பு மணம்பற்றி பிராமணரல்லாத மாணவர்கள் பிராமண மாணவர்களைவிட அதிக தீவிரமுடையவர்களாக இருந்தார்கள். 81% மாணவர்கள் சாதிக்கு வெளியே திருமணம் செய்வது சரியென்று சொன்னார்கள். பிராமண மாணவர்களில் 50% மாணவர்கள் சாதிக்கு வெளியே திருமணம் செய்வது சரி என்று சொன்னார்கள். மொத்தத்தில் ஆண்களில் 20% பேர்கள் சாதிக்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டும் என்றும், 25% பேர்கள் வெவ்வேறு சாதிகளிடையே திருமணம் செய்யலாம் என்றும், மீதி பேர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்த யாருடனும் திருமணம் செய்யலாம் என்றும் சொன்னார்கள். பெண் மாணவர்கள் இவ்வளவு தீவிரமாகச் சொல்லவில்லை. அவர்கள் சாதிக்குள்ளேயே திருமணம் செய்வதைச் சிறிது அதிகமாக ஆதரித்தார்கள். எந்த வகுப்பைச் சேர்ந்த யாருடனும் திருமணம் செய்வது என்பதற்கு அவர்கள் மிகவும் குறைவாகவே ஆதரவு கொடுத்தார்கள். பொதுவாக எல்லா மாணவர்களும் ஹரிசனங்களுக்காகத் தனிச் சலுகைகள் கொடுப்பதை ஆதரித்துச் சொன்னார்கள்.

லக்னௌ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் காளி பிரசாத் அங்குள்ள மாணவர்களுடைய மனப்பான்மைபற்றி ஆராய்ச்சி செய்தார். வங்காள, கிறிஸ்துவ, ஹரிசன, இந்து, பஞ்சாபி, சீக், சிந்தி, முஸ்லீம் (ஷியா, சிந்நி) வகுப்புகளைச் சேர்ந்த

மாணவர்கள் ஆராய்ச்சியில் கலந்துகொண்டார்கள். எல்லா மாண வர்களும் மற்ற வகுப்பினர்களோடு தாராளமாகப் பழகுவதை ஆதரித்தார்கள். 60% முஸ்லீம்களும், 90% இந்துக்களும் ஹரிஜனங் களுடன் கலப்பு மணம் செய்யலாம் என்று சொன்னார்கள். 70% முஸ்லீம்களும், 90% இந்துக்களும் ஹரிஜனங்களோடு கலந்து உண்ணலாம் என்று சொன்னார்கள். 70% முஸ்லீம்களும், 80% இந்துக்களும் அவர்களை நெருங்கிய நண்பர்களாக ஏற்றுக்கொள்ள லாம் என்று சொன்னார்கள். இந்து—முஸ்லீம் மாணவர்களில் பெருவாரியானவர்கள் இரு சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் தாராளமாக ஒன்று சேர்ந்து விளையாடவேண்டும் என்றும், கலந்து உண்ணவேண்டும் என்றும், நெருங்கிய நட்புறவாக இருக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

பூனா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் அங்குள்ள மாணவர்களின் சாதி மனப்பான்மைபற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். சாதி மனப்பான்மையை எவ்வாறு மாற்றுவது என்பதுபற்றி அவர் ஆராய்ச்சி செய்தார். சாதி மனப்பான்மையைத் திருத்துவதற்காக அவர் மூன்று முறைகளைக் கையாண்டார். முதல் முறை, பல்வேறு சாதி சமயங்களைச் சேர்ந்தவர்களுடைய வரலாறு, அவர்களது மரபு, பழக்கவழக்கங்களைப்பற்றி அறிவுபூர்வமாக எடுத்துச் சொல்லுவ தாகும். இரண்டாவது முறை, பல்வேறு வகுப்பினர்களுடைய நற் பண்புகளை எடுத்துக்கூறி, அவர்கள் இந்திய நாட்டுக்குச் செய்துள்ள நன்மைகளையெடுத்துக்கூறி, சாதி மனப்பான்மையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று கேட்பவர்களின் உணர்ச்சியைத் தூண்டிப் பேசுவதாகும். மூன்றாவது முறை, மாணவர்கள் ஒரு குழுவாகக் கூடி சர்ச்சை, வாதம் செய்து எல்லா சாதிகளும் ஒன்றே என்ற மனப்பான்மை பெறுமாறு செய்வதாகும். இம் மூன்று முறைகளில் இரண்டாவது முறையாகிய மாணவர்களது உணர்ச்சியைத் தூண்டிப் பேசுவது அதிக பலன் அளிப்பதாகக் கண்டார்கள்.

### சமூகப் பொருளாதார வகுப்புகள்

சாதி அமைப்பு இந்தியாவில்மட்டும் இருப்பது. ஆனால், இந்திய சமுதாயத்திலும் மற்ற எல்லாச் சமுதாயங்களிலும் வகுப்பு அமைப்பு (social class) இருக்கவே செய்கிறது. வகுப்பு அமைப்பானது பொருளாதாரம், தொழில், கல்வி முதலியன காரணமாக உண்டா கின்றது. அடிப்படையில் இது பொருளாதாரம் காரணமாக அமை கின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் அது பிறக்கின்ற வகுப்பு நிலைக் கேற்ப அதன் சமூக நடத்தை அமைகின்றது. அதன் சமூக மனப் பான்மைகளும் அந்த வகுப்பிற்கேற்ப உருவாகின்றன. பொதுவாக,

சமூகத்திலுள்ள வகுப்பு நிலைகளை ஆறாகப் பிரிக்கலாம். அவை யாவன :

மேல் மேல்தர வகுப்பு
கீழ் மேல்தர வகுப்பு
மேல் நடுத்தர வகுப்பு
கீழ் நடுத்தர வகுப்பு
மேல் கீழ்த்தர வகுப்பு
கீழ் கீழ்த்தர வகுப்பு

குழந்தை எந்த வகுப்புச் சூழ்நிலையில் வளருகின்றதோ, அதற்கேற்ப அதன் மனப்பான்மைகளும் வளரும். ஆனால், அது பள்ளிக்கூடத்தில் சேரும்பொழுது வேறு சில வகுப்புகளைச் சேர்ந்த பிள்ளைகளோடு சேர்ந்து பழகுகின்ற வாய்ப்பு உண்டாகும். பள்ளிக்கூடங்கள் பொதுவாக அந்தந்த வட்டாரத்திலுள்ள வகுப்பு நிலையைப் பிரதிபலிக்கும். மேல்தர வகுப்பினர் வாழ்கின்ற வட்டாரத்தில் பொதுவாக மேல்தர வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பார்கள். எனினும், ஓரளவுக்குப் பல வகுப்பினரைச் சேர்ந்த பிள்ளைகள் கூடுவதற்குப் பள்ளிக்கூடம் காரணமாக இருக்கின்றது. பள்ளிக்கூடத்தைத் தவிர வேறு விளையாட்டு நிலையங்கள் சமூகப்பணி நிலையங்கள், பொழுதுபோக்கு நிலையங்கள் போன்ற பல நிலையங்களிலும் பல வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து பழகுவதற்கான வாய்ப்பு உண்டு. இத்தகைய சமூக இடைவினை (social interaction) காரணமாக இளம் பிள்ளைகளின் மனப்பான்மை மாறும். நடுத்தர வகுப்பையும், மேல்தர வகுப்பையும் சேர்ந்த மாணவர்கள் பல சமயங்களில் கீழ்த்தர வகுப்பினரைக் கண்டு அவர்கள்பால் பரிவு உண்டாகி அவர்களது நலன்களுக்காகப் பாடுபடுகின்ற தலைவர்களாக மாறுவதுண்டு. பொதுவாகச் சமூக சீர்திருத்த இயக்கங்களுக்குத் தலைவராக வருபவர்கள் நடுத்தர வகுப்பையோ அல்லது மேல்தர வகுப்பையோ சேர்ந்தவர்களாக இருப்பார்கள். கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்த சிலர் தலைவர்களாக ஆவதும் உண்டு.

பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த குமரப் பருவப் பிள்ளைகள் கலந்து பழகும்போது இன்னொரு விளைவும் உண்டாவதுண்டு. மேல்தர வகுப்பைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளோடு கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் கலந்து பழகும்போது நட்புகள் உண்டாகி, இன்னும் நெருங்கிய உறவுகளும் உண்டாவதுண்டு! இவ்வாறு வெவ்வேறு வகுப்பு நிலைகளைச் சேர்ந்த ஆண் பெண் பிள்ளைகளுக்குள் மாறிமாறி காதல் தொடர்புகள் திருமண உறவுகள் உண்டாவதுண்டு. இதனால் சிக்கல்கள் உண்டாவதுண்டு.

## பால் உணர்வும் சமூக நடத்தையும்

நம்முடைய நாட்டில் சமூக மரபு காரணமாகக் குமரப் பருவத்தைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதிகமாகக் கலந்து பழகுவதில்லை.

ஓர் ஆராய்ச்சி மாணவர் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 44 மாணவிகள்பற்றி ஆராய்ச்சி செய்தார். 44 பெண்பிள்ளைகளில் ஒரே ஒரு பெண்தான் 'ஆண்பிள்ளைகளோடு பேசுவதற்கு பயமில்லை' என்று சொன்னாள். நான்கு பெண்கள் ஆண்பிள்ளைகள் உள்ள வீடுகளுக்குச் செல்ல விரும்புவதாகச் சொன்னார்கள். இந்திய சமூகத்தில் குமரப் பருவத்தைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அதிகமாகப் பழகுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, பெருவாரியான பெண்கள் ஆண்பிள்ளைகளோடு பேசுவதற்கு பயப்படுவதில் ஆச்சரியமில்லை.

மேல்நாட்டில் நிலைமை வேறு வகையானது. அங்குக் குமரப் பருவத்தைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் கலந்து பழக அதிக வாய்ப்பு உண்டு. அவ்வாறு நெருங்கிப் பழகும் பொழுது அதில் அவர்களுக்கு ஒரு தனி இன்பமும் புத்துணர்வும் உண்டாகும். நட்பாக இருப்பது படிப்படியாகக் காதலாக மாறுவது உண்டு. சம வயதுள்ள ஆண், பெண்பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் பழகும்பொழுது பல நுட்பமான மனமாறுதல்களும் உண்டாவது உண்டு. சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் இர்வின் ஃபிஷர் என்ற மாணவன் ஒருவன் பள்ளி இறுதி வகுப்பில் படித்து வந்தான். நல்ல வலிமையும் திறமையும் உடையவன். அவன் பொதுவாகத் தனது உடைபற்றி அதிக அக்கறை செலுத்துவதில்லை. அழுக்கான கால்சட்டை அணிந்து வருவான். அல்லது கிழிந்த கோட்டு அணிந்து வருவான். ஆனால், அண்மைக் காலத்தில் அவன் தன்னுடைய புறத்தோற்றம்பற்றி அதிகமாக அக்கறை காட்டியது ஆச்சரியமாயிருந்தது. தலையை நன்றாகச் சீவி, நல்ல துப்புரவான கிழிசல் இல்லாத உடை அணிந்துகொண்டு பள்ளிக்கு வந்தான். நல்ல அழகான கிராப்பு வெட்டிக்கொண்டான். அவனது முகபாவனையில்கூட சிறிது மாறுதல் தெரிந்தது. முன்னை விட விளையாட்டுத் தன்மை குறைந்து வாழ்க்கையில் அதிக அக்கறை காட்டுபவன்போல் தோன்றினான் விளையாட்டுகளில் முன்புபோல் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை. எப்பொழுதாவது விளையாடினால் அவன் தன்னுடைய திறமையையும், வீரத்தையும், உயர்வையும் காட்டுவதற்காகவே விளையாடினான். கணக்குப் போடும் நேரத்திலும் மற்றும் பாடநேரத்திலும் படிப்பில் அக்கறை செலுத்தாது எப்பொழுதும் ஒரு சிறிய கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருப்

பான். ஒருநாள் வகுப்பு முடிந்து அறையிலிருந்து வெளியே செல்லும்பொழுது அவன் தன்னுடைய பையிலிருந்து ஒரு சீப்பை எடுத்துத் தன் தலைமயிரைச் சீவிச் சரிப்படுத்திக்கொண்டான். இன்னொருநாள் கணக்குப் பாடத்தின்போது ஒரு சிறிய பிரஷை எடுத்துத் தனது உடையிலிருந்த ஒரு சிறிய கறையை நீக்கிக்கொண்டான்.

சிறிது காலமாக இர்வின் கணக்குப் பாடத்தில் அவ்வளவு சரியாகக் கவனம் செலுத்தவில்லை என்று எனக்குத் தோன்றியது. வழக்கமாக அவன் கணக்குப் போடுவதுபோன்று இப்பொழுது போடுவதில்லை. ஒருவேளை நான்தான் தவறாக நினைக்கிறேனோ என்று எண்ணி இன்னும் சிறிது பார்க்கலாம் என்று இருந்தேன். சில நாட்களுக்கு முன்னால் ஓர் உணவுக் கடையில் அவனுக்கு 50 ஒரு 'ஃபிராங்கை'யும் (Franc) 75 இரண்டு 'ஃபிராங்கை'யும் கூட்டிச் சொல்ல முடியாதுபோயிற்றாம். முன்னால் கணக்குப் போடுவது போல் இப்பொழுது அவ்வளவு நன்றாகப் போடமுடியவில்லை என்று தனக்குத் தோன்றுவதாக அவன் சொன்னான்.

"இது 'கொன்சம்' கடையிலா (கூட்டுறவு உணவுக் கடை) நிகழ்ந்தது?".

"ஆம். விற்பனை செய்யும் கடைப்பெண் அன்னாஹெஸுக்குச் சாமான் கொடுத்துக்கொண்டிருந்தாள். (அன்னாஹெஸ் அவன் வயதுடைய ஒரு மாணவி.) கடைப்பெண் அன்னாவிடம், 'ஒரு பிராங் 50, இரண்டு பிராங் 75, இரண்டும் சேர்ந்து என்ன?' என்று கேட்டாள். அன்னாவுக்குச் சொல்லத் தெரியவில்லை. அப்பொழுது அந்தக் கடைப்பெண் என்னைப் பார்த்து, 'இர்வின் நீ சொல்' என்று சொன்னாள். ஆனால், அந்தச் சமயத்தில் எனக்கும் சொல்ல வரவில்லை. கடையிலிருந்த எல்லோரும் எங்களைப் பார்த்துச் சிரித்தார்கள். எங்கள் இரண்டு பேருக்கும் ஒரே வெட்கமாகப் போய்விட்டது! கணக்கில் நான் எப்பொழுதும் அவ்வளவு மோசமாக இருந்ததில்லை".

எனக்கு அன்னாவைத் தெரியும். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அவள் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கு எண்கணக்கு என்றால் கஷ்டம். சிறிது காலத்திற்கு முன்புதான் அவள் வகுப்பு ஆசிரியர் என்னிடம் அவள் கணக்கில் மோசம் என்று சொன்னார்.

'அன்னாஹெஸ்!' என்று நான் மெதுவாக நிறுத்திச் சொன்னேன். சொல்லிக்கொண்டே பையனைக் கூர்ந்து கவனித்தேன். அவன் முகம் உணர்ச்சி காரணமாகச் சிவந்துவிட்டது! நான் மெல்ல சிரித்துக்கொண்டேன்.

'அவளைப்பற்றிக் கொஞ்சம் சொல்.'

'அதாவது.... ...' என்று அவன் சொல்ல ஆரம்பித்தான். என்னுடைய முகபாவனையைக் கூர்ந்து பார்த்தான். பின்னர் சிறிது சுற்றிப் பார்த்தான். அவனுடைய தோழ மாணவர்கள் வெளியே பேசிக்கொண்டும், சத்தம் போட்டுக்கொண்டும் இருந்தார்கள். எங்களுக்குப் பின்னால் சில பெண்பிள்ளைகள் வந்துகொண்டிருந்தார்கள்.

'அன்னா ....' என்று மறுபடியும் சொல்ல முடியாது தயங்கினான்.

'அன்னாவைப்பற்றி என்ன ?'

'அதாவது, அவள் எனது காதலி !'

நான் என் புன்சிரிப்பை அடக்கிக் கொண்டேன். பையன் தவறாக நினைத்துவிடக்கூடாது அல்லவா! ஏன் அவன் அக் கடையில் அந்தக் கணக்கைப் போட முடியவில்லை. ஏன் அவன் இப்பொழுது கணக்குப் போடுவதில் அதிக உற்சாகம் காட்டவில்லை என்பதைப்பற்றியெல்லாம் இப்பொழுது ஒரு புதிய தெளிவு உண்டாயிற்று. தனது அன்பிற்குரியவளுடைய பலவீனம் வெளிப்படையாகத் தெரியாமல் இருப்பதற்காக அவன் அவ்வளவு அன்போடு நடந்துகொண்டிருக்கிறான். அவன் அவ்வாறு நடந்துகொண்டதன் பொருள் என்ன ? 'என்னுடைய அன்னா அந்தக் கணக்கை போட முடியாததற்காக வெட்கப்பட வேண்டாம்' அல்லது 'அன்னாவுக்குச் சரியாகக் கணக்குப் போட முடியவில்லை என்றால், நானும் சரியாகக் கணக்குப் போடக்கூடாது. அவ்வாறு போட்டால் அது அவளது பலவீனத்தைக் காட்டி அவள் வெட்கப்பட நேரிடும்.'

இவ்வாறு எனக்குத் தோன்றியதை நான் பையனிடம் சொன்னேன். அவன் சிறிது நேரம் அவனது காதல்பற்றிப் பேசினான். அன்னாவின்பால் அவனுக்குள்ள தூய அன்பு எனக்குத் தெரிய வந்தது. 'வேறு ஒரு பெண்மீதும் இவ்வளவு அன்பு கொள்ள மாட்டேன்' என்றும், 'என்ன காரணத்தையொட்டியும் இன்னொருத்தியைத் திருமணம் செய்துகொள்ள மாட்டேன்' என்றும் இர்வின் சொன்னான். அவள் காரணமாக அவன் இப்பொழுது சீரிய முறையில் நடந்துகொள்ளுவதாகவும், கண்டவர்களைப் பார்ப்பதும், கண்டவர்களோடு பழகுவதுமில்லை என்றும், 'அதன் பின் நாங்கள் திருமணம் செய்துகொள்வோம்' என்றும் அவன் சொன்னான். இதையெல்லாம் கேட்க எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

நான் அவனிடம் சொன்னேன் : ‘ அப்படியானல் உன் கணக்குகளைச் சரியாகப் போடுவதற்கு நீ தெரிந்துகொள்ளவேண்டும் அல்லவா ? அன்னுவுக்குக் கணக்குச் சரியாகப் போட முடியவில்லையென்ருல், அதற்காகவே நீ கணக்கு நன்ருகப் போடவேண்டும் அல்லவா ? அவளுக்குச் சமையலும், தையல் வேலையும் நன்ருகத் தெரியும். அதனுல் கணக்குப் போட வராவிட்டால் பரவாயில்லை. அவளுக்குள்ள குறையை நிறைவு செய்யவும், இருவருக்கும் சேர்த்து கணக்குப் போடவும் நீ கணக்குக் கற்றுக்கொள்ள வேண்டுமல்லவா ? இல்வாழ்வில் ஒருவரையொருவர் நிறைவு செய்யவேண்டும் !’.

நான் சொன்னது அவனுக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. இப்பொழுது அவன் தனது கணக்குகளை மிக்க உற்சாகத்தோடு போடுகிருன். அவனது இருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் போகும் பொழுதோ அல்லது அவன் அதிக கவனத்தோடு கணக்குப் போடுவதைப் பார்க்கும்பொழுதோ எனக்கு வரும் புன்சிரிப்பை நான் அடக்கிக் கொள்ளுகிறேன் !

இர்வினைப்பற்றிய இந்த வரலாறு ஒரு குமரப் பருவத்துப் பிள்ளையின் உள்ளத்தில் ஏற்படுகின்ற உண்மையான மாறுதலை எடுத்துக் காட்டுகின்றது. ஒரு பெண்பிள்ளையோடு பழகும்பொழுது ஒரு புது வகையான மனப்பான்மை உண்டாகிவிடுகின்றது. இர்வினின் ஆசிரியரைப்போன்று நிலைமையை நன்கு புரிந்துகொண்டு அன்போடு வழி நடத்துவது மிகவும் அவசியம். இர்வினுக்கு ஆண் மகன் என்னும் பால் உணர்வு ஏற்பட்டு அன்னுமீது கொண்ட நல்ல அன்புணர்வு காரணமாகக் கணக்குப் பாடங்களைக் கவனியாது விடும் பிழையைச் செய்யும் நிலையில் இருந்தான். எதிர்காலத்தில் ஒரு நல்ல தொழிலைப் பார்க்கவேண்டும், அதற்குரிய தகுதியை இப்பொழுது பெறவேண்டும் என்பதை மறக்கின்ற நிலையில் இருந்தான். குமரப் பருவத்தில் பால் உணர்ச்சி உண்டாகி அது நல்ல முறையில் வளரவேண்டியது அவசியமே. ஆனுல், அதே சமயத்தில் எதிர்காலத் தொழிலை நினைத்து அதற்கேற்ப நன்ருகக் கல்வியும் பயிற்சியும் பெற வேண்டுவதும் அவசியம். ஒன்று இன்னென்றைக் கெடுத்துவிடாதவாறு பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டியது ஆசிரியர்கள் கடமையாகும்.

### சமூக நடத்தையை அளவிடுதல்

குமரப் பருவத்திலுள்ள ஒரு பிள்ளையின் சமூக நடத்தை சரியாக உள்ளதா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்குச் சில வழிமுறைகள் உண்டு. சமூக நடத்தைபற்றிய முக்கிய அம்சங்களையெல்லாம் ஒரு பட்டியல் செய்து அதன் அடிப்படையில் 3 அல்லது

5 புள்ளி அளவீட்டு முறையில் அளவிடலாம். 3 புள்ளி அளவீடு பின்வருமாறு :

1. சிறப்பான நிலை. 2. சராசரி நிலை. 3. மோசமான நிலை.

5 புள்ளி அளவீடு என்பது பின்வருமாறு :

1. மிகச் சிறப்பான நிலை. 2. சிறப்பான நிலை. 3. சராசரி நிலை. 4. மோசமான நிலை. 5. மிக மோசமான நிலை.

சமூக நடத்தையை இம் முறையில் அளவிடுவதற்கான சில முக்கியமான இனங்களாவன :

புறத்தோற்றம்.
சுறுசுறுப்பு.
எதிர்பால் பிள்ளைகளிடம் ஆர்வம்.
பிறரோடு பழகுவதில் ஆர்வம்.
வயது வந்தவர்களிடம் பழகுதல்.
பெரியோர் சொல் கேட்டல்,
பிறரிடம் பழகுவதில் தன்னம்பிக்கை.
பிறரது கவனத்தை நாடுதல்.
செயற்கைத் தன்மை
தன்னம்பிக்கை.
தலைமை.
பொது நலத்தில் ஆர்வம்.

இவை சமூக நடத்தையின் சில முக்கியமான கூறுகளே. இவை ஒவ்வொன்றுபற்றியும் விவரம் கொடுக்கவேண்டியது அவசியம். எடுத்துக்காட்டாக, முதல் இனமாகிய ' புறத்தோற்றம் ' என்பதை எடுத்துக்கொள்வோம். ஒரு குமரன் அல்லது குமரியை இந்த அம்சத்தைப் பொறுத்து அளவிடவேண்டும் என்றால் ஒன்றிலிருந்து மூன்று அல்லது ஐந்து நிலைகளில் கூறலாம். 1. சிறப்பு நிலை. 2. சராசரி நிலை. 3. மோசமான நிலை. இவற்றிற்கு விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| உடை, முகவெட்டு, உடல் அமைப்பு, நிற்கும் நிலை, முகபாவனை முதலியவற்றில் மிக்க கவர்ச்சியாக இருத்தல். | 1-ல் கீழே குறிப்பிட்டுள்ள உடை, முகத்தோற்றம் முதலியவற்றில் ஓரளவு கவர்ச்சியாக இருத்தல். | அருவருப்பான நிறம், உடல் தோற்றம், நிற்கும் நிலை, பாவனை, தலையைச் சரியாக வாராது இருத்தல், பொருத்தமில்லாத ஆடைகள், மிகவும் பருமனாகவோ அல்லது மெலிவாகவோ இருத்தல். |

மேலே விளக்கியிருப்பது போன்று ஒவ்வோர் அம்சத்திற்கும் விளக்கம் கொடுக்கப்படவேண்டும். அதை வைத்துக்கொண்டு ஒரு பிள்ளையினுடைய சமூக நடத்தையை அளவிடலாம்.

சமூக வரைபடம்

ஒரு குழுவிலுள்ள உறுப்பினர்களிடையே நிலவும் உறவுகளைக் கண்டுபிடித்து விளக்குவதற்கு உதவியாக இருப்பது சமூக வரைபட மாகும். எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளியிலுள்ள ஒரு வகுப்பு மாண வர்களிடையேயுள்ள சமூக உறவுகளைக் கண்டுபிடிப்பதென்றால் என்ன செய்வது? வகுப்பு ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் 'வகுப்பிலுள்ள மாணவர்களில் நீ யாருடன் விரும்பிப் பழகுகிறாய்? மிக விரும்பிப் பழகுகின்ற மாணவர் பெயரை முதலாவதாகவும், அதற்கு அடுத்தபடியாக விரும்பிப் பழகுகின்ற மாணவருடைய பெயரை இரண்டாவதாகவும் எழுதவும்' என்று கேட்கலாம். ஒவ் வொரு மாணவரும் இரண்டு மாணவர்களின் பெயர்களைத் தங்கள் விருப்ப வரிசையில் கொடுப்பார்கள். ஆசிரியர் இவற்றையெல்லாம் தொகுத்து எந்தெந்த மாணவர்களிடம் எவ்வெவ்வளவு பேர் விரும்பிப் பழகுகிறார்கள் என்று கணக்கிடலாம். சில மாணவர்கள் பெயரைப் பலபேர்கள் குறிப்பிட்டிருப்பார்கள். இன்னும் சில மாணவர் கள் பெயரை ஒருவரும் குறிப்பிடாமல் விட்டிருப்பார்கள்.

# 7. ஒழுக்க வளர்ச்சி

குமரப் பருவத்துப் பிள்ளைகளின் உடல் வளர்ச்சி, உணர்ச்சியின் வளர்ச்சி, அறிவின் வளர்ச்சி, ஆர்வங்களின் வளர்ச்சி, சமூக நடத்தை முதலியனபற்றிப் பார்த்தோம். இவற்றோடு மிகவும் தொடர்புள்ள ஆனால் தனிப்பட்ட ஒரு முக்கிய வளர்ச்சி குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஒழுக்கம், நீதி உணர்வு, நன்னடத்தை, லட்சிய உணர்வு ஆகியவைபற்றியதாகும். இவற்றோடு சேர்த்து அவர்களுடைய மனப்பான்மைகளின் (attitudes) வளர்ச்சியையும் பார்க்கலாம். சமய உணர்வுகளும் இவற்றோடு சேர்ந்தவை.

சமயம், நீதி உணர்ச்சி, லட்சிய மனப்பான்மை முதலியனபற்றி ஆராய்ச்சி செய்வது மிகவும் கடினமான ஒன்று. எது நல்லது எது கெட்டது, எது உயர்ந்தது எது தாழ்ந்தது, எது சரியானது எது தவறானது என்பன போன்ற வாழ்க்கையின் அடிப்படை மதிப்புகள் பற்றி அறுதியிட்டுப் பேசுவதோ, ஆராய்வதோ எளிதான ஒன்று அன்று. மேலும் சமயம், நீதி, ஒழுக்கம் என்றவுடனே நாம் பல்வேறு முரண்பட்ட கருத்துகள், மனப்பான்மைகள் நிலவுகின்ற ஒரு துறைக்குச் செல்லுகின்றோம். மாணவர்கள் என்னென்ன சமய அறிவைப் பெறவேண்டும், எத்தகைய லட்சிய உணர்வு பெறவேண்டும் என்ற கேள்விகளை எழுப்பினால் பலர் பலவாறாக விடை சொல்வார்கள். சமய போதனை அல்லது நீதி போதனை மிகவும் சிக்கலான பிரச்சினையாகும். சமய போதனை சிக்கல் நிறைந்தது என்றால் அது காரணமாக அதனை விட்டுவிடுவதற்கும் இல்லை. ஏனென்றால், சமய உணர்வு, நீதி உணர்வு தனி வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் மிகவும் தேவையான ஒன்றாகும். ஆகவே, இப் பிரச்சினைகளினின்றும் ஒதுங்கிவிடுவதால் நன்மை ஒன்றும் உண்டாகாது. கவனமாக அவற்றைத் தீர்க்க முயற்சிப்பதே நம் கடமையாகும்.

இப்பொழுது சில ஆண்டுகளாக இந்தியாவிலும், உலகமெங்கிலும் கூட இளைஞர்களின் நடத்தையில் கட்டுப்பாடும், ஒழுங்கும் இல்லை என்னும் ஒரு பொது எண்ணம் நிலவி வருகின்றது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ச்சி செய்யவும் சிலர் முயன்று இருக்கின்றார்கள். இந்திய அரசாங்கம் சமய, நீதி போதனைபற்றி ஆராய்

வதற்கு ஓர் அறிஞர் குழுவை நியமித்தது. அக்குழுவினர் தங்கள் அறிக்கையில் பல யோசனைகளைக் கூறியுள்ளார்கள்.

### நேர்மை

நேர்மை, நாணயம் என்பது தனி வாழ்க்கைக்கும், சமய வாழ்க்கைக்கும் மிகவும் அவசியமான பண்பு. பொதுவாக எல்லாச் சமயங்களிலும் உண்மையோடு இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், சிறு பருவத்திலிருந்தே உண்மையல்லாத நடத்தை சிலரிடம் அதிகமாகவும், பலரிடம் கொஞ்சமாகவும் வளர்ந்துவிடுவதைப் பார்க்கிறோம். வீட்டில்மட்டும் அல்லாது பள்ளிக்கூடத்திலும் உண்மை அல்லாத நடத்தைக்கு வாய்ப்புகள் உண்டாகின்றன. இதுபற்றிச் சில ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. கெட்டிக்கார மாணவன் பொதுவாகப் பள்ளிச் சோதனைகளில் நேர்மை அல்லாது நடந்துகொள்வதில்லை. உணர்ச்சிச் சமநிலை இல்லாத பிள்ளைகள் அதிகம் உண்மையல்லாத முறையில் நடந்துகொள்கிறார்கள். பிள்ளைகளின் நடத்தைக்கும், பெற்றோர்களின் நடத்தைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது போலவே பிள்ளைகளின் நடத்தைக்கும் அவர்கள் நண்பர்களின் நடத்தைக்கும் பெரும் தொடர்பு உண்டு.

### இலட்சிய உணர்வு

குழந்தைகளின் உள்ளத்தில் வாழ்க்கைபற்றிய உயர்ந்த கொள்கைகள், லட்சியங்கள்பற்றி ஆர்வம் உண்டாகின்றது. சிறு குழந்தைப் பருவத்தில் இத்தகைய லட்சியங்கள் உள்ளத்தில் உண்டாவதில்லை. காரணம், லட்சியங்களைப்பற்றிச் சிந்தனை செய்வதற்கான மனப்பக்குவம் அவர்களிடம் இல்லை. ஆனால், குமரப் பருவம் வரும்பொழுது அவர்கள் பல பெரியவர்களின் வாழ்க்கைகளைப் படிக்கின்றார்கள். மேலும் சமய, நீதி நூல்களைப் படிக்கின்றார்கள். இவை காரணமாக அவர்கள் உள்ளத்தில் லட்சியங்கள் வேரூன்ற ஆரம்பிக்கின்றன. குறிப்பாகச் சில பிள்ளைகள் லட்சிய புருஷர்கள் என்று சொல்லப்படுகின்ற பெரியவர்கள்பால் மிக்க அதிகமான ஈடுபாடு காட்டுகின்றார்கள். ஞானிகள், பக்தர்கள் முதலியவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கின்ற ஒரு சிலர் அவர்களைப் போன்றே தாமும் ஆகிவிடவேண்டும் என்று அதிக ஆர்வம் கொண்டுவிடுவதுண்டு.

பெரும்பாலும், நேரில் காணும் பெரிய மாணவர்களிடமிருந்தோ அல்லது வரலாறு, கதைகள், புராணங்கள், சமய நூல்கள் முதலியவற்றில் வரும் பெரியவர்களிடமிருந்தோ பிள்ளைகள் லட்சியங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். இதுபற்றிச் செய்யப்பட்ட ஓர் ஆராய்ச்சியின் முடிவுகளை அடுத்துள்ள அட்டவணையில் காணலாம்.

இலட்சியங்களின் உருவகம்

| | வயதுகள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18–20 |
| 1. நெருங்கியுள்ள சூழ்நிலையில் இருக்கும் பாத்திரங்கள் ... | 58 | 45 | 38 | 35 | 30 | 30 | 29 | 28 | 30 | 27 |
| (அ) பெற்றோர்கள் ... | 19 | 16 | 15 | 12 | 10 | 9 | 9 | 8 | 10 | 9 |
| (ஆ) ஆசிரியர்கள் ... | 10 | 10 | 7 | 8 | 8 | 7 | 8 | 9 | 8 | 9 |
| (இ) அறிமுகமானவர்கள் ... | 25 | 14 | 12 | 13 | 9 | 11 | 9 | 10 | 11 | 9 |
| (ஈ) மற்றவர்கள் ... | 4 | 5 | 4 | 2 | 3 | 3 | 3 | 1 | 1 | 0 |
| 2. வரலாற்று அல்லது பொது வாழ்வில் உள்ள பாத்திரங்கள் ... | 32 | 45 | 53 | 55 | 61 | 61 | 65 | 64 | 61 | 61 |
| 3. கதையில் வரும் பாத்திரங்கள் ... | 2 | 4 | 4 | 4 | 2 | 3 | 1 | 3 | 3 | 3 |
| 4. சமயப் பாத்திரங்கள் ... | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | 2 | 1 | 2 | 2 |
| 5. மற்றவர்கள் ... ... | 5 | 4 | 3 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 | 7 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து பெற்றோர்களும், வரலாற்றுத் தலைவர்களும், பொதுத் தலைவர்களும் மிக அதிகமான அளவு பிள்ளைகளின் மனத்தைப் பாதிக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

பிள்ளைகள் லட்சிய உணர்வு வளர்வதற்குப் பள்ளிக்கூடத்தின் சூழ்நிலை ஒரு முக்கியமான காரணமாகும். சில பள்ளிக்கூடங்களைத் தோற்றுவித்து நடத்துகின்றவர்கள் சமய லட்சியங்களுக்காகவே அவ்வாறு செய்கிறார்கள். அப்படியென்றால் அவர்கள் அங்குக் காலை, மாலை வழிபாடு, சமய ஆராதனை, சமய விழாக்கள் முதலியன நடத்துவார்கள்; பள்ளிக்கூடத்திலேயே கோயில் கட்டிவைப்பார்கள். இது காரணமாக ஒரு பள்ளிக்கூடத்தின் சூழ்நிலைக்கும், இன்னொரு பள்ளிக்கூடத்தின் சூழ்நிலைக்கும் நிறைந்த வேற்றுமை இருக்கும். சமய லட்சியங்களுக்காகப் பாடுபடும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களிடம் சமயவுணர்ச்சியும், பிரார்த்தனை தியானம் செய்யும் பழக்கங்களும் வளர ஏற்பாடு செய்வார்கள்.

### லட்சியத் தலைவர்கள்

குமரப் பருவத்து இளைஞர்கள் சில பெரியோர்களையும், தலைவர்களையும் தங்களின் லட்சிய புருஷர்களாக ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். எதிர்காலத்தில் எவ்வாறு விளங்கவேண்டும் என்பதுபற்றி அவர்களுக்குப் பேரார்வமும், கற்பனையும் இருக்கின்ற காரணத்தால் அவற்றிற்குச் சின்னமாக விளங்கும் சிலர்பால் அவர்கள் மனம் அதிக பிடிப்புக் கொள்ளுகின்றது. கோவை நகரத்தைச் சேர்ந்த 103 மாணவர்களிடம், ‘உன்னுடைய லட்சியத் தலைவர் யார்?’ என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த விடைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| லட்சியத் தலைவர்கள் | சொன்ன மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| காந்தியடிகள் ... ... ... | 48 |
| நேரு ... ... ... ... | 18 |
| லிங்கன் ... ... ... | 7 |
| காமராஜ் ... ... ... | 6 |
| திருவள்ளுவர் ... ... ... | 3 |
| அண்ணாத்துரை ... ... ... | 3 |
| நேத்தாஜி ... ... ... | 3 |
| அம்பேத்கார் ... ... ... | 3 |
| பெரியார் ... ... ... | 2 |
| குருசேவ் ... ... ... | 2 |
| ராஜாஜி ... ... ... | 2 |
| விவேகானந்தர் ... ... ... | 1 |
| டாக்டர் மு. வரதராசனார் ... ... | 1 |
| டாக்டர் ராஜேந்திர பிரசாத் ... ... | 1 |
| ஈ. வே. ராமசாமி பெரியார் ... ... | 1 |
| பி. ராமமூர்த்தி ... ... ... | 1 |
| அயூப்கான் ... ... ... | 1 |
| மொத்தம் ... | 103 |

கோவை மாவட்டத்தில் கிராமச் சூழ்நிலையிலுள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் மேற் குறிப்பிட்ட அதே கேள்வி— 'உன்னுடைய லட்சியத் தலைவர் யார்?' என்னும் கேள்வி—மாணவர்களிடம் கேட்கப் பட்டது. அவர்கள் கொடுத்த விடைகளின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| லட்சியத் தலைவர்கள் | | | | சொன்ன மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| காந்தியடிகள் | ... | ... | ... | 62 |
| நேரு ... | ... | ... | ... | 9 |
| லிங்கன் | ... | ... | ... | 6 |
| விவேகானந்தர் | ... | ... | ... | 3 |
| இராமகிருஷ்ணர் | ... | ... | ... | 2 |
| சிவாஜி | ... | ... | ... | 2 |
| காமராஜ் | ... | ... | ... | 1 |
| விஸ்வேஸ்வரய்யா | ... | ... | ... | 1 |
| நியூட்டன் | ... | ... | ... | 1 |
| கென்னடி | ... | ... | ... | 1 |
| குருசேவ் | ... | ... | ... | 1 |
| | | மொத்தம் | ... | 89 |

மேற்கண்ட இரண்டு அட்டவணைகளையும் பார்க்கும்பொழுது இப்பொழுதுள்ள உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்களிடங்கூட காந்தியடிகள் தலைசிறந்த லட்சியத் தலைவராக விளங்குவது புலனுகின்றது. காந்தியடிகள் மறைந்து 14 ஆண்டுகளான பின்னும் அவரது புகழ் மாணவர்களிடம் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. இது இன்னும் அவர் நம் தேசீய வாழ்க்கையில் ஒரு சக்தியாக விளங்குவதைக் காட்டுகிறது. இரண்டு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும், இரண்டாவதாக நேருவையே லட்சியத் தலைவராகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். இது முதலமைச்சர் நேரு இந்தியாவின் தலைசிறந்த தலைவராக விளங்கி வருவதைக் காட்டுகின்றது. அதற்குப் பின்னர் பல மாணவர்கள் லிங்கனைக் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது அண்மையில் லிங்கனுடைய நூற்றுண்டு விழா கொண்டாடப்பட்டதன் எதிரொலியாக இருக்கலாம். லிங்கனின் படங்களும், லிங்கன்பற்றிய புத்தகங்களும் அமெரிக்கச் செய்தித் துறையினர் மூலமாக இந்தியக் கல்வி நிலையங்களில் பரவியிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். முதல் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களில் 6 பேர் காமராஜர் பெயர் குறித்திருப்பது அவர் தமிழ்

நாட்டில் பலராலும் போற்றப்படுகின்ற தலைவர் என்பதைக் காட்டுகின்றது. அதற்குப் பின் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் பல அரசியல் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நகரத்து உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் அண்ணாத்துரை, ராஜாஜி, நேத்தாஜி, அம்பேத்கார் முதலிய அரசியல் தலைவர்களின் பெயரைக் குறிப்பிட்டிருப்பது நகரத்தில் அரசியல் கட்சிகளின் பிரசாரம் அதிகமாக இருப்பதைக் காட்டுகின்றது. அதே உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் ஈ. வே. ராமசாமி பெரியார், பி. ராமமூர்த்தி, டாக்டர் ராஜேந்திர பிரசாத், அயூப்கான் போன்ற அரசியல் தலைவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சில மாணவர்கள் திருவள்ளுவர், பாரதியார் முதலிய இலக்கியத் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருசில மாணவர்கள் டாக்டர் மு. வரதராசனார், விஸ்வேஸ்வரய்யா போன்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்கள். கிராமச் சூழ்நிலையிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடம் சமயச்சார்புள்ள பள்ளியாகும். இராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலியவர்களை லட்சியத் தலைவர்களாகக் கொண்டுள்ள பள்ளி. ஆகவே, அப் பள்ளியிலுள்ள மாணவர்களில் சிலர் சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ணர் முதலியவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டிருப்பதில் வியப்பில்லை. நகரத்து உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் விவேகானந்தரின் பெயரைக் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு மாணவர் நியூட்டன் பெயரைக் குறிப்பிட்டிருப்பது அவருக்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் இருப்பதைக் காட்டுகின்றது. இன்னொரு மாணவர் கென்னடியின் பெயரைக் குறிப்பிட்டிருப்பது அவருக்கு உலக அரசியலிலும் அமெரிக்க அரசியலிலும் உள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

வாழ்க்கைக் கொள்கை

வாழ்க்கையின் அடிப்படை உண்மை என்ன. மனிதன் ஏன் பிறந்தான்? ஏன் வாழ்கின்றான்? ஏன் இறக்கின்றான்? என்பன போன்ற கேள்விகள் குமரப் பருவத்துப் பிள்ளைகளில் சிலர் உள்ளங்களில் தீவிரமாக எழலாம். சில சமயங்களில் மனக்குழப்பம் உண்டாகலாம். இத்தகைய தத்துவ சிந்தனை சிலரிடம் பல ஆண்டுகள் தொடர்ந்து இருப்பதுண்டு. இதுபற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்து இருக்கின்றார்கள். ஒரு பிள்ளை பின்வருமாறு கவிதை எழுதியதாம்:

'விளக்குகள் ஒளிவிடும் இந்த நகரம்
இன்று இரவு விநோதமாகக் காட்சி அளிக்கின்றது; கீழே
குழப்பமான சமுத்திரம் போன்ற சப்தம் இரைகின்றது.
மூடுபனி மிகுந்த இரவு இன்று..... ......... ...'

இன்னொரு பிள்ளை பின்வருமாறு எழுதியது :

‘ என் வாழ்க்கையில் இப்பொழுது ஒரு நோக்கமும் இல்லை.
பாடுபட்டு முன்னேற குறிக்கோள் இல்லை.
வாழ்வதில் பொருள் இல்லாமல் இருக்கின்றது.
நான் தனிமையாகப் போய் ஒதுங்கி இருக்கவேண்டும்
என்று இப்பொழுது முடிவுசெய்து இருக்கிறேன்.
குழப்பமான ஆசைகளும், நெறிமுறைகளும், மக்களும்
நிறைந்துள்ள இந்தச் சமூகத்தினின்றும் விலகி
இருக்க முடிவு செய்துள்ளேன்.’

சில பிள்ளைகளின் உள்ளத்தில் தீவிர உணர்ச்சிகளும், சிந்தனைகளும் உண்டாவதுண்டு. அவர்கள் உள்ளத்தில் திடீர் மாற்றங்களும், திருப்பங்களும் ஏற்படுவதுண்டு. இவற்றிற்குக் காரணம் என்னவென்றால், விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகச் சமுதாயம் வேகமாக மாறிவருவதாகும். மாறிவரும் சமுதாயத்துக்கும் முன்னைய மரபுகளுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி உண்டாகி வருகின்றது. இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் முற்கால மரபுக்கும் தற்கால வாழ்வுக்குமிடையே போராட்டம் இல்லாத முறையில் ஒரு புதிய வாழ்க்கைக் கொள்கை உருவாக்க ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும்.

### சமயக் கருத்துகளின் வளர்ச்சி

சமயம், ஒழுக்கம்பற்றிய கருத்துகள் இளைஞர்கள் உள்ளத்தில் எவ்வாறு உருவாகின்றன என்பது சுவையான ஒன்று. இதைப் பற்றி ஓரளவுக்குத்தான் ஆராய்ச்சி நடைபெற்றிருக்கின்றது. நம் நாட்டில் இதுபற்றி விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சி இதுவரை நடைபெற்றுள்ளதாகத் தெரியவில்லை. எனினும், பிள்ளைகளின் உள்ளத்தில் இக் கருத்துகள் எவ்வாறு தோன்றுகின்றன, அவை எவ்வாறு மாறுகின்றன என்பதுபற்றிச் சிறிது பார்ப்போம்.

சிறு குழந்தைகள் சமயம்பற்றியும், கடவுளைப்பற்றியும் பலப்பல வகையாக எண்ணுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தை தன்னுடைய நோட்டுப் புத்தகத்தில் ஒரு பக்கத்தில் மூன்று கோடுகள் புயல் வீசுவதுபோன்று நீளமாகப் போட்டுவிட்டு, ‘நான் கடவுளின் படத்தைப் போட்டிருக்கிறேன் ’ என்று சொன்னாளாம். இன்னொரு குழந்தை ஒரு மனிதன் தலையின் பின்புறத்தை வரைந்து, ‘ இது கடவுளைக் குறிக்கிறது. கடவுளின் முகத்தைப் பார்க்க முடியாது. ஏனெனில், அது பிரகாசமாக இருக்கும் ’ என்று சொன்னானாம் ! ஓர் ஆராய்ச்சியாளர் கடவுள்பற்றிய கருத்து குழந்தைகளின் உள்ளத்தில் வளர்வதை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்.

1. தேவதைகள் முதலியவற்றைக் கற்பனை செய்யும் நிலை
2. இயற்கையை ஒட்டி நினைக்கும் நிலை
3. தனிப்பட்ட முறையில் சொந்தமாக நினைக்கும் நிலை

சிறுகுழந்தைப் பருவத்தில் பிள்ளைகள் பொதுவாகப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வருகின்ற கற்பனைப் பாத்திரங்கள்பால் அதிக ஆர்வம் கொள்கிருர்கள். அவர்கள் தேவதைக் கதைகளை விருப்பிக் கேட்கிருர்கள். உலகத்தில் உள்ள ஒவ்வொரு சமயத்திலும் புராண இதிகாசங்கள் உள்ளன. ஒவ்வொரு சமயத்திலும் அற்புதக் கதைகளும் அசாதாரணமான வரலாறுகளும் உள்ளன. இவற்றையெல்லாம் சிறு குழந்தைகள் பெற்ருேர்கள் வாயிலாகவும், மற்றும் பலவகைகளிலும் தெரிந்துகொள்ளுகின்றனர். சிறுகுழந்தைப் பருவத்தில் குழந்தையின் மனம் அதிகமாகக் கற்பனை செய்யும் தன்மையதாக இருக்கின்ற காரணத்தால் சமயம், கடவுள்பற்றிக் குழந்தைகள் சுதந்திரமாகப் பலவாருக எண்ணுகின்றனர்.

குழந்தைப் பருவம் முடிந்து குமரப் பருவம் வரும்பொழுது குழந்தைகள் சிந்திக்க ஆரம்பிக்கின்றனர். அறிவுகொண்டு ஆராய ஆரம்பிக்கிருர்கள். காரணகாரிய முறையில் எண்ணுகிருர்கள். ஆகவே, குழந்தைப் பருவத்தில் எளிதாக ஏற்றுக்கொண்டுவிட்ட பல சமயக் கருத்துகளையெல்லாம் இப்பொழுது விட்டுவிடுகின்ற நிலை உண்டாகின்றது. மேலும், அவர்கள் விஞ்ஞானம், வரலாறு முதலிய பாடங்களையெல்லாம் படிக்கும்பொழுது தாங்கள் குழந்தைகளாக இருந்தபொழுது ஏற்றுக்கொண்ட பல கருத்துகள் வெறும் கற்பனை, உண்மையல்ல என்பதைத் தெரிந்துகொள்ளுகிருர்கள். சில பிள்ளைகள் சமயத்தையே முழுவதும் விட்டுவிடுவதும் உண்டு.

ஓர் ஆசிரியர் சமயத்தைப்பற்றி பிள்ளைகள் கொண்டிருந்த கருத்துகள் எவ்வாறு மாறுகின்றன என்பதை ஆராய்ச்சி செய்து சில முக்கிய முடிவுகளுக்கு வந்திருக்கிருர். இம் முடிவுகளையெல்லாம் படம் 34-ல் பார்க்கலாம்.

அந்தப் படத்தைப் பார்த்தால் குமரப் பருவத்தில் குழந்தைகளுடைய சமய நம்பிக்கை குழந்தைப் பருவத்தில் இருந்ததை விடக் குறைந்து வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, முதல் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். 12 வயதாக இருக்கும்பொழுது 70 சதவீதம் பிள்ளைகள், 'கடவுள், மனிதன் ஒழுங்காக நடக்கின்ருனு என்பதைக் கவனித்துக்கொண்டு இருக்கிருர். ஒழுங்காக நடக்காவிட்டால் தண்டனை கொடுப்பார்' என்று நம்புகிருர்கள். 15 வயதில் இதனை 50 சதவிகிதம்பேர்கள் நம்புகிருர்கள். 18 வயதில்




படம் 34

A. கடவுள் என்பவர் நீ நன்றாக நடக்கின்றாயா என்று கண்காணிப்பவரும், நல்லவனாக இல்லை என்றால் தண்டிப்பவரும் ஆவார்.
B. கடவுள் இருக்கிறார் என்று நான் அறிவேன்.
C. நல்லவர்கள்தான் மோட்சத்திற்குப் போகிறார்கள்.
D. பூமியில் செய்யப்படும் பாவங்களுக்காக நரகம் எனும் இடத்தில் தண்டிக்கப்படுகிறார்கள்.
E. பிரார்த்தனைகள் பலனளித்தன.
F. விவிலிய நூலில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாகும்.
G. பிராடஸ்டண்டுகள், யூதர்கள், கத்தோலிக்கர்கள் ஆகிய அனைவரும் நல்லவர்களே.
H. கிறிஸ்துவனாக இருக்கக் கோயிலுக்குச் செல்லவேண்டும் என்பது கட்டாயமில்லை.

இதனை 30, 32 சதவிகிதம்பேர்கள்தான் நம்புகிறார்கள். அது போலவே நான்காவது வாக்கியத்தையும் எடுத்துக்கொள்ளலாம். 'உலகத்தில் பாவம் செய்தவர்கள் நரகம் என்ற இடத்திற்குச் சென்று அங்கு தண்டனைக்குள்ளாவார்கள்' என்பதை 12 வயதுப் பிள்ளைகளில் 70 சதவிகிதம்பேர் ஒப்புக்கொள்ளுகிறார்கள். 15 வயதில் 50 சதவிகிதம் பேர் இதனை ஒப்புக்கொள்ளுகிறார்கள். 18 வயதில் 30, 32 சதவிகிதம்பேர்தான் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இதுபோலவே மற்ற வாக்கியங்களையும் கவனித்துப் பார்க்கலாம்.

குமரப் பருவத்துக்குப் பின்னர் ஒவ்வொரு மனிதனும் தனது சமய அனுபவங்களுக்கும், சொந்தத் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் ஏற்ப தனது சமயக் கொள்கைகளை வளர்த்துக்கொள்ளுகிறான். சிலர் சமயம்பற்றித் தொடர்ந்து சிந்தனை செய்து தம் அனுபவத்திற்கேற்ப மாறிக்கொண்டு போகலாம். ஆனால், இக்காலத்தில் பலர் அதிகமாகச் சிந்திப்பது கிடையாது. அவர்கள் பொதுவாக, சமூகத்திலுள்ள பழக்க வழக்கங்களை ஒட்டி ஒழுகுவார்கள்; பெரும்பான்மையர் செய்யும் சமயச் சடங்குகளைச் செய்வார்கள்.

தனது சமய அனுபவங்களைப்பற்றிக் குமரப்பருவத்துப் பிள்ளைகள் என்ன சொல்லுகிறார்கள் என்பதுபற்றிச் சிலர் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு மாணவன் கூறியது: 'சமயம்பற்றி என்னிடம் உண்டான மாறுதல் மிகவும் முக்கியமான ஒன்று. நான் சிறு குழந்தையாக இருக்கும்பொழுது சமயக் கடமைகளைப்பற்றி அதிகம் கவலை கொள்ளாது அசட்டையாக இருந்தேன். சமயக் கடமைகளைப்பற்றி நினைத்துப் பார்க்காது இயந்திரம்போல் செய்து வந்தேன். ஆனால், குழந்தைப் பருவம் முடிந்தவுடன் எனக்குச் சமயம்பற்றி மிக அதிகமான ஆர்வம் உண்டாயிற்று. வாழ்க்கையில் எது சரி, எது தப்பு என்பனபற்றியெல்லாம் நான் அதிகக் கவலையோடு சிந்திக்கலானேன். பொய் சொல்லுவதுபற்றி நான் மிகவும் உன்னிப்பாக இருந்தேன். என்னை யாரும் ஏதாவது கேட்டால் சிறிதுகூட பொய் சொல்லக்கூடாது என்பதற்காக நான் அதிகமாகப் பேசுவதுகூட இல்லை. கடவுள்பற்றியும் சமயக்கொள்கைகள்பற்றியும் நான் அதிகமாக நினைக்கலானேன். கோயிலுக்குச் சென்றால் நான் முன்பைவிட மிகவும் கவனமாகக் கூர்ந்து கவனிக்கலானேன். அதிக அக்கறையோடும் பொருளுணர்ந்தும் நான் இப்பொழுது பிரார்த்தனை செய்தேன். ஒரு சமயம் நான் மிகவும் மோசமாக வாழ்ந்து வருவதாகவும், என்னுடைய சமயக் கொள்கைக்கேற்ப ஒழுகவில்லையென்றும் எனக்குத் தோன்றியது. பல ஞானிகளின் வரலாறுகளை நான் அவ்வப்பொழுது மிகவும் ஆர்வமாகப் படித்து அவர்களைப்போல நானும் வாழவேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்வதுண்டு.'

இந்த மாணவன் நல்ல முறையில் சமயம்பற்றியும், ஒழுக்கம் பற்றியும் சிந்தித்து வளர்வது தெரிகின்றது. ஆனால், வேறு சில இளைஞர்கள் விபரீதமான முறையில் வளர்ந்துவிடுவதும் உண்டு.

## குமரப் பருவத்துப் பிள்ளைகளின் சமய நம்பிக்கைகள்

குழந்தைப் பருவத்தில் இருக்கும்பொழுது பெற்றோருடைய சமய நம்பிக்கைகளைப் பொதுவாகப் பிள்ளைகளும் ஏற்றுக்கொள்ளுவது உண்டு. பெற்றோர்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்களாக இருப்பார்களென்றால் பிள்ளைகளும் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள். பெற்றோர்கள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட சமயக் கோட்பாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களென்றால், பிள்ளைகளும் பொதுவாக அவ்வாறு இருப்பது உண்டு. ஆனால், குமரப் பருவத்தில் பிள்ளைகளினுடைய சமய நம்பிக்கைகளில் முக்கிய மாறுதல்கள் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். இரண்டு ஆராய்ச்சியாளர்கள் அமெரிக்காவில் குமரப் பருவத்துப் பிள்ளைகளின் சமய நம்பிக்கைகளில் ஏற்படும் மாறுதல்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். 12, 15, 18 வயது நிலையிலுள்ள 547 பிள்ளைகளிடம் சமய நம்பிக்கைகள்பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டன. கேட்கப்பட்ட கேள்விகளையும், அவர்கள் அளித்த விடைகளையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம். சமய நம்பிக்கைபற்றிய பல கூற்றுகளும், அக் கூற்றுகளை நம்புவதாகக் கூறிய பிள்ளைகளின் சதவிகிதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

| சமய நம்பிக்கைபற்றிய கூற்று | நம்புவதாகக் கூறிய பிள்ளைகளின் சதவிகிதம் | | |
|---|---|---|---|
| | 12 வயது | 15 வயது | 18 வயது |
| 1. கடவுள் ஓர் ஆள் அல்லர், அவர் நன்மை செய்கின்ற ஓர் அபூர்வமான சக்தி ... ... | 46 | 49 | 57 |
| 2. நீ சரியாக நடந்து கொள்ளுகிறாயா என்பதைக் கவனித்துக் கொண்டும், நீ நல்லவனாக இல்லாவிட்டால் தண்டனை கொடுத்துக் கொண்டும் இருக்கும் ஒருவர் கடவுள் ... ... ... | 70 | 49 | 33 |
| 3. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும் ... ... | 94 | 80 | 79 |

| சமய நம்பிக்கைபற்றிய கூற்று | நம்புவதாகக் கூறிய பிள்ளைகளின் சதவிகிதம் | | |
|---|---|---|---|
| | 12 வயது | 15 வயது | 18 வயது |
| 4. கத்தோலிக்கர்கள், யூதர்கள், பிராடஸ்டண்டுகள் எல்லோரும் நல்லவர்கள் ... ... ... | 67 | 79 | 86 |
| 5. சுவர்க்கம் என்ற ஒன்று உள்ளது | 82 | 78 | 74 |
| 6. நல்ல மனிதர்கள்மட்டுமே சுவர்க்கத்திற்குப் போவார்கள் ... | 72 | 45 | 33 |
| 7. நீ உலகத்தில் செய்கின்ற பாவங்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும் இடம் நரகம் ஆகும் ... | 70 | 49 | 35 |
| 8. கோயிலுக்குச் செல்லாதவர்களை விட செல்லுபவர்கள் நல்லவர்கள் | 46 | 26 | 15 |
| 9. பெற்றோர்கள் எந்தச் சமயப் பிரிவைச் சேர்ந்தவர்களோ அதே பிரிவையே பிள்ளைகள் சேர வேண்டும் ... ... | 77 | 56 | 43 |
| 10. ஒரு நல்ல கிறிஸ்தவராக இருப்பதற்குக் கோயிலுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை ... | 42 | 62 | 67 |
| 11. சாவுக்குப் பிறகு நமது ஆன்மா மட்டுமே உயிர் வாழ்கின்றது ... | 72 | 63 | 61 |
| 12. நல்லவர்கள் ஒழுங்கு தவறாது பிரார்த்தனை செய்வார்கள் ... | 78 | 57 | 47 |
| 13. பிரார்த்தனைக்குப் பலன் உண்டு | 76 | 69 | 65 |
| 14. துன்ப காலத்தில் பிரார்த்தனை செய்தால் அது உதவியாக இருக்கும் ... ... | 74 | 80 | 83 |
| 15. நீ ஏதாவது தவறு செய்துவிட்டால் அதற்கு ஈடுகட்டுவதற்காகச் செய்வது பிரார்த்தனை ஆகும் ... ... | 47 | 24 | 21 |
| 16. பைபிலிலுள்ள ஒவ்வொரு சொல்லும் உண்மை ஆகும் ... | 79 | 51 | 34 |
| 17. பைபிலில் சொல்லியிருப்பதுபற்றி ஐயம் கொள்ளுவது பாவம் ... | 62 | 42 | 27 |

மேலேயுள்ள அட்டவணையைப் பார்த்தால் குமரப் பருவத்தில் பிள்ளைகளின் சமய நம்பிக்கைகள் வலுக்குறைந்து முக்கிய மாறுதல் அடைகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது. 12 வயது நிலையில் பெருவாரியான பிள்ளைகள் நம்புகின்ற ஒன்று 18 வயது நிலையில் சிறுபான்மையான பிள்ளைகள் நம்புவதாக மாறிவிடுகின்றது. அதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு: 'பைபிலிலுள்ள ஒவ்வொரு சொல்லும் உண்மை' என்பதை 12 வயது நிலையில் 79 சதவிகிதம் பேர்கள் நம்புகின்றார்கள் ; ஆனால், 15 வயது நிலையில் 51 சதவிகிதம் பேர்களே நம்புகின்றார்கள் ; 18 வயது நிலையிலோ 34 சதவிகிதம் பேர்கள்தான் நம்புகின்றார்கள். இதே மனப்பான்மை இன்னொரு வகையாக அடுத்த கேள்வியில் புலப்படுகின்றது. முதலில் 62 சதவிகிதம் பிள்ளைகள் பைபிலில் கூறியிருப்பதுபற்றி ஐயம் கொள்ளுதல் பாவமாகும் என்று சொல்லுகிறார்கள்; ஆனால், 6 ஆண்டுகள் கழித்த பிறகு 27 சதவிகிதம் பேர்களே இவ்வாறு நம்புகின்றார்கள். இது போன்றே, 12 வயது நிலையில் 70% பேர்கள் கடவுள், ஒருவன் ஒழுங்காக நடக்கவேண்டும் என்பதற்காக உற்று கவனித்துப் பார்ப்பதாகவும், நல்லவர்களாக இல்லாதவர்களுக்குத் தண்டனை கொடுப்பதாகவும் நம்புகின்றார்கள். ஆனால், 18 வயது நிலையில் 33% பேர்கள் தான் இவ்வாறு நம்புகின்றார்கள். இதுபோன்று இன்னும் பல நம்பிக்கைகளில் ஏற்படும் மாறுதல்களை மேற்கண்ட அட்டவணையில் பார்க்கலாம். பொதுவாகப் பார்த்தால் 12 வயது நிலையில் வைதீக நம்பிக்கைகளைப் பிள்ளைகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆண்டுகள் ஆகஆக அவற்றையெல்லாம் படிப்படியாக விட்டுவிடுகின்றார்கள். பிள்ளைகளின் சமய மனப்பான்மை நெகிழ்ச்சியடைகின்றது. ஒரு பரந்த மனப்பான்மை உண்டாவதைப் பார்க்கின்றோம். கோயிலுக்குச் செல்லுதல், சடங்குகள் செய்தல், ஸ்தாபன ரீதியான சமய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவையெல்லாம் அவ்வளவு முக்கியமல்ல என்று பிள்ளைகள் எண்ண ஆரம்பித்து விடுகிறார்கள். பிற சமயங்கள்பற்றியும் இவற்றின் சமய நம்பிக்கைகள், செயல்கள்பற்றியும் பிள்ளைகளுக்குப் படிப்படியாக ஒரு மரியாதை உண்டாகிறது. எல்லா சமயத்தவர்களும் நல்லவர்கள் என்கின்ற மனப்பான்மை வயது ஆகஆக வளருவதைப் பார்க்கின்றோம்.

### சமயம்பற்றிய சிக்கல்கள்

சமய நம்பிக்கைபற்றிக் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு உள்ளத்தில் சிக்கல்கள் ஏற்படுவது உண்டு. இது சம்பந்தமாகப் பல பிரச்சினைகள் உண்டாவதுண்டு. சமயச் சடங்குகளில் நம்பிக்கை இல்லாமல் போதல், அவர்கள் விருப்பத்திற்கு எதிராகக் கோயிலுக்குச் செல்ல வேண்டும் எனப் பெற்றோர் கட்டாயப்படுத்துதல், சமயத்திலேயே

நம்பிக்கை இழந்துபோதல், சமயவுண்மைகளைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்கின்ற கவலை உண்டாதல், சமயத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் இடையேயுள்ள முரண்பாடுபற்றிக் கவலை உண்டாதல் போன்ற பல பிரச்சினைகள் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு ஏற்படுவது உண்டு. இப் பிரச்சினைகள்பற்றி மேலே கூறப்பட்ட இரண்டு ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தார்கள்.

| சமய சம்பந்தமான பிரச்சினை | குறிப்பிட்ட மாணவர்களின் சதவிகிதம் | | |
|---|---|---|---|
| | 12 வயது | 15 வயது | 18 வயது |
| 1. கோயிலில் நடக்கும் பிரார்த்தனை முறை பிடிக்கவில்லை ... | 33 | 47 | 60 |
| 2. கோயிலுக்குச் செல்லக் கட்டாயப் படுத்தப்படுதல் ... ... | 30 | 31 | 27 |
| 3. கடவுள்பற்றிய கருத்து மாறிப் போதல் ... ... | 29 | 25 | 31 |
| 4. சமயத்தில் நம்பிக்கை இழந்து போதல் ... ... | 27 | 32 | 31 |
| 5. பிரார்த்தனையால் நன்மை ஏற் படுமா என்று ஐயம் கொள்ளல் ... | 37 | 44 | 35 |
| 6. சமயத்தின் பொருளைத் தெரிந்து கொள்ளக் கவலை கொள்ளல் ... | 53 | 48 | 60 |
| 7. சொர்க்கம், நரகம் ... ... | 53 | 53 | 66 |
| 8. பாவம் ... ... | 71 | 62 | 72 |
| 9. விஞ்ஞானத்துக்கும் சமயத்திற்கும் உள்ள முரண்பாடுகள் ... | 42 | 50 | 57 |
| 10. மனிதர்கள் இறந்துபோகும் பொழுது என்ன மாறுதல்கள் நிகழ்கின்றன என்பதுபற்றி ஐயம் கொள்ளல் ... | 67 | 56 | 80 |

மேற்கண்ட அட்டவணையைப் பார்க்கும்பொழுது அமெரிக்க மாணவர்களுக்குச் சமய சம்பந்தமான பிரச்சினைகள் பல இருப்பது தெரியவருகின்றது. இந்தப் பிரச்சினைகள் வயது நிலைகளுக்கேற்ப அதிகமாக மாறுவதாகச் சொல்லுவதற்கில்லை. என்றாலும், பலதரப்பட்ட பிரச்சினைகள் இளம் பிள்ளைகளுக்கு இருப்பது தெரியவருகின்றது. இப் பிரச்சினைகள்பற்றி அவர்களிடம் பேசி, அவர்களுக்கு நல்ல வழி காட்டவேண்டியது மிகவும் அவசியமாகும்.

### ஆங்கிலப் பிள்ளைகளின் சமய நம்பிக்கைகள்

கூலன் (Kuhlen) என்பவரும், ஆர்னல்டு (Arnold) என்பவரும் 12 வயதிலிருந்து 18 வயது வரையுள்ள 547 பிள்ளைகளின் சமய

நம்பிக்கைகள்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். அவர்களில் 275 பேர் ஆண்பிள்ளைகள்; 290 பேர் பெண்பிள்ளைகள். எல்லோருக்கும் ஒரு கேள்விநிரல் கொடுக்கப்பட்டது. அதிலுள்ள ஒவ்வொரு கேள்விக்கும் பிள்ளைகள் 'நம்புகிறேன்', 'நம்பவில்லை' அல்லது 'நம்புகிறேனு அல்லது நம்பவில்லையா என்பதுபற்றித் தெளிவில்லை' என்று பதில் கூறலாம். மேற்சொன்ன பிள்ளைகளில் 12 வயதுடையவர்கள் 174 பேர், 15 வயதுடையவர்கள் 243 பேர், 18 வயதுடையவர்கள் 130 பேர். இப் பிள்ளைகளில் அநேகமாக எல்லோருக்குமே கிறிஸ்துவ சமயத் திருச்சபையுடன் (Church) தொடர்பு இருந்தது. மிகக் குறைவான ஒருசில பிள்ளைகள்தான் சமய ஸ்தாபனங்கள் ஒன்ருேடும் தொடர்பில்லாமல் இருந்தார்கள்.

கேட்ட கேள்விகளில் மூன்றுக்கு அவர்கள் அளித்த விடைகள் கீழே கொடுத்துள்ள அட்டவணையில் உள்ளன.

| சமய சம்பந்தமான கூற்று | வயது | நம்புவதாகச் சொல்லும் பிள்ளைகளின் சதவிகிதம் | நம்பவில்லை என்று சொல்லும் பிள்ளைகளின் சதவிகிதம் | தெளிவில்லை என்று சொல்லும் பிள்ளைகளின் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. நல்லவர்கள் மட்டுமே சொர்க்கத்துக்குச் செல்வார்கள். | 12 | 72 | 15 | 13 |
| | 15 | 45 | 27 | 27 |
| | 18 | 33 | 32 | 34 |
| 2. கடவுள் நீ சரியாக நடந்துகொள்கிருயா என்பதை மேலே இருந்துகொண்டு உற்று நோக்குகிருர். நீ சரியாக நடந்து கொள்ளாவிட்டால் தண்டனை கொடுப்பார். | 12 | 70 | 18 | 11 |
| | 15 | 49 | 37 | 13 |
| | 18 | 33 | 48 | 18 |
| 3. நீ செய்த பாவங்களுக்குத் தண்டனை அளிக்கப்படும் இடம் நரகமாகும். | 12 | 70 | 16 | 13 |
| | 15 | 16 | 21 | 27 |
| | 18 | 13 | 30 | 34 |

மேலேயுள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால் 12 வயதுடைய பிள்ளைகளில் 70 சதவிகிதம் பேர்கள் கடவுள்பற்றிய கூற்றுகள் மூன்றையும் நம்புவது தெரியவருகின்றது. ஆனுல், வயது ஆகஆகப் பிள்ளைகளின் நம்பிக்கை குறைந்து வருவது தெரிகின்றது. 12 வயதிலிருந்து வளர்ந்து 18 வயது அடையும்பொழுது பிள்ளைகளினுடைய சிந்தனை, திறமை, பகுத்தறியும் தன்மை வளர்ந்துவிடுகிறது. இதன் காரணமாக முன்னர் சிறுவர்களாக இருக்கும்பொழுது ஏற்றுக்கொண்ட சமய நம்பிக்கைகளைப் படிப்படியாக விட்டுவிடுவதைக் காண்கின்ருேம்.

பிராட்ஷா (Bradshaw) என்பவர் 11 வயதிலிருந்து 18 வயது வரையுள்ள 298 பிள்ளைகளினுடைய சமய நம்பிக்கைகள்பற்றி ஆராய்ச்சி செய்தார். 181 பேர் ஆண்கள்; 117 பேர் பெண்கள். அவர்களுடைய வயது பின்வருமாறு:

| வயது | | | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 11-லிருந்து 12·11 வரை | ... | ... | 72 |
| 13-லிருந்து 14·11 வரை | ... | ... | 86 |
| 15-லிருந்து 16·11 வரை | ... | ... | 85 |
| 17-லிருந்து 19 வரை | ... | ... | 55 |

இப் பிள்ளைகள் எல்லோருக்கும் பள்ளிக்கூடத்தில் சமய போதனை வகுப்பு உண்டு. இப் பிள்ளைகளில் பெரும்பகுதியினர் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்துவ சமயக் கோயில்கள் இளம் பிள்ளைகளுக்காக நடத்தும் சமய வகுப்புகளில் கலந்துகொண்டவர்கள். இந்த ஆராய்ச்சியில் ஒரு கேள்விநிரல் பயன்படுத்தப்பட்டது. சமயம் பற்றிய பல கூற்றுகளைக் கொடுத்துப் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கூற்று 'உண்மை', 'பொய்', அல்லது 'உண்மையா பொய்யா என்று தெரியவில்லை' என்று பதில் கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். மூன்று கூற்றுகள்பற்றி மாணவர்கள் கூறிய விடைகளின் புள்ளி விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| கூற்று | வயது | உண்மை என்று சொன்னவர்களின் சதவிகிதம் | பொய் என்று சொன்னவர்களின் சதவிகிதம் | உண்மையா பொய்யா என்று தெரியவில்லை என்று சொன்னவர்களின் சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1. நல்லவர்கள் சுவர்க்கத்துக்குப் போவார்கள். | 11-லிருந்து 12·11 | 68 | 14 | 18 |
| | 13-லிருந்து 14·11 | 54 | 19 | 27 |
| | 15-லிருந்து 16·11 | 45 | 20 | 35 |
| | 17-லிருந்து 19 | 31 | 38 | 31 |
| 2. நீ கெட்டவனுக இருந்தால் கடவுள் உன்னை தண்டிப்பார். | 11-லிருந்து 12·11 | 45 | 40 | 15 |
| | 13-லிருந்து 14·11 | 38 | 49 | 13 |
| | 15-லிருந்து 16·11 | 38 | 35 | 27 |
| | 17-லிருந்து 19 | 24 | 50 | 26 |
| 3. கெட்ட மனிதர்கள் நரகத்துக்குப் போவார்கள். | 11-லிருந்து 12·11 | 33 | 34 | 33 |
| | 13-லிருந்து 14·11 | 19 | 43 | 38 |
| | 15-லிருந்து 16·11 | 15 | 39 | 46 |
| | 17-லிருந்து 19 | 13 | 50 | 37 |

அந்த அட்டவணையில் காணும் புள்ளிவிவரங்களையும் முன்னால் கூலன், ஹர்ஞல்டு ஆகியோர் ஆராய்ச்சியிலிருந்து கிடைத்த புள்ளி விவரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இரண்டிற்குமிடையே ஒற்றுமை இருப்பது தெரியவரும். 12 வயது நிலையிலுள்ள பிள்ளை கள் பெருவாரியாக, அதாவது சுமார் 70 சதவிகிதம் 'நல்லவர்கள் சுவர்க்கம் செல்லுவார்கள், நன்னடத்தைக்குக் கடவுள் வெகுமதி அளிக்கிறார்' என்ற நம்பிக்கை உடையவர்களாக இருப்பது தெரியவரு கிறது. அடுத்த இரண்டு சமய நம்பிக்கைகள்பற்றி மாணவர்கள் கூறியுள்ளதுபற்றிய புள்ளி விவரங்களையொட்டிப் பார்த்தால் இரண்டு ஆராய்ச்சிகளுக்குமிடையே சிறிது வேறுபாடு இருப்பது தெரிகின்றது. அதாவது இரண்டாவது ஆராய்ச்சியில் குறைவான சதவிகித மாண வர்கள் நம்பிக்கை இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

மூன்றாவது ஆராய்ச்சி ஒன்று லண்டன் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்டது. 220 மாணவர்களுக்கு ஒரு கேள்வி நிரல் கொடுக் கப்பட்டது இவர்கள் குமரப் பருவத்தைத் தாண்டி வளர்ந்துவிட்ட பெரிய மாணவர்கள். தாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எத் தகைய சமய போதனை தரப்பட்டது, என்ன நம்பிக்கைகள் கொண் டிருந்தார்கள் என்பதுபற்றி நினைத்துப் பார்த்துப் பதில் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இவ்வாராய்ச்சியிலிருந்து கிடைத்த விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| கேள்வி | 'ஆம்' என்று சொல்பவர்களின் சதவிகிதம் | 'இல்லை' என்று சொல்பவர்களின் சதவிகிதம் | 'உறுதியாகத் தெரியவில்லை' என்று சொல்பவர்களின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. மனிதன் நல்லவனாக இருக்க வேண்டும் என்பது கடவுளின் விதிஎன்று உனக்குக் கற்பிக்கப்பட்டதா? | 85 | 9 | 4 |
| 6. நீ தவறு செய்துவிட்டால் கடவுள் உன்னைத் தண்டிப்பார் என்று எப்பொழுதாவது உனக்குக் கற்பிக்கப்பட்டதா? | 49 | 44 | 5 |
| 7. நல்லவனாக இருப்பதற்குத் தூண்டுதலாக சுவர்க்கத்துக்குப் போகலாம் என்று உனக்குக் கூறப்பட்டதா? | 54 | 40 | 5 |
| 8. கெட்டவனாக ஆவதைத் தடுப்பதற்கு நீ நரகத்துக்குப் போய்விடுவாய் என்று சொல்லப்பட்டதா? ... | 42 | 51 | 4 |

இங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளின் தன்மை முன்னைய கேள்விகளைவிடச் சிறிது மாறுபட்டது. கேட்கப்படும் மாணவர்கள் தாங்கள் சிறுவர்களாக இருந்தபொழுது பெற்ற அனுபவம் என்ன என்பதை நினைத்துப் பார்த்து பதில் சொல்லவேண்டும். இவ்வாறு நினைத்துப் பார்ப்பதில் தவறு ஏற்படக்கூடும். என்றபோதிலும் 85 சதவிகிதம் பேர்கள் மனிதன் நல்லொழுக்கத்தோடு வாழவேண்டும் என்பது இறைவனின் நியதி என்று கற்பிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். நன்னெறியில் வாழ்வதற்கும் தீயநெறியினின்று விலகுவதற்கும், சுவர்க்க நரகக் கருத்துகள் துணையாக இருக்கின்றன என்று கற்பிக்கப்பட்டதாகச் சுமார் 50 சதவிகிதம் பேர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாராய்ச்சியிலிருந்து குமரப் பருவத்து ஆரம்பத்தில் குழந்தைகளின் கருத்து மாறியிருப்பது தெரிகின்றது. குமரப் பருவத்துக்கு முன்னர் சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுது 'கடவுள் தவறு செய்தால் தண்டனை கொடுப்பார்' என்று சொல்லி வரும் பிள்ளைகள் குமரப் பருவம் வரும்பொழுது 'நீதிநெறிக்கேற்ற வாழ்க்கை நடத்துவதற்குக் கடவுள் ஆதாரமாக இருக்கிறார்' என்று எண்ண ஆரம்பிக்கிறார்கள்.

குமரப் பருவத்திலும் பிள்ளைகளினுடைய கடவுள் கருத்துச் சிறிது சிறிதாக மாறிவிடுகின்றது. நல்லவர்களுக்குக் கடவுள் வெகுமதி அளிக்கிறார், கெட்டவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார் என்ற கருத்து காலம் ஆகஆகக் குறைந்துவிடுகின்றது. குமரப் பருவத்தின் இடைப் பகுதியிலும், இறுதிப் பகுதியிலும் பிள்ளைகள் சமயம்பற்றி ஆராய்வதில் ஈடுபடுகிறார்கள். கேள்விகள் கேட்டு சந்தேகங்களைக் கிளப்பி காரணகாரிய முறையில் அவர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த ஆராய்ச்சி செய்யும் தன்மை 11, 12 வயதில் தொடங்கி, குமரப் பருவத்தின் பின் பகுதியில் அதிகமாக வளர்ந்துவிடுகிறது.

குமரப் பருவத்துப் பிள்ளைகள் சிறு பருவத்தில் கொண்டிருந்த சில கருத்துகளை விட்டுவிட்டபோதிலுங்கூட நீதியான வாழ்க்கையில் நம்பிக்கை, ஓரளவுக்குக் கடவுள் நம்பிக்கை ஆகியவற்றை விட்டுவிடுவதாகச் சொல்ல முடியாது.

சமயத்துக்கும் நல்லொழுக்கத்துக்குமுள்ள தொடர்பு

ஃபாரஸ்டர் (Forrester) என்பவர் 13 வயதிலிருந்து 17 வயது வரையுள்ள 346 பிள்ளைகளிடம் சமயம்பற்றிய ஒரு கேள்வி நிரலைக் கொடுத்து ஆராய்ச்சி செய்தார். இவர்களில் 157 பேர் ஆண்பிள்ளைகள். 189 பேர் பெண்பிள்ளைகள். சமயத்தின் இயற்கை, நோக்கம் பற்றிப் பல கூற்றுகளைக் கொடுத்து அவை 'சரிதான்' அல்லது 'சரியில்லையா' என்றும், 'ஒப்புக்கொள்கிறீர்களா' அல்லது 'ஒப்புக்கொள்ளவில்லையா' என்றும் மாணவர்களைக் கேட்டார். சில முக்கியக் கூற்றுகளும் அக் கூற்றுகளுக்கான புள்ளி விவரங்களும் வயதுநிலைக்கேற்ப அடுத்துள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| கூற்று | வயது 13 | 14 | 15 | 16 | பால் |
|---|---|---|---|---|---|
| | (மதிப்பெண்) | | | | |
| 1. சமயத்தின் முக்கிய வேலை மக்கள் நல்லவர்களாக இருப்பது எவ்வாறு என்பதைச் சொல்லிக் கொடுப்பதாகும். | ·18 | ·46 | ·19 | ·27 | ஆண் |
| | ·93 | ·20 | ·72 | ·05 | பெண் |
| 4. நல்லவர்களாக இருப்பதற்குச்சமயம் மக்களுக்குத் தேவை இல்லை. | ·45 | ·29 | 1·27 | ·54 | ஆண் |
| | —·48 | ·05 | ·04 | ·60 | பெண் |
| 6. சரியான நடத்தைக்குச் சரியான சமய நம்பிக்கை அவசியம். | ·45 | ·29 | —·12 | —·23 | ஆண் |
| | 1·03 | ·75 | —·12 | —·20 | பெண் |
| 11. சமயம பற்றிய பாடங்களில் சில தற்கால சமூகப் பிரச்சினைகள் பற்றி இருக்க வேண்டும். | 1·09 | 1·46 | 1·50 | 1·30 | ஆண் |
| | 1·24 | 1·45 | 1·60 | 1·40 | பெண் |
| 13. சமூகத்துக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளுக்கும், சமயத்துக்கும் ஒருவித மான தொடர்பும் கிடையாது. | —·18 | —·33 | ·15 | —·45 | ஆண் |
| | —·48 | —·70 | —·88 | —·52 | பெண் |

மேற்கண்ட புள்ளி விவரங்களைப் பார்க்கும்பொழுது, குமரப் பருவத்துப் பிள்ளைகளில் பெரும்பான்மையர் 'சமயம் மனிதர்கள் நல்லவர்களாக இருக்கவேண்டும் என்பதைப் போதிக்கின்றது' என்றும், ஆனல் அதே சமயத்தில் 'சமயம் இல்லாமலேயே அவர்கள் நல்லவர்களாக இருக்க முடியும்' என்றும் நம்புவது தெரிகின்றது. சமய நம்பிக்கைக்கும் நன்னடத்தைக்கும் நேர் தொடர்பு உண்டா என்பதுபற்றி அவர்களுக்குத் திடமான நம்பிக்கையில்லை. ஃபாரஸ்டர் தனது ஆராய்ச்சியிலிருந்து கூறுவதாவது : "பொதுவாகக் கூறினல் குமரப் பருவத்துப் பிள்ளைகள் 'சமயமானது நடைமுறை வாழ்க்கையை ஒட்டியதாக இருக்கவேண்டும்' என்றும், 'அது மக்களை நல்லவர்களாக இருக்க போதிக்கிறது' என்றும் நம்புவதாகத் தெரிகின்றது. ஆனல், பாதிப் பிள்ளைகளுக்கு மேற்பட்டவர்கள், குறிப்பாக வயது வந்த பிள்ளைகள், நன்னெறியில் வாழ்வதற்குச் சமயம் அவசியமில்லை என்று கருதுகிறார்கள்".

லண்டன் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியிலிருந்தும் மேற்கண்ட மாதிரியே தெரியவந்தது. சமயத்திற்கும் நீதிநெறிக்கும் உள்ள தொடர்பைப் பொதுவாக மாணவர் ஒத்துக்கொள்கின்றனர். ஆனால், அதே சமயத்தில் நீதி வாழ்க்கையையும், நடைமுறை வாழ்க்கையையும்பற்றியே மாணவர்கள் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். இந்த ஆராய்ச்சியிலிருந்து கிடைத்த சில விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| கேள்வி | 'ஆம்' என்று சொல்பவர்களின் சதவிகிதம் | 'இல்லை' என்று சொல்பவர்களின் சதவிகிதம் | ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியாதவர்களின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 13. பின்வரும் வாழ்க்கை நிலைகளில் ஏசுநாதருடைய நீதி போதனை சரியாக வழிகாட்டும் என்று நீ நம்புகிறாயா? | | | |
| (அ) சொந்த நீதி ஒழுக்கம் (எடுத்துக்காட்டு: தனிப்பட்ட வாழ்க்கையில் நேர்மையாக இருத்தல்) ... | 93 | 5 | 0 |
| (ஆ) சமூக நன்னடத்தை (எடுத்துக்காட்டு: குடும்ப உறவுகள்) ... | 90 | 7 | 0 |
| (இ) சர்வதேச நீதி முறை (எடுத்துக்காட்டு: எதிரிகளை நடத்துதல்) ... | 80 | 12 | 5 |
| 20. கடவுள் நம்பிக்கை இளைஞர்கள் நல்வாழ்க்கை நடத்துவதற்கு உதவக் கூடும் என்று நீ நம்புகிறாயா? ... | 93 | 2 | 3 |
| 21. இளைஞர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்குக் கடவுள் நம்பிக்கை அவசியம் என்று நீ கருதுகிறாயா? ... | 38 | 50 | 9 |
| 22. நீதிபோதனையைச்சிறந்த முறையில் அளிக்க என்ன செய்யலாம்: | | | |
| (அ) சமய போதனைமட்டும் கொடுக்கவேண்டும் ... | 13 | 85 | 0 |
| (ஆ) சமய போதனை ஒரு பகுதியாக இருக்கலாம் | 85 | 13 | 0 |
| (இ) சமய போதனை நீங்கியதாக வேண்டும் ... | 21 | 75 | 2 |

கடவுள்பற்றிய கருத்து

கல்லூரி மாணவர்களின் சமய நம்பிக்கைபற்றி அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி செய்யப்பட்டது. மூன்று மாணவர் குழுவினர் இவ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர்.

கடவுளைப்பற்றி மாணவர் குழுவினர் என்ன கருத்துக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பார்க்கலாம். இதைத் தெரிந்து கொள்வதற்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் கேட்கப்பட்டன. இக் கேள்வியில் கடவுளைப்பற்றி ஏழு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தனது கருத்தைக் குறிக்கும் விளக்கத்திற்கு எதிரே மாணவன் குறியிடவேண்டும்.

1. இப் பிரபஞ்சத்தையும், இயற்கையையும், இயற்கை விதிகளையும் உண்டாக்கிய ஒருவர் உண்டு. அவரிடம் அளவிலடங்கா அறிவும், ஆற்றலும் உண்டு. அவரை வணங்குவதன்மூலமாகவும் அவருக்கு வழிபாடு செய்வதன்மூலமாகவும் நமக்கு அவரது பாதுகாப்பும் அருளும் கிடைக்கும். கடவுள் ஒருவரது தனிப்பட்ட சொந்த தெய்வமாகும்.

2. எல்லையிலா அறிவும் அன்புமுடைய பேருயிர் ஒன்று உண்டு. அது இயற்கை விதிகளுக்கு ஏற்ப இயங்கும். அதன் சக்தியும் நல்ல தன்மையும் இயற்கை விதிகளின்மூலம் வெளிப்படும். இந்த தெய்வத்தோடு நாம் தொடர்பு கொள்ளலாம். தெய்வத்திடம் செய்யும் பிரார்த்தனையின்மூலம் இயற்கைபற்றியும் உலக வாழ்வில் நமது இடம்பற்றியும் நல்ல மனப்பான்மை உண்டாகும்.

3. ஒரு பெரிய ஆன்மீக சக்தி அல்லது உண்மை, இயற்கை முழுவதிலும் பரவி நிற்கின்றது மனத்திற்கு அப்பாற்பட்ட இவ்வுண்மை மனிதனிடம் இயங்குகின்றது. பிரார்த்தனை மூலமாய் இதனை மாற்றவோ அல்லது இதனோடு தொடர்பு கொள்ளவோ முடியாது.

4. கடவுளைப் பொறுத்தவரையில் நமக்கு அதிகம் தெரிய முடியாது. ஆகவே, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை நான் நம்புவதும் இல்லை; நம்பாதிருப்பதும் இல்லை.

5. இயற்கை விதிதான் ஒரே சக்தி. எல்லாவற்றையும் படைத்த தனிப்பட்ட ஒருவர் இல்லை. அளவிலா அறிவுடைய ஒருவரும் இல்லை. மனிதனைப்பற்றி இயற்கைக்குச் சிறிதும் அக்கறை கிடையாது, இயற்கை விதியை ஓர் ஆன்மீக சக்தி என்று வேண்டுமென்றால் கூறலாம். ஆனால். இதனால் அதனுடைய தன்மையைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது.

6. இப் பிரபஞ்சம் வெறும் இயந்திரம். மனிதனும் இயற்கையும் காரணகாரிய விதிக்கு உட்பட்டவர்கள். தெய்வம் என்பது அறிவு நிறைந்த உயிர் அல்லது ஆன்மீகச் சக்தி என்பதெல்லாம் வெறும் கற்பனே. பிரார்த்தனை பயனில்லாத ஒரு நம்பிக்கை.

7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் என்னுடைய கருத்தைக் குறிப்பதாக இல்லை.

இக் கேள்விக்கு மூன்று மாணவர் குழுவினர் அளித்த விடைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | குழு | | |
|---|---|---|---|
| | 1 | 2 | 3 |
| | 12 வயது | 15 வயது | 18 வயது |
| | சதவிகிதம் | | |
| அளவிலா அறிவும் சக்தியும் உடையவர் | 17 | 25 | 40 |
| அளவிலா அறிவும் அன்புமுடைய உயிர் | 25 | 27 | 19 |
| ஒரு பெரிய ஆன்மீக சக்தி ... | 11 | 10 | 7 |
| கடவுள் நம்பிக்கையும் இல்லை நம்பாமலும் இல்லை ... ... ... | 23 | 17 | 12 |
| இயற்கை விதியாகிய சக்தி ... | 8 | 7 | 9 |
| பிரபஞ்சம் ஒரு யந்திரம் ... ... | 5 | 2 | 2 |
| மேற்கூறப்பட்டவைகளில் ஒன்றும் இல்லை ... ... ... | 11 | 12 | 11 |

விஞ்ஞானம் சமயம்பற்றிய தொடர்பு

விஞ்ஞானத்துக்கும் சமயத்திற்கும் உள்ள முரண்பாடுபற்றிப் பொதுவாக எல்லோரும் பேசுவது உண்டு. இதுபற்றிய ஒரு கேள்வி மாணவர்களிடம் கேட்கப்பட்டது. அக் கேள்வியாவது:

1. சமயக் கொள்கைகளுக்கும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்குமிடையே முரண்பாடு இருப்பதாக அடிக்கடி கூறப்படுகின்றது—இதுபற்றி உன்னுடைய கருத்து என்ன ?

என்னைப் பொறுத்தவரையில் சமயமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று நல்ல ஆதரவாக உள்ளது.

விஞ்ஞானத்துக்கும் சமயத்திற்குமிடையே முரண்பாடு ஒன்றுமில்லை. முரண்பாடு இருப்பதுபோல் தோன்றுகிறதேயொழிய உண்மையில் இல்லை.

இரண்டிற்குமிடையே முரண்பாடு உண்டு. ஆனால் அது தீர்க்க முடியாததல்ல.

முரண்பாடு அதிகம். தீர்ப்பது எளிதல்ல.

இரண்டிற்குமுள்ள முரண்பாட்டைத் தீர்க்கவே முடியாது.

மேற்கண்ட கேள்விகளுக்கு மாணவர்கள் பின்வருமாறு பதில் அளித்தார்கள்.

மொத்தம் 386 பேர்

| | | சதவிகிதம் |
|---|---|---|
| 1. | விஞ்ஞானமும் சமயமும் ஒன்றுக்கொன்று ஆதரவு | 21 |
| 2. | முரண்பாடு உண்மையில் கிடையாது ... | 32 |
| 3. | முரண்பாடு உண்டு, ஆனால் தீர்க்க முடியாததல்ல | 17 |
| 4. | முரண்பாடு அதிகம், தீர்ப்பது எளிதல்ல ... | 14 |
| 5. | முரண்பாடு தீர்க்க முடியாதது ... ... | 16 |

சமயச் செயல்கள்

மேற்சொன்ன மாணவர்களிடம் அவர்கள் என்னென்ன சமயச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதுபற்றிக் கேட்கப்பட்டது. அதற்குக் கிடைத்த விடைகள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| | குழு | | |
|---|---|---|---|
| | 1 | 2 | 3 |
| | சதவிகிதம் | | |
| கோயிலுக்குச் செல்லுதல் | | | |
| வாரம் ஒரு முறை ... ... | 14 | 25 | 39 |
| இரண்டு வாரத்திற்கு ஒரு முறை ... | 7 | 7 | 9 |
| சராசரி மாதம் ஒரு முறை ... | 11 | 20 | 10 |
| எப்பொழுதாவது ஒரு முறை ... | 34 | 28 | 26 |
| போவதே இல்லை ... ... | 34 | 20 | 16 |
| வழிபாடு செய்தல் | | | |
| ஒவ்வொரு நாளும் ... ... | 13 | 22 | 35 |
| அடிக்கடி ... ... ... | 10 | 14 | 18 |
| அவ்வப்போது ... ... | 22 | 26 | 12 |
| ஓரிரு தடவைகள் ... ... | 15 | 14 | 8 |
| ஒருபோதும் இல்லை ... ... | 40 | 24 | 27 |
| பக்தி உணர்ச்சி ஏற்படுதல் | | | |
| ஒவ்வொரு நாளும் ... ... | 8 | 13 | 17 |
| அடிக்கடி ... ... ... | 13 | 14 | 23 |
| அவ்வப்போது ... ... | 20 | 17 | 9 |
| ஓரிரு தடவைகள் ... ... | 19 | 26 | 29 |
| ஒருபோதும் இல்லை ... ... | 40 | 30 | 22 |

சமய நம்பிக்கையும் போரும்

மாணவர்களின் சமய நம்பிக்கை போர் காரணமாக மாறுவது உண்டு. அமெரிக்காவில் போரில் ஈடுபட்டு அனுபவம் பெற்றவர்கள் பின்னர்ப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிப்பது உண்டு. அவர்களது சமய நம்பிக்கை எவ்வாறு இருக்கின்றது என்று தெரியக் கேள்வி கேட்கப்பட்டது. 'போர் அனுபவம் உனது சமயக் கருத்துகளை என்ன வகையில் பாதித்துள்ளது' என்று கேட்கப்பட்டது. அக் கேள்விக்கு மூன்று வகையான பதில்கள் அளிக்கப்பட்டன.

முதல் வகை: 'யுத்தமே முடிவான சான்று, கடவுள் ஒருவர் இல்லை என்பதற்கும் சமயம் தோல்வி அடைந்துவிட்டது என்பதற்கும். ஒரு குற்றமும் செய்யாத லட்சக்கணக்கான மக்கள் அவசியம் இல்லாது இறக்கும்பொழுது கருணைமிக்க தெய்வம் ஒன்று உண்டு என்று எவ்வாறு ஒருவன் நம்ப முடியும்?

'சமயம் உண்மையிலேயே சக்தியுடையதாய் இருந்தால் உலகில் போர் இருக்கமுடியாது. வெறுப்பு, வெறி, தண்டனை, பசி, சுய நலம், ஆதிக்கம், காலனிச் சுரண்டல் முதலியன இருக்கமுடியாது.'

'மனித சக்தியை நிலைநாட்டுவதற்குச் சமயம் பல நூற்றாண்டுகளாக முயன்று வந்துள்ளது. அது எவ்வளவோ காலம் முயன்று பார்த்தாகிவிட்டது. மக்கள் இப்பொழுது விழித்தெழுந்து சமயத்தால் ஒரு பயனும் இல்லை என்பதையும், சமயவாதிகள் பொய்யர்கள் என்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும்.'

'சமயம் தீர்வு காண முயன்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டியது அவசியம். ஆனால், சமயம் தோல்வியுற்றுவிட்டது. இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எனக்கு அக்கறையுண்டு. ஆனல், நான் சமயத்தைத் தவிர வேறு சமூக அமைப்புகள்தான் அதனைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.'

இரண்டாவது வகை: இவ்வகையைச் சேர்ந்த மாணவர்கள் சமயம்பற்றிச் சாதகமான எண்ணம் உடையவர்கள்:

'நான் போரில் புகுந்தபொழுது எனக்குத் தனிப்பட்ட சமயக் கொள்கை இல்லாதிருந்தால் நான் தொடர்ந்து வாழ்ந்திருக்க முடியாது என்று நம்புகிறேன்.'

'எனக்குச் சமயத்திலிருந்து திடமான சக்தி கிடைத்தது. நான் வேறு யாரையும் என்னுடைய சமய நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளச் சொல்லவில்லை. ஆனல், எனக்கு அவற்றின் மூலமாகத் தனிப்பட்ட

முறையில் சிறந்த சுகம் உண்டாகிறது என்பது என் அனுபவம். கடவுள் நம்பிக்கையைப் போன்ற வேறு ஒன்றும் எனக்கு தினமும் சக்தி அளிப்பது கிடையாது, இதனை நான் பிறருக்கு எடுத்துக் காட்டுவது முடியாது. ஏனென்றால், நான் அதனைச் சொல்லால் உண்மையிலேயே விளக்கிக் காட்ட முடியாது.'

மூன்றாவது வகை: இந்த மாணவர்கள் தெய்வீக கிறிஸ்துவ சமயத்தை ஏற்றுக்கொள்வதில்லை. நீதிநெறி முறையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஒரு மாணவர் கூறுவது: 'எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. ஸ்தாபனரீதியான சமயத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், மனிதனுடைய நல்ல தன்மையில் எனக்கு நம்பிக்கையுண்டு. கிறிஸ்துவ சமயத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால், கிறிஸ்துவ அறநெறிகளில் எனக்கு நம்பிக்கை உண்டு.'

'யுத்த சமயத்தில் எனக்கு ஒன்று தெரியவந்தது. அண்டை அயலாருக்கு அன்பு காட்டவேண்டும் என்கிற அடிப்படைக் கொள்கையைக்கூட பெரும்பாலான மக்கள் சிறிதும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்பது அது. ஆகவே, இப்பொழுதுள்ள நிலையை மாற்றுவதற்கோ அல்லது திருத்துவதற்கோ ஒரே ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது. அது என்னவென்றால், இப்பொழுதைய சமய நம்பிக்கைகளுக்குப் பதிலாகச் சரியான நீதிநெறி முறையைக் கொண்டுவருவதாகும்.'

பொதுவாகப் போர் அனுபவமுடைய மாணவர்கள் சமய நம்பிக்கையைத் தங்களது வாழ்க்கைக்கு அவசியம் என்று கருதியபோதிலும் ஸ்தாபனரீதியான சமயத்தின்பால் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. சமய நம்பிக்கையில் ஈடுபாடு இல்லாதவர்களுங்கூட மனிதப் பண்பிலும் நீதிநெறியிலும் ஆர்வம் காட்டுகின்றனர்.

# 8. குற்ற நடத்தை

இளம் பிள்ளைகள் குற்றம் செய்வது இன்றைய சமூகத்தில் மிகுதியாகி வருகின்றது. சமூகம் இயந்திரத் தொழில்மயமாகி வருகின்றது. நகரங்களும், சிறு நகரங்களும் தோன்றிவருகின்றன. கிராமங்களுங்கூட நகரத்தன்மை அடைந்து வருகின்றன. இம் மாறுதல் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் நிகழ்ந்துவருவதைக் காணலாம். இம் மாறுதல் வேகமாக ஆகி வருகின்ற நாடுகளில் இளம் பிள்ளைகள் குற்றம் செய்வது ஒரு முக்கியப் பிரச்சினையாகி வருகின்றது.

குமரப் பருவத்துப் பிள்ளைகளே பெருவாரியான முறையில் குற்றம் செய்வதாகத் தோன்றுகிறது. அதிலும் குறிப்பாகக் குமரப் பருவத்தின் முன்பகுதியாகிய 13 வயதில் இருந்து 16 வயதுவரை உள்ள காலத்தில் இளம் பிள்ளைகள் மிகுதியாகக் குற்றம் செய்வதாகச் சிலர் கருதுகிறார்கள். பொதுவாகவே, குமரப் பருவத்துப் பிள்ளைகள் குற்ற நடத்தையிலும் பிறழ்வான நடத்தையிலும் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லலாம்.

நம் நாட்டில் இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக, கோவை நகரத்தில் உள்ள இளங் குற்றவாளிகளுக்கான நிலையம் ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு | அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1950-51 | 214 |
| 1951-52 | 212 |
| 1952-53 | 192 |
| 1953-54 | 256 |
| 1954-55 | 274 |
| 1955-56 | 247 |
| 1956-57 | 237 |
| 1957-58 | 248 |
| 1958-59 | 249 |
| 1959-60 | 297 |
| 1960-61 | 382 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து குற்றம் செய்யும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகுதியாகிவருவதைக் காணலாம்.

இளங் குற்றவாளிகளைப்பற்றி மேலைநாடுகளில் விரிவான ஆராய்ச்சி பல ஆண்டுகளாகவே நடந்துவருகின்றது. நம்முடைய நாட்டில் இத்தகைய ஆராய்ச்சி தொடக்க நிலையில் உள்ளது என்றுதான் சொல்லவேண்டும். எனினும், உளவியல் ஆராய்ச்சி மாணவர்களும் சமூகப் பணி ஆராய்ச்சி மாணவர்களும் ஓரளவுக்கு ஆராய்ச்சி செய்திருக்கின்றனர்.

இளம் பிள்ளைகள் செய்யும் குற்றங்களின் வகைகள், அவற்றைச் செய்வதற்கான காரணங்கள், இளங் குற்றவாளிகளின் இயல்புகள், அவர்களைச் சீர்திருத்தும் முறைகள், இளங் குற்றவாளிகள் பற்றிய ஆராய்ச்சி முதலியனவற்றைக் கவனிக்கலாம்.

### குற்ற வகைகள்

குமரப் பருவத்துப் பிள்ளைகள் செய்யும் குற்றங்களில் முக்கியமான வகைகள் :

1. திருடுதல்
2. திருடுவதில் பிறருக்கு உதவி செய்தல்
3. ஜேப்படி செய்தல்
4. குழுவாகச் சென்று கொள்ளை அடித்தல்
5. மது அருந்துதல்
6. சட்டவிரோதமாக மதுபானம் காய்ச்சுதல், அதற்கு உதவுதல்
7. சூதாடுதல்
8. அடங்காப்பிடாரியாய் இருத்தல்
9. பள்ளிக்கள்ளம்
10. ஓடி விடுதல்
11. கட்டணமின்றி இரயிலில் பிரயாணம் செய்தல்
12. பெண்ணிடம் பலவந்தமாக நடத்தல்
13. விபசாரம் செய்தல்
14. சண்டையிடுதல்
15. பிறரைத் தாக்குதல்
16. வெட்டுதல், குத்துதல்
17. கொலை செய்தல்

மேலே குறிப்பிட்டுள்ள குற்றச் செயல்கள் பலவற்றுள் பிள்ளைகள் பெருவாரியாக ஈடுபடுவது திருடுதலாகும்.

திருடுதல், திருடுவதில் பிறருக்கு உதவி செய்தல், ஜேப்படி செய்தல், குழுவாகச் சென்று கொள்ளையடித்தல்

திருடுதலில் பலவகைகள் உண்டு. ஜேப்படி செய்தல், குழுவாகச் சென்று கொள்ளையடித்தல் முதலியன குமரப் பருவத்துப் பிள்ளைகள் அதிகமாக ஈடுபடும் செயல்களாகும். சில சமயங்களில் அவர்கள் நேரடியாகத் திருடுதலில் கலந்துகொள்ளாவிட்டாலுங் கூட அதைச் செய்யும் குற்றவாளிகளுக்கு உதவியாயிருப்பதுண்டு. இவ்வாறு உதவி செய்வதும் குற்றமாகக் கருதப்படுகின்றது. கீழே வருகின்ற சில எடுத்துக்காட்டுகளிலிருந்து இக் குற்றச் செயல்களின் தன்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

சென்னை மாம்பலம் ரயில் நிலையத்தின் அருகிலுள்ள ஒரு குடிசையில் வாழ்ந்துவந்தான் 'கு'. அவனுக்கு வயது 14. 4ஆவது வகுப்பு வரையில் படித்து நின்றுவிட்டான். படிப்பில் மோசமில்லை என்று கூறப்பட்டது. தகப்பனார் தம் மனைவியுடனும், இன்னொரு மகனுடனும் குடிசையில் வாழ்க்கை நடத்திவந்தார். பால் வியாபாரம் செய்து மாதம் சுமார் 100 ரூபாய் சம்பாதித்துவந்தார். அவருக்கு ஒரு வைப் பாட்டி உண்டு. அவள் அடிக்கடி அவருடைய வீட்டிற்கு வந்து போவது வழக்கம். அவள் இப் பையனை அடிக்கடி வேலை செய்யச் சொல்லுவதுண்டு. இது அவனுக்குப் பிடிக்கவில்லை. தகப்பனார் பையனை அடித்து உதைப்பதுண்டு. பெற்றோர்கள் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்ளுவதும் உண்டு. 'கு' ஒருநாள் ஒருவர் வீட்டுத் தென்னை மரத்தில் ஏறித் தேங்காய் பறித்துக்கொண்டு இருந்தான். திருட்டுக் குற்றம் சாட்டி அவன் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டான். அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தன் நண்பர்கள் பறித்துவரச் சொன்னதாகவும், ஆகவே பறித்ததாகவும் கூறினான். மேலும், தன்னுடைய தகப்பனார் அடிக்கடி அடித்து வருவதாகவும், பணம் கொடுப்பதில்லை என்றும், அவருடைய வைப் பாட்டி சொல்லும் வேலைகளைச் செய்யாவிட்டால் அடிப்பார் என்றும் அவன் சொன்னான். அவர்கள் சொல்லுவதுபோல் செய்வதற்கும், அந்தச் சிறிய குடிசை வீட்டில் இருப்பதற்கும் தனக்குப் பிடிக்கவில்லையாகையால் ஊர் சுற்றிக்கொண்டு இருப்பதாகவும் கூறினான். பெற்றோர்கள் தக்கபடி உணவு கொடுக்காததால் மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து கூலிவேலை செய்து காசு பெற்று ஹோட்டலில் உண்பது, இல்லையேல் எந்தப் பொருளையாவது திருடி விற்று உண்பது என்றும் அவன் கூறினான். இப் பையன் யாருக்கும் அடங்குவதில்லை என்றும், கண்ட இடங்களில் களவாடி ஊர்வம்பை விலைக்கு வாங்கி வருவான் என்றும், எவ்வளவோ முயற்சி செய்தும் அவன் திருந்தவில்லை என்றும் பையனின் சுற்றத்தார் கூறினார்கள். பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள் அவன் பொல்லாதவன் என்றும்,

ஆகவே அவ் வட்டாரம் முழுவதும் அவனை 'மலைக்கள்ளன் ' என்றே அழைப்பார்கள் என்றும் சொன்னார்கள். அவனை ஏதாவது ஒரு சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பும்படியாகத் தந்தை கேட்டுக்கொண்டார். தாய்க்கும் அவனை அனுப்பிவிடலாம் என்ற ஆசை இருந்தது.

இன்னொர் எடுத்துக்காட்டு: கோவை நகரத்தில் 17 வயதுள்ள 'ஜோ' என்ற இளைஞனுக்குப் புகைபிடித்தல், சினிமா பார்த்தல், உயர்ந்த விலையுள்ள ஆடைகளை அணிந்துகொண்டு அவனை ஒத்த பிள்ளைகளுடன் ஊர்சுற்றுதல் ஆகிய பழக்கங்கள் உண்டு. எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்துவந்த அவன், இறுதித் தேர்வில் தவறிவிட்டான். கோவையில் உள்ள ஒரு நூல் ஆலையில் கூலி வேலை பார்த்து வந்தான். அவனுடைய பெற்றோர்களும் மில்லில் வேலை பார்த்துவந்தார்கள். குடும்பத்தில் எத்தகைய குற்றமும் கிடையாது. பெற்றோரும் அவனுடைய இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் அவன்பால் அன்புகொண்டு இருந்தார்கள். ஆனால், அவனுக்குத் தீய நண்பர்கள் உண்டு. ஹோட்டல், ரயில்வே ஸ்டேஷன் போன்ற இடங்களில் வைத்துள்ள சைக்கிள்களை 'ஜோ' கள்ளச் சாவி போட்டுத் திறந்து எடுத்துக்கொண்டுபோய்த் தன் நண்பன் ஒருவனது சைக்கிள் கடையில் கொண்டுகொடுப்பது வழக்கம். போலீசார் இதனைக் கண்டுபிடித்து, அதன்மேல் குற்றம் சாட்டினர். சுமார் 20 சைக்கிள்களை அவன் திருடியதாகச் சொல்லப்பட்டது. இவ்வாறு திருடிய சைக்கிள்களை மாற்றியமைத்து அவனுடைய நண்பன் விற்றுவிடுவது வழக்கம் என்று தெரிந்தது. 'ஜோ'தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டான். தன்னுடைய நண்பர்களின் தூண்டுதலால் தான் அப்படிச் செய்ததாகவும், அந்த நண்பன் இவன் ஆடைகள் வாங்குவதற்கும், மற்றச் செலவுகளுக்கும் பணம் கொடுத்ததாகவும் அவன் சொன்னான். போலி ஆடம்பர வாழ்க்கையின் ஆசையும், தீய நட்பு, தூண்டுதல் ஆகியவையும் அவனைக் குற்றவாளி ஆக்கி விட்டன.

ஜேப்படி செய்தல் என்பது இளம் பிள்ளைகள் ஈடுபடுகின்ற இன்னொரு வகையான திருட்டுச் செயலாகும். தமிழ் நாட்டில் உள்ள ஒரு பார்ஸ்டல் பள்ளியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் ஜேப்படி செய்ததால் தண்டனை அடைந்தான். இவன் மிக்க ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய தந்தை புடைவை விற்பவர். சென்னையில் உள்ள ஒரு திறமைசாலியான ஜேப்படிக்காரனிடம் அவனுக்குப் பழக்கம் உண்டாகியது. அவனுடைய உதவி ஆளாக இவன் இருந்துவந்தான். கடைகளில் இருந்த தர்மாஸ் பிளாஸ்க்குகளையும், பார்க்கர் பேனக்களையும் அவன் திருடுவது உண்டு. அவனுடைய குடும்பம் ஏழ்மையானது என்பதுமட்டும்

அன்று ; அவனுடைய தந்தையும் தாயும் ஒன்ருக வாழாது பிரிந்து வாழ்ந்துவந்தார்கள். தாய்க்கு அவன்மேல் அதிக வெறுப்பு உண்டு. பெற்ருேருடைய அன்பும் ஆதரவும் இல்லாமல் போகவே பையன் ஜேப்படிக்காரனின் குழுவோடு சேர்ந்துவிட்டான். அக் குழுவினரோடு சேர்ந்து பல திருட்டுச் செயல்களில் ஈடுபடுவது அவனுக்கு அதிக மகிழ்ச்சியையும், வருவாயையும் கொடுத்தது. வீட்டில் ஆதரவான பாதுகாப்பு இல்லாமல் போகவே அவன் இத்தகையவர்களோடு சேர்ந்து ஒழுங்கற்ற வாழ்க்கை நடத்தலானுன்.

சில சமயங்களில் இளம் பிள்ளைகளுக்குக் கைதேர்ந்த திருடர்களின் கூட்டத்தோடு தொடர்பு ஏற்பட்டு, பெரிய வழிப்பறி, கொள்ளை முதலியவற்றில் அவர்கள் ஈடுபடுவதுண்டு. 19 வயதுள்ள ஓர் இளைஞனுக்கும், இன்னும் 3 பேர்களுக்கும் 3 ஆண்டுக் காவல் தண்டனை கிடைத்தது. வரலாறு பின்வருமாறு: சென்னை அரக்கோணம் ரயில் பாதையில் உள்ள திருடர்கள் கூட்டம் ஒன்று வழிப்பறி நடத்திவந்தது. ரயில் நிலையத்தில் இருந்து கூட்ஸ் வண்டி புறப்பட்டுச் சென்றதும் அவர்கள் அதில் ஏறி ஒரு பெட்டியிலுள்ள 'சீல்'களை உடைத்து, ரயில் வெளி சிக்னலைத் தாண்டி அதிக வேகமாகச் செல்லுவதற்கு முன்னல் எத்துணை மூட்டைகளை எடுத்துக் கீழே போடமுடியுமோ, அத்துணை மூட்டைகளை எடுத்துப் போட்டுவிடுவார்கள். வெளி சிக்னலுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய மணல்மூட்டை இருப்பது உண்டு. அதனைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் ஓடுகின்ற ரயிலில் இருந்து கீழே குதித்துவிடுவார்கள். இவ்வாறு பல சமயங்களில் உளுந்து, மிளகு, தோல், அமோனியம் சல்ஃபேட்டு முதலிய பொருள்கள் அடங்கிய மூட்டைகளை எடுத்துப் போட்டுப் பின்னர் அவற்றை விற்றுப் பணம் சேர்த்துவந்தார்கள். இவர்களுக்கு உதவியாக இருந்த குற்றவாளி இளைஞனுடைய தந்தை ஒரு ரயில்வே தொழிலாளி (gangman). இந்த இளைஞன்கூடச் சிறிது காலம் தகப்பனுர் செய்யும் வேலையைச் செய்திருக்கிருன். 3ஆம் வகுப்புவரை படித்திருக்கிருன். மேற்சொன்ன திருடர் கூட்டத்தார் இவனுக்கு ஆசைகாட்டி இத்தகைய கொள்ளையில் ஈடுபடுமாறு செய்துவிட்டார்கள்.

மது அருந்துதல், சட்டவிரோதமாக மதுபானம் காய்ச்சுதல், அதற்கு உதவுதல், சூதாடுதல்

கோவை நகரத்தில் உள்ள இளங் குற்றவாளிகளுக்கான நிலையம் ஒன்றில் 'ர' என்ற 14 வயதுப் பையன் ஒருவன் இருந்தான். அவன் கோவை நகரத்தைச் சேர்ந்தவன். பெற்ருேருக்கு ஒரே பிள்ளை. சிறு வயதிலேயே தந்தை இறந்துவிட்டார். தாய் பிழைப்புக்காக வேலைக்காரியாகச் சென்றுவிட்டாள். இப் பையனது தந்தையுடன்

பிறந்த சகோதரரான சித்தப்பா ஒருவரது வீட்டில் அவன் விடப் பட்டான். தாய் கூலிவேலை செய்தாள். மாதம் 10 ரூபாய் கிடைத்தது. பையன் தனது 14 வயதுவரை சித்தப்பா வீட்டிலேயே இருந்து வந்தான். அவனுக்குப் பள்ளிப் பயிற்சி ஒன்றும் கொடுக்கப்பட வில்லை; வீட்டிலுள்ள எல்லா வேலைகளையும் அவன்தான் செய்ய வேண்டி இருந்தது. ஒருநாள் அவனுக்கும் சித்தப்பாவுக்கும் சண்டை வந்து, அவர் அவனை நன்றாக அடித்துவிட்டார். ஆகவே, பையன் வீட்டைவிட்டு வெளியே போய்விட்டான். அம்மாவிடம் போய், நான் இனிமேல் சித்தப்பா வீட்டில் இருக்கமுடியாது என்று கூறிவிட்டான். தாய் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு பையனுடன் வாழ ஆரம்பித்தாள். அவன் கூலிவேலை செய்து ஒரு நாளைக்குச் சுமார் 1 ரூபாய் வீதம் தேடினான். ஒருநாள் அவனை நான்கு மைல் தூரத்திலுள்ள ஒரு கடைக்குச் சென்று சில சாமான் களை வாங்கிவரச் சொல்லி ஒருவன் அனுப்பினான். சைக்கிளில் போகும்படியாகச் சொன்னான். ஆகவே, வாடகை சைக்கிள் எடுத் துக்கொண்டு 'ர' அங்கே சென்றான். அப்பொழுது சிலர் மதுபானம் காய்ச்சிக்கொண்டு இருப்பதைப் பார்த்தான். அப்பொழுதுதான், அவன் மதுபானம் எடுத்துக்கொண்டு வருவதற்கு அனுப்பப் பட்டான் என்பது தெரிந்தது. அங்கிருந்தவர்கள் 7 சைக்கிள் 'ட்யூப்' களில் மதுபானம் அடைத்து இந்தப் பையனை எடுத்துக்கொண்டு செல்லச் சொன்னார்கள். அவற்றை எடுத்துக்கொண்டு திரும்பி விரைந்து வந்துகொண்டு இருந்தபோது நான்கு போலீஸ்காரர்கள் சந்தேகமுற்றுப் பின்தொடரலானார்கள். இதை அறிந்த பையன் எவ்வளவு வேகமாக வரமுடியுமோ அவ்வளவு வேகமாக விரைந்து வந்தான். ஆனால், அவனை அனுப்பிய ஆளைச் சந்திப்பதற்கு முன் னால் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டார்கள். பையன் எல்லா விவரங்களையும் சொல்லிக் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம் ஒன்றிலுள்ள இளங் குற்றவாளிகள்பற்றி ஒரு சமூகப்பணி மாணவர் ஆராய்ச்சி செய்தார். அந்த ஆராய்ச்சியில் ஓர் இளைஞனைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'பி' 15 வயதுள்ள ஒரு பையன். அவனுடைய தந்தை ஒரு குடிகாரன்; அந்தக் கிராமத்திலுள்ள ஒரு முக்கியமான போக்கிரி. பையனிடம் தந்தைக்கு அன்பு கிடையாது. பையனின் தாய் தன் கணவரிடம் படுகின்ற கஷ்டம் மிகவும் அதிகம். சிறுசிறு காரணங்களுக்காகக் கூடத் தந்தை அடிக்கடி தாயை அடிப்பதுண்டு. பையனுக்குக் கல்வி அளிக்கவில்லை. தந்தை மதுபானம் கொண்டுவருகின்ற வேலைக்கு அவனைப் பயன்படுத்தினார். ஆகவே, பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வில்லை. கிராமத்தில் உள்ள குற்றம் செய்யும் மற்றப் பிள்ளை களோடு பையனுக்குப் படிப்படியாகப் பழக்கம் உண்டாகிவிட்டது.

சிறிது காலத்தில் அத்தகைய பிள்ளைகள் சேர்ந்த கூட்டத்துக்கு அவன் தலைவன் ஆகிவிட்டான். அவன் குடிப்பதுண்டு; சூதாடுவது உண்டு; புகை பிடிப்பது உண்டு. தந்தையினுடைய தீய எடுத்துக் காட்டின் விளைவாக மகன் தீய நடத்தையில் இறங்கியதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

அடங்காப்பிடாரியாய் இருந்தல், பள்ளிக்கள்ளம், ஓடிவிடுதல், கட்டணமின்றி ரயில் பிரயாணம் செய்தல்

சில பிள்ளைகள் வீட்டில் பெற்றோர்களுக்குச் சிறிதும் கீழ்ப்படியாமல் ஒரே பிடிவாதமாக இருப்பதுண்டு. அவர்களால் பெற்றோருக்கும், மற்றவர்களுக்கும் ஓயாத தொல்லையாக இருக்கும். இத்தகையவர்களை நாம் அன்றாட வாழ்க்கையில் காணலாம். இதுபோலவே நாம் சில பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்லாதிருப்பதையும் காண்கின்றோம். படிப்பில் விருப்பம் இல்லாததாலோ அல்லது வேறு காரியங்களில் விருப்பம் அதிகமாக இருப்பதாலோ சில பிள்ளைகள் பள்ளி வகுப்புகளுக்கு 'மட்டம் போடுவது' நாம் எல்லோரும் அறிந்த ஒன்றே. இது தவிர ஒருசில பிள்ளைகள் வீட்டைவிட்டு ஓடிப்போய்விடுவதும் உண்டு. இவ்வாறு ஓடுவதற்குப் பல காரணங்கள் சேர்ந்து வந்திருக்கும். பின்வருவது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

கோவையில் உள்ள இளங்குற்றவாளிகள் நிலையத்தைச் சேர்ந்த 13 வயதுள்ள 'பி' என்னும் பையன் அவனுடைய பெற்றோருக்கு மூத்த பிள்ளை. தாயும் தந்தையும், இரண்டு சிறு பிள்ளைகளும், இப்பையனும் ஒன்றாக வாழ்ந்துவந்தார்கள். பெற்றோர் இருவருக்கும் இடையே நல்ல உறவு இல்லை. தந்தை ஆடு மேய்ப்பவர். சொந்தமாக ஒருசில ஆடுகள் உண்டு. மற்ற ஆடுகளெல்லாம் ஒரு முதலாளிக்குச் சொந்தம். குடும்பம் மிகவும் வறுமையான நிலையில் இருந்தது. நாள் முழுவதும் கடுமையாக வேலை செய்தபிறகு தந்தை வீட்டிற்கு மிக்க கோபத்தோடும் எரிச்சலோடும் வருவார். ஏதாவது காரணத்தைக்கொண்டு தாயையும் பையனையும் அவர் திட்டுவதும் அடிப்பதும் உண்டு. 'பி'-க்குத் தந்தையின்மேல் விருப்பம் கிடையாது. அவனுக்கு ஆதரவாகப் பேசுகின்ற தாயின்பேரில்தான் அவனுக்கு விருப்பம். அவனுக்குக் காலையிலிருந்து மாலைவரை ஆடு மேய்ப்பதுதான் வேலை. மத்தியானம் உணவு கிடையாது. விளையாடுவதற்கு வாய்ப்பே கிடையாது. அவன் எப்பொழுதாவது ஏதாவது வேலையைச் சரியாகச் செய்யாவிட்டால் தந்தை அவனை நன்றாக அடிப்பார். இவையெல்லாம் சேர்ந்து அவனுக்கு வீட்டின்பால் சிறிதும் பற்று இல்லாமல் ஆக்கிவிட்டன. அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேயில்லை. பெற்றோர்களுக்கும் எழுதபடிக்கத்

தெரியாது. இந் நிலையில் ஒருநாள் 'பி' தன் வீட்டிலிருந்து ஓடிப் போய்விட்டான். இது எவ்வாறு நடந்தது. ஆட்டு மந்தையிலிருந்து ஓர் ஆட்டுக்குட்டி விலகிச் செல்லவே அதைத் தடுப்பதற்காக அவன் ஒரு கல்லை எடுத்து வீசினான். ஆனால், அந்தக் கல் 'படாத' இடத்தில் பட்டு அந்தக் குட்டி உடனே இறந்துவிட்டது. தந்தை இதற்காக அவனைக் கடுமையாக உதைத்துவிட்டார். மறுநாளே அவன் வீட்டைவிட்டு வெளியே வந்து கோயம்புத்தூர் அருகிலுள்ள ஓர் இடத்துக்குச் சென்றான். சில நாட்கள் சுற்றித் திரிந்து பின் இறுதியாக ஒரு டீக்கடையில் அவன் வேலையாளாகச் சேர்ந்தான். கடைக்காரன் முதல் இரண்டு மாதங்களுக்கு 3 ரூபாய் வீதமும், அதற்குப் பிறகு 4 ரூபாய் வீதமும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். பின்னால் அந்தக் கடைக்காரன் தன் வீட்டிற்கு வேலை செய்வதற்கு அவனை அனுப்பினான். அங்கு வேலை மிகக் கடினமாக இருந்தது. சில சமயங்களில் அவன் பொருள்களைத் திருடியதாகக் கடைக்காரனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. வீட்டில் வேலை செய்வது பையனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கடைக்குத் திரும்பி வந்தபொழுது கடைக்காரனுக்கு அதிகக் கோபம் வந்து அவனை உதைத்து வெளியே அனுப்பிவிட்டான். அவன் செய்த வேலைக்குச் சம்பளம் ஒன்றும் கொடுக்கவில்லை. இரண்டு நாட்களாகப் பட்டினியோடு சுற்றித் திரிந்தான். அவனுக்கு யாரோ ஏதோ சிறிது உண்பதற்குக் கொடுத்தார்கள். இரண்டாவது நாள் முடிவில் பசி பொறுக்க முடியாமல் அவன் இரவில் ஒரு கம்பியை வைத்துக்கொண்டு பக்கத்திலுள்ள ஒரு சிறிய கடையைத் திறந்து உள்ளேயுள்ள பணப்பெட்டியிலிருந்து 2 ரூபாயை எடுத்துக்கொண்டான்.. மேலும் அங்கிருந்த 2 வாழைப் பழங்களையும், 4 பப்பிரிமிட்டுகளையும் எடுத்து அங்கேயே உடனே சாப்பிட்டுவிட்டான். அக் கடையிலிருந்து சிறிய துண்டு ஒன்றையும் எடுத்துக்கொண்டான். இரண்டு நாட்கள் அவன் தனக்குக் கிடைத்த பணத்தை வைத்துக்கொண்டு வாழ்ந்துவந்தான். இரண்டாவது நாள் போலீஸ்காரர் ஒருவர் அவனை மேற்சொன்ன கடைக்குச் சென்று பீடி வாங்கிவரும்படி அனுப்பினார். அவன் போனபொழுது அந்தக் கடைச் சொந்தக்காரர் அவன் உடுத்தியிருந்த துண்டை அடையாளம் தெரிந்துகொண்டு உடனே போலீசுக்குத் தகவல் கொடுத்தார். அந்தப் பையன் நடந்ததையெல்லாம் ஒப்புக்கொண்டு செலவழித்த பணம்போக மீதி ரூ. 1—2—0ஐக் கடைக்காரனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

வேலூரைச் சேர்ந்த 12 வயதுள்ள 'சி' என்னும் பையன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பான். 4ஆவது வகுப்புவரை படித்திருந்தான். அவனுடைய தகப்பனார் அரசாங்க அலுவலகத்தில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். அவனுக்குச் சமவயது நண்பர்கள் பலர்

உண்டு. அவர்களோடு சேர்ந்து ரயிலில் ஏறி இந்தியாவின் பல பாகங்களுக்கும் செல்லுவதுண்டு. அவனுடைய தாய் இறந்துவிட்ட பிறகு தந்தை மறுமணம் செய்துகொண்டார். பொருளாதார நிலை அவ்வளவு திருப்தியாக இல்லை. பையன் அவ்வளவாகக் கவனிக்கப் படவில்லை. அவன் சிறு குழந்தையாக இருந்தபொழுது தாய் இறந்துவிட்டதால் பாட்டியின்பால் அவனுக்கு அன்பு உண்டு. பாட்டியும் இவன்மீது அளவுகடந்த அன்பு காட்டினுள். அவன் வீட்டில் தங்காமல் எப்பொழுதும் ஓடிவிடுகின்ருன் என்று அவனுடைய பெற்ரோர்கள் சொன்ஞர்கள். தக்க கவனிப்பு இல்லாமையால் அவன் வீட்டில் தங்குவது இல்லை என்று அக்கம்பக்கத்துக்காரர்கள் சொன்ஞர்கள். இப் பையன் ஏற்கெனவே இரண்டுமுறை கட்டணமின்றி ரயில் பிரயாணம் செய்த குற்றத்திற்காகப் பிடித்துக் குடும்பத்தாரிடம் ஒப்படைத்திருக்கிருர்கள். மூன்ரும் முறையும் வீட்டிற்கு அனுப்பப்பட்டான். நான்காம் முறையும் பெயர் மாற்றிக் கொடுத்துக் கோவையில் ஒரு கடைக்காரரோடு தங்கியிருந்தான். அந்தக் கடைக்காரர் தனது சொந்த மாமஞர் என்று சொல்லி, அவருடைய ஜாமீன்பேரில் அவன் குற்றத்திலிருந்து விடுபட்டு வெளியே வருவதற்கான ஏற்பாடு செய்திருந்தான். போலீசார் முழு உண்மையையும் கண்டுபிடித்துவிடவே அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு அவன் ஓடிப்போய்விட்டான். பிறகு அவனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

பெண்களிடம் பலவந்தமாக நடத்தல், விபசாரம் செய்தல்

பாலுணர்வு காரணமாக இளம் பிள்ளைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுவது உண்டு. குமரப் பருவத்தில் பாலுணர்வு விழிப்புற்று வேகமாக வளரும் என்பது நாம் அறிந்த ஒன்று. இது காரணமாகச் சில பிள்ளைகள் தன் கட்டுப்பாடு இல்லாது தவருக நடந்து கொள்ளுவதுண்டு. பின்வருவன இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்:

18வயதுள்ள ஓர் இளைஞன் கூலியாளாக வேலை செய்து வந்தான். இவனுடைய தந்தை இறந்துவிட்டார். தாய்மட்டும் உயிருடன் இருந்துவந்தாள். காட்டிலிருந்த ஒருவருக்கு 12 வயதுள்ள பெண்பிள்ளை வழக்கமாக உணவு எடுத்துச் செல்வதுண்டு. பாலுணர்வு வேகம் காரணமாக அவ் விளைஞன் இப் பெண்ணை ஒரு நாள் தாக்கிப் பலவந்தமாக நடந்துகொண்டான். உடல் உணர்ச்சியின் வேகத்தை அடக்கமுடியாமற்போய் இவன் இவ்வாறு குற்றத்தைச் செய்தான். இதற்காக இந்தியன் பினல் கோட் 326-ன்படி இவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இக் குற்றம் தவிர வேறு எந்த வகையிலும் தவருக நடந்துகொண்டதே இல்லை.

17, 18 வயதுடைய இரண்டு இளைஞர்கள் ஒரு கிராமத்தில் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். இரண்டு பேருக்கும் எழுதப்படிக்கத் தெரியாது. கிராமத்தில் உள்ள ஒரு கொல்லப்பட்டறையில் அவர்கள் வேலை செய்து வந்தார்கள். அக் கிராமத்தில் இருந்த ஓர் ஏழைப்பெண் பகல் நேரத்தில் அங்கு வந்து வேலை செய்வது உண்டு. இரவில் திண்ணையில் படுத்துத் தூங்குவாள். இப் பெண்ணினுடைய நடத்தைபற்றி இவ்விரு இளைஞர்களுக்கும் பலவித மான மோசமான செய்திகள் தெரியவந்தன. இது காரணமாக இவர்கள் அவளைப்பற்றித் தவறாகக் கற்பனை செய்துகொண்டார்கள். இருவரும் ஒருநாள் அவளிடம் பலவந்தமாக நடந்துகொண்டார்கள். இங்கு அவர்களின் குற்ற நடத்தைக்குப் பால்வேகமும், தவறான கற்பனையும் காரணமாகும்.

சூழ்நிலை, சந்தர்ப்பம் காரணமாகக் குமரப் பருவத்துப் பெண் பிள்ளைகள் தவறான வாழ்க்கை நடத்துவதுண்டு. ர' என்னும் 17 வயதுள்ள பெண்பிள்ளை கோவை அவினாசிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள்; சக்கிலிய ஜாதி. கோவைக்கு வந்து ஒரு விபசார விடுதியில் சேர்ந்துகொண்டு பணம் சம்பாதித்து, ஹோட்ட லில் சாப்பிட்டுவந்தாள். சினிமாப்படம் பார்ப்பதில் அவளுக்கு விருப்பம் அதிகம். படிப்பு ஒன்றும் கிடையாது. அவளுடைய கணவன், பெற்றோர் செருப்புத் தைக்கும் தொழில் செய்துவந்தார்கள். ஒரு சிறிய குடிசையில் வாழ்ந்துவந்தார்கள். அவளுக்கும் அவள் கணவனுக்கும் தொடர்பு ஒன்றும் கிடையாது. அவள் கட்டுப்பாட் டுக்கு அடங்காமல் வாழ்ந்துவருவதாகவும், அவளை மீண்டும் வீட்டிற்கு அழைத்துக்கொள்ள விரும்பவில்லை என்றும் பெற்றோர்கள் கூறினார்கள். அக்கம்பக்கத்துக்காரர்களும் மற்றும் உறவினர்களும் அவள் ஒழுக்கமற்றவள் என்று கூறினார்கள். போலீசார் விவரம் தெரிந்து விபசாரக் குற்றம் சாட்டி, அவளை விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள். பெற்றோர்கள் தனக்குப் பிடிக்காத ஒருவருக்குத் தன்னைத் திருமணம் செய்துகொடுத்ததாகவும், அவருடனேயே வாழ வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், ஆகவே, இத்தகைய தொழிலை மேற்கொண்டதாகவும் கூறினாள். இப் பெண்ணைப் பெற் றோர் ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் அவள் சென்னை (Vigilance Home) இல்லத்திற்கு அனுப்பப்பட்டாள்.

**சண்டையிடுதல், பிறரைத் தாக்குதல், வெட்டுதல், குத்துதல், கொலை**

சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல், இது முற்றிய நிலையில் பிறரைத் தாக்குதல். இது தீவிரமாகும்பொழுது வெட்டுதல், குத்துதல் முதலிய குற்றங்களைச் சில சமயங்களில் இளம் பிள்ளைகள் செய்வு

துண்டு. ஒரோவழி இது கொலையில்கூடச் சென்று முடிவதுண்டு. பின்வருவன சில நல்ல எடுத்துக்காட்டுகள் :

18 வயதுள்ள இளைஞன் ஒருவன் ; விவசாயியின் மகன். தாய் உண்டு. பள்ளிக்கூடத்தில் அவன் சேர்ந்திருந்தும் சரியாகப் படிக்கவில்லை. இவனுக்கும் இவனுடைய சகோதரனுக்கும் இடையே சண்டை உண்டாயிற்று. சகோதரனுடைய நடத்தை காரணமாக இவனுக்கு அவன்மேல் பெருங்கோபம் வந்து, எப்பொழுதும் பகையுணர்ச்சியோடு இருந்துவந்தான். ஒருநாள் சண்டை ஏற்பட்டுச் சகோதரனைக் கொலை செய்துவிட்டான். சகோதரன்பால் இருந்த வெறுப்பு மனப்பான்மையும், இவனுடைய கோபமும் சேர்ந்து இவனைக் கொலையாளியாக மாற்றிவிட்டன.

இன்னேர் இளைஞன் ; இவனும் ஒரு விவசாயியின் மகன், அவனது வீட்டுச் சூழ்நிலை அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தகப்பனுர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து அவன் நடப்பதே கிடையாது. அவர் ஒரு கரும்புத்தோட்டத்தில் வேலை செய்துவந்தார். இவன் அங்கு வேலை செய்வதில்லை. ஆனுல், வீட்டிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் ஊதாரித்தனமாகச் செலவழித்துவிடுவான். தந்தை எப்பொழுதும் திட்டுவார். சில சமயங்களில் நன்ருக அடிக்கவும் செய்வார். குடும்பச் சொத்திலிருந்து அவனுக்கு ஒரு பங்கும் கொடுக்கப்போவதில்லை என்று தகப்பனுர் உறுதியாக மறுத்துக் கூறிவிட்டார். மேலும், வீட்டிற்குத் திரும்பி வருவதற்கும் அவனை அனுமதிக்கவில்லை. ஒருநாள் காலையில் தோட்டத்துச் சாலையில் தகப்பனுர் தூங்கிக்கொண்டிருந்தபோது இவன் வந்து அவருடைய வயிற்றில் குத்திவிட்டான். குத்துண்ட அவர் தம்மைத் தம் மகன் குத்திவிட்டதாகக் கூறினுர். சிறிது நேரத்தில் இறந்துவிட்டார். தன்னுடைய ஊதாரித்தனத்துக்குத் தடையாக இருந்த தந்தையின் மேல் பழிவாங்கவேண்டும் என்ற ஆத்திரத்தோடு இவன் இவ்வாறு கொலை செய்யத் துணிந்துவிட்டான்.

18 வயதுள்ள ஓர் இளைஞன் கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டான். சிறு குழந்தையாக இருக்கும்பொழுது தந்தை இறந்துவிட்டார். மூன்ருவது படிவம்வரை படித்தபின் வறுமை காரணமாக மேற்கொண்டு தொடர்ந்து படிக்கவில்லை. கூலிவேலை பார்த்துவந்தான். ஒருநாளுக்கு 1 ரூபாய் கிடைக்கும். பின்னர்த் தனது தாயோடு சென்னைக்குச் சென்ருன். அங்கே சமையல் செய்யும் வேலை தாய்க்குக் கிடைத்தது. இவனுக்கு ஏதோ சில்லறை வேலை கிடைத்தது. சென்னையில் இவனது தாய்க்கு ஒருவனேடு நட்பு ஏற்பட்டு, இருவரும் ஒன்ருக வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் அவனுடைய தாயின் நண்பன் அவனை மிகவும் அதிகமாக அடித்துவிட்

டான். மகன் இதுபற்றி ஏன் என்று கேட்டான்; இருவருக்கும் சண்டை உண்டாயிற்று. சண்டை முற்றி ஆத்திரத்தில் தன் தாயின் நண்பனைக் குத்தவே அவன் இறந்துவிட்டான். தாயை அடித்தது பற்றி ஏற்பட்ட கோபம் காரணமாகவும் தனது உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவும் இவ்வாறு கொலை செய்யும் நிலை உண்டாயிற்று.

புகழ்பெற்ற பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் சிரில் பர்ட் இளம் பிள்ளைகள் செய்யும் குற்றங்களை அவற்றிற்குத் தூண்டுதலாக உள்ள உணர்ச்சிகளின் அடிப்படையில் வகைப்படுத்தியிருக்கின்றார். அவை யாவன:

1. பால் உணர்ச்சி
   மறுபால் பிள்ளைகளிடம் தவறாக நடந்துகொள்ளுதல்
   உடந்தையாக இருத்தல்
   பலவந்தம் செய்தல்
   தன்பால் பிள்ளைகளோடு தவறாக நடந்துகொள்ளுதல்
   அநாகரிகமான வாழ்க்கை நடத்துதல்

2. சின உணர்ச்சி
   கொலை செய்தல்
   காயப்படுத்துதல்
   சண்டையிடுதல்
   அடித்தல்
   தாக்குதல்
   குழந்தைகளுக்கும், மிருகங்களுக்கும் ஊறு செய்தல்
   கட்டுப்பாடு மீறி நடத்தல்
   பழி சுமத்துதல்
   உடைமையைச் சேதப்படுத்துதல்
   உடைமையை அழித்தல்

3. அவா உணர்ச்சி
   திருடுதல்
   வழிப்பறி, கொள்ளை அடித்தல்
   பிச்சை எடுத்தல்
   ஏமாற்றுதல்
   மோசம் செய்தல்

4. சுற்றித் திரிதல்
   பள்ளிக் கள்ளம்
   வீட்டிற்குப் போகாமல் சுற்றுதல்
   வீட்டிற்கு வெளியே தங்குதல்
   வெளியே ஓடிவிடுதல்

5. துக்க உணர்ச்சி

தற்கொலை செய்ய முயலுதல்

தற்கொலை செய்வதாகப் பயமுறுத்துதல்

6. ரகசியமாக வைக்கும் உணர்ச்சி

அதிகமாக அடிக்கடி பொய் சொல்லுதல்

தன் குற்றங்களை மறைப்பதற்காகமட்டும் அல்லாது வேறு பல காரணங்களுக்காகவும் பொய் சொல்லுதல்,

குற்ற நடத்தைக்கான காரணங்கள்

இளம் பிள்ளைகள் குற்றம் செய்வதற்கான காரணங்கள் என்ன? இக் கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதற்குப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. ஆனல், முடிந்த முடிவாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. வறுமையான பொருளாதாரநிலை, மோசமான வீட்டுச் சூழ்நிலை, மோசமான வட்டாரச் சூழ்நிலை, பொருத்தம் இல்லாத பள்ளிப் படிப்பு, உடற் குறைபாடுகள், மனக் குறைபாடுகள் இன்னும் பல காரணங்களுக்காகப் பிள்ளைகள் குற்றம் செய்கிருர்கள் என்று கருதப் படுகின்றது.

வறுமையான பொருளாதாரநிலை

கோவை நகரத்தில் உள்ள இளங் குற்றவாளிகள் நிலையத்தில் 'ந' என்னும் 12 வயதுள்ள பையன் இருந்தான். அவன் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு கிராமத்தான். இவன் பிறப்பதற்கு முன்பே தந்தை இறந்துவிட்டார். தாய் இரண்டாம் முறையாகத் திருமணம் செய்துகொண்டு, பையனைப் பாட்டியிடம் விட்டுவிட்டாள். அவன் பாட்டியோடும் அவனுடைய சித்தப்பாவோடும் ஒரு சிறிய வாடகை வீட்டில் வாழ்ந்துவந்தான். 3ஆம் வகுப்பு மட்டும்தான் படித்தான். அதற்குப் பிறகு பணநெருக்கடி காரணமாகப் படிப்பை நிறுத்த வேண்டி நேரிட்டது. 3ஆம் வகுப்புவரை படிப்பதற்குக்கூட ஓர் ஆசிரியர் அவனுக்குச் சம்பளம் கொடுத்தும், புத்தகங்கள் தந்தும் உதவியதால்தான் முடிந்தது. 3ஆம் வகுப்புக்குப் பின்னர் இந்த உதவி கிடைக்காமல் போகவே படிப்பை முடித்துக்கொண்டு வேலை தேட ஆரம்பித்தான். குடும்பம் மிக ஏழ்மையானது. இந்தப் பையனையும், பாட்டியையும் ஆதரித்துவந்த சித்தப்பாவுக்கு மிகக் குறைந்த வருமானம். அவர்களது மத்தியான உணவுக்குக்கூட அது போதாது. பல நாட்களில் அவர்கள் சரியாக உணவு உண்ணுது பட்டினியாக இருக்கவேண்டி இருக்கும். தனது வயதுவந்த பாட்டியோடு இருந்து, அவளுக்கு அதிக பாரமாக இருப்பதாக நினைத்துப் பையன் வீட்டைவிட்டு வெளியேறி, கோயம்புத்தூர் நகரத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கு ஒருமாதகாலமாக வேலை இல்லாமல் சுற்றி

வந்தான். மற்றவர்கள் கருணைகூர்ந்து ஏதோ கொடுத்ததை வைத்துக்கொண்டு அவன் உயிர் வாழ்ந்துவந்தான். பின்னர் அவனுக்கு ஒரு ஹோட்டலில் வேலை கிடைத்தது. மாதம் 5 ரூபாய் சம்பளம் தருவதாக ஹோட்டல் சொந்தக்காரர் உறுதி கூறியிருந்தார். 4 மாதங்கள் கழித்து அவன் தனக்குரிய சம்பளத் தொகையை வாங்கிக்கொண்டு பாட்டியைப் போய்ப் பார்த்து வருவதற்கு 10 நாட்கள் விடுமுறை கேட்டான். ஆனால், ஹோட்டல் சொந்தக்காரர் பணம் கொடுப்பதற்கு மறுத்ததோடு வேலையிலிருந்தும் நீக்கிவிட்டார். 15 நாட்களாகத் தெருவில் சுற்றி அலைந்து திரிந்த பின்னால் ரயில்வே நிலையத்திலுள்ள உணவுச் சாலையில் வேலை கிடைத்தது. சாப்பாடுபோகத் தினம் 4 அணு கூலி கொடுப்பார்கள். ஆனால், சிறு பிள்ளையை வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாது என்ற சட்டம் இருப்பதால் அங்கிருந்தும் அவனை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். இறுதியாக ஒரே கலக்கமும், மனக்குழப்பமும் ஏற்படவே, அவன் ஒரு போலீஸ்காரரை அணுகி அவன் வசிப்பதற்கு ஏதாவது இடம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டான். போலீஸ்காரர் இளங் குற்றவாளிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றில் கொண்டுபோய்ச் சேர்த்தார். பிறகு பையனுடைய விருப்பத்தின்பேரிலேயே அவனை 'சர்டிபைட்' பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். இப் பள்ளிக் கூடத்துக்குச் செல்லுவதற்கு முன்னால் அவன் பாட்டியைப் பார்ப்பதற்காகச் சென்றுவிட்டுத் திரும்பினான்.

இந்தப் பையனைப் பொறுத்தவரையில் அவன் வீட்டைவிட்டு வெளியேறியதற்குக் காரணம் வறுமைதான். அவனிடம் அன்பும் ஆதரவும் காட்டி நல்லமுறையில் வளர்த்து வழிநடத்துவதற்குப் பெற்றோர்கள் இல்லை. இப் பையனுக்கு நுண்ணறிவும், நல்லுணர்வும் உண்டு. பாட்டியின்பால் அதிக அன்பு உண்டு. அவளது தள்ளாத வயதில் அவளுக்குப் பாரமாக இருக்க விரும்பாத நல்லெண்ணம் காரணத்தால் அவன் வீட்டிற்குப் போகவில்லை. நல்ல முறையில் மானமாக வாழ்க்கை நடத்துவதற்குச் 'சர்டிபைட்' பள்ளிக்கூடத்துக்குச் சென்று ஏதாவது தொழில் கற்றுக்கொள்ளவேண்டும் என்று அவன் விரும்பினான்.

மேற்கண்ட பையன் பசியும் பட்டினியும் ஏற்பட்டபொழுதுங் கூடக் குற்றச் செயலில் ஈடுபடவில்லை. ஆனால், பொதுவாகப் பிள்ளைகள் பசியின் தூண்டுதல் காரணமாகத் திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுவது உண்டு. அவர்கள் உணவுப் பொருள்களையோ, அல்லது உணவுப் பொருள்களை வாங்குவதற்காகப் பணத்தையோ திருடுவது வழக்கம். சில சமயங்களில் வேறு பொருள்களைத் திருடி அவற்றை அடகுவைத்து அல்லது விற்று வருகின்ற பணத்தைக்கொண்டு

உணவுப் பொருள்களை வாங்குவதும் உண்டு. சிரில் பர்ட் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டினைக் கூறியுள்ளார் :

'டி' என்னும் பையனின்மேல் அவன் வீட்டிற்கு அருகிலுள்ள கடைக்காரர்களும் வியாபாரிகளும் அடிக்கடி குற்றம் சாற்றுவது உண்டு. அவன் செய்த குற்றங்கள் பையனது பள்ளிக்கூடத்துத் தலைமை ஆசிரியர் வரை எட்டின. விற்பனை நிலையங்களில் பலமுறை 'டி' திருடி இருப்பதாக மற்ற மாணவர்களும் சொன்னார்கள். ஒரு நாள் மாலை பள்ளிக்கூடம் முடிந்தபிறகு ஓர் ஆசிரியருடைய மேஜை டிராயரிலிருந்து 5 ஷில்லிங் பணம் காணாமல் போய்விட்டது. பள்ளி நேரத்திற்குப் பின்னர் அந்த அறையில் இருந்த சில மாணவர்களில் 'டி'யும் ஒருவன். ஆகவே, எல்லோரும் அவன்மேல் சந்தேகம் கொண்டார்கள். பர்ட் இப் பையனைச் சோதனை செய்வதற்காக அழைக்கப்பட்டார். இப் பையனுடைய உடம்பைப் பார்த்தால் மற்றச் சாதாரணப் பிள்ளைகளின் உடம்பு போன்றே இருந்தது. ஆனால், முகமோ வயது வந்தவர்களுடைய முகம் போன்று தோன்றியது. வயதுவந்த பெரியவர் ஒருவர் எறிந்துவிட்ட ஆடைகளை அவன் உடுத்தியிருந்தான். அவனுடைய கைகள், கால்களெல்லாம் குச்சிகள் போன்று இருந்தன. அவனுக்கு வயது 11 என்றபோதிலும் அவனைப் பார்த்தால் 8 வயதுதான் என்று சொல்ல முடியும். சரியாக உணவு உண்ணாததால் அவனது தோல் வெளிறியிருந்தது ; உதடுகள் வற்றிக்கிடந்தன; கண் இமைகள் கறுத்தும், கண்கள் குழிந்தும், கன்னங்கள் சுருங்கியும் இருந்தன. உடல் எலும்புக்கூடு போன்றே காட்சியளித்தது. அவனிடம் வேறு குறைகள் இருப்பதாகத் தோன்றவில்லை. அவன்மேல் சுமத்தப்பட்ட திருட்டுக் குற்றச்சாட்டை வன்மையாக மறுத்தான். அவன் மறுத்தது சரியென்று சிறிது காலத்திற்குப்பின் தெரியவந்தது. ஏனெனில், இன்னொரு பையன் குற்றத்தை ஒத்துக்கொண்டான். ஆனால், 'டி' தான் கடையிலும் விற்பனை நிலையங்களிலும் செய்துள்ள திருட்டுகளைச் சிறிதும் வெட்கமோ தயக்கமோ இல்லாமல் ஒத்துக்கொண்டான். அவன் புதிதாகக் கண்டுபிடித்துக் கையாண்டுள்ள திருட்டு முறைகளையெல்லாம் சிறிது பெருமையோடே சொல்லிக்கொண்டான். இதுபற்றியெல்லாம் கவனமாக விசாரணை செய்தபொழுது அவன் ஒருபொழுதும் பணத்தைத் திருடியதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் அவன் உணவுப் பொருள்களையே திருடியதாகத் தெரிந்தது. மேலும், அவன் தன் வீட்டிலிருந்து ஒருபோதும் திருடியதாகத் தெரியவில்லை.

பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேவந்த அவனுக்கு வேறு விளையாட்டு அல்லது பொழுதுபோக்கு இல்லை. ஒவ்வொருநாளும் மாலையில் அவன் தெருக்களில் கிடக்கும் பொருள்களைத் தேடிப்பார்த்து அங்குள்ள முட்டைகோஸ் இலைகள் முதலியவற்றை எடுத்துத்

தின்பதுண்டு. விற்பனை நிலையங்களுக்குப் பக்கத்திலுள்ள இடங்கள் தெருவில் வந்து விற்கின்ற விற்பனையாளர்களின் கைவண்டிகள், டிரக் வண்டிகள் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று பார்த்துப் பொருள்களைச் சேகரிப்பது வழக்கம். சில சமயங்களில் விற்பனை செய்பவர் பார்க்காதபோது வண்டியிலிருந்து அவன் பொருள்களை எடுப்பான். திடீரென்று விற்பனைக்காரர் அந்தப் பக்கம் பார்த்து விட்டால், தற்செயலாக வண்டியிலிருந்து விழுந்த பொருள்களை எடுத்து வண்டியில் போடுவது போன்று பாசாங்கு செய்வான். காப் பிக் கடைக்குச் சென்றால் அங்கு இரண்டு அரைப்பென்னி கொடுத்து அரை 'கப்' காப்பி வாங்கிக்கொண்டு மற்றும் அங்கு வருபவர்கள் விட்டுச்செல்லும் உணவுப் பொருள்களை உண்ணுவது உண்டு. பிறர் விட்டுச் செல்கின்ற உணவுப் பொருள்களை உண்ணுவதுமட்டும் அன்றி வேறு வகையாகவும் உணவுப் பொருள்களை எடுத்துக் கொள்ளுவது உண்டு.

'டி'-க்கு ஒரு தம்பி உண்டு. அவனும் சிறிய குள்ளமான எட்டு வயதுப் பையன். இருவரும் சேர்ந்து அரைப் பவுன்கள் முதலிய வற்றைத் திருடுவதும், விற்பனை நிலையங்களிலிருந்து பொருள்களை எடுப்பதுமாகக் குற்றங்கள் செய்துவந்தார்கள். இவர்கள் இருவரும் மிகவும் நெருக்கமான ஒரு கட்டடத்தில் ஒரு சிறிய ஓரறை வீட்டில் இருந்துவந்தார்கள். அவர்களுடைய வீட்டுச் சூழ்நிலை மிகவும் மோசமானது. அங்கு ஒருவிதமான வசதியும் கிடையாது. அவர்க ளுடைய தந்தைக்கு க்ஷயரோகம் வந்து, மூச்சு இழுத்துக்கொண்டு ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டு இருந்தார். அவர்களுடைய தாயோ தான் செய்யும் வேலையிலிருந்து கிடைக்கும் சிறிய ஊதியத்தை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்திவந்தாள். வீட்டில் சாப்பாடு என்பது வெறும் ரொட்டியும் மார்ஜெரினும். தினமும் ஒவ்வொரு வேளையும் இதே சாப்பாடு.

இப் பிள்ளைகளின் தந்தை இறந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு ஒரு குடும்ப நண்பர் இவ்விரு அனாதைகளையும் ஓர் அனாதை விடுதி யில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். அங்கு அவர்களுக்கு நல்ல உணவு கிடைத்தது. உணவு கிடைத்தவுடன் அவர்களது எல்லாத் திருட்டுகளும் மறைந்துவிட்டன. மிக விரைவில் அவர்களது உடல் நலம், தோற்றம் எல்லாம் மாறிவிட்டன. நான் இரண்டாம் முறை யர்கடாமியைப் பார்க்கச் சென்றபொழுது அவன் நன்றாக வளர்ந் திருந்தான்; அடையாளம் கண்டுபிடிப்பதே கஷ்டமாகப் போய் விட்டது. அதற்குப் பிறகு சுமார் 10 ஆண்டுகளாக இப் பிள்ளைகள் சிறிதுகூட நேர்மையற்ற முறையில் நடந்துகொண்டதாக நான் கேள்விப்படவில்லை.

இளம் பிள்ளைகள் திருட்டுக் குற்றங்கள் செய்வதற்கு வறுமை காரணமாக இருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், இளம் பிள்ளைகள் செய்யும் எல்லாக் குற்றங்களுக்கும் வறுமை காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. வறுமை தவிர வேறு பல காரணங் களாலும் குற்றநடத்தை ஏற்படுகின்றது. இதுபற்றி பர்ட் கூறி யுள்ளதாவது: ‘குற்றவாளிப் பிள்ளைகளில் 37% ஏழ்மையான குடும் பங்களில் இருந்து வருகின்றனர். 19% மிக ஏழ்மையான குடும்பங் களைச் சேர்ந்தவர்கள். 42% வசதியான குடும்பங்களில் இருந்து வருகின்றவர்கள். சுமார் பாதிக் குற்றவாளிகள் வறுமையில்லாத வசதியான குடும்பங்களிலிருந்து வரும்பொழுது குற்ற நடத்தைக்கு வறுமைதான் ஒரே காரணம் என்றோ அல்லது மிக முக்கியமான காரணம் என்றோ நாம் எவ்வாறு சொல்ல முடியும்?’

மாரீசன் என்பவரும், டக்ளஸ் என்பவரும் ‘குற்றமும் அதன் காரணங்களும்’ என்ற ஒரு நூல் எழுதியிருக்கின்றார்கள். அந்த நூலில் அவர்கள் நல்ல செல்வநிலை இருப்பதாலேயே குற்றநடத்தை மறைந்துபோவது இல்லை என்பதை எடுத்துக்காட்டி இருக்கின்றார் கள். இங்கிலாந்து, இந்தியாவைவிடச் செல்வம் மிகுந்த நாடு. ஆனால், இங்கிலாந்தில் உள்ள மக்களில் $\frac{1}{42}$% பேர் குற்றம் செய்கிறார் கள். ஆனால், இந்தியாவிலோ $\frac{1}{32}$% பேர்கள்தான் குற்றம் செய் கின்றனர்.

## வீட்டுச் சூழ்நிலையும் குற்ற நடத்தையும்

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சி மாண வர் 100 இளம் குற்றவாளிப் பிள்ளைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தார். குற்றம் செய்யாத இன்னொரு 100 பிள்ளைகளையும் ஒப்புமைக்காக அவர் எடுத்துக்கொண்டார். குற்றவாளிப் பிள்ளைகளையும் சாதா ரணப் பிள்ளைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆராய்ச்சி செய்வதற்கு இது வசதியாக இருந்தது. இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் என்னவெனில், வீட்டுச் சூழ்நிலை எந்த அளவிற்கு இளம்பிள்ளைகள் குற்றவாளிகளாவதற்குக் காரணமாக இருக்கின்றது என்பதைக் கண்டுபிடிப்பதாகும். இவ்வாராய்ச்சியிலிருந்து குற்றவாளிப் பிள்ளைகள் 100 பேர்களின் வீட்டில் 79 பேர்களின் பெற்றோர்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழவில்லை. இதற்குக் காரணம் பெற்றோரில் ஒரு வர் இறந்துவிட்டது, அல்லது சண்டை சச்சரவு அல்லது தொழில். இதற்கு மாறாக, குற்றம் செய்யாத பிள்ளைகளினுடைய பெற்றோர் களில் 38 பேர்கள்தான் ஒருமித்து வாழாதிருந்தார்கள். மேலும், குற்றவாளிப் பிள்ளைகளின் பெற்றோர்கள் பொதுவாகக் கல்வி அறிவு குறைவானவர்களாகவும், குடிப்பழக்கம், ஒழுக்கக் கேடு போன்ற தவ றான நடத்தை உடையவர்களாகவும் இருந்தனர். மேலும், குற்ற

வாளிப் பிள்ளைகள் 100 பேர்களில் 84 பேர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளை அடித்துத் தண்டனை கொடுக்கும் பழக்கம் உடையவர்கள் என்றும், இதற்கு மாறாகக் குற்றவாளியல்லாத பிள்ளைகளின் பெற்றோர்களில் 53 பேர்களே இவ்வாறு தண்டனை கொடுப்பது உண்டு என்றும் தெரியவந்தது.

மேற்சொன்ன ஆராய்ச்சியாளர் பிள்ளைகளுக்குப் பெற்றோர்பால் எத்தகைய மனப்பான்மை இருந்தது என்பதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தார். குற்றவாளிப் பிள்ளைகள் 100 பேரில் 30 பேர்கள் பெற்றோர்களிடம் கோபமாக நடந்துகொள்ளுவதாகவும், அதற்கு மாறாகக் குற்றவாளியல்லாத பிள்ளைகளில் 4 பேர்களே கோபப்படுவதாகவும் தெரியவந்தது. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது பெற்றோர்களுடைய மனப்பான்மை, அவர்களுடைய பழக்கவழக்கங்கள், பிள்ளைகளின்பால் அவர்களுக்குள்ள பரிவு, தண்டனை கொடுத்தல், அதிகக் கண்டிப்பாக இருத்தல் போன்ற பலவற்றால் இளம்பிள்ளைகள் இயல்பாக வாழ்வதோ அல்லது இயல்பிகந்த குற்றவாளிகளாக மாறுவதோ அமைகின்றது என்பது தெரியவருகின்றது.

மேற்சொன்ன ஆராய்ச்சியிலிருந்து இன்னொன்றும் தெரியவந்தது. குற்றவாளிப் பிள்ளைகள் 100 பேரில் 22 பேர் தங்கள் சகோதரர்கள் தங்கள்பால் விருப்பம் இல்லாதவர்கள் என்று நினைத்தார்கள். ஆனால், குற்றவாளியல்லாத 100 பேர்களில் 9 பேர்களே இவ்வாறு நினைத்தார்கள். குற்றவாளிப் பிள்ளைகளில் 27 பேருக்குத் தங்களைத் தங்கள் சகோதரர்கள் வெறுக்கிறார்கள் என்ற எண்ணம் இருந்தது. குற்றவாளியல்லாதவர்களில் 6 பேருக்கே இத்தகைய எண்ணம் இருந்தது. இன்னும் பார்க்கும்பொழுது குற்றவாளிப் பிள்ளைகளில் 27 பேருக்குத் தங்களைவிட மற்றச் சகோதரர்களிடம் பெற்றோர்களுக்கு அதிக அன்பு உண்டு என்று நினைத்தார்கள். குற்றவாளியல்லாதவர்களில் 6 பேருக்கே இந்த எண்ணம் இருந்தது. மேலும், குற்றவாளிப் பிள்ளைகளில் 27 பேருக்குத்தான் தங்கள் பெற்றோர்களிடம் முழு நம்பிக்கை இருந்தது. ஆனால், குற்றவாளியல்லாத பிள்ளைகளில் 65 பேருக்கு நம்பிக்கை இருந்தது. குற்றவாளிப் பிள்ளைகளில் 29 பேர்களுக்குப் பெற்றோர்களிடம் சிறிதும் நம்பிக்கை இல்லை. ஆனால், குற்றவாளியல்லாத பிள்ளைகளில் 6 பேருக்கே இந்த நம்பிக்கையின்மை இருந்தது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையேயும், சகோதர சகோதரிகளிடையேயும் நல்லுணர்வும் நம்பிக்கையும் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பது தெரியவருகின்றது.

இன்னோர் ஆராய்ச்சியாளர் கோவை நகரத்திலுள்ள இளங்குற்றவாளிகள் நிலையத்தைச் சேர்ந்த 30 இளம் பிள்ளைகளைப்பற்றி

ஆராய்ச்சி செய்தார். வீட்டு வாழ்க்கைபற்றி அவர்கள் என்ன மனப்பான்மை கொண்டிருந்தார்கள் என்பதுபற்றிய ஆராய்ச்சியின் முடிவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| வீடு பற்றிய மனப்பான்மை | பிள்ளைகளின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|
| 1. வீட்டின்மேல் அதிக விருப்பம் ... | 3 | 10·00 |
| 2. வீட்டின்மேல் விருப்பம் ... | 2 | 6·67 |
| 3. வீடுபற்றி அசட்டையாக இருத்தல் | 8 | 26·67 |
| 4. வீட்டிற்குப் போக விருப்பமின்மை | 10 | 33·33 |
| 5. வீட்டிலிருப்பதுபற்றி வெறுப்பு ... | 5 | 16·67 |
| 6. மேற்கண்ட ஒன்றிலும் சேராதது | 2 | 6.67 |
| மொத்தம் ... | 30 | 100.00 |

மேற்கண்ட 30 பிள்ளைகளுடைய பெற்றோர்பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| பெற்றோர் பற்றிய விவரம் | பிள்ளைகளின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|
| 1. இருவரும் ஒன்றாக வாழ்வது | 5 | 16.67 |
| 2. பிரிந்து இருப்பது ... | 2 | 6.67 |
| 3. இருவரும் இறந்திருப்பது | 5 | 16.67 |
| 4. தாய் இறந்திருப்பது ... | 8 | 26.67 |
| 5. தந்தை இறந்திருப்பது ... | 10 | 33.33 |
| 6. தாய் இறந்து, தந்தை மறுமணம் செய்திருப்பது ... | 3 | 10.00 |
| 7. தந்தை இறந்து, தாய் மறுமணம் செய்திருப்பது ... | ... | ... |

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் உள்ள இளம் பிள்ளைகளில் குற்றநடத்தைபற்றி ஒரு சமூகப்பணி ஆராய்ச்சி மாணவர் ஆராய்ச்சி செய்தார். அவர் மொத்தம் 25 இளைஞர்களைத் தம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். இப் பிள்ளைகள் குற்றங்கள் செய்வதற்குக் காரணமாகக் குடும்பச் சூழ்நிலையில் என்ன குறை

பாடுகள் இருந்தன என்பதைப்பற்றி அவர் ஆராய்ந்தார். அவர் கண்டுபிடித்துள்ளவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| குறைபாட்டுவகை | | சதவிகிதம் |
|---|---|---|
| 1. ஒழுங்கின்மையும் கட்டுப்பாடின்மையும் | ... | 24 |
| 2. அன்பின்மை ... ... ... | ... | 24 |
| 3. பெற்றோரின் கெட்ட நடத்தை ... | ... | 20 |
| 4. பெற்றோர்களிடையே சண்டை சச்சரவு | ... | 16 |
| 5. பிள்ளைகளின் குற்ற நடத்தைக்கு ஊக்கமளித்தல் | | 12 |
| 6. அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்தல் | ... | 8 |
| 7. அதிகக் கண்டிப்பாக இருத்தல் ... | ... | 4 |

இளங் குற்றவாளிப் பிள்ளைகளின் வீட்டுச் சூழ்நிலைபற்றி மேலை நாட்டில் பல ஆராய்ச்சிகள் செய்திருக்கின்றார்கள். பொதுவாக, வீடுகளில் தங்க வசதிகள் இல்லாமலிருத்தல், போதுமான இடமில்லாதிருத்தல், பலர் சேர்ந்துகொண்டு நெருக்கடியாக வாழ்தல், அசுத்தம் முதலிய குறைகளைக் குறிப்பிட்டுள்ளார்கள். வீட்டின் புறச் சூழ்நிலையில் குறைபாடுகள் இருப்பது ஒருபக்கமிருக்க, அங்குள்ளவர்களின் உணர்ச்சிநிலை மிக முக்கியமான ஓர் அம்சமாகும். அமெரிக்காவில் 98 இளங் குற்றவாளிகள்பற்றிச் செய்த ஆராய்ச்சியில் 74 சதவிகிதம் பிள்ளைகள் நல்ல உணர்ச்சிநிலை இல்லாத வீடுகளில் வாழ்ந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது வீட்டிலுள்ள பெற்றோர்களும், மற்றவர்களும் சுமுகமில்லாது ஒழுங்கற்ற முறையில் வாழ்வதாக இருக்கலாம். நோய், பைத்தியம் போன்றவை இருக்கலாம். தீய ஒழுக்கம் மிகுந்திருக்கலாம். 143 இளம் குற்றவாளிகள்பற்றிச் செய்யப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து பின்வரும் விவரம் தெரியவந்தது :

**143** குற்றவாளிப் பிள்ளைகளின் வீட்டுச் சூழ்நிலை

36 பெற்றோர், இருவரும் கல்வி அறிவு இல்லாதவர்கள்.

10 பெற்றோர், இருவரும் மிகவும் மோசமான நிலையில் இருப்பவர்கள், சராசரிக்குக் குறைவான நிலையில் இருப்பவர்கள்.

20 பெற்றோரில் ஒருவர் ஏற்கெனவே குற்றம் செய்தவர்.

26 பெற்றோரில் ஒருவர் கடலில் மூழ்கியவர்.

13 பெற்றோரில் ஒருவர் மிக்க தீய மனப்பான்மையும், தீய நடத்தையும் உடையவர்.

36 பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரும் கீழ்த்தரமான ஒழுக்கம் உடையவர்.

58 பெற்றோரில் ஒருவர் அல்லது இருவரும் உணர்ச்சிச் சமநிலைக் கட்டுப்பாடு இல்லாதவர்.

21 பெற்றோர், இருவரும் மனநோய் உடையவர்கள்.

வட்டாரச் சூழ்நிலை

குற்ற நடத்தை ஏற்படுவதற்குப் பையன் வாழ்கின்ற வட்டாரத்தின் சூழ்நிலையும் ஒரு காரணமாகும். நகரங்களில் சில பகுதிகளில்மட்டும் குற்றங்கள் அதிகமாக நடந்துவருவதைக் காண்கின்றோம். இதுபற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஒரு நகரத்தின் பல்வேறு பகுதிகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் எந்த அளவுக்குக் குற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்று ஆராயும்பொழுது, நகரத்தில் ஒரு சில பகுதிகளில் குற்றம் செய்யும் பிள்ளைகள் அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று பார்க்கலாம். இத்தகைய பகுதிகளில் வயது வந்தவர்களும் அதிகமாகக் குற்றங்கள் செய்வதாகத் தெரிகின்றது. இவ்வட்டாரங்களில் மக்கள் நெருக்கம் அதிகமாக இருக்கின்றது; அங்குக் குழந்தைகள் பிறப்பின் விகிதமும் அதிகமாக இருக்கும்; வறுமை, துப்புரவின்மை முதலியவற்றை இவ் வட்டாரங்களில் காணலாம். இவ் வட்டாரங்களில் இருந்து பள்ளியில் பயிலும் பிள்ளைகள் பொதுவாக ஆண்டுதோறும் தேர்ச்சியுறுவதில்லை. முறையாகத் தேர்ச்சியடையாமல் ஒரு வகுப்பில் பல ஆண்டுகள் படிக்கும்பொழுது சராசரி வயதைவிட அதிக வயதாகிவிடும். இவ் வட்டாரங்களில் பொதுவாக வியாபாரம் மற்றும் போக்குவரத்து அதிகமாக இருக்கும். பெரியவர்கள் சிறு பிள்ளைகளின் நலத்தைப்பற்றி அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை. இத்தகைய வட்டாரங்களில் மக்கள் நிலையாக இராமல் மாறிக்கொண்டிருப்பதுண்டு. ஆகவே, நிலையான சமூக வாழ்க்கை இருப்பதில்லை. இதுபோன்ற பல காரணங்களால் இவ் வட்டாரங்களில் உள்ள பிள்ளைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இதற்கு மாறாக நல்ல சமூக வாழ்க்கை, பாதுகாப்பான சுற்றுப்புறம், பொழுதுபோக்கு வசதிகள், பெற்றோர்களின் மேற்பார்வை முதலியவை இருக்கின்ற வட்டாரத்தில் இளங் குற்றவாளிகள் மிகக் குறைவாக இருக்கக் காணலாம்.

100 இளங் குற்றவாளிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்த பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர் ஒருவர் அப் பிள்ளைகளின் வீட்டிற்கு அருகிலுள்ள சூழ்நிலை எவ்வாறு உள்ளது என்பதுபற்றியும் ஆராய்ந்தார். பல வீடுகளில் இடவசதி இல்லாமல் இருந்தது; விளையாடுவதற்கு வசதி கிடையாது. இளம் பிள்ளைகளுக்கு விளையாட்டு மிக முக்கியமான பொழுதுபோக்கு, ஆகையால் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து தெருக்களிலும், மற்றும் இடங்களிலும் விளையாடுகின்றனர். இவ்வாறு விளையாடும்பொழுது, வயதுவந்த கெட்ட பிள்ளைகளோடு நட்பு உண்டாகிவிடுகின்றது. இது காரணமாகக் குற்றம் செய்யும் பழக்கமும் உண்டாகிவிடுகின்றது. மேற்கண்ட 100 இளங் குற்றவாளிகளைக் கேட்டபொழுது 43 பேர் தங்களுடைய நண்

பர்களின் கெட்ட தொடர்பு காரணமாகத் தாங்கள் குற்றம் செய்த தாகச் சொன்னார்கள். இதற்கு மாறாகக் குற்றம் செய்யாத 100 பேர் களில் 4 பேர்களுக்குத்தான் கெட்டவர்களின் நட்பு இருந்ததாகச் சொன்னார்கள். மேலும், 51 குற்றவாளிகள் குற்றம் செய்வதற்குத் தங்கள் நண்பர்கள் ஒத்தாசையாக இருந்ததாகச் சொன்னார்கள். 44 பேர்கள் தங்கள் நண்பர்களால் ஏமாற்றப்பட்டதாகச் சொன்னார் கள். இந்த ஆராய்ச்சியிலிருந்து குற்றவாளிப் பிள்ளைகள் சக்தியும். திறமையும் உள்ள சிறிது அதிக வயதுடைய தோழர்களை நாடிச் சென்றார்கள் என்று தெரியவருகின்றது.

### பள்ளிச் சூழ்நிலை

வீட்டுச் சூழ்நிலை, வட்டாரச் சூழ்நிலைகளுக்கு அடுத்தபடியாகப் பள்ளிச் சூழ்நிலையும் குற்ற நடத்தைக்கு ஒரு முக்கியக் காரணமாகும். பள்ளிகளில் நடத்தப்படும் கல்வித் திட்டம் பெரும்பாலும் அறிவுக் கூர்மையுடைய பிள்ளைகளுக்கும் புத்தக அறிவியல் ஆர்வமுடைய பிள்ளைகளுக்கும் ஏற்புடையதாக இருக்கின்றது. புத்தகப் படிப்பில் அக்கறை இல்லாதவர்களும் அறிவு வளர்ச்சியில் ஆர்வம் இல்லாத வர்களுமே பொதுவாகக் குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றார்கள். பள்ளிக் கல்வியோ புத்தக அறிவுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. ஆகவே, புத்தகப் படிப்பில் ஆர்வமில்லாத இப்பிள்ளைகளின் திறமை யும், உணர்ச்சியும் வெளிப்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகின்றது. அவர்கள் பள்ளிப் பாடபோதனையைச் சிறிதும் விரும்புவதில்லை. பொதுவாக இந்த இளங்குற்றவாளிகள் பலமுறை தேர்ச்சியுறாமல் படிப்பில் மோசமாக இருப்பவர்கள். 261 இளங் குற்றவாளிகள்பற்றி செய்யப்பட்ட ஓர் ஆராய்ச்சியில் 44 சதவிகிதம் பேர்கள் தேர்ச்சியுறாமல் இருந்தவர்கள். இந்தப் பிள்ளைகளில் 60 சத விகிதம்பேர்கள் பள்ளியின்மேல் வெறுப்பு இருப்பதாகச்சொன்னார்கள். 34 சதவிகிதம் பேர்கள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்லாது பள்ளிக்கள்ளம் செய்பவர்கள். ஆனால், இந்த 261 இளங் குற்றவாளி களுக்கு ஒப்புமையாக எடுக்கப்பட்ட அதே எண்ணிக்கையுள்ள சாதா ரணமானவர்களில் 7 சதவிகிதம்தான் பள்ளிக்கு ஒழுங்காகச் செல் லாமலிருந்தார்கள். பள்ளிக்கூடத்துப் பாடத்திட்டம் புத்தகப் படிப்பில் ஆர்வம் இல்லாத இளங் குற்றவாளிகளுக்குச் சிறிதும் பொருத்தமில்லாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களை வலுக்கட்டாய மாக இத் திட்டத்தில் படிக்கச் சொல்லும்பொழுது, அதனால் அவர்க ளது குற்ற மனப்பான்மை அதிகமாகவே செய்கிறது. பள்ளியின் மேல் வெறுப்பும், அவர்களின் உணர்ச்சிகளுக்குத் தக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால் அவையெல்லாம் அடக்கப்பட்டுப் பின்னால் நெறிபிறழ்ந்த குற்ற நடத்தையில் செல்லுவதற்கு ஏதுவாகின்றது.

வறுமையான பொருளாதார நிலை, மோசமான வீட்டுச் சூழ்நிலை, மோசமான வட்டாரச் சூழ்நிலை முதலியன குற்ற நடத்தைக்குக் காரணமாக அமைகின்றன என்று பார்த்தோம். ஆனால், இவை மட்டுமே குற்ற நடத்தைக்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. சில சமயங்களில் உடற் குறைபாடுகள் காரணமாகவும் பிள்ளைகள் குற்றம் செய்வது உண்டு. இதற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறலாம்: 'க' 10 வயதுள்ள பெண்பிள்ளை. அவளுடைய தாய் காலமாகிவிட்டாள். அவளது மாற்றாந்தாய் அவளிடம் மிகவும் கொடுமையாக நடந்துகொள்வதாக அவள் சொன்னாள். அவளுடைய தந்தை ஒரு ரயில்வே தொழிலாளி. ஆண்டு வருமானம் 1,200 ரூபாய். அவளுக்கு நன்றாகப் பேச வராது. கொன்னித் திக்கி திக்கிதான் பேசுவாள். இந்தக் குறை காரணமாக அவள் மற்றப் பிள்ளைகளோடு அதிகமாகப் பழகுவதில்லை. பழகினால் மற்றப் பிள்ளைகள் அவள் பேசுவதைப் பார்த்துச் சிரிப்பார்கள் என்ற பயம். அதனால் அவள் விளையாடுவதும் கிடையாது. மேலும், அவளிடம் ஓர் ஆழ்ந்த தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிவிட்டது. அவளுடைய மாற்றாந்தாயின் கொடுமை காரணமாக அவளுடைய பிள்ளையின் மேல் இவளுக்கு வெறுப்பு உண்டாயிற்று. மாற்றாந்தாய் வெளியே சென்றிருக்கும் சமயத்தில் அவளது பிள்ளையை நன்றாக உதைத்து விடுவதும் உண்டு. இதற்காக மாற்றாந்தாய் இவளுக்குத் தண்டனை கொடுத்தபோது இவள் நச்சு விதைகள் சிலவற்றைத் தின்று தற்கொலை செய்துகொள்ளுவதற்கு முயற்சி செய்தாள். ஆனால், மூன்று முறை மாற்று மருந்து கொடுத்து அவளைப் பிழைக்க வைத்தார்கள். இதிலிருந்து உடற் குறைபாடுகளுக்கும் குற்ற நடத்தைக்கும் உள்ள தொடர்பு தெரியவருகிறது.

உடற் குறைபாடுமட்டும் அல்லாமல் காதல் தொடர்பு, பழி வாங்கவேண்டும் என்கிற உணர்ச்சி, அடக்க முடியாத பால் உணர்ச்சி, கட்சிப் போராட்டம், நகரத்தின் புதிய சூழ்நிலையில் சுகமாக வாழவேண்டும் என்கின்ற ஆசை முதலிய காரணங்களாலும் குற்றச் செயலில் இளம் பிள்ளைகள் ஈடுபடுவது உண்டு. ஓர் இளைஞன் அல்லது இளம்பெண் குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு இதுதான் காரணம் என்று ஒரு காரணத்தைமட்டும் பிரித்து எடுத்துக் கூறுவது கடினமான ஒன்று. பொதுவாகவே ஒரு காரணமின்றிப் பல காரணங்களின் சேர்க்கையாலேயே சிலரிடம் குற்ற நடத்தை உண்டாகின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

என்ன காரணங்கள் இருந்தபோதிலும் எல்லா இளங் குற்றவாளிகளும் குற்றம் செய்வதற்கு அவர்களது சமநிலை அல்லது உணர்ச்சி காரணமாக இருக்கின்றது என்று எல்லா ஆராய்ச்சியாளர்

களும் பொதுவாக ஒத்துக்கொள்ளுகின்றார்கள். எத்தகைய குற்றம் செய்தபோதிலும் சமநிலை அல்லது உணர்ச்சி அதற்குக் காரணமாக இருக்கின்றது. குமரப் பருவத்தில் உணர்ச்சிச் சமநிலை இன்மை ஏற்படுவது வழக்கம் என்பதை நாம் முன்னரே பார்த்திருக்கின்றோம். குமரப் பருவத்தில் முதல் பகுதியில்தான் இந்த உணர்ச்சிச் சமநிலை யின்மை தொடங்குகின்றது. ஆகவே, 13 வயதிலிருந்து 14 வயது வரை இளம் பிள்ளைகள் அதிகக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார் கள் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆனால், இதுபற்றி அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

## இளங் குற்றவாளிகளின் இயல்புகள்

குற்றம் செய்யும் பிள்ளைகளின் இயல்புகள் என்ன என்பதுபற்றி ஆராய்ச்சிகள் நடந்துள்ளன. இதுபற்றிப் பலவகையான கொள்கை கள் நிலவி வந்துள்ளன. ஒரு காலத்தில் குற்றம் செய்யும் பிள்ளை களின் உடல் அமைப்பே தனி வகையானது என்று கருதப்பட்டது. ஆனால், பின்னால் இது உண்மையன்று என்று நிருபிக்கப்பட்டது. குடும்ப மரபு காரணமாக மனவளர்ச்சி குன்றியிருத்தல் இளங் குற்ற வாளிகளிடம் காணப்பட்ட அம்சம் என்று கருதப்பட்டது. ஆனால், இதுவும் அவ்வளவு சரியன்று என்று கண்டுபிடிக்கப்பட்டது. இன் னும் சில பிள்ளைகளின் உடம்பினுள்ளே உள்ள நாளமில்லாச் சுரப்பி கள் போன்ற சில உறுப்புகள் சரியாக இயங்காமல் போவதால் பிள்ளை கள் நடத்தை கெட்டுவிடுகின்றனர் என்று கருதினார்கள். ஆனால், குற்ற நடத்தை இது காரணமாகவே ஏற்படுவதன்று என்பது தற் கால ஆராய்ச்சியில் இருந்து தெரியவரும்.

## நுண்ணறிவும் குற்ற நடத்தையும்

குற்றம் செய்யும் குழந்தைகள் பொதுவாக நுண்ணறிவு சிறிது குறைவாக உள்ளவர்கள் என்று பெரும்பாலும் கருதப்படுகின்றது. நுண்ணறிவு அதிகமாக உள்ள சிலரும் குற்றம் செய்யவே செய்கின் றார்கள். என்றாலும், குற்றம் செய்பவர்களின் நுண்ணறிவு ஈவுகளைச் சேர்த்து நாம் புள்ளியியல் முறைப்படி ஒரு வரைகோடு வரைந்தால் அது சாதாரண வரைகோடாக இருப்பதாகத் தெரியவருகின்றது. படம் 35-லிருந்து இதனைக் கண்டு கொள்ளலாம்.

1,731 பிள்ளைகள்பற்றிச் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முடிவுகள் இப் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி சராசரி 14 வய துள்ள பிள்ளைகளின் நுண்ணறிவு ஈவுகள் சராசரி 84. பெரும் பான்மையான அதாவது 62% பிள்ளைகள் சாதாரண நிலையில் இருந்

தார்கள்; அல்லது சாதாரண நிலைக்குச் சிறிது குறைவான நிலையில் இருந்தார்கள் என்று சொல்லலாம். 4% சிறப்பான திறமையுடைய வர்களாகவும், 2% மிகவும் திறமை அடைந்தவர்களாகவும், 11% சராசரிக்குக் கீழான நிலையில் உள்ளவர்களாகவும், 21% முற்றிலும் மந்தமானவர்களாகவும் இருந்தார்கள். நுண்ணறிவுக் குறைவிற்கும், குற்ற நடத்தைக்கும் ஓரளவு தொடர்புள்ளது என்றே சொல்லலாம். ஆனால், நுண்ணறிவு மிகுதியாகவுள்ள பிள்ளைகளும் பலதரப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.




குற்ற நடத்தைகொண்ட குழுவிலுள்ளோரது நுண்ணறிவு ஈவின் பகிர்வு

படம் 35

இவ்வாராய்ச்சியில் இருந்து இன்னொன்றும் தெரியவருகின்றது. பொதுவாகக் குற்றம் செய்யும் பிள்ளைகள் கல்வித்தரத்தில் சிறிது பின்தங்கியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது மனவயது ஓர் ஆண்டுக்குக் குறைவாகவும், கல்வி வயது 3 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் இருப்பதாகச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். 152 பிள்ளைகள்பற்றி ஒருவர் ஆராய்ச்சி செய்ததில் கல்வித்தரத்தில் 2·8 ஆண்டிலிருந்து 5·5 ஆண்டுவரை குற்றம்செய்யும் பிள்ளைகள் தங்கியிருந்ததாகத் தெரியவந்தது. அவர்கள் பொதுவாகப் பள்ளிக்கூடங்களில் பாடங்களைச் சரியாகக் கற்பதில்லை. இது காரணமாக ஆசிரியர்கள் கண்டிப்பாக இருக்கலாம். தண்டனை கொடுக்கலாம். இவ்வாறு செய்வது அவர்களது கல்வித்தரம் மேலும் குறைந்து போவதற்குக் காரணமாக இருக்கும். சாதாரணப் பள்ளிக்கூடங்களில் இவர்கள் படிக்காமல் இத்தகையவர்களுக்கு என்று தனியாகவுள்ள பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படித்தால் அவர்களது கல்வித்தரம் முன்னேறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். அங்குகூட இவர்களது மனப்பான்மை, இயற்கைத் திறமை முதலியவைகளுக்கேற்பக் கல்வி தரப்படவேண்டும். இளங் குற்றவாளிப் பிள்ளைகள் பொதுவாகவே

புத்தகக் கல்வி, உயர்ந்த சின்னங்களைப் பயன்படுத்திச் சிந்தித்தல், காரணகாரிய ஆராய்ச்சி முதலியவற்றிலெல்லாம் ஈடுபடுவதில்லை. புத்தகங்களைப் படிப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இருப்பதில்லை.

1,343 இளங் குற்றவாளிப் பிள்ளைகள்பற்றி அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து 61% பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை; பள்ளிக்கள்ளம் என்பது அவர்களுக்கு மிகச் சாதாரணமான ஒன்று என்று தெரியவந்தது. பொதுவாகவே இளங் குற்றவாளிகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்லுவது கிடையாது.

உணர்ச்சிச் சமநிலையின்மை

இளங் குற்றவாளிகள்பற்றி மேலைநாட்டிலும், இந்தியாவிலும் ஆராய்ச்சி செய்துள்ள அறிஞர்கள் எல்லோரும் ஒன்றை ஒருமித்துச் சொல்லுகிறார்கள். ஏதாவது குற்றம் செய்யும் பிள்ளைகள் உணர்ச்சியில் நிலையானவர்களாக இருப்பதில்லை என்பதே அந்த உண்மை. இத்தகைய உணர்ச்சிச் சமநிலையின்மைக்கு என்ன காரணம்? அவர்களது சமூகச் சூழ்நிலைக்கும், அல்லது வீட்டுச் சூழ்நிலைக்கும், அவர்களது சொந்த வாழ்க்கைக்கும் சரியான பொருத்தம் இல்லாமல் இருப்பதேயாகும். 1,343 பையன்கள்பற்றி மேலைநாட்டில் செய்த ஓர் ஆராய்ச்சியிலிருந்து 97% பேர்கள் உணர்ச்சிச் சமநிலை இல்லாதவர்களாக இருந்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. 83 சதவிகிதம் பள்ளி வாழ்க்கையில் இயைந்து வாழ முடியவில்லை. 77 சதவிகிதம் தங்கள் வீட்டு வாழ்க்கையில் இயைந்து வாழ முடியவில்லை. 143 இளங் குற்றவாளிகள்பற்றி செய்த மற்றோர் ஆராய்ச்சியில் இருந்து 131 பேர் அதாவது 92 சதவிகிதம்பேருக்கு வீட்டு உறவுகளில் உணர்ச்சிச் சமநிலையில்லை என்று தெரியவந்தது. அவர்களில் 53 சதவிகிதம்பேர் வீட்டில் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும், 45 சதவிகிதம் பிள்ளைகள் மிக்க மன அதிருப்தியுற்று வந்தவர்களென்றும், 62 சதவிகிதம்பேர் தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் என்றும், 43 சதவிகிதம்பேர் குடும்பத்திலுள்ள சச்சரவுகள் பற்றி மனம் குழம்பிப் பொய்யுரைப்பவர்கள் என்றும், 43 சதவிகிதம் பேர் தங்கள் சகோதர, சகோதரிகள்பால் பொருமையுற்றவர்கள் என்றும், 20 சதவிகிதம் பேருக்குக் குடும்ப வாழ்க்கை சம்பந்தமாக ஆழ்ந்த மனப்போராட்டம் இருந்தது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றும் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் இருந்து பார்த்தால் பொதுவாகவே குற்றம் செய்த பிள்ளைகளுடைய உணர்ச்சி வாழ்க்கை சரியாக அமையவில்லை என்று தெரிகின்றது. உணர்ச்சிக்குச் சரியான வெளியீடு இல்லாதபோது சமூக விரோதமான குற்ற நடத்தையில் அடக்கப்பட்ட உணர்ச்சி வெளிவருதில் வியப்பில்லை.

குற்றவாளியான 105 பிள்ளைகள்பற்றியும், குற்றவாளியல்லாத அவர்களுடைய சகோதரர்கள் 105 பேர்கள்பற்றியும் செய்த ஆராய்ச்சியில் இருந்து பல உண்மைகள் தெரியவருகின்றன. இவ்வாறு ஒப்புமைப்படுத்தி ஆராய்ச்சி செய்ததில் இருந்து ஒரே குடும்பச் சூழ்நிலையில் வாழ்கின்ற சகோதரப் பிள்ளைகளின் வேற்றுமைகள் தெளிவாகத் தெரியவருகின்றன. இதன் விவரங்களை இங்குள்ள படத்தில் காணலாம்.




குற்ற நடத்தை கொண்டோருக்கும் அவர்களது குற்ற நடத்தை இல்லாத உடன் பிறந்தோருக்கும் இடையேயுள்ள மாறுபட்ட பண்புகள்

A—எட்டு வயதிற்கு முன்னர் சுருக்குத் தசைக் கட்டுப்பாடின்மை
B—தீவிர நோய்
C—நடுக்கம் கொள்கின்ற பழக்கங்கள்
D—குறைந்த மதிப்பெண்கள்
E—பள்ளியை மிகவும் விரும்பாமை
F—ஊர் சுற்றுதல்
G—மிகவும் அதிகமாகச் செயலுறுதல்
H—உடன்பிறந்தாரைக் காட்டிலும் அதிகமாகச் செயலுறுதல்
I—குழுவுடன் இருக்கவேண்டும் என்று அதிக ஆசை
J—ஏற்றம்
K—தாழ்வு மனப்பான்மை

படம் 36

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர். தா. ஏ. சண்முகம் அவர்கள் 15 வயது நிலையிலுள்ள 40 பிள்ளைகளின் உணர்ச்சிச்

சமநிலைபற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். மற்ற வயது நிலையைச் சேர்ந்த 120 பிள்ளைகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்துள்ளார். பூப்பு நிலை எய்தியுள்ள 124 பிள்ளைகளைப்பற்றியும் பூப்புநிலை எய்தாத 96 பிள்ளைகளைப்பற்றியும் அவர் ஆராய்ச்சி செய்துள்ளார். இந்த ஆராய்ச்சியில் இருந்து வருகின்ற ஒரு முடிவு என்னவெனில், 15 வயதுப் பருவத்தினருக்கும் மற்றும் குமரப் பருவத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்குமே அதி உணர்வும், உணர்ச்சிச் சமநிலை யின்மையும் இருப்பதாகும். ஆகவே, குமரப் பருவத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பிற பருவங்களில் உள்ள பிள்ளைகளைவிடக் குற்றச் செயலில் அதிகமாக ஈடுபடுவதில் வியப்பில்லை.

### குற்ற நடத்தையும் பால் வேற்றுமையும்

பொதுவாகவே ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகள் அதிக ஒழுங்காக நடப்பவர்கள். ஆகவே, பெண்பிள்ளைகள் அதிகமாகக் குற்றம் செய்வதில்லை. அமெரிக்காவில் குழந்தைகள் நீதிமன்றத்துக்கு வருகின்ற குற்றங்களில் 77-லிருந்து 80 சதவிகிதம்வரைக்கும் ஆண்பிள்ளைகள் செய்கின்ற குற்றங்கள் ஆகும். ஆண்பிள்ளைகள் செய்யும் குற்றங்களுக்கும், பெண்பிள்ளைகள் செய்யும் குற்றங்களுக்கும் வேற்றுமைகள் உண்டு. திருடுதல், போக்கிரித்தனம் செய்தல் போன்றவை பொதுவாக ஆண்பிள்ளைகளே பெருவாரியாக ஈடுபடும் குற்றங்கள். பெண்பிள்ளைகளின் குற்றங்கள் பால்ஒழுக்கம் சம்பந்தமாக இருக்கும். பெண்பிள்ளைகள் திருடுவதும்உண்டு. ஆனால், அவர்கள் ஆண்பிள்ளைகளைப்போன்று அத்துணை அளவுக்குத்திருடுவதில்லை. பெண்பிள்ளைகள் திருடுவதற்கான முக்கியக் காரணம் நன்கு உடை அணிவதற்கும் தங்களை அலங்காரம் செய்வதற்குமான ஆசையாகத்தான் இருக்கும். ஆகவே, பெண்கள் கடைகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் சில சமயங்களில் அழகுப் பொருள்களைத் திருடுவார்கள். இவ்வாறு திருடுவதிலும் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. பெண்பிள்ளைகள் அந்தச் சமயத்தில் திடீரென்று ஏற்படும் உணர்ச்சி காரணமாகத் திருடுவார்கள்; ஆண்பிள்ளைகள் அவ்வாறு செய்வதில்லை.

### இளங் குற்றவாளிகளைச் சீர்திருத்துதல்

இளம் பிள்ளைகள் தவறான நடத்தையில் ஈடுபடுகின்ற ஆரம்பக் கட்டத்திலேயே நாம் அவர்களைத் திருத்த முயன்றால் எளிதில் சீர்திருத்தி விடலாம். நோய் முற்றிய பிறகு முயலுவதைவிட நோயின் ஆரம்பத்திலேயே நோய் என்று அறிந்து அதனை விலக்கிவிடுவது சாலச் சிறந்தது. பொதுவாகக் குற்றநடத்தை ஒரு பிள்ளையிடம் உறுதிப்பட்டுவிட்டால் அதனை மாற்றுவது எளிதன்று. ஒருமுறை தவறு செய்பவர்கள் தொடர்ந்து தவறு செய்யத்தான் செய்கிறார்கள்.

சிலர் அதிக முயற்சிக்குப் பிறகு சீர்திருந்துகின்றார்கள். 400 பிள்ளைகளுக்குச் சிகிச்சை செய்தபிறகு ஏற்பட்ட வெற்றி தோல்விகள்பற்றிக் கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம். இது குமரப் பருவத்து இளங் குற்றவாளிகளைப்பற்றியது.

| | மொத்தம் 400 |
|---|---|
| 1. எதிர்பார்த்த வேகத்தில் திருந்தியவர்கள் | 39 |
| 2. மெதுவாகத் திருந்தியவர்கள் ... | 174 |
| 3. பெரும்பாலும் திருந்தியபோதிலுங்கூட இன்னும் சில கஷ்டங்கள் தெரியாமல் இருப்பவர்கள் ... ... ... | 22 |
| 4. நடத்தை திருந்தியும் ஆளுமைபற்றிய பிரச்சினை தீராதவர்கள் ... ... | 30 |
| 5. சிறிது கஷ்டத்தோடு நடத்தை திருந்தியவர்கள் ... ... ... | 16 |
| 6. நல்ல முன்னேற்றமிருந்தும் பிரச்சினை இன்னும் தீரப்பெறாதவர்கள் ... | 24 |
| 7. நல்ல முன்னேற்றம் ஏற்பட்டும் மாற்ற முடியாத சில நடவடிக்கைகள் காரணமாகப் பிரச்சினை தீர்க்க முடியாத நிலையினர் ... ... ... | 16 |
| 8. பெரிய கஷ்டங்களுக்குப் பிறகு வெற்றி பெற்றோர் ... ... ... | 2 |
| மொத்த வெற்றி ... | 323 |
| 9. ஆளுமைபற்றிய சில சிக்கல்கள் இன்னும் உள்ளவர்கள் ... ... ... | 3 |
| 10. முதலில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுப் புதிய குற்ற நடத்தை காரணமாகத் தோல்வியடைந்தவர்கள் ... ... | 9 |
| 11. அநேகமாகத் தோல்வி நிலையினர் ... | 30 |
| 12. பெரும்பாலும் தோல்வி நிலையினர் ... | 35 |
| மொத்தத் தோல்வி ... | 77 |

மேற்கண்ட அட்டவணையைப் பார்க்கும்பொழுது பெரும்பாலும் நல்ல வெற்றி கிடைத்திருப்பது தெரிகின்றது. இளம் பிள்ளைகள் குற்ற நடத்தையில் ஈடுபடுகின்ற ஆரம்ப நிலையிலேயே இதனை உணர்ந்து அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசையும் ஆதரவும் செய்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவ்வளவு கஷ்டம் ஒன்றும் இல்லை.

குற்ற நடத்தை உறுதிப்பட்ட பிறகு பையன்களைத் திருத்துவது கஷ்டமான காரியம் என்று பார்த்தோம். இத்தகையவர்களைச் சீர் திருத்த நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் முதற்படி அவர்களைப் பற்றிய முழு விவரமும் சேகரிப்பதாகும். இவற்றை வைத்துக் கொண்டுதான் ஆராய்ச்சி செய்யவேண்டும். இத்தகைய ஆராய்ச்சியைத் தனியாளாராய்ச்சி (case study) என்று சொல்லுவதுண்டு. குற்ற நடத்தைபற்றி ஆராய்ச்சி செய்த ஒரு பல்கலைக் கழக ஆசிரியர் பின்வரும் தனியாள் ஆராய்ச்சியைச் செய்திருக்கின்றார். அது எடுத்துக்காட்டாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மாஸ்டர் ஃபாக்ஸ் வயது 16 ஆண்டுகள் 5 மாதங்கள். உயரம் 5 அடி 1 அங்., எடை 84 பவுண்டு.

*வீட்டுச் சூழ்நிலை :* தந்தைக்கும், தாய்க்கும் இடையே நல்லுறவு இல்லை. தந்தை தனக்கு உண்மையாக நடந்துகொள்ளவில்லை என்று தாய் நினைக்கிறாள். மூத்த மகள்பால் தந்தை அதிகப் பற்றுக் கொண்டிருக்கிறார் என்று தாய் ஐயுறுகிறார். தந்தை ஒரு பஸ் டிரைவர். மாதம் ரூ. 110 சம்பளம், அருகிலுள்ள செல்வர் வீட்டில் தாய் பாதிநேர வேலை செய்கிறாள். அதிலிருந்துவரும் ஊதியம் ஓரளவுக்கு வீட்டிற்கு உதவியாக இருக்கிறது. தந்தைக்குக் குடிப் பழக்கம் உண்டு. அடிக்கடி வீட்டிற்கு வரும்பொழுது நள்ளிரவிற்கு மேல் ஆகிவிடும். நெருக்கம் மிகுந்த குறுகலான ஒரு சந்தில் வீடு அமைந்துள்ளது. வீட்டு வாடகை மாதம் ரூ. 10. இது கூரை வீடு. இதில் இரண்டு அறைகள்; ஒரு சமயலறை, ஒரு வராந்தா. வீட்டில் நான்கு குழந்தைகள்; மூத்தது 18 வயதுள்ள பெண் குழந்தை, இரண்டாவது மாஸ்டர் ஃபாக்ஸ், மூன்றாவது ஒரு நொண்டிப் பெண் குழந்தை, நான்காவது நல்ல அழகுள்ள ஒரு பையன் தாய்க்குப் பிரியமான செல்லப்பிள்ளை.

*குடும்ப வரலாறு :* 5ஆவது வகுப்புவரை தந்தை படித்தவர். தாய்க்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவளுக்குப் பிரியமாக இருந்த ஒருவரை அவள் திருமணம் செய்துகொள்வதாக இருந்தது. ஆனால், அது நடக்கவில்லை. தமது இளமைப் பருவத்தில் ஒரு பெண்ணை பலவந்தம் செய்ததற்காகத் தந்தைக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை கிடைத்தது. பஸ் ஓட்டுவதில் அளவுக்குமீறி வேகமாகச் சென்றதற்காக ஒருமுறை அபராதம் விதிக்கப்பட்டது. மிக்க அவசரபுத்தியும் வேகமும் உடையவர். தம் மனைவி, குழந்தைகள் பால் கடுமையாக நடந்துகொள்பவர். தம்மிடம் பணம் இருக்கும் பொழுது எல்லாம் அவர்களுக்கு அவர் தாராளமாகக் கொடுத்து விடுவார். இரண்டாண்டுகள் வேலையில்லாது இருந்தார். பின்னால் இராணுவத்தில் சேர்ந்து கடைசியில் அங்கிருந்து வெளியே

வந்தார். தாய்க்கு உடல்நலம் சரியாக இல்லை. அடிக்கடி எரிச்சல் உண்டாகும். கடைசிப் பையன்மீதுதான் அவளுக்குப் பிரியம் அதிகம். தனது கணவனுக்கு எப்பொழுதும் தொந்தரவு கொடுத்துக்கொண்டே யிருப்பாள். கள்ள நாணயங்கள் செய்த தற்காக அவருடைய சகோதரர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மாஸ்டர் ஃபாக்ஸினுடைய தகப்பனார் சின்னம்மை காரணமாக இறந்துபோனார்.

பையனுடைய வாழ்க்கையும் மனப்பான்மையும் : மாஸ்டர் ஃபாக்ஸ் தனது 7ஆவது வயதில் பள்ளிக்கூடம் சேர்ந்தான். 'பி' என்ற நகரத்தில் மதுபானக்கடை வைத்துக்கொண்டு இருந்த தனது பாட்டியிடம் அவன் ஓடிப்போய்விட்டான். ஒன்பது மாதங்கள் கழித்து அவன் மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டான். அவன் நான்காவது வகுப்புக்குவர ஆறுண்டுகள் ஆயின. அடிக் கடி அவன் வகுப்பிற்குச் செல்வதில்லை. பிற்பகல் வகுப்புகளுக்கு மட்டம் போட்டுவிடுவான். தெருக்களில் சுற்றிக்கொண்டிருப்பான். அடிக்கடி சினிமாவுக்குப் போவான். மற்றப் பிள்ளைகளின், புத்தகங் களையும் பணத்தையும் அவன் திருடுவான். தனது வீட்டிலிருந்தும் அவன் திருடுவான். சில சமயங்களில் அவனைப் பிடித்துத் தண்டனை கொடுப்பார்கள். அவனுடைய தாய் இதற்கு ஆசிரியர்மேல் குற்றம் சாட்டினாள். மாஸ்டர் ஃபாக்ஸ் சில சமயங்களில் மகிழ்ச்சியாக இருப் பான். ஆனால், பெரும்பாலான சமயங்களில் எரிச்சலோடும் பரபரப் போடும் இருப்பான். தான் நினைத்தபடி செய்யவேண்டும் என்ற பிடிவாத குணமுண்டு. அவனுக்கு நல்ல உடல்நலமும், உடல் உறு தியும் உண்டு. பாலுணர்ச்சி அவனிடம் தீவிரமாக இருந்தது. வீட் டில் பெரிய பிள்ளைகளோடு அவன் கெட்ட ஒழுக்கத்தில் ஈடுபட்டான் என்ற காரணத்திற்காக ஆசிரியர் அவனுக்கு இரண்டுமுறை தண்டனை கொடுத்தார். வீட்டிலிருந்து பணமும் பேனாவும் திருடி னான். தன் அக்காவிடம் அவன் கடுமையாக நடந்துகொண்டான். அவனுடைய தம்பியினுடைய விளையாட்டுச் சாமான்களை எல்லாம் திருடிக்கொண்டு 'பி' நகரத்துக்கு ஓடிவிட்டான். அங்கே போலீசார் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். பின்னால் இளங்குற்றவாளிகளுக் கான பயிற்சி நிலையத்திற்கு அவனை அனுப்பினார்கள். 18 மாதங் களுக்குப் பிறகு அவனுடைய தாய் அவனை அங்கிருந்து பிரொ பிஷனில் வெளியே கொண்டுவந்தாள். அப்பொழுது அவனுக்குத் தாசியோடு தொடர்பு உண்டாயிற்று, அவனுடைய அக்காளைப் பற்றி அவன் தவருகப் பேசியதற்காக அவனுடைய தந்தை அவனை நன்ருக அடித்தார். உணர்ச்சி வேகத்தில் அவன் தன்னுடைய அப்பாவின் டிரைவிங் லைசென்ஸ் சர்டிபிகேட்டில் உள்ள படத்தைக் கிழித்துவிட்டான். தந்தைக்கு வேகமான உணர்ச்சி வரவே அவனை

வீட்டிலிருந்து வெளியே தள்ளிவிட்டார். 'பி' நகரத்திலுள்ள அவனுடைய பாட்டி வீட்டிற்கு ஓடினன். இப்பொழுது மதுவிலக்குச் சட்டம் இருந்த காரணத்தால் அவனுக்கு வேலையில்லாமலிருந்தது. மாஸ்டர் ஃபாக்ஸ் சட்டவிரோதமாக ஒரு வீட்டிற்கு மதுபானம் எடுத்துச் சென்றான். அப்பொழுது அவன் கைது செய்யப்பட்டு மறுபடியும் இரண்டாவது முறையாக இளங் குற்றவாளிகள் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டான்.

மாஸ்டர் ஃபாக்ஸினுடைய குடும்பம் மிகவும் ஏழ்மையானது என்று சொல்லுவதற்கில்லை. தந்தைக்கு வருகின்ற 110 ரூபாய், தாய்க்கு வருகின்ற சிறு ஊதியம் இவற்றை வைத்துக்கொண்டு ஆறு பேர் உள்ள அக் குடும்பம் ஓரளவுக்கு நல்ல முறையில் வாழ முடியும். ஒரு வாரத்தில் தலைக்கு $4\frac{1}{2}$ ரூபாய் கிடைக்கின்றது. வீட்டிலுள்ள இடவசதி அவ்வளவு நன்றாக இல்லை. ஆனால், இவற்றிற்கு எல்லாம் மேலாகக் குடிப்பழக்கமும் தந்தையினுடைய கடுமையின் வேகம் நிறைந்த மனப்பான்மையும் காரணமாகக் குடும்பத்திற்கே கேடு உண்டாயிற்று. அவருக்குப் பணம் கிடைத்தபோதெல்லாம் தாராளமாகக் கொடுத்தார். ஆனால், மூத்த பெண்ணின்பால் அவருக்கு இருந்த அன்பும், தாயோடு சேர்ந்திருந்த பையனை அவர் கடுமையாக நடத்தியதும் வீட்டில் எப்பொழுதும் அமைதியின்மையும், கவலையும் இருப்பதற்குக் காரணமாக இருந்தன. பையன் அடிக்கடி தனது தாயின் பக்கமாக இருப்பான். தாய் அவனைத் திருடுதல், பால்வழி கெட்ட நடத்தை முதலிய குற்றங்களுக்காகத் தண்டித்த ஆசிரியரின்பால் கோபம்கொண்டு பையனுக்கு ஆதரவாக இருந்தாள். குற்றம் உண்மையில்லை என்று அவனும் தாயும் சொன்னார்கள். தாய் இவ்வாறு பையனுக்கு அளவுக்கு அதிகமான பாதுகாப்பு அளித்தது அவனிடமிருந்த குற்ற நடத்தையை ஊக்குவதாக அமைந்தது. அந்தப் பையனுடைய பாட்டியும் அவன் கெட்டுப்போவதற்குக் காரணமாக இருந்தாள். அவனுக்கு 8 வயதாக இருந்தபொழுது அவனைப் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் அவள் தடுத்துவிட்டாள். மேலும், பின்னல் தந்தையினுடைய ஆத்திரத்தில் இருந்து தப்பித்துக் கொண்டு வந்தபொழுது அவள் அவனைக் கள்ளத்தனமாக மதுபானம் விற்பதற்குப் பயன்படுத்திக்கொண்டாள். தாசி ஒருத்தியுடன் இந்தப் பையனுக்கு இருந்த தொடர்பு பெற்றோர்களுக்குத் தெரியாதது அல்ல. ஒன்று, பையனின்மேல் அவர்களுக்குச் சிறிதும் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தது; அல்லது, இதனல் ஏற்படும் கெடுதிபற்றி அவர்கள் பெரிதாகக் கருதவில்லை. ஊரைச் சுற்றித் திரிவதும் விரும்பத்தகாத தோழர்களோடு பழகுவதும், பையன் பல கெட்ட பழக்கங்களைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது. நன்னடத்தை அலுவலரின் (Probation Officer) அறிக்கையில் இந்தப்

பையன் வழக்கமாக மிக அபரிமிதமாகப் பொய் சொல்லக்கூடியவன் என்றும், பொய்களின் மூட்டை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் ‘இந்தப் பையனிடம் ஒரு நல்ல அம்சங்கூட என்னால் காணமுடியவில்லை’ என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தக் குற்ற நடத்தை மிகைப்படுத்தியதாக இருக்கலாம். வீட்டில் எப்பொழுதும் சண்டைகளும், கெட்ட பழக்கங்களும், நம்பிக்கையின்மையும், கட்டுப்பாடின்மையும் இருந்ததால் கொஞ்சமும் அமைதியில்லை. இந்தச் சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டான் பையன். இவனது பிறழ்வான நடத்தை அவனது சிறுபிள்ளை வயது முதற்கொண்டே தொடங்க ஆரம்பித்தது. தாய்க்கு முதலில் ஒருவர்மேல் காதல்தொடர்பு இருந்தது. இப்பொழுதுள்ள கணவர் இரண்டாவதாக வந்து சேர்ந்தவர். சண்டை வந்துவிட்டால் தந்தை அவள் தனக்கு உண்மையாக இருக்கவில்லை என்று குற்றம் சாட்டுவார். இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் அவளுடைய முதல் நண்பர் சில சமயங்களில் வந்துபோவது ஆகும். அவர் திருமணம் செய்துகொண்டு அருகிலுள்ள ஒரு வீட்டில் வாழ்ந்துவந்தார். தாய் தந்தை இருவருக்கும் உள்ள இந்த நம்பிக்கையின்மையும், அது காரணமாக அடிக்கடி உண்டாகும் சண்டை சச்சரவுகளும் இந்தக் குழந்தையைக் கட்டாயம் பாதித்து இருக்கவேண்டும். அதன் உணர்ச்சித் தடுப்பையும் பாதித்திருக்கவேண்டும். வீட்டில் அவன் பார்த்ததும், கேட்டதும், அவனது மனத்தைத் தீர்வுபடுத்தி இருக்கவேண்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி அல்லது புத்தாக்க உணர்ச்சி அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. தந்தைக்குத் தன்னுடைய அக்காள்பால் விருப்பமும், தன்னிடம் விருப்பமின்மையும் இருப்பதை அவ்வன் கண்டான். அவனுக்கு விளையாட்டுச் சாமான்கள் கொடுக்கப்பட்டன. இது அவனுக்குப் பிடிக்கவில்லை. தன் சிறிய தம்பியோ, அம்மாவின் அன்பையெல்லாம் கவர்ந்து கொண்டுவிட்டான். இந்தப் பொறாமை உணர்ச்சி அவனை அறியாமலேயே கற்பனையைத் தூண்டி அவன் உள்ளத்தில் தனது வெற்றிக்கு எதிராகவும், தனது ஒழுக்கத்திற்கு எதிராகவும், விருப்ப உணர்ச்சியை உண்டாக்கிவிட்டது. தன்னுடைய தேவைகளையும், உந்துதல்களையும் குடும்பமோ, சமூகமோ தெரிந்துகொண்டு அவை பூர்த்தியாக ஒன்றும் செய்யவில்லை. தகப்பனுடைய படத்தை எடுத்து அவன் கிழித்து எறிந்தது தன்னுடைய தகப்பனாரைச் சின்னபூர்வமாகக் கொன்று கிழிப்பதாகும். பெரிய வயதுவந்த ஒழுக்கமில்லாத கெட்ட இளைஞர்களுடன் அவன் பழகியது தன் தகப்பனுக்குப் பதிலாகத் தேடிக்கொண்ட ஒரு குற்றமாகும். ஆசிரியர் தகப்பனுக்குப் பதிலாக ஒரு கூற்றாக அமையாததும் இதற்கு ஒரு காரணம். இந்தப் பெரிய இளைஞர்களுடைய கெட்ட வழிகளையெல்லாம் தெரிந்துகொண்ட பிறகு, தன்னுடைய

குடும்பத்திலேயே இருக்கின்ற நிலைமையையும் தெரிந்தபிறகு அவன் அடுத்து ஒரு நாசியிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டதில் ஆச்சரியமில்லை.

உடன் பிறந்தவர்கள்பால் பொறாமை காரணமாகத்தான் அவன் வீட்டில் தன் சகோதரியின் மோதிரங்கள், விளையாட்டுச் சாமான்களைத் திருடிக்கொண்டு வெளியே ஓடிவிட்டான். பொறாமை காரணமே தவிர, பசி காரணமன்று. ஏனென்றால், அவனுடைய வீட்டில் உண்ணுவதற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இல்லாமலில்லை. அவனுடைய சிறிய தம்பியின்பால் அவனுக்கு அன்பு இல்லை. காரணம் அவன் தன்னுடைய தாயின் அன்பையெல்லாம் கவர்ந்துகொண்டு அவள் கவனத்தைத் தன்னிடமிருந்து மாற்றிவிட்டான். தாய் சில சமயங்களில் அதிகப் பாதுகாப்பு அளித்து மாஸ்டர் ஃபாக்ஸுக்கு ஆதரவாக இருந்ததும், அவனது தந்தை அவனை ஈவு இரக்கமில்லாது அடித்ததும் சேர்ந்து தந்தையின்பால் அவனுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியைப் பெரிதும் வளர்த்துவிட்டது. மேலும், எரிச்சல் மனப்பான்மையுள்ள தாய் தந்தையரிடமிருந்து அந்தத் தன்மையைப் பாரம்பரிய வழியாக அவன் பற்றியிருக்கலாம். வீட்டிலுள்ள சூழ்நிலை இந்த எரிச்சல் மனப்பான்மையைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே வளர்த்துவிட்டு இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், உடல் நலமும், சக்தியும் உள்ள பையனுக்கு அவை நல்ல முறையில் வளருவதற்கான வாய்ப்பில்லாமல் போய்விட்டது. வீட்டில் இந்த வாய்ப்பு இல்லை. ஆகவே, அவன் வெளியே எட்டிப்பார்க்காமல் ஒரு வாய்ப்பினைத் தேடிக்கொண்டான். ஆனால், இது அவ்வளவு நல்ல வாய்ப்பாக இல்லாமல் அவனைக் குற்றவாளியாக மாற்றி, இறுதியில் சட்டத்துக்கு விரோதமான நிலைக்குக் கொண்டுவந்து சிறையில் தள்ளியது.

அவன் முதல் முறையாகச் ‘சீனியர் சர்டிபிகேட் ஸ்கூலு’க்குச் சென்று வெளியே வந்தபொழுது தனது வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது என்ற நல்ல எண்ணத்தோடுதான் வந்தான். ஆனால், அவனது வீட்டுச் சூழ்நிலை அதற்கு உதவவில்லை. அச் சூழ்நிலையினுடைய தன்மை அவனை மறுபடியும் தீய வழிகளில் செல்லவிட்டு இன்னும் அதிகமாகக் கெட்டுப்போகக் காரணமாகிவிட்டது.

மாஸ்டர் ஃபாக்ஸுக்கு ஒரு படம் கொடுக்கப்பட்டது. அந்தப் படத்தைப் பார்த்து அவன் எழுதியிருப்பது, அவனது குழந்தைப் பருவ வாழ்க்கையை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. அப் படத்தில் ஒரு தந்தை, அவன் அருகில் மகன், இன்னொரு பையன், சிறிது தூரத்தில் சோகமாய் இருக்கும் தாய் ஆகியன காட்டப்பட்

டிருந்தன. படத்தைப் பார்த்து மாஸ்டர் ஃபாக்ஸ் எழுதியது பின் வருமாறு:

"இது ஒரு குடும்பம். தகப்பனுர், தாயார், பிள்ளைகள். தகப்பனுர் பெண்பிள்ளையை நேசிக்கிருர். பையனை வெறுக்கிருர். அதைப் பார்த்துத் தாயார் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிருர். தகப்பனுர் தங்கைக்கு ஏதோ ஒரு விளையாட்டுச் சாமான் வாங்கி வந்திருக்கிருர். மகன் கோபித்து அப்பாவிடம் அவனைப் பிடித்து நிறுத்துகிருர். தங்கை அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிருள். அவனுடைய முகம் துக்க காரணத்தை தெரிவிப்பதுபோலத் தெரிகிறது. 'இவர்கள் ஒற்றுமையுடன் இருக்கமாட்டார்களா' என்று அம்மா நினைக்கிருர். அம்மாவின் முகத்திலும் விசனக்குறி காணப்படுகிறது. தகப்பனுர் பெண்ணை உற்று நோக்கிப் பார்க்கிருர். தங்கை அண்ணனை மன முருகிப் பார்க்கிருள்."

மற்ருென்று: தாயாருக்கு ஒரு பெண், ஒரு ஆண்பிள்ளை. பையன் கெட்ட சிநேகிதர்களுடன் சேர்ந்து பலவிதக் குற்றங்களைச் செய்து போலீஸ்காரரிடம் பிடிபடுகிருன். அவனுடைய தங்கை அவனைப் பார்த்து அலறிக்கொண்டு துக்கத்தோடு பார்ப்பதுபோல வும், அச் செய்தி அம்மாவுக்குத் தெரிந்ததும், 'நாம் கஷ்டப்பட்டு வளர்த்த பிள்ளை கெட்ட சிநேகிதர்களோடு சேர்ந்து போலீஸ்கார ரிடம் பிடிபட்டுத் தண்டனை அடையப்போகிருன்' என்று விசனப் படுகிருர்.

சிரில் பர்ட் இளங் குற்றவாளிகளைப்பற்றிப் பின்வரும் முறையில் ஆராயலாம் என்று கூறியிருக்கிருர்:

1. குற்றவாளியின் தற்கால நிலை

    அவனது குற்றம்
    அவனது ஆளுமை
    அவனது சூழ்நிலை

2. அவனது கடந்தகால வரலாறு

3. அவனது எதிர்கால முன்னேற்றம்

இன்னும் விரிவாக இளங் குற்றவாளிகளைப்பற்றி விவரங்கள் வைப்பதற்கு பர்ட் ஒரு விவரப் படிவம் தயார் செய்துள்ளார். அந்தப் படிவத்தில் முக்கியத் தலைப்புகள் உள்ளன.

1. பெயர்
2. வயது
3. பள்ளிக்கூடம்
4. முகவரி
5. இப் பையனை ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டவர்
6. குற்றவாளிபற்றிச் செய்தி தெரிவிப்பவர்கள்.

7. புகார்கள் அல்லது குற்றங்கள்
8. குடும்ப நிலைமைகள்
9. குடும்ப வரலாறு
10. உடல், உளவியல் வரலாறு
11. தற்கால உடல்நிலை
12. நுண்ணறிவு
13. சிறப்பான திறமைகள் அல்லது குறைகள்
14. பள்ளியில் கல்விச் சாதனைகள்
15. தொழில்
16. பொழுதுபோக்கும் ஓய்வு நேரமும்
17. உணர்வு நிலையும் குண நலனும்
18. வாழ்க்கை வரலாறு
19. குற்றங்களின் வரலாறு
20. குழந்தை தானே சொல்லுவது

மேற்கண்ட படிவத்தில் விவரங்களைச் சேர்த்து எழுதுவதற்குச் சிறிது கேள்விகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம். அத்தகைய கேள்விகளைப் பொதுவாகவும், குறிப்பிட்ட குற்றங்களாகவும் தயார் செய்துகொள்ளலாம்.

தமிழ் நாட்டில் இளங் குற்றவாளிகளைக் கவனிப்பதற்காக அரசாங்க ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு நன்னடத்தை அலுவலர் (Probation Officer) என்று பெயர். குற்றவாளிப் பிள்ளைகளைக் கவனித்து அவர்கள் சீர்திருந்துவதற்குத் தக்க உதவி செய்வார் இவர். குற்றவாளிப் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காகச் சீர்திருத்தப் பள்ளிகளும் உள்ளன. சீர்திருத்தப் பள்ளிப் பயிற்சி முடிந்தபிறகும் வெளியே வருகின்ற பிள்ளைகளை நன்னடத்தை அலுவலர் குறிப்பாகக் கவனிப்பார்கள். குற்ற விசாரணையின்போதும், சீர்திருத்தப் பயிற்சியின் போதும், பயிற்சிக்குப் பின்னும் நன்னடத்தை அலுவலர் இளங் குற்றவாளிகளைக் கவனிப்பார்கள்.

இளங் குற்றவாளிகளைப்பற்றிய விவரங்கள் சேகரிப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் பின்கண்ட படிவம் பயன்படுத்தப்படுகின்றது :

1. பெயர்
2. வேலை
3. பால்
4. வயது
5. ஜாதி
6. உடல் அமைப்பு

7. நுண்ணறிவு
8. பழக்கங்கள்
9. கல்வி
10. தொழில்
11. தீய நண்பர்கள்
12. குடும்ப நிலை
13. தாய், மாற்றுந்தாய்
தகப்பனார்
உடன் பிறந்தவர்கள்:
அண்ணன்மார்
தமக்கையர்
தம்பியர்
தங்கையர்
14. மற்றச் சுற்றத்தாரின் கூற்று
15. பெற்றோர் கூற்று
16. அக்கம்பக்கத்தார் கூற்று
17. இப்பொழுதைய குற்றம்
18. குற்றமும் செய்த சூழ்நிலையும்
19. குற்றவாளியின் கூற்று
20. குற்றவாளியாக மாறியதற்கான சூழ்நிலை

இளங் குற்றவாளிகள்பற்றி ஆராய்ச்சி செய்யும்பொழுதும் சிகிச்சை செய்யும்பொழுதும் நாம் எப்பொழுதும் 'ஏன் இவன் செய்தான்' என்ற கேள்வியைக் கேட்கவேண்டும். குழந்தையின்பால் விருப்பு வெறுப்புக் கொள்ளாது 'ஏன் எதற்காக இத்தகைய குற்ற நடத்தையில் ஈடுபட்டான்' என்று காரணகாரியமாக ஆராய்ச்சி செய்தால்தான் உண்மை விளங்கும்; இவ் வுண்மையில் இருந்து அவன் சீர்திருந்துவதற்கான அக முயற்சியில் நாம் ஈடுபட முடியும். நம்முடைய நாடு இயந்திரத் தொழில்மயமாக ஆக இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாகத்தான் செய்யும். இளங் குற்றவாளிகள் ஏற்பட்ட பிறகு அவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும், அவர்களுக்குச் சிகிச்சை செய்யவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் குற்றங்கள் செய்வதற்குச் சாதகமாகவுள்ள சூழ்நிலையைத் திருத்துவதே அறிவுடைமையாகும். வருமுன் காப்பதே நல்லது.

# 9. மனநலம்

## மனநலத்தின் பொருள்

உடல்நலம்பற்றியும் அதன் முக்கியத்துவம்பற்றியும் பொதுவாக எல்லோருக்கும் தெரியும்; உடல்நலம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு உளநலமும் முக்கியமாகும். கடந்த 40, 50 ஆண்டுகளாக உளநலம்பற்றி ஏராளமான ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. உளநலத்தின் இயல்பு, உளநலத்துக்குத் தடையாக உள்ள ஏதுக்கள், உளநலத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகள் முதலியனபற்றியது 'உளநலவியல்'. உளநலவியலின் நோக்கம்பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: 'மனநோய் வந்தபிறகு சிகிச்சை செய்வதைவிட அது வராதிருக்கச் செய்வது நல்லது. மனநோய் வராதிருக்கவும் அதற்கும்மேலாகச் சிறந்த உணர்ச்சி நலம் உண்டாகவும் உதவுவதே உளநலவியலின் முக்கிய நோக்கமாகும்.'

சிறு குழந்தைப் பருவத்திலேயே உள்ளத்தில் உணர்ச்சிப் போராட்டங்கள் ஏற்படுவது உண்டு. இத்தகைய போராட்டம் காரணமாக உள்ளத்தில் அமைதியின்மையும் சஞ்சலமும் உண்டாகும். குழந்தைப் பருவத்திலுள்ள போராட்டம் முழுவதும் நீக்கப்படாவிட்டால் அது தொடர்ந்து குமரப் பருவத்திலும் அடிமனத்தில் இருந்துகொண்டு குமரப் பருவத்துப் பிள்ளைகளின் உணர்ச்சி வாழ்க்கையைப் பாதிக்கும். பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டார்கள். வகுப்பு அறையில் தவறாக நடந்துகொள்ளுவார்கள். பள்ளிக்கள்ளமும் ஒழுங்கின்மையும் உண்டாவதற்கு அடிப்படைக் காரணம் பெரும்பாலும் பிள்ளைகளின் உளநலமின்மையே!

## பள்ளிக்கள்ளம்

பள்ளிக்கள்ளம்பற்றியும் வகுப்பில் ஒழுங்கின்மைபற்றியும் மியூலன் (Mullen) என்பவர் ஆராய்ச்சி செய்துள்ளார். பள்ளிக்கள்ளத்தில் ஈடுபட்ட மாணவர்கள் குழு ஒன்றுபற்றி ஆராய்ந்து என்னென்ன காரணங்களால் அது உண்டாகின்றது என்பதுபற்றிச் சில முக்கிய விவரங்களைக் கண்டுபிடித்திருக்கின்றார். அதுபோலவே வகுப்பில் ஒழுங்கின்மையாக இருக்கும் மாணவர்கள் குழு ஒன்றுபற்றி ஆராய்ந்து என்னென்ன காரணங்களால் அது உண்டாகின்றது

என்பதுபற்றிச் சில விவரங்கள் கண்டுபிடித்திருக்கின்றூர். இவ் விரண்டுக்கும் பொதுவான காரணங்கள் பல உள்ளன. அவற்றின் விவரத்தைக் கீழேயுள்ள அட்டவணையில் பார்க்கலாம் :

இரண்டு குமரப் பருவத்துக் குழுக்கள்பற்றிய விபரம்

| காரணங்கள் | பள்ளிக் கள்ளம் (சதகிவிதம்) | வகுப்பில் ஒழுங்கின்மை (சதவிகிதம்) |
|---|---|---|
| **கல்வி தொடர்பான காரணங்கள்** | | |
| ஒரே வகுப்பில் தொடர்ந்து படித்தல் ... ... | 53.0 | 55.0 |
| பள்ளிக்கு ஒழுங்காகச் செல்வதில் தடைகள் ... ... | 26.7 | 19.9 |
| படிக்கும் திறமையின்மை ... | 9.8 | 20.3 |
| வகுப்பில் சராசரி வயதைவிட ஓர் ஆண்டுக்குமேல் அதிக வயதாகி இருத்தல் ... ... | 35.4 | 42.4 |
| **உடம்புபற்றிய காரணங்கள்** | | |
| பல் நோய்கள் ... ... | 43.4 | 35.3 |
| கண்பார்வைக் குறைகள் ... | 34.9 | 29.4 |
| காது, மூக்கு, தொண்டையின் நிலை | 17.8 | 16.0 |
| போதிய ஊட்டமின்மை ... | 8.6 | 10.0 |
| **ஆளுமைபற்றிய காரணங்கள்** | | |
| மோசமான வேலைப் பழக்கங்கள் ... | 25.1 | 51.9 |
| தன்னம்பிக்கையின்மை ... | 19.6 | 13.4 |
| பதட்டம், அதிகமான படபடப்பு ... | 7.6 | 19.5 |
| தாக்குகின்ற சமூக விரோதமான நடத்தை ... ... | 5 0 | 27.7 |
| கவனத்தை ஈர்க்கும் முறைகள் ... | 3.6 | 19.0 |
| பொய் சொல்லும் பழக்கங்கள், | 9.7 | 4.8 |
| திருட்டு பிறரிடமிருந்து எப் பொழுதும் ஒதுங்கி இருத்தல் ... | 5.6 | 4.8 |
| சண்டித்தனம் ... | 1.8 | 6.1 |
| **குடும்பம்பற்றிய காரணங்கள்** | | |
| சிதைந்த குடும்பம் ... | 48.5 | 37.7 |
| மாற்றுந்தாய், மாற்றுந் தந்தை ... | 16.3 | 13.0 |
| வீட்டில் அதிகப்பேர் கூட்டமாக இருத்தல் ... ... | 10.0 | 7.4 |
| பெற்றோர் தவருன முறையில் வழி நடத்தல் ... ... | 27.9 | 27.7 |
| போதிய தகுதி இல்லாத பெற்றோர் | 12.7 | 14.7 |
| பெற்றோர் அல்லது உடன் பிறந் தோரின் குற்ற நடத்தை ... | 6·2 | 2.6 |

மேற்கண்ட விவரங்களைப் பார்த்தால் பள்ளிக்கள்ளத்திற்கும் வகுப்பில் ஒழுங்கின்மைக்கும் பல பொதுவான காரணங்கள் இருப்பது தெளிவாகின்றது. ஒரு வகுப்பில் தவறி ஓர் ஆண்டுக்கு மேலாக இருக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளுகிறார்கள். உடல் குறைகளுக்கும், ஒழுக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆளுமைபற்றிய பல காரணங்களாலும் ஒழுங்கீனமான நடத்தை உண்டாவதை மேற்கண்ட அட்டவணை காட்டுகின்றது. குடும்பம் சிதைந்திருப்பதாலும், பெற்றோர்களின் குறைகளினாலும், பள்ளிக்கள்ளமும் ஒழுங்கின்மையும் உண்டாவதையும் மேற்கண்ட அட்டவணை காட்டுகின்றது.

### நெறி பிறழ்வான நடத்தை

பிறழ்வான நடத்தை உடைய பிள்ளையைப்பற்றிப் பல தனியாள் ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். குற்ற நடத்தைக்கு ஒரு முக்கியக் காரணம் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்துள்ள உணர்ச்சிப் போராட்டங்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். குற்ற நடத்தையுடையவர்களின் உணர்ச்சி சமநிலையில் இருப்பதில்லை. குற்ற நடத்தையின் இயல்பு, காரணங்கள் முதலியனபற்றி முந்திய அதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

குமரப் பருவத்தில் உள்ள பிள்ளைகளிடம் பல்வேறு காரணங்களால் உணர்ச்சிச் சமநிலை இருப்பதில்லை. உணர்ச்சிச் சமநிலையில்லை என்றால் உள நலம் இல்லை என்று பொருள்.

### குமரப் பருவத்துப் பிள்ளைகளின் மனநிலைகள்

40 குமரப் பருவத்து ஆண்பிள்ளைகளுடைய மனநிலைகள்பற்றி டாக்டர் சண்முகம் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார். இந் நாற்பது பேர்களின் சராசரி வயது 14.8. 12 வயதிலிருந்து 18 வயது வரைக்கும் பிள்ளைகள் இருந்தார்கள். இவர்களுக்கு T.A.T., V.P.T., கொடுக்கப்பட்டன. இச் சோதனைகளின் மூலம் கிடைத்த 800 கதைகளிலுள்ள பொருள் தலைப்புகளைப்பற்றி ஆராயப்பட்டன. இவ்வாறு செய்ததில் கிடைத்த முக்கியத் தலைப்புகள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| தலைப்பின் வகை | சதவிகிதம் |
|---|---|
| 1. கவலை ... ... ... | 34·5 |
| 2. தாக்குதல் (aggression) ... | 30·5 |
| 3. குடும்ப உறவுகள் ... ... | 18·1 |
| 4. தண்டனை ... ... ... | 16·2 |
| 5. மனச்சோர்வு (depression) ... | 12·5 |
| 6. காதல், பால் உறவு. ... ... | 11·7 |

மேற்கண்ட தலைப்புகள்பற்றிப் பிள்ளைகள் அதிகமாக எழுதி இருந்தார்கள். இது தவிரவும் விபத்து, நோய், பொருளாதாரக் கவலை, தவறு, தோற்றம், பிரிதல், வீட்டு முன்னேற்றத்தில் ஆர்வம், நல்லொழுக்கம், பிறர் நலத்தில் ஆர்வம் முதலிய பொருள்கள் பற்றியும் எழுதியிருந்தார்கள்.

'கவலை' என்னும் தலைப்பை ஒட்டியே மிக அதிகமானவர்கள் எழுதியிருப்பது அட்டவணையிலிருந்து தெரிகிறது. 'கவலை' என்னும் தலைப்பின் கீழ் அதற்குக் காரணமான உடல் தேவைகளாகிய பசி, பாலுணர்வு முதலியனபற்றியும் உளத்தேவைகளாகிய அன்பு, பாராட்டுதல் முதலியனபற்றியும் அதிகமாகப் பிள்ளைகள் எழுதியிருந்தார்கள். திருடுபோதல், தாய் தந்தை இறந்துபோவார்களோ என்ற அச்சம், ஏதாவது தண்டனை வருமோ என்ற அச்சம், வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகள் நிறைவாகாமல் போய்விடுமோ என்ற அச்சம் முதலியனபற்றிய கவலைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

'தாக்குதல்' என்ற தலைப்பின்கீழ் திருடுதல், கொள்ளை அடித்தல், சாவு (தாய், தந்தைபற்றியது) முதலியன அதிகமாகக் குறிப்பிடப்பட்டன. குடும்ப உறவுகள் என்ற தலைப்பின்கீழ் தாய்பற்றியும், அடுத்தபடியாக தந்தைபற்றியும் அதிகமாகக் குறிப்பிடப்பட்டன. தாய் அன்பாக இருப்பதாகவும், ஆனால், அதற்கு மாறாகத் தந்தை பயமுறுத்துவதாகவும், தண்டனை கொடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. தண்டனைபற்றி எழுதும்பொழுது தந்தை, ஆசிரியர், போலீசார்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. தண்டனை என்பது எப்பொழுதுமே ஏதாவது அடிப்படைத் தேவையை நிறைவேற்றுவது சம்பந்தமாக இருந்தது.

காதல், பாலுணர்வு சம்பந்தமாக, காதலில் ஆவல் நிறைவேறுதல்போன்ற தலைப்புகள்பற்றிய விவரங்கள் அதிகமாகக் குறிக்கப்பட்டன. உளச்சோர்வு என்ற தலைப்பின்கீழ் வறுமை காரணமாகத் தொல்லை, வீட்டில் தந்தையோடு இணங்கிப் போவதில் தொல்லை, பள்ளிக்கூடத்தில் ஆசிரியர், நண்பர்களுடன் இணங்கிப் போவதில் தொல்லை முதலியன குறிக்கப்பட்டிருந்தன.

## பெண்பிள்ளைகளின் மனநிலைகள்

மேற்சொன்ன ஆராய்ச்சியாளர் ஆண்பிள்ளைகளுக்குச் செய்தது போலவே 30 குமரப் பருவத்துப் பெண்பிள்ளைகளுக்கும் சோதனைகள் கொடுத்து ஆராய்ச்சி செய்தார். சராசரி வயது 13 ஆண்டுகள், 8 மாதங்கள். இப் பிள்ளைகள் சென்னை நகரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றில் நான்காவது ஐந்தாவது படிவங்களில் படித்துக் கொண்டிருந்தார்கள். நடுத்தர வகுப்புக் குடும்பங்களிலிருந்தும்

அதற்கு அடுத்தபடியாகக் கீழ்நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களிலிருந்தும் இப் பிள்ளைகள் வந்தார்கள். அவர்களுடைய கல்வித் திறமையும், நுண்ணறிவுத் திறமையும் சராசரி நிலையில் இருந்தன. சிலபேர்களிடம் சராசரிக்குச் சிறிது அதிகமாகவும் இருந்தன.

மேற்சொன்ன 30 பெண்பிள்ளைகளுக்கும் இரண்டுவகைச் சோதனைகள் (பொருளறிவோடு புணர்தற் சோதனை—Thematic Apperception Test, Verbal Projection Test) கொடுக்கப்பட்டன. TAT-ல் 5 படங்களும், VPT-ல் 20 படங்களும் கொடுக்கப்பட்டன. அவர்களுடைய கற்பனைக் கதைகளை ஆராய்ந்ததில் கிடைத்த முக்கிய தலைப்புகள் பின்வருவனவாகும் :

| வகைகள் | சதவிகிதம் |
|---|---|
| 1. மனச்சோர்வு ... ... ... | 12·2 |
| 2. தோற்றம் ... ... ... | 7·8 |
| 3. கவலை ... ... ... | 7·0 |
| 4. குடும்ப உறவு ... ... ... | 5·6 |
| 5. பொறுமை ... ... ... | 5·5 |
| 6. இன்பமான பொழுதுபோக்கு ... ... | 4·8 |
| 7. வீட்டு முன்னேற்றத்தில் ஆசை ... | 4·8 |
| 8. பொருளாதாரக் கவலை ... ... ... | 4·2 |
| 9. காதல், பாலுணர்வு ... ... ... | 3·7 |
| 10. தாக்குதல் ... ... ... | 3·3 |
| 11. குற்றம், மனச்சந்தேகம் ... ... | 3·3 |
| 12. பள்ளிக்கூடம் ... ... ... | 3·1 |
| 13. விபத்து, நோய் ... ... ... | 3·1 |
| 14. உடன்பாட்டு உணர்ச்சி ... ... | 3·0 |
| 15. ஆவலும், விருப்பமும் ... ... ... | 2·7 |
| 16. தண்டனை ... ... ... | 2·4 |
| 17. பிறர் நலத்தில் ஆர்வம் ... ... | 1·7 |
| 18. சிந்தனை ... ... ... | 1·6 |
| 19. பொருள் ... ... ... | 1·6 |
| 20. கெட்ட தன்மை, தவறு ... ... | 1·3 |
| 21. மனம் திருந்துதல், சேராதிருத்தல் ... | 1·3 |
| 22. சமயம் ... ... ... | 1·2 |
| 23. ஒழுக்கம், நன்னடத்தை ... ... | ·9 |
| 24. பிறருடன் பழகும் தன்மை ... ... | ·6 |
| சராசரி விகிதம் ... | 3·6 |

மேற் குறிப்பிட்டுள்ள தலைப்புகளைப் பார்க்கும்பொழுது மனச் சோர்வு, தோற்றம், கவலை, குடும்ப உறவு, பொறுமை, இன்பப் பொழுதுபோக்கு, முன்னேற்றத்தில் ஆசை, பொருளாதாரக் கவலை, காதல், பாலுணர்வு முதலியன பிள்ளைகள் அதிகமாகக் குறிப்பிட்டுள்ள தலைப்புகள் என்று தெரியவருகின்றன. 'மனச்சோர்வு'தான் எல்லாவற்றிற்கும் மேலாக அடிக்கடி கூறப்பட்டுள்ள தலைப்பு. மனச் சோர்வுக்குக் காரணங்கள் வீட்டுத் தொல்லைகள், மேல்படிப்புக்குத் தாய் தடையாக இருத்தல், மாற்றாந்தாய் கொடுமையாக நடத்துதல், நகை, நல்ல உடை இல்லாது வறுமையாக இருத்தல், பள்ளிக்கூடப் படிப்பில் ஆர்வமில்லாமை, தாய் அல்லது தந்தையை இழந்ததால் வந்த வருத்தம் முதலியனவாகும், 'தோற்றம்' பற்றி பெரும்பாலும் வயது குறைந்த பெண்பிள்ளைகள் குறிப்பிட்டிருந்தார்கள். நிறம், உடை, நகை முதலியனபற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். 'கவலை'க் குக் காரணங்கள் வரப்போகும் தண்டனை, மாற்றாந்தாய் காரணமாகத் துன்பம், தாய், ஆசிரியரிடமிருந்தும் துன்பம், மற்றவர்கள்பால் கோபங்கொண்டிருப்பது காரணமாக உண்டாகும் குற்ற உணர்வு முதலியன.

'குடும்ப உறவு' என்னும் தலைப்பின்கீழ் பெரும்பாலும் தாய் தந்தை, வயது அதிகமுள்ள பெண்கள், மாற்றாந்தாய், கணவன் முதலியோர்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. தந்தையைப்பற்றி மரியாதையோடும், தாயைப்பற்றி இரண்டு வகையாகவும் அதாவது மரியாதையோடும் மரியாதை இல்லாமலும் குறிப்பிடப்பட்டிருந்தது. தாய்கள் பொதுவாக இது கூடாது, அது கூடாது என்று தங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. கணவனைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் நடத்தாது இருத்தல், வேறு பெண்களோடு தொடர்புகொண்டிருத்தல், வேலையில்லாது போதல், மனச்சோர்வு அடையாதிருத்தல் முதலியன குறிப்பிடப்பட்டிருந்தன. மகிழ்ச்சியான உறவு இருப்பதாகக் குறிப்பிடப்படவில்லை.

'பொறாமை'யைப் பொறுத்தவரையில் மற்றப் பெண்பிள்ளைகளைப் பற்றிக் குறிக்கப்பட்டிருந்தது. அவர்களது நல்ல உடை, விலை உயர்ந்த நகைகள், நன்றாகப் படிக்கும் உடன் வகுப்பு மாணவர்கள் ஆகியவைபற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன.

'பொழுதுபோக்கு' என்பதின்கீழ் விளையாட்டுகள், போட்டிகள் குறிக்கப்பட்டிருந்தன. சினிமா, நாடகம் முதலியனபற்றி எதிர் பார்த்த அளவு குறிப்பிடப்படவில்லை.

'வீட்டு முன்னேற்றத்தில் ஆர்வம்' என்ற தலைப்பின்கீழ் தாழ்ந்த நிலையிலிருந்து தொடங்கி நன்றாகப் படித்துத் தடைகளை மீறி

முதல் இடத்தைப் பெற்றுத் தன்னுடைய தலைமை ஆசிரியருடைய மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் பெறுதல் முதலியனபற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தன. வறுமை நிலையில் பிறந்தபொழுதிலும் செல்வம் நிறைந்த ஒரு கணவர் கிடைத்து அதன்மூலம் பணக்காரர் ஆவது பற்றியும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருந்தது. 'பொருளாதாரக் கவலை' என்பதன்கீழ் ஏழ்மையாய் இருத்தல், பெற்றோர் ஏழ்மையாய் இருத்தல், நகைகள் அணிய முடியாத நிலையில் இருத்தல், மேல் படிப்புக்குப் போக முடியாத நிலையில் இருத்தல், வறுமை காரணமாகத் திருமணம் செய்ய முடியாத நிலையில் இருத்தல் முதலியன குறிக்கப் பட்டிருந்தன.

'காதல்' தலைப்பின்கீழ் காம இச்சைகள், காதல் நிலைப்படுதல், திருமணம், இல்வாழ்க்கை நடத்துதல், சிந்திரிலா (Cindrella) என்னும் ஆங்கிலப் பெண்போன்று ஏழ்மையான, ஆனால், அழகு மிக்க பெண்ணின்பால் செல்வம் மிகுந்த தலைவன் காதல் கொண்டிருத்தல், ஒரு வீரன் வந்து இளம் பெண்ணைப் பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றுதல், பிறகு திருமணம் செய்தல், சகோதரர்பால் அன்பு முதலியன குறிப்பிடப்பட்டிருந்தன.

மேற்கண்ட தலைப்புகளின்கீழ் தாய், தந்தை, வீடு, கணவன், மாற்றாந்தாய், வறுமை முதலியனபற்றி அதிகம் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்தோம். 'மனச்சோர்வு', 'கவலை' முதலிய தலைப்புகளுக்கு அதிக சதவீதம் வருவதால் வீட்டில் தக்கமுறையில் இவ்விளம் பெண்கள் இணங்கி இன்பமாக வாழ முடியவில்லை என்று முடிவு செய்யலாம்.

குமரப் பருவத்தின் முன்பகுதியில் வளர்ச்சி வேகமாகயிருக்கும். ஆகவே, அந்தச் சமயத்தில் அவர்களது அடிப்படைத் தேவைகள் நல்லமுறையில் நிறைவு செய்யப்படவேண்டும். அவை நிறைவு செய்யப்படாமலிருந்தால் வளர்ச்சி குன்றும். வீட்டுச் சூழ்நிலை, குடும்ப வசதி, மற்றும் வாய்ப்புகள் இதற்குத் துணைபுரியவேண்டும். சில சமயங்களில் வளர்ந்துவரும் இப் பிள்ளைகளைப் பெரியவர்கள் சிறு குழந்தைகளாகவே கருதுவது உண்டு. அவர்கள் உடம்பாலும், உள்ளத்தாலும் வளர்ந்து வயதுவந்த பக்குவ நிலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களைக் குழந்தைகளைப்போல் நடத்தாதிருக்கவேண்டும் என்பது பல பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மற்றப் பெரியவர்களுக்கும் தெரிவதில்லை. இதன் காரணமாக அவர்களிடம் மனச்சோர்வு, கவலை, தாக்கும் மனப்பான்மை உண்டாகலாம். குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு உணர்ச்சி இல்லாமல் போகும்பொழுது அவர்கள் பலவிதமான குற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட ஏதுவாகின்றது. ஆகவே, குமரப் பருவத்

தில் அதுவும் குமரப் பருவத்து முன்பகுதியில் அவர்களது அடிப் படைத் தேவைகள் நல்லமுறையில் நிறைவேறுவதற்கான வசதி களைச் செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். இவ்வாறு செய்வோமானால் அவர்கள் குற்றவாளிகளாகவோ அல்லது மன நோய்கள், நரம்பு நோய்களுக்குள்ளாவதோ இல்லாமல் போய்விடும்.

## ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்குமுள்ள ஒப்புமை

மேற் கூறப்பட்ட ஆராய்ச்சியில் ஆண்பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் ஒரேவிதமான சோதனை கொடுக்கப்பட்டதன் கார ணத்தால் இருபாலாருக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமை தெரிய வாய்ப்பு உள்ளது. ஆண்பிள்ளைகள் எழுதிய கதைகளிலுள்ள தலைப்புகளையும், பெண்பிள்ளைகள் எழுதிய கதைகளிலுள்ள தலைப்பு களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இரண்டிற்கும் இடையில் அதிக இயைபு இருப்பதாகவே தெரிகின்றது. ஆனால், தனிப்பட்ட தலைப்பு களை எடுத்துப் பார்க்கும்பொழுது பல வேற்றுமைகள் புலனாகின்றன. ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 'கவலை' என்பது மிக முக்கியத் தலைப்பாகும். எல்லாத் தலைப்புகளையும்விட இத் தலைப்புதான் முதலிடம் வகிக்கின்றது. பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 'மனச்சோர்வு' முதலிடம் வகிக்கின்றது. அதுபோலவே பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் பொருளாதாரக் கவலை மிக முக்கிய மான இடம் வகிக்க, ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அதற்கு அவ்வளவு முக்கியத்துவமில்லை. இதுபோலவே ஆண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 'தண்டனை' என்பது மிக முக்கிய இடம் வகிக்கின்றது. ஆனால், பெண்பிள்ளைகளிடம் அது அத் தகைய இடம் பெறவில்லை. இவ்வாறு தரவரிசையில் ஆண்பிள்ளை களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் வேற்றுமை இருந்தபோதிலும் ஓரிரு விதி விலக்குகள் தவிர, பொதுவாக முக்கியமான தலைப்புகள் இருபாலாருக்கும் ஒன்றுபோலவே உள்ளன.

டாக்டர் சண்முகம் இந்த ஆராய்ச்சியை இந்தியப் பிள்ளைகள் பற்றிச் செய்தார். இவ்வாராய்ச்சியுடன் மேல்நாட்டில் 'Symond' என் பவர் ஆண்பிள்ளைகளைப்பற்றி செய்துள்ள ஆராய்ச்சியை ஒப்பிட்டுப் பார்த்தபொழுது 'தாக்குதல்', 'தண்டனை', 'குடும்ப உறவுகள்', 'காதல்', 'பால் உணர்வு' முதலியன இரண்டு குழுவினருக்கும் பொதுவாகவே இருந்தன. இவ்விரு குழுவினருக்கும் சில வேற்றுமை களும் இல்லாமல் இல்லை. இந்தியப் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் 'மனச்சோர்வு', 'கவலை' மிக முக்கிய இடம் வகிக்கின்றன. ஆனால், மேனாட்டுக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் 'பொருளாதாரக் கவலை', 'குற்றத்துக்கு மனம் வருந்துதல்' முதலியன முக்கிய இடம் வகிக்கின்றன.

நம்நாட்டுப் பெண்பிள்ளைகளையும், மேல்நாட்டுப் பெண்பிள்ளைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இரு குழுவினருக்கும் 'குடும்ப உறவுகள்', 'தாக்குதல்', 'பொருளாதாரக் கவலை' முதலியன பொதுவாகவே இருந்தன. ஆனல், சில வேற்றுமைகளும் இருந்தன. இந்தியப் பிள்ளைகளிடம் 'மனச்சோர்வு', 'காதல்', 'பால் உணர்வு' முதலியன முக்கிய இடம் வகிக்க, மேல்நாட்டுக் குழந்தைகளிடம் 'பிரிதல்', 'விலக்கப்படுதல்', 'பிறர் நலத்தில் ஆர்வம்' முதலியன முக்கியத் தலைப்புகளாக இருந்தன. இதிலிருந்து என்ன தெரிகின்றது என்ருல்,குமரப் பருவத்துப் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் உலக முழுவதிலும் சில தன்மைகள் பொதுவாகவே உள்ளன. ஆனல், இப் பிள்ளைகள் வாழ்கின்ற சமுதாயப் பண்புக்கு ஏற்ப சில வேற்றுமைகளும் உண்டாகின்றன என்பது.

சுகாதாரமான வாழ்க்கை

மனநிலைக்கும் உடல்நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குமரப் பருவத்துப் பிள்ளைகள் நல்ல உடல் நலத்துடன் வளர்வார்கள் என்ருல், அதனல் உளநலமும் நன்ருக அமையும் என்று சொல்லலாம். குமரப் பருவத்தில் பொதுவாகப் பெரிய நோய்கள் உண்டாவதில்லை. தீவிர நோய்கள் ஏற்பட்டு உடல்நலம் கெடாவிட்டாலும் கூடப் பலவகையான உடல் குறைகள் காரணமாக உடல்நலம் கெடுவது உண்டு. முன்னர் 240ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து பல்நோய் இப் பருவத்திலுள்ள ஒரு முக்கியமான நோய் என்பது தெரியவருகிறது. இதுபோன்றே கண் நோய்கள், இருதய நோய்கள், நரம்பு நோய்கள், காது நோய்கள், நுரையீரல்பற்றிய நோய்கள் முதலிய நோய்களும் உண்டாவதுண்டு. பொதுவாகக் கூறுமிடத்து, பிள்ளைகள் நல்ல சத்துள்ள உணவை உண்டு சுகாதார பழக்கவழக்கங்கள் உடையவர்களாக இருப்பார்கள் என்ருல் பெரிய தொல்லை ஒன்றும் ஏற்படாது.

பள்ளிக்கூடங்களில் அவ்வப்பொழுது உடல்சோதனை செய்யவும் உரிய சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். சில நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்துவிட்டால் அவற்றைப் போக்குவது எளிதாயிருக்கும். இல்லாவிட்டால் நோய் முற்றிப்போய் பெரும் தீங்குகள் விளைவது உண்டு. ஆகவேதான் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் உடல் நலத்தைக் கவனித்துக் கொள்ளுவதற்கு நல்லதொரு திட்டம் இருக்கவேண்டும் என்று இப்பொழுது வற்புறுத்தப்படுகின்றது.

குமரப் பருவத்துப் பிள்ளைகள் நல்ல உடல் உறுதியுடனும், உடல் நலத்துடனும் வளராவிட்டால் அவர்கள் உளநலத்துடன் இருக்க முடியாது. உடல்நலம் இல்லையேல் உளநலம் இருப்பது அருமை.

### தன்மதிப்பு, தன்னைப் புரிந்துகொள்ளல்

உடல் நலத்துடனும், உள நலத்துடனும் வளர ஆசிரியர்கள் குமரப் பருவப் பிள்ளைகளுக்குத் தக்க முறையில் வழிகாட்டுவது அவசியம். ஒவ்வொரு மாணவனும் தன்னைப்பற்றி நல்ல மதிப்புக் கொண்டிருக்கவேண்டும். அவன் தன்மதிப்புடனும் பொறுப் புணர்ச்சியுடனும் நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு வாழ இளைஞன் தன்னை நன்கு புரிந்துகொள்ளல் அவசியம். அவன் தன்னைப் புரிந்துகொள்ளுவது என்றால் தன்னுடைய நிறை குறைகளைத் தெரிந்துகொள்ளுவதாகும். தன் நிறைகளைத் தெரிந்து அவற்றை வளர்ப்பதில் ஈடுபடவேண்டும். தன்னுடைய குறைகளை உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு முயலவேண்டும். தனது குறைகளையும் நிறைகளையும் தெரிந்துகொண்டு தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னை ஏற்றுக்கொள்ளுவது மன நலத்திற்கு அடிப் படையாக வேண்டிய ஒன்று. இதற்கு ஆசிரியர்கள் உதவி செய்ய வேண்டும்.

### வாழ்க்கைக் கொள்கை

தன்னைப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொண்டு, தன்மதிப்புடன் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதற்குக் குமரப் பருவத்துப் பிள்ளைகள் கற்றுக்கொள்ளவேண்டுவதுபோல மனித வாழ்க்கைபற்றி ஒரு முறையான கொள்கை அல்லது தத்துவத்தையும் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குமரப் பருவத்தில் பிள்ளைகளுக்கு வாழ்க்கையின் அடிப்படைபற்றி கேள்விகள் எழும். சமயம்பற்றி ஐயங்கள் உண்டாகும். தற்காலத்தில் விஞ்ஞானமும், தொழிலும் வெகுவாக வளர்ந்துள்ள காரணத்தால் சமயம்பற்றி பொதுவாக அதிக அக்கறை கொள்வதில்லை. சில குடும்பங்களில் சமய மரபு அதிகமாகவும், சில குடும்பங்களில் குறைவாகவும் இருக்கும். குடும்பச் சூழ்நிலைக் கேற்ப பிள்ளைகளின் உள்ளத்தில் சமயம்பற்றிய ஆர்வம் அமையும். மேலும் சமய இயக்கங்கள், கோயில் விழாக்கள் போன்றவை காரணமாகச் சில பிள்ளைகளின் உள்ளத்தில் சமயம்பற்றிய ஆர்வம் அதிகமாக உண்டாவதும் உண்டு. மாறுதல் பருவமாகிய குமரப் பருவத்தில் பிள்ளைகளின் உள்ளத்தில் வாழ்வின் லட்சியம்பற்றியும், வாழ்க்கைக் குறிக்கோள்பற்றியும் எவ்வளவோ கேள்விகள் எழுந்து சஞ்சலம் உண்டாக்கும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளின் உள்ளத்தைப் புரிந்துகொண்டு அவர்கள் நல்ல வாழ்க்கைக் கொள்கைகளைத் தாமே உருவாக்கிக்கொள்வதற்கு உதவவேண்டியது மிகவும் அவசியம்.

குமரப் பருவத்தில் உடல் வேகமாக வளருகின்றது என்று பார்த்திருக்கின்றோம். இப் பருவத்தில் உணர்ச்சிகளும், அறிவும், ஆர்வங்களும் மிகவேகமாக வளருகின்றன என்றும் பார்த்திருக்கின்றோம்.

அதாவது, குமரப் பருவம் வளர்ச்சி நிறைந்த ஒரு புரட்சிகரமான பருவம், ஒரு முக்கியமான மாறுதல் பருவம் என்று பார்த்திருக்கின்றோம். ஆகவே, இந்தப் பருவம் உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் மிகவும் ஆபத்து நிறைந்த பருவம் என்று சிலர் கருதுகிறார்கள். குமரப் பருவத்துப் பிள்ளைகள் உடல் சுகாதாரத்துடனும், உள நலத்துடனும் வளருவதற்குப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் தக்க முறையில் வழிகாட்டவேண்டியது மிகவும் இன்றியமையாதது. எனவே, பள்ளித்திட்டத்தில் 'வழி காட்டலு'க்கு (guidance) மிகவும் முக்கிய இடம் உண்டு என்று கல்வி நிபுணர்கள் வற்புறுத்துகின்றார்கள். வழிகாட்டல் என்பது இன்று கல்வியில் ஒரு முக்கிய துறையாக வளர்ந்து வருகிறது.

### வழிகாட்டலின் வகைகள்

இளைஞர்களுக்கு வழிகாட்டலை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை (1) கல்வி வழிகாட்டல், (2) தொழில் வழிகாட்டல், (3) தனி வாழ்க்கைபற்றிய வழிகாட்டல் என்பன.

### கல்வி வழிகாட்டல்

இளைஞர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளில் பல பாடசம்பந்தப் பட்டவையாக இருக்கும். சான்றாக, உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவனுக்கு எந்த விருப்பப் பாடத்தை எடுப்பது என்ற பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம். பலநோக்கு உயர்நிலைப் பள்ளியில் (Multipurpose High School) படிக்கின்ற மாணவனுக்கு விவசாயப் பாடம் எடுப்பதா அல்லது பொறியியல் பாடம் எடுப்பதா அல்லது வேறு ஒரு பாடத்தை எடுப்பதா என்பது பிரச்சினையாக இருக்கும். இத்தகைய பிரச்சினை வரும்பொழுது பலர் பலவாறாக அவனுக்குப் போதனை செய்வார்கள். பெற்றோர் ஒரு நிலையிலிருந்து பார்த்துத் தங்களது விருப்பத்தைத் தெரிவிப்பார்கள். நண்பர்கள், உடன் மாணவர்கள் தங்களுடைய விருப்பு வெறுப்புகளைச் சொல்லுவார்கள். ஆசிரியர்கள் தங்களது கருத்துகளைச் சொல்லுவார்கள். இந் நிலையில் இளம் மாணவனது உள்ளம் குழம்புவதில் வியப்பில்லை. இத்தகைய குழம்பிய நிலையில் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்வதற்கு 'வழிகாட்டல்' உதவவேண்டும். பெற்றோர்கள் பொதுவாக, சமூகத்தில் எது பெருமையானது என்று கருதுகிறார்களோ அந்தப் பாடத்தைத் தங்கள் பிள்ளை எடுக்கவேண்டும் என்று நினைப்பார்கள். பிள்ளைகள் பெற்றோரின் விருப்பத்தின் காரணமாக அவர்களைப் போன்றே நினைப்பார்கள். அல்லது பல மாணவர்கள் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப சொல்லுவதை வைத்துக்கொண்டும் நினைப்பார்கள். ஆனால், மாணவன் தன்னுடைய இயல்பான திறமைகள் என்ன, எதிர்கால நோக்கங்கள் என்ன

என்பனபற்றித் தெளிவாகச் சிந்தனை செய்து அதற்கேற்ப பாடத்தைத் தேர்ந்தெடுப்பதே அறிவுடைமையாகும். இதற்கு வழிகாட்ட வேண்டும். மாணவன் தன்னுடைய ஆர்வங்கள் என்னென்ன, திறமைகள் என்னென்ன என்பதுபற்றித் தன்னறிவு பெற்றுத் தெளிவடைவதற்கு உதவவேண்டும். இது கல்வி வழிகாட்டலின் ஒரு முக்கிய அம்சமாகும்.

இளைஞர்களது கல்விப் பிரச்சினை சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பற்றியதாக இருக்கும். எடுத்துக்காட்டாக, கணித பாடத்தில் ஒரு மாணவன் மிகவும் மோசமாக இருக்கலாம். அதில் அவன் தொடர்ந்து குறைந்த மார்க்குகள் வாங்கித் தேர்ச்சி பெருமல் இருக்கலாம். இவ்வாறு இருப்பதால் அவனிடம் ஆளுமைப் பிரச்சினைகள் வேறு உண்டாகும். மனநலம் கெடும். ஆகவே, ஏன் அந்த மாணவன் கணிதத்தில் மிகவும் மோசமாக இருக்கின்ருன் என்பதை ஆராய்ந்து அந்தக் காரணங்களை நீக்குவதற்கு வழி காட்டவேண்டும். ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாணவன் மார்க்கு குறைவாக வாங்குவதற்குக் காரணம் அவனது அறிவுத் தரத்தின் குறைவன்று, சூழ்நிலை காரணம் என்று சில சமயங்களில் தெரியவரும். ஆசிரியர் முதலில் மாணவனைப்பற்றித் தவருக நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனுல், மாணவனது பிரச்சினையின் மெய்யான தன்மை தெரியவரும் போது, அதற்குச் சரியான தீர்வு இது என்று அறிவுரை கூற வேண்டும். இவ்வாறு மாணவர்களுக்கு வழிகாட்டுவது கல்வி வழிகாட்டலின் இன்ெனுரு முக்கிய வேலையாகும்.

### தொழில் வழிகாட்டல்

குமரப் பருவத்துப் பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளில் படித்து அதற்கு மேல் தொழிற் கல்லூரிகளுக்கோ அல்லது வேறு கல்லூரிகளுக்கோ செல்வார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலும் தொழிற் கல்வி சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. எல்லாப் பிள்ளைகளும் எதிர்காலத்தில் என்ன தொழில் செய்வது என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, மாணவர்கள் தங்கள் தொழிற் கல்விபற்றியும் எதிர்காலத் தொழில்பற்றியும் தெளிவடைவதற்கு வழிகாட்டல் அவசியமாகின்றது. குறிப்பாக நமது நாட்டில் இது மிகவும் அவசியம். ஏனென்ருல், கல்வி கற்கும் ஒவ்வோர் இளைஞனுக்கும் என்ன வேலைக்குப் போவது என்கின்ற ஒரு பெரும் கேள்விக்குறி கண்முன் வந்து நிற்கின்றது. நம் நாட்டில் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம், அதிகமாக இருந்துவருகிறது. ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம், இன்ெனுரு பக்கம் பொருத்தமில்லாத வேலைகளில் இளைஞர்கள் சேருவது. ‘Square plugs in round holes’ என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. அதாவது ஒருவனுடைய இயல்புக்கும்

அவனது வேலைக்கும் பொருத்தம் இல்லாது இருத்தல். இத்தகைய நிலைமையுண்டாகாது இருப்பதற்குத் 'தொழில் வழிகாட்டல்' உதவியாக இருக்கும். ஓர் இளைஞனது இயல்பான திறமைகள், ஆர்வங்கள், வாழ்க்கை லட்சியங்கள் என்னென்ன என்பதை நன்கு தெரிந்து கொள்ளுவதற்கு ஆசிரியர் மாணவனுக்கு வழிகாட்ட வேண்டும். மாணவனது திறமைகள், ஆர்வங்களுக்கேற்ப என்ன வேலை வாய்ப்புகள் சமூகத்தில் உள்ளன என்பதைப்பற்றியும் யோசனை செய்து மாணவன் தக்க வேலைகளுக்குப் போக வழி காட்டவேண்டும்.

### தனிவாழ்க்கைபற்றிய வழிகாட்டல்

கல்வி, தொழில் சம்பந்தமான பிரச்சினைகளைத் தவிர, மாணவர்களது தனிப்பட்ட சொந்த வாழ்க்கை சம்பந்தமான பிரச்சினைகளும் உண்டாவதுண்டு. இந்தச் சொந்தப் பிரச்சினைகள் அவர்களது கல்வியை பாதிக்கும், ஆனால், அடிப்படையில் அவைகள் தனிப்பட்ட வாழ்க்கைபற்றிய சொந்தப் பிரச்சினைகளே. உடல் குறைகள் காரணமாகத் தாழ்வு மனப்பான்மை உண்டாகலாம். வீட்டுச் சூழ் நிலையிலுள்ள சிக்கல்கள் காரணமாக மனக்கோளாறுகள் உண்டாகலாம். நண்பர்கள், தோழர்கள் இல்லாமல்போய் இளைஞனது சமூக நடத்தையில் பிரச்சினைகள் ஏற்படலாம். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பெற்றோர்கள் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால், சில சமயங்களில் பெற்றோர்கள் இவைபற்றி அதிகக் கவனம் செலுத்துவது இல்லை. கவனம் செலுத்தினாலுங்கூட அவர்களது கவனம் மட்டும் இப் பிரச்சினைகள் தீர்வதற்குப் போதாமல் போகலாம். ஆகவே, ஆசிரியர்கள் இவ்வகையில் உதவவேண்டியது அவசியம். ஓர் இளைஞன் மனம்விட்டுத் தனது சொந்தப் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் ஆசிரியரிடம் பேசவேண்டும் என்றால் ஆசிரியர்கள் அதற்கேற்ப அன்பு உணர்ச்சியோடு இருக்கவேண்டும். அன்பு இல்லாத ஆசிரியர்களிடம் பிள்ளைகள் அணுகி வரமாட்டார்கள். அணுகி வரும் மாணவர்களிடம் அவர்களது பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் அன்போடும் ஆதரவோடும் பேசித் தக்கதொரு வழி காட்டவேண்டும். சில பிரச்சினைகள் மிகவும் வேரூன்றிப்போயிருக்கலாம். ஆசிரியர்கள் அவற்றைத் தீர்க்க வழிகாட்ட முடியவில்லையென்றால், அவைபற்றி ஆழ்ந்த அறிவும், அதிக பயிற்சியும், ஆராய்ச்சி அனுபவமும் உடைய வல்லுநர்களிடம் மாணவனை அனுப்பி வைக்கவேண்டும்.

### வழிகாட்டல் செய்முறைகள்

வழிகாட்டுதல் என்ற பணியைச் செய்வதற்குப் பல முறைகளைக் கையாளலாம். அந்தந்த மாணவனது நிலைக்கேற்பப் பொருத்தமான ஒன்றே அல்லது சில பல முறைகளையோ கையாளவேண்டும். பின் வருவன சாதாரணமாகக் கையாளப்படும் சில முறைகளாகும்.

1. பேட்டிமுறை: அதாவது சம்பந்தப்பட்ட இளைஞர்களோடு தனியாகச் சந்தித்துப் பேசுவதாகும். இது மிகவும் சாதாரணமான முறை. ஆனாலும், இதனைக் கையாளுவதிலும் தக்க பயிற்சி வேண்டும். வழிகாட்டும் ஆசிரியர் பேட்டிக்கு முன்கூட்டியே ஆயத்தம் செய்யவேண்டியது அவசியம். பையனது பின்பலம் மற்றும் விவரங்கள் எல்லாம் முன்கூட்டியே நினைத்துப் பார்த்துத் தற்சமய நிலையையும் கூடியமட்டும் தெரிந்து வைத்துக்கொண்டு ஆயத்தமாக இருக்க வேண்டும். மேலும், பேசுவது எல்லாம் மிகப் பரிவோடும் அன்போடும் இருக்கவேண்டும். பையன் தனது நிலையைப்பற்றி அதிகமாகப் பேசுவதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும். தான் அதிகம் பேசக் கூடாது. வெறும் அறிவுரை கூறுவதாலும் கடிந்து உரைப்பதாலும் மாணவனுக்கு நன்மை உண்டாகாது. கடிந்துரைப்பதால் பையனது பிரச்சினை மேலும் தீவிரம் அடையும். ஆகவே, பேட்டி முறையை நன்கு பயன்படுத்த பயிற்சியும் திறமையும் வேண்டும்.

2. வகுப்பில் மாணவனை உற்றுநோக்கல்: மாணவன் வகுப்புகளில் எவ்வாறு நடந்துகொள்ளுகிறான் என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள உற்றுநோக்கவேண்டும். பல வகுப்புகளில் அவன் நடந்துகொள்வதைப் பார்ப்பதோடல்லாது பொதுவாகப் பள்ளிக் கூடத்தில் எப்படி நடந்துவருகிறான் என்பதையும் பார்க்கவேண்டும். விளையாடும் இடத்தில், மதிய உணவு உண்ணும் இடத்தில், மற்ற இடங்களில் அவனது நடத்தை எவ்வாறு இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டியது அவசியம். அவனுடைய நண்பர்கள், உடன் மாணவர்கள் யார் யார் போன்ற மற்ற விவரங்களையும் இவ்வாறு உற்றுநோக்குவதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

3. மாணவர்கள் எழுதுகின்ற கட்டுரைகள் முதலியனவற்றை ஆராய்தல்: குறிப்பிட்ட மாணவன் பல பாடங்களுக்காகக் கட்டுரைகளும் மற்றும் குறிப்புகளும் எழுதுவான்; படங்கள் வரைவான். இவை போன்றவற்றையெல்லாம் பார்த்து அவற்றை ஆராய்வதால் பல நல்ல உண்மைகள் துலங்க நேரிடலாம்.

4. ஆசிரியர் அமைக்கும் சோதனைகள்: ஆசிரியரே சில கேள்வித் தாள்கள் அல்லது வேறுவகையான சோதனைகளைத் தயார்செய்து மாணவர்களுக்குக் கொடுக்கலாம். மாணவர்களின் விடைகளினின்றும் அவர்களது பிரச்சினைகள்பற்றிய சில விவரங்கள் கிடைக்கும்.

5. ஆய்ந்தறி சோதனை (Diagnostic test): இத்தகைய சோதனைகள் கொடுப்பதன்மூலம் மாணவர்களுடைய மனநிலை, மற்றும் முக்கிய செய்திகள் கிடைக்கும்.

6. தரப்படுத்திய சோதனைகள் (Standardise test): கல்வித் தேர்ச்சி சம்பந்தமாக மாணவர்களது தர நிலையைத் தெரிந்து கொள்ளுவதற்கு விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்து தயாரிக்கப் படுபவை இச் சோதனைகள். இவற்றைக் கொடுத்தால் அவர்களுடைய கல்வி நிலையை நன்ருகத் தெரிந்துகொள்ளலாம். கல்வி வழிகாட்டலுக்கு இது மிகவும் பயன்படும்.

7. தொகுப்பேடு (Cumulative Record): இதன் மாதிரி ஒன்று இந்த அதிகாரத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு மாணவனைப்பற்றிய விவரங்களையெல்லாம் தொகுத்து, தொடர்ந்து பதிவு செய்வதால் இதற்குத் தொகுப்பேடு என்று பெயர். இந்தத் தொகுப்பேட்டிலிருந்து மாணவர்களுடைய வாழ்க்கை வரலாறு, கல்வி நிலை, குடும்பச் சூழ்நிலை, பெற்ருேர்பற்றிய விவரங்கள், பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முக்கிய நிகழ்ச்சிகள், இன்னும் பல முக்கிய விவரங்கள் தெரிந்துகொள்ளலாம். இது மாணவனுக்கு வழிகாட்டுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

8. தனியாள் ஆராய்ச்சி: மேலே குறிப்பிட்ட முறைகள் போதாமல்போய் சில பிரச்சினை மாணவர்கள்பற்றி மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாக இருக்கலாம். இதற்கான பல கேள்வி நிரல்கள் உள்ளன. 'குமரப் பருவம்' என்னும் முதல் அதிகாரத்தில் ஒரு கேள்விக்குப் பின் மாதிரி கொடுக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி மாணவர்களுடைய ஆளுமை நிலைபற்றி ஆழமான செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். இத்தகைய ஆராய்ச்சிக்குத் தனியாள் ஆராய்ச்சி என்று பெயர்.

## இயல்பிகந்த மனநிலைகள்

இயல்பிகந்த மனநிலை என்ருல் என்ன? பொதுவாக ஒருவனுக்குச் சில சமயங்களில் கோபம் வருவதோ, அல்லது சில சமயங்களில் அச்சம் வருவதோ சாதாரணமானது; இது இயல்பானது. இது பற்றி அதிகம் கவலையுறவேண்டியது இல்லை. ஆனல், சிலரிடம் இயல்பிற்கு மாருன சில உணர்ச்சி நிலைகள் தொடர்ந்து நிலை பெறுவது உண்டு. அவர்கள் பேசுகின்ற முறை, அல்லது நடந்து கொள்ளுகின்ற முறை ஆகியவற்றிலிருந்து இதனை நாம் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு சில பிள்ளைகளிடம் அசாதாரணமான மனநிலைகள் காணப்படும். இவை இயல்பிகந்த (abnormal) மனநிலைகள் எனப்படும். இவற்றை மாற்ற ஆசிரியரால் இயலாது. வழிகாட்டலில் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியருக்கும் இது இயலாது; இயல்பிகந்த மனநிலை

யின் தன்மை ஓரளவுக்குத் தெரியலாமேயொழிய அதனை ஆராய்ந்து மாற்றுவதற்கான நுட்ப அறிவும் சிகிச்சைத் திறமையும் அவரிடம் இரா. ஆகவே, உளமருத்துவத்தில் பயிற்சி உடையோரிடம் பிள்ளைகளை அனுப்பிவைப்பதே வழிகாட்டும் ஆசிரியர் செய்யக்கூடியது. உளமருத்துவ வல்லுநர் இயல்பிகந்த மனநிலை மாறி இயல்பான மனநலம்பெற உதவுவார்.

## புறத்தேற்றல் (Projection)

ஒரு சிக்கலான சந்தர்ப்பம் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தச் சமயத்தில் இயல்பிகந்த மனநிலையுடைய ஒருவன் புதிய வழியில் நடந்துகொள்வான். எடுத்துக்காட்டாக, ஓர் இளைஞன் படிப்பில் மோசமானவனாக இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். தேர்வில் மிகக் குறைவான மதிப்பெண் கிடைக்கிறது. இதற்கு உண்மையான காரணம் அவனுடைய முயற்சியின்மை அல்லது அறிவுக் குறைவாக இருக்கும். ஆனால், அதனை உணராது காரணத்தை இன்னொருவர்மேல் ஏற்றிச் சொல்லுவான். அதாவது வீட்டில் தகப்பனார் நன்றாகச் சொல்லிக் கொடுக்கவில்லை, அல்லது ஆசிரியர் சரியாகக் கற்பிக்கவில்லை என்று இன்னொருவர் மேல் குறையை ஏற்றிச் சொல்லுவது; இதற்குப் புறத்தேற்றல் என்று பெயர்.

## ஈடு செய்தல் (Compensation)

ஈடு செய்தல் என்பது இன்னொரு வகையான நடத்தை. ஏதாவது ஒரு துறையில் மோசமாக இருந்தால் அதனை ஈடுகட்டுவதற்கு இன்னொரு துறையில் முயன்று வெற்றி பெறுவதாகும். பள்ளிப் படிப்பில் சராசரியான தரம் இல்லாது இருக்கின்ற ஒரு மாணவன் அதனால் வரும் கெட்டபெயரை மாற்றுவதற்கு விளையாட்டில் அதிகமாக ஈடுபட்டு அதில் வெற்றி பெறுவதுண்டு. விளையாட்டில் ஆர்வம் காட்டிப் பரிசு பெறுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், பள்ளிப் பாடத்தில் ஓரளவுகூட தேர்ச்சிபெறாது அதிலிருந்து தப்பித்துக் கொண்டு, அளவுக்கு மீறி அதிகமாக விளையாட்டுகளில் ஈடுபடுவது நல்லதல்ல.

## காரணம் கற்பித்தல் (Rationalization)

'இந்தப் பழம் புளிக்கும்' என்ற மனப்பான்மையுடன் நடந்துகொள்ளுவது இயல்பிகந்த நடத்தையின் இன்னொரு வகையாகும். முதலில் ஆசைகொண்டு முயற்சி செய்தபின் தோல்வியுற்ற காரணத்தால் அதனை மோசம் என்று கூறுவது உண்மையிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலுவதாகும்.

### பகல் கனவு காணல் (Fantasy)

பிள்ளைகளிடம் காணப்படுகின்ற இன்னொரு வகையான பிறழ்வு நடத்தை பகல் கனவு காண்பதாகும். பல பிள்ளைகள் இவ்வாறு பகல் கனவு காண்பதைக் காணுகின்றோம். தோல்வியுறுகின்ற சமயத்தில் கைக்கு எட்டாத ஏதாவது ஒன்றை எதிர்காலத்தில் பெறலாம் என்று எண்ணிக்கொண்டு அதைப்பற்றியே கனவு காணுதல் உண்மை நிலையிலிருந்து ஓட முயற்சிப்பதாகும்.

இவ்வாறு பல வகைகளில் இயல்பிகந்த நடத்தை தோன்றக் கூடும். இதனைக்கொண்டு இந் நடத்தையின் காரணம் என்ன என அறிந்து அக் காரணத்தை நீக்குவதற்கு உதவவேண்டும். மேற் சொன்ன இயல்பிகந்த நடத்தை வகைகள் தவறானவை அல்ல. ஓரளவுக்கு எல்லோரும் இவ்வாறு நடந்துகொள்ளத்தான் செய்கிறார்கள். இவற்றை நீக்குவது கடினம் அன்று. ஆனால், இவற்றை உரிய காலத்தில் கண்டுபிடித்து தக்க முயற்சி எடுத்து நீக்கிவிடாவிட்டால் இவை வளர்ந்து தீவிரமடைந்து உளநோய்கள் உண்டாவதற்கு ஏதுவாக அமைந்துவிடக்கூடும்.

### இளைஞர்களின் உளநோய் வகைகள்

உளநோய் உண்டாவதற்குச் சில முக்கியக் காரணங்கள் இருக்கும். பொதுவாக இந் நோய்கள் திடீரென்று உண்டாவதில்லை. இந் நோய்கள் திடீரென்று உண்டாவது மிகச் சில இளைஞர்களுக்கே ஏற்படும். இத்தகைய நோய்கள் மாணவர்களிடம் இருப்பது தெரிந்தவுடன் ஆசிரியர் உளமருத்துவ வல்லுநரிடம் அவனைச் சேர்த்து உரிய சிகிச்சை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந் நோய்களின் சில முக்கிய வகைகள் கிலி, மனவழி உடல் நோய், தாழ்வு மனப்பான்மை, கவலை நரம்பு நோய், உடல் உள மீச்சோர்வு நிலை முதலியன.

### கிலி

சில பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட சில பொருள்களைப்பற்றி அல்லது சில இடங்களைப்பற்றி அல்லது சில செயல்களைப்பற்றி காரணம் இல்லாத தீவிர பய உணர்ச்சி ஏற்பட்டுவிடும். இத்தகைய பய உணர்ச்சி ஏன் ஏற்பட்டது என்று அப் பிள்ளைகளுக்கும் தெரிவதில்லை, மற்றவர்களுக்கும் தெரிவதில்லை. உளசிகிச்சை செய்பவர் ஆராய்ச்சி செய்தபிறகே உண்மைக் காரணம் தெரியவரும். ஓர் உயர்நிலைப் பள்ளிப் பையனுடைய உதாரணத்தைக் கூறலாம்

'17 வயதுடைய பையன். ஒவ்வொரு நாள் காலையிலும் அவன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு பஸ்ஸில் செல்லுவது உண்டு. இந்த பஸ் பிரயாணம் சுமார் 15 நிமிஷம் ஆகும். பள்ளியிலிருந்து வீடு திரும்பும்பொழுது அவனுக்கு நெடுநேரம் ஆவதுண்டு. ஏனென்றால், அவன் வீடு நோக்கிச் செல்லும் பஸ்ஸில் ஏறாது எதிர்த் திசையில்

செல்லும் பஸ்ஸில் ஏறி இறுதியாக பஸ் நிற்கும் எல்லே சேர்ந்து பின்பு அங்கிருந்து அதே பஸ்ஸில் சென்ற வழியே திரும்பிவந்து கடைசியில் வீடு வந்து சேருவது உண்டு. இதற்கு இரட்டைச் செலவு ஆவதோடு அநேகமாக இரண்டுமணி நேரமும் ஆகும். காலே யில் பஸ் வீட்டுப்பக்கம் வரும்பொழுது வீட்டுக்கு முன்புறமாக ரோடு ஓரத்தில் வந்து நிற்கும். ஆகவே, பஸ்ஸில் ஏறுவதற்கு ரோட்டைக் கடந்து செல்லவேண்டியதில்லே. அந்த பஸ் பள்ளிக்கூடத்துப் படிக் கட்டுகளின் அருகில் போய் நிற்கும். ஆகவே, பஸ்ஸிலிருந்து இறங்கி நேராகப் பள்ளிக்கூடத்துக்குள் சென்றுவிடலாம். ரோட் டைக் கடந்து போகவேண்டிய அவசியமில்லே. ஆனல், மாலேயில் வீடு திரும்பும்பொழுது ரோட்டைக் கடந்துபோய் பஸ்ஸில் ஏறவேண் டும். இதற்கு பயந்து பையன் பள்ளிக்கூடத்தின் ஓரத்திலேயே பஸ் ஏறி எதிர்த் திசை நோக்கிச்சென்று சுற்றி வளேத்துக்கொண்டு இரட்டைச் செலவு செய்து வீடு திரும்புவான். யாராவது கேட்டால் எதிர்த்திசையின் எல்லேயில் உள்ள தனது அத்தை வீட்டிற்குச் செல்வதாகச் சொல்லுவான். ஆனல், உண்மையில் அவன் அங்கே செல்வது இல்லே. ஞாயிற்றுக்கிழமைகளில்தான் பெற்ருேரோடு அங்குச் செல்வது உண்டு.

தினம் இரண்டு மணி நேரம் பஸ்ஸிலேயே கழிக்கவேண்டி யிருப்பதால் பள்ளிக்கூட விளேயாட்டுகளிலோ அல்லது மற்ற மாணவர்களின் கூட்டு நடவடிக்கைகளிலோ கலந்துகொள்ளுவ தில்லே. ஆகவே, மற்ற மாணவர்களிடமிருந்து அவன் பிரிந்து போய்விட்டான். மற்றப் பிள்ளேகளுடைய நட்பு அவனுக்கு ஏற்படாது போயிற்று. பள்ளிக்கூடத்தில் ஏதாவது முக்கிய நிகழ்ச்சிகள் இருந் தால் அவற்றில் அவனல் கலந்துகொள்ள முடிவதில்லே. அவனது வீட்டுக்கு அருகிலுள்ள இரண்டு மூன்று சமவயதுப் பிள்ளேகளோடு தான் பழகிக்கொண்டிருந்தான். ஒருநாள் இப் பிள்ளேகள் ரோட் டைக் கடந்து சென்று எதிரிலுள்ள கடையில் ஐஸ்கீரிம் வாங்கிச் சாப் பிடுவதற்கு இவனே அழைத்தார்கள். இவன் வர மறுத்துவிட்டான். ரோட்டைக் கடப்பது என்ருலே அவன் கிலி கொள்வதைக் கண்ட பிள்ளேகள் அவனேக் கேலி பண்ண ஆரம்பித்தார்கள். பெற்ருேர் களுக்கு இது தெரிந்து அவர்களுக்கு மிகவும் கவலே உண்டாயிற்று. அவர்கள் பள்ளிக்கூடத்துத் தலேவரிடம் சென்று பேசினர்கள். டாக்ட ரிடமும் பேசினர்கள். இந்தக் கிலி எவ்வாறு ஏற்பட்டது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதற்குத் தீர்வு காணவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மேற்சொன்ன உதாரணத்திலிருந்து உளநோய் ஒன்று உண் டாகிவிட்டால் அது எவ்வளவுதூரம் ஓர் இளேஞனுடைய ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கலாம் என்பது தெளிவாகின்றது.

## மனவழி உடல்நோய் (Psychomatic diseases)

சில பிள்ளைகளுக்குத் திடீரென்று காய்ச்சல் வருவது உண்டு; அல்லது தலைவலி உண்டாகும். ஆனால், இவற்றுக்குக் காரணம் உடம்பிலுள்ள கோளாறு அன்று; உள்ளத்திலுள்ள ஏதோ ஒரு தேவையாகும், இவ்வாறு உள்ளத்தின் தேவை காரணமாக உடல் நோய் வருகின்றது என்பது நோய் வருபவருக்கும் தெரியாது; மற்றவர்களுக்கும் தெரியாமல் போய்விடலாம். ஆகவே, இது உடல் நோய்தான் என்று நினைத்து மருந்துகள்கூட கொடுப்பது உண்டு. ஆனால், விவரம் தெரிந்து மருத்துவர் ஆராய்ச்சி செய்தால் நோயின் உண்மையான காரணத்தைக் கண்டுபிடித்துவிடுவார்.

பொதுவாக மனவழி வருகின்ற உடல்நோய் அவ்வப்போது சில சில சமயங்களில் வரும் ஒன்றாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு பையனுக்குச் சில சமயங்களில் வலிப்பு வருவது உண்டு. அந்தப் பையன் மிகவும் முரட்டுத்தனமான பையன். தான் விரும்பியபடி தன் தாய் நடக்கவேண்டும் என்ற ஆசை உடையவனாக இருந்தான். ஆகவே, தனது தாய் தான் சொன்னபடியெல்லாம் நடக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றும்பொழுது வலிப்பு உண்டாகி விடும். வலிப்பு உண்மையான வலிப்புபோன்று இருக்கும். அதற் குரிய அடையாளங்கள், குணங்கள் எல்லாம் இருக்கத்தான் செய்யும். ஆனால், காரணம் வேறு.

இதுபோலவே இன்னொரு பிள்ளைக்கு வயிற்றுவலி சாக்லெட் தின்பதனால் வருவது உண்டு. சில சமயங்களில் சாக்லெட் தின்னா விட்டாலுங்கூட அதே வயிற்றுவலி வந்துவிடும். பரீட்சையில் தேறா விட்டால், வேறு ஏதாவது வருத்தம் உண்டாகிவிட்டால் வயிற்றுவலி உண்டாகிவிடும். அதாவது உணர்ச்சி காரணமாக உடல் கோளாறு கள் உண்டாகிவிடுகின்றன. இப்பொழுது டாக்டர்கள் பொதுவாக உணர்ச்சிச் சிக்கல்கள் தொடர்ந்து இருப்பவர்களுக்கு வயிற்றுப் புண் நோய்களும் இருதய நோய்களும் உண்டாவதாகச் சொல்லுகிறார்கள். மகிழ்ச்சியாக கவலையின்றி சுகமாக இருப்பவர்களுக்கு இத்தகைய வயிற்றுப் புண் நோய்கள் உண்டாவது இல்லை. அவர்கள் கண்டது கடியது எல்லாம் அளவில்லாமல் உண்டபோதிலும்கூட வயிற்றுக் கோளாறுகள் உண்டாவது இல்லை. ஆனால், மிகவும் ஒழுங்காக உணவு உண்ணுகின்றவர்கள் அதிகக் கவலையுடையவர்களாக இருந் தால் வயிற்று வலி உண்டாகிவிடுகின்றது.

## தாழ்வு மனப்பான்மை (Inferiority complex)

சிலருக்குத் தங்களைப்பற்றி மிகவும் தாழ்வான மனப்பான்மைகள் உண்டாவது உண்டு. அவர்களுக்கு அடிப்படையாகத் தன்னம்பிக்கை

இல்லாததே இதற்குக் காரணம். ஒருவரிடம் சில குறைகள் இருப்பதால் இது உண்டாவது உண்டு. எல்லோருக்குமே சிறிதளவு தன்னம்பிக்கை இல்லாமல் இருப்பது உண்டுதான். ஆனல், காரணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிலருடைய உள்ளத்தில் இந்தத் தாழ்வு மனப்பான்மை வேரூன்றிப்போய் அவர்களது மனத்தை மிகவும் பாதித்துவிடும்.

ஒரு குமரப் பருவத்து இளைஞன் தன்னுடைய நிலையைப்பற்றி இவ்வாறு எழுதினன் ; " எனக்கு ஒன்றுமே சரியாக இல்லை. ஏனென்றல், மனம் எரிந்துபோவதுபோல் இருக்கின்றது. நான் துண்டு துண்டாகச் சிதறிப்போவதாகத் தோன்றுகின்றது. இந்தக் கல்லூரிப் படிப்பு எனக்கு வரவே வராது. முதலில் ஏதோ எளிதுபோல் தோன்றியது. ஆனல், படிப்பில் எனது மனத்தை நிறுத்தவே முடியவில்லை. நான் படிக்கவேண்டிய பகுதியை ஆறுமுறை படித்துப் பார்த்தேன். ஆனல், ஒவ்வொருமுறை படிக்கும்பொழுதும் என் நினைவில் இருப்பதும் இன்னும் குறைந்துகொண்டே போகிறது. வகுப்பில் ஆசிரியர் என்னைக் கூப்பிட்டால் ஒரே பயங்கரமான உணர்ச்சி உண்டாகின்றது. எழுந்து நிற்பதே கஷ்டமாக இருக்கின்றது. எப்படியோ கோணிக்கொண்டும் கூனிக்கொண்டும் நிற்கிறேன். மேல்தோல் எல்லாம் வியர்த்துவிடுகிறது. வாய் வறண்டுவிடுகிறது. இருதயம் திக்கு திக்கு என்று அடிக்கிறது. நான் 'ஓ' வென்று கத்திவிடுவேனே என்று தோன்றும். அல்லது மயக்கம் வருவதுபோல் இருக்கிறது. வகுப்பறையில் உட்கார்ந்து இருக்கத்தான் என்னல் முடிகிறது. நான் எவ்வளவுக்கு எவ்வளவு படிக்கிறேனே அவ்வளவுக்கு நேர்மாருக எனது அறிவு சூனியமாகிறது." தாழ்வு மனப்பான்மை என்பது பல மாணவர்களுக்கு ஏற்படுகின்ற ஓர் உளநோய். அதன் காரணத்தைத் தெரிந்து அதைத் தீர்ப்பதற்கு வழி தேடவேண்டியது மிகவும் அவசியம்.

கவலை நரம்பு நோய் (Anxiety neurosis)

ஆழ்ந்த தீவிரமான கவலையே இந் நோய்க்குக் காரணம். இந்தக் கவலை நோய் உடையவர்கள் சரியாக ஒரு காரியத்தில் மனத்தைச் செலுத்த முடியாது. உள்ளத்தில் பரபரப்பாகவும் துயரமாகவும் இருக்கும். அவர்கள் ஒரு நிலையின்றி அல்லல்பட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களால் சரியாகத் தூங்கமுடியாது. உணவு உண்பதற்கு நல்ல பசி இருக்காது. சில சமயங்களில் மூச்சுத் திணறும். வியர்வை எளிதாக வந்துவிடும். முகத்தில் ஒரு சமயம் சோர்வாகவும், இன்னெரு சமயம் உற்சாகமாகவும் தோன்றுவார்கள். சீரணக் கோளாறுகள் உண்டாகும். இத்தகைய நோய் வந்துவிட்டால் உளமருத்துவச் சிகிச்சை செய்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந் நோய்க்கு ஓர் எடுத்துக்காட்டு : 'M' ஓர் உயர்நிலைப் பள்ளி மாணவி. அவளது கவலை நரம்புநோய் தேர்வில் கிடைக்கும் மதிப் பெண்களைப் பற்றியதே. ஒரு தேர்வு நடக்கப்போகிறது என்று அறிவிப்பு வந்தவுடன் அவளுக்கு ஒரே கவலையாகப் போய்விடும். ஏதாவது கணக்குகள் போடவேண்டும் என்று ஆசிரியர் சொன்னால் ஒரே கவலை. எப்பொழுதும் மார்க்குகளைப்பற்றியே அவள் மற்றவர் களுடன் பேசுவாள். அவள் வாங்கிய மார்க்கு சதவிகிதம், தேர்வுகள் பற்றிய பயம், இன்னும் எல்லாம் மார்க்குகளைப்பற்றியே மற்றப் பிள்ளைகளுடன் பேசுவாள். இதையே எப்பொழுதும் கேட்கும் பிள்ளை களுக்குச் சலிப்பாக இருக்கும். ஒருமுறை அவள் ஆசிரியர் தேர்வு விடைத் தாள்களைத் திருத்துகிறார் என்பதைத் தெரிந்து இடைவேளை சமயத்தில் ஆசிரியருக்குத் தெரியாமல் அவரது மேஜையைத் திறந்து தாள்களை எடுத்துத் தனது விடைத்தாள் திருத்தப்பட்டுவிட்டதா என்று பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுவிட் டாள். வீட்டிற்குப் போவதற்கு முன்னால் தனது விடைத்தாளிலுள்ள மதிப்பெண்ணை அவள் மாற்றுவது உண்டு. இவ்வாறு மாற்றும் பொழுது சிலமுறை அவள் கண்டுபிடிக்கப்பட்டாள்.

அவள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தது முதற்கொண்டே எழுதி யுள்ள தேர்வு விடைத்தாள்களை யெல்லாம் மிகவும் பத்திரமாக வைத் திருக்கிறாள். முதல் மாதத்தில் கொடுக்கப்பட்ட ஓரிரு தாள்களை மட்டும் அவள் தூரப் போட்டுவிட்டாள். இவ்வாறு தூரப் போட்ட தைப்பற்றி அவள் மிகவும் வருந்துவது உண்டு. ஒவ்வொரு ஞாயிற் றுக்கிழமையும் தன் தேர்வுத் தாள்களை எடுத்து அவள் திருப்பித் திருப்பிப் பார்ப்பாள். அவள் மதிப்பெண்கள் அதிகமாக வாங்கியிருக் கிறாளா அல்லது குறைவாக வாங்கியிருக்கிறாளா என்பதுபற்றியே நினைத்துக்கொண்டிருப்பாள். இவ்வாறு வாரத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்யும்பொழுது சில சமயங்களில் ஒரே அதிர்ச்சியாகப் போய்விடும். தேர்வு நடக்கப்போகும் நாள் அணுக அணுக அவ ளுக்கு மேலும் மேலும் பீதி உண்டாகும். தேர்வு முடிந்த பின்னும் அவள் உள்ளத்தில் ஒரே சஞ்சலமாக இருக்கும். முழுதும் மோச மாகப் போய்விடுமோ என்ற கவலை. தனது வீட்டிலும் மற்ற நண் பர்களிடத்திலும் அவள் தேர்வில் என்னென்ன கேட்டார்கள், என் னென்ன எழுதினாள் என்பதை முற்றிலும் ஒப்பித்துவிடுவாள். பரீட்சை எழுதும்பொழுது அவளுக்கு மற்றப் பிள்ளைகளைப்போல் கைகள் விறைத்துப் போவதோ, தலைவலிப்பதோ, மயக்கம் வருவதோ கிடையாது. ஒரே பயத்துடன் தன்னால் கூடியமட்டும் கேள்வி களுக்கு விடை எழுதுவாள். தேர்வுகளில் இவளுக்கு வெற்றி கிடைக்கா விட்டால் அது காரணமாக அவளது உள்ளத்தில் எப்பொழுதும் ஒரு பெரிய கவலைச்சுமை இருந்துகொண்டே இருக்கும்.

இந்தப் பெண்பிள்ளையின் இந் நிலைக்கு என்ன காரணம்? அவளது குடும்பத்திலுள்ள மற்ற எல்லோரும் உயர்ந்த நுண்ணறிவு உடையவர்கள். இவள்மட்டும்தான் சுமாரான திறமையுடையவள். பெற்றோர் இருவரும் உயர்ந்த தரத்தில் தேர்ச்சி அடைந்தவர்கள். அதற்குரிய கௌரவ சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவளுடன் பிறந்த மற்ற இரண்டு பிள்ளைகளும் மிகச் சிறப்பாகப் படிக்கின்றவர்கள். அவளுடைய தாயும், தந்தையும் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது, முதல் முறையாகச் 'சிறந்த மாணவர்கள் சங்கத்தின்' கூட்டத்தில்தான் சந்தித்தார்கள். இருவரும் தங்களது சிறப்பான கல்வித் தேர்ச்சியைப்பற்றிப் பெருமிதம் கொள்வார்கள். தங்களது பிள்ளைகள் சிறப்பாகக் கற்பதுபற்றி அவர்களுக்கு மிக்க மனநிறைவு உண்டாகும். சிறு குழந்தையாய் இருந்ததிலிருந்தே உயர்ந்த மார்க்கு வாங்குவதுதான் மிகப்பெரிய சிறப்பு என்பதைத் திரும்பத் திரும்பக் கேட்டு வளர்ந்தவர்கள் இந்தப் பிள்ளைகள். ஆகவே, தனது அண்ணனைப் போன்று 98.9% மார்க்கு வாங்க வேண்டும் என்பதே 'M'ன் ஒரே அவா. பெற்றோர்களும் அவள் இவ்வாறு மார்க்கு வாங்குவதே சிறப்பு என்று நினைத்தார்கள். அவளது வெற்றியை மார்க்குகளை வைத்தே அளவிட்டார்கள். இவ்வாறாக இக் குழந்தைக்குத் தேர்வு என்றால் ஒரே பயம். வீட்டுப் பாடங்கள் என்றாலும் ஒரே பயம். கல்லூரியில் சரியாகப் படிக்க முடியுமா என்ற பயம். வாழ்க்கையில் வெற்றி என்பது மார்க்குகளை வைத்துதான் பார்க்கவேண்டும் என்ற பெரிய பயம் அவள் உள்ளத்தில் மேலிருந்து பாறங்கல்போல் அமுக்கி வந்தது.

### உடல் உள மீச்சோர்வு நிலை (Neurasthenia)

இந் நோய் உடையவர்கள் அடங்கி ஒடுங்கி அமைதியாகத் தோற்றமளிப்பார்கள். நெடுங்காலமாகச் சோர்வுற்ற காரணத்தால் உடல்நலமும் மிகத் தளர்ந்துபோய் இருக்கும். அவர்களிடம் அதிக சக்தி இருக்காது. உடல் சக்தி குன்றிச் சோர்ந்துபோய் இருப்பதற்குக் காரணம் உடல் சம்பந்தமானது அன்று; உள சம்பந்தமானது, உணர்ச்சிபற்றியது. இந்த நோய் உடைய குமரப் பருவத்துப் பிள்ளைகள் பகலில் கனவு காண்பது சாதாரணமான வழக்கம். இந் நோய் உடையவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைப்பற்றி மேலும் மேலும் சுற்றிச்சுற்றி நினைத்துக்கொண்டே இருப்பார்கள். இந்தப் பிள்ளைகள் சுற்றுப்புறத்தைப்பற்றி அதிக கவனம் இல்லாது இருப்பார்கள். மற்றவர்களோடு பழகாது ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்றார் வள்ளுவர். குமரப் பருவத்து இளம்பிள்ளைகள் மனநலத்துடன் வளர ஆவன செய்ய வேண்டியது ஆசிரியர், பெற்றோர், மற்றோரது கடமையாகும்.

# மாணவர் தொகுப்பேடு
## (Cumulative Record)

இவ்வேட்டில் மாணவர்பற்றிய பின்வரும் விவரங்கள் அடங்கியுள்ளன

1. குடும்பச் சூழ்நிலை
2. கல்வி வரலாறு
3. உடல்நலம்
4. பள்ளி வருகை
5. பாடங்களில் தேர்ச்சி
6. கைத்தொழில் தேர்ச்சி.
7. சமூக நலச் செயல்கள்
8. பண்பு நலன்கள்
9. ஆசிரியரின் வழிகாட்டல்
10. தலைமை ஆசிரியரின் வழிகாட்டல்

---

மாணவரின் பெயர்.............................................

வரிசை எண்......................

196 ஆண்டிலிருந்து 196 ஆண்டு வரை.

---

தொகுப்

பெயர் (பெரிய எழுத்துகளில்)...

சேர்க்கை எண்....................

சேர்ந்த தேதி....................

சேர்ந்த வகுப்பு....................

பள்ளியில் சேரும்போது
எடுத்த மாணவரின்
புகைப்படத்தை இங்கு ஒட்டவும்

குடும்பச் சூழ்நிலை

தகப்பனாரின் / பொறுப்பாளரின் பெயர்........................................

தகப்பனாரின் / பொறுப்பாளரின் தொழில்........................................

ஆண்டு வருமானம்..............................

தகப்பனாரின் / பொறுப்பாளரின் முகவரி........................................

தாயார் ஏதாவது தொழில் செய்கிறாரா ?....................

அண்ணன் எத்துணை பேர்....................................

அக்காள் எத்துணை பேர்....................................

தம்பியர் எத்துணை பேர்....................................

தங்கையர் எதணை பேர்....................................

மாணவனின் எதிர்காலத் தொழில்பற்றிப்
பெற்றோர் கொண்டுள்ள விருப்பம்..........................

மாணவனது சொந்த விருப்பம்..............................

வீட்டின் சூழ்நிலை......................................................

பேடு

.......................................

பிறந்த தேதி..........................

விட்டுச் சென்ற தேதி..............

விட்டுச் செல்லும் வகுப்பு..........

பள்ளியினின்று நீங்கும்போது
எடுத்த மாணவரின்
புகைப்படத்தை இங்கு ஒட்டவும்

கல்வி வரலாறு

| ஆரம்பப் பள்ளிக் கல்வி | ஆண்டுகள் |
|---|---|
| .......................................... | ...................... |
| .......................................... | ...................... |
| .......................................... | ...................... |

| உயர்நிலைப் பள்ளிக் கல்வி | ஆண்டுகள் |
|---|---|
| .......................................... | ...................... |
| .......................................... | ...................... |
| .......................................... | ...................... |

எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிய ஆண்டு..................

எஸ்.எஸ்.எல்.ஸி.யில் வாங்கிய மொத்த மதிப்பெண்கள்..................க்கு..................

எஸ் எஸ்.எல்.ஸி.யில் தவறினது உண்டா?...... ஆம்/இல்லை

எவ்வளவு முறைகள் (தடவை)....................

இவர் எப்போதாவது படிப்பை நிறுத்தியது உண்டா? ஆம்/இல்லை

எப்பொழுது, ஏன்? (காரணம்)..................................
..................................

வேறு ஏதாவது செய்திகள்..................................
..................................

| | ஆண்டு :<br>வகுப்பு : | | | ஆண்டு :<br>வகுப்பு : | | | ஆண்டு :<br>வகுப்பு : | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உடல்நலம்<br>உயரம் ... | | | | | | | | | |
| நிறை ... | | | | | | | | | |
| வழக்கமான நிலையில் மார்பின் அளவு ... | | | | | | | | | |
| விரியும் நிலையில் மார்பின் அளவு ... | | | | | | | | | |
| சுருங்கும் நிலையில் மார்பின் அளவு ... | | | | | | | | | |
| ஏதாவது உடல் கோளாறு ... | | | | | | | | | |
| அண்மையில் ஏற்பட்ட நோய் ... | | | | | | | | | |
| பள்ளி வருகைப்பதிவு | | | | | | | | | |
| சதவிகிதம் ... | | | | | | | | | |
| ஏதாவது நீண்ட மருத்துவ விடுமுறையில் சென்றதுண்டா? ... | | | | | | | | | |
| பாடங்களில் தேர்ச்சி | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

| ஆண்டு :<br>வகுப்பு : | | | ஆண்டு :<br>வகுப்பு : | | | வேறு ஏதாவது முக்கியச் செய்திகள், ஆசிரியரின் கருத்துகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

| | ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : |
|---|---|---|---|
| கைத்தொழிலில் தேர்ச்சி | | | |
| சமூக நலச் செயல்கள் | | | |
| கிராம சேவையில் பங்கு கொண்டது | | | |
| பள்ளிச் சமூக வேலைகளில் பங்கு கொண்டது ... | | | |
| கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டது | | | |
| பொறுப்புள்ள பதவி வகித்ததுண்டா ? | | | |
| மற்றும் ஏதும் சிறப்பான ஆர்வங்கள் | | | |
| பண்பு நலன்கள்<br>நேர்மை ... | | | |
| முயற்சி ... | | | |
| உணர்ச்சிச் சமநிலை. | | | |
| தன்னம்பிக்கை ... | | | |
| சமூக உணர்வு ... | | | |
| தானாக முன்வந்து செயல் புரிதல் ... | | | |
| தலைமைப் பண்பு ... | | | |
| பொறுப்புணர்ச்சி ... | | | |
| நேரம் தவறாமை ... | | | |
| உடல் வலிமை ... | | | |

| ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : | வேறு ஏதாவது முக்கியச் செய்திகள், ஆசிரியரின் கருத்துகள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| | ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : |
|---|---|---|
| ஆசிரியரின் வழிகாட்டல் | | |
| தலைமை ஆசிரியரின் வழிகாட்டல் | | |

ஆசிரியரின் கையெழுத்து

| ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : | ஆண்டு :<br>வகுப்பு : |
|---|---|---|
| | | |
| | | |

தலைமை ஆசிரியரின் கையெழுத்து

# 10. குமரப் பருவ ஆராய்ச்சி

குமரப் பருவம்பற்றி மேல்நாடுகளில் எவ்வளவோ ஆராய்ச்சி நடைபெற்றுள்ளது. நடைபெற்று வருகின்றது. இத்தகைய ஆராய்ச்சி செய்வதற்கென்று பல நிலையங்கள் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும், மற்றும் மேலைநாடுகளிலும் செயல்பட்டு வருகின்றன. நமது நாட்டில் குழந்தைகள்பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிகள் இன்னும் அதிகம் நடைபெறவில்லை. அத்தகைய ஆராய்ச்சிகள் விரிவாக நமது நாட்டுக் குழந்தைகளின் வளர்ச்சிபற்றி ஆதார பூர்வமாக எழுதுவது இயலாது.

குமரப் பருவத்துப் பிள்ளைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் பல முறைகளைக் கையாளலாம். உற்றுநோக்கல்முறை, சோதனைமுறை, நாட்குறிப்புமுறை, தனியாள் வரலாற்றுமுறை, தரவீட்டுமுறை, கேள்விநிரல் முறை, புறத்தேற்றுமுறை முதலியன சில முக்கியமான ஆராய்ச்சி முறைகளாகும். பொதுவாக ஆராய்ச்சி செய்யும்பொழுது ஒரு முறையைமட்டும் கையாளுவதில்லை. தேவைக்கேற்ப இரண்டோ, மூன்றோ, பலவோ சேர்த்துக் கையாளுவது வழக்கம். எடுத்துக்காட்டாக உற்றுநோக்கல் முறையைக் கையாண்டு ஆராய்ச்சி செய்யும்பொழுது கேள்விநிரல் முறையையும் கூடச் சேர்த்துக் கொள்ளலாம்.

### உற்றுநோக்கல் முறை

உற்றுநோக்கல் முறை மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சாதாரண ஆராய்ச்சி முறையாகும். குமரப் பருவத்துப் பிள்ளையினுடைய நடத்தைபற்றிச் செய்தி விவரம் சேகரிப்பதற்கு இது ஒரு நல்ல நேரடிமுறை. அப் பிள்ளையினுடைய வீட்டுச் சூழ்நிலை, பெற்றோரின் இயல்பு, வாழுகின்ற வட்டாரச் சூழ்நிலை முதலியனபற்றிய விவரம் சேகரிப்பதற்கும் இது மிகவும் பயன்படக்கூடிய முறையாகும். உற்றுநோக்கல் இருவகைப்படும். (1) முறைப்படுத்திய உற்றுநோக்கல் (structured observation), (2) முறைப்படுத்தாத உற்று

நோக்கல் (un-structured observation). விஞ்ஞானபூர்வமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ருல் முறைப்படுத்திய உற்றுநோக்கல் அவசியமாகும். என்னென்ன உற்றுநோக்க வேண்டும் எவ்வெவ்வாறு உற்றுநோக்கவேண்டும் என்பதை முன்பே முறையாக எழுதி வைத்து அதன்படி உற்றுநோக்குவது முறைப்படுத்திய உற்றுநோக்கலாகும். இவ்வாறு முறைப்படுத்தி உற்றுநோக்குவதன் ஒரு முக்கிய நன்மை என்னவென்ருல், இதனுல் கிடைக்கும் விவரம் புறவயமாக (objective) இருக்கும். உற்றுநோக்குபவருடைய விருப்பு வெறுப்புகள் ஆராய்ச்சியில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு அவ்வளவு இருக்காது. ஆகவே, உற்றுநோக்குவதற்கு முன் கூட்டியே ஒரு பட்டியல் தயார் செய்துகொண்டு ஆராய்ச்சி செய்வது நல்லதாகும். இந்தப் பட்டியலை 'உற்றுநோக்கும் பட்டியல்' (observation inventory) என்று சொல்லுவதுண்டு.

முறைப்படுத்தாத உற்றுநோக்கலின் குறை என்னவென்ருல், இதன்மூலம் கிடைக்கும் விவரம் அகவயத் தன்மையுடையதாக (subjective) இருக்கும். ஆனுல், இதன் சிறப்பு என்னவென்ருல், நாம் முன்கூட்டியே எதிர்பாராத சில முக்கிய விவரங்களைச் சேகரிப்பதற்கான திறந்த மனம் உடையவராக ஆராய்ச்சியாளர் இருப்பதாகும். முறைப்படுத்தாத உற்றுநோக்கல்முறையை நாம் பயன்படுத்தும்பொழுது பல தடவைகள் உற்றுநோக்குவது மிகவும் அவசியமாகும். ஒரு தடவை உற்றுநோக்கினுல்மட்டும் போதாது. பலதடவைகள் உற்றுநோக்கி விவரங்களைச் சேகரித்து முடிவு செய்தால் அம்முடிவு ஏற்புடையதாக (valid) இருக்கும். ஆனுல், ஓரிரு தடவைகள்மட்டும் அகவயமாக உற்றுநோக்கி முடிவுக்கு வந்தால் அம் முடிவு அவ்வளவு ஏற்புடையதாக இராது.

சிறந்த பயன் பெறுவதற்கு மேற்சொன்ன இருவகையான உற்றுநோக்கல் முறைகளையும்—அதாவது முறைப்படுத்தி உற்றுநோக்கல், முறைப்படுத்தாத உற்றுநோக்கல் ஆகிய இரண்டு முறைகளையும் சேர்த்துப் பயன்படுத்துவது நல்லதாகும். இதனுல் இவ்விருவகை முறைகளின் நன்மைகளும் நமக்கு உண்டாகும்.

உற்றுநோக்கலில் இன்னும் சில வகைகளும் உண்டு. ஒரு வகுப்பில் பிள்ளைகள் எவ்வாறு நடந்துகொள்ளுகிருர்கள் என்பதைக் கவனிப்பதற்குச் சில முறைகளைக் கையாளுகிருர்கள். உற்றுநோக்குகின்ற ஆராய்ச்சியாளர் வகுப்பின் பின்புறத்தில் போய் அமர்ந்துகொண்டு வகுப்பிலுள்ள பிள்ளைகளின் நடத்தையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருக்கலாம். புதியவர் ஒருவர் இருந்து கவனிப்பதைச் சிறிது நேரம் மாணவர்கள் நினைத்துக்கொண்டிருப்பார்

கள். பின்னுல் அதை மறந்துவிட்டு இயல்பாக இருக்கக்கூடும். என்றபோதிலும் புதியவர் ஒருவர் அங்கு இருப்பதே ஓரளவுக்குப் பிள்ளைகளின் நடத்தையைப் பாதிக்கத்தான் செய்யும். இதற்கு இன்னொரு வழி கண்டுபிடித்திருக்கிருர்கள். வகுப்பு அறையினுடைய ஒரு மூலையில் சுவரை ஒட்டி உற்றுநோக்குவதற்காக ஒரு சிறு இடம் ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருக்கும். உற்றுநோக்கும் ஆராய்ச்சியாளர் அங்கு போவதற்குத் தனியாக வழி இருக்கும். உள்ளே இருந்துகொண்டு உற்றுநோக்கவேண்டியதற்கான இடவசதியும், இருக்கை வசதியும், ஒருபக்கம் மட்டும் தெரியக்கூடிய கண்ணுடியும் வைக்கப்பட்டிருக்கும். உற்றுநோக்கும் அறையில் இருக்கும் ஆராய்ச்சியாளர் அக் கண்ணுடியின் வழியாகப் பார்க்கும் பொழுது வகுப்பறை முழுவதும், அதிலுள்ள பிள்ளைகளினுடைய நடவடிக்கைகள் முழுவதும் நன்ருகத் தெரியும். ஆனுல், வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குத் தாங்கள் உற்றுநோக்கப்படுகிருர்கள் என்பது சிறிதும் தெரியாது. உற்றுநோக்கும் கண்ணுடிக்கும் அறைக்கும் ஒரு சிறிதும் வேற்றுமை தெரியாதபடி அறைச்சுவரும் அதன் வர்ணமும் அமைக்கப்பெற்றிருக்கும். ஆராய்ச்சியாளர் தொடர்ந்து தேவைப்படும்வரை உற்றுநோக்கிப் பார்த்துக் கிடைக்கும் செய்தி விவரங்களைக் குறித்துக்கொள்ளலாம்.

உற்றுநோக்குவதற்கு உதவியாகக் கருவிகளையும் பயன்படுத்துவது உண்டு. எடுத்துக்காட்டாக, திரைப்படம் பார்க்கும் குமரப் பருவத்துப் பிள்ளைகள் இரவில் எந்த அளவுக்குச் சரியாகத் தூங்க முடிகின்றது. அவர்களுடைய தூக்கம் எந்த அளவுக்குத் தடைப்படுகின்றது என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. இரவு தூங்கிவிட்டபிறகு பிள்ளைகள் எத்தனைமுறை புரண்டு படுக்கின்ருர்கள், கை கால்களை அசைக்கிருர்கள், வேறுவிதமான உடல் இயக்கங்களைச் செய்கிருர்கள் என்பதை உற்றுநோக்கிக் குறித்து வைத்துக்கொள்வது கடினமாகும். இதற்கு உதவியாகப் படுக்கையின் அடிப்பக்கத்தில் ஓர் அளவு கருவியை வைத்தார்கள். இக் கருவி பிள்ளையின் அசைவுகளையும் ஆட்டங்களையும் அளப்பதற்கு உதவியாக இருந்தது.

உற்றுநோக்கல் முறை சிறப்பாகச் செயல்படப் பின்வருவன முக்கியமாகும்: (1) எதற்காக உற்றுநோக்குகிருேம் என்பதுபற்றித் தெளிவு இருக்கவேண்டும். (2) என்னென்ன உற்றுநோக்கவேண்டும் என்பதுபற்றித் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றையெல்லாம் முன்கூட்டியே முறைப்படுத்தி வைத்துக்கொண்டு அவ்வாறு உற்றுநோக்கவேண்டும். (3) உற்றுநோக்கித் தெரிகின்ற செய்திகளைத் துல்லியமாக அல்லது கணக்காக எழுதவேண்டும். 'பெரும்படையாக'வும் பொதுவாகவும் எழுதுவதில் பயன்

இல்லை. (4) உற்றுநோக்கும்பொழுது கிடைக்கின்ற செய்தி விவரங்களையெல்லாம் உடனுக்குடன் அவ்வப்பொழுதே குறித்து வைக்க வேண்டும். சில நாட்கள் கழித்து, அல்லது சில மணி நேரங்கள் கழித்துகூடக் குறித்துவைக்க முற்பட்டால் அதற்குள் மனத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். மனிதமனம் சிலவற்றை நினைவில் வைத்திருக்கும், சிலவற்றை மறந்துவிடும். விருப்பு வெறுப்புகள் இடம் பெறலாம். (5) உற்றுநோக்குவது என்பது ஒரு கலை. அதற்குரிய பயற்சி பெறவேண்டும்.

சோதனை முறை

விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்ற முறை சோதனைமுறையாகும். சோதனை உண்மையைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படும் ஒரு புதுமையான முறை. பௌதீகம், ரசாயனம் போன்ற துறைகளில் இம் முறை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாக எவ்வளவோ உண்மைகளையும் செய்திகளையும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். சோதனைமுறை ஒரு நிகழ்ச்சி பற்றிய காரணகாரியத் தொடர்புகளை ஆராய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நிகழ்ச்சி அல்லது நிலையிலுள்ள பல முக்கியக் காரணக் கூறுகளில் ஒன்றைத்தவிர பிற எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி, அவ் வொன்று என்ன முறையில் இயங்குகின்றது என்பதைக் கூர்ந்து பார்த்து அளவிட்டுச் சொல்லுவதைச் சோதனை என்று சொல்லலாம். இவ்வாறு ஒரு கூறு காரணமாக என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்று பார்த்து அதன்மூலமாக அந் நிகழ்ச்சி அல்லது நிலைபற்றிச் சில முடிவுகளைச் செய்ய இயலும்.

சோதனை முறையை பௌதிகம், ரசாயனம் முதலிய துறைகளில் கையாளுவது எளிது. ஆனால், உளவியல், சமூகவியல் போன்ற துறைகளில் இதனைக் கையாளுவது அவ்வளவு எளிதன்று. ஏனெனில், இத் துறைகளில் ஒரு நிலையில் உள்ள எல்லாக் கூறுகளையும் கட்டுப்படுத்தி ஒன்றைமட்டும் மாற்றச் செய்வது என்பது எளிதானதன்று. எனினும், உளவியல் துறையில் இம் முறை கையாளப்பட்டு வருகின்றது. சோதனை முறையின் ஒரு முக்கியச் சிறப்பு என்னவென்றால், நாம் சேகரிக்கும் விவரமும், செய்யும் முடிவும் அகவயத்தன்மையில்லாது கூடியமட்டும் புறவயமாக இருக்கும். சோதனை முறையில் குமரப் பருவத்துப் பிள்ளைகள்பற்றி ஆராய்ச்சி செய்ய இரண்டு குழுக்கள் அவசியம். ஒரு குழு சோதனைக்காகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இந்தக் கட்டுப்படுத்திய குழுபற்றி விவரங்களை முறையாகச் சேகரித்து அவற்றைக் கட்டுப்படுத்தாத குழுபற்றிய விவரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இரண்டுக்குமுள்ள வேற்றுமையைக் கவனிக்கவேண்டும். சோதனைமுறை அளவியலில்

கூறப்படும் 'வேற்றுமை முறை' (different method) போன்றதாகும். இத்தகைய ஆராய்ச்சியின்மூலம் விஞ்ஞானபூர்வமான முடிவுகளைச் செய்ய முடியும்.

பிள்ளைகளுடைய வளர்ச்சியைச் சூழ்நிலை, பாரம்பரியம் ஆகிய இரண்டும் எந்த அளவில் பாதிக்கின்றன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்குச் சோதனை முறையைக் கையாண்டுள்ளார்கள். ஒரே மாதிரியான இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையை ஒரு சூழ்நிலையிலும், இன்னொரு குழந்தையை இன்னொரு சூழ்நிலையிலும் வளர்த்து, சூழ்நிலை எவ்வாறு குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது என்பதை ஆராய்ந்திருக்கின்றார்கள். அதுபோலவே பல்வேறு மரபுவழிகளைச் சேர்ந்த பிள்ளைகளை ஒரே சூழ்நிலையில் வைத்து வளர்த்து எந்த அளவுக்குப் பாரம்பரியம் பிள்ளைகளின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது என்பதுபற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஒன்று பாரம்பரியத்தைக் கட்டுப்படுத்தி சூழ்நிலையின் விளைவுகளை ஆராய்வதாகும். இன்னொன்று சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி பாரம்பரியத்தின் விளைவுகளை ஆராய்வதாகும். இதேபோல் குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் போதனைமுறைகள் பற்றியும் சோதனை முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

நாட்குறிப்பு முறை

இம் முறையை இருவகையாகக் கையாளலாம். ஒன்று, குமரப் பருவத்துப் பிள்ளைகளைத் தனித்தனியாகத் தங்களது வாழ்க்கைபற்றித் தொடர்ந்து நாட்குறிப்பு வைத்துக்கொள்ளச் சொல்லுவதாகும். இந்த நாட்குறிப்புகளைச் சேர்த்துப்பார்த்து ஆராய்ச்சி செய்து அவர்களது உளவியல்பற்றி முடிவுகள் செய்யலாம். நாம் முன்கூட்டியே அவர்களுக்கு இவ்வாறு ஆராய்ச்சி செய்யப்போகிறோம் என்று சொன்னால் அது அவர்கள் நாட்குறிப்பு எழுதுவதைப் பாதிக்கத்தான் செய்யும். நாம் முன்கூட்டியே அவர்களுக்கு இதைப்பற்றிச் சொல்லிவிட்டால் அவர்கள் முறையாக எழுதமாட்டார்கள். ஆகவே, இந்தச் சிக்கலைக் கூடியமட்டும் நல்லமுறையில் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

இளைஞர்கள் நாட்குறிப்பு வைப்பதற்குப் பதிலாக அவர்களது பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரைப்பற்றியும் தொடர்ந்து நாட்குறிப்பு வைக்கலாம். இவ்வாறு வைக்கும் நாட்குறிப்பு, மாணவர்கள் வைக்கும் நாட்குறிப்பைவிட நம்பகமாக (reliability) இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதனுடைய குறைபாடு என்னவென்றால், இளைஞர்களது உள்ளத்தில் உண்டாகும் நுண்மையான உணர்ச்சிகளை எல்லாம் இந்த நாட்குறிப்பிலிருந்து

தெரிந்துகொள்ளுவது இயலாததாகும். ஆகவே, இருவகையான நாட்குறிப்புகளையும் வைத்து அவற்றின் அடிப்படையில் ஆராய்ச்சி செய்வது நலமாகும்.

நாட்குறிப்பு முறையோடு தொடர்பான சில முறைகள் சுய சரிதை, வாழ்க்கை வரலாறு ஆகியவையாகும். இவ்விரண்டுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு நாட்குறிப்பு முறைக்கு உண்டு. சுய சரிதை எழுதும் ஒருவன் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தபிறகு இறுதியில் பின்நோக்காகப் பார்த்து எழுதுகின்றான். அதுபோலவே, வாழ்க்கை வரலாறு எழுதுபவனும் நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தபிறகு பின்நோக்காகப் பார்த்து எழுதுகின்றான். மேலும், சுயசரிதை அல்லது வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களுக்குத் தாங்கள் எழுதுவது அச்சாகிப் பலரும் படிப்பார்கள் என்ற உணர்வு இருக்கும். இந்த உணர்வு காரணமாக அவர்கள் எழுதுகின்ற வகை பாதிக்கப்படும். பொதுமக்கள் தெரிந்துகொள்ளக்கூடிய செய்திகளை மட்டும் எழுதுவார்கள். எல்லா விவரங்களையும் எழுதுவது முடியாது; அந்தரங்கமான சொந்தச் செய்திகள் எழுதப்படமாட்டா. இவ்விரண்டு குறைகளும் நாட்குறிப்பு முறையில் இல்லாமல் போகின்றன. நாட்குறிப்பு எழுதுபவர் ஒரு நிகழ்ச்சி நடக்கின்ற அப்பொழுதே எழுதுகின்ற காரணத்தால் எழுதும் செய்திகள் உண்மையாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும் இருக்கும். பிறரால் படிக்கப்படும் என்கின்ற எண்ணத்தோடு எழுதப்படாத காரணத்தால் மிகச் சொந்தமான அந்தரங்கமான செய்திகளும் நாட்குறிப்புகளில் இடம்பெறும். இவ்வாறு உண்மையாக எழுதுகின்ற நாட்குறிப்புகளிலிருந்து வேறு எந்த வகையிலும் கிடைக்கப்பெறாத செய்திகள் கிடைக்கப்பெறும். நாட்குறிப்பு எழுதுபவர்களின் உள்ளத்தில் உள்ள அந்தரங்க ஆசைகள், எண்ணங்கள், மனப்போராட்டங்கள், அச்சங்கள் ஆகியவற்றையெல்லாம் நாட்குறிப்பிலிருந்து நாம் தெரிந்துகொள்ள முடியும். வாழ்க்கை வரலாறு அல்லது சுயசரிதையின் மூலமாக இவற்றைத் தெரிய இயலாது. இன்னும் சொல்லப்போனால் இத்தகைய நாட்குறிப்புகள்தாம் வாழ்க்கை வரலாறு எழுதுவதற்கும் சுயசரிதை எழுதுவதற்கும் ஆதாரமாக இருக்கும். நாட்குறிப்புகளைப் போன்றே குமரப் பருவத்துப் பிள்ளைகள் எழுதும் கடிதங்களும் ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். கடிதங்களை மிக நெருங்கிய நண்பர்களுக்கும் எழுதுவதால் அப்பொழுதும் மனம் திறந்து எழுதுவதற்கு வாய்ப்பு உண்டு.

### தனியாள் வரலாற்று முறை

குமரப் பருவத்துப் பிள்ளைகள்பற்றி ஆராய்வதற்கு மிகவும் பயனுள்ள ஒரு முறை தனியாள் வரலாற்று முறையாகும். இது ஒரு தனிக்

குழந்தையை எடுத்துக்கொண்டு அதனுடைய வரலாற்றை எழுதி அதனடிப்படையில் ஆராய்ச்சி செய்வதாகும். இதனைத் தனியாள் ஆராய்ச்சிமுறை என்றும் சொல்லுவது உண்டு. இவ்வாறு ஆராய்ச்சி செய்வது ஒரு பிள்ளையின் முழுத் தன்மையும் தெரிந்துகொள்ளு வதற்கு உதவியாக இருக்கும். அவனுடைய முழு ஆளுமையைப் பற்றிய தெளிவு இம் முறையின் மூலமாக உண்டாகும். சில குமரப் பருவத்துக் குழந்தைகளிடம் சிக்கல்கள் மிகுந்திருக்கும். அவனால் பல பிரச்சினைகள் உண்டாகலாம். இத்தகையவர்களைப் ‘ பிரச்சினைக் குழந் தைகள் ’ என்று சொல்வார்கள். இவர்களை நன்கு புரிந்துகொண் டால்தான் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களை நல்வழியில் நடத்துவதற்கும் முடியும். இதற்குத் தனியாள் வரலாற்று முறை மிகவும் பயன்படும். தனியாள் ஆராய்ச்சி செய்யும்பொழுது நாம் அப் பிள்ளையின் பிறப்பு, வாழ்க்கை வரலாறு, குடும்பச் சூழ்நிலை, குடும்ப வரலாறு, வாழும் வட்டாரத்தின் சூழ்நிலை, சமூகப் பொருளா தாரப் பண்பாட்டுச் சூழ்நிலை, அப் பிள்ளையின் ஆளுமை வளர்ச்சி, தற்போதைய நிலை, எதிர்கால வளர்ச்சி முதலியனபற்றிச் செய்திகள் சேகரிக்கவேண்டும்.

தனியாள் ஆராய்ச்சி செய்வதற்குப் பல வழிமுறைகளைக் கையாள லாம். பின்வருவன செய்தி விவரங்கள் சேகரிப்பதற்குப் பயன்படக் கூடிய சில முக்கிய வழி முறைகளாகும் :

(1) உற்றுநோக்கல்

(அ) பையனுக்குத் தெரியாமல் அவன் தனியாக இருக்கும் பொழுதும், தனக்குத்தானே பேசிக்கொள்ளும் பொழுதும் அல்லது ஏதாவது செய்யும்பொழுதும் உற்றுநோக்கி அறிதல்

(ஆ) தோழர்களுடன் தெருவில் விளையாடும்பொழுதும், மற்ற நடவடிக்கைகளின்போதும் உற்றுநோக்கி அறிதல்.

(இ) பள்ளியிலும் வகுப்பிலும் உற்றுநோக்குதல்.

(2) பையனுடன் நட்பு முறையில் பேசுதல்.

(3) பிள்ளையின் சகாக்களுடனும் நண்பர்களுடனும் யதார்த்த மாகப் பேசுதல்.

(4) பிள்ளையின் பெற்றோருடனும், சகோதர சகோதரிகளுட னும், வீட்டிலுள்ள மற்றவர்களுடனும் பேசுதல்.

(5) தலைமை ஆசிரியருடனும், ஆசிரியர்களுடனும் பேட்டிகள்.

(6) பள்ளிக்கூடத்துக் குறிப்பேடுகள்.

(7) பிள்ளையின் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் முதலியன.

(8) பையன் வரைந்த ஓவியங்கள்.

தனியாள் ஆராய்ச்சி செய்வதற்கான ஒரு மாதிரிக் கேள்வி நிரலும், அதன் மூலம் கிடைக்கும் செய்தி விவரங்களைக் குறித்துவைக்க ஒரு மாதிரிப் படிவமும் இந்த அதிகாரத்தின் இறுதியில் கொடுக்கப் பட்டுள்ளன.

நரவிட்டு முறை

குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஆளுமையை மதிப்பிடுவதற்கோ அல்லது வேறு இயல்புகளை மதிப்பிடுவதற்கோ பயன்படக் கூடிய ஆராய்ச்சிமுறை தரவீட்டு முறையாகும். தரவீட்டுமுறை மதிப்பீடு செய்வதற்கு மிகவும் பயன்படக்கூடிய ஒரு முறையாகும். தரமிடுகின்ற வழிகள் பல வகையாக உள்ளன. உதாரணமாக, ஐந்து புள்ளித் தரவீட்டு முறையில் குழந்தைகளின் இயல்புகளை அளவிடலாம்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ' மிகவும் அதிகம் ; | அதிகம் ; | சுமார் ; | குறைவு ; | மிகவும் குறைவு.' |

மேலே கொடுக்கப்பட்டிருப்பது ஐந்து புள்ளித் தரவீடு ஆகும்.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| அதிகம் ; | சுமார் ; | குறைவு ; |

மேலே கொடுக்கப்பட்டிருப்பது 3 புள்ளித் தரவீடாகும்.

இத்தகைய தரவீடுகளைப் பயன்படுத்தி ஒரு குழந்தையின் பல்வேறு இயல்புகளை ஒவ்வொன்றாக அளவிடலாம். இதற்கு இந்த இயல்புகளின் பட்டியல் ஒன்று தயார் செய்து வைத்திருக்க வேண்டும். உதாரணமாக :

புறத்தோற்றத்தின் கவர்ச்சி
உணர்ச்சிச் சமநிலை
உடல் உறுதி
கால உணர்வு
தன் முயற்சி
ஊக்கம்
வேலையொழுங்கு

முதலியன.

தரவீட்டு முறையைப் பயன்படுத்தி அளவிடுவது ஓர் ஆசிரியராகவும் இருக்கலாம்; அல்லது சில ஆசிரியர்கள் சேர்ந்தும் செய்யலாம். மாணவனை நன்கு தெரிந்த ஓர் ஆசிரியர் தரவீடு செய்த பின்னர் மூன்று, நான்கு ஆசிரியர்கள் சேர்ந்து மாணவனை நேரில்

கண்டு வாய்மொழி (direct interview) மூலம் கூட்டாகத் தரவீடு செய்தால் செய்யும் மதிப்பீடு நம்பகமாக இருக்கும்.

மேற்கண்ட ஐந்து புள்ளித் தரவீடு, மூன்று புள்ளித் தரவீடு முறைகள் தவிர வேறு வகையாகவும் தரவீடு செய்வது உண்டு. புள்ளிகளுக்குப் பதிலாக சதவிகிதத்தையும் எண்களையும் பயன் படுத்துவதுண்டு. தரவீட்டு முறையில் உள்ள முக்கியப் பிரச்சினை என்னவென்றால், அளவிடும் இயல்புகளை எவ்வாறு தரப்படுத்திச் சொல்வது என்பதாகும். மேலே கொடுத்த உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். முதல் இனமாகிய புறத்தோற்றத்தின் கவர்ச்சி என்ற சொல் 'மிகவும் அதிகம்,' 'அதிகம்', 'சுமார்', 'குறைவு', 'மிகவும் குறைவு' என்றால் பொருள் என்ன என்று ஒவ்வொரு தரத் துக்கும் விளக்கம் கொடுக்கவேண்டியது அவசியம். அவ்வாறு விளக்கம் கொடுத்தால்தான் தரவீட்டு முறையைப் பயன்படுத்துவது எளிதாக இருக்கும். இதுபோன்றே உணர்ச்சிச் சமநிலை 'மிகவும் அதிகம்', 'அதிகம்', 'சுமார்', 'குறைவு', 'மிகவும் குறைவு' என்றால் பொருள் என்ன என்று தரநிலைகள் ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்லுவது அவசியமாகும். இதுபோன்றே உடல் உறுதி, கால உணர்வு ஆகிய பிற இனங்களுமாகும்.

### கேள்விநிரல் முறை

கேள்விநிரல் முறை மிகவும் சாதாரணமாகப் பயன்படுகின்ற ஓர் ஆராய்ச்சி முறையாகும். பொதுவாகச் செய்திகளையும் விவரங்களை யும் சேகரிப்பதற்குக் கேள்விநிரல் பயன்படும். இவைதவிர எண்ணங் களையும், கருத்துகளையும் தெரிந்துகொள்வதற்கும் இதைப் பயன் படுத்துவதுண்டு. கேள்விநிரல் முறையை எப்பொழுது பயன்படுத்த வேண்டும், எப்பொழுது பயன்படுத்தக்கூடாது என்று தெரிந்து கொள்ளவேண்டும். செய்தி விவரம் சேகரிப்பதற்கு நேரடியாகச் செல்லவேண்டியதில்லை, நேரடியாகக் கேட்கவேண்டியதில்லை என்ற நிலையில் கேள்விநிரல் முறையைப் பயன்படுத்தலாம். நேரடியாகச் சென்று கேட்டால் சிலரையே பார்க்கமுடியும். கேள்விநிரல் தயார் செய்தால் அதனை ஏராளமான பேர்களுக்கு ஒரே சமயத்தில் கொடுக்க இயலும். தொலைவில் உள்ள பல பகுதிகளில் வாழ்கின்ற பிள்ளைகளுக்கும் இக் கேள்விநிரலை அனுப்பிச் செய்திகளைச் சேகரிக்க முடியும்.

கேள்விநிரல் ஒன்றை எவ்வாறு தயார் செய்வது? இது மிக முக்கியமான முதல் படியாகும். கேள்விகளை உருவாக்கும்பொழுது முதன்முதலாக என்ன நோக்கத்தோடு ஒரு கேள்வியைக் கேட்கின் றோம் என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கேள்

விக்கும் நோக்கம் இருக்கவேண்டும். முக்கியமான, அவசியமான கேள்விகளைமட்டுமே நாம் கேட்கவேண்டும். அவசியமில்லாத கேள்விகளைக் கேட்பதால் எல்லோருக்கும் சிரமம்; பதில் எழுதுபவர் களுக்குக் காலமும், சக்தியும் விரயமாகும். அதுபோல ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் வீண் செய்திகளைச் சேகரிப்பதில் சக்தியும் காலமும் விரயமாகும். ஆகவே, கேள்விநிரலில் அவசியமான முக்கியமான கேள்விகள்மட்டும் இடம் பெறவேண்டும். இக் கேள்விகள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்கவேண்டும். படிப்பவருக்குக் கேள்விகளைப் புரிந்துகொள்ளுவதில் சிறிதும் சிரமம் இருக்கக் கூடாது.

கேள்வியைப் புரிந்துகொண்டபிறகு பதில் எழுதுவதும் கூடியமட்டும் எளிதாக இருக்கவேண்டும். மிக விரிவாக பதில் எழுதவேண்டிய அவசியமில்லாது கூடியமட்டும் சுருக்கமாக ஒருசில வார்த்தைகளில் பதில் எழுதுவதாக இருக்கவேண்டும். சில கேள்விகளுக்கு பதில் கொடுக்கும்பொழுது வார்த்தைகள் எழுதக்கூட அவசியம் இல்லாது குறியிட்டால் போதும் என்றுகூட இருக்கவேண்டும். ஆனால், இது பற்றிப் பொதுப்படையாக ஒரு விதியோ கட்டுப்பாடோ இருக்க வேண்டியதில்லை. நமது நோக்கம் எதுவோ அதற்கேற்ப கேள்வி இருக்கவேண்டும். கேள்விக்கேற்ப விடை அளிக்கப்படவேண்டும். சில சமயங்களில் குமரப் பருவத்துப் பிள்ளைகள் விரிவாக எழுதினால் தான் நாம் விரும்பும் விவரம் கிடைப்பதாக இருக்கும். இப்போது அதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டியதுதான்.

கேள்விநிரல் அமைக்கும்பொழுது இன்னொன்றும் நாம் மனத்தில் கொள்ளவேண்டும். கிடைக்கும் பதில்களை எவ்வாறு தொகுக்கப் போகின்றோம் என்பதை மனத்தில்கொண்டு அதற்கேற்ப கேள்விகளை அமைக்கவேண்டும். மேலும், நாம் கேட்பது செய்தியா அல்லது கருத்தா என்பதையும் தெளிவுபடுத்திவிடவேண்டும். செய்தியையும் கருத்தையும் குழப்புகின்ற நிலையை உண்டாக்கக்கூடாது.

கேள்விநிரல் நல்ல முறையில் அமைவதற்கு அதனை முதல்முறையாகத் தயார் செய்தவுடன் வேறு சிலரிடம் காட்டி அவர்கள் அதிலுள்ள குற்றங் குறைகளை எடுத்துக்காட்டச் சொல்லவேண்டும். வேறு சிலர் பார்க்கும்பொழுதுதான் குறைகள் தெரியும். ஒருவர் மட்டும் ஒரு நல்ல கேள்விநிரலைத் தயாரிக்க முடியாது; மற்றவர்கள் காட்டுகின்ற குறைகளை நீக்கி, சொல்கின்ற யோசனைகளை ஏற்றுக் கேள்விநிரலை மாற்றி அமைக்கவேண்டும்.

இவ்வாறு மாற்றி அமைத்த கேள்விநிரலை முதன்முதலில் வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கவேண்டும். இதற்கு முன்னறி சோதனை

(prognostic test) என்று பெயர். அதாவது நாம் யார் யாருக்குக் கேள்விநிரலைக் கொடுக்கப்போகின்றோமோ அதே தன்மையுடைய ஒருசில குமரப் பருவத்துப் பிள்ளைகளுக்கு முதலில் கொடுத்து அவர்கள் எவ்வாறு பதில் எழுதுகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். கேள்விநிரலிலுள்ள நிறைகுறைகள் அப்பொழுதுதான் தெரிய வரும். குமரப் பருவத்து நிலையிலுள்ள பிள்ளைகள் அக் கேள்விகளை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள், எவ்வாறு பதில் தருகிறார்கள் என் பதையெல்லாம் பார்க்கும்பொழுது பல வகைகளில் கேள்விநிரலைத் திருத்தி அமைப்பதற்கு வாய்ப்பு உண்டாகும். கேள்விநிரலிலுள்ள கேள்விகளின் சொல் நடையைச் செம்மைப்படுத்துவதற்கும் இது உதவும். இந்த முன்சோதனையில் ஈடுபடுகின்ற பிள்ளைகள் கொடுக்கும் பதில்களைக்கொண்டு தொகுத்துப் பார்க்கவேண்டும். இவ்வாறு செய்தால் பின்னர் தொகுத்துப் பார்ப்பதிலுள்ள சிரமங்கள் தெரிய வரும். தக்க முறையில் கேள்விநிரலை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

இவ்வாறு நல்ல முறையில் தயார் செய்யப்பட்ட கேள்விநிரலைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து, அவர்களுடைய பதில்களையெல்லாம் சேர்த்து வகைப்படுத்தி ஆராயவேண்டும். பதில்களை வெறும் கணக்கு ரீதியாகத் தொகுத்துச் சொன்னால் போதாது. புள்ளி விவரங்கள் கொடுத்தால்மட்டும் போதாது. புள்ளி விவரங்களின் பொருள் என்ன என்று விளக்கிச் சொல்லவேண்டும். இத்துணை மாணவர்கள் இதுபற்றி இவ்வாறு சொன்னார்கள் என்று வெறும் புள்ளி விவரம் கொடுப்பதோடுமட்டும் நில்லாது, அதன் பொருள் என்ன என்பதை விளக்கிச் சொல்லுவதும் அவசியமாகும்.

### புறத்தேற்று முறை

உளவியல் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான முறை புறத்தேற்ற முறையாகும். மனித உள்ளத்தின் தன்மையை மறைமுகமாகத் தெரிந்துகொள்ளும் முறை இது ஆகும். ரோஷாக் சோதனையும் புகழ்பெற்ற ஒரு புறத்தேற்றச் சோதனையாகும். இவற்றைக்கொண்டு குமரப் பருவத்துப் பிள்ளைகளின் ஆளுமைத் தன்மைகள்பற்றித் தெரிந்துகொள்ள முடியும். ரோஷாக் சோதனையில் மைத்தடங்கள் உள்ள பல அட்டைகள் பயன்படுத்தப்படும். இந்த அட்டைகளைச் சிறிது நேரம் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டும். அதில் அவர்கள் காண்பதை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தோன்றுவதைக் குறித்த காலத்துக்குள் எழுதவேண்டும். இது போன்று காட்டப்படும் அட்டைகள் ஒவ்வொன்றுக்கும் எழுதவேண்டும். இவ்வாறு எழுதியுள்ளவற்றை ஆராய்ச்சி செய்து பார்த்தால்

அதில் அப் பிள்ளைகளின் மனப்போக்குகள், உணர்ச்சி நிலைகள்பற்றிய உண்மை தெரியவரும். இதன் மூலம் ஒரு பிள்ளையின் ஆளுமைத் தன்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

புறத்தேற்றச் சோதனையை வேறு வகையாகவும் செய்யலாம். தூண்டல் சொற்கள் (stimulus words) என்று சில சொற்களுள்ள பட்டியல் ஒன்றைத் தயார் செய்யவேண்டும். நம் ஆராய்ச்சியின் நோக்கம் எதுவோ அதற்கேற்ப இச் சொற்கள் கவனமாகப் பொறுக்கி யெடுத்து இப் பட்டியலைத் தயாரிக்கவேண்டும். இப் பட்டியலிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் ஒன்றன்பின் ஒன்ருகச் சொல்லவேண்டும். ஒவ்வொரு வார்த்தையைச் சொன்ன பிறகும் சிறிது நேரம் கொடுக்கவேண்டும். சோதனை செய்யப்படும் பிள்ளைகள் அந்தக் குறுகிய காலத்தில் உடனடியாகத் தங்கள் மனத்தில் என்ன எண்ணம் தோன்றுகின்றதோ அதனை எழுதவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு வாக்கியம் எழுதவேண்டும். இவற்றை யெல்லாம் சேர்த்து ஆராய்ந்து பார்த்தால் அப் பிள்ளைகளின் மன நிலை தெரியவரும்.

புறத்தேற்ற ஆராய்ச்சி முறையை இன்னொரு வகையாகவும் கையாளலாம் சில நிகழ்ச்சிகளைக் காட்டுகின்ற படங்கள் அல்லது சில காட்சிகளைக் காட்டுகின்ற படங்களை ஒவ்வொன்ருகப் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டும். அவர்கள் படத்தைப் பார்த்து அதன் அடிப்படையில் ஒரு சிறு விளக்கக் கதை எழுதவேண்டும். இவ்வாறு எழுதும் விளக்கக் கதைகளிலிருந்து பிள்ளைகளுடைய அடிமனம் பற்றியும் அவர்களது உணர்ச்சி நிலைகள்பற்றியும் தெரிய முடியும். இதுபோன்று இன்னும் பல புறத்தேற்ற முறைகளைக் கையாளலாம். புறத்தேற்ற முறையின் முக்கியச் சிறப்பு என்னவென்ருல், பிள்ளைகளுடைய அடிமனத்திலுள்ள பதிவுகள், அடிக்கப்பட்டுள்ள உணர்ச்சிகள் முதலியனவற்றை மறைமுகமான வழியில் எடுத்துக் காட்டுவதாகும். ஆளுமைப் பிரச்சினைகளுடைய பிள்ளைகளைப் புரிந்து கொள்ளுவதற்கு இது மிகவும் பயன்படும். புறத்தேற்ற ஆராய்ச்சி முறை உளப்பகுப்பியலுக்கும், உளமருத்துவத்திற்கும் மிகவும் பயன்படும்.

# தனியாள் ஆராய்ச்சிக் கேள்விநிரல்

## (1) சுற்றுப்புற, சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழ்நிலை

(அ) சுற்றுப்புறச் சூழ்நிலை

இடம்: கிராமம், அல்லது நகரம் அல்லது மாநகரம். மக்கள் தொகை.

உள்ளூர்த் தொழில்கள், இருப்புப்பாதை, புகைவண்டி நிலையம், பஸ்வசதி முதலியன.

வீடு: வீட்டின் அமைப்பும் அளவும். கூரைவீடா அல்லது ஓட்டு வீடா? எத்துணை அறைகள்? மாடி உண்டா? தண்ணீர் வசதி.

சுற்றுப்புறம்: அண்டைவீடு, பக்கத்து வட்டாரத்தின் இயல்பு, சுற்றுப்புறத் துப்புரவு, பள்ளியிலிருந்து எவ்வளவு தொலைவு, முதலியன.

(ஆ) சமூகப் பொருளாதார நிலை

1. தந்தை (அல்லது பொறுப்பாளரின்) தொழில், ஊதியம் முதலியன.
2. சொத்து, கார் உண்டா?
3. சாதி, வகுப்பு, சமூக மதிப்பு
4. பொது வேலைகளில் ஈடுபாடுடையவரா?
5. அண்டையயலாரும், பொதுமக்களும் அவரைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?
6. பெற்றோர் சங்கம், பள்ளிக்கூடம்பற்றிய நடவடிக்கைகளில் ஆர்வமுடையவரா?

(இ) பண்பாட்டுச் சூழ்நிலை

1. அவ்வூரில் நூல்நிலையமோ, பூங்காவோ, சினிமாக்கொட்டகையோ உள்ளனவா?
2. அங்குக் கோயில் உள்ளதா? ஒன்று, பலவா? கிறிஸ்துவக் கோயில்கள் உண்டா? மசூதிகள் உண்டா?

3. பொதுக்கூட்டங்கள் நடப்பதுண்டா ?
4. வீட்டில் ரேடியோ, புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியன உண்டா ?
5. அவர்கள் செய்தித்தாள் வாங்குகிருர்களா ?
6. ஓவியங்கள், படங்கள், இசைக்கருவிகள் முதலியன உண்டா?

## (2) குடும்பச் சூழ்நிலையும் வரலாறும்

(அ) குடும்ப அமைப்பு

1. தாய்தந்தை, பாட்டனுர், பாட்டிமார் ஆகியோரின் வயது, இளைய மூத்த சகோதர சகோதரிகள்.
2. உடன் வாழும் உறவினர்கள், கூட்டுக் குடும்பமா ?
3. சொந்த ஊர், குடும்ப வரவு செலவு.
4. பள்ளி செல்லுவதில் பிள்ளைக்குப் பணத் தொல்லைகள் உண்டா ?
5. பெற்ருேர், சகோதர சகோதரிகள் ஆகியோரின் கல்வி.
6. குடும்பத்தின் வரலாறு.

(ஆ) பெற்ருேரின் கல்வியும் பண்பாடும்

1. பெற்ருேரின் நுண்ணறிவு.
2. கல்வித் தகுதிகள், அறிவுத்தரம்
3. பண்பாட்டின் தரம்.
4. சமயச் சார்புகள்.

(இ) குடும்பத்தின் உணர்ச்சி நிலை

1. தந்தையின் ஆளுமை; அதிகாரத் தோரணையுடையவரா, அல்லது அடக்கமாக இருப்பவரா ?
2. மனைவிக்கு அடங்குபவரா ?
3. தாயின் ஆளுமை ; அன்பும் சகிப்புத் தன்மையும் உடையவரா ? எரிச்சல் குணமுடையவரா ?
4. மூத்த, இளைய சகோதர சகோதரிகளின் ஆளுமைத் தன்மைகள்.
5. குடும்பச் சூழ்நிலை இன்பமாக நிறைவாக உள்ளதா? கவலைகள் சிக்கல்கள் நிறைந்து உள்ளதா ?

6. குடும்பத்தின் சமூக வாழ்வு, நண்பர்கள் உள்ளனரா? விருந்தினர் வருதல் போதல்.
7. வீட்டிலிருந்து வெளியே செல்லுதல், நகரத்திலிருந்து வெளியூர் செல்லுதல்.
8. நகரத்தைவிட்டுச் சென்று பிள்ளை உறவினர்களைப் பார்ப்பதுண்டா ?

## (3) வாழ்க்கை வரலாறும், ஆளுமை வளர்ச்சியின் தற்போதைய நிலையும்

(அ) பிறப்பும் குழந்தைப் பருவமும்

1. இயல்பான பிறப்பா? துன்பமான பிள்ளைப் பேறு?
2. குழந்தைப் பருவத்தில் நோய்கள்.
3. குழந்தைப் பருவத்தில் விபத்துகள்.
4. உடல் தோற்றம்: உயரம், எடை, அளவு, வயது, நிறம்.
5. அம்மை குத்தப்பட்டதா? ஏதாவது மருத்துவ பராமரிப்பு உண்டா? உணவு ஊட்டம்.
6. ஆடையின் தன்மை?
7. உடல் குறை ஏதேனும் உண்டா?
8. உடற் பயிற்சிப் போட்டி, வெளியில் சென்று விளையாடுவதில் விருப்பங்கள். எங்கு விளையாடுகிறான்?

(ஆ) உள-சமூக (Psycho-Social) நிலைகள்

1. நண்பர்கள் உண்டா? எத்தனை பேர்?
2. தலைமைப் பண்புகள்.
3. பெண்களோடும் ஆண்களோடும், தனியாகவும் சேர்ந்தும் பழகுதல்.
4. சமூக வாழ்வில் ஏதேனும் முக்கிய இடர்ப்பாடுகள்.
5. தன் வயதுள்ள குழந்தைகளின் நட்பை விரும்புகிறதா, அல்லது தன்னைவிட அதிக வயதுடைய அல்லது குறைந்த வயதுடைய குழந்தைகளின் நட்பை விரும்புகிறதா?

6. பிள்ளையின்பால் பெற்றேரின் மனப்பான்மை?
7. குடும்பத்திலுள்ள மற்றவர்களின் மனப்பான்மை?
8. அண்டை அயலிலுள்ள பிள்ளைகள், வயது வந்தோர் ஆகியோரின் மனப்பான்மைகள்?
9. ஏதேனும் முக்கிய நிகழ்ச்சிகள்.

(இ) பள்ளிக்கூடத்தில்

1. பள்ளியின் நிலை.
2. படிப்பில் அறிவுத் திறமை? எப்போதாவது வகுப்பில் தவறியது உண்டா? வகுப்பில் தரம்? நுண்ணறிவின் தரம்?
3. சிறப்பான திறமைகள், இடர்ப்பாடுகள் முதலியன.
4. வகுப்புக் குழுவில் முன் நிற்றல், எத்தனை நண்பர்கள்? எத்தகையவர்?
5. ஆசிரியரின் அபிப்பிராயம்.
6. குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் ஏதேனும் உண்டா?
7. பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள்.
8. பிள்ளையின் உணர்ச்சி நிலைகள். மகிழ்ச்சியான மனநிலை உடையவனா? உயர்வு அல்லது தாழ்வு மனப்பான்மை உடையவனா? கூச்சமுடையவனா? ஏமாற்றமான மன நிலையை உடையவனா?
9. பள்ளி வேலைபற்றிக் கவலை உண்டா? குடும்பத் துயரங்கள் தாக்குவதுண்டா?
10. மிக நெருங்கிய நண்பர்கள் யாராவது உண்டா?
11. உரையாடல் திறன்.
12. பேச்சிலும் படிப்பிலும் உள்ள திறன்.
13. பாடப்புத்தகங்கள் தவிரப் படிக்கும் வேறு நூல்கள் எவை ?
14. ஆசிரியரால் ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுண்டா?
15. வாழ்க்கையின் குறிக்கோள்.

காலை எழுகையிலிருந்து இரவு தூங்கப்போகும் வரையில் ஒரு நாள் முழுவதும் பையனின் நடத்தையை உற்றுநோக்கி அறிந்து குறித்துக்கொள்ளவும். பையனின் நட்புகள், உறவுகள் தோன்ற ஒரு சமூக வரைபடம் வரையவும்.

## (4) எதிர்கால ஆளுமை வளர்ச்சி

1, 2, 3 தலைப்புகளில் கூறப்பட்டவற்றை ஒழுங்குபடுத்தி வகைப்படுத்தி, அவைபற்றிச் சிந்தனை செய்து, ஆக்க முறையில் முடிவுகளும் யோசனைகளும் கூறவும், பிள்ளையின் தற்போதைய நிலையாய பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்குத் தீர்வு காணவும்; பிள்ளை வளமாக வளரவும் யோசனைகள் கூறவும்.

## தனியாள் ஆராய்ச்சி முதல் விவர ஏடு

1. பிள்ளையின் பெயர்....................................................
2. பிள்ளையின் வயது..............ஆண்டு.........மாதம்............
3. பால்: ஆண்..................பெண்...............
4. பிள்ளை படிக்கும் வகுப்பு, படிவம்.................................
5. பள்ளியின் பெயரும், அதன் வட்டாரமும்......................
   .........................................................................
6. பிள்ளையின் தந்தை அல்லது பொறுப்பாளரின் பெயர்......
   .....................அவருடைய தொழில்..................

## தனியாள் ஆராய்ச்சி அறிக்கைப் படிவம்

(1) சுற்றுப்புற, சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழ்நிலை

1. வாழும் ஊர்

2. வீடு

3. சுற்றுப்புறம்

4. பெற்றோரின் சமூக மதிப்பு

5. பொருளாதார நிலை

6. பண்பாட்டுச் சூழ்நிலை

(2) குடும்பச் சூழ்நிலையும் வரலாறும்

1. குடும்ப அமைப்பு

2. பெற்றோரின் கல்வியும் பண்பாடும்

3. குடும்பத்தின் உணர்ச்சி நிலை

(3) வாழ்க்கை வரலாறும், ஆளுமை வளர்ச்சியின் தற்போதைய நிலையும்

1. பிறப்பும் குழந்தைப் பருவமும்

2. உள-சமூக நிலைகள்

3. பள்ளியில்

4. ஒருநாளைய நடத்தை

(4) எதிர்கால வளர்ச்சியும், பிரச்சினைகளும், யோசனைகளும்

# 11. குமரப் பருவத்துக்குப் பின்

குமரப் பருவம் முடிந்தபின் முழு வளர்ச்சியுற்ற முதிர்ச்சிப் பருவம் தொடங்குகின்றது. குழந்தைப் பருவம், குமரப் பருவம் ஆகிய இரண்டு பருவங்களைவிட முதிர்ச்சிப் பருவமானது மிகவும் அதிக காலம் உடையது. குமரப் பருவத்தில் எல்லா வகையாலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்குமென்றால் முதிர்ச்சிப் பருவம் நல்ல முறையில் அமையும்.

குமரப் பருவம் முடிந்து வயது முதிர்வது என்றால் அதன் பொருள் என்ன? இதற்குப் பலர் பலவாறு விளக்கம் கொடுக்கிறார்கள். ஆனால், பொதுவாக எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு விளக்கமாவது :

1. வயது முதிர்ச்சியுற்றவர்கள் உலக நிலையை உள்ளது உள்ளவாறு காண்பார்கள். கற்பனைக் கண்கொண்டோ அல்லது உணர்ச்சி வயப்பட்டோ பார்ப்பதில்லை. குழந்தைப் பருவத்திலும், குமரப் பருவத்திலும் இவ்வாறு பார்ப்பது உண்டு.
2. தன்னிச்சை, தனக்குச் சரியென்று படுவதைத் தன் பொறுப்பில் சுதந்திரமாகச் செய்வார்கள்.
3. உலக நிலையை நன்கு புரிந்துகொண்டு அதற்கேற்ப ஒட்டியொழுகுவார்கள்.

இன்னொரு வகையாகச் சொன்னால் வயதுவந்த நிலையிலுள்ள ஒருவருக்கு ஒரு பக்குவநிலை ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லலாம். இந்தப் பக்குவநிலையின் தன்மைபற்றி ஆராய்ந்து பார்க்கலாம். ஒவ்வொரு கூறாக எடுத்துப் பார்க்கலாம்.

முதலாவது உடல் வளர்ச்சி

குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி வேகமாக ஏற்பட்டு அப் பருவம் முடியும்தறுவாயில் முழுமனித நிலை உண்டாகும். உடலின்

உயரம், பருமன், எடை, முதலியனவெல்லாம் முழுமனித நிலை அடைந்துவிடும். பால் உறுப்புகளும் முழு வளர்ச்சியுற்ற நிலையில் இருக்கும். திருமணம் செய்து இல்வாழ்க்கை நடத்தக்கூடிய பக்குவ நிலை ஏற்பட்டிருக்கும்.

## இரண்டாவதாக உணர்ச்சியின் வளர்ச்சி

குமரப் பருவப் பிள்ளை இறுதியில் வீட்டிலுள்ள பெற்றோர்களைச் சார்ந்திருக்காது சுதந்திர உணர்ச்சியோடு தனது காரியங்களைத் தானே கவனித்துக்கொள்ளுகின்ற தன்னம்பிக்கை பெற்றிருக்க வேண்டும். சிறுசிறு காரணங்களுக்காகக் கோபப்படுகின்ற தன்மை இருக்கக்கூடாது. எழும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறமை உண்டாகியிருக்கவேண்டும். தனது வயதுநிலையிலுள்ள எதிர் பால் பிள்ளைகளுடன் (ஆண் என்றால் பெண்களுடன், பெண் என்றால் ஆண்களுடன்) பழகுவதில் தயக்கம் இல்லாதிருக்கவேண்டும். திருமணம் செய்து குடும்பம் நடத்துவதற்கான ஆர்வமும் தன்னம்பிக்கையும் இருக்கவேண்டும். இவ்வாறு இல்லாது தொடர்ந்து ஒருவன் பெற்றோரையே சார்ந்து இருப்பான் என்றால், அல்லது தன் பால் நண்பர்களோடு மிகவும் பழகி அவர்களையே சார்ந்து இருப்பான் என்றால், அவன் உணர்ச்சியில் வளர்ச்சியுற்றதாகச் சொல்லமுடியாது.

சிறு குழந்தை சிறிதும் தயக்கமின்றி, கட்டுப்பாடு இல்லாது தனக்கு வருகின்ற உணர்ச்சிகளை வெளியிட்டுவிடுகின்றது. குமரப் பருவத்துப் பிள்ளை ஓரளவுக்குத் தன் கட்டுப்பாட்டோடு உணர்ச்சியை வெளியிடுவான். ஆனால், வயதுவந்த பக்குவநிலை அடையும்பொழுது உணர்ச்சியை முறையில்லாத முறையில் வெளிக்காட்டாது அதனைக் கட்டுப்படுத்தி நாகரீகமாக வெளியிடவேண்டும்.

## மூன்றாவதாக அறிவு வளர்ச்சி

குமரப் பருவம் முடிந்த நிலையில் குறைந்தபட்ச அறிவுத் தரமாவது ஏற்பட்டிருக்கவேண்டும். அதாவது, ஒருவருடைய மனவயது 13ஆவது இருக்கவேண்டும். அறிவு வளர்ச்சியானது 16 வயதிலிருந்து 25 வயதிற்குள்ளே ஏதாவது ஒரு சமயத்தில் பக்குவம் அடையும். ஆராய்தல், சிந்தனை செய்தல், காரணகாரிய சிந்தனை, சரியாக முடிவெடுத்தல் முதலியவற்றிலெல்லாம் குமரப் பருவத்தின் இறுதியில் ஒருவனுக்குப் போதிய வளர்ச்சியும் பக்குவமும் ஏற்பட்டுவிட வேண்டும்.

நான்காவதாக, ஆர்வங்களின் வளர்ச்சி

குமரப் பருவத்தில் ஆரவாரமான நிகழ்ச்சிகளிலும், விளையாட்டு களிலும் ஆர்வம் கொள்வது வயது முதிர்ந்த நிலையில் இல்லாது போகும். அப்படியே உணர்ச்சிமிக்க நாவல்கள், சினிமாப் படங்கள் முதலியவற்றிலேயும் ஆர்வம் குறைந்துபோகும். வயது வந்த ஒருவன் இவற்றிலெல்லாம் இன்னும் தீவிர ஆர்வம் காட்டுகிறான் என்றால் அவன் சரியாக வளர்ச்சியுறவில்லை என்பதையே அது காட்டும். விளையாட்டுப் போட்டிகளிலும், சமூகக் கேளிக்கைகளிலும் ஓரளவுக்கு ஈடுபாடு காட்டுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், அவற்றிலேயே அதிக ஈடுபாடு காட்டுவான் என்றால் அவனிடம் குமரப் பருவத்துத் தன்மை இன்னும் மாறவில்லை, முதிர்ந்த பக்குவ நிலை ஏற்படவில்லை என்பதே அதற்குப் பொருள்.

ஐந்தாவதாக, சமூகநடத்தையின் வளர்ச்சி

குமரப் பருவத்தில் சில பிள்ளைகளோடு அதிக ஆர்வமாகவும் வேறு சிலரோடு அதிக வெறுப்பாகவும் பழகுவதுண்டு. ஆனால், வயது வந்த பிறகு இந்நிலை இருக்காது, இருக்கக்கூடாது. வயது வந்த நிலையில் எல்லோருடனும் சுமுகமாகப் பழகக்கூடிய ஒரு தன்மை இருக்கவேண்டும். சமூகத் தொடர்புகளில் பலவகை இருக்கும். சில தொடர்புகள் தொழில் காரணமாகவும், சில வேறு காரண மாகவும் ஏற்படும். அதற்கேற்ப நன்றாகப் பழகக்கூடிய திறமை வயது வந்த நிலையில் உள்ளவருக்கு இருக்கவேண்டும். பெற்றோரோடு எவ் வளவுதான் அன்போடு இருந்தபோதிலுங்கூட ஒருவன் வீட்டி லேயே அடைப்பட்டுக்கிடந்து வெளியுலகிலுள்ள பலரோடும் நன் றாகப் பழகாது இருப்பான் என்றால், அது அவன் சமூக வளர்ச்சியுற வில்லை என்பதைக்காட்டும். நன்கு வளர்ச்சியுற்ற ஒருவன் பெற் றோர்பால் அன்பும், மரியாதையும் காட்டத்தான் செய்வான். ஆனால், முக்கிய முடிவுகளையெல்லாம் தானே சுதந்திரமாகச் செய்துகொள்ளக் கூடிய நிலைமை அவனுக்கு இருக்கவேண்டும். குமரப் பருவத்து நிலையில் யார் யாருடன் எவ்வெவ்வாறு பழகவேண்டும் என்ற ஒரு பக்குவத் தன்மை ஏற்பட்டிருக்காது. ஆனால், வயது முதிர்ச்சியுற்ற நிலையில் எல்லோரோடும் தெரிந்தவர்களோடும், தெரியாதவர் களோடும் நன்கு பழகத் தெரியவேண்டும்.

ஆறாவதாக, ஒழுக்க வளர்ச்சி

ஒழுக்கம் அல்லது நீதி உணர்வு குமரப் பருவம் முடிந்து முதிர்ச் சிப் பருவம் தொடங்கும் சமயத்தில் ஓரளவு வளரப்பெற்றிருக்கும், அல்லது வளரப்பெற்றிருக்க வேண்டும். ஓரளவுக்கு வாழ்க்கைக் கொள்கைபற்றி தெளிவு பெற்றிருக்கவேண்டும். அந்தத் தெளி

விற்கேற்ப வாழ்க்கையை எப்படியெப்படி நடத்துவது, என்னென்ன காரியங்கள் செய்வது என்பது படிப்படியாகக் கவனிக்கப்படவேண்டும் ஒருவனிடம் வாழ்க்கைபற்றிய கொள்கை படிப்படியாகத்தான் வளரும். தவறான கொள்கைகள், மனப்பான்மைகள், சமய விருப்பு வெறுப்புகள், இனவிருப்பு வெறுப்புகள் முதலியன வயதுவந்த முதிர்ச்சி நிலையில் இருக்கக்கூடாது. குமரப் பருவம் முடியும்போது நீதி உணர்வு, ஒழுக்கம் முதலியவற்றில் பக்குவம் அடைதல் மிக முக்கியமான ஒன்று.

## இறுதியாகத் தொழிலில் அமர்தல்

முழு மனித வளர்ச்சி நிலையில் ஒருவன் தனக்கு ஏற்ற நல்ட வேலையைக் கண்டுபிடித்து அதில் நல்லமுறையில் அமைந்துவில வேண்டும். என்ன தொழிலுக்குப் போவது என்று முடிவு செய்தல், அதற்கேற்ப பயிற்சி பெறுதல், தக்கதொரு வேலை கண்டுபிடித்தல் முதலிய குமரப் பருவத்து இறுதிக்குள் செய்து முடிக்கவேண்டியவை ஆகும். தக்க வேலையில் அமைந்து தொழிலில் மனநிறைவு ஏற்படு மென்றால் ஒருவன் முழு வளர்ச்சியுற்று இருப்பதாகச் சொல்லலாம் அப்பொழுது அவனுக்குப் பொருளாதார சுதந்திரம் உண்டாகும் பொருளாதாரச் சுதந்திரம் உண்டாகும்போதுதான் ஒருவன் முழு மனித வளர்ச்சி நிலையை அடைகின்றான். சில சமயங்களில் ஒருவன் பொருத்தமில்லாத வேலையில் நுழைந்து சில ஆண்டுகள் கழித்து வேறு வேலைக்குப் போவதுமுண்டு. சிலர் குமரப் பருவம் முடிந்த உடனேயே தொழிலுக்குச் செல்வதில்லை. மேல்படிப்புக்கும், மேல் பயிற்சிக்கும் செல்வதுண்டு. ஆனால், பெருவாரியானவர்கள் எல்லாச் சமுதாயங்களிலும் தொழிலுக்குப் போகிறார்கள்.

குமரப் பருவ நிலையிலிருந்து முதிர்ச்சிநிலை அடைகின்ற ஒருவன் மேற்குறிப்பிட்ட ஏழு வகையாலும் பக்குவம் அடையாது இருக்கலாம். சில வகையால் வளர்ச்சியுற்றும், வேறு சில வகையால் வளர்ச்சியுறா தும் இருப்பதுண்டு. பலருடைய ஆளுமை அமைப்புகளை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் பொதுவாக நல்ல வளர்ச்சியுற்றவர்களாகத் தோன்றியபோதிலுங்கூட ஓரிரு அம்சங்களில் குறைபாடு உடையவர் களாக இருப்பதைப் பார்க்கலாம். எல்லா அம்சங்களிலும் 100 சத விகிதம் வளர்ச்சியுற்று இருப்பவரைப் பார்ப்பது அரிது. சிலர் தங்கள் வாழ்நாள் இறுதி வரைக்குங்கூட சில குழந்தைப் பருவப் பழக்கங்களை விட்டுவிடுவதில்லை. கோல் என்னும் ஆசிரியர் இதற்குச் சில நல்ல எடுத்துக்காட்டுகள் கொடுத்துள்ளார். இவர்களெல்லாம் பொதுவான முறையில் நன்கு வளர்ச்சியுற்றவர்களே. ஆனால், அவர்களிடம் குறைகள் இருப்பதையும் பார்க்கலாம்.

'B' 32 வயதுடையவர். விதவையான தனது தாயிற்கு ஒரே மகன். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தவுடன் தகப்பனுருடைய வேலையாகிய புத்தக வியாபாரத்தில் ஈடுபட்டார். ஓராண்டு கழித்துத் தகப்பனுர் இறந்துபோனுர். எப்பொழுதுமே B-க்குத் தனது தாயார் பேரில் அதிக பற்று உண்டு. எல்லா வகையிலும் தாயார்தான் அவருக்கு உதவியாக இருந்தார். அவருடைய துணிகளை ஒழுங்கு படுத்துவது, அவருக்கு வேண்டிய பொருள்களை வாங்கிவைப்பது, எப்பொழுதும் உடனிருப்பது, புத்தகங்களிலிருந்து வாசித்துச் சொல்லுவது, அவருக்குப் பிரியமான பலகாரங்களைச் செய்வது, அவரது வேலைத்திட்டத்திற்கேற்ப தனது வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளுவது, அதிகவேலை இருக்கும்பொழுது உதவியாக இருப்பது, வரவு செலவுக் கணக்குகளை வைத்துக்கொள்ளுவது, வீட்டிற்கு யார்யாரை அழைக்கவேண்டும் என்பதை யோசித்துப் பார்த்து அழைப்பது, இன்னும் எல்லா வகையான காரியங்களையும் தாயார் தான் செய்து வந்தார். B-ன் வாழ்க்கையின் மையமாக அவர் விளங்குகிருர். B-பெண்களோடு பழகுவதேயில்லை. தனது வயதிற் கேற்ற இளம் பெண்களோடு பழகுவதற்கு ஆர்வமும் கிடையாது. இவ்வாறு இருந்து வந்தபோது தாயார் இறந்துபோனுர்கள். இதனுல் ஏற்பட்ட அதிர்ச்சியை அவரால் தாங்க முடியவில்லை. இதனுல் பல தீய விளைவுகள் உண்டாயின. தனது 'டையை' தானே கட்டிக் கொள்வதற்கும் கஷ்டமாய்ப் போய்விட்டது. தனது 'ஷூக்களை பாலிஷ்' பண்ணவும் தெரியாது. தனக்குரிய பொருள்கள் எவையெவை என்றும் தெரியாது. . சோப்பு, பல்பசை, பிளேடு முதலியனவற்றின் விலை என்னவென்றும் தெரியாது. ஏனென்ருல், அவர் இவைகளை ஒருபோதும் வாங்கியது கிடையாது. அவருக்கு மாதாமாதம் என்ன செலவாகும் என்பது சிறிதும் தெரியவில்லை. வேறு நண்பர்களிடம் இதைப்பற்றிக் கேட்பதற்கு நண்பர்கள் கிடையாது. தாயாரினுடைய மேற்பார்வையும், பாதுகாப்பும், உதவியும் இல்லாத நிலையில் அவர் தனது வேலையைச் சரியாகச் செய்யமுடியாமல் போயிற்று. இதன் காரணமக வேலையை இழந்துவிட வேண்டியதாயிற்று. அவருடைய துணிகள் பழையன ஆகிவிட்டன. ஆனுல், அவருக்கு எங்கே சென்று துணி வாங்குவது, அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது தெரியாது போயிற்று. இவருடைய வளராத குழந்தைத் தன்மையை இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பின்வருவது இன்னெவர் பற்றிய விவரம்.

'F' 24 வயதுடையவர். பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருப்பார். பிறருடன் இனிமையாகப் பழகுவார். குறிப்பாகப் பெரியவர்களோடு நன்கு பழகுவார். அவருக்கு 17 வயது ஆனதிலிருந்து அவர் பல

வேலைகளில் அமர்ந்து, தனது வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தைச் சம்பாதித்துள்ளார். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் நிரம்ப உடையவர். ஆனால், அடையமுடியாத பெரிய லட்சியங்களின்பால் அவர் ஆர்வம் கொள்வார். 17 வயதாய் இருக்கும் பொழுது, சிறந்த பாடகர் ஆகவேண்டும் என்று முடிவு செய்து பள்ளிக்கூடத்திலிருந்து விலகினர். ஒரு சிறிய வேலையில்போய் சேர்ந்தார். அந்த வேலையில் இருப்பதால் இசைப்பயிற்சி பண்ணுவதற்கு தினம் ஒருசில மணி நேரம் ஓய்வு கிடைக்கும். சுமார் இரண்டு ஆண்டுகள் மிகவும் முயன்று கடினமாக உழைத்து இசைத் துறையில் முன்னேறப் பாடுபட்டார். ஆனால், அவரிடம் அதற்கு வேண்டிய இயல்பான திறமையில்லை, ஆகவே, அதிகம் முன்னேற முடியவில்லை. குமரப் பருவத்து இளைஞர்கள் ஏதாவது ஒரு தொழிலில் முதலில் ஈடுபட்டுப் பின்னர் அது பொருத்தம் இல்லையென்று முடிவுசெய்வது உண்டு. ஆகவே, இதைப்பற்றி நாம் மிகப்பெரிதாகக் கருதவேண்டியதில்லை.

தனக்கு இசை சரியாக வரவில்லை என்று தெரிந்தவுடன் 'F' நடனம் கற்பதற்கு ஆரம்பித்தார். நடனம் கற்றுக்கொள்வதற்கான வயது தாண்டிவிட்டது என்று அவரது நண்பர்கள் சொல்லிப் பார்த்தார்கள். ஆனல், அவர் கேட்கவில்லை. நடனப் பயிற்சியில் முழுமூச்சோடு ஈடுபட்டார். இப் பயிற்சிக்கு வேண்டிய நேரம் கிடைப்பதற்காக ஒரு சிறிய வேலையில் அமர்ந்தார். இரண்டு ஆண்டுகள் இந்த நடனக் கலையிலேயே முழுவதும் ஈடுபட்டிருந்தார். அதில் சிறிது முன்னேற்றம் பெறத்தான் செய்தார். ஆனல், ஏற்கெனவே நடனப் பயிற்சியுடைய பலர் இருந்ததால் அதிகப் போட்டியிருந்தது. அதனல் நடனத் தொழிலில் அவர் அதிகமாக வெற்றி பெற முடியவில்லை. ஆகவே, நடனத்தை விட்டு ரேடியோ வேலையில் புகுந்தார். அதன்பால் அவருக்கு அளவுகடந்த ஆர்வம் உண்டாயிற்று. ஒரு பெரிய ரேடியோ ஒலிபரப்பு நிலையத்தில் செய்தி எடுத்துச் சொல்லும் உதவியாளராகப் போய் அமர்ந்தார். கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு குரல்பயிற்சி செய்தார். சிறிய நிகழ்ச்சிகள் சிலவற்றில் அவருக்கு வாய்ப்புக் கொடுத்தார்கள். ஆனல், ரேடியோவில் வேகமாக முன்னேறுவதற்கு வேண்டிய திறமையோ ஆற்றலோ அவரிடம் இல்லை. ஆகவே, சிறிது காலத்தில் அவர் ரேடியோ ஒலிபரப்பு வேலையை விடவேண்டியதாயிற்று.

ஏதாவது ரேடியோ சம்பந்தமான தொழிலில் ஈடுபடவேண்டுமென்று விரும்பவே அவர் ஓர் இசைக் கருவியில் பயிற்சிபெற முயன்ருர். ஓர் இசைக்குழுவில் சிறிய வேலை ஒன்று பெற்றுக்கொண்டு

அதன் இசை நிகழ்ச்சிகளில் சில சமயம் கலந்துகொண்டார்; பின்னர் ஒரு 'பாண்டு' இசைக் குழுவின் செயலாளராக இருந்து சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். சுமார் 6 மாத காலத்தில் மிகவும் முயன்று பார்த்தார். ஆனால், இங்கும் தோல்வியே உண்டாயிற்று. வேலையில்லாமல் போகவே அவர் ஒரு நாடகக் கொட்டகையில் காட்சித்திரைகள் ஏற்பாடு செய்யும் வேலையில் போய் அமர்ந்தார். அங்கு நாடகக் கொட்டகையில் திரைக்குப் பின்னால் நடிகர்களுடைய ஒப்பனைகள், நடவடிக்கைகள், ஆரவாரமான ஏற்பாடுகள் முதலிய வற்றைப் பார்த்தபோது நாடகத்தின்மேல் அவருக்குப் பெரிய காதல் உண்டாயிற்று. ஒரு வாரத்தில் அவர் நாடகக் கலைப் பயிற்சி வகுப்பு ஒன்றில் சேர்ந்தார். ஒரு பெரிய நடிகராக ஆகவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் நிரம்ப உற்சாகத்தோடு பயிற்சியில் ஈடுபட்டார். இப்பொழுது அவர் இதில்தான் இருந்துகொண்டு இருக்கிறார். இன்னும் சில வாரங்களில் அரசாங்கத்தின் ஆணைப்படி ராணுவ சேவைக்குக் காலம் செல்லவேண்டும். இதுபற்றி நிரம்பக் கவலையோடு இருக்கிறார். அவர் நல்ல இனிமையான திறமையுள்ள இளைஞர். அவருக்கு நல்ல குரல் உண்டு என்பதை அவரது ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால், நாடகத் துறையில் அவருக்கு அதிக ஆற்றல் உண்டு என்று ஒருவரும் கருதவில்லை.

குமரப் பருவத்து மனநிலையிலிருந்து 'F' இன்னும் விடுபடவில்லை. எந்தெந்தத் தொழில்கள் மிகப் படாடோபமாக மிக்க கவர்ச்சியாக இருக்கின்றதோ அந்தந்தத் தொழில்கள்மீது அவருக்கு உடனே ஆசை பிறந்துவிடுகிறது. 24 வயதாகியுங்கூட தனக்கு நல்ல திறமை இருக்கக்கூடிய தொழில் ஒன்றைக் கண்டுபிடித்து அதில் நிலையாக முன்னேறக் காணோம். இசை, நடனம், நாடகம் முதலிய கலைகளில் அவருக்குச் சுவை உண்டேயொழிய சிறப்பான திறமையில்லை என்னும் உண்மையை அவர் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை. உணர்ந்தாலும் ஒத்துக்கொள்ளவில்லை. ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக்கொண்டு கிடைக்கும் ஓய்வு நேரத்தில் அவருக்கு எப்பொழுது எது கவர்ச்சியாகத் தோன்றுகிறதோ அதில் உற்சாகத்தோடு ஈடுபடுவது என்பதையே அவர் வாழ்க்கைக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார். அவர் தங்குவது ஒரு சிறிய அறையில். அவர் உண்பது மிகக் குறைவாக. அவருடைய ஒழுக்கத்தில் குறை ஒன்றும் கிடையாது. இதுவரை அவரது நடவடிக்கைகளால் ஒருவருக்கும் கேடு வந்ததில்லை. ஒருவேளை அவர் ராணுவத்தில் சேர்ந்து வேலை செய்யும்பொழுது இப்பொழுதுள்ள மனப்பக்குவமின்மை நீங்கலாம். ஒரு குமரப் பருவத்து இளைஞன் என்ற நிலையைவிட்டுப் பொறுப்பு வாய்ந்த முழுவளர்ச்சியுற்ற மனிதநிலையை அவர் அடையலாம்.

வாழ்க்கையில் நீண்ட காலம்வரை சில உணர்ச்சிக் குறைபாடுகள் தொடர்ந்து இருக்கக்கூடும் என்பதற்குப் பின்வருவது எடுத்துக்காட்டு: 'J' 50 ஆண்டுகளுக்குமேல் வயதானவர். சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே பள்ளிப் பாடங்களில் சிறந்த திறமையுடையவராக விளங்கினர். அதிலும் குறிப்பாகக் கணிதத்தில் மிகச்சிறந்த மாணவராக இருந்தார். 8 வயதாய் இருக்கும்பொழுதே அவர் கூட்டல், பெருக்கல் கணக்குகளையெல்லாம் மிகவேகமாகப் போடுவார். மூன்று இலக்கங்களுடைய எண்களை மனத்திலேயே 10 விநாடிகளில் பெருக்கி விடை சொல்லிவிடுவார். இவ்வாறு தனது திறமையைப் பயன்படுத்திக் கணக்குகள் போட்டுக் காட்டுவதில் அவருக்கு நிரம்ப மகிழ்ச்சி. மற்றச் சிறு பிள்ளைகள் அவருடைய திறமையை அதிகமாகப் பாராட்டவில்லை. அவரைப் பார்த்து நகைக்கவே செய்தார்கள். ஆனால், வயது வந்தவர்கள் அவரை மிகவும் பாராட்டினர்கள். அவருக்கு 10 வயதாக இருக்கும்பொழுது பெரியவர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் அவர் அபூர்வமான கணக்குகளை யெல்லாம் போட்டு அங்குள்ளவர்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தினர். அவர்களுடைய பாராட்டுதல்கள் அவருக்கு நிரம்ப மகிழ்ச்சியை அளித்தன. பாராட்டும், புகழும் மேலும் வரவேண்டும் என்ற தாகம் அவரிடம் வளர்ந்தது. அவர் ஊருக்குத் திரும்பி வந்தபொழுது அங்குள்ள பிள்ளைகள் அவர் தற்பெருமையாக நடந்துகொண்டதை விரும்பவில்லை. எல்லோரும் சேர்ந்து அவரைக் கேலி செய்து இழிவுபடுத்தினர்கள். ஆனல், அவரோ பாடங்களில் நிறைய கவனம் செலுத்தி மிகக் குறைந்த காலத்தில் பள்ளிப் படிப்பை முடித்தார்.

பின்னல் அவர் கணக்கராக ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். அதற்குப் பின் அவர் ஒரு பெரிய கணக்கர் கம்பெனியில் தலைசிறந்த கணக்கு நிபுணராகச் சேர்ந்து வேலை செய்தார். ஏதாவது ஒரு கம்பெனியில் கணக்குகள் குழப்பமாக இருந்தால் உடனே அங்கு இவரை அனுப்புவார்கள். மிகக் குழப்பமான நிலையில் உள்ள கணக்குகளை இவர்மட்டும்தான் சரிசெய்ய முடியும். படிப்படியாக இவர் தம் கணக்குத் திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே வந்தார். ஆகவே இப்பொழுது கணக்கைப் பொறுத்தவரையில் அவர் மிகப் பெரிய நிபுணராக எல்லோராலும் கருதப்படுகின்றார். ஆனல், அவருடைய மனப்பான்மை, குணநலம் சிறிதும் சிறக்கவில்லை. இன்னும் அவர் முன்புபோல் தன்னைப்பற்றிப் பெருமையடித்துக்கொண்டும், தனது புகழ்பற்றியே பேசிக்கொண்டும், தன்மயமாக இருக்கின்ற சிறுகுழந்தை நிலையிலேயே இருக்கின்றார். அவரோடு சேர்ந்து வேலைசெய்பவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவர்கள் அமைதியான தன்மையுடையவர்களா, அவர் சொல்லு

கின்றவற்றையெல்லாம் கேட்டுக் கீழ்ப்படிகின்ற தன்மை உடையவர்களா, அவரிடம் அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசி மகிழ்விப்பவர்களா என்று பார்த்து கம்பெனி நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கின்றார்கள். J-அபூர்வமான திறமையுடையவர் என்கின்ற காரணத்தால் கம்பெனி நிர்வாகிகள் இவரை இழப்பதற்குத் தயாராய் இல்லை. அவர் தன்னுடைய கெட்டிக்காரத் தன்மைபற்றித் தம்பட்டம் அடிப்பதைச் சகித்துக்கொள்ளுகிறார்கள். அவரைப்போன்ற இன்னொரு கெட்டிக்காரர் கிடைக்கும் வரைக்கும் கம்பெனியார் அவரை இழக்க முன்வரமாட்டார்கள். கடந்த 30 ஆண்டுகளில் எத்தனையோ சமயங்களில் கம்பெனியார் அவரை வேலையிலிருந்து விலக்க நினைத்ததுண்டு. ஆனால், அவருடைய சிறந்த மூளை காரணமாக அவ்வாறு செய்யவில்லை.

மேலேகண்ட எடுத்துக்காட்டிலிருந்து வயது மிகவும் அதிகமான பிறகுங்கூட சிலர் ஒரிரு அம்சங்களில் வளர்ச்சியும் பக்குவமும் அடையாது குழந்தை நிலையிலேயே இருந்துவிடலாம் என்பது தெளிவாகின்றது. குமரப் பருவத்தில் சரியான வளர்ச்சி ஏற்படாவிட்டால் இவ்வாறெல்லாம் ஆகிவிடுகின்றது.

குமரப் பருவம் முதிர்ச்சிப் பருவத்துக்கு ஆயத்த காலமாகும். எதிர்காலத்தில் நல்ல வேலையில் அமர்ந்து சிறப்பாகத் தொழில்புரிவதற்கும், திருமணம் செய்துகொண்டு நல்லமுறையில் குடும்பவாழ்க்கை நடத்துவதற்கும், சமூகத்தில் பொறுப்புள்ள குடிமகனாக நடந்துகொள்வதற்கும் வேண்டிய ஆயத்தம் குமரப் பருவத்தில் செய்யப்படல் வேண்டும். இதற்கு வீடும், பள்ளியும், சமூகமும் உதவவேண்டும்.

# கலைச்சொல் அகராதி

## (தமிழ் - ஆங்கிலம்)

### அ

அகமுக (ஆளுமை) — Introvert (Personality)
அச்சம் — Fear
அட்ரினலின் — Adrenalin
அடித்தோல் — Dermis
அடையாள வெகுமதிகள் — Token rewards
அண்ணம் — Palate
அம்மை குத்தல் — Vaccination
அம்மைப்பால் — Vaccine
அமீபம் — Amoeba
அமைப்பு இயல் — Morphology
அமைப்புத் திறமை — Ability, organising
அருஞ்சொல் அகராதி — Glossary
அலைவுப் பலகோணம் — Frequency polygon
அலைவெண் பரவல் — Frequency distribution
அலைவெண் விதி — Law of frequency
அளவு — Quantity
அளவீடு — Measurement
அறிக்கைப் பலகை — Notice Board
அறிதுயில் — Hypnosis
அறிவுரை கூறல் — Counselling
அறிவுரையாளர் — Counsellor
அறிவுசார் செயல்முறைகள் — Cognative processes
அறிவுமுறை உளவியல் — Pure Psychology
அனுபவம் மூலம் கற்றல் — Learning by experience

### ஆ

ஆக்க — Constructive, creative
ஆக்க இயல்பூக்கம் — Instinct of construction
ஆக்க உணர்ச்சி — Creativeness
ஆக்கக் கற்பனை — Productive imagination
ஆக்கச் சிந்தனை — Creative thinking
ஆக்கச் செயல் — Creative activity

ஆக்கநிலை அகற்றல் — De-conditioning
ஆக்கநிலையற்ற அச்சம் — Conditioned fear
ஆக்கநிலை அகற்றிய மறிவினை — De-conditioned reflex
ஆக்கநிலையுறுத்தல் — Conditioning
ஆக்கநிலையுறுத்திய மறிவினை — Conditioned reflex
ஆக்கநிலையுறுத்திய துலங்கல் — Conditioned response
ஆக்கநிலையுறாத் தூண்டல் — Unconditioned stimulus
ஆக்கநிலையுறாத் துலங்கல் — Unconditioned response
ஆக்கநிலையுறா மறிவினை — Unconditioned reflex
ஆண்டு மலர் — Year Book
ஆய்வு — Reasoning
ஆய்கருவி, செய்கருவி — Apparatus
ஆய்ந்தறி — Diagnostic
ஆய்ந்தறி சோதனை — Diagnostic test
ஆய்ந்தறிதல் — Diagnosis
ஆய்வுத் திறமை — Reasoning ability
ஆய்வுச் சோதனை — Reasoning test
ஆயத்த விதி — Learning of readiness
ஆர்வம் — Interest
ஆராய் ஊக்கம் — Instinct of curiasity
ஆர்வம் குறைதல் — Flagging
ஆழ உளவியல் — Depth psychology
ஆழப் புலன் காட்சி — Depth perception
ஆளுமை — Personality
ஆளுமைக் கூறுபாடுகள் — Personality factors
ஆளுமைச் சோதனை — Personality test
ஆளுமைத் தரவீடு — Personality ratings
ஆளுமைப் பண்புகள் — Personality traits
ஆளுமை வகையியல் — Typology
ஆற்றல் — Energy

## இ

இசைத் திறமை — Musical ability
இடிபஸ் சிக்கல் — Oedipus complex
இடைவிட்டுக் கற்றல் — Spaced experience
இடைப்புலன் காட்சி — Spaced perception
இணை — Pair
இமைத்தல் மறிவினை — Winking reflex
இயக்குவாய் — Effector

| | |
|---|---|
| இயக்க ஒருமைப்பாடு | — Motor co-ordination |
| இயக்கச் செயல் | — Motor performance |
| இயக்கு தசை | — Voluntary muscle |
| இயக்கத் திறமை | — Motor ability |
| இயக்கத்திறன் கற்றல் | — Motor learning |
| இயக்க நரம்பு | — Motor nerve |
| இயக்க முறை | — Dynamic method |
| இயக்க வளர்ச்சி | — Motor development |
| இயங்கு | — Dynamic |
| இயங்கு தசை | — Involuntary muscle |
| இயைபு | — Association |
| இயைபுச் சோதனை | — Association test |
| இயல்பூக்கம் | — Instinct |
| இயல்பிகந்த, பிறழ்வான | — Abnormal |
| இயல்பு | — Quality |
| இயல்நிலை ஆளுமை | — Normal personality |
| இயல்நிலை நிகழ்திறக்கோடு | — Normal probability curve |
| இயல்நிலைப் பரப்பு | — Normal distribution |
| இயற்கைத் திறமை | — Aptitude |
| இயற்கைத் தூண்டல் | — Natural stimulus |
| இயற்கைத் தேர்தல் | — Natural selection |
| இயற்கைப் பாடம் | — Nature study |
| இயற்கை விதி | — Natural law |
| இயைபு முறை கற்றல் | — Association learning |
| இரட்டை ஆளுமை | — Double personality |
| இரட்டை, இரட்டையர் | — Twins |
| இரண்டாம்நிலைப் பால் அறிகுறிகள் | — Secondary sex characteristics |
| இல்பொருள் காட்சி | — Hallucination |
| இருமுக | — Ambivert |
| இருகரு இரட்டையர்கள் | — Fraternal twins |
| இருமுகப் போக்கு | — Ambivalance |
| இளம் குற்றவாளி | — Juvenile delinquent |
| இளமைப் பருவம் | — Youth |
| இளைஞர் இயக்கங்கள் | — Youth movements |
| இறப்பு | — Mortality |
| இன அனுபவம் | — Race experience |
| இன உணர்வு | — Race consciousness |
| இனச் செருக்கு | — Race pride |

இன நனவிலி — Racial unconscious
இன நினைவு — Race memory
இன்பக் கொள்கை — Pleasure principle
இனப் பாதுகாப்பு — Race preservation

உ

உட்கரு சுற்றுப் பசை — Cytoplasm
உட்காட்சி — Insight
உட்குழு — Ingroup, clique
உட்குழு மணமுறை — Inbreeding
உட்புலன் உணர்ச்சி — Organic sensation
உட்புலன் காட்சி, முன்னறிவோடு இணைதல் — Apperception
உட்செவி — Internal ear
உடல் அமைப்பு — Physique
உடல் அமைப்பு சார்ந்த உளவியல்புகள் — Physiognomy
உடல் அமைப்பு வளர்ச்சி — Anatomical development
உடல் இயல் — Physiology
உடல் இயல் உளவியல் — Physiological psychology
உடல் உழைப்பு — Manual work
உடல் கட்டுப்பாடு — Bodily control
உடல் தகுதி — Physical fitness
உடல் தண்டனை — Corporal punishment
உடல் நலம் — Mental health
உடல்நல ஓய்வு — Health examination
உடல்நலக் கல்வி — Health education
உடல்நலப் பழக்கங்கள் — Health habits
உடல்நிலை, இருப்புநிலை — Posture
உடற் பயிற்சிக்கூடம் — Gymnasium
உடல் வயது — Physiological age
உடன்பாட்டுத் தொடர்பாடு — Positive correlation
உடன்பிறந்த குழந்தைகள் — Siblings
உடன் பிறப்பாளன், சகோதரன் — Brother
உடனடி நினைவு — Immediate memory
உடைமை உணர்ச்சி — Ownership
உணவு தேடு ஊக்கம், (உணவு தேட்டூக்கம்) — Food seeking instinct
உணர்ச்சிப் புள்ளிகள் — Sensitive spots

| | | |
|---|---|---|
| உணர்ச்சிப் பொருள் | — | Sensed object |
| உமிழ்நீர் மறிவினை | — | Salivary reflex |
| உயர்வு மனப்பான்மை | — | Superiority complex |
| உயிரி | — | Organism |
| உயிரணு பகுப்பு | — | Cell division |
| உயிரணு வேற்றுமைப்பாடு | — | Cell differentiation |
| சீவ உயிரணு ? உட்கரு | — | Nucleus |
| உயிரியல் | — | Biology |
| உருக்குறை | — | Deformity |
| உருவும் பின்னணியும் | — | Figure and ground |
| உரையாடல் | — | Dialogue |
| உள அளவியல் | — | Psychometry |
| உள இயக்க | — | Psycho motor |
| உள்ளுணர்வு | — | Intution |
| உள்செல் நரம்பு | — | Afferent nerve |
| உளச்சோர்வு | — | Depression |
| உளத்தடை | — | Inhibition |
| உள் தூண்டல் | — | Impulse |
| உள நலவியல் | — | Mental hygiene |
| உளநோய் | — | Mental illness, psychosis |
| உளப் பாகுபாட்டு முறை | — | Psycho analytical method |
| உள்ளிடச் செயல்கள் | — | Indoor activities |
| உள பௌதிகம் | — | Psycho-physics |
| உள மருத்துவம் | — | Psycho therapy |
| உள மருத்துவ இயல் | — | Psychiatry |
| உள மருத்துவ முறை | — | Psychiatric method |
| உளவழி நரம்பு நோய் | — | Neurosis |
| உற்றுநோக்கல் | — | Observation |

ஊ

| | | |
|---|---|---|
| ஊக்க நிலை | — | Motivation |
| ஊக்கிகள் | — | Motives |
| ஊட்டம் | — | Nutrition |

எ

| | | |
|---|---|---|
| எண் ஆற்றல் | — | Numerical ability |
| எண்ணாத இயக்கம் | — | Automatic movement |
| எண்ணிய இயக்கம் | — | Voluntary movement |

| | | |
|---|---|---|
| எண்கணக்குத் திறமை | — | Ability arithmetical |
| எண் சோதனை | — | Enumeration test |
| எண் நிரப்புச் சோதனை | — | Number completion test |
| எதிர்மறைத் தொடர்பாடு | — | Negative correlation |
| எதிர்வினைக் காலம் | — | Reaction time |
| எதேச்சாதிகாரத் தலைமை | — | Autocratic leadership |
| எலக்ட்ரா சிக்கல் | — | Electra complex |
| எழில் இயல் | — | Aesthetics |
| எழில் உணர் | — | Aesthetic |
| எழிலுணர் புலன்காட்சி | — | Aesthetic perception |

ஏ

| | | |
|---|---|---|
| ஏற்பு | — | Acceptance |
| ஏற்புடைமை | — | Validity |
| ஏற்புடைய | — | Valied |

ஒ

| | | |
|---|---|---|
| ஒடுக்குதல் | — | Repression |
| ஒத்து அமைத்தல் | — | Adaptation |
| ஒதுக்கப்பட்டோர் | — | Isolates |
| ஒப்புமைச் சோதனை | — | Analogy test |
| ஒருகரு இரட்டையர்கள் | — | Identical twins |
| ஒருதன்மை | — | Uniformity |
| ஒருமித்த ஆளுமை | — | Integrated personality |
| ஒருமைப்படுத்திய இயக்கம் | — | Co-ordinated movement |
| ஒருமைப்பாடு | — | Integration |
| ஒருமைப்படுத்து | — | Integrate |
| ஒழுங்கு | — | Discipline |
| ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை | — | Indiscipline |
| ஒழுங்கு நடவடிக்கை | — | Disciplinary action |
| ஒன்றுறை இல்லம், விடுதி | — | Boarding House |
| ஒன்றுறைப் பள்ளி | — | Boarding School |

ஓ

| | | |
|---|---|---|
| ஓவியத் திறமை | — | Ability drawing |

க

| | | |
|---|---|---|
| கக்குவான் இருமல் | — | Wooping cough |
| கட்டுப்பாடு | — | Control |

| | | |
|---|---|---|
| கட்டுப்படுத்திய | — | Controlled |
| கட்டுப்படுத்திய குழு | — | Control group |
| கட்டுப்படுத்திய உற்றுநோக்கல் | — | Controlled observation |
| கட்டு ஊக்கம் | — | Instinct of construction |
| கட்டளைகளும் தடைகளும் | — | Injunctions and Prohibition |
| கட்டளையிடு | — | Dictate |
| கட்புலன் கூர்மை | — | Visual sentivity |
| கணக்கீடு | — | Computation |
| கண் கொட்டுதல் | — | Winking |
| கண்டனம் | — | Disapproval |
| கண்டறி முறை | — | Method of discovery, Hevristic method |
| கண்டு பிடிப்பு | — | Discovery |
| கணுக்கோல் (குரோமோஸோம்) | — | Chromosome |
| கணையம் | — | Pancreas |
| கதை | — | Fable |
| கயிறு தாவல் | — | Skipping |
| கருத்து | — | Concept, conception |
| கருத்து சார்ந்த | — | Conceptual |
| கருத்தடை | — | Birth control |
| கருத்தியல் ஆய்வு | — | Abstract reasoning |
| கரும்பலகை | — | Black Board |
| கருவி உறை | — | Tolkit |
| கல்வித் திட்டம் | — | Curriculam |
| கல்விபற்றிய | — | Academic |
| கல்வி வயது | — | Educational age |
| கலையும் கைத்தொழிலும் | — | Arts and crafts |
| கலைத் திறமை | — | Artistic ability |
| கவனக் களம் | — | Field of attention |
| கவனச் சிதைவு | — | Distraction of attention |
| கவன வீச்சு | — | Span of attention |
| கவனவீச்சு அறிகருவி | — | Tachistoscope |
| கவின் கலை | — | Fine arts |
| களைப்பு, அயர்ச்சி | — | Fatigue |
| கற்பனை | — | Imagination |
| கற்பிதம் | — | Hypothesis |
| கற்பித்தல் கருவிகள் | — | Teaching aids |
| கற்ற மறிவினை | — | Acquired reflex |
| கற்றல் கொள்கை | — | Theory of learning |

கற்றல் வளைவு — Learning curve
கற்றல் விதி — Law of learning
கற்றறிந்த — Acquired
கனு பாகுபாடு, கனவு ஆராய்ச்சி — Dream analysis
காட்சிக் கருவிகள் — Visual aids
காட்சி கேள்விக் கருவிகள் — Audio visual aids
காமக் கிளர்ச்சி — Eroticism
கால அண்மை விதி — Law of recemcy
கால வயது — Chronological age
கிலி — Phobia
கிளிப்பிள்ளைப் பாடம், நெட்டுரு — Mechanical memory
கிளர்ச்சி — Excitement
கீழ்ப்படியாமை — Disobedience
குடியாட்சித் தலைமை — Democratic leadership
குமரப் பருவம் — Adolescence
குமரப் பருவத்திற்குமுன் — Pre adolescent
குரல் நாண்கள் — Vocal cords
குவிமையம் — Focus
குழந்தைப் பருவம் — Childhood
குழந்தைப் பள்ளி, பாலர்பள்ளி — Nursery school
குழந்தைப் பாட்டு — Nursery rhyme
குழவி — Baby
குழவி இறப்பு — Infant mortality
குழவிப் பருவம் — Babyhood
குழு உணர்வு — Group consciousness
குழு உணர்ச்சி — Group spirit
குழுச் செயல் — Group activity
குழுச் சோதனை — Group test
குழுப் பகைமை — Group hostilities
குழு மனம் — Group mind
குற்றச் சிக்கல், குற்ற மனப்பான்மை — Guilt complex
குறி, குறியீடு — Symbol
குறியீட்டுச் செயல்முறை — Symbolic process
குறியீட்டு முறை — Trial and error method
குறுக்கீடு — Interference
குறை (ஆற்றல்) — Diability
குறை, பற்றாக்குறை — Deficiency

கூ

கூட்டவெறி — Mass hysteria
கூட்டாளி உணர்ச்சி — Gang spirit
கூட்டு நடத்தை — Collective behaviour
கூட்டுப்பள்ளி — Mixed school
கூட்டு விளையாட்டுகள் — Team games

கே

கேள்விக் களம் — Auditory field

கை

கைத் திறமை — Ability manual
கைவினைப் பயிற்சி — Manual training
கையெழுத்து அளவுகோல் — Handwriting scale
கையேடு — Manual

கொ

கொச்சை மொழி — Slang
கொடுமைப்படுத்தல் — Bullying

ச

சமச்சீர் — Symmetry
சமநிலை — Equilibrium
சமயபோதனை — Religious Instruction
சம வயதுக் குழு — Peer age group
சம வயதுப் பிள்ளை — Peer
சமூக அளவியல் — Sociometery
சமூக அனுபவம் — Social experience
சமூக ஆக்கநிலையுறுத்தல் — Social conditioning
சமூக ஆமோதிப்பு — Social approval
சமூக இடைவினை — Social interaction
சமூக இணக்கம் — Social adjustment
சமூகக் கட்டுப்பாடு — Social control
சமூக ஏற்பு — Social acceptance
சமூகச் சூழ்நிலை — Social environment
சமூகத் தொடர்பு — Social relationship
சமூகத் தொலைவு — Social distance
சமூக நடத்தை — Social behaviour
சமூக நிலை — Social status

| | | |
|---|---|---|
| சமூக நுண்ணறிவு | — | Social intelligence |
| சமூகப் படிப்பு | — | Social learning |
| சமூகப் பயிற்சி | — | Social training |
| சமூகப் பாதுகாப்பு | — | Social security |
| சமூகப் பாதுகாப்பின்மை | — | Social insecurity |
| சமூகப் புலன்காட்சி | — | Social perception |
| சமூக மரபு நிலை | — | Social heredity |
| சமூக வரைபடம் | — | Sociogram |
| சமூக விழிப்புடைமை | — | Social awareness |
| சராசரி விலக்கம் | — | Average deviation |
| சரிபார்த்தல் | — | Verification |
| | சா | |
| சாதனை | — | Achievement |
| சாதனைச் சோதனை | — | Achievement test |
| சாதாரண, சராசரி | — | Average |
| சார்பு | — | Dependency |
| சார்புடைமை | — | Belongingness, relativity |
| சாயல், பிம்பம் | — | Image |
| | சி | |
| சிக்கல் அறை | — | Maze |
| சிதைந்த குடும்பம் | — | Broken home |
| சிந்தனை | — | Thinking |
| சிம்பதிடிக் நரம்பு மண்டலம் | — | Sympathetic nervous system |
| சிறப்புத் திறமை | — | Ability special |
| சிறு குழு, கூட்டாளிக் குழு | — | Gang |
| சிறு பயணங்கள் | — | Field trips |
| சிறு மூளை | — | Cerebellum |
| சினம் | — | Anger |
| | சு | |
| சுரப்பி : | — | Gland : |
| அட்ரினல் | | Adrenal |
| சிபாசியஸ் | | Sebaceous |
| தைமஸ்-தைராய்ட் | | Thymus-thiroid |
| பாராதைராய்ட் | | Parathiroid |
| பிட்யூட்டரி | | Pituitary |
| பீனீல் | | Pineal |

| | | |
|---|---|---|
| சுவாச மண்டலம் | — | Respiratory |
| சுவை அரும்புகள் | — | Taste buds |
| சுறுசுறுப்பான | — | Active |

சூ

| | | |
|---|---|---|
| சூத்திரம், வாய்பாடு | — | Formula |
| சூழ்நிலை | — | Environment |

செ

| | | |
|---|---|---|
| செய்தியறிவுச் சோதனை | — | Information test |
| செய்திப் பலகை | — | News board |
| செய்து கற்றல் | — | Learning by doing |
| செய்து காட்டல் | — | Demonstration |
| செயல் | — | Activity |
| செயல் சோதனை | — | Performance test |
| செயல் திட்டமுறை | — | Project method |
| செவிலித்தாய் | — | Nurse |
| செவிப்புலன் வளர்ச்சி | — | Auditory sensation |
| சென்னீர் சத்து | — | Hemogloblin |

சே

| | | |
|---|---|---|
| சேர்த்தல் சோதனை | — | Assembly test |
| சேர்ந்து பாடம் சொல்லல் | — | Social Recitation |

சொ

| | | |
|---|---|---|
| சொல் அமைக்கும் சோதனை | — | Word building test |
| சொல்லாற்றல், சொல் திறன் | — | Verbal ability |
| சொல் சோதனை | — | Verbal test |
| சொல் திறமை | — | Ability verbal |
| சொல் இயைபுச் சோதனை | — | Word association test |
| சொல் தொகை | — | Vocabulary |
| சொல் வேகம் | — | Word fluency |
| சொல்லிலாச் சோதனை | — | Nonverbal test |
| சொற்றொடர் பிறழ்வுச் சோதனை | — | Disarranged sentence test |

சோ

| | | |
|---|---|---|
| சோதனை | — | Test, experiment |
| சோதனை அமைப்பு | — | Test construction |
| சோதனைக் குழு | — | Experimental group |
| சோதனைக் கூடம் | — | Laboratory |

| | | |
|---|---|---|
| சோதனைச் சீட்டுகள் | — | Test cards |
| சோதனைத் தொகுதி | — | Battary of tests |
| சோதனைப் பலகை | — | Form board |
| சோதனைப் பள்ளி | — | Laboratory School |
| சோதனை முறை | — | Experimental method |
| சோதனையாளர் | — | Experimenter |

த

| | | |
|---|---|---|
| தசை | — | Muscle |
| தசைப்புலன் உணர்ச்சி | — | Kinesthetic sensation |
| தட்டுத் தடுமாறிக் கற்றல் | — | Learning by trial and error |
| தட்பவெப்பப் புலனுணர்ச்சி | — | Temperature sensation |
| தடையிலா இயக்கம் | — | Free play |
| தடையிலா இயைபுச் சோதனை | — | Free association |
| தண்டுவடம் | — | Spinal cord |
| தந்தைவழி | — | Paternal |
| தப்பு எண்ணம் | — | Prejudice |
| தப்பமைப்பு | — | Malformation |
| தரப்படுத்து | — | Standardize |
| தரப்படுத்திய சோதனை | — | Standardized test |
| தரமிடும் அளவுகோல் | — | Rating scale |
| தர விலக்கம் | — | Standardized deviation |
| தலைமை | — | Leadership |
| தலைமைப் பண்புகள் | — | Leadership qualities |
| தற்காதல் | — | Narcissism |
| தற்காட்டு வேட்கை | — | Exhibitionism |
| தற்காப்பு | — | Self preservation |
| தற்காப்பு வழி | — | Defence mechanism |
| தற்காமம் | — | Auto-eroticism |
| தற்பால் உணர்ச்சி | — | Homosexuality |
| தன் கட்டுப்பாடு | — | Self control |
| தன் சாதிப்பு | — | Self assertion |
| தன் நனவிலி | — | Personal unconscious |
| தன் பால் | — | Own sex |
| தன் மதிப்பீடு | — | Self appraisal |
| தன் மதிப்புப் பற்று | — | Self regarding sentiment |
| தன் மைய | — | Self centred |
| தன் வரலாறு, சுயசரிதை | — | Auto-biography |

தன்னிறைவு — Self fulfilment
தனி இயல்பு — Individuality
தனிமை, தனிமை உணர்ச்சி — Loneliness
தனிப் பழக்கம் — Mannerism
தனியாள் — Individual
தனியாள் ஆராய்ச்சி — Case study
தனியாள் சோதனைகள் — Individual tests
தனியாள் வரலாறு — Case history
தனியாள் வளர்ச்சியியல் — Ontogeny
தனியாள் வேற்றுமை — Individual differences

தா

தாக்கும் நடத்தை — Aggressive behaviour
தாக்கும் மனப்பான்மை, வலுவந்தம் — Aggression
தாய்வழி — Maternal
தாய்மை ஊக்கம், தாய்மை உணர்ச்சி — Maternal instinct
தாய்வழி மரபுக் குடும்பம் — Matrichal family
தாழ்வு மனப்பான்மை — Inferiority complex
தாள் சோதனை — Paper and pencil test
தானியங்கு நரம்பு மண்டலம் — Autonomic nervous system, Autonomus nervous system

தி

திரிபுக் காட்சி — Illusion
திருத்த முடியாத — Oncorrigible
திரும்பக் கற்றல் — Relearning
திறமை — Talent, ability
திறமை மிக்க பிள்ளைகள் — Gifted children
திறன் — Skill

தீ

தீரச் செயல், வீரச்செயல், துணிபுச் செயல் — Adventure

து

துணிவுள்ள — Enterprising
துலங்கல் — Response
துன்ப நிலை — Distress

தூ

தூண்டு காரணம் — Exciting cause

தெ

தெரிந்து பின்பற்றல் — Conscious imitation
தெரியாது பின்பற்றல் — Unconscious imitation
தெற்றுதல், திக்குதல் — Stammering

தே

தேவதைக் கதைகள் — Fairy tales
தேவைகள் — Needs

தை

தைராக்சின் — Thyroxin

தொ

தொகுத்தல் — Synthesis
தொகுத்தறி ஆய்வு — Inductive reasoning
தொகுத்தறிதல் — Induction
தொகுத்தறி — Inductive
தொகுப்பேடு — Cumulative record
தொடர்பாடு — Correlation
தொடர்பாட்டுக் கெழு — Correlation coefficient
தொடு உணர்ச்சி — Tactual sensation
தொடுபுலன் உணர்ச்சி — Touch sensation
தொழில் தேர்வு — Vocational selection
தொழில் வழிகாட்டல் — Vocational guidance
தொழில் புலன்காட்சி — Distance perception

தோ

தோல் புலனுணர்ச்சி — Cutaneous sensation
தோழன் — Mate

ந

நடத்தை — Behaviour
நடத்தைக் கொள்கை — Behaviourism
நடத்தைக் கோலங்கள் — Behaviour patterns
நடத்தைப் பிரச்சினைகள் — Behaviour problems
நடுச்செவி — Middle ear
நடு மூளை — Mid brain

நடு நரம்பு மண்டலம் — Central nervous system
நம்பகம் — Reliability
நம்பகக் கெழு — Reliability coefficient
நரம்பு அணு — Neuron
நரம்பு அறை — Nerve cell
நரம்பு இயல் — Neurology
நரம்பு உள்துடி — Nerve impulse
நரம்பு ஓட்டங்கள் — Nervous circuits
நரம்புக் கோளாறு — Nervous disorder
நரம்பு நார் — Nerve fibre
நரம்பு நிலையம், நரம்பு மையம் — Nerve centre
நரம்புப் பாதைகள் — Nerve paths
நரம்பு மண்டலம் — Nervous system
நனவிலி — Unconscious
நனவிலி ஊக்கி — Unconscious motive
நனவு மனம் — Concious mind
நரம்பு வலை — Nerve net

## நா

நாடகம் — Drama
நாட்குறிப்பு — Diary
நாணமுள்ள, கூச்சமுள்ள — Shy

## நி

நிகழ்ச்சிப் பதிவேடு — Anecdotal records
நிகழ்ச்சி முறை — Anecdotal method
நிகழ்மை, நிகழ்திறம் — Probability
நிரப்பல் சோதனை — Completion test
நிலைத்த கவனம் — Sustained attention
நிலையுறுத்தல் — Rentension
நிறக்குருடு — Colour blindness
நினைவு — Memory
நினைவு அளவுக் கருவி — Memory drum
நினைவுகூர் — Recall
நினைவுச் சூத்திரங்கள் — Mnemonica
நினைவுபடுத்தல் — Recollection
நினைவு வீச்சு — Memory span

நீ

நீதிக்கதை, உவமைக் கதை — Parable
நீர்க்கிலி — Hydro-phobia
நீர் வர்ணம் — Water colour

நு

நுண்ணறிவு — Intelligence
நுண்ணறிவு ஈவு — Intelligence quotient

நெ

நெட்டுரு — Rote memory

நே

நேர் அனுபவம், நேரடி அனுபவம் — Direct experience
நேர் முறை — Direct method
நேர்மை — Integrity

ப

பக்கத் தோற்றம் — Profile
பக்குவம் — Maturity
பகற் கனவு — Day dream
பகுத்தறி ஆய்வு — Deductive reasoning
பகுத்தறி முறை — Deductive method
பகுதி முறை — Part method
படம் நிரப்பல் சோதனை — Picture completion test
படவிளக்கச் சோதனை — Picture interpretotian test
பட்டியல் — Inventory
பட்டியல் சோதனை — Inventory test
படிப்புத் திறமை — Reading ability
படிமுறை — Gradation
பண்பாட்டுப் பரப்பு — Culture area
பண்பாடு பெறுதல் — Acculturation
பண்பாட்டு வகைகள் — Culture patterns; culture types
பண்புகள் — Traits
பதிலீடு — Substitute
பயிற்சிச் சோதனை — Practice test
பயிற்சி மாற்றம் — Transfer of training

| | | |
|---|---|---|
| பயிற்சி விதி | — | Law of exercise |
| பயன் | — | Use |
| பயன்முதல் கொள்கை | — | Utilitarialism |
| பயன்முறை உளவியல் | — | Applied psychology |
| பயன் விதி | — | Law of effect |
| பரிசு, வெகுமதி | — | Reward |
| பரிணமம் | — | Evolution |
| பலநோக்குப் பள்ளி | — | Multipurpose School |
| பல்விடையில் தேர்வு | — | Multiple choice |
| பழக்கம் | — | Habit |
| பழக்கம் உண்டாதல் | — | Habit formation |
| பள்ளிச் சுகாதாரம் | — | School hygiene |
| பள்ளி போகும்முன் கற்றல் | — | Pre school learning |
| பற்று | — | Sentiment |
| பற்று மறிவினை | — | Grasping reflex |
| பன்முக ஆளுமை | — | Multiple personality |

பா

| | | |
|---|---|---|
| பாகுபாடு செய்தல் | — | Classification |
| பாடத் திட்டம் | — | Syllabus |
| பாடம் கூறல் | — | Recitation |
| பாடப்புறச் செயல்கள் | — | Extra curricular activity |
| பாதுகாப்பின்மை | — | Insecurity |
| பார்வைக் களம் | — | Visual field |
| பார்வை நரம்பு | — | Optic nerve |
| பார்வைப் புலன் உணர்ச்சி | — | Visual sensation |
| பால் உறவு | — | Sex relationship |
| பால் ஊக்கம் | — | Sex instinct |
| பால் கவர்ச்சி | — | Sex attraction |
| பால் மறக்கச் செய்தல் | — | Weaning |
| பால்வகைக் கல்வி | — | Sex education |
| பால் வேற்றுமை | — | Sex difference |
| பாவனை செய்தல் | — | Make believe |

பி

| | | |
|---|---|---|
| பிரசாரம் | — | Propaganda |
| பிரச்சினைப் பெட்டி | — | Problem box |
| பிரச்சினை தீர்த்தல் | — | Problem solving |

பிரச்சினை தீர்க்கும் முறை — Problem solving method
பிரச்சினை முறை — Problem method
பிழை, தவறு, குற்றம் — Mistake
பிறக்கு முன் — Prenatal
பிறந்த பின் — Postnatal
பிறப்பியல் முறை — Genetic method
பிறப்புக்கு முன்னைய இயக்கம் — Prenatal movement
பிறப்புக்கு முன்னைய செயல் — Prenatal activity
பிறவி — Inborn
பிறவிப் பேறு — Natural endowment
பிற்செயல் உள்தடை — Retroactive inhibition
பிற்பாடான குழந்தை — Backward child
பின்புலன் உணர்ச்சி — After sensation
பின்பற்றல், பார்த்துச் செய்தல் — Imitation
பின்பற்று ஊக்கம் — Instinct of imitation
பின் மரபு — Progency
பின் மூளை — Hind brain
பின்வாங்கு மறிவினை — Withdrawal reflex

பீ

பீனே-சைமன் அளவுகோல் — Binet-Simon scale

பு

புகுவாய் — Receptor
புதுமுறைச் சோதனை — New type test
புராணம் — Mythology
புரிந்துகொள்ளல் சோதனை — Comprehension test
புலன் அறி கருவிகள் — Sensory aids
புலன் இயக்கி — Sensory motor
புலன் உணர்ச்சி — Sensation
புலன் உயிரணு — Sense cell
புலன்கடந்த காட்சி — Extra sensory perception
புலன் காட்சி — Perception
புலன் காட்சித் திறன் — Perceptual ability
புலன் காட்சிப் பொருள் — Percept
புலன் கூர்மை — Sensory acuity
புலன் நரம்பு — Sensory nerve
புலன் பரப்பு — Sensory area

| | | |
|---|---|---|
| புலவழி, நுகர்ச்சி வழி | — | Empirical |
| புறச்செவி | — | External ear |
| புறத்தேற்றல் | — | Projection |
| புறத்தேற்றுச் செய்முறை | — | Projective techniques |
| புறத்தேற்றுச் சோதனை | — | Projective test |
| புறநிலைச் சோதனை | — | Objective test |
| புறமுக | — | Extrovert |
| புறமுக ஆளுமை | — | Extrovert personality |
| புறவயம் | — | Objectivity |
| புறவய முறை | — | Objective method |

பூ

| | | |
|---|---|---|
| பூறணி | — | Cortex |

பெ

| | | |
|---|---|---|
| பெயர் அழைப்பு | — | Roll call |
| பெருக்க உந்துத் தொடர்பாடு | — | Product moment correlation |
| பெருமிதம் | — | Elation |

பே

| | | |
|---|---|---|
| பேட்டி | — | Interview |
| பேட்டி முறை | — | Interview method |
| பேருருவம் | — | Giantism |

பொ

| | | |
|---|---|---|
| பொதுக் காரணி | — | General factor |
| பொதுத் திறமை | — | General ability |
| பொதுநிலைப்படுத்தல் | — | Abstraction |
| பொது மைய | — | Concentric |
| பொதுமைக் கருத்து, கருத்து | — | Concept |
| பொதுவிதி காணல் | — | Generalisation |
| பொய்க்காட்டி | — | Lie detecter |
| பொருட்காட்சி நிலையம் | — | Museum |
| பொருத்தல் சோதனை | — | Matching test |
| பொருத்தல்பாடு | — | Adjustment |
| பொருத்துவாய் | — | Connector |
| பொழுதுபோக்குச் செயல் | — | Recreational activity |
| பொறித் திறமை | — | Mechanical ability |

போ

போரூக்கம் — Instinct of pugnacity
போதனைக் கருவிகள் — Teaching aids
போராட்டம் — Conflict

ம

மகவூக்கம் — Parental instinct
மகா மேதை — Ginius
மட்டி — Moron
மண்டலியன் வேறுபாடு — Mendelian variation
மதிப்புகள் — Values
மந்தை மனம், கூட்ட உணர்ச்சி — Herd instinct
மரபியல், பிறப்பியல் — Genetics
மரபுவழி — Heredity
மருத்துவ முறை — Clinical method
மறிவினை — Reflex
மறிவினை வளைவு — Reflex arc
மறுபால் — Opposite sex
மறுபால் உணர்ச்சி — Heterosexuality
மறைமுக அனுபவம் — Indirect experience
மறைமுக முறை — Indirect method
மறைமுகக் கல்வி — Indirect learning
மனவாற்றல் குறை — Feeble mindedness
மன இயல்பு — Disposition
மன உறுதி — Will
மனக்கோட்டை — Fantasy
மனச்சான்று — Conscience
மனநலம் — Mental health
மனநிலை — Temper
மன நலவியல் — Mental hygiene
மனப்பான்மை — Attitude
மன முறிவு — Frustration
மனவசியம் — Mesmerism
மனவயது — Mental age
மனவெழுச்சி — Emotion
மனவெழுச்சிச் சமநிலை — Emotional stability
மனவெழுச்சி நிலை — Emotional state

மனவெழுச்சிப் பக்குவம் — Emotional maturity

மனவெழுச்சி வகைகள் — Emotional patterns

மனவளர்ச்சி குறைதல், மனவெழுச்சி — Mental retardation

மனித உறவுகள் — Human relationships

மா

மாறி — Variable

மாறுகண் — Squint

மாறுதல், மாறுபடும் தன்மை — Variability

மாறும் புலன்காட்சி — Shifting perception

மி

மிகை ஆற்றல் கொள்கை — Surplus energy theory

மின் அதிர்ச்சி மருத்துவம் — Electric shock therapy

மீ

மீட்டறிதல் — Recognition

மீள்நோக்கு — Review

மு

முகாம், பாடி — Camp

முகுளம் — Medulla

முட்டாள் — Idiot

முதல் உதவி — First aid

முதல்நிலை ஊக்கி — Primary motive

முதல்நிலைப் பால் அறிகுறிகள் — Primary sex characteristics

முதன்மை ஊக்கி — Mastery motive

முதிர்ச்சி அடைதல் — Maturation

முதிர்ச்சிப் பருவம் — Adulthood

முந்தி வளர்ந்த, மிஞ்சி வளர்ந்த — Precocious

முயன்று தவறுதல் — Trial and error

முயன்று தவறுதல் வழிக்கற்றல்; முயன்று தவறிக் கற்றல்; தட்டுத் தடுமாறிக் கற்றல் — Learning through trial and error

முழு — Absolute

முழுத் தொடர்பாடு — Perfect correlation

முழுநிலைக் காட்சி — Gestait

முழுமை — Whole

முற்பாடான குழந்தை — Precocious child
முறை இயல் — Methodology
முறை, திட்டம் — System
முறைமைக் கட்டுப்பாடு — Formal discipline
முன் ஆதார — Pre basic
முன்மூளை — Fore brain
முன்மூளைப் பூறணி — Cerebral cortez
முன்னறி — Prognostic
முன்னேற்ற அறிக்கை — Progress report
முன்னறி சோதனை — Prognostic test

மூ

மூக்கடைச் சதை — Adenoids
மூடன், நனிபேதை, மட்டி — Imbecile
மூளை — Brain

மெ

மெய்ப்பாடு — Emotional expression
மெய்பொய்ச் சோதனை — True false test

மை

மைத்தடச் சோதனை — Ink-blot test
மைய நரம்பு மண்டலம் — Central nervous system

மொ

மொழித் திறமை — Linguistic ability

மோ

மோப்ப நரம்பு முனைகள் — Olfactory bulbs
மோப்பப் பரப்பு — Olfactory area
மோப்பப் புலன் — Olfactory sense
மோப்பப் புலன் உணர்ச்சி — Olfactory sensation
மோப்ப மானி — Olfacto meter

வ

வகுப்பு உணர்வு — Class consciousness
வடிவப் பலகை — Form board
வயது தரச் சோதனை — Age test
வயது நிலை — Age level
வயதுக்கு மீறிய அறிவுடைமை — Precocity

| | | |
|---|---|---|
| வரிசைப்படுத்து | — | Tabulate |
| வரிசை வேற்றுமைத் தொடர்பாடு | — | Rank difference correlation |
| வரைபடம் | — | Graph |
| வலி உணர்ச்சி | — | Pain sensation |
| வலிப்பு | — | Hysteria |
| வலுவந்த | — | Aggressive |
| வழக்காறு | — | Convention |
| வழிகாட்டல் | — | Guidance |
| வழிநிலை ஊக்கி | — | Secondary motive |
| வழிமுறைத் தேவைகள் | — | Secondary needs |
| வளர்ச்சி | — | Development |
| வளர்ச்சி உளவியல் | — | Developmental psychology |
| வளர்ச்சி நிலை | — | Stage of development |
| வளர்ச்சி வயது | — | Developmental age |
| வளர்ச்சி வரைபடம் | — | Growth curve |

வா

| | | |
|---|---|---|
| வாசிப்புத் திறமை | — | Reading ability |
| வாழ்க்கை நிகழ்ச்சி முறை | — | Anecdotal method |
| வாழ்க்கை வரலாறு | — | Biography |
| வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் | — | Biographical records |
| வாழ்க்கை வரலாற்று முறை | — | Biographical method |

வி

| | | |
|---|---|---|
| விந்தணு | — | Sperm |
| வியப்பு | — | Wonder |
| வியர்வைச் சுரப்பிகள் | — | Sweat glands |
| விருப்பு வெறுப்புகள் | — | Likes and dislikes |
| விலக்கம் | — | Deviation |
| விலங்கு கிலி | — | Zoo-phobia |
| விவரங்கள் | — | Data |
| விளக்கப் படம் | — | Diagram |
| விளையாட்டு முறை | — | Play way |
| விளையாட்டு வழி மருத்துவம் | — | play therapy |
| விளையாடுமிடம் | — | Playground |

வெ

| | | |
|---|---|---|
| வெகுமதி-தண்டனை | — | Reward and punishment |
| வெட்கம் | — | Shame |

| | | |
|---|---|---|
| வெளிக் குழு | — | Out group |
| வெளிச்செல் நரம்பு | — | Efferent nerve |
| வெளி நரம்பு மண்டலம் | — | Peripheral nerve system |
| வெளியிடச் செயல்கள் | — | Outdoor Activities |
| வெளியீடு, வெளிப்பாடு | — | Expression |
| வெற்றுப் பலகை, எழுதாப் பலகை | — | Tabula rasa |

வே

| | | |
|---|---|---|
| வேலைக் குறிப்பேடு | — | Work book |
| வெற்றசை | — | Nonsense syllable |
| வேற்றுமை உளவியல் | — | Differential psychology |
| வேற்றுமைப்படுத்து | — | Differentiate |

ஹா

| | | |
|---|---|---|
| ஹார்மோன் | — | Hormone |

ஹை

| | | |
|---|---|---|
| ஹைபோதாலமஸ் | — | Hyphotalamus |

ரோ

| | | |
|---|---|---|
| ரோஷாக் சோதனை | — | Roschack test |

ஜீ

| | | |
|---|---|---|
| ஜீனம் | — | Gene |

# கலைச்சொல் அகராதி

## (ஆங்கிலம் - தமிழ்)

### A

| | | |
|---|---|---|
| Abnormal | — | இயல்பிகந்த, பிறழ்வான |
| Abstract idea | — | பொதுநிலைப்படுத்தல் |
| Abstract reasoning | — | கருத்தியல் ஆய்வு |
| Ability | — | திறமை (திறன்) |
| Ability, arithmetical | — | எண்கணக்குத் திறமை |
| Ability, artistic | — | கலைத் திறமை |
| Ability drawing | — | ஓவியத் திறமை |
| Ability, general | — | பொதுத் திறமை |
| Ability, linguistic | — | மொழித் திறமை |
| Ability, manual | — | கைத் திறமை |
| Ability, mechanical | — | பொறித் திறமை |
| Ability, motor | — | இயக்கத் திறமை |
| Ability, reading | — | படிப்புத் திறமை |
| Ability, organising | — | அமைப்புத் திறமை |
| Ability, musical | — | இசைத் திறமை |
| Ability, special | — | சிறப்புத் திறமை |
| Ability, verbal | — | சொல் திறமை |
| Achievement | — | சாதனை |
| Acquired | — | கற்றறிந்த |
| Acculturation | — | பண்பாடு பெறுதல் |
| Activity, creative | — | ஆக்கச் செயல் |
| Activity, group | — | குழுச் செயல் |
| Activities, indoor | — | உள்ளிடச் செயல்கள் |
| Activities, outdoor | — | வெளியிடச் செயல்கள் |
| Adjustment | — | பொருத்தல்பாடு |
| Adolescence | — | குமரப் பருவம் |
| Adrenalin | — | அட்ரிநலின் |
| Adulthood | — | முதிர்ச்சிப் பருவம் |
| Adventure | — | தீரச் செயல், வீரச்செயல், துணிபுச் செயல் |
| Afferent nerve | — | உள்செல் நரம்பு |

Aggressive — வலுவந்த
Age, chronological — கால வயது
Age, developmental — வளர்ச்சி வயது
Age, educational — கல்வி வயது
Age, emotional — உணர்ச்சி வயது
Age, physiological — உடல் வயது
Age level — வயது நிலை
Aggressiveness — தாக்கும் மனப்பான்மை, வலு வந்தம்
Ambivalance — இருமுகப் போக்கு
Ambivert — இருமுக
Amoeba — அமீபம்
Analogy test — ஒப்புமைச் சோதனை
Anatomical development — உடல் அமைப்பு வளர்ச்சி
Anecdotal method — நிகழ்ச்சி முறை
Anecdotal records — நிகழ்ச்சிப் பதிவேடு
Anger — சினம்
Apparatus — ஆய்கருவி, செய்கருவி
Applied psychology — பயன்முறை உளவியல்
Aptitude — இயற்கைத் திறமை
Association — இயைபு
Attention, span of — கவன வீச்சு
Attention, distraction of — கவனச் சிதைவு
Attitude — மனப்பான்மை
Attention, sustained — நிலைத்த கவனம்
Arts and crafts — கலையும் கைத்தொழிலும்
Audio visual aids — காட்சி கேள்விக் கருவிகள்
Auto-biography — தன் வரலாறு, சுயசரிதை
Auto-eroticism — தற்காமம்
Average — சாதாரண, சராசரி

## B

Babyhood — குழவிப் பருவம்
Behaviour — நடத்தை
Behaviour, aggressive — தாக்கும் நடத்தை
Behaviour patterns — நடத்தைக் கோலங்கள்
Behaviour problems — நடத்தைப் பிரச்சினைகள்
Behaviour, group — கூட்டு நடத்தை
Behaviourism — நடத்தைக் கொள்கை

| | | |
|---|---|---|
| Belongingness | — | சார்புடைமை |
| Binet-Simon scale | — | பீனே–சைமன் அளவுகோல் |
| Biography | — | வாழ்க்கை வரலாறு |
| Biographical records | — | வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள் |
| Biology | — | உயிரியல் |
| Birth-control | — | கருத்தடை |
| Boarding House | — | ஒன்றுறை இல்லம், விடுதி |
| Boarding School | — | ஒன்றுறைப் பள்ளி |
| Black Board | — | கரும்பலகை |
| News Board | — | செய்திப் பலகை |
| Notice Board | — | அறிக்கைப் பலகை |
| Brain | — | மூளை |
| Fore Brain | — | முன்மூளை |
| Hind Brain | — | பின் மூளை |
| Mid Brain | — | நடு மூளை |
| Broken home | — | சிதைந்த குடும்பம் |
| Bullying | — | கொடுமைப்படுத்தல் |

## C

| | | |
|---|---|---|
| Camp | — | முகாம், பாடி |
| Case history | — | தனியாள் வரலாறு |
| Case study | — | தனியாள் ஆராய்ச்சி |
| Cell differentiation | — | உயிரணு வேற்றுமைப்பாடு |
| Cell division | — | உயிரணுப் பகுப்பு, உயிரணுப் பிரிவு |
| Central nervous system | — | நடு நரம்பு மண்டலம் |
| Childhood | — | குழந்தைப் பருவம் |
| Child, backward | — | பிற்பாடான குழந்தை |
| Child, precocious | — | முற்பாடான குழந்தை |
| Cerebellum | — | சிறு மூளை |
| Cerebral cortex | — | முன்மூளைப் பூறணி |
| Class consciousness | — | வகுப்பு உணர்வு |
| Clique | — | உட்குழு |
| Classification | — | பாகுபாடு செய்தல் |
| Cognitive processes | — | அறிவுசார் செயல்முறைகள் |
| Complex, electra | — | எலக்ட்ரா சிக்கல் |
| Complex, oedipus | — | இடிபஸ் சிக்கல் |
| Complex, guilt | — | குற்றச் சிக்கல், குற்ற மனப் பான்மை |
| Complex, inferiority | — | தாழ்வு மனப்பான்மை |

Complex, superiority — உயர்வு மனப்பான்மை
Computation — கணக்கீடு
Conditioning — ஆக்கநிலையுறுத்தல்
Conflict — போராட்டம்
Conscious mind — நனவு மனம்
Connector — பொருத்துவாய்
Concept — பொதுமைக் கருத்து, கருத்து
Concentric — பொது மைய
Conceptual — கருத்து சார்ந்த
Constructive — ஆக்க
Construction of instinct — ஆக்க இயல்பூக்கம்
Conscience — மனச்சான்று
Control — கட்டுப்பாடு
Controlled — கட்டுப்படுத்திய
Control group — கட்டுப்படுத்திய குழு
Controlled observation — கட்டுப்படுத்திய உற்றுநோக்கல்
Convention — வழக்காறு
Curriculum — கல்வித் திட்டம்
Correlation — தொடர்பாடு
Correlation coefficient — தொடர்பாட்டுக் கெழு
Correlation, product moment — பெருக்க உந்துத் தொடர்பாடு
Correlation, negative — எதிர்மறைத் தொடர்பாடு
Correlation, rank difference — வரிசை வேற்றுமைத் தொடர்பாடு
Correlation, positive — உடன்பாட்டுத் தொடர்பாடு
Correlation, perfect — முழுத் தொடர்பாடு
Cortex — புறணி
Corporal punishment — உடல் தண்டனை
Chromosome — கணுக்கோல் (குரோமோஸோம்)
Counselling — அறிவுரை கூறல்
Counsellor — அறிவுரையாளர்
Creativeness — ஆக்க உணர்வு
Critical thinking — திறனாய் சிந்தனை
Culture patterns; culture types — பண்பாட்டு வகைகள்
Cumulative record — தொகுப்பேடு

## D

Data — விவரங்கள்
Day dream — பகற் கனவு

| | | |
|---|---|---|
| De-conditioning | — | ஆக்கநிலை அகற்றல் |
| Defence mechanism | — | தற்காப்பு வழி |
| Deformity | — | உருக்குறை |
| Differentiate | — | வேற்றுமைப்படுத்து |
| Differential psychology | — | வேற்றுமை உளவியல் |
| Deficiency | — | குறை, பற்றாக்குறை |
| Delinquent behaviour | — | குற்ற நடத்தை |
| Demonstration | — | செய்து காட்டல் |
| Dependency | — | சார்பு |
| Depth psychology | — | ஆழ உளவியல் |
| Depression | — | உளச்சோர்வு |
| Dermis | — | அடித்தோல் |
| Development | — | வளர்ச்சி |
| Developmental psychology | — | வளர்ச்சி உளவியல் |
| Development of stage | — | வளர்ச்சி நிலை |
| Deviation | — | விலக்கம் |
| Deviation, average | — | சராசரி விலக்கம் |
| Deviation, standard | — | தர விலக்கம் |
| Diary | — | நாட்குறிப்பு |
| Diagram | — | விளக்கப் படம் |
| Dialogue | — | உரையாடல் |
| Diagnose | — | ஆய்ந்து அறி |
| Diagnosis | — | ஆய்ந்தறிதல் |
| Diagnostic test | — | ஆய்ந்தறி சோதனை |
| Dictate | — | கட்டளையிடுதல் |
| Disability | — | (ஆற்றல்) குறை |
| Disapproval | — | கண்டனம் |
| Disarranged sentence test | — | சொற்றொடர் பிறழ்வுச் சோதனை |
| Discipline | — | ஒழுங்கு |
| Disciplinary action | — | ஒழுங்கு நடவடிக்கை |
| Discovery | — | கண்டுபிடிப்பு |
| Discovery of method | — | கண்டறி முறை |
| Disposition | — | மனநிலை |
| Direct experience | — | நேர் அனுபவம் அல்லது நேரடி அனுபவம் |
| Direct method | — | நேர் முறை |
| Double personality | — | இரட்டை ஆளுமை |
| Dream analysis | — | கனவு பாகுபாடு, கனவு ஆராய்ச்சி |
| Dynamic | — | இயங்கு |

## E

Ear, external — புறச்செவி
Ear, internal — உட்செவி
Ear, middle — நடுச்செவி
Effector — இயக்குவாய்
Efferent nerve — வெளிச்செல் நரம்பு
Elation — பெருமிதம்
Emotional expression — மெய்ப்பாடு
Emotion — மனவெழுச்சி உணர்ச்சி
Emotional maturity — மனவெழுச்சிப் பக்குவம்
Emotional state — மனவெழுச்சி நிலை
Emotional stability — மனவெழுச்சிச் சமநிலை
Empirical — புலவழி, நுகர்ச்சிவழி
Energy — ஆற்றல்
Enterprising — துணிவுள்ள
Environment — சூழ்நிலை
Enumeration test — எண் சோதனை
Equilibrium — சமநிலை
Eroticism — காமக் கிளர்ச்சி
Evolution — பரிணாமம்
Excitement — கிளர்ச்சி
Exhibitionism — தற்காட்டு வேட்கை
Exciting cause — தூண்டும் காரணம்
Experiment — சோதனை, ஆய்வு
Experimenter — சோதனையாளர்
Experimental method — சோதனை முறை
Extra curricular activity — பாடப்புறச் செயல்கள்
Extrovert — புறமுக

## F

Fable — கதை
Fairy tales — தேவதைக் கதைகள்
Fantasy — மனக்கோட்டை
Fatigue — களைப்பு, அயர்ச்சி
Fear — அச்சம்
Fear, conditioned — ஆக்கநிலையுற்ற அச்சம்
Feeble mindedness — மன ஆற்றல் குறைவு
Field of attention — கவனக் களம்
Field, auditory — கேள்விக் களம்

| | | |
|---|---|---|
| Figure and ground | — | உருவும் பின் அணியும் |
| Field trips | — | சிறு பயணங்கள் |
| Fine arts | — | கவின் கலைகள் |
| Finger sucking | — | விரல் சூப்பல் |
| Field, visual | — | பார்வைக் களம் |
| Flagging | — | ஆர்வம் குறைதல் |
| Focus | — | குவிமையம் |
| Formal discipline | — | முறைமைக் கட்டுப்பாடு |
| Formula | — | சூத்திரம், வாய்பாடு |
| Free play | — | தடையிலா இயக்கம் |
| Frequency distribution | — | அலைவெண் பரவல் |
| Frequency polygon | — | அலைவுப் பலகோணம் |
| Frustration | — | மன முறிவு |

**G**

| | | |
|---|---|---|
| Gang | — | சிறு குழு, கூட்டாளிக் குழு |
| Gang spirit | — | கூட்டாளி உணர்ச்சி |
| Gene | — | ஜீனம், உயிர்மின் |
| General factor | — | பொதுக் காரணி |
| Generalisation | — | பொதுவிதி காணல் |
| Genetics | — | மரபியல், பிறப்பியல் |
| Genetic method | — | பிறப்பியல் முறை |
| Genius | — | மகா மேதை |
| Gestait | — | முழுநிலைக் காட்சி, ஒருபாட்டு வழி |
| Gifted children | — | திறமை மிக்க பிள்ளைகள் |
| Giantism | — | பேருருவம் |
| Gymnasium | — | உடற் பயிற்சிக்கூடம் |
| Gland : | — | சுரப்பி : |
| Adrenal | — | அட்ரிநல் |
| Parathyroid | — | பாராதைராய்ட் |
| Pineal | — | பீனியல் |
| Pituitary | — | பிட்டியூட்டரி |
| Sebaceous | — | செபாசியஸ் |
| Thymus | — | தைமஸ் |
| Thyroid | — | தைராய்ட் |
| Glossary | — | அருஞ்சொல் அகராதி |
| Gradation | — | படிமுறை |
| Graph | — | வரைபடம் |
| Group consciousness | — | குழு உணர்வு |
| Group, experimental | — | சோதனைக் குழு |

Group hostilities — குழுப் பகைமை
Group mind — குழு மனம்
Group spirit — குழு உணர்ச்சி
Group tests — குழுச் சோதனைகள்
Growth curve — வளர்ச்சி வரைபடம்
Guidance — வழிகாட்டல்

## H

Habit — பழக்கம்
Habit formation — பழக்கம் உண்டாதல்
Haemoglobin — செந்நீர்ச் சத்து
Handwriting scale — கையெழுத்து அளவுகோல்
Health habits — உடல்நலப் பழக்கங்கள்
Health education — உடல்நலக் கல்வி
Health examination — உடல்நலச் சோதனை
Health, mental — மன நலம்
Heredity — மரபுவழி, பாரம்பரியம்
Herd instinct — மந்தை மனம், கூட்ட உணர்ச்சி
Heterosexuality — எதிர்பால் உணர்ச்சி
Heuristic method — கண்டறிமுறை
Homosexuality — தற்பால் உணர்ச்சி
Hormone — ஹார்மோன்
Human relationships — மனித உறவுகள்
Hygiene, mental — மன நலவியல்
Hygiene, school — பள்ளிச் சுகாதாரம்
Hypnosis — அறிதுயில்
Hyphothalamus — ஹைறபோதாலமஸ்
Hypothesis — கற்பிதம், முன்கோள்
Hysteria — வலி
Hysteria, mass — கூட்டவெறி

## I

Identical twins — ஒருமாதிரி இரட்டை, ஒருகரு இரட்டை
Idiot — முட்டாள்
Initiative — தானுகச் செய்தல்
Injunctions and prohibition — கட்டளைகளும் தடைகளும்
Ink-blot test — மைத்தடச் சோதனை
Illusion — திரிபுக் காட்சி

| | | |
|---|---|---|
| Image | — | சாயல், பிம்பம் |
| Imagination | — | கற்பனை |
| Imagination, productive | — | ஆக்கக் கற்பனை |
| Imbecile | — | நனிபேதை, மட்டி |
| Imitation | — | பின்பற்றல், பார்த்துச் செய்தல் |
| Imitation, conscious | — | தெரிந்து பின்பற்றல் |
| Imitation, unconscious | — | தெரியாது பின்பற்றல் |
| Inborn | — | பிறவி |
| Inbreeding | — | உட்குழு மணமுறை |
| Incorrigible | — | திருத்த முடியாத |
| Inductive | — | தொகுத்தறி |
| Induction | — | தொகுத்தறிதல் |
| Indirect experience | — | மறைமுக அனுபவம் |
| Indiscipline | — | ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை |
| Individual | — | தனியாள் |
| Individuality | — | தனி இயல்பு |
| Individual tests | — | தனியாள் சோதனைகள் |
| Individual differences | — | தனி மனித வேற்றுமைகள் |
| Infancy | — | குழவிப் பருவம் |
| Infant | — | குழவி |
| Information test | — | செய்தியறிவுச் சோதனை |
| Inferiority complex | — | தாழ்வு மனப்பான்மை |
| Ingroup | — | உட்குழு |
| Inhibition, retroactive | — | பிற்செயல் உள்தடை |
| Inhibition | — | உளத்தடை |
| Insecurity | — | பாதுகாப்பின்மை |
| Insight | — | உட்காட்சி |
| Instinct | — | இயல்பூக்கம் |
| Instinct of construction | — | கட்டு ஊக்கம் |
| Instinct of curiosity | — | ஆராய் ஊக்கம் |
| Instinct, food seeking | — | உணவு தேடு ஊக்கம் (உணவு தேட்டூக்கம்) |
| Instinct of imitation | — | பின்பற்று ஊக்கம் |
| Instinct of pugnacity | — | போரூக்கம் |
| Instinct, maternal | — | தாய்மை ஊக்கம், தாய்மை உணர்ச்சி |
| Instinct, sex | — | பால் ஊக்கம் |
| Insecurity, social | — | சமூகப் பாதுகாப்பின்மை |
| Isolates | — | ஒதுக்கப்பட்டோர் |
| Integral | — | ஒருமித்த |

Integrate — ஒருமைப்படுத்து
Integration — ஒருமைப்பாடு
Integrity — நேர்மை
Interest — ஆர்வம்
Introvert — அகமுக
Interview — பேட்டி
Intelligence — நுண்ணறிவு
Intelligence quotient — நுண்ணறிவு ஈவு
Interference — குறுக்கீடு
Intuition — உள்ளுணர்வு
Inventory — பட்டியல்

**J**

Juvenile delinquent — இளம் குற்றவாளி

**K**

Kileptomania — பொருள் திருடு வெறி

**L**

Laboratory — சோதனைக் கூடம்
Laboratory School — சோதனைப் பள்ளி
Law of effect — பயன் விதி
Law of exercise — பயிற்சி விதி
Law of frequency — அலைவெண் விதி
Law of learning — கற்றல் விதி
Law of readiness — ஆயத்த விதி
Law of recency — கால அண்மை விதி
Leadership — தலைமை
Leadership, autocratic — எதேச்சாதிகாரத் தலைமை
Leadership, democratic — குடியாட்சித் தலைமை
Leadership, qualities — தலைமைப் பண்புகள்
Learning curve — கற்றல் வரைபடம் (வளைவு)
Learning by doing — செய்து கற்றல்
Learning by experience — அனுபவம் மூலம் கற்றல்
Learning, indirect — மறைமுகமாகக் கற்றல்
Learing, motor — இயக்கத்திறன் கற்றல்
Learning by trial and error — தட்டுத் தடுமாறிக் கற்றல்
Lie detector — பொய்காட்டி
Likes and dislikes — விருப்பு வெறுப்புகள்
Loneliness — தனிமை, தனிமை உணர்ச்சி

## M

| | | |
|---|---|---|
| Make believe | — | பாவனை செய்தல் |
| Mal-nutrition | — | ஊட்டக் குறைவு |
| Mastery motive | — | முதன்மை ஊக்கி |
| Manual | — | கையேடு |
| Manual work | — | உடல் உழைப்பு |
| Manual training | — | கைவினைப் பயிற்சி |
| Matching test | — | பொருத்தல் சோதனை |
| Mate | — | தோழன் |
| Maturation | — | முதிர்ச்சி அடைதல் |
| Maturity | — | பக்குவம் |
| Maze | — | சிக்கல் அறை |
| Measurement | — | அளவீடு |
| Mudulla | — | முகுளம் |
| Memory | — | நினைவு |
| Memory drum | — | நினைவு அளவுக் கருவி |
| Memory, immediate | — | உடனடி நினைவு |
| Memory, mechanical | — | கிளிப்பிள்ளைப் பாடம், நெட்டுரு |
| Memory span | — | நினைவு வீச்சு |
| Mendelian variation | — | மெண்டல் முறை வேறுபாடு |
| Mental age | — | மனவயது |
| Mental health | — | உளநலம் |
| Mental hygiene | — | உளநலவியல் |
| Mental illness | — | உளநோய் |
| Memory, rote | — | நெட்டுரு |
| Method, anecdotal | — | வாழ்க்கை நிகழ்ச்சி முறை |
| Method, biographical | — | வரலாற்று முறை |
| Method, indirect | — | மறைமுக முறை |
| Mesmerism | — | மனவசியம் |
| Museum | — | பொருட்காட்சி நிலையம் |
| Method, interview | — | பேட்டி முறை |
| Methodology | — | முறை இயல் |
| Method, psychiatric | — | உள மருத்துவ முறை |
| Method, psycho analytical | — | உளப் பகுப்பு முறை |
| Method, objective | — | புறவய முறை |
| Mistake | — | பிழை, தவறு, குற்றம் |
| Mixed school | — | கூட்டுப்பள்ளி |
| Mnemonis | — | நினைவுச் சூத்திரம் |
| Motor co-ordination | — | இயக்க ஒருமைப்பாடு |

Motor development — இயக்க வளர்ச்சி
Motor performance — இயக்கச் செயல்
Moron — மட்டி
Morphology — அமைப்பு இயல்
Mortality — இறப்பு
Mortality, infant — குழவி இறப்பு
Motivation — ஊக்க நிலை
Motives — ஊக்கிகள்
Motive, primary — முதல்நிலை ஊக்கி
Motive, secondary — வழிநிலை ஊக்கி
Motive, unconscious — நினைவிலி ஊக்கி
Multipurpose School — பலநோக்குப் பள்ளி
Multiple choice — பல்விடையில் தேர்வு
Muscle — தசை
Muscle, involuntary — இயங்கு தசை
Muscle, voluntary — இயக்கு தசை
Mythology — புராணம்

## N

Narcissism — தற்காதல்
Natural endowment — பிறவிப் பேறு
Natural law — இயற்கை விதி
Natural selection — இயற்கைத் தேர்தல்
Nature study — இயற்கைப் பாடம்
Needs — தேவைகள்
Needs, secondary — வழிமுறைத் தேவைகள்
Nerve centre — நரம்பு நிலையம், நரம்பு மண்டலம்
Nerve, motor — இயக்க நரம்பு
Nervous circuits — நரம்பு ஓட்டங்கள்
Nervous disorder — நரம்புக் கோளாறு
Nerve fibre — நரம்பு நார்
Nerve impulse — நரம்பு உள்துடி
Nerve net — நரம்பு வலை
Nerve paths — நரம்புப் பாதைகள்
Nervous system — நரம்பு மண்டலம்
Nervous system, autonomic — தானியங்கு நரம்பு மண்டலம்
Nervous system, central — மைய நரம்பு மண்டலம்
Nerve, sensory — புலன் நரம்பு
Neurology — நரம்பு இயல்

Neurosis — உளவழி நரம்பு நோய்
Nonsense syllable — வெற்றசை
Nonverbal test — சொல்லிலாச் சோதனை
Normal distribution — இயல்நிலைப் பரப்பு
Numerical ability — எண் ஆற்றல்
Number completion test — எண் நிரப்புச் சோதனை
Nurse — செவிலித்தாய்
Nursery rhyme — குழந்தைப் பாட்டு
Nursery school — குழந்தைப் பள்ளி, பாலர்பள்ளி
Nutrition — ஊட்டம்

## O

Observation — உற்றுநோக்கல்
Objectivity — புறவயம்
Objective test — புறநிலைச் சோதனை
Oedipus complex — இடிப்பஸ் சிக்கல்
Olfactory area — மோப்பப் பரப்பு
Olfacto meter — மோப்ப மானி
Olfactory sense — மோப்பப் புலன்
Ontogeny — தனியாள் வளர்ச்சியியல்
Optic nerve — பார்வை நரம்பு
Organism — உயிரி
Out group — வெளிக் குழு
Outlets — போக்குவாய்
Ownership — உடைமை உணர்ச்சி

## P

Pair — இணை
Palate — அண்ணம்
Pancreas — கணையம்
Paper and pencil test — தாள் சோதனை
Parable — நீதிக்கதை, உவமைக் கதை
Parathyroid — பாராதைராய்டு
Parental instinct — மகப்பற்று ஊக்கம், மக ஊக்கம்
Part method — பகுதி முறை
Paternal — தந்தைவழி
Peer — சம வயதுப் பிள்ளை
Peer age group — சம வயதுக் குழு
Percept — புலன் காட்சிப் பொருள்
Perception — புலன் காட்சி

| | | |
|---|---|---|
| Performance test | — | செயல் சோதனை |
| Peripheral nerve system | — | வெளி நரம்பு மண்டலம் |
| Personality | — | ஆளுமை |
| Personality, extrovert | — | புறமுக ஆளுமை |
| Perception, aesthetic | — | எழிலுணர் புலன்காட்சி |
| Perception, depth | — | ஆழப் புலன்காட்சி |
| Perception distance | — | தொலைப் புலன்காட்சி |
| Perception, extra sensory | — | புலன்கடந்த காட்சி |
| Perceptual ability | — | புலன் காட்சித் திறன் |
| Perception, space | — | இடப் புலன்காட்சி |
| Perception, shifting | — | மாறும் புலன்காட்சி |
| Perception, social | — | சமூகப் புலன்காட்சி |
| Personality factors | — | ஆளுமைக் கூறுபாடுகள் |
| Personality, integrated | — | ஒருமித்த ஆளுமை |
| Personality, normal | — | இயல்நிலை ஆளுமை |
| Personality test | — | ஆளுமைச் சோதனைகள் |
| Personality traits | — | ஆளுமைப் பண்புகள் |
| Personality rating | — | ஆளுமைத் தரவீடு |
| Physiological psychology | — | உடலியல் உளவியல் |
| Physique | — | உடல் அமைப்பு |
| Physical fitness | — | உடல் தகுதி |
| Phobia | — | கிலி |
| Hydro-phobia | — | நீர்க்கிலி |
| Zoo-phobia | — | விலங்கு கிலி |
| Physiology | — | உடல் இயல் |
| Physiognomy | — | உடல் அமைப்பு சார்ந்த உள வியல்புகள் |
| Picture completion test | — | பட நிரப்பல் சோதனை |
| Picture interpretation test | — | பட விளக்கச் சோதனை |
| Pleasure principle | — | இன்பக் கொள்கை |
| Postnatal | — | பிறந்த பின் |
| Posture | — | உடல்நிலை, இருப்புநிலை |
| Pre adolescent | — | குமரப் பருவத்திற்குமுன் |
| Pre basic | — | முன் ஆதார |
| Prenatal | — | பிறக்கு முன் |
| Precocity | — | வயதுக்கு மீறிய அறிவுடைமை |
| Prejudice | — | தப்பு எண்ணம் |
| Precocious | — | முந்தி வளர்ந்த, பிஞ்சி வளர்ந்த |
| Probability | — | நிகழ்மை, நிகழ்திறம் |
| Probability curve, normal | — | இயல்நிலை நிகழ்திறக்கோடு |

Problem box — பிரச்சினைப் பெட்டி
Problem method — பிரச்சினை முறை
Problem solving — பிரச்சினை தீர்த்தல்
Problem solving method — பிரச்சினை தீர்க்கும் முறை
Profile — பக்கத் தோற்றம்
Progeny — பின் மரபு
Prognostic — முன்னறி
Progress report — முன்னேற்ற அறிக்கை
Project method — செயல் திட்டமுறை
Projective techniques — புறத்தேற்றுச் செய்முறைகள்
Projection — புறத்தேற்றல்
Propaganda — பிரசாரம்
Psychiatry — உளமருத்துவ இயல்
Psyehosis — உள நோய்
Psychometry — உள அளவியல்
Pure psychology — அறிவுமுறை உளவியல்
Psycho, motor — உள இயக்க
Psycho-physics — உள பௌதிகம்

## Q

Quality — இயல்பு
Quantity — அளவு

## R

Race consciousness — இன உணர்வு
Race experience — இன அனுபவம்
Race memory — இன நினைவு
Race preservation — இனப் பாதுகாப்பு
Race pride — இனச் செருக்கு
Racial unconscious — இன நனவிலி
Rating scale — தரமிடும் அளவுகோல்
Reaction time — எதிர்வினைக் காலம்
Reading ability — வாசிப்புத் திறமை
Reasoning — ஆய்வு
Resoning abillty — ஆய்வுத் திறமை
Reasoning, deductive — பகுத்தறி ஆய்வு
Reasoning, inductive — தொகுத்தறி ஆய்வு
Reasoning test — ஆய்வுச் சோதனை
Recall — நினைவுகூர்தல்
Receptor — புகுவாய்

Recitation — பாடம் கூறல்
Reflex — மறிவினை
Reflex, acquired — கற்ற மறிவினை
Reflex arc — மறிவினை வளைவு
Reflex, conditioned — ஆக்கநிலையுறுத்திய மறிவினை
Reflex, de-conditioned — ஆக்கநிலை அகற்றிய மறிவினை
Reflex, grasping — பற்று மறிவினை
Reflex, salivary — உமிழ்நீர் மறிவினை
Reflex, winking — இமைத்தல் மறிவினை
Reflex, withdrawal — பின்வாங்கு மறிவினை
Relativity — சார்புடைமை
Relearning — திரும்பக் கற்றல்
Reliability — நம்பகம்
Reliability coefficient — நம்பகக் குழு
Religious instruction — சமயபோதனை
Retension — நிலையுறுத்தல்
Response — துலங்கல்
Response, conditioned — ஆக்கநிலையுறுத்திய துலங்கல்
Respiratory system — சுவாச மண்டலம்
Reward — பரிசு, வெகுமதி
Reward and punishment — வெகுமதி-தண்டனை
Roll call — பெயர் அழைப்பு

S

Self appraisal — தன் மதிப்பீடு
Self centred — தன் மைய
Self assertion — தன் சாதிப்பு
Self control — தன் கட்டுப்பாடு
Self defence — தற்காப்பு
Self fulfilment — தன்னிறைவு
Self-regarding sentiment — தன்மதிப்புப் பற்று
Selfpreservation — தற்காப்பு
Sensation — புலன் உணர்ச்சி
Sensation, auditory — செவிப்புலனுணர்ச்சி
Sensation, cutaneous — தோல்புலனுணர்ச்சி
Sensation, kinesthetic — தசைப்புலனுணர்ச்சி
Sensation, olfactory — மோப்பப் புலனுணர்ச்சி
Sensation, organic — உட்புலனுணர்ச்சி
Sensation, pain — வலியுணர்ச்சி
Sensation, temperature — தட்பவெப்பப் புலனுணர்ச்சி

| | | |
|---|---|---|
| Sensation, touch | — | தொடுபுலனுணர்ச்சி |
| Sensation, visual | — | பார்வைப் புலனுணர்ச்சி |
| Sensory acuity | — | புலன் கூர்மை |
| Sensory area | — | புலன் பரப்பு |
| Sensory aids | — | புலன் கருவிகள் |
| Sense cell | — | புலன் உயிரணுக்கள் |
| Sensory motor | — | புலன் இயக்கி |
| Sensed object | — | உணர்ச்சிப் பொருள் |
| Sensitive spots | — | உணர்ச்சிப் புள்ளிகள் |
| Sentiment | — | பற்று |
| Sex attraction | — | பால்கவர்ச்சி |
| Sex difference | — | பால் வேற்றுமை |
| Sex education | — | பால்வகைக் கல்வி |
| Sex, opposite | — | மறுபால் |
| Sex, own | — | தன்பால் |
| Sex relationship | — | பால் உறவு |
| Sex characteristics, primary | — | முதல்நிலைப் பால் அறிகுறிகள் |
| Sex characteristics, secondary | — | இரண்டாம்நிலைப் பால் அறி குறிகள் |
| Shame | — | வெட்கம் |
| Shy | — | நாணமுள்ள, கூச்சமுள்ள |
| Siblings | — | உடன்பிறந்த குழந்தைகள் |
| Skill | — | திறன் |
| Skipping | — | கயிறு தாவல் |
| Slang | — | கொச்சை மொழி |
| Social acceptance | — | சமூக ஏற்பு |
| Social adjustment | — | சமூக இணக்கம் |
| Social approval | — | சமூக ஆமோதிப்பு |
| Social awareness | — | சமூக விழிப்புடைமை |
| Social behaviour | — | சமூக நடத்தை |
| Social conditioning | — | சமூக ஆக்கநிலையுறுத்தல் |
| Social control | — | சமூகக் கட்டுப்பாடு |
| Social distance | — | சமூகத் தொலைவு |
| Social environment | — | சமூகச் சூழ்நிலை |
| Social experience | — | சமூக அனுபவம் |
| Social heredity | — | சமூக மரபுநிலை |
| Social intelligence | — | சமூக நுண்ணறிவு |
| Social interaction | — | சமூக இடைவினை |
| Social learning | — | சமூகப் படிப்பு |
| Social recitation | — | சேர்ந்து பாடம் சொல்லல் |

Social relationship — சமூகத் தொடர்பு (உறவு)
Social security — சமூகப் பாதுகாப்பு
Social status — சமூக நிலே
Social training — சமூகப் பயிற்சி
Sociogram — சமூக வரைபடம்
Sociometery — சமூக அளவியல்
Spaced experience — இடைவிட்டுக் கற்றல்
Spinal cord — தண்டுவடம்
Sperm — விந்தணு
Squint — மாறுகண்
Stammering — தெற்றுதல், திக்குதல்
Standardize — தரப்படுத்து
Superiority complex — உயர்வு மனப்பான்மை
Sweat glands — வியர்வைச் சுரப்பிகள்
Symbol — குறி, குறியீடு
Symbolic process — குறியீட்டுச் செயல்முறை
Symmetry — சமச்சீர்
Synthesis — தொகுத்தல்
Substitute — பதிலீடு
System — முறை, திட்டம்
Syllabus — பாடத்திட்டம்
Sympathetic nervous system — சிம்பதிடிக் நரம்பு மண்டலம்

## T

Tabula rasa — வெற்றுப் பலகை, எழுதாப் பலகை
Tachistoscope — கவனவீச்சு அறிகருவி
Tactual sensation — தொடு உணர்ச்சி
Talent — திறமை
Taste buds — சுவை அரும்புகள்
Teaching aids — கற்பித்தல் கருவிகள்
Team games — கூட்டு விளையாட்டு
Temper — மன இயல்பு
Test — சோதனே
Test, achievement — சாதனேச் சோதனே
Test, age — வயது தரச் சோதனே
Test, assembly — சேர்த்தல் சோதனே
Test, association — இயைபுச் சோதனே
Tests of battery — சோதனேத் தொகுதி
Test cards — சோதனேச் சீட்டுகள்

| | | |
|---|---|---|
| Test, completion | — | நிரப்பல் சோதனை |
| Test, construction | — | சோதனை அமைத்தல் |
| Test, inventory | — | பட்டியல் சோதனை |
| Test, new type | — | புதுமுறைச் சோதனை |
| Test, practice | — | பயிற்சிச் சோதனை |
| Test, prognostic | — | முன்னறி சோதனை |
| Test, projective | — | புறத்தேற்றுச் சோதனை |
| Test, Roschack | — | ரோஷாக் சோதனை |
| Test, standardized | — | தரப்படுத்திய சோதனை |
| Theory of learning | — | கற்றல் கொள்கை |
| Therapy, electric shock | — | மின் அதிர்ச்சி மருத்துவம் |
| Therapy, play | — | விளையாட்டுவழி மருத்துவம் |
| Therapy, psycho | — | உள மருத்துவம் |
| Theory, surplus energy | — | மிகை ஆற்றல் கொள்கை |
| Thinking | — | சிந்தனை |
| Thinking, creative | — | ஆக்கச் சிந்தனை |
| Thyroxin | — | தைராக்சின் |
| Token rewards | — | அடையாள வெகுமதிகள் |
| Tool kit | — | கருவி உறை |
| Transfer of training | — | பயிற்சி மாற்றம் |
| Trial and error | — | முயன்று தவறுதல் |
| Learning through trial and error | — | முயன்று தவறுதல் வழிக்கற்றல்; முயன்று தவறிக் கற்றல் ; தட்டுத் தடுமாறிக் கற்றல் |
| True false test | — | மெய்பொய்ச் சோதனை |
| Traits | — | பண்புகள் |
| Twins | — | இரட்டை, இரட்டையர் |
| Twins, fraternal | — | இருகரு இரட்டையர்கள் |
| Typology | — | வகை இயல் |

**U**

| | | |
|---|---|---|
| Unconditioned reflex | — | ஆக்கநிலையுறு மறிவினை |
| Unconditioned response | — | ஆக்கநிலையுறுத் துலங்கல் |
| Unconditioned stimulus | — | ஆக்கநிலையுறுத் தூண்டல் |
| Unconscious | — | நனவிலி |
| Unconscious, personal | — | தன் நனவிலி |
| Uniformity | — | ஒருதன்மை |
| Utilitarialism | — | பயன்முறைக்கொள்கை |

## V

Vaccination — அம்மை குத்தல்
Vaccine — அம்மைப்பால்
Valid — ஏற்புடைய
Validity — ஏற்புடைமை
Values — மதிப்புகள்
Variable — மாறும், மாறி
Variability — மாறுதல், மாறுபடும் தன்மை
Verbal ability — சொல்லாற்றல், சொல் திறன்
Verbalization — சொல் ஆக்கம்
Verbal test — சொல் சோதனை
Verification — சரி பார்த்தல்
Visual aids — காட்சிக் கருவிகள்
Visual sensitivity — கட்புலன் கூர்மை
Vocabulary — சொல் தொகை
Vocal cords — குரல் நாண்கள்
Vocational guidance — தொழில் வழிகாட்டல்
Vocational selection — தொழில் தேர்வு

## W

Water colour — நீர் வர்ணம்
Weaning — பால் மறக்கச் செய்தல்
Whole — முழுமை
Wooping cough — கக்குவான் இருமல்
Will — மன உறுதி
Winking — கண் கொட்டுதல்
Word association test — சொல் தொடர்புச் சோதனை
Word building test — சொல் அமைக்கும் சோதனை
Word fluency — சொல் வேகம்
Work book — வேலைக் குறிப்பேடு

## Y

Year Book — ஆண்டு மலர்
Youth movements — இளைஞர் இயக்கங்கள்

# தமிழ் வெளியீட்டுக் கழகம்

## சென்னை-9

### 1965வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

| எண் | நூல் | ஆசிரியர் | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | பொருளாதாரம்—II | சி. வேலாயுதம் | 9 | 00 |
| 2. | புதுமைப் பொருளாதாரக் கூறுகள் | திருமதி ஆர். தாமரஜாட்சி | 12 | 00 |
| 3. | பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I | தி. சி. மோகன் | 12 | 00 |
| 4. | பொருளாதாரம் ஓர் அறிமுகம்—II | எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன் | 10 | 75 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு | க. முத்தையன் | 7 | 00 |
| *6. | பணவியலும் பாங்கியலும்—II | சி. வேலாயுதம் | 11 | 50 |
| 7. | நவீன பாங்கு இயல் | க. வெற்றிவேல் | 7 | 50 |
| *8. | இந்தியச் செலாவணியும் பாங்குமுறையும் | பி. வி. ஸ்ரீநிவாசன் | 5 | 50 |
| *9. | அரசாங்க நிதி இயல் | அர. சேஷாசலம் | 4 | 75 |
| 10. | இந்தியப் பொருளியல்—I | எம். பாலசுப்பிரமணியன் | 10 | 00 |
| 11. | இந்தியப் பொருளியல்—II | எம். லூர்துநாதன் | 4 | 25 |
| 12. | நமது பொருளாதாரப் பிரச்சினை—I | சி. சுந்தரராஜன் | 10 | 75 |
| 13. | நமது பொருளாதாரப் பிரச்சினை—II | எஸ். குழந்தைநாதன் | 10 | 50 |
| 14. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I | கீ. சீ. இராமசாமி | 6 | 00 |
| 15. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—II | ,, | 6 | 00 |
| 16. | அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி. | தி. சி. மோகன் | 5 | 00 |
| 17. | அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I | மு. க. சுப்பிரமணியம் | 11 | 00 |

*மூலநூல் (Original Book)

| | | | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| 18. | அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I | மா. குமாரசாமி | 10 | 00 |
| 19. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I | தே. வேலப்பன் | 10 | 00 |
| 20. | பணம்—சிறு விளக்கம் | கோ. இராதாகிருஷ்ணன் | 10 | 00 |
| *21. | வணிக இயலின் தத்துவங்கள் | கு. ஆளுடைய பிள்ளை | 9 | 50 |
| 22. | பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி | சூ. ரா. கறுப்பண்ணன் | 11 | 00 |

வரலாறு

| | | | | |
|---|---|---|---|---|
| *23. | பிரிட்டன் வரலாறு—I | கி. ர. அனுமந்தன் | 10 | 00 |
| *24. | பிரிட்டன் வரலாறு—II | ,, | 9 | 75 |
| *25. | ஐரோப்பிய வரலாறு—I | டி. வி. சொக்கப்பா | 4 | 50 |
| 26. | ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம் | வை. விருத்தகிரீசன் | 15 | 00 |
| 27. | இங்கிலாந்து வரலாறு—I | இரா. அண்ணாமலை | 13 | 00 |
| 28. | இங்கிலாந்து வாலாறு—II | பா. மாணிக்கவேலு | 13 | 00 |
| 29. | இங்கிலாந்தின் வரலாறு—I | க. த. திருநாவுக்கரசு | 15 | 00 |
| 30. | இந்தியாவின் சிறப்பு வரலாறு—I | தி. வெ. குப்புசாமி | 7 | 50 |

அரசியல்

| | | | | |
|---|---|---|---|---|
| *31. | இந்திய அரசியலமைப்பு | வீ. கண்ணையா | 4 | 75 |
| 32. | அரசியலுக்கு ஓர் அறிமுகம் | டி. செல்லப்பா | 8 | 50 |
| 33. | தற்கால அரசியல் அமைப்புகள் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 8 | 50 |
| 34. | பன்னாட்டு அரசியல்—I | திருமதி நூர்ஜஹான் பாவா | 16 | 00 |
| 35. | பொதுத்துறை ஆட்சி இயல்—I | வீ. கண்ணையா | 9 | 00 |
| 36. | பொதுத்துறை ஆட்சி இயல்—II | அ. ஜெகதீசன் | 7 | 25 |

உளவியல்

| | | | |
|---|---|---|---|
| 37. குழந்தை உளவியல்—I | கி. ர. அப்புள்ளாச்சாரி | 8 | 00 |
| 38. குழந்தை உளவியல்—II | ,, | 7 | 00 |
| 39. உட்கவர் மனம் | சி. ந. வைத்தீஸ்வரன் | 7 | 00 |
| 40. இளையோர் உளவியல்—I | தி. இரா. அரங்கராசன் | 12 | 00 |
| 41. இளையோர் உளவியல்—II | ,, | 9 | 00 |
| 42. சமூக உளவியல் | என். வேதமணி மானுவேல் | 9 | 25 |
| 43. பிறழ்நிலை உளவியல் | அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ் | 11 | 00 |
| 44. பித்தரின் உள்ளம் | ,, | 3 | 00 |

தத்துவம்

| | | | |
|---|---|---|---|
| 45. இந்து சமயத் தத்துவம் | ஞா. ராஜாபகதூர் | 5 | 50 |

அறவியல்

| | | | |
|---|---|---|---|
| 46. அறவியல்—ஓர் அறிமுகம் | கோ. மோ. காந்தி | 8 | 50 |

அளவையியல்

| | | | |
|---|---|---|---|
| 47. அளவை இயல்—தொடக்க நூல் | கி. ர. அப்புள்ளாச்சாரி | 2 | 50 |

மானிடவியல்

| | | | |
|---|---|---|---|
| *48. மானிடவியல் | ம. சு. கோபாலகிருஷ்ணன் | 4 | 75 |
| 49. பண்பாட்டுக் கோலங்கள் | கி. பூ. சுப்பிரமணியன் | 5 | 50 |

சமூகவியல்

| | | | |
|---|---|---|---|
| 50. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | ஜெ. நாராயணன் | 10 | 50 |

புவியியல்

| | | | |
|---|---|---|---|
| *51. ஆசியா—I | கொ. சேஷ. நரசிம்மன் | 9 | 50 |
| *52. ஆசியா—II | ,, | 8 | 75 |
| *53. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் | ஏ. எஸ். நாராயணன் | 8 | 50 |

*மூலநூல் (Original Book)

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| *54. வட அமெரிக்கா | குமாரி இரா. அலமேலு | 8 | 25 |
| *55. தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா | திருமதி எச். நியூமன் | 4 | 00 |
| *56. புவிப்புறவியல்—II | நா. அனந்தபத்மநாபன் | 6 | 00 |
| *57. செய்முறைப் புவியியல் | சு. ஜெயச்சந்திரன் | 9 | 00 |
| *58. மக்கட் பரப்பியல் | வி. எஸ். அனந்தபத்மநாபன் | 6 | 25 |
| *59. சமுத்திரவியல் | கோ. இராமசாமி | 6 | 50 |
| 60. காலநிலை இயல்—I | கொ. சேஷ. நரசிம்மன் | 10 | 00 |
| 61. வளியியலுக்கு ஓர் அறிமுகம் | கோ. இராமசாமி | 11 | 00 |
| *62. புவி அமைப்பு இயல் | சி. விசுவநாதன் | 4 | 75 |
| **புள்ளியியல்** | | | |
| *63. புள்ளியியல்—அறிமும் | சு. வைத்தியநாதன் | 10 | 00 |
| 64. புள்ளியியல் முறைகள்—I | கோ. சண்முகசுந்தரம் | 10 | 00 |
| 65. நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம் | தி. வி. லட்சுமிநரசிம்மன் | 6 | 50 |
| **விலங்கியல்** | | | |
| *66. விலங்கியல் | பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன் | 12 | 00 |
| **பௌதிகவியல்** | | | |
| 67. ஒளிநூல் | ச. சம்பத்து | 10 | 00 |
| **பொது நூல்கள்** | | | |
| 68. மகாத்மா காந்தி | சரஸ்வதி தங்கையன் | 3 | 25 |
| 69. இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை | எஸ். இலட்சுமி | 3 | 50 |
| 70. விவசாயப் புரட்சி | வி. கார்த்திகேயன் | 8 | 00 |
| 71. சேமக் கை-நூல் | ஆ. சுப்பிரமணியன் | 2 | 50 |
| *72. நீரிழிவு—க்ஷயரோகம் | ஜி. வேங்கடசாமி. ஏ. கதிரேசன் | 2 | 50 |

*மூல நூல் (Original Book)